[illegible] 1956

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பகுத்தறிவு

ஆசிரியர் :- ம. [illegible]

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6. | சேலம் 13-7-56. வள்ளுவராண்டு 1987. ஆனி 30. | இதழ் 1.


**இலட்சியம்.**

மலருக்கு மணம் போல, வாழ்க்கைக்கு இலட்சியம் இருந்தாக வேண்டும். இலட்சியமில்லாத மனிதன் திசையறி கருவியில்லாத கப்பலைப் போன்றவனே.

—ஆவ்பரி.

# சமுதாயத்திற்கு சமஸ்கிருதம்; அரசியலுக்கு இந்தியா?

மொழிவெறி கூடாது. மொழி பேதம் வேண்டாம்; ஒற்றுமை குலைந்திடும் என்று உபதேசம் செய்பவர்களே, மொழிப்போரின் படைக்கலன்களைத் தீட்டும் சாணைக் கற்களாக மாறுவதை நாம் பார்க்கிறோம், வியக்கிறோம்!

அப்படிப்பட்டவர்களிடம் அரசியல் அதிகாரமும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டியதில்லை. கள்ளுண்ட மந்தியைத் தேள் கொட்டியது போலத்தான்!

மொழி வெறி கேடுதரும் என்று பறைசாற்றி வருகிறார், இந்தியக் குடியரசுத் தலைவர், கனம் இராசேந்திரப் பிரசாத். ஆனால், [illegible]ஸ்கிருதத்திடம் அவருக்குள்ள பற்றும் பாசமும் எல்லையைக் கடந்தவை.

"இந்தியாவின் கலாச்சார, அரசியல் ஒற்றுமைக்கு ஆதார உற்பத்திஸ்தானமே சமஸ்கிருதந்தான்" என்கிறார் கனம் பிரசாத் பெருமையோடு! வேதனைப் படுகிறோம்.

ஜூலை 2-ல், ஐதராபாதில் வேதாந்த வர்த்தினி சமஸ்கிருத கலாசாலைக் கட்டிடக் கல் நாட்டு விழாவில், இவ்வாறு பேசிய அவர், மேலும் கூறுகின்றார்:

"திராவிட பாஷைகளான நான்கு பெரிய தென்னிந்திய பாஷைகளும் சமஸ்கிருதத்தில் இல்லாத ஒரு உற்பத்தி ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால், தொன்று தொட்டுவரும் சமூக கலாச்சார மத [illegible]தங்களிலும், பல நூற்றாண்டுகளாக வந்[illegible] கலப்பினாலும் இந்தத் தென்[illegible] பாஷைகளும் சமஸ்கிருதத்[illegible]க்குட்பட்டு, அவற்றின் [illegible]சார்கள், [illegible]யங்கள் சமஸ்கிருதத்தா[illegible] வளர்ச்சியடை[illegible]ன......

இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற சமஸ்கிருத நூல்களும், பல ஐதிக ஆமுஷ்டிக இலக்கியங்களும்; தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பாஷைகளும் சென்ற இரண்டாயிரம் வருஷங்களில் அடைந்த வளர்ச்சியில் மகத்தான செல்வாக்குக் கொண்டிருந்தன வென்பதை யாரால் மறுக்கமுடியும்?"

திராவிட மொழிகள் சமஸ்கிருதக் கலப்பற்ற தனிச்சிறப்பு என்பதை சந்தேகத்திற்கிடமின்றி ஒப்புகிறார்; மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், வடமொழிக் கலப்பால் திராவிட மொழிகள் மட்டுமல்லாமல், திராவிட இனத்தின் பெருமையும் தன்மானமும் தாழ்ந்து போனதைப்பற்றி சிந்திப்பதற்கு நேரமில்லையே அவருக்கு!

எண்ணிப் பார்த்தால் இதயம் நோகின்றதே! பலநூற்றாண்டுகளாக திராவிட மொழிகள் வடமொழியின் செல்வாக்குக்கு உட்பட்டதன் விளைவாக நாம் பெற்ற இழிவென்ன கொஞ்சமா? நஞ்சமா?

சலமொழி சமஸ்கிருதத்தின் ஆதிக்கம் மொழிகளோடா நின்றது? தெய்வமொழி என்று தகிடுதத்தம் புரிந்து சமுதாயச் சடங்குகளிலே புகுந்ததே; சாத்திரம

(8-ம் பக்கம் பார்க்க)

## பகுத்தறிவு சிறப்பெய்துக!

'பகுத்தறிவு' திங்கள் இதழ், கிழமை இதழாக மாறும் செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துகளை தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் கிழமைதோறும் கொண்டுசேர்க்கும் சீரிய பணியினைச் செய்ய 'பகுத்தறிவு' பெருந்துணையாக நிற்கும் என்று உறுதி கொள்கிறேன்.

"பகுத்தறிவு செழித்தோங்கிச் சிறப்பெய்துக!" என மனமார வாயார வாழ்த்துகிறேன்.

அன்பன்,

சென்னை,
23-6-56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்.

சிறுகதை.

# யாருக்குத் தெரியும்?

அழகரசன்.

"குருநாதா! குருநாதா"—வக்கில் சாம்பசிவ ஐயரின் குரல் கேட்டதோ இல்லையோ, உடனே ஓடி வந்து அவர் எதிரில் நின்றான் குருநாதன்.

"என்னங்க ஐயா நேரமாயிட்டுதுங்களா உங்களுக்கு?" என்றான் அடக்கமாக.

"எனக்கு இல்லையடா! ஜானகிக்கு! அவள் காலேஜுக்குப் போகவேண்டாமா பத்துமணிக்குள்?" என்று அவர் சொல்லி முடிக்குமுன், ஒருகட்டுப் புத்தகங்களை மார்பில் அணைத்தபடி ஒயிலாக நடந்துவந்து நின்றாள் ஜானகி.

"டிரைவர்! காரை எடு சிக்கிரம்! நேரமாகவில்லை? வந்து இரண்டுமாசமாகப் போகிறது, இன்னும நேரத்துக்குக் கிளம்பத் தெரியவில்லையே!" என்று அதட்டினாள், குருநாதன் உடனே 'ஷெட்'டிற்கு ஓடினான்;

"நானும் அதைத்தானம்மா சொல்லிண்டிருந்தேன்" என்றார் வக்கீல் ஐயர், பூணூலை உருவி விட்டுக் கொண்டே.

கார் வாசலுக்கருகில் வந்து நிற்பதைக் கண்டதும் ஜானகி வெளியே வந்தாள். குருநாதன் பின் கதவைத் திறந்து விட்டதும் உள்ளே ஏறி அமர்ந்தாள், வாசல்வரை வந்த ஐயர் "விட்டுட்டு சிக்கிரம் வந்துடப்பா! கோர்ட்டுக்கு நேரமாயிடும்" என்று சொன்னார்.

'சரிங்க!' என்று சொல்லியபடியே காரை 'ஸ்டார்ட்' செய்தான் குருநாதன்.

★ ★ ★

அந்தத் தெரு பிள்ளையார் கோவில் மூலை திரும்பியதும், கார் சட்டென்று நின்றது. பின் சீட்டில் அமர்ந்திருந்த ஜானகி, கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கி அதைச்சாத்தினாள். குருநாதன் முன் கதவைக் திறந்து விட்டான்.

புன்முறுவலுடன் 'உங்களுக்கேன் சிரமம்! நானே திறந்து கொள்ளுகிறேனே!' என்று உள்ளே ஏறி அவனருகில் அமர்ந்துகொண்டாள் ஜானகி.

"கச்சிதமாகப் பேச்சு முறையை மாற்றிக்கொண்டாயே" என்றபடி காரை மறுபடியும் ஓட்டத் தொடங்கினான் குருநாதன். கார் கல்லூரியை நோக்கி நகரத் தொடங்கியது. இப்போது அதன் வேகம் முந்தைய வேகத்தில் பாதியளவு குறைந்திருந்தது.

"பேச்சு முறையை மாற்றிக்கொள்ளாமல் என்ன செய்வது? வீட்டில் நான் உங்களை ஒருமையில் அதிகாரம் செய்யும்போது, எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது தெரியுமா எனக்கு?"

"உம், இருக்கும், இருக்கும் இதெல்லாம் உன் அப்பாவுக்குத் தெரிந்தாலல்லவோ தெரியும் சங்கதி"

"அப்பாவுக்கா? [illegible] வரைத் தானே சரிக்கட்ட [illegible] னால் மிஞ்சுவார், மிஞ் [illegible] கெஞ்சுவார் அவர்!"

"என்ன இருந்தாலும் நீ உயர்ந்த ஜாதி. நான் தாழ்ந்த ஜாதியில்லையா? பணத்தைப் பார்க்காவிட்டாலும் ஜாதியைப் பார்ப்பாரே!'

"குரு! நாங்கள் பார்ப்பார்தான். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நம் இருவரையும் பிரிப்பதென்பது இனி யாராலும் முடியாத காரியம்! என்ன சொல்லுகிறீர்கள்?"—என்றாள் ஜானகி, அவன் முகத்தை ஆவலுடன் நோக்கியவாறு.

"அதுசரி காலேஜ் வந்தாகிவிட்டது! மறந்துவிடாதே. நான் திரும்ப வேண்டுமே" என்று காரை ஒரு மரத்தடியில் நிறுத்தினான் குருநாதன். "வாருங்கள், ஒருகாபி சாப்பிட்டுவிட்டுப் போகலாம். இன்னும் நேரம் இருக்கிறதே எனக்கு" என்றாள் ஜானகி. குரு முதலில் மறுத்தான்.

"உங்களுடன் சேர்ந்து காபி சாப்பிடுகிற ஆனந்தத்தைக்கூட நான் அடையக் கூடாதா?" அவள் கெஞ்சிய பாவத்தைக் கண்டதும் அவனால் மறுக்கவே முடியவில்லை. இருவரும் எதிரே இருந்த ஓட்டலுக்குள் நுழைந்தார்கள்.

★ ★ ★

ஜானகிக்கும், குருநாதனுக்கும் காதல் ஏற்பட்டதே ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி. இருவரும் உயர்நிலைப் பள்ளிப் படிப்புவரை சேர்ந்தே படித்து வந்தவர்கள் ஆனால், அங்கேயெல்லாம காதல் பூக்குமளவிற்கு அவர்கள் பழகவில்லை. குருநாதன் கல்லூரி செல்ல வசதியில்லாத உழைக்கும குடியாதலால் உயர்தரப் படிப்பு முடிந்ததும் ஜானகியைப் பிரியவேண்டிவந்தது.

ஜானகி கல்லூரிக்குச் சென்றுவிட்ட பிறகு ஒருநாள், அவள் தன் தோழிகளுடன் பிரசித்திபெற்ற ஒரு ஓட்டலுக்குள் நுழைந்து, "லேடீஸ்" பகுதியில் அமர்ந்து சிற்றுண்டிக்கு ஆர்டர் செய்தாள்.

நான்கைந்து தட்டுகளை அநாயாசமாக இரண்டு கைகளிலும் எடுத்துக்கொண்டு, அந்த அறைக்குள் நுழைந்த பரிசாரகனைக் கண்டதும் ஜானகி, "ஆ! நீங்களா!" என்று அலறிவிட்டாள். ஆம். அவன் குருநாதன்தான். சென்ற ஆண்டு பள்ளியிலே தன்னுடன் தோழனாகப் படித்தவன், இந்த ஆண்டு தனக்கே வேலையாளாக ஓட்டலில் நின்ற காட்சி, அவள் உள்ளத்தை என்னவோ செய்தது. அந்தக் கணத்திலிருந்தே அவள் உள்ளத்தில் அழியாத இடம்பெற்று விட்டான் குருநாதன்.

(7-ம் பக்கம் பார்க்க)

ஒருவனுக்கு நல்லோரது நட்பைப்போல நன்மை பயப்பது வேறு ஒன்றில்லை. அதைப்போலத் தீயோரின் நட்பினால்உண்டாகும் கெடுதியைப் போல வேறு ஒன்றுமில்லை.

—திருவள்ளுவர்.

# கேள்விக்கணை

சிறந்த கேள்விக்கு ஒரு ரூபா பெறுமான தென்றல் புத்தகம் பரிசு வழங்கப்படும்.

இக்கிழமை பரிசு பெற்றவர்:

● பெ. வேலன்,
எஸ். எம். எச். பள்ளி,
தாரமங்கலம்.

தூ. முருகையன், காரமடை.

கே: படித்தும் சிலர் பகுத்தறிவற்றவர்களாகத் திகழ்கிறார்களே! ஏன்?

ப: அவர்கள் படிப்பு போதிய அளவுக்கு சிந்தனையைத் தூண்டவில்லை. எனவே, பார்வை தெளியவில்லை!

★ ★ ★

கே: புராண காலத்தின் மருத்துவர் யார்? மருத்துவவிடுதி எது?

ப: ஆண்டவனே மருத்துவன், ஆலயமே மருத்துவ விடுதி, அவனது பிரசாதமே சர்வரோக நிவாரணி யென்று கருதப்பட்டதாம்.

★ ★ ★

சி. பத்மநாபன், பெங்களூர்.

கே: தி. க. வுக்கும், தி.மு.க. வுக்கும் வித்தியாசம் என்ன?

ப: நடைமுறையிலே,ஒன்று சர்வாதிகார ஒத்தைச் சக்கரவண்டி; மற்றொன்று ஜனநாயக ரயில்வண்டி.

★ ★ ★

கே: தி. க. வினர் சினிமாவுக்குக் கதை வசனம் எழுதியதுண்டா? நடித்ததுண்டா?

ப: "ரத்தக் கண்ணீர்" மூலம் ரசிகர்களை மகிழ்வித்தார்களே தோழர் தங்கராசும், இராதாவும்!

★ ★ ★

எம். காதபிள்ளை, வேலூர்.

கே: காங்கிரஸ்காரர்களுக்கு மட்டும் தொந்தி பெருக்கிறதே, ஏன்? அது எப்போது குறையும்?

ப: அதிகார போதையில் எதையும் உள்ளே தள்ளிவிடுகிறார்கள்! போதை தெளிந்ததும் அறிவு பிறக்கும், தொந்தி குறைந்திடும்.

★ ★ ★

● பெ. வேலன், தாரமங்கலம்.

கே: ஈயின் தொந்தரவை ஒழிக்க ஈக்களை ஒழிப்பது போல், பார்ப்பனீயத் தொல்லையை ஒழிக்க பார்ப்பனர்களை ஒழிப்பது மேலென்று பெரியார் கூறுவதைத் தி மு க. ஏன் ஆதரிக்கவில்லை?

ப: ஈயும், பார்ப்பனனும் விஷத்தன்மையில் ஒன்றாக இருக்கலாம். எனினும் திருந்துகின்ற பண்பும் பகுத்தறிவும் படைத்த மனிதனை, மனிதனைக் கொல்ல மதிக்க வேண்டாமா?

★ ★ ★

கே: சென்ற தேர்தலில் தி. மு. க. ஆதரவில் வெற்றி பெற்று,பிறகு காங்கிரஸ் கூலிகளாக மாறியதைப்போல்; வரும் தேர்தலிலும் தி. மு. க. ஆதரவில் நிற்போர் மாறிவிட்டால் என்ன செய்வது?

ப: கொள்கையற்றோர்க்கு ஆதரவு கொடுத்து விலகியிருந்து பார்ப்பது வேறு; நமக்கு நாமே நின்று வெற்றி பெறுவது வேறு. முன்னதில் கட்டுப்பாட்டுக்கு இடமில்லை. பின்னதில் அதுதானே முக்கியம்!


## கைத்தறி ஜவுளி.

எங்களிடம் நூல்பட்டுசேலைகளும், மதுரையில் தயாராகும் ஈரோளை சிட்டை துண்டுகளும் நியாயமான விலையில் கிடைக்கும்.

★

கைத்தறி ஜவுளிகளை ஆதரியுங்கள். ஏழை நெசவாளர்களுக்கு உணவளியுங்கள்.

— சுந்தர் ஹால் —

உரிமையாளர்:
S. A. மாணிக்கம்,
63, A சேரிரோடு, :: சேலம் டவுன்.


பெ கோவிந்தராசன், சேலம்.

கே: ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடையவர்கள் கடவுளை தூஷிக்கலாமா?

ப: நான்கு குலத்தை உண்டாக்கி, நாலாயிரம் சாதியாகப் பெருக்கி நாட்டையே குட்டிச்சுவராக்கிய கடவுளை தூஷிப்பதோடு விடுவது கூடாதுதான்!

★ ★ ★

கே: "டால்மியாபுரம்" ஏன் இன்னும் "கல்லக்குடி"யாக மாறவில்லை?

ப: தமது ஆதிக்கத்தை விட்டுவிட வடவர்க்கு மனமில்லை! அவர் தம் வாலர்க்கோ மானமில்லை!

## பகுத்தறிவு பரவுக!

தன்மான இயக்கத்தில் நீண்ட நாட்களாகத் தொண்டாற்றி வருபவரும், நெடுநாட்களுக்கு முன்பிருந்தே பகுத்தறிவு அடிப்படையில் சீரிய எழுத்துப்பணி புரிந்து வருபவரும், நமது கழகப் பொதுக்குழு உறுப்பினருமான தோழர், ப. கண்ணன் அவர்களது 'பகுத்தறிவு' இதழ், திங்களுக்கொரு முறை என்ற நிலையிலிருந்து, வாரம் ஒருமுறை என்னும் நிலையை எய்தியது கண்டு மகிழ்கிறேன். பகுத்தறிவு பரவ 'பகுத்தறிவு' நெடுநாள் நின்று நிலைத்து தொண்டாற்ற வாழ்த்துகிறேன்.

ஈரோடு
23-6-56

அன்பன்,
ஈ. வே. கி. சம்பத்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 13—7—56 | இதழ் 1

## பகுத்தறிவு வார இதழ்.

"பகுத்தறிவு" இன்று வார இதழாக மலர்கின்றது. புத்தக வடிவிலிருந்து செய்தி இதழ் வடிவுக்கு மாறிவிட்டது. உருமாற்றமே யொழிய உரமாற்றமில்லை—இலட்சிய மாற்றமில்லை, தகுதி—தரம்—மாற்றமில்லை!

திராவிடம், தரித்திர நாராயணர்கள் வாழும் திருநாடு; ஏழையர் நாட்டில், ஏழைகள் வாழ்வுரிமை—வளம் நாடிப் பணியாற்றும் இயக்கம திராவிட முன்னேற்றக் கழகம். அதன் குரல்களிலே ஒன்று 'பகுத்தறிவு.' திராவிடம் விடுதலை பெற்று, இங்கு பகுத்தறிவு பூர்வமான சமதர்மக் குடியரசு அமைப்பதே இதன் இலட்சியகீதம்; இதயதாபம்.

ஆறுண்டுகளாக நாலணு விலையில் திங்கள் இதழாக வெளிவந்தது "பகுத்தறிவு." "உயர்ந்தது, பயனுள்ளது" என்று நண்பர்கள் வரவேற்றனர்; மக்கள் பாராட்டினர்! எனினும் எல்லா ஊர்களுக்கும் செல்லவில்லை; எதிர்பார்த்ததுபோல் பொங்கிப் பரவவில்லை, நட்டமும் நேர்ந்தது! காரணத்தை உணர்ந்தோம்; உணர்ந்ததன் விளைவுதான் இதோ, இந்த 'பகுத்தறிவு' வார இதழ்.

"கருத்து இருக்கிறது. படிக்கவும் இனிக்கிறது. அழகான மேலட்டை, படங்கள், சித்திரங்கள் இல்லை. நாலணு கொடுத்து வாங்க நம்மவர் எல்லோரிடமும் பொருள் வசதியில்லை. எனவே எங்கும் பரவவில்லை!

வாரஇதழ் வடிவிலே வேறு; பக்கங்கள் குறைவு; விலையும் அணு ஒன்று. என்றாலும் பண்பிலே—பயனிலே மாத இதழுக்கு விடாது. நாடு நகரம், பட்டி தொட்டி, குக் கிராமங்களிலேயும் எவரும் ஓரணு கொடுத்து எளிதில் வாங்கிட முடியும்; கருத்து பரப்ப முடியும்; கழகம் வளர்க்க முடியும்; நமது இலட்சிய சித்திக்கு உழைக்க முடியும், இவ்வகை நம்பிக்கைகளோடு மலர்கின்றது பகுத்தறிவு வார இதழ். எனினும், இதன் வாழ்வும் வளமும் உங்கள் கையில்தான். மறக்கவேண்டாம்.

மானம் பெரிது வாழ்வு சிறிதென்று வாழ்ந்த இனம், மாற்றாரின் ஆதிக்கத்தால் சீர் குலைந்து விட்டது. இன்று திராவிடனுக்குரிய மண் திராவிடனுக்குச் சொந்தமில்லை இந்த மண்ணை வளப்படுத்த—மண்ணினுள் புதைந்து கிடக்கும் பொன்னை, இரும்பை, நிலக்கரி போன்ற கனிச் செல்வங்களைத் தோண்டியெடுத்து, வறுமையால் பொங்கியழுகின்ற மக்களின் வாழ்விலே செழிப்பேற்ற சமஉரிமையில்லை; அதிகாரமில்லை; யோக்யதையில்லை!

திராவிட மொழிகளின் மூலமொழி—உலகின் மூத்தமொழியான தமிழுக்குத் தமிழகத்திலே முதன்மையில்லை; செல்வாக்கில்லை! அன்னுளிலே புகுந்த ஆரிய மொழி சமஸ்கிருதம், அதன் அழகைப்பறித்தது; அதன் பிறகு உருதுமொழி உருவைக் குலைத்தது. இறுதியில் வந்த ஆங்கிலம் அதனை சவாரிக்குதிரையாக்கிற்று, இப்போது வரும் இந்தி, செந்தமிழின் வேரைப்பறித்து வெந்நீர் கொட்டும் வேலையில் முனைந்து விட்டது!

மொழிவழியே திராவிடத்தில் புகுந்த ஆரிய கலாச்சாரச் சாக்கடையிலே விளைந்த ஜாதி, மத, சாஸ்திர, புராணக் கொசுக்களால் பக்தி நோய்கண்டு திராவிடனின் அறிவும், வீரமும் மெலிந்தன; ஆங்கிலத்தால் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம் வலுப்பெற்றது, நாம் அடிமையானோம்; பெற்றுவிட்டோம் சுதந்திரம் என்று கூறி கட்டாய இந்தி வருகின்றது, கனிவுமொழி தாவியவண்ணம் நம் கழுத்தை முறிக்க! அஞ்சுகின்றோம் எதிர்கால விளைவு நினைந்து.

சமுதாயத்திலே, அரசியலிலே நாம் சுயமரியாதையற்றுக் கிடப்பதால் பொருளாதாரத்திலே சமதர்மம் வளர்க்க நமக்கென்று சக்தி பிறக்கவில்லை. சமுதாயத்திலே, அரசியலிலே, பொருளாதாரத்திலே நாம் உயர்வும் உரிமையும் பெற்றாகவேண்டும்' வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பினின்றும் விடுபட்டாகவேண்டும். அத்தகு விடுதலை வேட்கையின் இலட்சிய ஒலியே "திராவிடநாடு திராவிடர்க்கே!" இந்தக் குறிக்கோளினின்றும் அணுப்பிசகாமல் அறிவுப் பணிபுரியும் "பகுத்தறிவு" என்று நம்பலாம்.

சிறுபொறி பெருந்தீ! "பகுத்தறிவு" சிறிய இதழ்; எனினும் ஏற்ற முறையில் பரவினால் பயன் பெரிதாகவே இருக்கும். பரவ உதவுங்கள் என்று உள்ளன்போடு வேண்டுகிறேன்.

வார இதழாவது குறித்து மகிழ்ந்து, நெஞ்சுகந்து வாழ்த்து கூறியுள்ள தலைவர்களுக்கு நன்றி; "பகுத்தறிவு" வளர்ச்சியில் துவக்கநாள் முதல் கருத்துக்கொண்டு ஆதரித்தும், ஆலோசனை கூறியும் வந்த அன்பர்கட்கு வணக்கம்.

—ப. கண்ணன்.

## புலவரேறு மறைந்தார்.

பண்புநிறை தமிழ்க்கிழவர்; முது பெரும் புலவர்; செந்தமிழ்ப் புலவரேறு, தோரமங்கலம் ஆசிரியர், அ. வரதநஞ்சையனார் அவர்கள், 11-7-56 புதன் கிழமை இரவு 11-மணிக்கு, தமது இல்லில் 79-வது வயதில் இயற்கை முடிவினை எய்திவிட்டார் என்றசெய்தி, தமிழறிந்தோரைக் கலக்குஞ்செய்தியாகும். கலங்கியவண்ணமே நாமும் இதனை எழுதுகின்றோம்.

ஆசிரியர், வரதநஞ்சையனார் தமிழ் நாட்டுப் புலவர்களும், சைவர்களும தமிழ்ப்பற்றுமிக்காரும் போற்றிக் கொண்டாடுகின்ற பெரும்புலவர். கம்பராமாயணச் சொற்பொழிவில் தேர்ந்தவர்; அதே வேளையில் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற, தமிழறநூல்களிலே தொட்டஇடங்கள்தோறும தெளிவுரையாற்றும் ஆழ்ந்தகன்ற புலமை மிக்கவர். தமிழ்ப்பண்பு மிக்கவர். சாதி மத வேறுபாடற்றவர், சன்மார்க்க நெறியினர். குழந்தையுள்ளம் படைத்தவர், மிக மிக நல்லவர். மாற்றார் கலங்கிடில், கண்ணீர் சிந்தும் கனிந்த நெஞ்சுடையவர். அத்தகைய பண்பாளரை—தமிழ்ப் பேராசிரியரை—தமிழகம் தக்க முறையில் பயன் படுத்தாமல் விட்டது; பறிகொடுத்தும் விட்டது என்பதை நினைக்குந்தோறும் நெஞ்சம் நோகின்றது. கண்கள் கலங்குகின்றன.

சென்ற 23—6—56-ல், சேலம் குகை திருவள்ளுவர் கழக ஆண்டுவிழாவில், மதுரை, திரு கருமுத்து தியாகராயர் அவர்கள் அன்னாருக்குப் பொன்னாடை போர்த்தினார்கள்; பாராட்டினார்கள். ஓமலூர் தாலூக்கா பஞ்சாயத்து தலைவர்கள் சங்கச்சார்பிலே புலவரேறு அவர்கட்குப் பொன்னாடை போர்த்தி நிதியளிக்கும் ஏற்பாட்டினை அன்பர்கள் எம். ஆர். பெருமாள், எஸ். ஆர். வேணுகோபால் ஆகியோர் செய்துமுடித்தனர். 21-7-56-ல், விழா நடைபெறவிருந்தது. 11-7-56 லேயே உலகைவிட்டுப் பிரிந்துவிட்டார் உயர்தனிப் பெரும் புலவர்! அந்தோ! இனி ஆசிரியரைப் பார்க்க முடியாது; புலவரேறின் மறைவு, தமிழகத்திற்கு பெரும் இழப்பு.

அவரது ஒரே மகன், சென்னை அரசினரின் "மேழிச்செல்வம்" இதழாசிரியர்—தோழர், வரத-ராமலிங்கம் அவர்கட்கும், உடன் பிறந்தார் புலவர், அ. கந்தசாமி (பிள்ளை) அவர்கட்கும், மனைவியார், பெண்மக்கள், மருகர்க்கும், உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்கிறோம். ○○

## திரு. தட்சிணாமூர்த்தி.

தோழியர், எஸ். என். ராஜம் அவர்களின் கணவர்—நடிக நண்பர், நல்லபண்பாளர் தோழர், தட்சிணாமூர்த்தி அவர்கள் 9-7-56-ல், சேலமிருந்து, சென்னை செல்லுகையில் கள்ளக்குறிச்சிக்கருகே நேர்ந்த கார்விபத்தில் மடிந்தார் என்ற செய்திகேட்டு திடுக்கிட்டோம். முற்போக்கான எண்ணம் படைத்த நண்பரின் எதிர்பாராத மரணத்திற்குப் பெரிதும் வருந்துகிறோம். அன்னாரின் மனைவியார், நண்பர் உறவினர் அனைவர்க்கும் எமது அனுதாபம் உரித்தாகுக.

## திராவிட தேசம்.

"திராவிட தேசத்தின் நடுவில் விளங்குகின்ற ஸ்ரீசைலம் என்ற கிராமத்தில் வனவாசத்திற்காகச் சென்றுகொண்டிருந்த பாண்டுவின் புதல்வர்கள், மனதிற்குக் களிப்பை அளிக்கும் ரீதியில் கம்பீரமாக நின்ற இந்த மலையைப் பார்த்து, பூஜைக்கு ஏற்றதான நாளையும் கவனித்து, மிகவும் உன்னதமான உருவமுடைய ஸ்ரீநேமீஸ்வர பிம்பத்தை நித்திய பூஜார்த்தமாகவும், அந்தப் பிரஜைகளின் திருப்திக்காகவும் பக்தியுடன் நிர்மாணித்தார்கள்."

இப்படி ஒரு கல்வெட்டு, வடஆற்காடு மாவட்டம் போளூருக்கு அருகாமையிலிருக்கும் திருமலையில் உள்ள சமணக் கோயிலான "குந்தவை ஜினாலய"த்தில் இருக்கின்றதாம்.

இவ்வாலயம், 12-ம் நூற்றாண்டின், சோழமன்னர் பரம்பரையில் தோன்றிய குந்தவை என்பவளால் கட்டப்பட்டதாம். குந்தவை சமண மதத்தைச் சேர்ந்த சாளுக்கிய அரசன் இரண்டாவது விக்கிரமாதித்தனை மணந்து கொண்டவளாம்.

இந்த வரலாற்றினை, "தமிழகத்தில் சமுதாய நலத்திட்ட வேலைகள்" என்ற தலைப்பில் 28-9-55 "சுதேசமித்திரன்" நாளிதழில், தோழர், கொடுமுடி ராஜகோபாலன் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

"திராவிட மாபாடியம்" "திராவிட வேதம்" என்பனபோல், "திராவிட தேசம்" என்பதாகக் கல்வெட்டிலே பொறிக்கப்பட்டுள்ளது வியத்தற்குரியதாகும்! இதனை ஆராய்ந்து விளக்க வேண்டியது திராவிட கல்வெட்டு வரலாற்று ஆராய்ச்சியாளரின் கடமையாகும். செய்வார்களா?

—"திராவிடத் தொண்டன்"

## பேருவகையடைகின்றேன்.

நமது திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழுஉறுப்பினரும், பல எதிர்ப்புகளுக்கிடையே சுமார் 30 ஆண்டுகளாக பகுத்தறிவுப் பிரசாரம் செய்து வருபவருமான திரு. ப. கண்ணன் அவர்களால் உயரிய முறையில் நடத்தப்பட்டுவரும் மாதப்பத்திரிகையான "பகுத்தறிவு" வார இதழாக வரவிருக்கின்ற நற்செய்தியறிய பேருவகையடைகின்றேன். வார இதழை முழுமனதுடன் வரவேற்கின்றேன்; வாழ்த்துகின்றேன். வளர்க பகுத்தறிவு வார இதழ்! வாழ்க கண்ணன்!

அன்பன்,

பேளுக்குறிச்சி,
5—7—56.

ஜி. பி. சோமசுந்தரம்,
சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர்

## எதிரொலி

கலவரத்துக்காகவும், தேர்தலுக்காகவுமே அவசரக் கூட்டணி அமைத்து கடையடைப்பு நாடகம் நடத்தினார்கள்.

—"விடுதலை"

அவர்கள் கலவரம் தேர்தலுக்கு, எங்கள் கலவரம் பணத்திற்கு என்று விபூதிச் சாமியார் சொல்லலாம்! விடுதலையாரா சொல்லுவது?

*        *        *

தமிழ் நாட்டு அரசியலில் வோட்டு வேட்டையில்-பதவி எலும்புத்துண்டு பொறுக்குவதில்-எவ்வளவு நாணயமும் நேர்மையும் இருக்கிறது என்பதை......

—"விடுதலை"

வடநாட்டின் அடிமைராசரை ஆதரித்து ஓட்டுப் பிச்சைக்குக் கையேந்தியதும், நம்மவர்க்கு பெரிய பதவி கிடைத்ததென்று, பிறப்புரிமையை மறந்ததுமான "பொறுக்கல் வேலை" ருசுப்படுத்துகின்றதே!

*        *        *

"குடிகார ராமன்" ஊர்வலத்திற்கு திடீர்த்தடை! மன்னார்குடியில் போலீஸ் நடவடிக்கை.

—செய்தி.

காமராஜர் சர்க்கார் இதைச் செய்திருக்காதே! அவரை ஆதரிப்பவர்களையா அவரே எதிர்ப்பார்?

*        *        *

கோயிலுக்குள் நுழைய அனுமதிக்காவிட்டால் கோர்ட்டில் வழக்குப் போடுவோம்.

—அரிஜன மாநாட்டில்.

"அங்கிருக்கும் எங்களவா ஆண்டவனைக் கைவிட மாட்டா" என்று அக்ரகாரக் குஞ்சு அறிவிக்கின்றதாம்!

*        *        *

கடவுளைக் காப்பாற்ற இப்போது சிலர் வரிந்துகட்டிக்கொண்டு கிளம்பியிருக்கிறார்கள்.

—பெரியார். ஈ. வே. ரா.

ராஜாஜி கும்பல் மட்டுமல்ல; காமராஜரும் அந்தக் குட்டையிலே ஊறும் மட்டைதானே!

*        *        *

இலங்கைத் தமிழர்கள் கொதிப்பு, சுயேச்சைத் 'தமிழ் இலங்கை' ராஜ்யக் கோரிக்கை.

—செய்தி.

ஆதிக்கத்தாரின் கொடுமை அதிகரிக்கும்போது, உரிமைக் குரலில் வலிவு ஏறுகின்றது.

*        *        *

காலத்தையும் பணத்தையும் செலவழித்து தீர்த்த யாத்திரை செய்யச் சொல்லுகிறார்கள். அவைகளுக்கு பக்தி என்று நான் பெயர்கொடுக்க மாட்டேன்.

—வினோபா பாவே.

உல்லாசப் பயணம், ஊர்பார்க்கும் வாய்ப்பு, வேடிக்கை விநோதக் காட்சி என்றுதான் யாத்திரை போகிறவர்களும் கருதுகிறார்கள் என்றாலும் வெளியே சொல்லுவது.........

*        *        *

தென்னாடு தொழில்துறை அபிவிருத்தியில் பின்தங்கிக் கிடக்கிறது என்பதில் கருத்துவேறுபாடே இருக்கமுடியாது.

—மந்திரி சுப்ரமணியம்.

இதனைப் பரிகரிக்க முடியாமல் பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பவரை 'அனுமார்' என்பதா, "விபீஷணன்" என்பதா? இதில்தான் கருத்துவேறுபாடோ.

## அந்தோ, தமிழா!


இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்களை எண்ணிவிட்டால் நெஞ்சம் கொதிக்கின்றது! அங்கே பெரும்பான்மைச் சிங்களரின், மொழி வெறியும் ஆதிக்க வெறியும் பின்னிப் பிணைந்து, கோரவடிவெடுத்து தமிழர் வாழ்வைச் சிதைக்கின்றது. கேட்பாரில்லையே, தாயகத்தில்!

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்னரே இலங்கையைத் தமிழர் ஆண்டசெய்தியினை வரலாறு கூறுகின்றது. சிங்களர் ஈழத்தில் குடியேறியவர்கள் என்பதற்கும் ஆதாரம் உண்டு. எனவே தமிழரும் சிங்களரும் இலங்கையின் பழங் குடிகளே யாவர்.

இரு இனங்களும் கலங்கமற்று ஒன்றி வாழ்ந்ததன் மூலமாக, இலங்கையின் பொதுநலன் வளம்பெற்றது. தமிழ்ப் பெருமக்களின் அறிவும், ஆற்றலும், உழைப்பும், பண்பும் இலங்கையின் முற்போக்கின் படிக்கட்டுகளாகப் பயன்பட்டவை!

புத்த பெருமானின் பெயரால் 'மதம்' வளர்க்கும் சிலரும், அரசியல் ஆவேசக்காரர்களும் சிங்கள மொழிவெறியைக் கிளப்பி; தமிழுக்கும், தமிழருக்கும் இருந்த பெருமையினையும், உரிமையினையும் பறிக்கின்றனர்; "சிங்களம் மட்டும் அரசியல்மொழி"யாகும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளனர். பிரதமர் பண்டாரநாயகாவின் இந்த அநீதியை எதிர்த்து அறப்போர் தொடுத்த தமிழர்கள், அங்கே வதைக்கப்படுகின்றனர், வெட்டப்படுகின்றனர்; சுட்டுத்தள்ளப்படுகின்றனர், கடைகளைச் சூறையாடுகின்றனர், பெண்களைக் கற்பழிக்கின்றனர் சிங்களக் காலிகள்! வேதனை பொங்குகின்றது! தட்டிக்கேட்கும் பொறுப்புள்ள இந்திய அமைச்சர்கள் "அனியாய மௌனம்" சாதிக்கின்றனரே! நியாயமா?

பாரதத்தின் முதலமைச்சர்தான் தமிழர்களின் கூக்குரலைக் கேளாத காதர்! நினையாத நெஞ்சர்! பச்சைத் தமிழர் காமராஜர் துடிக்க வேண்டாமா ஈழத் தமிழர் துயர்கண்டு? தொடுக்க வேண்டாமா கண்டனக் கணைகள்? அந்தோ! தமிழா! பாராண்ட தமிழா! மாறாதா உன் பரிதாபநிலை?




எங்கும்
எப்போதும்
எல்லோரும்
விரும்பும் பீடி
சுபான் பீடி!

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

"என்ன செய்வது? எனக்குவேறு எந்தவேலையும் கிடைக்கவில்லையே! இதையே பூணூலை மாட்டித்தான் சம்பாதித்தேன்!" என்று அவளிடம் முறையிட்டான்.

"நீங்கள் கவலைப்படாதீர்கள்! இதோ விலாசம்! நாளைக்கு என் வீட்டுக்கு வாருங்கள்!" என்று சொல்லிவிட்டுச் சென்றாள் ஜானகி.

மறுநாள் ஜானகியைச் சந்தித்தான் குருநாதன். ஒரு அற்புதமானயோசனை சொன்னாள், வீட்டு கார் டிரைவர் நின்றுவிடப்போவதாகவும், அவனிடமே கார் ஓட்டக் கற்றுக்கொண்டு, அங்கேயே காரோட்டியாக அமர்ந்து விட வேண்டுமென்றும் அவள் கேட்டுக் கொண்டாள்! ஆச்சரியமடைந்தான் குருநாதன், அவள் தன்மேல் கொண்டிருக்கும் அக்கரையைக்கண்டு.

திட்டப்படி இரண்டேமாதத்தில் அங்கேயே காரோட்டியாக அமர்த்தப்பட்டான் குருநாதன். வக்கில் சாம்பசிவ ஐயருக்கு, தன் மகள் அவனை ஓட்டியாக ஆக்கிக்கொள்ள ஏன் இவ்வளவு பாடு படுகிறாள் என்று ஆரம்பத்தில் புரியவேயில்லை.

ஆனால், திடீரென்று ஒருநாள் அவனைத்தான் திருமணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று ஜானகி தெரிவித்தாளோ இல்லையோ, ஐயர் அப்படியே அசந்துவிட்டார். அந்தக்கணத்திலேயே அவருக்கு எல்லாம் புரிந்துவிட்டது.

"ஓஹோ! இதற்குத்தான் அவனை அவ்வளவு அக்கரையாக நம்வீட்டுக்குள் நுழைய வைத்தாயோ? சீ! நாயே! கல்யாணம் என்றால் கடலைக்காய் வியாபாரமா? நம் குலம், கோத்திரம், ஆசார அனுஷ்டானம ஒன்றையும் பார்க்க வேண்டாமா? மூதேவி! அந்தப் பேச்சை இந்தக் கணத்திலேயே மறந்துவிடு" என்று அதட்டினார். என்றைக்கும் அவருக்குத் தன் ஒரேசெல்ல மகள் மீது இவ்வளவு கோபம் வந்ததேயில்லை!

ஜானகி ஏதோ ஒரு முடிவோடு அவ்விடத்தைவிட்டு அகன்றாள்.

* * *

மறு நாள். சாம்பசிவஐயரின் வீடு அல்லோலகல்லோலப்பட்டது. ஒரே

> வாழ்வின் உண்மையான மதிப்பு, அன்பின் பிணைப்பிலே தான் மலர்கிறது.
>
> —தாகூர்.

அழுகையும், ரகளையும் தாண்டவமாடின. அங்கே அண்டையிலிருந்த அனைவரும் "என்ன, என்ன"வென்று கேட்டுக்கொண்டு வந்து குழுமிவிட்டார்கள்.

வக்கில் ஐயர் நீர் சிந்திய கண்ணோடு ஆனால், கடுகடுத்த முகத்தோடு ஒரு கடிதத்தைக் காட்டிக்கொண்டிருந்தார், வாயால் பதில் சொல்வதற்குப் பதிலாக.

"என்னுடைய விருப்பப்படி மணஞ்செய்துகொள்ள நீங்கள் தடையாயிருப்பதால், நான் எங்கேயோ சென்று தற்கொலை செய்துகொள்ளுகிறேன். எனக்கு இவ்வுலக வாழ்வு இனிமேல் தேவையில்லை.

—ஜானகி."

என்று எழுதப்பட்டிருந்தது அந்தக் கடிதத்தில். "காரோட்டும் சூத்திரனைக் கலியாணஞ் செய்துகொள்ளுகிறேன் என்றாளையா அவள்! நம் ஜாதியின் பெருமை குறைவதைவிட அவள் செத்துத் தொலைவது எவ்வளவோ மேலையா?" என்று ஆத்திரத்தோடு இரைந்தார் ஐயர்.

"ஆஹா! இவரல்லவா உண்மையான பிராமணர்" என்று புகழ்ந்தார்கள் எல்லோரும்.

"எங்கே அந்த டிரைவர்? அவனும் எங்கேயாவது ஆற்றிலோ, குளத்திலோ" என்று ஆரம்பித்தார் அந்தக் கூட்டத்திலே இருந்த ஒருவர்.


"அவன் ஏனையா விழுந்து சாகிறான்? கல்லுக் குண்டுபோல காலையிலே வந்தான். உன்னால்தானடா என் மகள் தொலைந்தாள், என் கண் முன்னே வந்து மறுபடியும் நிற்காதே! நீயும் தொலையடா! என்று துரத்திவிட்டேன்" வயிற்றெரிச்சல் தாங்காமல் கத்தினார் சாம்பசிவ ஐயர்.

"பாவம்! இப்படிப்பட்ட உத்தமருக்கு இந்த நிலையா வந்து சேரவேண்டும். உம்... எல்லாம் கர்மபலன்" என்று பலப்பல கூறியபடியே கூட்டம் மெதுவாகக் கலையத் தொடங்கியது.

* * *

நேற்றிரவு விஷங்குடித்துத் தற்கொலை செய்து கொள்ளப்போன ஜானகியைத் தற்செயலாகக் கண்டு தடுத்து, தன் ஜாதி குலைந்தாலும் பரவாயில்லை; மகள் நன்றாக வாழவேண்டும் என்று எண்ணி, இரவோடிரவாக அவளையும், குருநாதனையும் ஐயாயிரம் ரூபாய் பணத்தோடு பம்பாய்க்கு ரயிலேற்றி விட்டு விட்டு, பொய்க்கடிதம் ஒன்றைத் தயார்செய்து, எல்லோருடைய கண்களிலும் மண்ணைத் தூவிவிட்ட ஐயரின் குள்ளநரித்தனம் அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் யாருக்குத் தெரியும்?


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

3037—38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

கன்று வருணபேதம் கற்பித்த பார்ப்பனர்க்கு உயர்வளித்துரோட்டாளியைத் தாழ்த்தியதே; தன்னைமபிக்கைகயைக் கொன்று மக்களை மகேஸ்வரன் பக்தர்களாக்கிப் பாழாக்கி விட்டதே!

குடியரசுத் தலைவர் கூறுவதுபோல்: "இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற சமஸ்கிருத நூல்களும், பல ஐதிக ஆபூஷ்டிக இலக்கியங்களும் வளர்ந்து செல்வாக்குக் கொண்டிருந்ததை மறுக்க முடியாதுதான். ஆனால் அந்தச் செல்வாக்கினாலே திராவிடம் பெற்ற மாபெருந் தீங்கினையும், மானக் கேட்டினையும் யாரால் மறுக்கமுடியும் என்று கேட்கிறோம். ஆரியமொழிக் கலப்பால் திராவிடனுக்கு நேர்ந்த கேடுகளை நினைந்து நினைந்து நெஞ்சம் குமுறி, பிரிந்து நின்று மானத்தோடு வாழத்துடிக்கும் சமயம் வடமொழிப் பெருமைகூறி, கலாச்சார ஒற்றுமை காட்டி, பழங்கதை பேசி இணைத்து வைக்க முயலுவது வெறுங் கனவு! வேதனை தரும் முயற்சியாகும்!

சமுதாய அடிமைமுறை வளர்க்க சமஸ்கிருதம், அரசியல் அடிமை முறை வளர்க்க இந்தியா? இதனைப் பகுத்தறிந்து பாராயோ திராவிடனே!

—வாலி.


பகுத்தறிவு.

(வார இதழ்)

கையொப்பத்தொகை:


ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு; முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.

நாடகம்

## காமலீலா.

சேலத்திலே விக்டோரியா கொட்டகையில் கிருஷ்ணலீலா நடக்கிறது! புராண பக்தி நாடகங்களின் மூலம் மடமை வளர்க்கும் பணியை 'மகான்' இராசமாணிக்கம் இப்போதைக்கு விட மாட்டார் என்பதற்கு, இந்த நாடக லீலா விநோதம் ஒரு எடுத்துக்காட்டு!

பகவான் கிருஷ்ணன் செய்த லீலா விநோதங்கள் என்ன சாமான்யமானவைகளா? புராணங்களில் உள்ளபடி பார்ப்போம்.

1. தாய்மாமனைக் கொலை புரிந்தான். 2 வயதில் மூத்தவளான ராதையை மணந்தான். 3. அன்னியர் வீட்டில் வெண்ணெய் திருடினான். 4 கோபிகைப் பெண்களின் சேலைகளைத் திருடி நிர்வாணத்தைக் கண்டு களித்தான். 5 மனைவி மூலம் நரகாசுரனை வதைத்தான். 6. ஜராசந்தன் வேடத்தில் அவன் மனைவி பிருந்தையைப் புணர்ந்தான். 7 முராசுரனையும், அவனது குமாரர்களையும் கொன்று அவர்களின் பெண்களைக் கைப்பற்றினான். 8. பகதத்தனுக்கு அபயந்தந்து, அவனது 11600 ராசகன்னிகைகளோடப் கலவிபுரிந்தான். 9 அர்ச்சுனனுக்கு தூர்ப்புத்தி புகட்டி உறவினரைக் கொல்லச் செய்தான். 10 காமம் பிடித்து பெண்ணாக மாறி சிவனுடன் கூடி ஐயனாரப்பனைப் பெற்றான். 11. சோபை, பிரமை, சாந்தி என்ற கோபியருடன் சுகித்திருப்பதைப் பார்த்த ராதை கோபித்துக்கொள்ள மன்னிப்புக் கோரினான். 12. பால் குடிப்பதிலேயே ஒரு பெண்ணைக் கொலை செய்தான். இதுபோன்ற லீலா விநோதங்கள் இன்னும் எத்தனையோ! எத்தனையோ! எத்தனையோ! அத்தனையிலும் பக்தி மணக்கிறதாம்! தத்துவார்த்தம் ததும்புகிறதாம்! பகவானின் பெருமை மிளிருகின்றதாம்! பாரதப் பண்பாடு ஒளிருகின்றதாமே!

நல்ல கொள்கை, நல்லுணர்ச்சி வளரவேண்டிய நாடக மேடையிலே, இத்தகு அறிவுக்கு ஒவ்வாத அசம்பாவிதக் கருத்துக்களும், தெய்வீக மூலாம் பூசப்பட்ட காமக் களியாடல்களும் நடைபெறலாமா? ஐயோ, நாடகமே! ஐயோ, நவாபே!

அழகுமிக்கதோர் அரண்மனை சமைத்து, அங்கே கழுதையைக் குடியேற்றினால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது; அழகான கலர் விளக்கு, காட்சிகளுக்கிடையே காமவெறி பிடித்த கடவுளின் காதை!

பக்தர் இராசமாணிக்கனார் மறைந்து கிடக்கும் கடவுளரின் காம லீலைகளை மேடையேற்றி, இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம், நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை புரிகின்றாரா, தீமை புரிகின்றாரா என்பதை நல்லவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

—இந்திரசித்தன்.

## இரத்ன ஸ்டுடியோஸ்.

எம். ஏ. வி. பிக்சர்ஸ் அதிபர், திரு எம் ஏ வேணு, சேலம் இரத்ன ஸ்டுடியோவை விலைக்கு வாங்கியுள்ளார். படப்பிடிப்புக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

இங்கு "சம்பூர்ண ராமாயணம்" மும், அதற்கு முன்னதாகவே "பாட்டி சொன்ன கதை" என்ற சமூகப் படமும் தயாராகுமென்று தெரிகிறது.

கோவையில் நன்கு நடைபெற்ற "பட்சிராஜா" "செண்ட்ரல்" ஆகிய இருபெரும ஸ்டுடியோக்களும் மூடப்பட்டுவிட்ட நிலையில், சேலத்தில் பல முறை திறக்கப்பட்டு மூடிக்கிடந்த ஒரு ஸ்டுடியோ உயிர்பெற்று வேலைசெய்யத் தொடங்குவது, கலையுலகத் தமிழர்களுக்குக் களிப்புத் தரும் சேதியன்றோ?

சலகண்டபுரம் கடைத்தெரு செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர் — ப. கண்ணன்.

> **சிறந்தோர்.**
>
> மக்களின் உடலைப் பிணித்திருக்கும் சங்கிலிகளை மட்டுமல்ல; அறிவைப் பிணித்திருக்கும் தளைகளை எவர் தகர்த்தெறிகின்றனரோ, அவர்களே சிறந்த மனிதர்கள்.
>
> —மாக்சிம் கார்க்கி.

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6. | சேலம் 20-7-56. வள்ளுவராண்டு 1987. ஆடி 5. | இதழ் 2.

# சேலமே! உனக்கு விமோசனமில்லையா?

திராவிடத்தை ஆளுகின்ற அதிகாரம் வடநாட்டார் கையிலிருப்பதால் நமக்கு நேரிடும் தீங்குகள் பலப்பல. இழப்புகள் எண்ணற்றவை!

நமது ஏழ்மை அகல—நமது தாழ்மை நீங்க, நாம் பொருளாதார வளம் பெற, நமக்குரிமையில்லை; யோக்யதை கிடையாது!

பெரும் பெரும் அணைக்கட்டுகள்; கனரகத் தொழிற்சாலைகள்; பிரம்மாண்டமான அபிவிருத்தித் திட்டங்கள் வடநாட்டுப் பொட்டல் வெளிகளையெல்லாம் பொன் விளையும் பூமியாக்குகின்றன! தென்னாடு புறக்கணிக்கப்படுகின்றது படுமோசமாக; நினைத்தால் நெஞ்சம் பதறுகின்ற விதமாக!

ஆதாரங்களைக் காட்டி, புள்ளி விபரங்களை எடுத்துச் சொல்லி, "வடக்கு கொழுக்கின்றது தெற்கு தேய்கின்றது" என்று தி. மு. கழகம் கூறினால், தீயுமிழும் கண்களால் முறைத்துப் பார்த்து, நச்சுமிழும் நாவால் "வடநாட்டுத் துவேஷிகள்; வகுப்பு வாதிகள்; குழப்பக்காரர்கள்; கொள்கையற்றவர்கள்!" என்று கூறிடும் அடிமைக் காங்கிரஸ்காரர்களோ மிகப்பலர்! ஆண்மையாளர்கள் மிகச் சிலரே!

அத்தகைய அடிமைகளின் தலைவர்களிலே ஒருவர், கல்வி, நிதியமைச்சர் கனம், சுப்ரமணியனார்! அவரே இப்போது சொல்லுகின்றார்; 'மறுக்கொணாத உண்மையிது, மனம் மிகப் புண்ணாகுது" என்று.

"தென்னாடு தொழில் துறை அபிவிருத்தியில் மிகப் பின் தங்கிக் கிடக்கின்றதென்பதில் கருத்து வேறுபாடே இருக்க முடியாது. அது வெறும் பிரச்சாரத்திற்காக எழுப்பப்படும் கோஷமல்ல. மத்திய நிதியமைச்சரே ஒப்புக்கொண்டுள்ள மறுக்கொணாத— அசைக்க முடியாத உண்மையாகும்" இவ்வாறு பேசியுள்ளார் கொதிப்படைந்த உள்ளத்தவராக அமைச்சர் சுப்ரமணியம், தூத்துக்குடியில் 7—7—56-ல் நடைபெற்ற சென்னை மாநில உருக்கு அபிவிருத்தி மாநாட்டில்.

மேலும், "இந்தியா முழுதிலும் தொழில் அபிவிருத்திக்குச் செலவிடப்பட்டுள்ள பணம் நபர் 1-க்கு 37 ரூபா. ஆனால், சென்னை மாநிலத்தில் மட்டும் நபருக்கு 19 ரூபா மட்டுமே! பம்பாய், வங்கப் பிரதேசங்களுக்கு சராசரியிலும் 5—6 மடங்கு அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளது" என்ற ஒருதலைப்பட்சம்-ஓரவஞ்சனையை பிட்டுக் காட்டினார் நிதியமைச்சர். அவரது ஞானோதயம் வரவேற்கத் தக்கதே! ஆனால், செயற்படுமோ எனில், சந்தேகமே!

சேவிகுளம், பீருமேடு விஷயத்தில் நடந்துகொண்டவிதம்-"தமிழ் நாடு" என்ற பெயரை வெறுத்தொதுக்கிய விபரீதம் அவரை 'விபீஷண'ராக நிலைப்படுத்தி விட்டனவே! விவேகமிருந்தாலும், வீரம் இருக்க முடியுமா அங்கே?

★ ★ ★

திராவிடத்தின் கனி வளத்திலே! சேலம் முன்னிடம் பெறத்தக்க பூமி. சேலம் ஏற்காட்டில் கிடைக்கும் அலுமினிய மூலப்பொருளும், கஞ்சமலையில் கிடைக்கும் இரும்பு, எஃகு மூலப் பொருளும் மிக உயர்ந்தவை; பயனுள்ளவை; பலநூறு கோடிகள் மதிக்கத்தக்கவை; பல்லாண்டுகள் எடுக்கத்தக்கவை என்றெல்லாம் பல

(8-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை.

# கண்ணீரும் கடமையும்.

க. அண்ணாமலை.

அவள் தீப்பொறி பறக்கப் பேசினாள். காப்பாற்றிய போலீஸ் இன்ஸ்பெக்டர் இதயம்கூட கனத்தது. வேகமாக வந்த ரயில்வண்டி அவர்கள் நின்றிருந்த பகுதியைத் தாண்டிவிட்டது. அப்போதுதான் இன்ஸ்பெக்டருக்கு பாரம் நீங்கியதாகத் தெரிந்தது. ரயிலை காலனைக் கருதி, தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த முல்லைக்கொடியாளை, தக்க தருணத்தில் தப்பவைத்தோமே என்ற பூரிப்பு அவர்முகத்திலே படர்ந்தது.

★ ★ ★

மணவறையில் நடந்த மர்மக்கொலை சம்பந்தமாக சிந்தித்தவண்ணம் வந்தவர் இன்ஸ்பெக்டர். புகைவண்டிப் பாதை ஓரமாக சோலையாகவிளங்கும் பூஞ்சோலைப் பக்கமாகப் போனவர், ரயில்சாலைப் பக்கமாகப் பார்வையைச் செலுத்தினார் தலைவிரிகோலத்தில் கண்ணீரும், கம்பலையுமாக தற்கொலைக்குத் தயாராக தண்டவாளத்தருகே நிற்கும் தளிர்மேனியாளைக் கண்டார். வண்டி வேகத்தோடு வந்துகொண்டிருந்தது. விநாடி நேரம் விட்டுவிட்டாலும் வேல்விழியாளை ஓடிவரும்ரயில் தன் கோரப்பசிக்கு இரையாக்கியிருக்கும். அந்த ஆபத்தான சமயத்தில்தான் அவளைக் காப்பாற்றினார் இன்ஸ்பெக்டர். ராணுவப் பயிற்சிபெற்ற அவரது இரும்புக் கரங்களிலிருந்தும் திமிறினாள்; தண்டவாளத்தில் தலைவைத்து தற்கொலை புரிந்துகொள்ளத் தர்க்கமாடினாள். விடவில்லை அவர். வண்டி சென்றதும் விசாரத்திலாழ்ந்தாள். பெருமூச்சு விட்டவராய் அவளது வரலாற்றைக் கேட்பதில் கவனம் செலுத்தினார், பாளயங்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர்.

“சிறிதுநேரம் சென்றிருந்தால் தப்பித்திருப்பேன். ஆமாம்... இந்தப் பாழும் உலகத்தின் பிடியிலிருந்து பூரண ஓய்வு பெற்றிருப்பேன்! வாலிப தேகம் என் தேஜஸோடு போராடாது, எந்தவித ஏற்றத்தாழ்வையும் எள்ளளவும் பாராது எவரையும் ஏற்றிச்செல்லும் புகைவண்டியின் சக்கரங்கள் சூறையாடியிருக்கும் என்னுடலை. இன்ஸ்பெக்டர் துரையே! நான் உரைப்பதைக் கேளுங்கள்: சாவின் சிகரத்தில் சென்ற என்னைத் தாழ்ந்த சமுதாயத்துச் சேற்றைத் தடவிக்கொண்டு தவிக்க வழிகாட்டியவரே! கேளுங்கள்-மங்களமான மணவறையிலே மணமகன் பிணமாகக் காட்சியளித்தான்! கணவனோடு காதல்மது உண்டுகளிக்கலாம், புனுகு மேனி, பொழுதுமுழுவதும் வாலிப சந்தனத்தைப்பூசிப் புளகாங்கிதமடையும் என்றெல்லாம் எண்ணக்கோட்டைகள் எழுப்பிய திருமணமங்கை, மரணக் கணையில் கிடந்தாள் என்ற நிகழ்ச்சி நீங்கள் எந்த வாக்குமூலங்களிலும் கேட்டிருக்கமாட்டீர்கள். உங்களுக்கே புதுமையாகயிருக்கும்.

என்பெயர் அஞ்சலை—வஞ்சனையின் களஞ்சியமல்ல; சாந்தத்தின் சொரூபமென்று நானே சொல்லிக்கொள்வதில் தவறுமில்லை. என் மெலிய உள்ளத்தைக் கிள்ளிவிட்டார் ரவி; ஆம்; நீறுபூத்துக்கிடந்த நெருப்பாகவிருந்த என்னை, எரிக்கிடங்காக மாற்றிவிட்டார். தூய காதலே கொலைபுரியக் காரணமாயிற்று! ஐயா! ரவி, எங்கள் குடும்ப உறவினனல்ல பாட்டாளியின் பாதுகாவலன்—உழைப்பாளிகளின் உதவியாளன்—ஏழை பங்காளன்; இப்படித்தான் எங்கும் பேச்சு. அவரைத் தெரியாதார் யாருமில்லை எனலாம். அதே ரவி—மணவறையில் பிணமான ரவி—மதுரை சதிவழக்கில் சம்பந்தப்பட்ட சமயம்; அரசாங்கத்திற்குத் தலைமறைவாகத் திரிந்த நேரம்; தற்செயலாக நான் பார்க்க நேரிட்டது. காட்டிலே வெறிநாயைப்போலப் பதுங்கிக்கொண்டிருந்த அவருக்கு என்வீட்டிலே இடமளித்தேன். பெற்றவர் எதிர்த்தார். சமாதானப் படுத்தினேன். தேசசேவகன் என்பதற்காக அவர்கள் தக்க உதவி புரிந்தனர். பருவத்தைக் கொத்திய வனப்பு பார்ப்பவர் கண்களுக்குப் பூரிப்புதானே! நாங்களிருவரும் அதே நிலையிலே தானிருந்தோம். நட்புமாறி காதலாக மலர்ந்தது! இருட்டறைக்கலையில் ஈடுபட்டோம்! என் பிதாவும் பார்க்கவில்லை; பொருட்படுத்தவில்லை. ரவி அவர் வீட்டாரோடு கடிதத் தொடர்பு கொண்டார். பலநாள் போனதும் ஒருநாள் தலைமறைவாகத் திரிந்த தலைவர்கள் மீதிருந்த தடை உடைபட்டதாகத் தெரிந்தது, அவர்கள் ஊரிலே உலாவலாம் என்ற செய்தி, எங்களை வெளியிலே விளையாடவிட்டது!

ஒருநாள் இரவு, “நட்சத்திரங்கள் கூட நாணுகின்றன, நாதா!” என்றேன் நான்.

“நாணின் நங்காய்...நானிருக்க நாணமேன் நாயகி” என்றார் ரவி.

“மயக்கம் மனோரா...”

“ஏன்...?”

“உங்கள் உருவம் வைரமாக என் வயிற்றிலே வளருகிறது. ஆறுமாதம் அமைதியாகவிருங்கள், ரவி! உங்கள் அருங்கொடியை மேவி அணைப்பீர்!”

‘ஆ...!’


‘ஊம்...ஏனும்?’

“ஆனந்தமடி அன்பே! மகிழ்வுக் கடலில் ஆழ்ந்து விட்டேன்! இதோ, உன் முதல் தித்திப்புப் பேச்சைக் கேட்கத்தான் கொண்டுவந்திருக்கிறேன் மருந்து! இதை அருந்து!”

குடித்தேன். நான் பெறப்போகும் பேசும் ஓவியத்தின் மழலைமொழி கேட்க எதையும் செய்யக் காத்துக் கிடந்தேன். வீட்டாருடைய விருப்பம் பெற்று, திருமண ஏற்பாடோடு வருவதாகப் போனவர் போனவர்தான்; வரவேயில்லை! நாளடைவில் என் வயிற்றின் பாரம் குறைவதாகத் தெரிந்தது.

(7-ம் பக்கம் பார்க்க)

கனியிலும் இனிய
கண்ணன்
சோடா கிரஷ்களையே
அருந்துங்கள்.
★
கண்ணன் சோடா பேக்டரி,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2




எந்த ஆராய்ச்சிக்காரரும் தென்னாட்டில் எந்தக் குலத்தை எடுத்துக்கொண்டும் 'இவன் ஆரியன்' 'இவன் திராவிடன்' என்று சொல்லி நிரூபிக்க முடியாது.

—"கல்கி"

*உச்சிக்குடுமி, பூணூல், பஞ்சாங்கம், தர்ப்பை, சமஸ்கிருதம், சாஸ்திரம், கருமாதி, திவசம், உணவுமுறை, பேச்சு முறை எதுவும் மறையாதிருக்கையில் அந்த சிரமமே இருக்காது!*

★ ★ ★

வீட்டுக்கு அஸ்திவாரம் அவசியம் போல், ஒழுக்கத்திற்கு பக்தி முக்கியம்'

—ராஜாஜி.

*ஆனால், அஸ்திவாரத்தின் மேல் சுவர் எழுப்பி வீடு மட்டும் கட்டலாம்; பக்தியின் மேல் கொள்ளையடிக்கலாம், கொலை செய்யலாம், மாற்றான் மனைவியைப் பெண்டாளலாம்! ஐயோ அந்த ஒழுக்கமே ஒழுக்கம்!*

★ ★ ★

பள்ளிக்கூடங்களில் அரசியல் பேசி, பள்ளிகளை அரசியல் பிரசார நிலையங்களாக்கக் கூடாது.

—மந்திரி சுப்ரமணியம்.

***அங்கே முன்னேற்றக்கழகத்தை மட்டும் தாக்கிப் பேசத் தவறுவதில்லை இந்த மூதறிஞர்கள்!***

★ ★ ★

இராமனுக்கு ஏன் கொடும்பாவிகட்டி இழுத்துச் சென்று கொளுத்தக்கூடாது?

—பெரியார். ஈ வே. ரா.

*பதில் சொல்ல முடியாத காமராசர் போலீஸ் பட்டாளத்தை ஏவுகின்றாரே ஐயா, தடுக்கவும்! ஒடுக்கவும்!*

★ ★ ★

அந்தோ! அந்தோ! எலக்ஷன் எட்டு மாதம் இருக்குமுன்பே ஒப்பாரி ஆரம்பமாகி விட்டது.

—குத்தூசி

*ஆனால், யார் பெயரைக் கூறி அழுவது, எவரிடம் மடியேந்துவது என்பது முடிவாயிற்றோ?*

இலங்கையில் பணவரட்சி.

—செய்தி.

*முதலில் அன்பு; அடுத்தது பணமா?*

★ ★ ★

சுதந்திரம்பெற்ற தேசங்கள் குடியரசு நீதியைச் சரியான முறையில் காப்பாற்ற வேண்டியது ராஜநீதி யாகும்.

—"கல்கி"

*"அந்த ராஜ நீதியைக் காப்பதும், மனுதர்மம் வளர்ப்பதுமே பிராமண கடமை" என்கிறதாம் ஒரு அக்கிரகாரக் குஞ்சு. நியாயந்தானே?*

★ ★ ★

இராமாயண - மகாபாரதக் கதைகள், பைத்தியக்காரர்கள் காணும் கனவைப் போன்றவை.

—எலிசபெத் ஏர்ட்.

*அவற்றையும் நனவாக்கி, கோயில் குளம் அமைத்து, பொங்கல் புளியோதரையால் பிழைக்கிறதே ஒரு கூட்டம்!*

★ ★ ★

கர்ப்பத்தடை, நுரைமாத்திரை, சர்க்கார் இலவச விநியோகம்;

—செய்தி.

*சர்க்கார் விநியோகத்தில் "பால்" என்றால் அங்கு "நீர்"தான் இருக்கும்! இதில் எப்படியோ!*

★ ★ ★

வேதங்களை ரக்ஷிக்க வேண்டிய அவசியம். மாம்பலத்தில் மாநாடு.

—செய்தி.

*பேதம் வளர்த்து வயிறு வளர்க்கும் "பிக்ஷாந்தேகிகள்" ஜாக்கிரதை!*

★ ★ ★

அன்னிய மொழியை நம்பியிருக்கும் வரை, நம் சுதந்திரம் பூர்த்தியாகாது.

—இராசேந்திரர்.

*அதனால்தானே ஐயா, இந்தியை வேண்டாம் என்கிறோம்.*

★ ★ ★

தாராபுரத்தில் ஊரடங்குச் சட்டம்; போலீஸ் முற்றுகை. 53 பேர் கைது.

—செய்தி

*சண்டாளர்களா! இப்போது மகாபாரதம் நடந்தால் விடமாட்டீர்கள் போலிருக்கிறதே!*





ஆரிய ராமாயண அதர்மம் விளக்கும் அரிய நாடகம்!

★★

விலை 1-4-0

★★

மற்றுமுள்ள தென்றல் புத்தகங்களைப் படித்து விட்டீர்களா?

பட்டியலுக்கு எழுதுக.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சங்ககிரி :: சேலம் மாவட்டம்.


## சுவை!

செவிச்சுவையை உணரும் தன்மையற்றவராய், நாவின் சுவைகொள்ளுவோர் உயிரோடிருப்பதும் இறப்பதும் ஒன்றே.

—திருவள்ளுவர்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 6 | சேலம் 20—7—56 | இதழ் 2

## அறிவா பக்தியா; எதுதேவை?

—:-:—

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடையரேனும் இலர்" இவ்வாறு கூறினார் செந்தமிழ் வள்ளுவர்.

"பக்திதான் முக்கியம்; அறிவல்ல. அறிவு நம்மை ஏமாற்றும்; கடவுள் நம்பிக்கையும் பக்தியும் ஏமாற்றாது" என்று கூறுகிறார் குல்லுகப்பட்டர் ராஜாஜி. ஒன்று திராவிடம்; மற்றொன்று ஆரியம். இரண்டு கருத்துக்களும் இரு துருவங்கள்!

மாறுபட்ட கருத்துக்கள் இருப்பது தவறன்று! கருத்து மாறுபாடுகளே சிந்தனைக்கு விருந்து; அறிவு வளர்ச்சிக்கு வித்து என்பது நம் கருத்து.

சிந்தித்தல் கூடாது, ஆய்ந்தறிதல் ஆபத்து என்பவர்கள் ஏமாளிகளன்று; எத்தர்கள! "பக்திதான் முக்கியம்; அறிவல்ல" என்று நாட்டிலே புகுந்தநாள் தொட்டு முழக்கிவரும் "நாடோடி"களின் கருத்து: "நகத்திலே அழுக்குப்படாமல் நாம் வாழவேண்டும், நமக்காக மற்றவர்கள் பாடுபட வேண்டும்" என்பதாகும்!

"அறிவு நம்மை ஏமாற்றும்" என்று கூறிடும் ஆச்சாரியார் பரம்பரை, அறிவை என்று புறக்கணித்தது? பல்வகை அறிவும், அறிவு வளர்க்கும் கல்வியும், கல்விவளர்க்கும் அதிகாரமும் வேதகாலம் முதல் வெள்ளையன் காலம்வரை அவர்கள் கையிலன்றோ? இந்தக் "கொள்ளையன்" காலத்திலும் ஆதிக்கம் குறைந்திடவில்லையே! என்றாலும "அறிவு முக்கியமல்ல; பக்தியே முக்கியம்" என்று பசப்புகின்றார் ராஜாஜி. யாருக்கு இந்த உபதேசம்?

அறிவு, சிந்தனையைத் தூண்டி மனிதப் பண்பை வளர்ப்பது; பக்தி மூடநம்பிக்கையை வளர்த்து மிருகத்தன்மையில் சேர்ப்பது. இதனை நன்கறிவார் ராஜாஜி. எனினும் பக்தியே முக்கியம் என்று பகருகின்றாரே; ஏன்?

உழைக்கப் பிறந்தவன் சூத்திரன், உண்டு கொழுக்கப் பிறந்தவன் பார்ப்பனன் என்ற மநுதர்மத்தின் கடைக்காலில் மலர்ந்துள்ளது இந்து சமுதாயம். அறிவு வளர்ச்சியின் பயனாக ஏன் இந்த தர்மம்; எதற்கு இந்த பேதம் என்று கேட்கத் துணிந்துவிட்டனர் உழைக்கப் பிறந்தவர்கள்! கொழுக்கப்பிறந்தோர் வாழ்வுக்கு விபத்தல்லவா இக்கேள்வி? ஆரியத்தின் பகையல்லவோ இந்த அறிவு? உழைப்பவன் பக்தனாக இருந்திட்டால் எத்தனை நன்மைகள்? மோட்சம் செல்லபார்ப்பனன் காலைக்கழுவிய நீரைக் குடிப்பான்! தட்சிணை தருவான்! செல்வம் வளருமென்று அவாளுக்கு தர்மம் செய்வான். தரத்தில் உயரலாம்! அவாள் மொழியில் மந்திரம் சொன்னால்தானே ஆண்டவன் ஒப்புவார்? அவாள் உருவில்தானே ஆண்டவன் வருவார்; அருமைச் செல்வனை அறுத்துக் கறிசமைப்பான்; ஆருயிர் மனைவியை போகப் பொருளாகத் தருவான்; மானமழிக்கலாம்; பொன்—பொருளைக் கொள்ளையடிக்கலாம். கொழுக்கலாம்! பக்தி வளர்ந்தால்தானே இத்தனையும்? அறிவு வளர்ந்தால் நடக்குமா இவை?

"ஒழுக்கத்திற்கு பக்தி அவசியம்" என்று வேறு கூறுகின்றார் ராஜாஜி. பக்தியினால்தான் ஒழுக்கம் பாழாகிறது என்பதை எத்தனையோ இதிகாச புராணங்கள் மெய்ப்பிக்கின்றனவே! இருபதாம் நூற்றாண்டிலுமா இந்தப் பித்தலாட்டம்?

அறிவுதான் முக்கியமல்லவே, ஆரியக் குழந்தைகள் இனி கல்வி கற்கவேண்டாம, கற்பதன் மூலம் அறிவைப் பெருக்க வேண்டாம் என்று கூறிடலாமே! அறிவின் விளைவான மின்சாரம், ஒலிபெருக்கி, ரேடியோ, சினிமா, இரயில், மோட்டார் போன்ற சாதனங்களை அக்ரகாரவாசிகள் பயன்படுத்தி ஆத்திகத்திற்கு இழுக்குத் தேடவேண்டாம் என்று இயம்பிடலாமே! அறிவு ஏமாற்றி விடுமன்றோ! அறிவு வளர்ப்பதாகக்கூறும் ஆரிய எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், பத்திரிகையாளர்களை நோக்கி; விடுங்கள் அத்தொழிலை, எடுங்கள் தர்ப்பையை, போடுங்கள் வேதகோஷம் என்று கூறிடலாமே! செய்வாரா? நெஞ்சிலே உரமிருந்து, நேர்மைத் திறமிருந்து இதனைச் செய்தாரென்றால், அப்போது புரிந்துவிடும் வாழ்வுக்கு—ஒழுக்கத்திற்கு—முக்கியம் அறிவா பக்தியா; எதுதேவை என்பது!

# அருண்மொழி–வில்வம்.

சென்னையில் 14–7–56-ல் தோழியர், அருண்மொழி B. O. L., தோழர், வில்வம் ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்தம் இனிது நடைபெற்றது. 19–7–56 மாலை தி. மு. கழகத் தலைமைநிலையச் சார்பில், இராயபுரம் அலுவலகத்தில் தேநீர் விருந்தும், வாழ்த்துரையும் பெற்றனர். கொண்ட கொள்கையிலே–பேச்சாலும் எழுத்தாலும் பொதுப்பணி புரிவதிலே–ஒருமனப்பட்ட தோழர்–தோழியரின் வாழ்விலே பூரிப்பும், புதுவளமும் பெற்று சிறப்பெய்துவார்களாக! நெஞ்சுகந்து வாழ்த்துகிறோம்!

# நாடெங்கும் பரவுக!

"பகுத்தறிவு" வார இதழை இன்று பார்த்தேன்—படித்தேன். "பகுத்தறிவு" திங்களிதழாக வெளிவந்த போது அது செய்துவந்த சுயமரியாதை அறிவுப்பணி, வாரயிதழாக மாறும்போது தரத்திலே குறையுமோவென நான் கொண்ட ஐயம், இதழைப் படித்ததுமே நீங்கிற்று. அதிகப்படியான அரசியல் கருத்துக்களையும் தாங்கி வருகிறது.

ஆசிரியர், ப. கண்ணன் அவர்கள் நெடுநாளைய சுயமரியாதைக்காரர். அவரின் சேவைதான் என்போன்ற பலர் இன்று தன்மான அண்ணன்கள் பெறவும், அறிவியக்கப் பணி புரியவும் உதவிற்று. அவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "பகுத்தறிவு" நாடுமுழுவதும் பரவி, முற்போக்குக் கருத்துக்களைப் பரப்புமாக என மனதார வாழ்த்துகிறேன்.

அன்பன்,

**இரா. தாண்டவன்,**

சேலம் நாட்டாண்மைக்கழக உறுப்பினர்

இடைப்பாடி, 16—7—56.

# சேலத்தில் சம்பத்து.

15–7–56. ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு சேலம் கிரக்காரத் தெரு 14 வது வட்ட தி. மு. க. துவக்கவிழா நடைபெற்றது தோழர், எஸ் ஏ. அம்புக்கரசு தலைமை தாங்கினார். சொல்லின் செல்வர். ஈ. வே கி. சம்பத்து, சிற்றுளி–சுப்ரமணியம், ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் கழகலட்சியத்தைக் குறித்து சொற்பொழிவாற்றினர்.

மாலை 7-மணிக்கு போஸ் மைதானத்தில், மும்முனைப்போராட்ட நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமான மக்கள் குழுமினர். தோழர், வி. சிவப்பிரகாசம் பி. ஏ; பி எல். தலைமைதாங்கி, கூட்டத்தின் நோக்கத்தையும், திருச்சி மாநில மாநாட்டின் சிறப்பினையும் விளக்கினார். பின்னர். ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி–சுப்ரமணியம், ஆசிரியர், ப. கண்ணன் ஆகியோர் பேசினர். இறுதியாக தோழர். சம்பத்து அவர்கள். மும்முனைப்போராட்டத்தினை விளக்கியும், தென்னாட்டைத் தேய்த்துவரும் வடநாட்டுச் சுரண்டல், அவர்களுக்கு வால்பிடிக்கும் காங்கிரஸ் மந்திரிகளின் தன்மை, சேலம் கனிச் செல்வங்களான இரும்பு, அலுமேனியங்களைத்தோண்டியெடுக்கும் தொழிற்சாலை; நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் இவைகள் வெற்றியடையாத வகையில் அவர்கள் செய்யும் பித்தலாட்டங்கள். விடுதலைப் போராட்டங்கள், நாம் தேர்தலில் ஈடுபடவேண்டியதின் அவசியம் ஆகியனபற்றி மிகத் தெளிவாக, பாமரன் மனதிலும் பதியும் வண்ணம் சுமார் 2-மணி நேரம் விளக்கவுரையாற்றினார். கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு இறுதியில் தக்க பதிலளித்தார்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு, தோழர், இரங்கநாதன் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது. ØØ

# பாவாணருக்குப் பாராட்டு.

சேலம் கல்லூரியில் பணியாற்றிய அறிஞரேறு, புலவர், ஞா. தேவநேயப் பாவாணர் M. A. B. O. L. அவர்கள், அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்டு, திராவிட மொழி ஆய்வராகச் செல்லுதலை முன்னிட்டு, 10–7–56 மாலை சேலம் தமிழ்ப் பேரவையின் சார்பில் தேநீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது. முன்னாள் நகரசபைத் தலைவர் தோழர், வை இராமலிங்கனார் தலைமையில், வித்துவான் நடேசனார், கோவிந்தராசன் M. A. தி. வை. சொக்கப்பா M. A L. T. இராசாராம் மற்றும் பலர் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர்!

# பாய்மரக் கப்பல்.

சேலம் மேட்டூர் அணை, குன்த்தூரில் 15–7–56 ஞாயிறன்று காவேரி நீர்த் தேக்கத்தில் பாய்மரக் கப்பல் (போட்) ஒன்று வெற்றிகரமாக மிதக்கவிடப்பட்டது. பண்ணைவாடி பரிசல் துறைக்காக திரு. ந. ஒபுலி (ஆசாரி) தன் சொந்த அறிவைக் கொண்டு, சொந்த முயற்சியிலே தயாரித்துள்ளார். கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் பெயரிடப்பட்டு இந்நிகழ்ச்சியை விழாவாகக் கொண்டாடப்பட்டது. தோழரின் திறமையைப் பலர் பாராட்டிப் பேசினர்.

# எனது வாழ்த்து.

**பேரன்புடையீர்! வணக்கம்.**

"பகுத்தறிவு" வாரஇதழ் கண்டு மகிழ்ச்சியடைபவர்களுள் நானும் ஒருவன். பத்திரிகைத் துறையில் அனுபவமும், எழுத்துத்துறையில் அதனினுமிக்க நுட்ப அறிவுத்தேர்ச்சியும் பெற்ற தாங்கள் மேற்கொண்ட தொண்டு; திராவிடநாடு பெறுவதற்கான ஆக்கவேலைகளில் முக்கியமான ஒன்றென்பதில் அணுத்துணையும் ஐயமில்லை. வாரஇதழ் பொருள் செறிந்த கட்டுரைகளையும் சமநிலை நோக்குடன் கூடிய செய்திகளையும் கொண்டு வளருமென நம்புகிறேன். "பகுத்தறிவு" பயனுள்ள பெரும் பணியில் நீண்டு தொடர்ந்து விரிந்து செழிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

அன்பன்,

**ப. இராமலிங்கம்,**

துணைச் செயலாளர்,

சேலம் மாவட்ட தி. மு. க.

குள்ளம்பட்டி. 14–7–56.

## கேள்விக்கணை

மு. தூ. முருகையன், காரமடை.

கே: படிக்கத் தெரியாத மூடர்களை பகுத்தறிவு உள்ளவர்களாகத் திகழச் செய்வது எப்படி?

ப: படிக்கத் தெரிந்தவர், "பகுத்தறி"வைப் படித்துக்காட்ட வேண்டும்.

தா. அரங்கசாமி, கன்னூர்பாளையம்.

கே: நீர் ஆவியாகிக் குளிர்ந்து மழையாகப் பெய்கிறது என்பதை விஞ்ஞான வகுப்பின் சோதனையில் கண்டேன்; மழைக்கு அதிபதி வருணன், இடிக்குத் தலைவன் இந்திரன், அவர்களைத் தொழுதால் மழை பெய்யும் என்கிறது புராணம்! மாணவனுக்குப் பகுத்தறியும் திறமை எப்படி ஏற்படும்?

ப: பிரத்தியட்சப் பிரமாணமாகக் கண்ணால் பார்ப்பதையும், கட்டுக்கதைகள் மூலம் காதால் கேட்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை தெரிந்துவிடும். ஆராயும் ஒளிகிட்ட வில்லையாயின், பக்கத்திலிருக்கும் அறிவுடை மாணவன் அவனைப் பண்படுத்த வேண்டும்.

* * *

● கே: கல்விக் கடவுள் சரஸ்வதி தேவியார் இருக்கும் நாட்டில், கல்வியிற் பெரிய கம்பன் பிறந்த நாட்டில் தற்குறிகள் இருப்பதேன்?

ப: கம்பன் சரஸ்வதியைக் காதலித்தான்; சரஸ்வதி அக்ரகாரத்தைக் காதலித்தாள்; அக்ரகாரம் ஆரிய தர்மத்தைக் காதலித்தது; ஆரிய தர்மம் தன்னலத்தைக் காதலித்து திராவிடர்களின் சுயசிந்தனையைக் கொன்றுவிட்டதே! எப்படிப் படிக்கமுடியும்?

எஸ். மதனகோபாலன், கோவை.

கே: நாடகம் சினிமா மூலம் நாட்டைத் திருத்த முடியுமா?

ப: முடியும் என்று பெரியாரே சொல்லுகிறார்; ராதாவே நடத்துகிறாரே!

* * *

கே: சோமு என்ற தமிழர் "கல்கி"யின் ஆசிரியராக்கப்பட்டு, ஆறு மாதங்களில் விலக்கப்பட்டது ஏன்?

ப: குள்ளநரிகள் கூட்டம் படைபலத்திற்காகத் தேடிற்று ஒநாயை. காரியம் முடிந்ததும் விரட்டியதோடு விட்டதே!

செ. ம. சென்னப்பன், அரூர்.

கே: பணபலமற்ற முன்னேற்றக்கழகம் பொதுத் தேர்தலில் வெற்றிபெற முடியுமா?

ப: பணபலமுள்ளவர்கள்தான் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்றால் கொள்கை எங்கே? சமதர்மத் தனிநாடு எங்கே? வெற்றியும் தோல்வியும் கருத்தின்மேல் நிகழ வேண்டுமேயொழிய, பணத்தின்மேலல்ல!

* * *

கே: நீங்கள் பத்திரிகை நடத்திப் புத்தகம் போட்டுப் பணம் சம்பாதிப்பது சுயநலமல்லவா?

ப: நல்ல மாம்பழம் விற்பவன் வாங்குவோர்க்குச் சுவையும், மகிழ்வும் தருகிறான்; லாபமும் பெறுகிறான். பொதுநலமும், தன்னலமும் பொருந்துகிறது அங்கே! ஆனால், அழுகல் மாம்பழத்தைத் தலையில் கட்டி காசு பறிப்பது சுயநலம் மட்டுமல்ல; அயோக்யத்தனம்!

கே. டி. முருகையன், காரமடை.

கே: இன்னும் சிறிது கால அளவுக்குள் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும்! என்ன வழி?

ப: சிறிதுகால அளவுக்குள் வரும் பொதுத் தேர்தலில்; தமிழையும், தமிழரையும், தமிழ் நாட்டையும் அலட்சியப் படுத்திய வடநாட்டு அடிமைகளைத் தோற்கடிக்க வேண்டும்.

சிறந்த கேள்விக்கு ஒரு ரூபா பெறுமான தென்றல் புத்தகம் பரிசு வழங்கப்படும்.

இக்கிழமை பரிசு பெற்றவர்:

● தா. அரங்கசாமி,
கன்னூர்பாளையம்,
சிங்காரம்பாளையம் P. O.
கோவை மாவட்டம்.

## தேர்தல் சின்னம்.

குடியரசு நாட்டிலே தேர்தல் முக்கியம்; போட்டியிடும் கட்சிகளுக்கும் நபர்களுக்கும் —சின்னம் வழங்கும் பொறுப்பு, ஆளும் கட்சியின் அதிகாரிகளைச் சேர்ந்தது. அவர்கள் நடுநிலைமைக்குரியவராக நடத்தல் வேண்டும்.

டாக்டர் லோகியாவின் தலைமையில் இயங்கும் சோஷலிஸ்ட் கட்சிக்கும், மாராட்டிய மண்டலத்திலே விடுதலை முழக்கமிடும் சம்யுக்த மராட்டிய சமிதிக்கும் சின்னம் வழங்க மறுத்துள்ளார் தேர்தல் தலைமை அதிகாரி திரு. சுகுமார் சென்! அவர் சொல்லுகிறார்; "புதிய கட்சிகள் தேர்தலில் ஈடுபட்டு, தேர்தல் முடிந்த பின்னர், மொத்தம் பதிவான வாக்குகளில் மூன்று சதவிகிதம் பெற்றிருக்கின்றனர் என்பது தெரிந்தால் மட்டுமே, இந்திய தேசிய அடிப்படையிலோ, மாநில அடிப்படையிலோ அங்கீகாரம் பெறமுடியும்!" என்று. மேலும் தெரிவிக்கிறார்;

"எந்த ஒரு கட்சியும் புதிய தேர்தல் சின்னம் கோருவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது" என்று. இது ஆளும் கட்சியானது, தேர்தலின்போது எதிர்ப்புகளை பலவீனப்படுத்தி வெற்றி கொள்ளும் சூழ்ச்சிப் படலத்தின் தொடக்கமென்றே கருதுகிறோம், தனிப்பட்ட நபர்களுக்குத் தரும் கண்ணியம் கட்சிக்கு ஏன் மறுக்கப்படவேண்டும்?

"கல்யாணமானால் பைத்தியம் தீரும், பைத்தியம் தீர்ந்தால் கல்யாணமாகும்" என்பது போலிருக்கின்றது இந்தப் பிரச்சினை. தேர்தலில் கட்சிக்கென்று சின்னம் ஒதுக்கினால் அதிக வாக்குப் பெறமுடியும், அதிக வாக்குப் பெற்றால் தான் சின்னம் ஒதுக்கமுடியும். எதை முதலில் செய்வது? எதைப்பிறகு செய்வது? மாற்றுக்கட்சிகளின் குரல்களை ஒடுக்கி, நடமாட்டங்களைக் குறைத்து, உரிமைகளைப் பறிக்கும் இந்தமுறை தவறானது மட்டுமல்ல, சர்வாதிகார முடைநாற்றம் வீசுவது!

அதிக செல்வமும், அதிக வறுமையும் பகுத்தறிவுக்கு இடந்தரா.

—ஃகென்றி பீல்டிங்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கருவைக் கலைத்துவிட்டான் காதகன்; கோபம் ஒருபக்கம் பொங்கி எழுந்தது. பிரிதொருபுறம் வருத்தம் வாட்டியது. சோலையூர் ஆலை அதிபர் மகள் மனோகரிக்கும், ரவிக்கும் மணம் என்று எனக்குத் தெரியவந்தது. எப்படியிருக்கும்? பாளையங்கோட்டைக்கு மணப்பந்தலுக்கே நேராக வந்தேன்; அவமானத்தைச் சுமந்தபடியே வந்தேன். என் வாழ்வைக் கருகிய மொட்டாக்கிய கயவனுக்குக் கல்யாணம். ஏழையர் பங்காளனுக்கு ஆலை முதலாளி மகளின் முத்தங்கள்! அநியாயம் ஐயா அநியாயம்! போனேன் மணவறைக்கு. இதயக் குமுறலை வார்த்தைகளாக வீசினேன்! வெறிச்சியானேன்! வீழ்ந்தான்! வென்றேன்! கொன்றேன்! கொலைகாரியானேன்! குழப்பம்! மணவறையிலே பரபரப்பு! பயந்தேன் நான். ஓடினேன் தப்புவதற்கு. வழியிலே ஒரு உருவம் கண்டேன். திடுக்கிட்டுக் கூவினேன் "மனோகரி! நீயா?" என்று.

"ஆம் அக்கா, நானேதான். நெறியற்றவனை, நாயகனைப் பெற்றேன். கல்யாணமான கணநேரத்தில் கற்புக்கரசியான உன் உதவியால் கண்களைத் திறந்துபார்த்தேன். விதவையானேன்; வினையிடமிருந்து விடுதலையானேன். உத்தமி! உன்னால் திருந்தாத தேசத் துரோகியை உலகம் உணர்ந்து கொண்டது. ரவியின் தந்தை கருத்த பாண்டிய தேவர் கைதானார். என் தகப்பனார் நீதிக் கூடத்தில் நிறுத்தப்படுவார்; திருமணத்திற்குப் புனிதநாள் குறித்த புரோகிதர்க்குப் பொருள் கிடைத்தது. எங்களுக்குப் பொல்லாங்கு நேர்ந்தது! நீ தந்த புத்திமதிக்கு நன்றி. நான் போகிறேன்" என்றாள் மனோகரி. போய்விட்டாள்.

எனக்கு உலகமே சுழல்வதுபோலத் தோன்றியது. ஓடினேன், ஓடினேன் தண்டவாளம் நோக்கி தற்கொலை புரிந்துகொள்ள! இன்ஸ்பெக்டர் அவர்களே! இப்போது நீங்கள் சொல்லுங்கள், நான் செய்தது தவறு? போலித் தலைவனின் போர்வையைக் கிழித்து, மற்றவர்களுக்கு புத்தி புகட்ட வேண்டாமா? படித்தவராயிற்றே! சொல்லுங்கள். சமுதாயத்தைப் பாழ்படுத்தும் வேஷக்காரனை கொலை செய்தது குற்றமா? மணவறையை பிணவறையாக்கியதில் பிசகென்ன?"

இன்ஸ்பெக்டருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அவருடைய கண்கள் குளமாயின கண்ணீர் வழிந்தது. என்றாலும், கடமையைச் செய்யாது விடவில்லை!

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

அன்புள்ள ஆசிரியருக்கு,

# திருந்துவாரா?

ஐயா,

பொதுவாழ்வில் ஈடுபடுதல் என்பதன் இலக்கணம் என்ன என்பதை காங்கிரஸ் காரர்கள் மறந்துவிட்டனர் என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக் காட்டுகிடைத்திருக்கிறது.

எங்கள் ஊர்—சலகண்டபுரத்தில் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தோழர், ஆர். இராமனாதன் ஓர் சினிமா முதலாளி படங்காட்டுபவர்.

கடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து சுயேச்சையாகப் போட்டியிட்ட இவருக்கு எப்படியோ......! இல்லை, பணநாதன் தயவாலோ இரண்டு பதவிகள் கிடைத்தன. ஒன்று தி. கா. க. தலைவர், மற்றொன்று பஞ்சாயத்து போர்டு தலைவர்.

பதவி கிடைத்தது என்பதோடு திருப்திப்படாத இவர் செய்கிற தவறான காரியங்களை, பகுத்தறிவு பூர்வமாக நாங்கள் கண்டித்தோம். கூட்டம்போட்டு தீர்மானம் அனுப்பினோம். தன்மானம் இருந்தால்தானே! "பஞ்சாயத்து போர்டு எல்லைக்கு வெளியே "சினிமா நடத்தாதே" "தமாஷா வரியின் பகுதி நமது பஞ்சாயத்து போர்டுக்கு இல்லாமல் போய்விடுகிறது" என்பதை விளக்கி அறிக்கைகள் விட்டோம். சின்னதுகளைத் தூண்டிவிட்டு மறு அறிக்கை விடுவதில் காட்டிய அக்கறை கடமையில் காட்டவில்லை.

மறு அறிக்கையிலே பிரதிபலித்த பொருளெல்லாம் "மற்றவர்கள் தவறு செய்கிறார்கள், ஆகவே இவரும் செய்கிறார்" என்கிற பாணியிலேதான் தென்பட்டன. தவறு செய்தவர்களின் ஜாபிதாவிலே 'பாவம்' அவரே சேர்த்துக்கொண்டார். இவை ஆறுமாதங்களுக்கு முன். இன்று, மீண்டும் நகர எல்லைக்கு வெளியே சினிமாவும் துவக்கிவிட்டார். "தமாஷாவரியை எங்கள் பஞ்சாயத்து போர்டு இழந்துகொண்டே வருகிறது, தேர்தலும் வருகிறது" பணநாதன் தயவால் பதவிநாதனைப் பிடிப்பது இது போன்ற தன்னல வளர்ப்புக்குத்தானோ?

போர்டின் வளத்திலே வாக்காளர் ஒவ்வொருவனுக்கும் அக்கரை உண்டு. குறைபாடுகளை களையச் சொல்ல உரிமை உண்டு. ஆகவே சொல்லுகிறேன்; இனியேனும் திருந்துவாரா?

—டி. கே. குருநாதன்,
கழகத் தொண்டன், சலகண்டபுரம்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகளாகப் பகர்ந்து வந்துள்ளனர் ஆராய்ந்த நிபுணர்கள்; அன்னியநாட்டுத் தொழில் வல்லுனர்கள்! நல்லெண்ணத் தோடு—நாணயத் தோடு அவற்றைப் பரிசீலிக்கவில்லை பாரதமாதாவின் புத்திரர்கள். எனவே, தோன்றவில்லை தொழிற்சாலைகள். சோர்ந்து கிடக்கிறது திராவிடம்!

15—7—56-ல், சேலத்தில் நடைபெற்ற மும்முனைப் போராட்ட நினைவுநாள் மாபெரும் கூட்டத்திலே, தோழர், ஈ. வே. கி. சம்பத்து அவர்கள் குறிப்பிட்டார்: "தென்னகத்திலே— ஏற்காட்டிலே — அலுமேனியத் தொழிற்சாலை அமைப்பதாயின் 10 கோடி வரை பணவுதவியும், தொழிலுதவியும் புரிவதாக ரஷிய சர்க்கார் அண்மையிலே அறிவித்தனர். மறுமொழியொன்றும் தராமல் தேள் கொட்டிய திருடனைப்போல் பேந்தப்பேந்த விழிக்கிறது டெல்லி அரசாங்கம். வடநாட்டிற்கு வளம் தேடுவதெனில் இப்படி வாளாவிருக்காது" என்று.

★ ★ ★

18–7–56 'சுதேசமித்திரன்' நாளிதழில் சேதியொன்று வந்துள்ளது; சேலம் ஏற்காடு மலையின் அலுமேனிய கனியைத் தோண்டி எடுக்க இந்திய சர்க்கார் விரைவில் சர்வே—ஆராய்ச்சி—நடத்தப் போகிறதாம். மாதிரிகளை எடுத்து அமெரிக்காவிலிருக்கும் நிபுணர்களின் பரிசிலனைக்கு அனுப்புவார்களாம்; தரத்தை வளத்தைப் பரிசோதித்து பிறகுதான் மேட்டூரில், 10 கோடி மூலதனத்தில் அலுமேனியத் தொழிற்சாலை ஏற்படுத்துவார்களாம். தென்னாட்டின்பால் என்ன கருணை! என்ன கருணை!

இத்தனை ஆண்டுகளாகச் செய்த பரிசோதனைகள், ஆராய்ச்சிகள் எல்லாம் போன இடம் தெரியவில்லை! அமெரிக்காவுக்குப் போகப் போகிறதாம் சேலத்து மண்! அந்தோ! பொருளிருந்தும் வளமற்ற சேலமே! உனக்கு விமோசனமில்லையா?

சேலத்திலே இரும்பு இருக்கிறது; தொழிற்சாலை அமைக்க நெய்வேலி நிலக்கரியைத் தோண்டவேண்டுமாம். அலுமேனியம் இருக்கிறது; அமெரிக்கா சொன்னால் தொழில் ஆரம்பிக்கலாமாம்!

உதவிபுரிய முன்வந்தது சமதர்ம ரஷ்யா; அதுபற்றி பேச்சுமூச்சில்லை! முதலாளித்துவ அமெரிக்காவுக்கு முட்டை கட்டுகிறது இந்திய அரசாங்கம்! எப்படியிருக்கிறது நியாயம்? எப்படி நம்புவது இந்த செப்பிடு வித்தைக்காரர்களை? செகசாலப் புரட்டர்களை?

மந்திரிகளுக்கு ஞானோதயம் வந்து வந்து போகிறது! தட்டிக்கேட்க வலுவில்லை; வக்கில்லை; திராவிடம் தீரர்களைப்பெற்று, உரிமையும், வளமும் பெறுவது எந்நாளோ!

—"வாலி"


பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.





## அமரதீபம்.

கதை, இன்றைய சமூக நடப்புகளைத் தழுவியது; சில படிப்பினைகளையும் கொண்டதுதான், என்றாலும் சுயமான சிந்தனையில் முளைத்தெழுந்ததாகத் தெரியவில்லை. பரிமளமான ஒட்டுச் சரக்கு; மணக்கவே செய்கிறது! வசனம், நல்ல தமிழ், சில இடங்களிலே பொருந்தாத வழுவழுப்பு! எனினும், முற்போக்கான கருத்துக்களும் இருக்கின்றன!

பாடல்கள், கே. பி. காமாட்சியின் "தேன் உண்ணும் வண்டு" தேவலாம். மருதகாசியின் "பச்சைக்கிளி பாடுது பக்கம் வந்தே ஆடுது" பண்பிருக்கிறது. இராமையதாசின் "ஜாலிலோ ஜிம்கானா, டோலிலோ கும்கானா" ஒரு அற்புதம்! தமிழரசி அவருக்கு என்ன தீங்கு செய்தாளோ தெரியவில்லை; சித்திரவதையே புரிகின்றார்!

சமூகப் படங்கள் வரவேண்டுமென்று விரும்பும் படரசிகர்கள் "அமரதீப"த்தை ஒருமுறை பார்க்கலாம். ★

## இரத்தக் கண்ணீர்.

சேலம் போஸ் மைதானத்தில், நகராட்சிமன்ற அனுமதியுடன் நாடகக் கொட்டகையொன்று அமைந்தது. அதிலே நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களின் நாடகங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. மைதானத்தின் வேறு ஒரு புறத்திலே பக்தி நாடக பஜனை நடத்துகின்ற நவாப் இராசமாணிக்கத்திற்கு கிலி பிடித்தது! வசூல் குறைந்திடுமே என்று ஒப்பந்தக்காரர்கள் ஓடியாடி வேலை செய்தனர். முடிவு என்ன? அரசினர் அனுமதியளிக்கவில்லை, அங்கு நாடகம் நடத்த!

குகை பிரபாத் டாக்கிசில் தோழர், ராதாவின் "இரத்தக் கண்ணீர்" நடக்கிறது. மற்ற நாடகங்களும் தொடர்ந்து நடைபெறுமாம்.

அனுமதிமறுத்த அரசினரின் போக்கு, சாதிக்கொரு நீதி இருப்பதுபோல், ஆளுக்கொரு நியாயம் போலும்! யார் மீதுள்ள கோபத்தை, யார்மீதோ கொட்டுவதுபோல், நாடகத்தில் சம்பந்தமில்லாதவற்றைப்பேசி "இரத்தக்கண்ணீர்" வடிக்கிறாராம் தோழர் ராதா!

—சுகவனம்.

சலகண்டபுரம் கடைத்தெரு செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர்: ம. கிள்ளன்.

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணு ஒன்று.

| மலர் 6 | சேலம் 27-7-56. வள்ளுவராண்டு 1987. ஆடி 12. | இதழ் 3. |
|---|---|---|



**முதன்மை.**

உரிமை என்பது முதன்மை; அதனின்றும் முகிழ்ப்பன அஞ்சாமை- உண்மை—இன்பம் என்பன. முதன்மைக்குக் கேடு நேரின் மற்றவற்றுக்குங் கேடு நேரும்.

—திரு வி.க.

# வீரர் யார்? தேசுமுக்கா? காமராசரா?

*தமிழ் நாட்டுக்குச் சொந்தமான தேவிகுளம், பீருமேடு சித்தூர் பகுதிகள் தமிழகத்தோடுதான் சேர்க்கப்படவேண்டும். தமிழகத்தின் ஏகமனதான கருத்தையும், எங்கள் சட்டசபைத் தீர்மானத்தையும் பொருட்படுத்தாமல் மத்திய அரசாங்கம் எதேச்சாதிகாரமாக அவற்றை கேரள—ஆந்திரத்தோடு இணைத்துவிட்டதை ஆட்சேபிக்கும்முறையில் நான் எனது முதன்மந்திரிபதவியை ராஜிநாமா செய்கிறேன்.*

இப்படி ஒரு அறிக்கை வரும் ஒரு நாளைக்கு; தமிழனின் மானமும், பெருமையும் உணர்த்தப்படும் உலகிற்கு என்று எண்ணியதுண்டு நாட்டன்பு கொண்ட நல்லவர்கள். நடந்ததென்ன? தேவிகுளம், பீருமேடு தமிழர்கள் வாழிடம். அவை தமிழருக்குத்தான் என்று முழக்கியவர்கள் டெல்லியாரின் கூட்டு தலையிலே விழுந்தவுடன் குரல் மாற்றிப் பேசத் தொடங்கிவிட்டனர்! "குளமாவது மேடாவது, மேலிடம் சொன்னபடி கேட்டுத்தான் தீரவேண்டும்" என்று குளறிப் பேசினர். மந்திரி நாற்காலியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனர், தமிழ்ப்பண்பு மறந்த தன்னலமிகள்!

விபீஷணத் தமிழர் சுப்ரமணியம்தான் அப்படியென்றால், வீரத்தமிழர் காமராசர் மட்டும் என்ன செய்துவிட்டார்?

தமிழ், தமிழகம், தமிழர்கள் தன்மதிப்போடு வாழ, உரிமையும் உயர்வும்பெற இயன்றதெல்லாம் செய்யும் எம்பெருமான் காமராசர் என்று அஞ்சலி செய்த பக்தர்கள் நாணும்படியாக தமிழர்க்குத் துரோகமிழைத்திட்டார் அந்த பச்சைத் தமிழர்!

அத்தோடு நிற்கவில்லை தமிழ் நாட்டில் பொங்கிப் பரவுகின்ற விடுதலை வேட்கையை, சுயமரியாதை உணர்ச்சியை வேரோடு கல்லி எறிகின்ற வகையில் பதவிநாதன் ஆணையோடு பாதகங்கள் புரிகின்றார்! வடநாட்டு ஆதிக்கம் வளர—வலுப்படக் கையாளாக உதவுகின்றார்.

தமிழை ஒடுக்கி, லம்பாடி இந்தியை நம் தலையில் சுமத்தும் பலாத்கார மொழி ஆதிபத்திய சூழ்ச்சித்திட்டங்களைத் தடுத்து நிறுத்தவேண்டிய தமிழர், "இந்திதான் பொதுமொழி, எல்லோரும் ஏற்றுத்தான் தீரவேண்டும், எதிர்ப்பு ஏனென்று புரியவில்லை" என்கிறார் துணிவோடு. இந்தப் புரியாத தமிழரை—இவரது தொண்டிலை—ஆதரித்துப் பிரசாரம் செய்பவர்கள் இந்தி ஒழிக என்றும், வடவர் ஆதிக்கம் ஒழிகவென்றும், தமிழ்நாடு தமிழருக்கே என்றும் இன்னும் முழக்கமிடுவானேன்? இதுதான் எமக்குப் புரியவில்லை! இவரிடம் என்ன தான் எதிர்பார்க்கிறார்கள்?

"தனித் தமிழ்நாடு கோரிக்கை ஆதாரமற்றது, விஷமத்தனமானது" என்று கூறிடும் காமராசரை தமிழன் என்று எவ்வாறு ஒப்ப முடியும்? பரம்பரையான தமிழ்ப் பகைவன்; தமிழகம் உரிமையற்று ஒடுங்கிக் கிடக்கவும், சுரண்டிப் பிழைக்கவும் காத்திருக்கும் எத்தன்; ஆரியோரின் வாதத்தை தயன்றோ இந்தப் பித்தர் புகலுகின்றார்! என்ன நியாயம்?

தன் நாட்டுக்கு, தன் இனத்திற்கு, தனது தாய்மொழிக்கு ஏற்படும் இன்னல்களை-இழிவுகளைத் தடுக்க முடியாதவர்

[8-ம் பக்கம் பார்க்க]

கலீல் கிப்ரானின்

# அழகு தேவதை.

தமிழில்: சகதீசன் ஆ. மா.

ஒரு நாள், சமூகத்தின் கடும் பார்வையினின்று தப்பி, நகரின் கூச்சல் காட்டினின்று விடுதலைபெற்று, பரந்த சம வெளிப் பக்கம் என் ஓய்ந்த கால்கள் நடக்க, பின் தொடர்ந் தேன், உருண்டோடும் அருவி வழியே நடந்து, பண்பாடும் பறவைகளைத் தொடர்ந்து, கதிரவனின் ஒளி, மண்மேல் விழாமல் தடுத்துநின்ற பரந்த கிளைகள் நிறைந்த மரத்தடியிலே தனிமையாக அமர்ந்தேன்.

நான் அங்கிருந்து நோக்க, உண்மையான இன்பத்தைக் காணுமல் வாழ்க்கையின் கானலநீரைக் கண்டதாக— உயிர்க்கு உணர்வளிப்பதாக இருந்தது.

நான் சிந்தனையிலே மூழ்க, என் உள்ளுணர்வு வானவெளியிலே மிதந்து கொண்டிருக்கும் போது, ஒரு பேரழகி திராட்சைக்கொடியிலைகளால் உடலின் ஒரு பகுதியை மூடிக் கொண்டு, கரிய கூந்தலிலே மல்லிகை மலர்சூடி, திடீரென என்முன்னே தோன்றினுள். என் திகைப்பை உணர்ந்த அவள் "பயப்படாதீர். நான் ஓர் வனப்பெண்" என்றுள்.

"உன்போன்றபேரழகு இவ்விடத்தே எப்படி வாழவேண்டி வந்தது? தயவுசெய்து நீயார்? எங்கிருந்து வந்தாயென்று சொல" என்றேன்.

அவள் அப்பசும் புல்தரை மேல் மென்மையாக அமர்ந்து, "நான் இயற்கையின் தோற்றம், உன் மூதாதைகள் வணங்கிய அழிவில்லா கன்னிப் பெண், என் பெருமைக்காக பால் பெக்கிலும், டாஜாபியிலும் கோயில்களும் கோபுரங்களும் கட்டினர்" என்றுள்.

உடனே நான் "அந்தக்கூட கோபுரங்கள் குப்பை மேடாகி, தொழுத என் மூதாதைகளின் எலும்பெல்லாம் மண்மேடாயிற்றே! அந்த தேவதைகளைப் போற்றிப் புகழ ஒன்றுமே எஞ்சி நில்லாமல், பரிதாபமாய் மாய்ந்து மறைய வரலாற்று ஏட்டிலேகூட மறக்கப்பட்டு விட்டதே!" என்றேன்.

"சில தேவதைகள் அவர்கள் பக்தர்களின் உள்ளங்களிலே வாழ்ந்து அவர் இறப்பிலே செத்து விடுகின்றன, ஆனால், சில முடிவற்ற நீண்ட வாழ்க்கை வாழ்கின்றன. ஆனால், என் வாழ்க்கை நீ எங்கெங்கு காணினும் சிரிக்கும் அழகிலே வாழ்கின்றது, இந்த அழகே இயற்கை! இதுவே மலைவாழ் ஆட்டிடையன் இன்பத்தின் ஆரம்பம்; வயல் வெளி வாழ் கிராமத்தான் களிப்பு; மலைக்கும் சமவெளிக்கும் இடைப்பட்ட நிலம் வாழ் ஆச்சரிய மக்களின் ஆனந்தம்! அழகு அறிவுள்ளவனை உண்மையான அரியாசனத்திற்கு உயர்த்துகின்றது" என்று பதிலளித்தாள்.

"அழகு மிக உயர்ந்த சக்தி" என்றேன்.

"மக்களினம் எதற்கும் அஞ்சுகின்றது. ஏன் நீ கூடத்தான! அமைதி ஆத்மாவின் ஆரம்பமான சொர்க்கத்திற்கே நீ பயப்படுகின்றாய்; ஓய்விற்கும் சமாதானத்திற்கும இருப்பிடமான இயற்கைக்கு அஞ்சுகின்றாய்! நீ தேவதையின் தேவனை கோபக்காரனென குற்றம் சாட்டி, பீதியடைகின்றாய். அவனே கருணையும் காதலும் நிறைந்தவன்" என்று மறுமொழி புகன்றாள்.

இன்பக் கனவு தோய்ந்த ஆழ்ந்த அமைதிக்குப்பிறகு, நான் "அவனவன் சிந்தனைக்குத் தக்கவாறு விளக்கம்கூறி, எண்ணத்திற்கு, இலக்கணம் வகுக்கும் அந்த அழகைப்பற்றி கூறு எனக்கு! நான் பலப்பல வழிகளிலும், வகைகளிலும், வணங்கியும், வாழ்த்தியும் பெருமைப்படுத்தப்படும் இயற்கையையன்றோ கண்டிருக்கின்றேன்!" என்று வினவினேன்.

'அழகு உன் உள்ளுணர்வைக் கவர்வது; அது கொடுக்கத் தூண்டுமேயன்றி வாங்க விரும்பாது. நீ அழகை நெருங்கும்போது அதன் கைகளை உன் உள்ளுணர்வின் ஆழத்தே பதிந்து பரவி, அழகை இதயத்தின் ஆட்சிக்கு அடிமைப்படுத்துவதை உணர்வாய். அது இன்பமும் துன்பமும் ஒன்றுசேர்ந்த உயர்ந்த பேரழகு. அது நீ கண்டும் காணமுடியாதது; நீ அறிந்தும் புரியமுடியாதது; நீ கேட்டும் கேளாதது; அது புனிதத்திலும் புனிதமாய் உன் உள்ளத்தே தோன்றி உன் பாருலகச் சிந்தனைக்கப்பாலும் பரவி விரிவது" என்று விடையிறுத்தாள்.

பிறகு அந்த வனதேவதை என் அருகடைந்து, தன் மணங்கமழும் கைகளை என் கண்களின்மேல் வைத்தாள்; அவள் என்னைவிட்டு விலகிச் சென்ற பின்பு, நான் தனிமையில் உழல்வதறிந்தேன்.

ஆனால், நகரை அடைந்த போது, அதன் கொந்தளிப்பு எனக்கு வெறுப்பை உண்டாக்கவில்லை. அவள் கூறிய "அழகு உள்ளுணர்வைக் கவர்சித்து கொடுக்கத் தூண்டி, ஆனால் வாங்க மறுக்கும் விருப்பமேயாம்" என்பது மட்டும் செவிகளிலே சுழன்று கொண்டிருந்தது.

# எதிரொலி

"தனித் தமிழ்நாடு வேண்டுமென்று கோருவதும், வடநாட்டு ஆதிக்கமென்று கூறுவதும் ஆதாரமற்றது. விஷமத்தனமானது"

—காமராசர்.

பம்பாய் நகரம் மராட்டியருக்கில்லை யென்ற அநீதியை எதிர்த்து அமைச்சர் பதவியை விட்டார் மராட்டிய தேசமுக். தேவிகுளம், பீருமேடு தமிழருக்கில்லை யென்ற அநீதியை ஆதரிக்கிறார் தமிழர்—காமராசர்! ஆதாரமுள்ள இது விஷமத்தனமா? விபரீதத் தன்னலமா?

*　*　*

கே. பி. சுந்தராம்பாளின் நாய்க்குப் பரிசு!

—செய்தி.

சிறந்த பாடகியான அவருக்கு அரசினரின் பரிசும் பாராட்டும் கிடைக்காவிடினும் நாய்க்காவது கிடைத்ததே!

*　*　*

சேலம் அலுமேனியத் தொழிற்சாலை. இடத்தைப் பார்வையிட டெல்லி மந்திரி மிஸ்ரா வருவார்!

—செய்தி.

ஐயோ! கண்காட்சி! சேலத்தில் அதைத் திறக்க வருகபோது இதையும் பார்ப்பார். அவ்வளவுதான்!

*　*　*

இலங்கைப் படுகொலை சுவரொட்டிகள், காமராசர் கண்ணில் படாதிருக்க களவாடப்பட்டன!

—செய்தி.

இந்த அரசியல் திருட்டு வேலைகளால் ஆளவந்தாரை மகிழவைக்கலாம். பொதுமக்களை...முடியுமா?

*　*　*

வழிதவறிய கூட்டத்தின் தலையாட்டிப் பதுமைகளாகவும், எலக்ஷன் ஏஜண்டுகளாகவும் இருப்பதுதானா வீரமுள்ள இளைஞர்களின் வேலை?

—"விடுதலை"

முடியாது! இனியும் அப்படியிருக்க முடியவே முடியாது! அதனால்தான் நாங்கள் தி. மு. க. வில் சேருகின்றோம்!

# பெரியோன் புத்தன்



~ பாவலர்—வேலாயுதசாமி. ~

1 சாக்கிய முனிவன் துன்பமுற் றுழன்று
　தவித்திடு முலகத்தைப் பொதுவாய்
நோக்கிய வருளன், தன்னலச் சுகத்தை
　நொய்யென நொடியினில் வெறுத்துப்
போக்கிய வறிவன் தானுணர்ந் திட்ட
　புதுமையை நாட்டினி லெங்கும்
தேக்கிய நெறியன் செயலினி லறத்தைத்
　திகழ்ந்திடச் செய்தவன் புத்தன்.

2 தூங்கிய மனைவி யசோதரை தன்னை
　சுதன்எழில் இராகுலன் றன்னை
நீங்கியவ் விரவில் அரண்மனை துறந்து
　நிதிபல போகமும் விடுத்து
தேங்கிய துயரில் விடுதலை காணச்
　சீரிய சிந்தனை மனதாய்
ஓங்கிய போதிய டியினி லமர்ந்தே
　உண்மையைக் கண்டவன் புத்தன்.

3 மன்னவன் சுத்தோ தனன்மகன் கபில
　வஸ்துவிற் பிறந்தசித் தார்த்தன்
இன்னலில் லாமல் மனிதர்கள் வாழ
　எதுவழி யெனாப்பெரி தாய்ந்தோன்
உன்னிய படியே உலகினைத் திருத்த
　உழைத்தவன் போதனைத் தொழிலால்
தன்னலம் விடுத்தோன் கொடுங்கொலைச் செயலைத்
　தடுத்தறங் காத்தவன் புத்தன்.

4 பொன்னொளி வீசும் பல்பொரு ளிந்தப்
　புவியினி லெங்கினு முண்டாம்
உன்னறி வாகும் கல்வியி லதையும்
　உரைத்தவன் மாற்றினை யுணர்வாய்
இன்னவன் அவிழ்த்தான் அன்னவன் அளந்தான்
　என்றுநீ எதையுநம் பாதே
பின்னலிற் சுழல்வா யென்றறி வினுக்குப்
　பெருமையைக் கொடுத்தவன் புத்தன்.

5 ஆரிய வேதம் சாத்திர மெல்லாம்
　அறிவினைப் பிணிப்பதென் றுணர்ந்தோன்
காரிய வாதச் சுயநல மிகளின்
　கபடப்பொய்க் கூற்றென வுரைத்தோன்
சீரிய அன்புங் கருணையுந் தயையும
　சிறந்ததென் றுலகிடை மொழிந்தோன்
சூரியன் போலத் துலங்கிய பெரியோன்
　சொல்லிய வழியினில் நடப்போம்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 6 | சேலம் 27—7—56 | இதழ் 3

## பொதுப்பணத்தில் சுயநலம்.

:–:

பொதுத்தேர்தல் நெருங்கி வருகின்றது, தேர்தல் வேலைகளை மற்ற கட்சிகளைக் காட்டிலும் காங்கிரஸ் கட்சி மிகத் தீவிரமாக செய்யத் தொடங்கியிருக்கின்றது.

குடியரசு நாட்டிலே பல கட்சிகள் இருப்பதும், அவைகள் தேர்தலில் ஈடுபடுவதும் தவறானதன்று; தேவையானது! கட்சிகளையும், கட்சிகளின் கொள்கைகளையும் பொதுமக்களறிந்து கொள்ளவும், அரசியல் அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் தேர்தல் நல்லதோர் வாய்ப்பு, எனவே கட்சிகள் தேர்தலுக்கான தீவிர ஏற்பாடுகளை மேற்கொள்வதும், பிரசாரத்திட்டங்களை வகுப்பதும், செயற்படுத்துவதும் குற்றமுடைத்தன்று; கட்சிகளின் கடமையாகும்.

ஆனால், நாட்டையாளும் காங்கிரஸ் கட்சியானது தான் ஒருகட்சி என்ற நினைவு மறந்து. ஜனநாயகம்—குடியரசு வளர்க்கவேண்டிய தனது பொறுப்பினைக் காற்றில் கரைத்து விட்டு, "அதிகாரத்தை விடக்கூடாது" என்ற ஒரே நப்பாசையின்மீது பல சூழ்ச்சியான காரியங்களை மேற்கொள்ள முனைந்து விட்டது.

இந்திய அரசாங்கம் நாட்டு முற்போக்குக் கருதி மேற்கொண்ட ஐந்தாண்டுத திட்டங்களை நிறைவேற்ற, காங்கிரஸ்கட்சி நிதியிலிருந்தோ, கட்சிக்கார சீமான்களின் இரும்புப் பெட்டியினின்றோ பணம் எடுத்து செலவழித்திடவில்லை.

கிராமக் கூட்டுறவு நாணயச் சங்கத் தலைவர், மற்றவர்க்குத்தரும் கடன் தனது சொந்தப் பணமல்ல; பஞ்சாயத்துத் தலைவர் ஊருக்குப் பாதையமைப்பதும், தெருவிளக்குப் போடுவதும், ஆசுபத்திரி கட்டுவதும், கிணறுவெட்டுவதும் அவரது பெட்டிப்பணமல்ல; பொதுப் பணத்தைக்கொண்டு, பொதுநலம் கருதி செய்யப்படும் கடமையின் பாற்பட்ட செயல் முறைகள். இதைப்போன்றதே அரசினரின் ஐந்தாண்டுத்திட்டங்களுமாகும்!

அரசினரின் பொருளுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் சம்பந்தம், மற்ற கட்சியினர்க்கும்—தனிப்பட்டவர்க்கும் இருக்கின்ற அளவைக்காட்டிலும் ஊசி முனையளவும் மிகையானதன்று. எனினும், வரப்போகும் தேர்தல்பிரசாரத்திற்கு பொதுப்பணம்—அரசாங்கத்தின் செல்வம்—காங்கிரசுக்குப் பயன்படுகின்ற முறையில் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

"ஐந்தாண்டுத்திட்டப் பிரசாரம்" என்ற திரைமறைவில், அரசாங்கப் பணத்தில் கட்சி வளர்ப்புக்கும், பிரசாரத்திற்கும் காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஏற்பாடுசெய்துள்ளனர்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசினர் செய்து காட்டப்போகும் கல்வி, தொழில் முன்னேற்றம், விவசாய வளம், மின் சாரம், அணைத் திட்டங்கள், வாணிப வளர்ச்சி ஆகியனபற்றி பிரசாரம் செய்ய ஒரு இலாக்காவாம்!

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு விளம்பர அலுவலர் (கெஜட் பதிவுபெற்ற உத்தியோகஸ்தர்) நியமிக்கப்படுகின்றனராம். அவரின் கீழ் பணியாற்றப் படைதேவையன்றோ? சர்வீஸ் கமிஷன் சம்பந்தமில்லாமல், அமைச்சர் விருப்பப்படியே ஆட்கள் நியமிக்கப்படுகின்றனராம், அந்த அதிகாரம் கனம். சி. சுப்ரமணியனார் கையில்! கேட்கவேண்டுமா? காங்கிரசு ஊழியர்கள், காங்கிரசு பேச்சாளர்கள், எடுபிடிகள், ஏவலர்களுக்குக் கொண்டாட்டந்தான்!

ஏற்கனவே அபிவிருத்தித்திட்ட வேலைகளைச் செய்யும் கிராம சேவக்குகளை கதர்விற்கவும், குல்லாமாட்டவும் பயன் படுத்திவரும் ஆளவந்தார்கள், இந்தப் பிரசாரகர்களை வேறு எதற்குத்தான் பயன்படுத்தப்போகிறார்கள்? செய்து முடித்த ஐந்தாண்டுத் திட்டங்களின் பிரமாத நன்மைகளை மக்கள் கண்குளிரப் பார்க்கிறார்களே; பஞ்சம், பட்டினி, அறியாமை, அடிமைத்தனங்கள் வளருவதை வாழ்விலே அனுபவிக்கின்றார்களே; செய்யப்போகின்றோம் என்று பிரசாரம் வேறு தேவையா? அதற்காக அரசாங்கப்பணம் விரயமாக வேண்டுமா? செய்துவிட்டால் தெரிந்துகொள்ள மாட்டார்களா? சொந்தப் பணத்திலே சொல்லாமற் செய்பவர் பெரியோர்! இந்தக் காங்கிரசுக்காரர்கள் கட்சியிலே பெரியவர்களாயிருக்கலாம்; காரியத்தில் சிறியவர்கள் மட்டுமல்ல! பொதுப்பணத்தில் சுயநலம் தேடுகின்ற பொல்லாதவர்கள்!

ஊரம்பலம்.

ஒற்றன்.

# பூசைக்கு நேரமாச்சு!

மணியக்காரர் மகாலிங்கம் வந்து உட்கார்ந்தார், ஊரையடுத்த ஆலமரத்து மேடையில். சற்று தொலைவிலே பணிவோடு நின்றான் தோட்டி முனியன். பெருமாள்கோயில் குருக்கள் ராமாச்சாரியும், வாத்தியார் பரமசிவமும் வந்து சேர்ந்தனர். அம்பலம் ஆரம்பமாயிற்று.

அன்று வந்த தினசரி இதழ் வாத்தியார் கையிலிருந்தது. பாக்கை வாயிலிட்டு, வெற்றிலையைப் பையிலிருந்து எடுத்து, சுண்ணாம்பைத் தடவியவண்ணம் மணியக்காரர் கேட்டார்: "இன்னைக்குப் பத்திரிகையிலே என்ன வாத்தியாரே விசேஷம்?" என்று.

"வரப்போற தேர்தல் பிரசாரத்துக்காக காங்கிரஸ் கட்சி புதுமையான ஏற்பாடுகளைச் செய்யுதாம்" என்றார்.

"என்னய்யா புதுமை?"

"தேர்தல்லே ஓட்டுக்காக பாட்டுப் பாடுவாங்களாம்; ஆட்டம் ஆடுவாங்களாம், நாடகமும் நடத்துவாங்களாம்:"

'அட கண்றாவியே! காங்கிரஸ் காரனுங்களா நாடகம் நடத்தறானுவளாம்! ஏனாம்? நாட்டை ஆளப் பிரியமில்லியாமா?'

'இதென்ன பேச்சு? நாட்டை ஆள்றவா நாடகம் நடத்தப்படாதோ?' என்று கேட்டார் குருக்கள்.

'நாடகம் ஆடறவங்க, நாடாளப் பாக்கறாங்கன்னு நேத்து கேலிபேசினவங்க, இன்னைக்கு பவுடர் பூசத் தொடங்கினா என்னசாமி அர்த்தம்?' மணியக்காரர் கேட்டார்.

'பிரசாரத்தானே' என்று சமாளித்தார் குருக்கள்.

'மத்தவங்க மட்டும் என்ன செய்யறாங்களாம்? ராஜா வேஷத்தோட மந்திரி நாற்காலிக்கா எட்டித் தாவறாங்க?' என்றார் மணியக்காரர்.

வாத்தியார் கூறினார்: "எனக்கு இதெல்லாமில்லே. கொள்கையை விட்டாவது காமராசரை ஆதரிப்பேன்னு ஒத்தைக்கால்லே நிக்கிது ஒரு கூத்தாசி! நாடகமா அதுக்கு வாந்தி யெடுக்க வருமே! பவுடர் டப்பாவைக் கண்டாலே பதறிப் போயிடுமே, இதுக்கு ஒத்தப்பாடினா பாக்கறவன் என்ன நெனைப்பான்? அப்பறம் அந்த ஊசிக்கு மொனைதான் இருக்குமா?"

குருக்களுக்கு ஆத்திரம் பொங்கிற்று. "இப்பமட்டும இவாளை யாரையா மதிக்கிறா? பகவானைக் கொளுத்தறவா, வெளக்குமாத்தாலே அடிக்கறவா, பஞ்சமா பாதகாள்; இவாள் பேச்சைக்கேட்டுண்டு யாராவது காமராஜருக்கு ஓட்டுப்போடுவாளோ?" என்றார்.

"சந்தடி சாக்கிலே கந்தபொடி மெறமனை ஆரம்பிச்சிட்டாரே ஆச்சாரியார்" என்றார் மணியக்காரர்.

"அது வேறுவிஷயம். ராமாயணத்திலே வர்ற ராவணன், கும்பகர்ணன், இந்திரசித்துகளை வடநாட்லே வருசா வருசம் நெருப்புவச்சு கொளுத்தறாங்க. ராமன், லட்சுமணர்களை இங்கே இப்பத்தான் கொளுத்த ஆரம்பிக்கிறாங்க. அது சரின்னா, இதுவுஞ்சரிதான்; அது தப்புன்னா, இதுவும் தப்புதான்! தேர்தலுக்கும் அதுக்கும என்ன சம்பந்தம்? ராஜாஜியை ஆதரிக்கிறவங்க யாருமில்லையேன்னு குருக்களுக்கு ஆத்திரமாக்கும்!" என்றார் வாத்தியார்.

"ராஜ ரிஷியோன்னா அவர்! அவருக்கு யாரோட தயவும வேண்டாமே! சாஸ்திரங்களை நன்னா படிச்சவர், பொதுவாழ்க்கையில் அற்புதம் செஞ்சவர், யோக்யதை உள்ளவர் ராஜாஜி! காமராஜரைப்போல, தி. மு. க. வை கோயிலுக்குள்ளே செருப்பு போட்டுண்டு போறவா—நாஸ்திகாள்னு பேசிட்டு, அவாளைவிட மோசமான தி. க. வோட கொஞ்சறதும், நாடகம நடத்தறவாள்ளாம் மட்டரகமனு பேசிபிட்டு, தன் காரியத்துக்காக நாடகம் நடத்தறதுமான தில்லுமுல்லுவேலை செய்ய மாட்டாரே!" என்றார் ஆச்சாரியார்.

"சாமி! நான் ஒண்ணு சொல்றேனுங்க" என்று ஆரம்பித்தான் அதுவரை சும்மா நின்று கொண்டிருந்த தோட்டி.

"என்னடா?"

"ராசாசி ராசரிசியா இருக்கலாம், முனீஸ்வரனுகவும் இருக்கலாமுங்க. அவுரு செஞ்சகாரியம் எதிலியுமே செலிச்சதில்லீங்க, தீண்டாமையை ஒழிக்கறேன்னு ஆலயப் பிரவேசச் சட்டம செஞ்சாருங்களே; ஆதித்திராவடர் எல்லாருமா எல்லா கோயிலுக்கும் போக முடியுதுங்களா? கள்ளுக்கடையை மூடுனாருங்களே, கள்ளு ஒழிஞ்சுதுங்களா? ஒருகடைக்கு ஒம்பதால்ல பெருகியிருக்குது! அவுரு வெத்து வேட்டுங்க! சுத்த மோசமுங்க!" என்றான்.

குருக்கள் ஆத்திரமடைந்தார்: "அடேய்! நிறுத்தடா! ஒன்னைப்போல தற்குறியெல்லாம் அரசியல் பேசித்தாண்டா, அறிவாளிகள் செஞ்ச சட்டமெல்லாம் வீணாகறது" என்றார்.

தோட்டி கூறினான்: "அதில்லே சாமி! சட்டம் போட்ட அறிவாளியே தான் அதை ஒடைக்கறதுங்க! ராசாசி என்ன சொல்றாரு? பகவானைக் கும்பிடடா, பக்தி செய்யிடாங்கறாரு "பறையா ஒனக்கு சிதம்பர தரிசனமாடா"ன்னு பஜனை பண்ணிகிட்டு தீண்டாமையைப் போவச்சொன்னா போவுமா? மதுரைவீரனை மாடனை கும்பிடப்போனா, கொண்டா கள்ளுன்னு கேக்குதே!பக்தி செய்யறதா வேணுமா? எப்படி சாமி தீண்டாமை போகும், கள்ளுதாம போயிடும்?"

சிரித்தார் மணிக்காரர். சிரித்தார் வாத்தியார். முகத்திலே எள்ளும கொள்ளும வெடிக்க எழுந்தார் ஆச்சாரியார். "பூசைக்கு நேரமாச்சு" என்று புறப்பட்டுவிட்டார், சபை கலைந்தது.

○○


பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

# கேள்விக்கணை

சிறந்த கேள்விக்கு ஒரு ரூபா பெறுமான தென்றல் புத்தகம் பரிசு வழங்கப்படும்.

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● எம். ஆர் சேகர், (டைலர்) சின்னப்பம்பட்டி, சேலம் மாவட்டம்.

பெ. அண்ணாமலை, தாரமங்கலம்.

கே: தி. க. தலைவர் பெரியார் திராவிட நாடும் வேண்டாம், வெங்காயநாடும் வேண்டாம், தமிழ்நாடுகிடைத்தால் போதும் என்கிறாரே, தி. மு. க. என்ன சொல்லுகிறது?

ப: மொழிவழியே தமிழ்நாடும், இனவழியே திராவிடநாடும் வேண்டும் என்கிறது. ஆனால், காமராசரால் எந்த வெங்காய நாடும் கிடைக்காதுதான்!

* * *

கே: சமுதாயத்திலுள்ள கோணல்களையும், மூட நம்பிக்கைகளையும் ஒழித்துவிட்டு தி. மு. க. தேர்தலில் இறங்குவது பொருத்தமான செயலல்லவா?

ப: அவற்றை ஒழிப்பதற்காக, சட்டசபையிலிருந்து கிளர்ச்சி செய்வதும் பொருந்தும் செயல்தான்!

டி. எம். காளிதாஸ், தொளசம்பட்டி.

கே: நம் கழகத்தைப்பற்றி இழிவாகப் பேசுகிறார்களே, அவர்களின் பண்பு என்ன அண்ணா?

ப: பாவம்! இழிவைச் சுமப்பது, எதுபற்றியும் சிந்திக்காமல் வாழ்வது" என்றிருப்பவர்கள்!

* * *

கே: நம் திராவிட நாட்டை எத்தனை ஆண்டுகளுக்குள் அடைவோம் அண்ணா?

ப: காலவரம்பு, நமது உழைப்பின் வரம்பை ஒட்டியது தம்பி.

எம். ஆர். சேகர், சின்னப்பம்பட்டி:

கே: பகுத்தறிவாளர்களை "பகுதி அறிவாளர்கள்" என்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்களே, ஏன்?

ப: காங்கிரஸ்காரர்களின் குருட்டுச் செயல்களை வெட்ட வெளிச்சமாக்கும் போது வேதனை இருக்காதா, அந்த முழுமையறிவு முடவர்களுக்கு!

* * *

● கே: ஈ. வே. ரா. பெரியார் தேர்தலில் தி. மு. க. வை எதிர்த்தும், காமராஜரை ஆதரித்தும் பிரசாரம் செய்யப் போகிறாராமே, ஏன்?

ப: வடநாட்டுச் சுரண்டலை ஒழிக்கவும், தமிழ்நாட்டு அடிமைத்தனம் நீக்கவும், அந்த அடிமைதான் லாயக்கு என்று கருதுகிறார் போலும்!

"கவிஞரசு" காரமடை.

கே: அரசியல் வானிலே வட்டமிடும் வல்லூறுகள் நாட்டிலே நடமாடும் பாமரனுக்கு எதைப்போன்று?

ப: வல்லூறு, வல்லூறுதான்! வடை, முறுக்கு தின்பண்டங்களைப் பறிப்பது ஒன்று; வோட்டுக்களைப் பறிப்பது மற்றொன்று!

* * *

கே: சாதி சமயக் கோட்பாடுகளை ஒழிக்க வேண்டுமென்று கூறும் இக்காலத்தில், அவைகளுக்கு உயிரூட்டி வளர்ப்போரின் நோக்கம் என்ன?

ப: பச்சையான தன்னலம்!

எம். பழனியப்பன் தொளசம்பட்டி.

கே: கையெழுத்தைப்புரிந்து கொள்ளத் திறமையற்றவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் இடம் பெற்றிருக்கிறார்களே; காந்தியாரின் கருத்தை எப்போது புரிந்துகொள்வார்கள்?

ப: மற்றவரிடம் கேட்டாவது, காந்தியார் கூறிய மொழிவாரி மாநிலப் பிரிவினையை அந்தத் தற்குறிகள் புரிந்துகொள்ளும்போதுதான்!

## சின்னப் புத்தி.

ஆகஸ்ட் 1-ந் தேதி, திராவிட கழகத்தாரின் இராமன் பட எரிப்பு நாளாம்; கட்டாய இந்தி நுழைப்புக்கு இதன் மூலம் எச்சரிக்கை செய்யப் போகிறார்களாம். ஆரிய எதிர்ப்புணர்ச்சியை வலுப்படுத்துவதற்காகவும், பிரசார உரிமையை நிலைநாட்டுவதற்காகவும் இராமாயண ஆபாசத்தை விளக்குவதற்காகவுமேதான் இந்தக் கிளர்ச்சியாம்! செய்யட்டும்; அவர்களுக்குச் சரியெனப்பட்ட வழியில் திறமையாகச் செய்யட்டும்; அதற்காக தி. மு. க. இளைஞர்களை வம்புக்கு இழுக்க வேண்டியதில்லையே!

"தி. மு. க. தலைவர்கள் 10, 15 பேர் தேர்தல் வேலையில் ஈடுபட்டுள்ளதால்—அந்தப் பதவிவேட்டைக்காரர்கள் ராமன் படத்தைக் கொளுத்தவில்லையென்பதால், அந்த விபீஷணக் கழகத்திலிருக்கும் வீர இளைஞர்கள் தலைவர்களைப் பின்பற்றிவிடக் கூடாது. ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள், பணிவாக வேண்டுகிறோம்; மனந்திறந்து கேட்கிறோம்! மன்றாடி அழைக்கின்றோம்; இந்தியாவே கிடுகிடுக்கும் கிளர்ச்சி; புரட்சிகரமான கிளர்ச்சி, இதுபோல் சந்தர்ப்பம் வாய்ப்பதரிது, தன்மான வீரர்களாக இருப்பதற்கு ஆசையா? தேர்தல் விளம்பர ஏஜண்டாகஇருக்க ஆசையா? என்றெல்லாம் எழுதுகின்றது 25-7-56 "விடுதலை."

தனது இலட்சியத்தைக் காற்றிலே பறக்கவிட்டு, காங்கிரசின் கைக்கூலியாக—காமராஜரின் தேர்தல் ஏஜண்டாக—விளம்பரத் துண்டுப் பிரசுரமாக மாறிக் கொண்டிருக்கும் வீரமற்ற—தன்மானமற்ற — 'விடுதலை''க்கு ஏன் இந்த வீராப்பு? ஏன் இந்த சின்னப் புத்தி? தகுதியிருந்தால், அவர்கள் வேலையை அவர்கள் பார்க்கட்டுமே!

கலை உலகம்! அதற்கிருப்பது ஒரே எதிரி-அவன் பெயர்தான் அறியாமை!

—பேன் ஜான்சன்.

திறனாய்வுக் கட்டுரை.

# இன்றைய இலக்கியம்.

"தமிழ்த்தும்பி"

மக்களின் மனம் பண்பட்டு வளர்வதற்கு. உள்ளதையும் இல்லதையும் புனைந்து காட்டித் தொண்டுபுரிகின்றது இலக்கியம். ஆகையால்தான். ஏடும் எழுதுகோலும் கொண்டு இலக்கியப் பணிபுரிவோர் தம் வாழ்வில் வளம்பல காணா விடினும் தாம் கொண்ட கொள்கையின் மேன்மை கருதி இலக்கியப் பூங்காவினின்றும் நீங்காமல் நின்று பணிபுரிகின்றனர்.

ஆனால் இன்றைய இலக்கியத் துறையை ஆய்வுக்கண் கொண்டுபார்க்கும்போது, எத்துறையிலும் புல்லர்கள் புகுந்திருப்பதுபோல் இத்துறையிலும் புகுந்து, பொல்லாங்கு புரிந்து வருவதும் தெரியாமல் போகவில்லை. சிறப்பாக இன்றைய சிறுகதை இலக்கியத்தில், இக் கெடுமதியாளர் புரிந்துவரும் 'தொண்டு'(!) சமுதாய ஒருமைப் பாட்டிற்கு வழி வகுப்பதாகத் தெரியவில்லை.

சமுதாயத்திலுள்ள மூன்று சதவிகிதத்தினர் பேசும் கொச்சை மொழியையும் அவர்களின் தனிப்பட்ட கலாசாரத்தையும் பரப்புவதே நோக்கமாகக் கொண்டு, இன்று சிலரால் இலக்கியம் வளர்க்கப்படுகின்றது. இந்த வேண்டாத நிலையை முறியடிப்பதற்கு, சீர்திருத்த உள்ளமும் தமிழ்ப்பண்பாடும் மிக்க மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் அணிவகுத்து நின்று, இலக்கியத்தில் புதுமை பூட்டி—களங்கம் நீக்கி—களிப் பூட்டி செல்வாக்குப் பெற்று வருகின்றனர் என்பதும் மறுக்க இயலாத ஒன்றேயாம்.

இருப்பினும் நிலைமை முழுவதும் மாறவில்லை. இலக்கிய வரலாற்றில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தத் திருப்பங்கள் பழைய பாதையை மறக்கச் செய்து புதிய இலட்சிய புரிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.


மேற்கூறிய கெடுமதியாளர் பழைய கண்மூடிப் பழக்கங்களுக்கே முலாம் பூசி புதுமை இலக்கியங்களுக்குத் தடையாக இருப்பதோடு, மொழி நடையில் 'சாதித்தமிழ்' வேறு பரப்புகின்றனர். அவர்கள் 'வீட்டு மொழியாகிய' அந்தக் கொச்சை மொழியைத்தான் நம்மவர் பலர் விரும்பிப் படிக்கும் வேடிக்கை நிலையைக் கண்ணுறுகின்றோம்.

ஆனால் இந்த 'அக்ரகார' மொழி நடையைக் கண்டு பழந்தமிழன் எள்ளி நகையாடியிருக்கின்றான் என்றால் பலருக்கும் வியப்பாகத்தான் இருக்கும்: தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் நூலில் 'மெய்ப்பாட்டு இயல்' என்ற பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள் நூற்பாவில் நகைச்சுவை தோன்றுவதற்குரிய பலநிகழ்ச்சிகளில், "ஆரியர் கூறும் தமிழின் கண்ணும்" என்ற ஒரு தொடரும் காணக்கிடக்கின்றது. இதை 'எள்ளல்' பற்றி வரும் நகைச்சுவையாகத்தான் பழந்தமிழன் கருதியிருக்க வேண்டும்.

தற்கால நூலாகிய 'மேடைத்தமிழ்' என்னும் நூலிலும் சாதித்தமிழ் பரப்பும் செய்கை மறுக்கப்படுகின்றது. 'தத்தம் வீட்டுத் தமிழ் எவ்வாறிருப்பினும் ஒவ்வொரு சாதியாரும் தூயதமிழ் மொழியை உபயோகித்தால் முறையாம்' என்று கூறுகின்றது அந்நூல்.

ஆகவே குறிப்பிட்ட வகுப்பினரின் மொழிநடையிலேயே படைக்கப்படும் இலக்கியங்களைப் புறக்கணிக்கும் மனப்பான்மையை தமிழ்மக்கள் பெறவேண்டும். இந்த மனமாற்றத்திற்கு தமிழ்ப் பண்பாட்டில் திளைக்கும் எழுத்தாளர் பெருமுயற்சி செய்யவேண்டும். இந்த நன்முயற்சியில் அறிவியக்க எழுத்தாளர்கள் குறிப்பிடத்தக்க அளவு ஈடுபட்டிருக்கின்றனர் என்பதைக் கருத்து மாற்றங் கொண்டோரும் ஒப்புக்கொள்ளத்தான் செய்வர். இன்று அறிவியக்கத்தார்க்கு அரசியல் துறையில் பகைவர் பலராயிருந்தாலும், இலக்கியத் துறையில் நண்பர்களே மிகப்பலராக இருக்கின்றனர். இந்த நிலையே மேற்கூறிய உண்மையை விளக்கப் போதிய சான்றாகும். இந்த வெற்றிக்குக் காரணம் அறிவியக்கத்தார் கண்ட புதிய தமிழ் நடையும் சீர்திருத்தக்கருத்துக்களுமே என்பது நாடறிந்த உண்மையாகும். எனவேதான் அறிவியக்கத்தார் படைக்கும் சிறுகதை—நாடகம்—கவிதை இலக்கியங்கள் மாற்றார் வியப்புறும் வண்ணம் வெற்றிபெறுகின்றன. பாராட்டப்படுகின்றன. இந்தப் புதிய நிலை இன்னும் வளர்ச்சிபெற்று—சனாதன விரும்பிகளாம் சழக்கரின் சஞ்சிகைகள் மதிப்பிழக்கவும் புதுமைவிரும்பிகளின் இலக்கியப் படைப்புகள் மிகுந்த, சஞ்சிகைகள் தழைக்கவும் வேண்டும். அப்பொழுதுதான் தனித்த தமிழ்ப் பண்பாடும் அழகொழுகும் மொழிநடையும் சிந்தனைக்கு விருந்தாகும் சீர்திருத்தக் கருத்துக்களும் வளரும். ∅


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

அதிகார பீடத்தை அலங்கரிப்பது கேவலம்; மிகமிகக் கேவலம்!

"தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று வீரம் பேசும் காமராசர், தமிழன் உரிமையை, தமிழன் வாழ்வை, தமிழன் வளத்தை, தமிழன் மண்ணை மாற்றானுக்கு விட்டுக் கொடுத்து தன் மந்திரிப் பதவியைக் காப்பாற்றுகிறார்!

மராட்டிய மண்டலத்தைப் பாருங்கள்; மராட்டியர்க்குரிய பம்பாய் நகரத்தை மகாராஷ்டிரத்தினின்றும் பிரித்ததை ஆட்சேபித்து, இந்திய அரசாங்க நிதி மந்திரி திரு சி. டி. தேசுமுக் தன் மந்திரிப் பதவியை ராஜிநாமா செய்து, மராட்டியத்தின் மானத்தைக் காப்பாற்றுகிறார். வீரர் யார்? தேசுமுக்கா? காமராசரா?

தமிழ் நாட்டிலே தமிழர்கள்; மொழிப்பற்று— இனப்பற்று— நாட்டுப்பற்று கொண்ட நல்லவர்கள் காமராசரிடம் எதிர்பார்த்த வீரம், அங்கே மராட்டியத்தில் வீறுகொண்டெழுந்து உலகுக்குத் தன்மான ஒளி பரப்புகின்றது; இங்கே, பாழும் மந்திரிப் பதவியை இன்னும் சுமந்துகொண்டுதான் உலவுகின்றார் பச்சைத் தமிழர் காமராசர்!

அங்கே மராட்டியம் வாழ, மராட்டியத்திற்குப் பெருமை தேடுகிறார் தேசுமுக். இங்கே தமிழகம் தாழ, தமிழ்நாட்டுக்கு இழிவு தேடுகிறார் காமராசர்! பெருமையின் சின்னம் தேசுமுக்! சிறுமையின் வடிவம் காமராசர்! தன்மானத் தமிழா! எண்ணிப்பார் இந்த நிலையை.

—"வாலி"




# தேவாசுரப் போராட்டம்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்களால் எழுதப்பட்ட "தேவாசுரப் போராட்டம்" என்ற நாடகத்தை, நடிகவேள் எம். ஆர். ராதா குழுவினர் நடத்திவருகின்றனர்.

தேவர்கள் எனப்படும் ஆரியர்க்கும், அசுரர்கள் எனப்படும் திராவிடர்க்கும் நடந்த போராட்டம் என்று கற்பனை செய்யப்பட்ட ராமாயணத்தை, சிறந்த நகைச்சுவை நாடகமாக்கியுள்ளார் பெரியார். அதனைத் தனக்குரிய தனிப்பாணியில் சிறப்பாக நடத்துகிறார் நடிகவேள்.

தேவன்—ராமனின் கோணல் நடத்தைகளைச் சித்திரிக்கும் அளவுக்கு அசுரன், இராவணனுடைய நேரிய பண்புகள் விளக்கமுறவில்லை நாடகத்தில்; தோழர் ராதாவே ராமன் பாத்திரத்தை ஏற்றிருப்பது காரணமாக இருக்கலாம். பொதுவில் "தேவாசுரப் போராட்டம்" பார்த்தோர் மனத்தில் சிந்தனைக் கதிர்களைப் பாய்ச்சிடும் தன்மையுடையது! தெய்வீகத் தில்லுமுல்லுகளை, பித்தலாட்டங்களை உடைத்துத் தூளாக்குவது. பாராட்டுகிறோம்.

சேலத்தில் நவாப்பின் "கிருஷ்ண லீலா"வும் நடக்கிறது. "தேவாசுரப் போராட்ட"மும் நடக்கிறது. நாடக ரசிகர்களின் சிந்தனைக்கும் பேச்சுக்கும் நல்லவேலை கிடைக்கிறது.

—சுகவனம்.

## நடிப்பு இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினரான நடிப்பு இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், தம் நாடகக் குழுவினருடன், ஜூலை 27-ந் தேதி காலை 10 மணியளவில் விமானமூலம் மலேயா பயணமாகிறார்!

மலேயாவில் சிங்கப்பூரிலும் மற்றும் பல நகரங்களிலும் நடிப்பு இசைப்புலவரவர்கள் காதல்ஜோதி, சந்திரமோகன், போன்ற பல நாடகங்களை நடத்தி, அங்குள்ள தமிழ் மக்களை மகிழ்வித்து சிறப்போடு திரும்புவாராக!


## கைத்தறி ஜவுளி.

எங்களிடம் நூல் பட்டு சேலைகளும், மதுரையில் தயாராகும் ஈரெழை சிட்டை துண்டுகளும் நியாயமான விலையில் கிடைக்கும்.

**A. S. மாணிக்கம்,**
உரிமையாளர்:
சுந்தர் ஹால்,
63, A சேரிரோடு, :: சேலம் டவுன்.




விலை 0-8-0

இது ஒரு தென்றல் வெளியீடு.


சலகண்டபுரம் கடைத்தெரு செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர் :- ப. கிள்ளனன்.


> **சிறந்தது.**
>
> ஒருவனுக்கு ஆகாரம் அளிப்பதைவிட அதை அவனே தேடிக்கொள்ள வழிகாட்டுவதே முக்கியம். ஒருவனுக்கு உதவி செய்வதைவிட அவனைப் பிறருக்கு உதவக் கூடிய நிலைபெறும்படி செய்வதே சிறந்தது.
>
> —ஆவ்பரி.


கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

| மலர் 6 | சேலம் 3-8-56. வள்ளுவராண்டு 1987. ஆடி 19. | இதழ் 4. |
|---|---|---|


# வடமொழி கீதைக்கு உயர்வு; வள்ளுவர் குறளுக்கு இழிவா?

# வினோபாஜியின் பெருநெறியும், சிறுமதியும் காணாய் தோழா!

சேலம்
31-7-56

அன்புத் தோழா,

வணக்கம்.

சேலத்தில் நடந்த வினோபா பாவேயின் பூதான் யாத்திரை-வழிபாட்டுக் கூட்டம் பற்றிய விபரம் கேட்டிருந்தாய். செய்தி நிருபர்களும், தாள்களும் இருட்டடிப்பு செய்த இழிவுதரும் அந் நிகழ்ச்சியினை இதோ, விளக்குகின்றேன் :

நினைவிலிருக்கும் என எண்ணுகிறேன்; நானும், நீயும் சென்னை ஐலண்டு மைதானத்தில் நடந்த வினோபாவின் கூட்டத்திற்குச் சென்றது. 'செப்பும் மொழி பதினெட்டுடையாள்; எனின் சிந்தனை ஒன்றுடையாள்' என அவர் நற்றமிழில் சொல்லியது இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. வந்ததும், வராததுமாக, அதுவும் பாரதியின் பாட்டிலே இவ்வளவு பாண்டித்தியம் உளதே என வியந்தோம் நாம். அரசினர் விடுதியில்கூட, நாம் அவரைப் பார்க்கச் சென்றபோது தம் குழுவிற்கு 'திருக்குறள்' வகுப்பு நடத்திக் கொண்டிருந்தார். வியந்தோம். மகிழ்ந்தோம்! வாயாரப் புகழ்ந்தோம். நேருவின் எதேச்சதிகாரப் போக்கை, குவியல்முறை" அதிகாரத்தால் ஏற்படும் ஆபத்தை 'ஆதோனி'யில் நடந்த கூட்டத்தில் ஆச்சாரிய வினோபா குறிப்பிட்டதை—வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொன்னோம். 'உழவனுக்கே நிலம்—உழைப்பவனுக்கேப் பணம்' என்னும் அவர் தம் கருத்தை உலகறியச் செய்வதில் நான் சளைத்தவனல்ல என்பதை நன்கறிவாய்.

இக்கால புத்தராய்; நாடெங்கும் நடந்து நடமாடும் காந்தியாய், 'கிராமக் குடியரசு'கள் அமைய, அதற்கான சூழ்நிலையை உருவாக்க 25-7-56 சேலத்திற்கும் வந்தார் வினோபா.

புனிதரே! பூஜிதரே! முனி புங்கவரே! எனப் பூபாளம் பாடினால் மட்டும் போதாது, பூமி நிறையக் கொடுத்தால் தான் 'பாபாவின் உளம் பூரிக்கும்' என்று சொல்லி செயல்பட்ட சிலரிலே யான் ஒருவன். தோழா, தாய் மொழியின் ஆக்கத்திற்கு, நாம் அன்று வாழ்ந்து, நடுவிலே தாழ்ந்து, இது போழ்து விழிப்புற்று எதிர்காலத்திலேனும வாழ்வு கிட்டாதா என ஏங்கும் என் தமிழினத்திற்குக்கூட அப்படிப் பாடுபட்டிருக்க மாட்டேன். கிட்டிய பயன் என்ன?

நான் பிறந்த நாட்டிற்கும், பேசும் மொழிக்கும், பின்பற்றும் நெறிக்கும் வினோபா மாறுபட்டவராக இருந்தாலும், அவர் கண்ட இயக்கமும், கொண்ட குறிக்கோளும் சிறந்தவை, உயர்ந்தவை என்பதை மறுக்க மாட்டேன். வடவாதிக்கத் தைப்பரப்பி, தலைதூக்கிவரும் தென்னவரை மீண்டும் அடக்கி, அடிமைப்படுத்த மறைமுகமான பேச்சாலும், செயலாலும் வினோபா முற்படுகிறபோது தான் சிந்தை நோகின்றது!

சென்னையிலும், காஞ்சியிலும்; கொடுத்த வாக்குறுதியின்படி செங்கல்பட்டிலும், வினோபாபாவே தமிழ் மறையாம் திருக்குறளை மதித்து கையெழுத்திட்டுத்தந்துள்ளார். ஆனல், வினோபாவின் நோக்கெல்லாம் வீட்டுக்குவீடு 'கீதை'


[8-ம் பக்கம் பார்க்க]

# இன்பராணி

இரா. மதனகோபால் B Com.

'என்னங்க அஞ்சு மணிக்கென்று சொல்லிவிட்டு, நீங்கபாட்டுக்கு நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டு யோசிச்சுகிட்டு இருக்கறீங்க?'' என்ற இன் குரல் கேட்டு திடுக்கிட்டேன். வாயிற்படியை நோக்கினேன்.

தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு நின்றிருந்தாள் ராதை.

இயல்பாகவே அழகுள்ளவள் ராதை. அவள் சிவந்த மேனியும், எடுப்பான மூக்கும், கட்டுடலும், காந்தக் கண்களும், கருநாகப் பின்னலும், கலை சொட்டும் முகமுமாக அழகு தேவதையைப் போன்றிருந்தாள். வில்லைப் போன்ற புருவத்திற்கு மையிட்டு, முகத்திற்கு பவுடர்போட்டு, உடையில் 'செண்ட்' தெளித்து ஒரேயடியாக மணந்தாள் அவள்! சிவப்பான அவள் உடலை சிவப்பு 'நைலான்' புடவை அணைத்திருந்தது. கருநிற 'வெல்வேட்' ஜாக்கெட்டு, அவள் மார்பையும், முதுகையும் முத்தமிட்டு அணைத்திருந்தது. காலிலே பிளாஸ்டிக் ஸ்லிப்பர், கையிலே வெஸ்ட் எண்டு ரிஸ்டு வாட்ச், இப்படி அவள் ஒரேயடியாக அழகு மணம் கமழ சௌந்தர்ய மோகினி போன்றிருந்தாள்.

அவளையே சில வினாடிகள் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்; அவள் அழகை ரசித்துக்கொண்டிருந்தேன்; மணத்தை நுகர்ந்து கொண்டிருந்தேன்.

''என்னங்க, அப்படி பார்க்கறீங்க.'' என்று சொல்லியபடியே என் அருகில் வந்தாள், அன்னநடை நடந்து.

''இல்லை ராதே! இன்று நாம் சினிமாவிற்குப் போகும் திட்டத்தை ரத்து பண்ணிட்டேன். வேறு ஒரு முக்கிய வேலையிருக்கு.'' என்றேன்.

நான் அப்படிக் கூறியதும் அவள் முகம் வாடிவிட்டது. நான் எழுந்து அவள் கையைப் பற்றி அருகில் இழுத்தேன்.

''என்ன ராதே! கோபமா?'' கொஞ்சினேன் நான். அவள் குனிந்திருந்த தன் தலையை நிமிர்த்தி என்னை நோக்கினாள்.

அவள் பார்வையிலே மயங்கிய நான் அவள் அழகில் சொக்கி விட்டேன். அவளை அணைத்தேன். அவள் இணைப்புக்கு விட்டுக் கொடுத்தாள். என் கழுத்தில் கையைக் கோர்த்துக் கொண்டாள்.

பவுடரின் மணமும், செண்டின் மணமும், அவள் அளவற்ற அழகும் என்னை நிலை மறக்கச் செய்தன.

அப்படியே அவள் அதரத்தில் என் அதரத்தைப்பொருத்தி முத்தமிட்டேன்; பிறகு .........

★ ★ ★

ராதை! யார் அவள்? என் மனைவியா? இல்லை! பின்!...?

என் மனைவியாகப் போகிறவள்!

அவளை நான் சந்தித்ததே ஓர் சிறுகதை! வாழ்க்கை என்பது பலப்பல சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் அடங்கிய பத்திரிகைதானே! சில இன்பமாக முடியும், சில துன்பமாக முடியும்.

நான் முப்பது வயதுக்கு மேற்பட்டும் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம் காதலோ, வேறு எந்தப் பிரச்சினையோ அல்ல. நான் உற்றார் உறவினர் அற்றவன். ஒண்டிக்கட்டை என்று சொல்கிறார்களே அந்த வகையைச் சார்ந்தவன், எனக்குக் கல்யாணம் செய்பவர்கள் யாருமில்லை. நானும் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடவில்லை.

எனக்குக் கிடைக்கும் சம்பளம் கல்யாணம் செய்துகொண்டு சுகமாக வாழும் அளவு கிடைக்கிறது. இருந்தும், திருமணம் ஒவ்வொருவனும் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமுடையவனல்லன் நான். எனவே என் வாழ்க்கையின் கல்யாணம் செய்து கொள்வதற்குரிய அவசியம் எழுந்ததே இல்லை.

சொக்கலிங்கம், ஒரு விநோத மனிதர். அவருக்கு நல்ல வருவாய் கிடைத்து வந்தது. ஆசாமி கார், பங்களா, ரேடியோவுடன் இருக்கிறார். அதனால் ஊருக்குப் பெரியமனிதர். அவர் செய்யும் ஆறுகால பூஜைகளும், தேரோட்டங்களும் பெரிய பக்திமான் என்று பறைசாற்றின; அவர் இரவுராணிகள் பலரை வைத்துத் தொழில்புரியும் பேர்வழி என்பதை நல்லவர்கள் அறியமாட்டார்கள். எனக்குச் சற்று தெரிந்தவர்;

அன்று, எனக்கு அவரிடமிருந்து ஆள் வந்தது. எதற்கோ என்று நான் போனேன்.

என்னை ஓர் அறையை சுட்டிக்காட்டி 'உள்ளே இரும்' என்று சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.

நான் அறையினுள் நுழைந்தேன். இன்பமணம் கமழ்ந்தது. அங்கே— அழகே உருவான பெண்ணொருத்தி கட்டிலின் மீது குப்புற படுத்திருந்தாள். அந்த நிலை என்னை எங்கோ தூக்கிப் போட்டது! நான் அவளருகே சென்றேன்.

அவள் குலுங்கிக்குலுங்கி அழுது கொண்டிருந்தாள். நான் அவளைத் தொட்டதும் அவள் எழுந்து என்னை ஏறிட்டு நோக்கினாள். அவள் கண்கள் சிவந்திருந்தன. கன்னங்கள் வீங்கியிருந்தன.

என்னைப் பார்த்ததும் அவள் 'ஓ' வெனக் கதறியழுதாள் ''ஐயா!'' என்று என் காலைப் பிடித்துக் கொண்டாள். இது எனக்குப் புதிய அனுபவம். இதயம் நடுங்கிற்று, எனினும் துணிந்து அவளைப் பிடித்துத் தூக்கினேன், சமாதானம் செய்தேன்.

அவள் அழுகையினூடே கூறிய விவரம் இது:— மேலைக்கோயில் என்னும் ஊரைச் சேர்ந்தவளாம், அவள். நாயுடு வகுப்புக்காரியாம். நல்ல குடும்பத்தைச் சார்ந்தவள்தானும். தன் வீட்டில் சண்டையிட்டுக் கொண்டு வெளியூர் ஓடிவந்து விட்டாளாம். வந்ததும் பிழைக்க வழிதேடி அலைந்தாளாம். அப்பொழுதுதான் சொக்கலிங்கம் கண்டாராம். மெல்லப்பேசி அழைத்துவந்தாராம். வந்ததும் தான் எல்லாம் தெரிந்ததாம்.

[7-ம் பக்கம் பார்க்க]

## எதிரொலி

இராமர் படத்தை எரித்தவர்கள் 600 பேர் கைது செய்யப்பட்டனர்.

—செய்தி.

இராவணன் படத்தை எரிப்பவர்கள் உச்சிகுளிருவார்கள், அடிமைகளின் திறனுக்கு!

* * *

எப்பொழுதுமே ஆண்டவன் மனித உருவில் வந்துதான் பணியாற்றியுள்ளார் என்பதை, சரித்திரவாயிலாக அறியலாம்.

—காங்கிரஸ்-கக்கன்.

ஐயோ! மலத்திற்கும், சாணிக்கும் வேற்றுமை தெரியாத இந்தச் சரித்திர நிபுணர், காங்கிரஸ்காரர் நடத்தும் வரலாற்றுத்துறை ஆய்வாளர் மாநாட்டிற்கே தலைமை தாங்கலாமே!

* * *

தென்னிந்தியாவில் ராவணன் உருவங்களை எரிக்க யாராவது முற்பட்டாலும், அதையும் சர்க்கார் தடுக்கும்.

—மந்திரி, சுப்ரமணியம்.

பிறந்துவிட்டது தன்மானம்! இனி ராவணன், கும்பகர்ணன், சூர்ப்பனகை ஆகியோரை கேவலமாக்கி இழிவுபடுத்தும் நாடகம், பிரசங்கம், கதா காலட்சேபங்களை நடக்க விட்டுவிடுவாரோ! பார்க்கலாமே!

* * *

சமஸ்கிருதம் நம்மைவிட்டு ஒருபொழுதும் நீங்காது.

—ஜவகர்லால்.

அதை வடநாட்டுச் சுடலையில் புதைத்துவிட்டு நாங்கள்தான் தென்னாடு வந்துவிட்டோமே!

* * *

திண்டுக்கல்லில், கற்பழித்ததாக கான்ஸ்டேபில்மீது வழக்கு! செஷன்சுக்கு அனுப்பப்பட்டார்.

—செய்தி.

கடமை மறந்து, அவரைக் காப்பாற்றாது கைவிட்ட கடவுள்மீது கான்ஸ்டேபில் வழக்குத் தொடருவாரோ?

கலீல்கிப்ரானின்

# மாளிகையும் மண்குடிசையும்.

தமிழில்: சகதீசன் ஆ. மா.

### மாளிகையிலே.

கதிரவன் மறைந்து இரவு நெருங்க, மாளிகையில் நந்தா விளக்குகள் ஒளி வீச, பெருந் தேவுகளின் ஓரங்களிலே விருந்தினரின் வருகைக்காக வேலைக்காரர்கள் கைகட்டி நின்றனர். அவர்களின் வெண்பட்டு உடையின்மேல் பொன் பொத்தான்கள் மினு மினுத்தன.

ஒரு கம்பீரமான கவர்ச்சியுள்ள வண்டி அந்த மாளிகைப் பூங்காவிலே வந்து நிற்க, சீமான்கள் பீதாம்பர உடையும் அழகு ஆபரணங்களும் ஒளி வீச மாளிகையுள் நுழைந்தனர். இசைக்கருவிகளின இன்பசங்கீதம் காற்றில் கலக்க, உள்ளத்தைத் தொடும பண்ணிற்கேற்ப கலைச் செல்விகள் நடனமாடினார்.

நடு இரவிலே, எல்லாவிதமான இடைத்தற்கரிய மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய மேஜைமேல், மிகவும் இனிய அறுசுவையுண்டி பரிமாறப்பட்டது. விருந்தினர் மதுவை மனங்கொண்ட மட்டுக போதையேறக் குடித்து உணவை விலாப்புடைக்க உண்டனர். அப்பெருங் கூட்டத்தின் பேரிரைச்சல் அகல, பேருணவும் மதிமயக்கமும கலந்து இரவெல்லாம் கூத்தடித்த அவர்களின் தேய்ந்த தேகத்தை இயற்கையற்ற ஊக்கம் உட்கொள்ள, பொழுதும புலர்ந்தது.

### மண் குடிசையிலே!

மாலை நேரத்திலே, கனத்த அழுக்கடைந்த உடை பூண்ட தொழிலாளி ஒரு மண்குடிசையின் கதவைத் தட்டி நின்றான். கதவுதிறக்க மலர்ந்த முகத்துடன் மனைவியையும மக்களையும வரவேற்று, பிள்ளைகள்விளையாடும நெருப்பண்டை போய் உட்கார்ந்தான். சிறிது நேரத்தில் அவன் மனைவி உணவைப் பறிமாற, சிறிய மரமேஜை சுற்றி உட்கார்ந்து உண்டு மகிழ்ந்தனர். உணவு முடிந்தவுடன் அகல விளக்கைச் சுற்றி அமர்ந்து அன்றைய நிகழ்ச்சியைப் பற்றிப் பேசினார். இரவின முன் நேரம முடிய அவர்களின் உதட்டிலே புகழ்ச்சிப்பாட்டும நன்றியுள்ள வணக்கமும அசைந்துவர அமைதியாகப் படுத்து உறக்கத்தை அடைக்கலமடைந்தனர். ○○

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை, அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 3—8—56 | இதழ் 4

# எரிகிற தீயில் எண்ணெய்!

திராவிட கலாச்சாரமும், ஆரிய கலாச்சாரமும் மிகத் தொன்மை வாய்ந்தவை என்பதை எந்த வரலாற்று ஆசிரியரும் மறுப்பதில்லை. திராவிட கலாச்சாரம் திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளின் அடிப்படையிலும், ஆரிய கலாச்சாரம் அவர்தம் மொழியான சமஸ்கிருத மொழியின் அடிப்படையிலும் கால்கொண்டு வளர்ந்து, செழித்து, நின்று நிலவுவன என்பதையும் மறுப்பாறிலலை.

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களும் சமஸ்கிருதத்தால் ஆக்கப்பட்ட ஆரிய கலாச்சாரப் பெருங்கதைகள். காலப் போக்கில் அவை எங்கும் பரவின. தமிழிலும் எடுத்து எழுதப்பட்டன. அவற்றின்மீது பொய்யான தெய்வீக மகத்துவங்கள் ஏற்றப்பட்டன! ஏமாற்றப்பட்டான் திராவிடன்!

இஃது, வரலாற்று அறிவு படைத்த பள்ளி மாணவனும் அறிந்த செய்தி. மேலும், "இராமாயணம் ஆரியருக்கும், திராவிடருக்கும் நடந்த அக்காலப் போரினைக் குறிக்கும் கதை" என்ற உண்மையினை பண்டித ஜவகர்லால் நேருவே பகர்ந்துள்ளார் எனினும், அந்தப் பண்டிதரே இப்போது விரும்புகின்றார் இந்தியாவில் இரு வகைப்பட்ட கலாச்சாரங்கள் இல்லையென்று காட்ட! எத்தகு பொய்மை! எத்தகு பேராசை!

1–8–56 புனா நகரில், பந்தர்கார் ஆராய்ச்சி நிலையம், பண்டிதர் தலைமையில் மகாபாரதத்தை வெளியிட்டு விழாக் கொண்டாடியதாம். அதுகாலை அவர் கூறுகின்றார்:

"புராதனகால ரிஷிகள்மூலம் தற்போதைய சந்ததியார்களுக்குக் கிடைத்த சமஸ்கிருத மொழியறிவு காரணமாக இன்று இந்தியா சிறப்புற்று விளங்குகின்றது"

"அது மக்களால் பேசப்படும் பாஷையாக இல்லாமலிருந்த போதிலும், இந்திய வாழ்க்கைக்கு முக்கியமாகும். புராதனகால இந்தியாவின் பண்பாட்டையும், அறிவுப் பசியையும் சமஸ்கிருத மொழி பிரதிபலிக்கிறது"

"மகாபாரத்தின் ஆய்வுப் பகுதிகளை பந்தர்கார் நிலையம் தயாரித்து, இந்தியாவின் எதிர்கால வளர்ச்சிக்கும், சுபிட்சத்திற்கும் மிகவும் முக்கியமாகும்."

இவற்றைப் பார்க்கும்பொழுது பண்டிதரின் பரந்த மனப்பான்மையிலே; பகுத்தறிவு, விஞ்ஞான, முற்போக்குக் கருத்துக்களிலே நாம் ஐயப்படாமல் எப்படியிருக்க முடியும்? சமஸ்கிருத—இதிகாசப் பாராட்டுரையில், படித்த பார்ப்பனர் நிலையழிந்து, பஞ்சாங்கப் பார்ப்பனராகி விட்டார் பண்டித நேரு! "புரட்சிக் குழந்தை' புராணக் குழந்தையாகி, பண்டைய ரிஷிகளை நோக்கித் தவழத் தொடங்கிவிட்டது!

தனிக் கலாச்சாரப் பெருமையும், தகுதியும் பெற்றுள்ள திராவிட இனத்தைக் கட்டியாளும் உரிமை, இத்தகு ஆரியப் பெருமகனாரிடம் இருப்பது திராவிடர்க்கு நலம் பயக்குமா? மேன்மை விளைக்குமா?

சமஸ்கிருதமும், இராமாயண பாரத இதிகாசங்களும் திராவிடத்திலே புகுந்து, நமக்கு இழைத்துள்ள தீங்குகள் எண்ணற்றவை! எண்ணற்றவை!! திராவிடனைச் சாதியால் பிரித்து, வருணாசிரமத்தால் வதைத்து, ஆண்டவனால் அறிவழித்து, பக்தியால் பாழடித்து, மடமையால் திடம் குலைத்து, அடிமைப்பட்டுழலும் சோம்பேறி வேதாந்த சோத்துப்பிண்டங்களாக்கின!

நெடுங்காலத்திற்குப் பிறகு, இன்று திராவிடன் தன்மானம் பெற்று தலைநிமிர்ந்து பார்க்கிறான்! தன்னைப் பாழ்படுத்திய சமஸ்கிருதத்தைப் பதைப்புடன் நோக்குகிறான்! இதிகாசங்கள் எதற்கு என்று கேட்கிறான்! நமக்கேன் இந்த நலிவு தரும் காதைகள் என்று பகுத்தறிவு முழக்கமிடுகிறான்! இதிகாச பாத்திரங்களை எரிக்கவும் முனைந்துள்ளனர் ஒரு பகுதினர்!

இந்த நிலையிலே எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றுகிறார் அலகாபாத் ஆரியப்பண்டிதர்! இது தேவைதானா? திராவிடத்தின் மானமழித்த ஆரிய சமஸ்கிருதமும், இராமாயண பாரத இதிகாசங்களும் இங்கு வாழ்ந்திட, வளம் பெற்றிட திராவிடன் ஒருப்படவேண்டுமோ?

★

ஊரம்பலம். ஒற்றன்.

# இராமத்தனமும், காமத்தனமும்.

கடைத்தெருப் பிள்ளையார் கோயில் முன்பு எரிக்கப்பட்டார் எம்பெருமான் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி! எரிகின்ற நெஞ்சத்தோடு மணியக்காரரைப் பார்க்க ஓடிவந்தார் பெருமாள் கோயில் அர்ச்சகர் இராமாச்சாரி. ஊரடி ஆலமரத்து மேடையில் மணியக்காரர் இல்லை; சிவன் கோயில் அர்ச்சகர் சுப்ரமணிய குருக்கள் சிரித்தபடி உட்கார்ந்திருந்தார். எரிச்சல் அதிகமாயிற்று அர்ச்சகருக்கு கணநேரத்தில் ஏதேதோ எண்ணிவிட்டார்!

"என்னங்காணும் சிரிக்கிறீர் என்றார் ஆத்திரத்தோடு.

"ஏங்காணும் இவ்வளவு ஆத்திரம்? உமது கடவுளுக்கு நானா தீயிட்டேன்?" என்று கேட்டார் குருக்கள்.

"என் கடவுள் போனால், உமது கடவுளுக்கு யோகம்! அப்புறம் உம்ம மணிதானே அடிக்கும், உம்ம தட்டம் தானே நிறையும்! அதற்காகவாவது நீர் அவர்களுக்கு ஆதரவு காட்டியிருப்பீரோன்னோ?" என்றார் பெருமாள் கோயில் அர்ச்சகர்.

"ஓய்! ஏங்காணும் இந்தப் பொறாமை? உம்ம ராமன் கடவுளல்லங்கறது நேக்கு நன்னாத் தெரியும். தென்னாட்டிலே சிவன் பிரபலமாறதைப் பார்த்து, போட்டியா வடக்கேருந்து ராமனை எறக்குமதி பண்ணினேள்! மகாவீரன் வாலியை மறைஞ்சிருந்து கொலைபண்ணின வக்ரபுத்திக்காரன், சூர்ப்பநகையோட மூக்குமுலையும் அறுத்த குதக்காரன், பெண்கொலை புரிஞ்ச பேடியைப் பிரமாதப்படுத்தி கடவுளாக்கினேள். தொழில் நன்னா நடந்தது! பொய்யும் புளுகும எத்தனை நாளைக்கும் காலூனி நிலைக்கும? காலம் வந்தது; சாயம் வெளுத்துப்போச்சு! மத்தவா மேலே ஆத்திரப்பட்டு என்னங்காணும் பண்றது?" என்றார் குருக்கள்.

அர்ச்சகர் ராமாச்சாரிக்கு அபார கோபம். கண்கள் சிவந்தன "என்ன திமிருங்காணும் ஒமக்கு? ராமனைக் கடவுளல்லன்னு சொல்றேள்? ராமனைக் காட்டிலும் சிவன் எந்த வகையிலேங் காணும ஒசத்தி? ஒம்ம கடவுள் மட்டும் யோக்கியரோ? தாருகாவனத்து ரிஷி பத்தினிகளோட கற்பெல்லாம் அழிச்சவர். புணருகின்ற யானையைக் கண்டு காமவெறியாலே பார்வதியைப் புணர்ந்து யானைக்குட்டி போடவச்சவர்,...

"போதும் நிறுத்துங்காணும்! என்னோட கடவுளையா பழிக்கிறீர்? மூக்கை ஒடச்சிடுவேன்!" என்று சீறியெழுந்தார் குருக்கள்.

"என்னோட கடவுளைப் பழிக்கறவா கண்ணைப் பிடுங்கிடுவேன் தெரியுமாங்காணும்!" என்று வரிந்துகட்டினார் அர்ச்சகர். ஆனால் நெருங்கவில்லை இருவரும். தூரமாகவே நின்றனர்.

சிரிப்பொலி ஒன்று கேட்டது. இருவரும் திரும்பிப்பார்த்தனர்: சிரித்தபடி நின்றார் பள்ளி ஆசிரியர் பரமசிவம், "ஏனப்பா சிரிக்கிறே?" என்று கேட்டனர் இருவரும்.

வாத்தியார் கூறினார் "திருநாமமும், திருநீறும சண்டை போட்டா ஒலகமே அழிஞ்சிடுமேன்னு பயந்தேன்! அப்புறந்தான் தெரிஞ்சுகிட்டேன்: வஞ்சக ராமத்தனமும், சிவனோட காமத்தனமும ஒங்க வீரத்தையெல்லாம், மூடிச்சிட்டுதுங்கற விஷயத்தை! என்னைக்கும் ஒங்க வாய்ச்சண்டை கைச்சண்டையா மாறவே மாறாது ஓய்!" தலைகுனிந்தனர் அர்ச்சகரும், குருக்களும. ∅

---

தலைமைக் கழகம்: அறிக்கை-8/76.

## தி. மு. கழகக் கிளைகளின் தேர்தல்

### கிளைக் கழகங்களுக்கு விளக்கம்

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கிவரும் தி. மு. கழகக் கிளைகள் புதிதாக உறுப்பினர்களைச் சேர்த்திருப்பதை முன்னிட்டு, கிளைகளின் செயற்குழுவைப் புதுப்பிக்கும் வகையில் தேர்தல் நடத்த வேண்டிய அவசியமில்லை.

எந்தக் கிளையிலாகிலும், கிளையின் செயற்குழு உறுப்பினரோ அல்லது நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களோ விலகல் அல்லது விலக்கல் காரணமாகப் பொறுப்பை இழக்க நேரிட்டால், மாவட்டச் செயலாளரின் அனுமதிபெற்று, பொது உறுப்பினர் கூட்டத்தைக் கூட்டி மறுதேர்தல் நடத்தவேண்டும். இக்கூட்டங்களில் இப்போது உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்டுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ள உரிமை உடையவர்களாவர்.

மேற்குறிப்பிட்ட அவசியம் ஏற்படாத மற்ற எல்லாக் கிளைகளும் பொதுச்செயலாளரின் பொது அறிக்கை வெளியிடப்படும்போதுதான் கழகப் பொதுத்தேர்தலை நடத்தவேண்டும் என்பதை அறிய வேண்டுகிறோம்.

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர், தி. மு. க.
சென்னை-13 28-7-56.

---

## சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம்.

அன்புடையீர்! சே. மா. தி. மு. கழகக் கூட்டம் 6-8-56 திங்கட் கிழமை மாலை 3-மணிக்கு, சேலம் சாந்திநிகேதனில் நடைபெறும். மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,

ஆய்வுப் பொருள்கள்:—

1. பொதுத் தேர்தலும், சேலம் மாவட்டமும்.
2. தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோக வழக்கு.
3. தேர்தல் நிதி.
4. நமது மாவட்ட வரவு செலவு.

குள்ளம்பட்டி. 30—7—56

ஜி. பி. சோமசுந்தரம்,
செயலாளர்.

---

## சோதா ராமன்!

ஆசிரியர்:- டேய் சோமு! ராமனைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.

சோமு:- அவன், இருட்டிலே ஒளிஞ்சிருந்து ஏகாம்பரத்தோட மண்டையை ஒடைச்ச சோதா சுப்பனைப்போல, மரத்தில் மறைஞ்சிருந்து வாலியைக் கொன்றவன் சார்!

—ப. க. குலோத்துங்கன்

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● எஸ். கே. சாமி,
தேவணுங்குறிச்சி P. O.
சேலம் மாவட்டம்.

எம். பழனியப்பன், துளசம்பட்டி.

கே: கிராமங்களிலே, பனை மரத்து நிழலும், பார்ப்பான் உறவும் என்கிறார்களே. ஏன்?

ப: பனைமரத்து நிழல் குறுகியது, நிலைக்காது விரைந்து மறைவது: பார்ப்பான் உறவும் அதுபோன்றது என்கிறார்கள், அறிந்தவர்கள்.

ப மணியன். கோயமுத்தூர்.

கே: ஆங்கிலப் படங்களில் முத்தம் கண்டு வெறுப்பவர்கள், ஆலயங்களில் ஆணும் பெண்ணும் நிர்வாணமாக முத்தமிடும் காட்சியை ஒப்புகிறார்களே, இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: பக்தி என்ற போர்வையில் எத்தகு இழி செயல் நடப்பினும், பஞ்சமா பாதகங்கள் புரியினும் ஒப்பித் தலையாட்டிப் பணிகின்ற மடமை இன்னும் மாய்ந்து போகவில்லையே!

இரா. செயகோபாலன், ஆத்தூர்

கே: இலட்சியத்தில் ஒன்றுபட்ட தி. மு. கழகம், தி. க. நடத்தும் இராமன் பட எரிப்பில் கலந்து கொள்ளாதது தவறல்லவா?

ப: இலட்சியத்தில் ஒன்றுபட்டவர்கள், இலட்சிய சித்திக்குச் செயலாற்றும் வழிகளிலே வேறுபடுவது தவறல்ல; இலட்சியம் மறந்து இடர்ப்படுவதே தவறு!

ஆர். வெங்கடராமன், சின்னப்பம்பட்டி.

கே: திராவிடத்தை வடநாட்டார் ஆளும்படியான நிலை எப்படி நேர்ந்தது?

ப: நமது கலை, கலாச்சாரம், வாழ்வு நெறி, முறை, வகை யாவற்றையும் மறந்து "இந்தியா ஒரே நாடு" என்ற குருட்டுவாதத்தை ஒப்பியதால் நேர்ந்தது இந்நிலை!

கே: காங்கிரஸ்காரர்கள் மாடுவாங்க, கிணறு வெட்ட பணம் கொடுக்கிறோம் என்றார்களே; பணத்தைத் திரும்பக் கேட்கமாட்டார்களா?

ப: அரசாங்கம் கொடுத்த விவசாயக் கடன் காங்கிரஸ்காரரின் பெட்டிப் பணமல்ல; மக்களின் வரிப்பணம்! பொதுப்பணத்தை ஏப்பம் விடும் லட்சாதிபதிகளை விட்டாலும், விவசாயிகளை விடுவார்களா என்ன!

● எஸ். கே. சாமி, தேவணுங்குறிச்சி.

கே: மருதி தோட்டத்திலே பூக்கும் மலர்கள், சிவன் கோயிலிலும் மலருகின்றன. மனித சமூகம் மட்டும் ஏன் மதபேதம் பாராட்ட வேண்டும்?

ப: கூடாதுதான்; மலர் சூடுவதிலும், சூட்டுவதிலும் உனக்கு அதிகமா, எனக்கு அதிகமா என்ற தனியுடைமைப் போட்டிமதக் பிடித்தாட்டி வேற்றுமையை விரித்து விட்டதே!

தி. சீனிவாசன், பக்கநாடு

கே: பார்ப்பாரகத்தை எட்டிப் பாராதே என்பது ஏன்?

ப: முட்டிபுகும் மேன்மக்கள்; அதனால் மற்ற கீழ் மக்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்பதால்!

★ ★ ★

கே: பசுவை நம்பினாலும் பார்ப்பானை நம்பாதே என்பது எதனால்?

ப: பசு, கன்றினை ஊட்டி வளர்க்கும். தீனிதரும் நமக்கும் பால்தரும். பார்ப்பான் தன் கன்று, தன் இனம் வளர்ப்பானன்றி, மாற்றார்க்கு உதவான் என்ற காரணத்தால் ஏற்பட்டிருக்கலாம்.

கனியிலும் இனிய
கண்ணன்
சோடா, கிரஷ்களையே
அருந்துங்கள்.
★
கண்ணன் சோடா பேக்டரி,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2

## கலைக்கூடம்

### திருட்டு ராமன்.

இராமன் குடிகாரன், கோழை, சூழ்ச்சிக்காரன் என்பதை விளக்குவது வேறு கதை. ஆனால் இந்தக் கதை இராமனைத் திருடனாக மட்டுமே காட்டுகின்றது.

இராமன் சிறுவயதில் சந்தர்ப்பவசத்தால் திருடுகிறான். பிறகு சமூகமே அவனைப் பக்காத் திருடனாக்குகிறது. உள்ளம் நொந்து, உண்மையிலேயே திருட ஆரம்பிக்கிறான். தங்கையைத் தேடித் தவிக்கிறான்; காதலி கிடைக்கிறாள். வில்லனோடு கைகலப்புக்கள் நிகழுகின்றன. வழக்கம் போல, வில்லன் செய்யும் கொலை, கதாநாயகனின் மேல் சுமத்தப்படுகிறது. இரவு பன்னிரெண்டுமணிக்குக் கல்யாணம்! நடுவிலே குப்பறியும் நாடகம். உண்மை பின்னுகிறது—பின்னால் விடுபடுகிறது. இது தான் கதை......

சமூகம் ஒரே மனிதனை நல்லவனென்று சொல்லி உயர்த்தவும் முடியும்—கெட்டவனென்று கூறித் தாழ்த்தவும் இயலும் என்ற அற்புதமான கருத்து கதையின் உயிர்நாடியாக விளக்குகின்றது. ஆனால், இதுவொன்றும் தமிழ் படவுலகிற்குப் புதுமையல்ல... கதையோட்டமும், சம்பவங்களும் நன்றாகவே இருக்கின்றன.

பகல் பன்னிரெண்டு மணிக்குக் கொலை செய்திருந்தால்கூட பரவாயில்லை—இரவு பன்னிரெண்டு மணிக்குத் திருமணம் நிகழுவதுண்டோ?

ஜமுனாவின் நடிப்பு உயர்ந்த முறையில் அமைந்திருக்கிறது. சாவித்திரி உள்ள பெயரைக் காப்பாற்றிக் கொண்டால் நல்லது. சூரலும் அவருடைய தில்லை—நடிப்பிலும் சிறப்பில்லை. நாகேஸ்வரராவின் நடிப்பு வழக்கமானதாயிருந்தாலும், உள்ளத்தைத் தொடும் விதத்திலிருக்கிறது. ஆடல், பாடல் சுகமில்லை. ரேலங்கியை மறக்க முடியாது!

திருடன் திருடன்தான்! என்றாலும், ரசிகர்களின் இதயத்தைத் திருட முடியவில்லை "டப்பிங்" காரணத்தால்!

—நாச்சியப்பன்.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

அவளைக் காப்பாற்றச்சொல்லி அழுதாள். என்னுள்ளே கிளர்ந்தெழுந்த மிருகவுணர்வு இறந்து, மனித உணர்வு பொங்கி யெழுந்தது. ஆறுதல் கூறினேன்.

சொக்கலிங்கம் கோயில்பூசை முடித்துத் திரும்பினர். எனக்குக் கோபம் வந்தது. அடக்கிக்கொண்டு என் எண்ணம் கூறினேன், எப்படி எப்படியோ பேசினேன். அவர் என்னிடம் எதிர்பார்த்தது ஐந்து ரூபாய்தான்! ஆனால், ஐம்பது கொடுத்து அவளை நான் மீட்டு வந்தேன்!

அன்றிலிருந்து நான் இரவுராணிகளைப்பற்றி எண்ணுவதுண்டு, அவர்கள் யாராவது ஒருவரின் தங்கையாக இருப்பாள்; தாரமாக, ஏன் தாயாகக் கூட இருந்திருப்பாள். வறுமை, வளமின்மை, கோபம், தாபம் காரணமாக இரவு ராணியாகியிருப்பாள்! பெரிய மனிதர்களாலும் ஆக்கப்படுகிறள்! இவையெல்லாம் யார் செயல்? எந்த அமைப்பின் கோளாறு? பலப்பல எண்ணுகிறேன், பகுத்தறிவு படைத்திருக்கும் "பாவ"த்தால்!

* * *

அன்று நடந்ததை இன்று நினைத்துக் கொண்டேன். ராதைதான் அந்தப் பெண்! அவளை ஒரு நம்பகமான அம்மையாரின் ஆதரவில் விட்டிருந்தேன்.

இன்று, அவளை சினிமாவிற்குப் போகத்தான் அழைத்திருந்தேன். அவளும் வந்தாள்.

அவளிடம் கூறினேன்; "ராதே! இன்று சினிமாவுக்கு வேண்டாம். நாம் ஆவணப் பதிவாளர் அலுவலகம் செல்ல வேண்டும். நம் பதிவுத் திருமணம் நாளை காலை. என்ன மகிழ்ச்சி தானே?" என்றேன்.

வெட்கமும், ஆனந்தமும் அவள் முகத்தில் போட்டியிட்டன. "சினிமா பார்ப்பதை ஒத்திப் போடலாம். திருமணத்தை ஒத்திப்போட வேண்டாமே!" என்றுள் நாணத்தோடு, ராதை! இரவு ராணி என் வாழ்வின் உண்மையான இன்பராணியாகுள். இழுக்கென்ன?

● ●

# பாதந்தாங்கிகள்!

மந்திரிப் பதவியினின்றும், விலகிய மராட்டிய தேசுமுக் கூறுகின்றார்:

மாநிலச் சீரமைப்பு மசோதா மக்கள் சபைக்கு வந்து பரிசிலனைக் கமிட்டியிடம் விடப்பட்டிருக்கும் போதே, நேரு எதேச்சதிகாரமாகப் பம்பாய் நகரத்தின் வருங்காலத்தைப்பற்றி அறிக்கை வெளியிட்டிருக்கிறார். இந்த அதிகாரம் அவருக்கு இல்லை! "பம்பாய் மத்திய சர்க்காரின் நிர்வாகத்திலிருக்கும் என்று சென்ற ஜனவரியில் அறிவிக்கப்பட்ட முடிவும், மந்திரிசபையையோ அன்றி மராட்டியப் பகுதி அங்கத்தினரும், சக மந்திரியுமான என்னையோ கேட்காமல் செய்யப்பட்டது." மாநில சீரமைப்புபற்றிய விவகாரங்களில்நேருவும், வேறுசில அதிகாரம் பெருத மந்திரிகளும் சட்ட விரோதமான முடிவுகளைச் செய்து அவற்றைச் சர்க்காரின் முடிவுகள் என்று அறிவித்திருக்கிறார்கள்' என்பதை, ஆந்திர மாகாண விஷயத்தில் மந்திரி சபையைக் கலக்காமலேயே பிரதம மந்திரி ஒரு முடிவு அறிவித்ததிலிருந்து அறிகிறோம். ஹோசியார்ப்பூரில் நடந்த தடியடிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த முன்வந்த நேரு சர்க்கார், பம்பாய் நகரத் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த முன்வராதது, மராட்டிய மக்களிடம் கொண்ட வெறுப்பையோ அல்லது நடந்துவிட்ட பெருந் தவறுகளையோ காட்டுகிறது"

ஜனநாயகம் பேசும் நேரு, மொத்தத்தில் ஒரு சர்வாதிகாரி என்று கூறிடும் அளவுக்கு அவரின் செயலை அம்பலப்படுத்தியுள்ளார் தேசுமுக். அகில உலகிலும் பண்டிதருக்குக் கிடைத்திடும் வரவேற்புகளையும், அவர் அடைந்திடும் புகழ் மாலைகளையும் கண்டு மராட்டிய வீரர் வியந்தாரில்லை; பயந்தாரில்லை. "என் தாயகத்திற்கு அநீதி எனில் துதிபாடித் தலையசைத்து வாழ நான் விரும்பேன்" என்று கூறிப் பதவியிலிருந்து விலகிவிட்டார். நம்பித் தேர்ந்தெடுத்த மக்களின் ஒருமித்த குரலுக்குச் செவிசாய்த்திட்ட அவரின் போக்கு நமக்கு வியப்பையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

அதேபோது, நாம் பெற்றுள்ள மந்திரிகளை எண்ணினால் களிப்பு மறைகிறது. உள்ளம் குமுறுகிறது. "பம்பாயின் வருங்காலத்தைப்பற்றி ஐந்தாண்டுகளுக்குப்பின் நிர்ணயிக்கலாம்" என்று நேரு கெஞ்சியும், "பம்பாய் மராட்டியத்திற்கு இல்லையெனில் நான் நிதி மந்திரி இல்லை" என்று பதவியை உதறுகிறார் மராட்டியர். பொன் கொழிக்கும் வளம்மிகுந்த பூமிகளான தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றங்கரை ஆகிய தமிழர் வாழ் இடங்கள் பறிபோயும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள் குட்டக் குட்டக் குனியும் கோமான்கள்!

"நேரு என்ற தனி மனிதரின் சர்வாதிகாரம் தான் நடைபெறுகிறது. மக்கள் சபை முடிவு என்பதும், மக்களாட்சி என்பதும் வெறும் கண்கட்டு விளையாட்டு" என்று சிறந்த காந்தியவாதி எனப்படும் வினோபா கூறுகின்றார்.

"திட்டக்குழுவும் நேருவும்தான் இந்தியாவை ஆட்சிபுரிந்து வருகிறார்கள். மக்கள்சபை முடிவு என்பது வெறும் நகைப்புக்குரியது" என்று ராஜாஜி குறிப்பிடுகிறார். தேசுமுக்கோ ஆதாரத்தோடு விளக்கி நேருவே, நீ ஒரு சர்வாதிகாரி என்று அச்சமின்றி முழக்குகிறார். "நேரு பலமாகத் தாக்கப்பட்டவர் போல் களைப்புடன் பேசுகிறார்" என்று செய்தி படிக்கிறோம். நமது பதவிப் பித்தர்கள், பாதந்தாங்கிகள் என்ன சொல்லுகிறார்கள்?

—குணசேகரன்.

உள்ளம் என்ற கோயிலின் ஒளிவிளக்கு பகுத்தறிவு. கோபம் என்ற புயல் வீசினால், அந்த அரியவிளக்கு அணைந்துவிடும். ஆகவே, கோபத்திற்கு இடம் கொடாதே! பகுத்தறிவை அணைத்துவிடாதே!

—இங்கர்சால்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

பரவவேண்டும் என்பதுதான்! அதன் உட்பொருள் என்னவென்று நினைக்கிறாய்? கீதையை ஒப்பினால் நான்குவருணத்தையும் ஒப்புக்கொள்வார்கள். இதன்மூலம் வருணாசிரமதர்மத்தையும், சனாதனக் கொள்கைகளையும் மீண்டும் நிலைநாட்ட, தமிழர்களைச் சூத்திரர்களாக்க, மனுநீதி தலைதூக்க, நாசப் பாதையில், நடைபோட ஆரம்பித்து விட்டார் வினோபா! அதன் எதிரொலிதான், கீதையில்தான் கையெழுத்திடுவேன் என்கிற பேச்சு! இது சேலத்திலே சந்தி சிரிச்சுப் போச்சு!

நல்லவர், உயர்ந்தவர்; நடமாடும் காந்தி என்று நினைத்துத்தான் அவரிடம் கையொப்பம் பெற முயன்றனர். ஆனால், கீதையைப் பரப்பும் வினோபா குறளில் கையொப்பமிட மறுத்து விட்டார்!

பலருடைய வேண்டுகோளுக்கிணங்கி திருக்குறளிலும் கையொப்பமிட்டுத் தருவதாக ஒப்புக்கொண்டவர், செங்கற்பட்டில், காஞ்சியில் இட்டவர் வினோபாஜி. திருமறையில் பெருமளவில் கையெழுத்து வாங்கவேண்டுமென நினைத்தார்கள் போலும், சேலத்துத் தமிழ் இயக்கத்தார்! கூட்டம் நடைபெறும் இடத்தைக்குறிப்பிட்டு எல்லோரையும் திருக்குறளோடு கூட்டத்திற்கு வரும்படி அண்டுத்தாள் விளம்பரங்கள் மூலம் வேண்டியிருந்தனர். அதில் ஒன்று எனக்கும் கிடைத்தது.

எனக்குக் கிடைத்த விளம்பரத்தாளை நடமாடும் வினோபா பாவே குழுவின் செய்தி அறிவிப்பாளர், தோழர் 'சோலை' அவர்களிடம் கொடுத்தேன். தமிழ் இயக்கத்தைச் சேர்ந்த சிலர், கூட்டம் நடப்பதற்கு முன்னால் சுமார் 3-45-க்கு வினோபாவிடமும் விளம்பரத்தாளைக் கொடுத்தனர். படித்துப் பார்த்து முறுவலித்தார். அதன் பொருள் அப்போது புரியவில்லை!

மாலைக்கூட்டம் முடிந்தது. கையெழுத்து வாங்க வரிசையாக நிற்கும்படி பாவே கேட்டுக்கொண்டார். மணி 10 ஆனாலும் கையெழுத்திட்ட பின்பே செல்வேன் என்றார். வரிசையாக நின்றனர். பலர் கையிலே 'திருக்குறள்' சிலரிடத்திலே கீதை! இதனைக் கண்டபாவே பக்தர்கள் ஆத்திரங் கொண்டனர். கீதை வைத்திருப்பவர்கள் தான் நிற்கவேண்டும், ஏனையோர் சென்றுவிட வேண்டும். திருக்குறளில் கையெழுத்திட மாட்டார் என்று சீறினர். மலை குலைந்தாலும் நிலை குலையாத தமிழர்; அமைதியாக நின்றனர்! வினோபாவிடம் திருக்குறளை நீட்டினர், பற்றற்று, பிரதிபலனை எதிர்பாராமல், விருப்பு, வெறுப்புகளுக்கு ஆளாகாமல்பணிபுரியும் பாவேவுக்கு, கோபமும், ஆத்திரமும் குறுமதியும் கீதைவெறியும் உச்சநிலை அடைந்தன! கீழ்த்தரமான முறையில் திருக்குறளை தொலைவில் தூக்கி எறிந்துவிட்டார்! மீண்டும் மீண்டும் நீட்டப்பட்டது. தூக்கி எறிந்து கொண்டே இருந்தார். மணி பத்து ஆனாலும் இருப்பேன் எனக் கூறிய பாவே, எழுக்கெல்லாம் எழுந்துவிட்டார். இருப்பிடம் ஏகி விட்டார். "தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" அல்லவா? மக்கள் அமைதியாகவே இருந்தனர். ஆர்த்தெழுந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

கூட்டத்திலே குழப்பத்தை உண்டாக்கவும், திருக்குறள் கொண்டுவரும்படி மக்களைத் தூண்டவும் காரணம் நீதான் என, சேலத்திலே பூதானம் பரவும் வகையில் பணிபுரிந்து வரும் தமிழ்ப் பற்றுடைய பூதான ஊழியர்மீது பழிசுமத்துகின்றனர் காங்கிரஸ் 'கனம்'களும், தமிழக பூதான அமைப்பாளரும்!

வாழ்வுக்குவழிகாட்டும் வான் விளக்கு—வள்ளுவரின் திருக்குறளை துச்சமென மதித்துத் தூக்கி எறிந்தார் எனில், தமிழன் வாழ்வை தூக்கிஎறிந்தார் பாவே என்றுதானே பொருள்? என்னே வினோபாவின் சிறுமதி!

தமிழினத்தின் அன்பிற்குப் பாத்திரமான, அதன் ஆக்கத்திற்குப் பாடுபடும் தலைவர்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும். தோழா! நீயும் காணும் தமிழ்த் தலைவர்களிடமெல்லாம் கூறு இதுபற்றி. பூஜ்யர் வினோபாவின் பேச்சை, அவர்தம் தொண்டை குறைத்து மதிப்பிட நான் நினைக்கவில்லை. எனக்குள்ள குறைபாடெல்லாம், கீதைபற்றி அவர்கொண்டுள்ள கொள்கையும், திருக்குறளைத் தாழ்வாக மதித்து, அதில் கையெழுத்திடமாட்டேன் என மறுத்ததும், அதனைத் தூக்கி எறிந்ததும் பற்றித்தான்! பிற பிறகு. வணக்கம்.

அன்பு,

'செஞ்சுடர்"

குறிப்பு: சேலத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி ஏனோ வெளியுலகிற்குத் தெரியாமல் மறைக்கப்பட்டு விட்டது. இஃது, வெறும் கற்பனையன்று. தமிழ் உணர்ச்சியுள்ள சேலத்து பூதான ஊழியர் ஒருவரின் தன்மானக்குரல்!

—ஆ-ர்.

சலகண்டபுரம் கடைத்தெரு செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால்
அச்சிடப்பட்டு; சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர் — ம. கண்ணன்


**சடங்குகள்.**

பொருளற்ற சடங்குகளிலே ஒருவன் எத்தனைக்கெத்தனை அதிக நம்பிக்கை கொள்ளுகிறானோ, அத்தனைக்கத்தனை அவன் மனித சமுதாயத்தின் உண்மையான தேவைகளை அலட்சியம் செய்பவனாகிறான்.

—வால்டேர்


கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

| மலர் 6 | சேலம் 10-8-56. வள்ளுவராண்டு 1987. ஆடி 26. | இதழ் 5. |
|---|---|---|


# இந்தியத் தேசியம் என்பது ஆரியர் வாழ்வின் கோட்டை! இன்சூரன்ஸ் தொழிலில் அவாள் ஆடுகின்றார்கள் வேட்டை!

தேசியம் என்பது, ஒரு தேசத்தின் அரசியலை மட்டுமல்லாமல் இனம், மொழி, மக்கள், வாழ்வு, கலை, தொழில், வாணிபம் எல்லாவற்றையும் குறிப்பிடுதற்கேற்ற ஒரு பொதுச் சொல்லாகும்.

தேசியம் என்பது காங்கிரஸ்காரர்களின் ஏகபோக உரிமையன்று; இந்தியா ஒரு நாடு என்ற அடிப்படையிலே "இந்தியத் தேசியம்" பேசினர் காங்கிரஸ்காரர்கள். இந்தியா ஒரு துணைக்கண்டம்! என்றும் இஃது ஒரு நாடாக இருந்ததில்லை எனவேதான் இந்தியத் தேசியத்தை நாம் வெறுத்தோம்; எதிர்த்தோம்; இன்றும் அதனையே செய்து வருகிறோம்.

திராவிடநாடு திராவிடருக்கே என்று நாம் கூறும்பொழுது, வெறும் அரசியலை மட்டுமல்லாமல் திராவிட இனம், மொழி, மக்கள், வாழ்வு, கலை, தொழில் யாவற்றையுமே பிரதிபலிக்கின்றது! எனவே, இந்த விடுதலை முழக்கத்திலே திராவிடத் தேசியம் மணக்கின்றது! திராவிட உரிமை வேட்கை மிளிருகின்றது என்கிறோம்.

இந்தியத் தேசியம் வேறு; திராவிடத் தேசியம் வேறு; இந்தியத் தேசியம் போலிச்சரக்கு; திராவிடத் தேசியம் உண்மைப் பொருள்! இந்தியத் தேசியம் பலாத்காரக்கூட்டு; திராவிடத் தேசியம் இயல்பான சேர்க்கை! பாரத மாதாவின் புத்திர சிகாமணிகள் இதனை ஒப்பமாட்டார்கள். பகுத்தறிவுக்கு மதிப்பளிப்போர் சிந்தித்தல் வேண்டும்.

இந்தியத் தேசியம் வடவரின் வளம் பெருக்குவது; ஆரியப் பார்ப்பனரின் வாழ்வு காப்பது; இந்துமதம், இந்திமொழி வளர்ப்பது! திராவிடத் தேசியம், திராவிடனின், மொழி, கலை, வாழ்வு, வளம் யாவற்றையும் காப்பது.

இந்தியத் தேசியம், திராவிடர்க்குத் தீங்கு பயப்பது என்பதற்கு ஆதாரங்கள் வண்டிக் கணக்கிலே மண்டிக் கிடக்கின்றன. அவற்றிற்கு அரண் செய்வதே போல், அண்மையில் இந்தியத் தேசியமய மாக்கப்பட்ட இன்சூரன்ஸ் தொழில் பற்றிய சேதியொன்றும் வந்திருக்கிறது.

எல்லா இன்சூரன்ஸ் கம்பெனிகளையும் இந்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டு, ஒரே "கார்ப்பரேஷ"னாக அமைத்துக்கொண்டு தொழிலைத் துவக்குகிறது. நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்ட கார்ப்பரேஷனின், தென்மண்டல நிர்வாகிகளைப் பாருங்கள்:

மண்டல மேலாளர், திரு கே. பாலசுப்ரமணிய ஐயர். துணை மேலாளர், திரு. என். வி. நாயுடு. மண்டல அபிவிருத்தி அலுவலர், திரு சாமிநாத ஐயர். மண்டல ஆக்சுவரி: திரு. எஸ். ரங்கராஜ ஐயங்கார். கணக்கதிபர்: திரு. எஸ். எஸ். ஐயர். மண்டல செயலாளர்: திரு. டி. வி. இராமமூர்த்தி ஐயர். துணை ஆக்சுவரிகள்: 1. திரு சுந்தரம் ஐயர். 2 திரு. சேதுராம ஐயர்.

தெற்கு மண்டலத்திலுள்ள ஏழு பிரிவுகளைப் பாருங்கள்: 1. சென்னைக்கு: திரு கே. பலராம ராவ், 2 மதுரைக்கு, திரு. பட் (மங்களூர் பார்ப்பனர்) 3. திருவனந்தபுரம், திரு வெங்கட சுப்ரமணிய ஐயர். 4 கோயமுத்தூர், திரு. டி. எஸ். கிருஷ்ண


[8-ம் பக்கம் பார்க்க]

சிறுகதை.

# தரித்திர நாராயணர்!

"தென் குமரன்"

இரவு மணி ஒன்பதிருக்கும். காற்றரசன் வேலை நிறுத்தம் செய்து விட்டானோ, என்னவோ; புழுக்கம் தாள முடியவில்லை. வீட்டு மாடிகளில் உறங்கும் வசதி பெற்றோர், வீட்டுத் தளத்தின் மேல் படுத்துக்கொண்டு கதை பேசிக் கொண்டிருந்தனர். வீதியோரத்தையே பொன் மாளிகையாக்கிக் கொண்டவர்கள், அரைவயிற்றுக் கஞ்சியுடன் அமைதிபெற்று, வீதியோரங்களில் ஆங்காங்கே உட்கார்ந்து கொண்டிருந்தனர். 'நாளைக்குச் சோறு கிடைக்குமோ' என்கிற எண்ணம் அவர்களை மோனத்தில் ஆழ்த்தியிருந்தது.

எங்கள் வீட்டு மேல் தளத்தில் நான் தனியாகப் படுத்துக்கொண்டிருந்தேன். சிந்தனைக்குத் தனிமை ஏற்றதன்றோ? என் கண்கள் வானத்தை வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ஒடிந்த சந்திரன் ஆயிலெழுந்து, வானமுகட்டை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தான். அந்த அப்பாவிச் சந்திரனைப் பார்த்துக் கேலி பேசின, நட்சத்திரங்கள். அதைக் கேட்டுக் கோபமடைந்த சந்திரன், "நான் இளைத்து வருவதைப் பார்த்துக் கேலியா பேசுகிறீர்கள்? இருங்கள், இருங்கள் இன்னும் இருபத்தைந்து நாட்கள் போகட்டும்; அப்புறம் என்னைப் பார்த்துப் பொறுமை கொள்ளப் போகிறீர்கள்?" என்று உறுமியது!

திடீரென்று ஒருவிதவேதனைப் பாட்டு என் காதுகளில் விழ, என் சிந்தனைக் கிளி கீழே பறந்து சென்றது...

"நாராயணா அரோ நாராயணா!
நாளெல்லாம் சுற்றிவரோம் நாராயணா!
திருவோடு ஏந்தியல்லோ நாராயணா!
தெருவெல்லாம்பாடிவரோம் நாராயணா!
வீதியோரத்தை நாங்க நாராயணா!
வீடாக்கி வாழுகிறோம் நாராயணா!"

தெருக்கோடியிலிருந்து வந்த இந்தக் 'கோரஸ்' என் வீட்டருகே கேட்டது. எழுந்து சென்று வீதியை எட்டிப் பார்த்தேன்.

'நண்டும் சிண்டுமாக' மூன்று குழந்தைகள் முன்னே பாடிச் செல்ல, பின்னே அந்தச் 'செல்வ ராசாக்களைப் பெற்ற 'திருவுருவங்கள்' பாடிக் கொண்டு வந்தன! இதயம் என்று ஒன்றை வைத்திருப்பவர்கள், அவர்களின் திருக்கோலத்தைப் பார்த்தால், நிச்சயம் கண்ணீர் வடிப்பார்கள்; இரத்தக் கண்ணீர் வடிப்பார்கள்!

பாட்டின் இடையிடையே அந்த மூன்று மனிதப் பிஞ்சுகளும் "அம்மே! பசிக்குது, சோறு போடுங்கம்மே!" என்று கதறியழ, இரக்கமனம் கொண்டோர் வீட்டில் மீதமிருக்கும் சோற்றை எடுத்துவந்துபோட, அதனை அந்தப் பிள்ளைச் செல்வங்கள், தம்மைப்பெற்ற பிட்சாதிபதிகளிடம் கொடுக்க, அதனைச் சேமிப்பு செய்தனர் தாயும் தந்தையும்!

பாடியே வாழ்வு செய்யும் அந்தத் தரித்திர நாராயணர் குடும்பம், கண்களினின்றும் மறைந்தது. ஒருவித வேதனையிருள் என் இதய அறையினுள் படர, மீண்டும் பழைய இடத்திற்கே வந்து படுத்தேன் நான்.

அப்போதுதான் வாயு மன்னனுக்குக் கருணை பிறந்தது போலும்; காற்று மெல்ல வீசவாரம்பித்தது. உலகத்தின் இரைச்சல் மெதுவாக இறந்து கொண்டே வந்தது. என் கண்களின் ஒளியும் மெதுவாக மங்கிக்கொண்டே வந்தது; நானும் உறங்கக் கண்களை மூடினேன்......

"அய்யா! அய்யா! சோறு இருந்தா போடுங்கய்யா! பசி தாளமுடியலே!"

இந்தக் குரலை என் அருகிலேயே கேட்டதும் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்தேன். ஒரு பஞ்சைக்குப் பிறந்த பிஞ்சு நின்றுகொண்டிருந்தது!

"எப்பா! பசிக்குதா? உட்கார்; சோறு போடுகிறேன்!"

என்னுடைய சொல் கேட்டுக் காலடியிலேயே உட்கார்ந்து விட்டான் அந்தச் சிறுவன். நான் சோறுபோட்டேன். பாலைவிலே சுற்றி வாடிய மானொன்று, கடைசியாக ஒரு நீர்ச்சுனையைக் கண்டால் எப்படிமகிழ்ந்து நீர் குடிக்குமோ, அந்த மனநிலையில், இந்தப் 'புனிதநாட்டு இளவரசன்' நானளித்த அமுதத்தைச் சாப்பிட்டான். அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, இடையிடையே நான் சில கேள்விகள் கேட்டேன்.

"எப்பா! உன் பேரென்ன?"

"பெத்தவங்க வச்சபேரு தெரியலீங்க!"

"உனக்கு அப்பா அம்மா இருக்கிறார்களா?"

"அப்பா—அம்மாவா?..."

அவன் திகைத்தான்; நானும்தான்!

'ம்ம்...பாவம்! யாருக்குப் பிறந்த செல்வமோ— இந்தவாறாறுக் கிடக்கிறது!' என் மனம் இப்படி எண்ணிக் கொண்டிருக்கும்போது, அவன் கேட்டகேள்வி எனக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது!


"ஏங்க... தெய்வங்களுக்கு எல்லாம் அப்பா, அம்மா கிடையாதாமே...?"

"அப்போ நீயும் கடவுளென்னு பேசப் போறியா? கடவுள் கண்ணுக்குத் தெரியமாட்டாரே!"

"நானும் செத்துப் போயிட்டா, கடவுளாயிடறேன்?" இப்படிக் கூறிக் கொண்டே அவன் எழுந்து ஓடலாரம்பித்தான்.

"டேய் தம்பி! அப்படியேதாவது செய்துக்கப்போறே...... சாக்கிரதை!" நான் இப்படிக் கத்தினேன். அது அவனுக்குக் கேட்டிருக்குமோ கேட்டிருக்காதோ! கடவுள்தத்துவம் பேசியவன்

[7-ம் பக்கம் பார்க்க]



# எதிரொலி

மகாபாரதத்தின் ஆய்வுப் பகுதிகளை பந்தர்கார் நிலையம் தயாரித்தது; இந்தியாவின் எதிர்கால வளர்ச்சிக்கும், சுபிட்சத்திற்கும் மிகவும் முக்கியமாகும்.

—ஜவகர்லால்

*கன்னிப்பருவத்திலேகணவனில்லாது மகவினுங்களை வளருங்; ஐந்து பேரை மணந்து ஆருவது நபர் தேடும் பத்தினிகள் சுபிட்சமடைவர்! இவைகள் முக்கியந்தானே இந்தியாவிற்கு!*

*　　*　　*

பாஷா ரீதியிலோ, குறுகிய பிரதேச அபிமானம் காரணமாகவோ நமக்குள் சண்டையிடுவது மதியீனம்.

—"சுதேசமித்திரன்"

*சுத்த மடத்தனம்! தமிழ்நாடு தமிழருக்காகி விட்டால், சமஸ்கிருத பாஷா ஹிந்துமத வருணாச்ரம அரசியல் ஆதிக்கம் என்ன ஆவது? ஐயோ! ஐயயோ!*

*　　*　　*

பண்டரிபுரம் நகருக்குள் பீமாநதி வெள்ளம் புகுந்தது; 30 ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்தனர்.

—செய்தி

*ஹே! பண்டரிநாதா?! பாண்டுரங்கா! பக்தரக்ஷக பரிபாலகா! நீ இருக்கிருயா? செத்துப் போய்விட்டாயா?*

*　　*　　*

தமிழர்கட்கோ சொந்த ஆட்சியில்லை. வடநாட்டான் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது.

—"விடுதலை"

*இந்த அவல நிலைக்கும் ஆதரவு காட்டுகின்றனவே சில தமிழ் முண்டங்கள்! தறுதலைகள்!*

*　　*　　*

திராவிடர்கள், தங்கள் தமிழ் நாட்டை வேறு எந்த அன்னியனுக்கும், வெளி நாட்டானுக்கும் காட்டிக் கொடுப்பதில்லை.

—"விடுதலை"

*ஆனால், காட்டிக் கொடுக்கும் காமராசர்களுக்கு வால்பிடிக்காமலும் இருப்பதில்லை!*

# மறப்பதுண்டோ?

**நல்லைக்கவி இளங்கோவன்.**

*கண்ணிற் கருமணியே—உயிர்க்
காதலிற் கனிந்தவளே
பெண்ணிற் பெருந்தகையே—தமிழ்
பேசும்பொற் சித்திரமே!*

*ஆருயிர்க் காதலியே—உண்மை
அன்பினில் விளைந்தவளே
ஓருயிர்க் கூட்டினிலே—கூடிய
உத்தம பத்தினியே!*

*செந்தமிழ்ச் சுந்தரியே—என்னைச்
சேர்ந்தின்பம் தந்தவளே
நந்தா மணிவிளக்கே—எனக்கொரு
நாயகி யானவளே!*

*திருமணக் கோலத்திலே—நம்மைச்
சேர்த்தவர் யாருமில்லை!
ஒருமனக் காதலதே—நம்மை
ஒன்ருய்ச் சேர்த்ததடி!*

*நாமே நமது திரு—மணத்தை
நடத்திக் கொண்டபின்னர்
தாமே மணம்நடத்த—உனது
தந்தையார் துடித்தெழுந்தார்!*

*பெண்ணுக்கோ ராடவனைத்—தேடிப்
பிணைத்திடும் வழக்கப்படி
கண்ணனை யாயுனக்குத்—தாமே
கணவனைத் தேடிவந்தார்!*

*தேடித் தருவதல்ல—காதல்
தேடும் சரக்குமல்ல!
ஓடித் திரிந்தலைந்தார்—உண்மை
உணரா துன் தந்தை!*

*எவனே ஒருவனுடன்—வந்தார்;
இவனை மணந்திடென்ருர்!
அவமே ஆனதவர்—முயற்சி:
அதனால் சினமிகுந்தார்!*

*சினத்தால் வெகுண்டெழுந்தார்;நமை
சீரழிந் திடச்செய்தார்;
மனத்தால் மணந்தநமைத்—தமது
மறத்தால் பிரித்துவைத்தார்!*

*அறத்தால் கூடியநம்—காதல்
அழியா தொருநாளும்!
மறத்தால் அழித்திடவே—எந்த
வழியிலும் முடியாது!*

*உடல்தான் பிரிந்துளது!—நம்முயிர்
ஒருகணம் பிரியாது!
கடல்போல் எதிர்ப்பெனினும்—நமது
காதல்தான் வெற்றிபெறும்!*

*வானத்தைத் தேன்மதிதான்—ஒருநாள்
மறப்பதுண் டாயினும்
கானத்துக் கருங்குயிலே—நாம்நம்
காதலை மறப்பதுண்டோ?*

# யாருக்குத் தெரியும்?

*சென்ற தேர்தலில் தி. மு. க. ஆதரவில் சட்டசபை உறுப்பினரான சேலம் தோழர் பி. இரத்தினசாமி, தாரமங்கலத்திலே பொதுநலத்திற்காகக் குடி தண்ணீர்க் குழாய் ஒன்று அமைத்தார். 5-8-56-ல் அதைத் திறந்துவைக்க மந்திரி கனம் இராமசாமிப் படையாச்சியை அழைத்துவந்தார். அவர், வரப்போகும் பொதுத் தேர்தலில் எல்லோரும் காங்கிரசுக்கே வோட்டுப் போடுங்கள் என்று கூறிவிட்டுச் சென்ருர்! காங்கிரசில் சேரமாட்டேன் என்பவர்; பெரியார் கூட்டத்திலே கலந்துகொள்பவர்; இவர் ஏன் அவரை அழைத்தார்? அவர் ஏன் இப்படிப்பேசினுர்? யாருக்குத்தெரியும்? தேர்தல் வரப்போகிறதே! எது எது எப்படி எப்படியோ?*

—நிருபர்.

<u>தலைமை நிலையச் செய்தி:</u>

## ஒழுங்கு நடவடிக்கை.

*சென்னைத் தோழர், ஆர். டி. அரசு அவர்கள் கழகக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மீறி நடந்து கொண்ட குற்றத்திற்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, 28-7-56-ம் நாளிலிருந்து ஐந்து ஆண்டுக் காலத்திற்குக் கழகத்திலிருந்து அறவே விலக்கி வைக்கப்பட்டிருக்கிருர்.*


## கைத்தறி ஜவுளி.

எங்களிடம் நூல் பட்டு சேலைகளும், மதுரையில் தயாராகும் ஈரெழை சிட்டை துண்டுகளும் நியாயமான விலையில் கிடைக்கும்.

**A. S. மாணிக்கம்,**

உரிமையாளர்:

சுந்தர் ஹால்,

63, A சேரிரோடு, :: சேலம் டவுன்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்.

# இதயம்

மலர் 6 | சேலம் 10—8—56 | இதழ் 5

## கூட்டுக் குரல்!

இந்திய அரசினர், பிரிட்டனின் "காமன் வெல்த்" தோடு இணைந்திருப்பது பயனற்றது; வெறும் ஆடம்பரத்தின் பாற்பட்டது. வெளியேறிய வெள்ளையனோடு விருந்துண்ணவும், வேடிக்கைப் பார்க்கவும், கொஞ்சிக் குலாவவும், விருதுகள்—பாராட்டுகள் வழங்கவும் பெறவும் பயன்படுகின்றதே தவிர, நாட்டுப் பொதுநலத்திற்கு காதொடிந்த ஊசியளவும் பயன்படவில்லை.

எனவேதான் மே 17, 18, 19, 20-ம் நாட்களில் திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. இரண்டாவது மாநில மாநாட்டில், அகில உலக அரசியல் கண்ணோட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் இது:

"காமன் வெல்த்"தில் உறுப்பினராயுள்ள இந்தியா, அதிலுள்ள மற்ற நாடுகள் கடைப்பிடிக்கும் வெள்ளை நிறவெறித் திட்டங்களையும், அவைகள் இந்திய உபகண்ட மக்களுக்கு எதிராக எடுக்கும் எதிர் நடவடிக்கைகளையும் ஒரு சிறிதும் தடுக்க முடியாமல், மேற்படி அமைப்புடன் இந்திய யூனியன் சர்க்கார் உறுப்பினராயிருப்பது தன்மானக் குறைவு என்று இம்மாநாடு கருதுவதுடன்; காமன் வெல்த் நாடுகளின் மேற்படி தவறான போக்குகளைக் கண்டிக்கும் அறிகுறியாகக் காமன் வெல்த்தை விட்டு இந்தியா உடனே வெளியேறிவிடவேண்டுமெனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது."

இந்தத் தீர்மானம் இந்திய துணைக்கண்டத்தின் பொதுநலன் கருதி உருவாக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுத் தொடர்பு எங்கெங்கு வாழும் இந்தியப் பொது மக்களுக்கும் உயர்வு தருவதாக இருக்க வேண்டும் என்பதே மூலக் கருத்து; இதனைக் கவனிக்கவில்லை இந்திய அரசினர். அத்தோடு மட்டுமல்லாமல், இந்திய மக்களுக்கு எதிராக "காமன் வெல்த்" நாடுகளிலே எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தட்டிக் கேட்க முடியாமல், பயனற்ற வெட்டிப் பெருமையும், வீறாப்பும் கொட்டியளந்து வேதனையை வளர்த்து வருகின்றது.

தென்னாஃபிரிக்காவிலே இந்தியர்கள், வெள்ளைநிற வெறியர்களால் மிருகத்தனமாகத் துன்புறுத்தப்படுகின்றனர். ஐக்கிய நாடு சாசனத்திற்கும் முரணான வகையில் ஜீவாதார உரிமைகள் பறிக்கப்படுகின்றன! வீடு, வாசல், சொத்து, சுதந்திரங்களை விட்டு விட்டு வெளியேறுமாறு விரட்டப்படுகின்றனர்.

இலங்கையிலே சிங்கள மொழி வெறியர்களால் தமிழர்கள் தாக்கப்படுகின்றனர். கொடுமையாகத் தாக்கப்படுகின்றனர்; உரிமையிழந்து, உடமையிழந்து, மானமிழந்து படுகொலைக்கு ஆளாகின்றனர்; அல்லற்பட்டு ஆற்றாது அழுது மடிகின்றனர்!

இந்திய அரசினர் அங்கம் பெற்றுள்ள காமன் வெல்த்திலேயே தென் ஆஃபிரிக்க அரசினரும், இலங்கை அரசினரும் அங்கம் பெற்றிருக்கின்றனர். இந்தியாவால் இந்த வெறிச் செயல்களைக் கண்டிக்கமுடியவில்லையே! 'எனது நாட்டு மக்களுக்கு இன்னல் சூழ்வது தவறு. இதனால் நாட்டமைதி குலைந்திடும்!" என்று இடித்துக்கூற வக்கில்லை இந்திய அரசினர்க்கு! எதற்காகக் காமன்வெல்த்தில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்? கூட்டு நாடுகளின் தவறான செயல்களை, அவை இந்தியர்க்கு—தமிழர்க்கு இழைத்திடும் மாபெரும் தீங்குகளை எடுத்துக் கூறி கழுவாய் தேடக் கையாலாகவில்லையென்றால், அது இந்திய துணைக்கண்டத்திற்கே இழுக்கல்லவோ? இருக்கலாமா இந்நிலை? இதுவா இந்தியாவின் சர்வதேசீய அரசியல் வல்லமை?

"இந்தியாவே! காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேறுக" என்ற குரல் சென்னையிலே செயிண்ட் மேரி மண்டபத்திலே 7—8—56-ல் ஒலித்தது. காங்கிரஸ் நீங்கலாக, திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, தமிழரசுக் கழகம் எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் கூடி இவ்வாறு ஒருமித்த குரல் எழுப்பியுள்ளனர். இஃது, முற்போக்கு எண்ணங்களின் மற்றொரு கூட்டுக் குரல்! தன் மானப் பேரொலி! செவிசாய்க்குமா இந்திய அரசாங்கம்?

அந்தக் கூட்டத்திலே, காமன் வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டும் என்

ஊரார் பலம். ஒற்றன்.

# பொய்மைக் கடவுளுக்குப் பொங்கலா?

மணியக்காரர் மகாலிங்கமும், பெருமாள்கோயில் அர்ச்சகர் ராமாச்சாரியும் பேசிக்கொண்டே வந்தவர்கள் ஆலமரத்து மேடையில் அமர்ந்தனர்.

விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார் மணியக்காரர். ''என்னவிருந்தாலும், ராமாயணம் நடந்த கதையில்லே, பத்து தலை ராவணனையும், கும்பகர்ணனையும் நான் பார்த்ததில்லேன்னு விநோபா சொன்னதாலே ராமாயணத்தோட மதிப்பு கொறஞ் சிட்டுது சாமி!''

அர்ச்சகர் கேட்டார்: ''ஏன் அப்படிச் சொல்றேள்?''

மணியக்காரர் கூறினார்: ''பகுத்தறிவு பேசற பயலுவ இப்படித்தானே சொல்றாங்க! ரெண்டு காலு, பத்து தலை, பத்து மூக்கு, வாய், இருபது கை, இருபது காது, இருபது கண்ணு, 320 பல்லு ஒரு மனுசனுக்கு இருக்குமா? அப்படி இருந்தா அவன் எந்தப்பக்கம், எப்படிப் படுப்பான்? எப்படி நடப்பான்? எப்படிப் பிழைப்பான்னு கேக்கறானுவ. அதையேதானே மகான் விநோபாவும் சொல்லிட்டாரு! அப்படீன்னா இவ்வளவு காலமா ராமாயணத்தை நம்பினவன்; படிச்சவன், பாடினவன், நாடகமா நடிச்சவன். கதாகாலட்சேபம் பண்ணினவன், பார்த்தவன், கேட்டவன் எல்லாருமே பக்கா முட்டாளுவதானா? யோசனை பண்ணிப்பாருங்க சாமி!''

''விநோபா சொல்றது தத்துவார்த்தம் மணியக்காரரே; புத்தியுள்ளவாதான் புரிஞ்சுக்க முடியும்'' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்தார் அர்ச்சகர். 'ராவணன், கும்பகர்ணனை இல்லேன்னாரே ஒழிய ராமன் இல்லேன்னு சொன்னாரோ? கவனிச்சேளா?'' என்றார் சமத்காரமாக.

''இருந்தாலும், ராவணன் பொய்யி, கும்பகர்ணன் பொய்யின்னு; ராமன் மாத்திரம் என்ன மெய்யீன்னு கேப்பானுங்களே! பொய்யான கடவுளுக்கு எதுக்கு பொங்கல் புளியோதரை, கோயில் குளம், தேர் திருவிழா, பல்லாக்கு படுக்கையறைன்னு கேப்பானுங்களே!''

''ராமாயணம் சரித்திரமல்ல, திருத்தி எழுதலாம்னு விநோபாவே சொல்லியிருக்காரே, சூட்சுமத்தை புரிஞ்சுனுட்டேளோ?'' அர்ச்சகர் கேட்டார்.

இவற்றைக்கேட்டுக்கொண்டே பள்ளியாசிரியர் பரமசிவம் வந்தார். 'தோழர் ராதாவின் நாடகத்தை எதிர்க்கிற பக்தர்கள் மூளையில்லாத முண்டங்களே.'' என்றார் அவர்.

ஆச்சாரியாருக்குக் கோபம் பீறிட்டுக் கிளம்பியது. ''அதை ஆதரிக்கறவாளெல்லாம் பித்தலாட்டக்காரா! நாஸ்திகாள்! அயோக்யாள்!'' என்றார் பதற்றத்தோடு!

கோபிக்கவில்லை வாத்தியார். புன்னகையோடு புகன்றார். ''அப்படியானால், அந்த ரகத்தைச் சேர்ந்தவர்தான் விநோபா! ராமாயணத்தை எப்படி வேணுமானாலும் மாற்றி எழுதலாம், எழுதியிருக்கிறாங்கன்கிறார் விநோபா. அவர் சொல்றதைத்தான் செய்துகாட்டினாங்க திராவிடருங்க! கண்ணனின் ''வீரவாலி''யும், பெரியாரின் ''தேவாசுரப் போராட்ட''மும் அதுதானே? அவாள் செஞ்சா குத்தமில்லே, இவாள் செஞ்சாத்தான் குத்தமோ?''

மணியக்காரர் குறுக்கிட்டார். ''வாத்தியாரே! ஒங்க பாடத்திலே இனிமே ஒரு ஏடு எடுபட்டுப் போயிடும்'' என்றார். என்ன வென்று கேட்டார் வாத்தியார்!

''ராமாயணம் சரித்திரமல்லன்னு விநோபாவே சொல்லிட்டார். அவரைக் காட்டி வோட்டு வாங்கற சர்க்காருக்கு அவரோட வாக்கு வேதவாக்கல்லவா? பள்ளிக்கூட சரித்திரப் பாடத்திலே இனிமே ராமாயணம் இருக்காதையா, இருக்காது!''

''அப்பறம் பெருமாள் கோயில்லே ராமருக்கும், சீதைக்கும் கல்யாண உற்சவம் நடக்காதே! காணிக்கை கிடைக்காதே!'' என்றார் வாத்தியார் கிண்டலாக.

''நேரமாயிடுத்து'' என்று புறப்பட்டார் அர்ச்சகர் ராமாச்சாரி. அம்பலம் கலைந்தது அத்தோடு.

●●

---

பதோடு, ''சென்னையில் பல இடங்களிலே வைக்கப்பட்டுள்ள அன்னியர் சிலைகளையெல்லாம் அகற்றிவிட்டு; உள் நாட்டுத் தலைவர்கள்—அறிஞர்களின் நினைவுச் சின்னங்கள் வைக்க வேண்டும்'' என்றும் ஒருதீர்மானத்தின்மூலம் கோரியுள்ளனர்!

இது, தனியொருவரின் வேண்டுகோளல்ல. சர்வ கட்சியின் கூட்டுக் குரல்! ''நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்'' என்று வீரம் பேசிய சுதந்திரப் புதல்வர்கள், அவர்களின் அடிமைப் பாதையின் பயணத்தை நிறுத்தி, தன்மானப் பாதைக்குத் திரும்புவார்களா? ★

---


## திருமண அழைப்பு.

அன்புடையீர்! நாளது 19-8-56 ஞாயிறு காலை 9-மணி அளவில்

என் மகன் செல்வன்: காங்கயனுக்கும்

பேளுக்குறிச்சி மிட்டாதார் திரு. V. சுப்பராயனார் அவர்களின் மகள் செல்வி: மங்களம்மாளுக்கும்

என் இல்லத்தில் அறிஞர் C. N. அண்ணாதுரை அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். வருகைதர வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,
பேளுக்குறிச்சி. G. P. சோமசுந்தரம்.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● வெ. அன்புராசு,
29/2A, நாடார் வீதி,
கோயமுத்தூர்.

துரை-முருகேசன், காரமடை.

கே: எங்கும் நிறைந்திருக்கும் ஆண்டவனைப் பற்றி விளம்பரம் செய்கிறார்களே, எதற்கு?

ப: எங்கும் நிறைந்தவன் என் கையில் இருக்கிறான், நான் சொன்னபடி கேட்பான், என் மொழிதான் புரியும் என்றால்தானே "அவாள்" வயிறு நிறையும்!

* * *

கே: சென்னை மாகாணத்திற்கு "தமிழ் நாடு" என்று பெயர் வைக்க விரும்பாதவர்கள், காங்கிரஸ் கமிட்டிக்கு "தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி" என்று பெயர் வைத்திருப்பதேன்?

ப: தன் மொழி இனம் மறந்து, மானமிழந்த காங்கிரசார்; மக்கள் ஆதரவையும் இழப்போமே என்ற அச்சத்தால் தமிழ்நாட்டை "சென்னை நாடு" ஆக்காமல் விட்டிருக்கிறார்கள்! அதுவும் இல்லையேல் முடித்திருப்பார்களே!

● வெ. அன்புராசு, கோவை

கே: தென்னாட்டில் திலகர் தினத்தைக் கொண்டாடுவதுபோல், வடநாட்டில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் தினத்தைக் கொண்டாடுவார்களா?

ப: ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள், அடிமையின் வகுப்பிலே பிறந்த அறிஞனைக் கொண்டாடுவது ஆபத்தாயிற்றே!

* * *

கே: நயா பைசா என்ற புதிய நாணயத்தைப் பங்கீடு செய்வது எப்படி?

ப: அரசாங்கமே விளம்பரம் செய்கிறது. என்றாலும், அதிலே தமிழ் இல்லை. காங்கிரசுக்கு நாணயமில்லை என்பதை மக்களிடையே எடுத்துக் காட்டுவது நம் பங்கு!

ப. வெ முரசுமணி, திருவண்ணாமலை.

கே: பொதுத் தேர்தலில் ஆச்சாரியார் எங்கே நிற்கப் போகிறார்?

ப: சட்டசபையின் புறக்கடை வழி வாசற்படியின்மேல் நிற்கலாம்!

பா. நடராசன், கோவை.

கே: நாடகமாடிகள் நாடாள்வதா என்று காமராஜர் கூறுகிறாரே, இதற்கு உங்கள் தெளிவான பதில் என்ன?

ப: சந்தை வியாபாரி, சந்து முனைப் பேச்சாளன் போன்றோரைவிட நன்றாக ஆள முடியும். சட்டசபையில் கலைஞர்க்கு இடம் ஒதுக்குவானேன்?

* * *

கே: இன்றைய நாகரிக உலகில் பலகோடி மக்களைக் காப்பாற்றும் தலைவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

ப: எவ்வுயிரும் தனக்கென்பதை மறந்து, எவ்வுயிரும் தன்னுயிர்போல் என்று பாவித்து எதனையும் செய்ய வேண்டும்.

கடல் வேந்தன், தாரமங்கலம்.

கே; திராவிட நாடு பிரிவினையை பொதுவுடமை வாதிகள் ஆதரித்தால் தி. மு. க. என்ன செய்யும்?

ப: தெளிவு பெற்றுவிட்ட விடுதலை விரும்பிகள் என்று பாராட்டும்.

* * *

கே: பகுத்தறிவின் எல்லை எது?

ப: அது, மனித வாழ்வின் எல்லையற்ற பரம்பொருள்—சக்தியாயிற்றே!

# இராமாயணம், சம்பூர்ணமல்ல!

இராமாயணம் எழுதினவர்கள்கூட அவர்கள் எப்படி விரும்பினார்களோ, அப்படியே எழுதினார்கள். வால்மீகி எவ்வாறு எழுதினாரோ அவ்வாறு துளசிதாசர் எழுதவில்லை. இரண்டிலும் அதிக மாறுபாடு உண்டு. யாரோ ஒருவன் சொன்னானென்பதற்காக, பொதுஜன நிபந்தனையென்று ராமன் சீதையை தியாகம் செய்தானே; அதைப்பற்றிய குறிப்பு துளசி ராமாயணத்தில் இல்லை.

* * *

வால்மீகி சொல்லியபடி இராமன் சரித்திரத்தை மனிதப் பண்பிலே பார்ப்போமானால், அதிலே குறைகூற ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இராமனுடைய சரித்திரத்தை மனித சரித்திரம் என்ற உருவில் பார்ப்போமானால் அது சம்பூரணமானதாக இருக்காது!

## 10 தலை ராவணன்; பித்தலாட்டம்!

இராவணன் என்ற பெயர் கொண்ட ஒரு மனிதன் இருந்தானென்று ஒரு பொழுதும் எனக்குத் தோன்றியதில்லை. நான் இந்தியாவில் அதிகம் சுற்றியிருக்கிறேன்; இதுவரையில் அதுபோல் ஒரு மனிதன் பார்க்கக் கிடைக்கவில்லை. ராவணனுக்குப் பத்துத் தலையாமே! இருதலை மனிதனையே பார்க்கவில்லையென்றால், பத்துத் தலை மனிதனை எங்கே பார்க்க முடியும்? உலகத்து வேறு எந்த சரித்திரப் புத்தகத்திலும் பத்துத்தலை மனிதனின் வர்ணனையைப் படித்ததில்லை. ஆகையால் பத்துத் தலை மனிதனைப்பற்றிய குறிப்பு இருக்கும் புத்தகம் சரித்திரமாக முடியாது. கும்பகர்ணன் என்ற பெயருள்ள ஒரு திராவிட மனிதன் இருந்தானென்று எனக்கு ஒருபொழுதும் தோன்றியதில்லை. இன்று நான் திராவிட நாட்டில் தான் யாத்திரை செய்கிறேன். ஆனால், அதுபோல் மனிதனைப் பார்க்கவேயில்லை!

—வினோபாபாவே,
சேலம்-மொரப்பூரில் 1-8-56.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

வன் கண்களைவிட்டே மறைந்து விட்டான். உடன் என் கனவும் கலைந்தது!

பொழுது விடிந்தது. காலைக் கடன்களை முடித்துவிட்டு அன்றைய தினத்தாளைப் பிரித்தேன்; படித்தேன்.

“மேலாவணி, ஆகஸ்ட் 10 ஊரும் பேரும் தெரியாத பத்துவயதுள்ள அனாதைச் சிறுவன் ஊர்க் குளத்திலே பிணமாய்க் கிடந்தான். போலீசு ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.”

நாட்டு நிகழ்ச்சிகளுக்குக் களங்கம் கற்பிக்கும் இந்தச் செய்தி, முன்னாள் நான் கண்ட கனவை நினைவூட்டியது. என் நெஞ்சத்தை ஒருவித வேதனை தின்றது!

அன்றிரவும் வழக்கம்போல் ‘நாராயணா! அரே நாராயணா!’ என்று அந்தத் தரித்திர நாராயணர் கும்பல் பாடிக்கொண்டே சென்றது. வானத்தில் தோன்றிய நிலவும், ‘பார்! பார்! தெள்ளு தமிழ் நாட்டிலே வறுமைப் பண்ணு பாடும் அந்தத் தரித்திர நாராயணர்களைப் பார்! ஒரு காலத்தில், வந்தோர்க்கு வாரிவழங்கிப் பெருமையுண்ட நாடு, இன்று வறுமைக்கு ஆளாகியிருப்பதைப் பார்! பார்!’ என்று மூச்சு வாங்கக் கூறிக்கொண்டே இறந்தது!

# மூலப்பொருள் தெற்கே; + + தொழிற்சாலை வடக்கிலா?

சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருளும், நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியும் தேனிரும்பு தயாரிக்க ஏற்றவையாக இருக்கின்றன.

லோக சபைக் கேள்வி ஒன்றுக்கு கனரகத் தொழில் இலாகா மந்திரி எம். எம். ஷா பதிலளிக்கையில் இதை அறிவித்தார். அவர் மேலும் கூறியுள்ளார்:

இதற்காக ஜாம்ஷெட்பூரில் பரீக்ஷார்த்தமாக ஓர் உலை அமைக்கப்படுகிறது. இதில் ஒருநாளைக்கு சுமார் 15 டன் தேனிரும்பு உற்பத்தி செய்ய முடியும். இதற்கு வேண்டிய சாதனங்களுக்கு சுமார் ரூ 19 லக்ஷம் முதல் ரூ 20 வரை ஆகும். இந்தசாதனங்கள் மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஒரிஸாவில் ஒரு நாளைக்கு 18 டன் முதல் 22 டன் வரை தேனிரும்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்க கலிங்கா இண்டஸ்ட்ரீஸ் என்ற ஸ்தாபனத்திற்கு லைசென்ஸ் அளிக்கப்பட்டிருக்கிறது. இயந்திர சாதனங்கள் வரவழைக்க உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மற்றொரு கேள்விக்கு டி.டி.கிருஷ்ணமாச்சாரி பதிலளிக்கையில், இப்பொழுது அமைக்கப்படுவது பரீக்ஷார்த்த உற்பத்தி சாலையே என்றார். ஏற்கனவே பெல்ஜியத்தில் சில சோதனைகள் நடந்திருப்பதாக அவர் கூறினார்.

ஆகஸ்ட் 1. புதுடெல்லியினின்றும் வந்த செய்தி இது. சேலத்து இரும்புக்கும், நெய்வேலி நிலக்கரிக்கும் வழி பிறந்து விட்டது. உடனே தென்னகத்தில் மகத்தான பெரும் தொழிற்சாலைகள் மலர்ந்துவிடும், மக்களின் தொழிற்பஞ்சம், உணவுப்பஞ்சம், உடைப்பஞ்சம் நீங்கிவிடும் என்பார்கள் வடவரின் கைக் கூலிகளும்; கூலிகளின் கூலிகளும். நம்புகின்றாயா? தோழா?

சேலத்து இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும் பெல்ஜியத்திலே சோதித்தார்கள்; தேனிரும்பு தயாரிப்பதற்கு ஜாம்ஷெட்பூரில் உலை அமைக்கப்படுகிறதாம்! ஒரிசாவில் ஒரு உலை எழப்போகின்றதாம்! சேலத்தில் அல்ல! சென்னையில் அல்ல; திருச்சியில், திருவனந்தபுரத்தில் அல்ல! எல்லாம் வடக்கே! இது பரீக்ஷார்த்தமே என்கிறார் தென்னகத்து டி. டி. கே; டெல்லியில் இருந்துகொண்டு மானமில்லாமல்!


சேலத்து இரும்பும், நெய்வேலி நிலக்கரியும் பயன் படுமா என்று பரீட்சிக்கப் பல ஆண்டுகள்; மேலைநாட்டில்! தேனிரும்பு செய்து பார்க்க ஏற்பாடுகளுக்குப் பல ஆண்டுகள்; எசமானர்கள் வாழுகின்ற வடநாட்டில்! பிறகு, மூலப்பொருள் மண்டிக்கிடக்கும் இங்கு என்ன? எங்கே? எப்பொழுது? குரங்குக்கு வாழைப்பழம் காட்டுகிறார்கள்; கொடுக்கமாட்டார்கள் தோழா! கொடுக்கமாட்டார்கள்! அவர்கள் வாயிலே போட்டுக்கொள்வார்கள்!

5.8.56. சேலம் பொருட்காட்சியைத் திறக்கவந்த மத்திய மந்திரி மிஸ்ரா சொல்லுகிறார்: “இந்தியாவில் இரு அலுமினியத் தொழிற்சாலைகள் நிர்மாணிக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. ஒன்று சேலத்திலே; மற்றொன்று பீகாரிலே! சேலம் தொழிற்சாலைக்கு 10 கோடி ரூபா செலவழிக்கப்படும், விரைவிலும் நிர்மாணிக்கப்படும்” என்று.

இந்த “உத்தேசம்” இங்கு காங்கிரஸ்காரர்களின் மானத்தை மறைத்துக் கொள்ள உதவலாமேதவிர திட்டவட்டமான செயல்முறைக்கல்லவே!

—பகணன்

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

மூர்த்தி ஐயர். 5. பெங்களூர்: திரு. டி. ஆர். ஏ. பய் (மங்களூர் பார்ப்பனர்) 6. ஐதராபாத்: திரு. கே எஸ் இராமமூர்த்தி ஐயர். 7. மசூலிப்பட்டினம் திரு. வெங்கடேச ஐயர். பிரதான பெரும்பதவிகள் 15-ல் 14 ஆரியருக்கு ஒன்றே ஒன்று திராடருக்கு!


இன்சூரன்ஸ் தொழில் தென்மண்டலம் முழுமையும் திராவிட நாட்டைச் சேர்ந்தவை. இங்கு இன்சூரன்ஸ் செய்துகொள்பவர்களில் 100-க்கு 97 பேர் திராவிடர்கள். என்றாலும், அதன் பொறுப்பான பதவிகள் திராவிடர்களுக்கு இல்லை! ஏனிந்த நிலை?

படிப்பு, அனுபவம், ஆற்றல், தகுதி பெற்ற திராவிடத் தமிழனில்லையா? திராவிட மலையாளி இல்லையா? திராவிடத் தெலுங்கனில்லையா? ஏன் அத்தனை பெரும்பதவிகளும் ஆரியப் பார்ப்பனரையே தஞ்சமடைகின்றன? இந்திய போலி தேசியத்தால் விளையும் பொல்லாங்குகளே இவைகள்!

திராவிடத்தேசிய இனத்தின் அடிப்படையில் பதவிகள் கொடுக்கப்பட்டிருந்தால் இப் பாதகம்—படுமோசம் ஏற்பட்டிருக்குமா?

ஆவடி மாதிரிச் சமதர்மம், ஐந்தாண்டுத் திட்டங்கள்; அனைத்தும் தேசியமயமாக்கல் எது வந்தாலும், ஏக இந்தியக் கொள்கை நிலைத்திருக்கும் வரையில் திராவிட நாட்டிற்கு விமோசனமில்லை. திராவிட இனம் பெருவாழ்வுபெற வழியில்லை. வக்கில்லை! இந்தியத் தேசியம் பேசிடும்திராவிடரே! இந்தியத் தேசியத்தாரின் எடுபிடிகளுக்கு வலியச் சென்று வாகனமாவோரே! எண்ணிப் பாருங்கள்.

—வாலி.




## மர்ம வீரன்.

கொன்றை நாட்டுக் கோமகள்—அழகி—அவள் எழிலில் ஏங்கித் திருமணம் செய்துகொள்ளுகிறேனெனக் கேட்கிறான் பவளநாட்டுப் பராக்கிரமபாகு. அவள் தந்தை குலசேகரர், மகளைத் தங்கையின் மகனுக்குத் தருவதாக வாக்குக் கொடுத்துவிட்டதைத் தெரிவித்து வருத்தப்படுகிறார். ஆனாலும் அவன் கேட்டானா? கொன்றை நாட்டின் கொடிய தளபதி சிம்மநாதனோடு சேர்ந்துகொண்டு சூழ்ச்சி செய்கிறான். சேனாதிபதிக்கு வேண்டியது மண்—பராக்கிரமபாகுவிற்கு வேண்டியது பெண். இருவரும் கைகுலுக்குகின்றனர். குலசேகரர் கைதாகிறார். சித்திரவதை செய்யப்படுகிறா. அழகி கடத்திச் செல்லப்படுகிறாள். சேனாதிபதி நாட்டையாள முனைலுகின்றான்.

கதைக்குக்கதாநாயகன் தேவை அல்லவா? அந்தக் கதைக் குரிய நாயகன் தான் இதற்கெல்லாம் இடையில் மர்மமாகலந்து போய்க் கொண்டிருக்கிறான். அவன் வீரன் என்பதைத் தெரிவிக்க வேண்டுமே, அவனுடைய படைகள் சர்க்கஸ் வேலைகள் செய்வதைப் போலக் காட்டுகின்றனர்!

எதிரியை மடியச்செய்ய வருகிறான் மர்ம வீரன். வழக்கம்போலத் தளபதி செத்து மடிகிறான். அப்பொழுதுதான், குலசேகரருக்கும்—மகள் விஜயாவிற்கும் மர்ம வீரன் அத்தை மகன் என்று தெரிகிறது. பிறகென்ன? கதாநாயனும்—கதாநாயகியும் கைப்பிடிக்கின்றனர். சுபம்—சுபம்! முற்பகுதியில் ஓரளவும் விறுவிறுப்பு இருப்பினும், பாத்திரங்களின் பண்பு சரியாக உருவாக்கப்படாத குறை பளிச்செனத் தெரிகிறது. கதாநாயகி கொலை செய்துகொள்ள முயற்சிக்கும் முறையைத்தவிர, கதையில் புதுமையில்லை! உயிரில்லை!

வைஜயந்திமாலா சிரமப்பட்டு வசனங்களைப் பேசவேண்டியிருக்கிறதென்றாலும், கதாநாயகனுக்கு அவர் சோடையில்லை! ஆனாலும், இந்தப் பாத்திரத்திற்கு அவர் தகுதிதானா? கௌரவ நடிகர்கள் பெறுகின்ற பெயரைக்கூட, படம் முழுதும் பத்துத் தடவை விழுந்து எழுந்திருக்கும் ஸ்ரீராம் பெறவில்லையென்றால், அவருடைய நடிப்பைப் பற்றி என்ன சொல்வது? பாலையா புதியமுறையில் நடித்திருக்கிறார்—ஓரளவு கவர்ச்சியுமிருக்கிறது. வீரப்பா பழைய ரகமே; என்றாலும் பரவாயில்லை. பெண் வேடம் பூண்டு நடிக்கும் சந்திரபாபுவின் நகைச்சுவை, புதிய கோப்பையில் பழையமது. தங்கவேலைக் காட்டிலும் அதிகமாகச் சிரிக்கவைக்கிறார்.

கத்திச் சண்டையில் இனிப் புதிய முறை வரவேண்டுமானால்; ஒன்று, ஏரோப்பிளேனில் ஏறிக்கொள்ள வேண்டும், அல்லது தலைகீழ் நின்று கொள்ளவேண்டும்.

அந்தப்புர அலங்காரம்—ஹெலனின் நடனம் நன்றாயிருக்கிறது. மருதகாசி, கல்யாணசுந்தரம் இவர்களின் பாடல்களும் அப்படியே!

சுருக்கமாகச் சொன்னால், கண்ணைப் பறிக்க மின்னும் கத்தி—ஆங்காங்கே தலையைத் தூக்கித் துப்பறியும் கதா பாத்திரங்கள்—அனாயாசமாக வந்து போகும் கதாநாயகன், இவைதான் மர்ம வீரன்.

—சி. என். காச்சியப்பன்.

## மந்திரிகுமாரி-தெலுங்கில்.

கலைஞர், மு. கருணாநிதியின் புரட்சிப் படையல் "மந்திரி குமாரி"யை தெலுங்குப் படமாக்குகின்றனர் சேலம் மாடர்ன் தியேட்டர்சார். இதில் பல பிரபல தெலுங்கு நடிகர்கள் தோன்றுவர். டைரக்ஷன் ஜி. ஆர். ராவ், "மந்திரி குமாரி"யின் தமிழ்ப் படத்தின் பாடல்கள் திரு. ஆருத்ராவால் மொழி பெயர்க்கப்பட்டு, அதே மெட்டுகளில் தெலுங்குப் பாடல்களாகப் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் படப்பிடிப்பு ஆரம்பமாகும்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர்: ப. கண்ணன்.


> **கருத்து.**
>
> தனிமனிதர்களின் கருத்தே பொதுமக்களின் கருத்தாகிறது; பொதுமக்களின் கருத்தே நாட்டின் கருத்தாகிறது; நாட்டின் கருத்தே உலகத்தின் போக்காக முடிகிறது. எனவே தனி மனிதனின் பேச்சும் கருத்தும் மிகமிக முக்கியம்.
>
> —ஜான்ஸ் டேர்நா.


கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6 | சேலம் 7-9-56. வள்ளுவராண்டு 1987. ஆவணி 23. | இதழ் 9.


## மூத்த பையன் காங்கிரஸ்; அவன் முழுத்திறமை தெரிகிறதே!

## சொல்லமுடியாத வெட்கக்கேடு! சொல்லிவிட்டால் மானக்கேடு!

கல்விக்கு ஒதுக்கியதிலே 88 லட்சம் மீந்து கிடக்கிறது— பாதைக்கு ஒதுக்கியதில் 61 லட்சம், கூட்டுறவு 6, மீன் இலாகா 14, ஏனைய தொழில் 15, சுகாதாரம் 43, வீட்டு வசதி 38. இத்தனையும் லட்சங்கள்—ஏன் மீந்தன? எப்படி? எதனால்? முறைப்படி சேரவேண்டிய தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கையே பெற்று, அதனையும் முற்றச் செலவழிக்க முடியாததற்குக் காரணம் எது? நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை! வேறென்ன சொல்வது? கொடுத்த 86 கோடியையே வகையுடன் செலவழிக்கத் தவறியவர்களிடம் மத்திய அரசாங்கம் என்ன கூறும்?

மக்கள் நால்வர்—இரண்டு மனைவிக்குமாக. மூத்த பயலை எப்போதுமே கொஞ்சம் பிடிக்காது தந்தைக்கு. காரணம், அவன் மூத்தாள் பிள்ளை. அதுவும் கொஞ்சம் மந்தம். தந்தைக்கோ இளையாள் மீதுதான் மோகம்—எங்கும் உள்ளது தானே! இளையாள் பிள்ளை மூவரும் 'வணிகம் செய்வோம்' என்றனர். 'செய்யுங்களடா கண்மணிகளே! இதோ ஆளுக்காயிரம்! இந்தா போ, உனக்குமொரு முன்னூறு'-இது மூத்த பிள்ளைக்கு. பல்லிளித்தான் பெரியபிள்ளை. தலையைச் சொறிந்தவாறே 'கொஞ்சம் குறைவாக இருக்கிறதே' என்றான், என்ன பதில் கிடைக்குமோ என அஞ்சியபடியே தான். நல்லவேளை, ஒன்றும் நடக்கவில்லை. அருகே வந்தார் தந்தை. புன்முறுவல் பூத்தார். 'உன்னை எனக்குத் தெரியாதா? உறுதியுடையவன்—உடல்கட்டு மிக்கவன்—போய் உழைத்துக்கொள் — நிச்சயம் மற்றவரைவிட நீதான் முன்னே நிற்பாய் என்பதை நான் முழுக்க முழுக்க நம்புகிறேன். அல்லும் பகலும் நான் உன்னைத்தானே நினைக்கிறேன். நீ என்னமோ இதைப் பெரிதாக நினைத்துச் சிணுங்குகிறாயே. அப்படித்தான் கொஞ்சம் குறைந்திருந்தால் என்ன? அவர்கள் கொண்டுவருவதும் நம் வீட்டுக்குத்தானே!'

மலர்ந்தது மகனின் முகம். சீசீ என்ன மடமை செய்து விட்டோம்! ஒரு குடும்பம் என்ற நினைவின்றி ஏதேதோ உளறிவிட்டோமே' — துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நடையைத் தட்டினான்.

ஆண்டுகள் உருண்டன. ஆளும் மந்தம்; பணமோ கொஞ்சம். முன்னூறைக் கொண்டுபோய் எதிலே முதலாக வைப்பது? ஏதோ செய்தான். 250 ரூபாயை ஒழித்தான். ஏனைய புதல்வர் முழுமூச்சுடன் இறங்கினர் வாணிபத்தில். கொட்டமுத்து, நிலக்கடலை, பருத்தி என்று எதை எதையோ பிடித்து ஆயிரத்தை இரண்டாயிரமாக்கினர். அயல்நாட்டில் மூலதனமிட்டால் என்ன என்ற எண்ணம் அரும்பியது. அணுகினர் தந்தையை. 'அப்பா'—

'கேள்விப்பட்டேன் புதல்வர்களே, கேள்விப்பட்டேன். நீங்களன்றோ என் செல்வம்! எவ்வளவு வேண்டுமோ எடுத்துச் செல்லுங்கள். இதோ பெட்டிச் சாவி'—திறப்புக்குச்சியைத் தந்தார் தந்தை.

(8-ம் பக்கம் பார்க்க)

# கடவுள்.

பாவலர்—வேலாயுதசாமி

கடவுள் என்னும் சொல், உள்ளத்தை கடந்து நிற்பது. மனத்தினால் சிந்தித்து முடிவு செய்ய முடியாத தன்மையுடையது— எண்ணத்திற்கு அப்பாற்பட்டது என்ற பொருளைக் குறிக்கும். இதுவே கடவுள் என்ற சொல்லுக்கு நேரான பொருள். பண்டைய வேதாந்த நூல்களும் இப்படித்தான் கூறுகின்றன. ஆகவே, கடவுள் என்பது ஒரு அஃறிணைப் பொருள் ஆகிறது.

கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறது, சகல உயிர்ப் பிராணிகளிடத்திலும் இருக்கிறது, உயிருக்குயிராயிருக்கிறது. உலகிலுள்ள எல்லாப் பொருள்களிடத்தும் உள்ளும் புறமும் ஒன்றாக வியாபித்திருக்கிறது, அது இல்லாத இடமேயில்லை, அது இல்லாவிடில் உலகமேயில்லை என்று சொல்வதெல்லாம் சர்வ சக்தி வாய்ந்த அந்த ஒரு பொருளைக் குறித்துத்தான். அந்தப் பொருள் எது? எப்படிப்பட்டது? அதை எப்படிக் கண்டறிவது? என்பவைகளைப் பற்றித்தான் பலத்த தகராறுகள், விவாதங்கள்!

உலகம் இயங்குவது இயற்கையின் சக்தியினால். இந்தச் சக்தி, ஒன்றிலிருந்து பல்வாகி, ஒன்றுக்கொன்று சேர்ந்து பல்லாயிரக்கணக்கான சக்திகளாகப் பெருகிப் பல கோடிக்கணக்கான பொருள்களாகக் காட்சியளிக்கின்றன. இவைகள் தாமாகவே கலந்து இயற்கையாகப் பெருகுவதைப் போல் நாம் செயற்கையினாலும் செய்து கொள்ளலாம். இதுவே விஞ்ஞானமென்பது. கடவுளைக் காண முயல்பவர்கள், கடவுளைக் காண்பதற்கான பாதையில் செல்பவர்கள், ஓரளவுக்குக் கடவுளைப் புரிந்து கொண்டுள்ளவர்கள், இனி கடவுளை முழுவதும் காணப் போகிறவர்கள் விஞ்ஞானிகளே யாவார்கள்.

பெரிய ஒரு நெருப்புக் கோளமான சூரியன் என்கிற இயற்கைப் பொருளை எடுத்துக்கொள்வோம். அந்தச் சூரியன் இல்லையெனில் உலகம் இயங்கமாட்டா. வெய்யில், காற்று, மழை, பனி இவைகளெல்லாம் சூரியனாலே ஏற்படுகின்றன. ஓரறி உயிரான புல், பூண்டு, மரம், செடி, கொடி முதல் ஆறறிவுடைய மனிதப் பிராணிவரையில் உற்பத்தியாவதற்கும், உயிர் வாழ்வதற்கும் இவைகள் இன்றியமையாதனவன்றோ? இப்படியே பார்ப்போமானால் பல சக்திகளின் கூட்டுப் படைப்பே உலகம் என்பது தெளிவாகிறது.

உழுது செருக்கி எருப்போட்ட நிலத்தில் நெல்லை விதைத்துத் தினந்தோறும் தண்ணீர் பாய்ச்சி வந்தால் அது முளைத்து, வளர்ந்து, தாள்விரிந்து, கதிர் விட்டு நெல் முதிர்கின்றது. ஒரு நெல்லுக்குப் பல நெல்லாக, ஒரு மூட்டை நெல்லுக்குப் பல மூட்டை நெல்லாக விளைகின்றது. இது எப்படியாயிற்று?

நெல்லை மூட்டையிலே வைத்துக் கொண்டிருந்தால் இப்படி ஆகியிருக்குமா? நெல்லுக்குள்ளிருக்கிற சக்தியை வெளிப்படுத்திப் பலன்காண மண், நீர், வெய்யில், காற்று முதலியவைகள் வேண்டியதாயிற்று. இவைகளையெல்லாம் ஒன்றுபடுத்தியது நாம். நம்முடைய அறிவைக்கொண்டே இந்தக் காரியங்களை நாம் செய்கிறோம். ஆகவே, இயற்கைச் சக்திகளின் தன்மையையறிந்து நம்முடைய வாழ்க்கைக்கு அவைகளைப் பயன்படுத்திக் கொள்கிறோம். மோட்டார், புகைவண்டி, ஆகாய விமானம், இன்னும் தொழிற்சாலைகளில் ஓடும் இயந்திரங்கள், மின்னல் விளக்கு வானொலி மற்றும் நாம் காணும் சாதாரணப் பொருள்கள் முதல், அதிசயப் பொருள்கள் வரையில் எல்லாம் நம்முடைய வாழ்க்கையை வளமாக்கி இன்பம் அநுபவிப்பதற்காக இயற்கைச் சக்திகளைத் தக்கவாறு அமைத்துப் பயனுள்ள கருவிகளாகச் செய்து கொள்கிறோம். இதே பாதையில் சென்றால் இன்னும் விசித்திரமான பொருள்களை உண்டாக்கலாம். வாழ்க்கையை மிகமிக இன்பமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் நடத்திக்கொண்டு செல்லலாம். விஞ்ஞானிகள் அப்படிச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

மனித இனம் விலங்குகள்போல் மரப்பொந்துகளிலும், மலைக் குகைகளிலும் வசித்து, காய், கனி, இலைகளைத் தின்று கொண்டு வாழ்ந்த நிலைமையிலிருந்து, இன்றுள்ள நிலைமைக்கு உயர்வடைந்தது எதனால்? பெரிய மாடமாளிகை கட்டிக்கொண்டு வசிக்கிறோம், சுவையுள்ள பல உணவுகளைத் தயாரித்துப் புசிக்கிறோம், அழகான ஆடைகளை அணிகிறோம், வசதியான ஊர்திகளில் தரையிலும், நீரிலும், ஆகாயத்திலும் செல்கிறோம், விநோதமான காட்சிகளைக் கண்டுகளிக்கிறோம். மொழியுண்டாக்கினோம், கலைகள் இயற்றினோம், காவியங்கள் செய்தோம், ஆயிரமைல்களுக்கப்பாலுள்ள ஒரு நண்பரிடம் நேரில் பேசுவதுபோலப் பேசுகிறோம். இவைகளெல்லாம் எப்படி ஏற்பட்டன? எல்லாம் நம்முடைய அறிவைக்கொண்டு ஆராய்ந்து செய்த காரியங்களல்லவா? இவைகளுக்கெல்லாம் கடவுள்தான் காரணமென்றால், இந்தக் காலத்தில் இருக்கும் கடவுள்தானே அந்தக் காலத்திலும் இருந்திருக்கிறது. அப்பொழுதில்லாத நூதனங்கள் இப்பொழுது தோன்றிப் பெருகியிருக்கின்றனவே! இது ஏன்?

இப்பொழுது பாருங்கள் கடவுள் என்பது என்ன என்பதையும், அந்தக் கடவுளை நாம் பயபக்தியோடு வணங்கி,

[7-ம் பக்கம் பார்க்க]

"ஒருவனுக்கு நல்ல அதிஷ்டத்தால் அவனது காரியம் வென்றது" என்னும் வார்த்தையைக் கேட்கும்போது 'உலக சக்தி' சீறிச் சினக்கின்றாள். ஏனெனில், அச்செயல் தன்னம்பிக்கையின் பெருமையை அழித்துவிடுகிறது. ஊக்கத்தைச் சிதைத்து விடுகிறது. புகழைத் தேய்த்து விடுகிறது.

—எமர்சன்.

# எதிரொலி

லட்சியத்துக்கும் வழியில்லை, பதவி ஆசையுமில்லை, பணத்தாசையுமில்லை. வேறு எதற்குத்தான் சட்டசபையை மோப்பம் பிடித்துக்கொண்டு திரிகிறாய் என்று-யாரையும் கேட்காதீர்கள்?

—"குத்தூசி"

*காமராசர் கோபித்துக்கொண்டு, "என்னை அவமானப் படுத்திவிட்டாய். நான் சட்டசபைக்குப் போகமாட்டேன்" என்று தேர்தலில் நிற்காவிட்டால், ஐயோ! முழுகிப் போகுமே திராவிடம்!*

*   *   *

தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு பின் தங்கிவிட்டது. சந்தேகமே இல்லை.

—காமராசர்.

*இராம லட்சுமணனைத் தோளிலே சுமந்துகொண்டு திரியும் அனுமாராகப் பட்டவர், கிஷ்கிந்தையைப் பற்றியும் நினைக்கிறாரே! என்ன ஆச்சரியம்!*

*   *   *

பிராமணர்கள் எல்லோரும் வேதம் சொல்லவேண்டும். சொன்னால்தான் ராஜ்யத்திற்கு க்ஷேமம் உண்டாகும்.

—ராஜாஜி

*வழக்கறிஞர், நீதிபதி, வணிகர், மருத்துவர், படத்துறையார், பரிசாரகர், அதிகார வர்க்கப் பார்ப்பனர் அனைவருமே ஓடுங்கள்! ஓடுங்கள் வேத கோஷத்திற்கு!*

*   *   *

செப்டம்பர் 9-ல், சேலத்தில் இளைஞர் காங்கிரஸ் மாகாண மாநாடு!

—செய்தி.

*தேசபரிளைஞர், காமராச இளைஞர், கக்கன் இளைஞர்; இவர்களோடு இந்திரா காந்தி இளைஞரும் கலந்து கொள்வார்களாமே!*

*   *   *

ஈரோட்டில் மரப்பொம்மை தொழிற்சாலையொன்று; டெல்லி அரசாங்கம் கட்டப் போகிறது

—செய்தி

*அதிலே தயாரிக்கப்படும் முதல் பொம்மை காமராசரின் விற்பனை விழாவை, கவர்னர் தலைமையில் பெரியார் ஈ. வே. ரா. நடத்தி வைக்கலாம்!*

## வெம்புலியே வாளெடு!

துரை-மாணிக்கம்.

நம்மை, நம் நாட்டை
நலம் பல பேணி
நாளும் காப்பது மொழி!
நல்லன காட்டித் தீயன களைய
உதவும்; நமக்கது விழி!

செம்மைத் தமிழ் மொழி
சீர்குலை வதனால்
செந்தமிழ் நாடுறும் பழி!
சிற்றறி வுடையோர் இந்தி
—யைப் புகுத்தச்
சீறுவர்; நீயதை ஒழி!

வெம்மைக் கொடும் போர்
விளையினும், மொழிக்கென
வெற்புத் தோளினைக் கொடு!
வீணரை வீழ்த்து! வெற்றியை
—வாழ்த்து!
வெம்புலியே வாளெடு!

இம்மை மறுமை யென்
றேபல பிதற்றி
இழிவார் பலர்; அதை விடு!
இழப்பது வாழ்வே என்னி
—னும் அவர்மொழி
ஏற்பது தீது! உயிர் விடு!

## திராவிட நாடு விடுதலை (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

—::—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான 17-9-56-ம் நாளிலிருந்து 23-9-56-ம் நாள்வரை,

**திராவிடநாடு விடுதலை (பிரிவினை) வாரமாக**

கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புக்களையும் அன்போடு விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும், பொலிவோடும் நடத்திக் கருத்துவிளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக்கொள்கிறேன்.

**இரா. நெடுஞ்செழியன்,**

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,

'அறிவகம்' சென்னை-13.

1—9—56.


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

இதயம்

மலர் 6 | சேலம் 7—9—56 | இதழ் 9

# தகுதியற்ற இந்தி தேவையா?

ஆங்கிலம் அன்னிய மொழி; அதனை நாட்டிலோ, அரசாங்க அலுவல்களிலோ நடமாட விடக்கூடாது. அதைக் கப்பலேற்றிவிட்டு இந்திமொழியை அரியாசனம் ஏற்றிவிட வேண்டும் என்பது வடநாட்டு இந்தி வெறியர்களின் பேராசை. இந்த ஆசையின் அடிப்படையிலேயே இந்தியஅரசாங்கம் அவசரம் அவசரமாகப் பல துறையிலும், பல வகையிலும், இந்தியைத் திணித்து வருகின்றது. பலாத்கார முறையில் பரப்பி வருகின்றது.

கல்லூரிகளில் ஆங்கிலம் இருந்த இடத்திலே, இந்தியைக் குந்தவைத்து அழகுபார்க்கத் துடித்தனர்; இந்தியைக் கட்டாயப் படுத்தியும், ஆங்கிலத்தைத் தளர்த்தியும் பாடத்திட்டம் அமைத்தனர்! படிப்புத்துறை பாழாயிற்று. கல்விவளத்தில் கருத்துள்ளோர் "ஆங்கிலத்தை எடுக்காதே" என்று இடித்துரை புகன்றனர். அரசாங்கம் விழிக்கின்றது இப்போது.

2-9-56-ல் டெல்லியில் நடைபெற்ற மாநிலங்களின் கல்வியமைச்சர் மாநாட்டிலே மத்திய கல்வியமைச்சர் ஆசாத் கூறுகின்றார்:"நாட்டு வளர்ச்சித்துறையில் ஆங்கிலமொழி இன்றியமையாதது. இந்தி தனக்குரிய இடத்தை பிற்காலத்தில் அடையுமென்பதில் ஐயமில்லை. ஆனால், ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாறுவது திடீரென ஏற்படலாகாது. இன்று கூறப்படும் பொதுப்படையான புகார், மெட்ரிகுலேஷன் பரிட்சையில் தேறிய மாணவர்கள், படிப்புத் தரத்தில் மிகவும் குறைந்திருக்கின்றனர் என்பதாகும். இதற்கு கூறப்படும் காரணங்களிலே ஒன்று: பாட மொழியான ஆங்கிலத்தை அவசரப்பட்டு மாற்றியதாகும். எனவே, ஆங்கிலம் கட்டாயப் பாட மொழியாக இருந்தாக வேண்டும் என்பது கால நிலவரத்தின் அறைகூவலாக உள்ளது. அதாவது;காலம் ஆங்கிலம் அவசியம் என்பதை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது"

இவருக்கு மட்டுமா? பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவுக்கும் இந்த ஞானோதயம் உண்டாகியுள்ளது. அதே மாநாட்டில் அவர் கூறுகின்றார்: "கைத்தொழில், விஞ்ஞானம், விவசாயக் கலைகள், ஆங்கிலம் தவிர்த்து வேறு எந்த மொழியிலும் கற்றுக் கொடுப்பது சாத்தியமில்லையென்று எனக்குத் தெளிவாகப் புலப்படுகின்றது... இந்தியிலோ, பிற இந்திய மொழிகளிலோ பயிற்சியளிக்க முற்பட்டால் தொழில் துறையில் போதுமான அளவு பயிற்சி பெறாதவர்களைத்தான் உற்பத்தி செய்யமுடியும். இம்மொழிகளிலே போதுமான தொழில் இலக்கியங்கள் இல்லை. திறமையான எஞ்சினியரோ, விஞ்ஞானியோ ஆகவேண்டுமானால்,ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ரஷியா, ஜெர்மன் முதலிய அன்னிய மொழிகளைத் தெரிந்திருக்க வேண்டியுளது. அப்படித் தெரிந்திருக்காவிடில் அவன் உலகின் புதுமைகளை அறிந்துகொள்ள முடியாமற் போகும்."

இவ்வரிய கருத்தை வெளியிட்டதோடு மேலும் கூறுகின்றார் ஜவகர்லால்: "இந்தியை வளமொழியாக வளர்ப்பதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஏனெனில், இந்தியாவில் பல்வேறு மொழியினர்களிடையே பயமும், பொறாமையும் ஏற்பட்டதை நாம் கண்டுள்ளோம், எப்படிக் கொந்தளிப்பு ஏற்பட்டது என்பதையும் பார்த்தோமே!"

தவறான வழியிலே தடபுடலாக நடந்து, தலையிலே குட்டு விழுந்த பிறகு குனிந்து திரும்பிப் பார்த்த திருவாளத்தான் கதையாக இருக்கிறது, இவர்களது பொறுப்பற்ற நடத்தையும் பேச்சும்!

1938-ம் ஆண்டில் சென்னை மாநிலத்திலே முதலமைச்சர், ராஜாஜி இந்தியைக் கட்டாயப், படிப்பாக்கியதை எதிர்த்த தமிழ்த் தலைவர்கள்-அறிஞர்கள்-எடுத்துக் காட்டியவைதான் இவைகள்! இக்கருத்துக்களை அப்போது எதிர்த்தவர்களுக்கு இப்போது புதிய கண்டுபிடிப்பாக, ஞான ஒளியாக. அனுபவக் காட்சியாக விளங்குகின்றது!

இந்தியை ஆங்கிலத்திற்கு பதிலாகக் கொண்டதன் கேட்டினை நன்றாக உணருகின்றனர் இந்தியப் பிரதமர் ஜவகர்லாலும், படிப்பமைச்சர் ஆசாத்தும். உணர்ந்ததை வெளிப்படையாகச் சொல்லியும் விட்டனர். என்றாலும் செயல் முறையில் நாம் காண்பதென்ன? இந்தியின் பலாத்காரத் திணிப்பை அரசாங்கம் இன்னும் கைவிடவில்லையே! பாடசாலையில் புகுந்தது; ரயில் நிலையப் பலகையில் ஏறிற்று. ஊர்ப்

பெயர்களிலேவிழுந்தது; தபால் கார்டுகளில் குதித்தது; எங்கெங்கோ மூலைமுடுக்கெல்லாம் புகுந்தது. கையில் புழங்கும் காசிலும் தொத்திக் கொண்டதே! நம்நாட்டு சல்லிக் காசுக்குப் பெயர் நயா பைசாவாமே! இப்படிப் பரவலாமா தகுதியற்ற இந்தியின் ஆதிக்கம்? பரப்பலாமா அரசாங்கம்? இதுவா காலநிலவரம் கற்பித்த பாடம்? "பல்வேறு மொழியினரிடையே பயமும், பொறாமையும் ஏற்பட்டது; கொந்தளிப்பு ஏற்பட்டது" என்று பகர்ந்திடும் பிரதமர் அவற்றைப் போக்கிட என்ன செய்தார்? செய்கிறார்? செய்யப்போகிறார்?

இந்தியா ஒரே நாடு; இங்கிருப்பது ஒரே கலாச்சாரம்; ஒரே இனம்; ஒரே மதம்; ஒற்றுமையாக வாழ எல்லாரும் ஒரேமொழி இந்தியைப் படியுங்கள்; பரப்புங்கள் என்ற மாய்மாலக் கூறலுக்கு காங்கிரஸ் அடிமைகள் இணங்கலாம். தாய்மொழியில் பற்றுள்ள எவனும் வெறுப்பான் என்பதை பாரத மாதாவின் புத்திரசிகாமணிகள் எப்போது அறிவார்களோ?

●●





## நன்னம்பிக்கை.

பழைய கதைகளிலே, புதிய மெருகு தீட்டி நடைபோடுகிறது 'நன்நம்பிக்கை' மாலதியாகவரும் பண்டரியின் நடிப்பில் பழமையும்—புதுமையும் கலந்து வருவதால், அவர் இதற்குமுன் நடித்த "பராசக்தி"யை நினைவு படுத்துகிறது. ராஜாவின் நடிப்பினில் எதிர்காலத்திற்கான முன்னேற்றம் மின்னுகிறது. சிங்கப்பூர் சங்கரலிங்கமும், என்வா மூர்த்தியும் கதைக்குகாலில்லை என்ற பழமொழிக்கேற்பஎவ்வித மாக பால்ய நண்பர்கள் என்பதை காட்டவில்லை. இடையிடையே தோன்றும் ஞானத்தின் போக்கில் ஊனம் நிறைந்து காணப்படுவதோடு வதந்தியைப் பரப்புவதும், வாயில் எந்நேரமும் அசைபோடுவதும் மிருக சுபாவத்தைக் காட்டுகிறது. ஒரு லட்ச ரூபாய் செக்கை வைத்துக் கொண்டு கதையை இழுத்துச் சென்று முடித்திருப்பது படம் பார்ப்பவர்களுக்கு சப்பென்றிருக்கிறது. அபலைப் பெண்களின் வாழ்வை கயிறு, கிணறு, விஷம் ஆகியவைகளுக்கு ஒப்பிட்டு கூறியிருப்பது இதற்குமுன் வந்திருந்தாலும், அவர்களின் வாழ்வுப் பாதையில் சூறவளி தாக்குவதுபோல் அமைந்திருப்பது போற்றுதலுக்குரியது. கலைவாணரின் நகைச்சுவையில் நையாண்டி கலந்து காணப்படுவதால் மாற்றிக் கொள்வது நலம். வசனம் ஹாஸ்யமும், அறிவும் நிறைந்து காணப்படுகிறது. சமூகத்திலே பின்னி பிணைந்திருக்கும் சிக்கலைத்தீர்க்க முயன்று முடித்திருப்பதால் முயற்சி வீண்போகவில்லை என்பது தெரிகிறது!

—மா. அரங்கசாமி, கோவை.

## பாசவலை.

சேலம் மாடர்ன் தியேட்டர்சாரின் "பாசவலை"யின் படப்பிடிப்பு முடிந்துவிட்டது. மெருகு வேலைகள் நடைபெறுகின்றது நவம்பர் முதல்நாள் பவனி வரப்போகும் இந்த அரசகுடும்ப வாழ்க்கைச் சித்திரத்தில் எம். கே. ராதா, ஜி. வரலட்சுமி, எம். என். ராஜம், கருணாநிதி, முத்துலட்சுமி, ஆகியோர் மிக நன்றாக நடித்துள்ளார்களாம். ஆசிரியர், ப. கண்ணன் வசனம் வரைந்துள்ள இந்தப் "பாசவலை"யில், இசைவாணர் சிதம்பரம் ஜெயராமனின் இசையமுதை செவியார நுகரலாம்!



ஆசைக் கொந்தளிப்பும் அன்புப் பெருக்கும் கைகோர்த்து விட்டன. மாடர்ன் தியேட்டர் 'பாசவலை'யில் கருணாநிதி, முத்துலட்சுமி ஜோடி!


வருகிறது! வருகிறது!

17-9-56 முதல்

# கலைக்கூடம்

(சீர்திருத்த மாதமிருமுறை ஏடு)

ஆசிரியர்: கணை அரசு.

தனி இதழ் 2 அணா

பொதுமக்களும், விற்பனையாளர்களும் (விற்பனையாளர்கள் இதழ் ஒன்றுக்கு 4 அணா முன்பணம் வீதம்) நிர்வாகி—கலைக்கூடம் சிவகங்கை (R. D.) என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.



எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

தமிழ்ச்சுவையிலே தன்னையிழந்த தார்வேந்தன்; பல்லவ மாவீரனின் வரலாற்று நாடகம் வண்ணத் தமிழோவியம்!

ஆசிரியர், ப. கண்ணன் தீட்டிய

# நந்திவர்மன்.

விரைவில் "பகுத்தறிவு" இதழில் ஆரம்பமாகின்றது.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● பி. கோபாலன்,
ராசன் கொட்டா, கலசமுத்திரம் (அஞ்)
வழி: கண்ணமங்கலம், தெ. ஆ (மா வ.)

டி. பி. பழனிசாமி, துளசம்பட்டி.

கே: பார்ப்பனர்கள் சிண்டு—உச்சிக்குடுமி—வைத்திருப்பது ஏன்?

ப: மற்றவரிடமிருந்து பிரிந்து வாழ-பிடிபடாமல்வாழத்தான்!

தி. பொ. செயராமன், நெடுங்குளம்.

கே: உலகம் உய்வதற்கு ரூபா, அணா, பைசா ஒன்றே பிரதானம் என்கிறேன். தங்கள் கருத்து?

ப: தேவையான பலசாதனங்களில் இதுவும் ஒன்று.

* * *

கே: அறம் என்ற சொல் அந்தக் காலத்தில் திருடனுக்கும் கன்னக் கோலாக இருந்ததாம்; அந்த இடத்தில் இன்று அறிவு இருக்கிறதாமே; உண்மையா?

ப: அறத்தின் பெயரால் திருடியவனிடம் அறிவு குடியேறியிருந்தால், அவன் கன்னக் கோலை விட்டெறிந்திருப்பான் என்பது உண்மை.

ப. தமிழரசன், திருவண்ணாமலை.

கே: சிறு குழந்தை சிறு நீர் கழித்தாலே சீச்சீ யென்போர்: ஆவின் சிறு நீரைக் குடிப்பதேன்?

ப: மூத்திரம் மட்டுமல்ல, சாணியையும் சேர்த்தே வயிற்றுக்குள் தள்ளுகிறார்கள், பார்ப்பனீயம் காட்டிய வழியில் பரகதியடைய விரும்புவோர்!

மா. பிச்சாண்டி, திருவண்ணாமலை

கே: பூணூல் பண்டிகைக்கு மதிப்பளிக்கும் அரசாங்கம். குறள் விழாவுக்கு மட்டும் விடுமுறையளிக்காததேன்?

ப: பூணூல்கள் நாட்டை விட்டுப்போக வேண்டும் என்போரே கையாட்களாக மாறி விட்டபிறகு, பூணூல்களின் அடிமைகள் குறளை ஏன் மதிப்பார்கள்?

கு. இரா. பரமசிவம், காரமடை.

கே: வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. க, வை எதிர்த்து பெரியார் பிரசாரம் செய்தால்?

ப: யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொண்டால் என்ன செய்வது?

* * *

கே: பக்திக்கும், புத்திக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: பக்தி, சோற்றைக் கற்சிலைமுன் படைக்கும், புத்தி கதறுகின்ற குழந்தைகளுக்குப் பகிர்ந்தளிக்கும்.

எஸ். கணேசன், குடியேற்றம்.

கே: காங்கிரஸ் கொடியிலுள்ள சிவப்பு, ரத்தம் சிந்திய தியாகிகளையும்; வெண்மை, அமைதியையும்; பச்சை செழிப்பையும் குறிப்பதாம். தி மு க. கொடியிலுள்ள கருப்பும், சிவப்பும் எதைக்குறிப்பன?

ப: கருப்பு; திராவிடர்கள் அரசியல், பொருளாதார, சமூக இயல்களில் பெற்றுள்ள இழிநிலையினைக் குறிப்பது! சிவப்பு; அவ்விழிவினைப் போக்க நாம் சிந்திடும் இரத்தத்தைக் குறிப்பது.

● பி. கோபால், கண்ணமங்கலம்.

கே: தென்னாட்டில் தேர்வுகள் வைத்து இந்தியைப் பரப்புவதுபோல், வடநாட்டில் தேர்வுகள் வைத்து அரசாங்கம் தமிழைப் பரப்புமா?

க: இந்திக்கு அடிமையாகி தமிழுக்குத் துரோகம் புரிவோரிடம் அரசாங்கம் இருக்கிறதே குள்ளநரி ஆட்டுக்குட்டிக்குப் பால் தருமா?

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

டுமா விழா? தெருவெல்லாம் ஆண்டு விழா நடக்கிறது! இந்த முக்கிய நிகழ்ச்சியை திருச்சி ரேடியோ நிலையம் வேறு அஞ்சல்செய்து பரப்புகிறது. அது மட்டுமா? இசைத்தேர்வுக்கும் இந்த மும்மூர்த்திகளின் பாடல்களைத்தான் பாடம் வைத்திருக்கின்றது அரசாங்கம்! நம் நாட்டிசையில் காவடிச் சிந்தின் அழகுக்கு ஈடாகச் சொல்லமுடியாது இந்த மும்மூர்த்திகள் பாட்டை. தமிழ்நாட்டில் பிறந்து தமிழ்க்கலை கற்று, தெள்ளு தமிழ் இசைபாடிய வள்ளலார், வேதநாயகம், முத்துத் தாண்டவர், திரிகூட ராசப்ப கவிராயர் இன்னும் எத்தனை எத்தனையோ இசைப் புலவர்கள்! அவர்களுக்கு இந்த நாட்டில் ஒரு ஆண்டு விழா கல்லூரி, நினைவுச் சின்னம் இல்லை ஆனால், தெலுங்கு, சமசுகிருதம் பாடி, தமிழ் இசையை மறைத்து—சிதைத்த—இந்த மும்மூர்த்திகளுக்கு இத்தனையும் வேண்டுமாம். தமிழர்களே! தமிழிசைப் பெரியோர்களே! இவர்களுக்குச் செய்யும் இக்காரியத்தை தமிழர்களுக்கு செய்யுங்கள், தமிழிசை வளர்வதற்குச் செய்யுங்கள் என்று பணிவோடு வேண்டுகிறேன்.

தன்மானமுள்ள தமிழர்கள் யாரும் இந்த மும்மூர்த்திகள் நினைவுச் சின்னப் பணிக்கு பண உதவி செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் தமிழிசைக்கு கேடு செய்தவர்களாகவும், நன்றிகெட்ட தமிழர்களாகவும் போய் விடுவோம் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

—இசைமணி ஆர். சீனிவாசன்.

### வெளிநாட்டு மொழி கற்காவிடில்....

ஆங்கில மொழி ஒன்று மட்டும் இங்கிருந்து அகற்றப்பட்டு விடுமானால், இந்தியா என்ற ஒரு நாடு உலகில் இருக்கிறதுஎன்பதையே வெளி உலகிற்கு எடுத்துக்காட்ட இயலாத நிலைதான் உண்டாகும்!

—ஆசிரியர், க. அன்பழகன்.
மறைமலையடிகள் நாடக மன்றத்தில்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பொங்கல், அபிஷேகம், ஆராதனை, காணிக்கை, தேர் திருவிழா முதலியன நடத்தினால்தான் நம்மீது கருணைகாட்டி நம்மை வாழ்விக்கும் என்பது உண்மை தானா என்பதையும்.

கடவுள் என்ற சொல்லை அஃறிணையாகக் கொண்டால்தான் இதுவரை சொல்லிவந்த உண்மையான விளக்கங்களைக் காண முடியும். அதைவிட்டு கடவுள் என்ற சொல்லை உயர்திணையாகக்கொண்டு, மனித உருவம் கற்பித்துக் கொள்வதனால் உண்மைக்கு மாறான வழிகளில் நாம் இழுத்துச் செல்லப்படுகிறோம். இதைத்தான் அறிவியக்கத்தார்கள் சொல்லுகிறார்களே யொழியக் கடவுள் மீது குறைகூற வேண்டும், கடவுளை இழிவாகப் பேச வேண்டுமென்ற நோக்கத்தோடல்ல கடவுளின் தன்மை ஒருவிதமிருக்க, மக்கள் வேறு விதமான தன்மையை எண்ணிக்கொண்டு வீணாக அறிவையும், பணத்தையும், காலத்தையும் செலவு செய்து பாழடைகிறார்களே யென்று பரிதாபப்பட்டுத்தான் இக்காலத்தில் அறிவியக்கச் சான்றோர்கள் பல புத்தகங்கள் எழுதியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், மாநாடு கூட்டிப் பேசியும், மக்களுக்கு அறிவு விளக்கம் தரும் முயற்சியில் ஈடுபட்டுப் பணிபுரிந்து வருகிறார்கள். இத்தகைய நற்பணி புரியும் நல்லவர்களைத்தான் நாஸ்திகர்கள் என்று தூற்றுகின்றது ஒரு கூட்டம், சரிதானா? சிந்தித்துப் பாருங்கள்!


## பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.


# தமிழிசையின் பகைவருக்கு — தமிழகத்தில் நினைவுச் சின்னமா?

சில மாதங்களாக, ஆரியத் தலைவர்களும், அவர்கள் அடிவருடியாக உள்ள தமிழர்களும் கூடி "சங்கீத மும்மூர்த்திகளுக்கு நினைவுச் சின்னம் வேண்டும். அவர்கள் பெயரால் கல்லூரிகள் வேண்டும்" என்று ஆர்ப்பாட்டம் செய்துவருகின்றனர். அவர்கள் குடிஇருந்தார்களே குடிசை அதுவும் வேண்டுமாம். இந்த முக்கிய மும்மூர்த்திகள் திருப்பணியில் நீதிபதிமுதல் பெரு நிலக்கிழார்வரை படைதிரண்டு பணம் திரட்டி வருகின்றனர்.

இந்த மும்மூர்த்திகள் யார்? எந்த மொழியில் பாடினார்கள். யாரைப்பற்றிப்பாடினார்கள் அவர்கள்பாடிய அந்த பாட்டில் ஏதாவது கருத்துகள் உண்டா? என்றெல்லாம் இந்த திருப்பணித் தமிழர்கள் எண்ணிப்பார்த்ததுண்டா? இவர்கள் நிலைமையைக் கண்டு நாம் அனுதாபப் படுகிறோம். இசையைப் பற்றிகுறைகூறுவதாக யாரும் எண்ணி விடக் கூடாது. இசை மனிதனை மட்டும் இன்பமுறச் செய்யும் என்று எண்ணுவது தவறு, காட்டில் விலங்கறியும், கைக்குழந்தை தானறியும், பாட்டின் சுவை தன்னை பாம்பறியும். "பாட்டுக்கோர் இசையும், பசுவுக்கோர் இசையும், களையெடுக்கவோர் இசையும், கருதறுக்கவோர் இசையும் கண்டவன் தமிழன் சுருங்கக் கூறின் தமிழ் நாட்டில் பாட்டில்லாத பணியே இல்லை எனலாம். இவ்வாறுபல துறைகளிலும் புகுந்து தமிழ்மக்களின் வாழ்க்கையை வளம்படுத்தியது இசை. இது இக்காலத்தில் நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கும், சமூக வாழ்வைச் சீர்திருத்துவதற்கும் நோயைத் தீர்ப்பதற்கும், அரசியல் அறிவை ஊட்டுவதற்கும் பயன் படுகிறது.

உடலுக்கு உணவு அவசியம்போல, வாழ்க்கைக்கு இசை அவசியம். வயிற்றுப்பசியைத் தீர்ப்பது சோறு. உள்ளப் பசியைத் தீர்ப்பது இசை; கலங்கிக் கிடக்கின்ற மக்களுக்கு கலக்கம் தீர்ப்பது இசை. பாட்டு வெறும் பொழுது போக்கன்று, துன்பத்தினை மறக்க உட்கொள்ளுங் கள்ளன்று, இன்பக் கனவுகாண உண்ணும் அபினியும் அன்று, வாடிவதங்கிய நெஞ்சம் அள்ளிக் குடிக்கும் தெள்ளிய நீர்! தமிழ் நாடு இசைத் துறையில் உயர்ந்திருந்தது சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. புறநானூற்றில் இசைவல்ல பாணர்கள் வருகின்றார்கள்! கோவலனுக்கும், மாதவிக்கும் இடையில் யாழ் மாறி மாறி வருவதையும், அவர்கள் வரிப் பாடல்கள் பாடியதையும் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். ஆயினும் தமிழர் தமிழ் இசையைப் பேணாமைக்கு காரணம்? தம்மையும், தம்மொழியையும்பற்றிய தாழ்வுணர்ச்சியே! வடமொழிதான் தேவமொழி என்றும் அதன் வாயிலாகப்பாடினால் தான் இறைவன் விரும்புவான் என்றும், தவறானகருத்துக்களை நம்பினோம்; தமிழ் இசையின் பெருமை குறையத் தொடங்கியது. எத்தனையோ இசை நூல்கள் பாழான மண்ணிற்கும், படியாதார் நெருப்பிற்கும், பகைவரின் சூழ்ச்சிக்கும் இரையாகி விட்டன!

நச்சுக் கருத்தினர்: நற்றமிழின் பகைவர்களே, தியாகராச சுவாமிகள்: சாமா சாஸ்திரிகள்; முத்துச்சாமி தீட்சிதர் ஆகிய சங்கீத மும்மூர்த்திகளும்! இவர்கள் தமிழ்நாட்டில் பஜனைபாடிப் பிழைத்தவர்கள்; என்றுமே தமிழில் பாடாதவர்கள். தமிழ்நாட்டுக் கடவுள்களையே மதியாதவர்கள்! இவர்களுக்கு நினைவுச் சின்னமாம் தமிழ்நாட்டில்! திருவாரூரில்! "கல்கி" "மித்திரன்" "விகடன்"கள் கச்சை கட்டி நிற்கின்றன.

ஏன் எதற்கு இம்முயற்சி? கொஞ்சம் தட்டுண்டுத் தடுமாறி பாடிப் பயின்று வரும் தமிழிசையைக் கொலை செய்வதற்குத்தானே?

ஆரியர்கள் தென்னாட்டில் நடக்கும் இசையரங்குகளில் தெலுங்கு சமஸ்கிருதப் பாடல்களை கொஞ்சம்கூட அச்சம் இல்லாது பாடிவந்தனர். தென்னாட்டில் வாழ்ந்தும் தெலுங்கு கீர்த்தனம் பாடிய தியாகையருக்கு திருவையாற்றில் மட்

(6-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

எட்டிப்பார்த்தான் நம் மூத்த பிள்ளை. எட்டிப் பழமாகியது தந்தையின் கண்கள் 'வாசலை மிதிக்க வெட்கமில்லை? வக்கற்றவனே! எக்கேடோ கெட்டுப் போ' எழுந்து செல்கிறார் தந்தை. சும்மா விட்டால் ஊர் பழிக்குமே என்ற அச்சம் உள்ளத்தைத் தைக்கிறது. மீண்டும் வந்து 'இந்தா, இதில் நூறு இருக்கிறது. எதையாவது செய்' என்று முடிப்பைத் தருகிறார். மந்தம் சிறிது குறைந்தாலும் நெஞ்ச பாரத்தால் தளர்நடை போடுகிறான் பிள்ளை—வாசலை நோக்கி!

இப்படியொரு காட்சி எனக்குத் தோன்றுகிறதென்று நினைக்கவேண்டாம். இது உருவெளித் தோற்றமல்ல— உண்மை. அமைச்சர், சி. சுப்ரமணியம் அவர்கள் சென்னையில் திட்டக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய பேச்சு. கதையில் கண்ட மூத்த மகனும், சென்னை மாநிலமும் ஒன்றே என்பதை மெய்ப்பிக்கின்றது!

தென்னாடு புறக்கணிக்கப்படுவதாகப் பொதுவாக ஒரு எண்ணமிருக்கிறதாம். ஆனால், அப்படிப் புறக்கணிக்கப் படுகிறது என்று கூக்குரலிடுபவர்களே ஐந்தாண்டில் காங்கிரஸ் ஆட்சி இங்கு என்ன செய்துவிட்டது என்று கேட்கின்றனராம். 'இது முன்னுக்குப்பின் முரணாக இல்லையா' என்று கேட்டார் கனம் அமைச்சர். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தலைமை வகித்த அமைச்சர், பக்தவத்சலம் அவர்களின் பேச்சையாவது விளங்கிக்கொண்டு சிரிக்க முடிந்தது. இங்கு அதுவும் முடியவில்லை. 'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது; இங்கு காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது?'— தெளிவாகத்தானே இருக்கிறது கேள்வி, பார்த்தசாரதி கோவில் மதில் சுவரிலுள்ள நாமத்தைப்போல? இதில் அமைச்சருக்கு மட்டும் எப்படித் தெரிகிறது முரண்பாடு? உள்ளத்தில் இருக்கிறது முரண் என்று உன்னிப்பாகக் கேட்டேன். நான் எண்ணியது நூற்றுக்கு நூறு சரி.

'தந்த கொஞ்சத்தையே செலவழிக்காமல், இந்தக் காங்கிரஸ் ஒன்றும் செய்யவில்லை—தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று கூறுவது முன்னுக்குப் பின் முரண்தானே?'— இது அவர் தந்த விளக்கம்.

புரிகிறதா உங்களுக்கு? எனக்குப் புரிவதற்குக் கொஞ்சம் நேரமாயிற்று. கல்வி அமைச்சரின் கருத்துரையல்லவா?

'தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது' என்ற கூக்குரலை அமைச்சர் எழுப்பியிருந்தால் அது முன்னுக்குப்பின் முரணானதுதான். நமக்கு இப்போதுதான் புரிகிறது, அமைச்சர் ஏன் சிலபோது முன்னுக்குப் பின் முரணாகப் பேசிவந்தார் என்பது. தமது பங்கை நினைத்தபோதெல்லாம் ஆத்திரம் பொங்கும்—'தென்னாட்டுக்கு உரிய பங்கு தரப்படவில்லை' என்று முழங்குவார்! அடுத்த நிமிடம், கொடுத்த 86 கோடியிலேயே 2 கோடி மீந்து கிடக்கிறதே என்ற எண்ணம் வரும்! உடனே தாம் பேசுவது முன்னுக்குப்பின் முரணாகவல்லவா இருக்கிறது என்பதறிந்து பேசாமல் இருந்துவிடுவார்! பின்னரும் அதை மறந்த சில வேளையில் அங்கலாய்ப்பதும், மறுபடியும் கன்னத்தில் போட்டுக் கொள்வதும் அவரது வாடிக்கை!

ராஜாஜி ஹாலில் பேசும் பொழுது சிறிது குழப்பம் நிகழ்ந்துவிட்டது. அண்மையில் டில்லியிடமிருந்து ஏதாவது குட்டுவிழுந்ததோ என்னவோ? அந்தக் குழப்ப நிலையில், தான் கேட்பதுதான் முரண்பாடு, கழகமோ பிறரோ அப்படிக் கேட்பது முரண்பாடாகாது என்பதை மறந்து பேசிவிட்டார். இலக்கண முறையில் சொல்ல வேண்டுமானால் தன்மையைப் படர்க்கைக்கு ஆக்கிவிட்டார், அவ்வளவுதான். அதைவிட வேடிக்கை என்னவென்றால், 'ஒதுக்கிய பங்கே செலவிடப்படவில்லை' என்று கூறுவது தங்கள் ஆட்சியின் அழகை-நிருவாகக் கோளாறை தாங்களாகவே ஒத்துக் கொள்வதாகும் என்பதையும் மறந்துவிட்டார்!

தெளிவாக விளங்குகிறதல்லவா இப்போது; தென்னாடு எந்த அளவுக்கு புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்பதும், அமைச்சர்கள் அதை எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கின்றார்கள் என்பதும்!

பங்கு குறைவுதான்; ஆனால், மகன் மந்தமல்ல என்கிறார் ஒரு நண்பர். பிள்ளை கேட்டான் — தந்தைதான் தரவில்லை. வாதத்துக்காக இதை ஒப்புக்கொள்வோம். ஓரவஞ்சனை என்பதைப் பிள்ளை ஏன் உடனே உலகுக்கு அறிவித்துத் தனக்கு உரிய பங்கைப் பெற்றிருக்கக் கூடாது? அதுதான் போகட்டும் — தனக்குக் கொடுத்த பங்கை முழு அளவில் செயல்படுத்தி வெற்றி காணத் தவறியதேன்? அதற்கென்ன பொருள்?

—"இளந்தமிழன்"

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர்: ம. கண்ணன்.

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6 | சேலம் 17-8-56. வள்ளுவராண்டு 1987. ஆவணி 2. | இதழ் 6.


**உரிய இடம்.**

உழைப்பாளிகளிடம் உள்ள தொழில்திறமை—கைவண்ணம் — அவர்கட்கு, சமுகத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தருவதில்லை. "ஜாதிமுறை" தான், அவர்களுக்கு இன்னதுதான் இடம் என்று நிர்ணயிக்கிறது.

— அண்ணா

## வேண்டுமென்றே மீறவில்லை; வேதனை விளைத்தார்கள்! பலாத்காரமில்லை; ஆனால், பதைக்கச்சுட்டது போலீஸ்!

சேலம் தம்மம்பட்டியில், சென்ற ஃபிப்ரவரி 20-ல் நடந்த சர்வகட்சி அர்த்தாலின்போது அடக்குமுறைக் கொடுமை தாண்டவமாடிற்று. துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. பலபேர் படுகாயமுற்றனர். இருபத்தைந்து தோழர்கள்மீது போலீஸ் வழக்குத் தொடுத்திருந்தது. அதில் மூவர் மட்டுமே குற்றவாளிகள் எனக் கண்டு மற்றவர்கள் அனைவரையும் விடுதலை செய்துவிட்டார் நீதிபதி.

குற்றவாளிகள் எனப்பட்ட மூவருக்கும் அவர்கள் செய்துள்ள குற்றம் வெறும் கீழ்ப்படியாமை "டெக்னிக்கல்" குற்றமே எனக்கூறி நீதிமன்றம் கலையுமவரை தண்டித்துளார். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தோழர் இராமலிங்கம் துப்பாக்கிக் குண்டடிக்குப் பலியாகி, ஆறு மாதங்களாகியும் குணமடையாமல் சேலம் மருத்துவ மனையிலேயே இருந்து வருவதால், அவர்மீதுள்ள வழக்குமட்டும் இன்னும் முடிவு செய்யப்படாமல் இருந்து வருகிறது.

இவ்வழக்கை விசாரித்த ஆத்தூர் சப் மாஜிஸ்திரேட் அவர்கள், தமது தீர்ப்பில் குறிப்பிடுவதாவது:

ஆலோசனைக்குரிய அம்சங்கள் யாதெனில்:- "ஏற்கனவே தெளிவாக அறிவிக்கப்பட்டிருந்த தடை உத்தரவைமீறும் நினைப்புடன் சட்டவிரோதமாகக் கூடி இருந்தார்களா?

"முதல் குற்றவாளியிலிருந்து நான்காவது குற்றவாளிவரை கலைந்து போகும்படி சொன்ன பிறகும் கலைந்து செல்லாது சட்ட விரோதமான கூட்டத்தில் இருந்தார்களா?

"சென்னை போலீஸ் சட்டத்தின் 30-வது பிரிவின் கீழ் நாமக்கல் டிப்டி-சூப்பரின்டென்டால் பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை, தம்மம்பட்டியில், தண்டோரா மூலம் விளக்கமாக அறிவிக்கப்பட்டிருந்தது என்பது போலீஸ் சார்பில் சாட்சியம் கூறிய முதல்—எட்டாவது சாட்சிகள்மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நாம், அதை நம்பாமல் இருப்பதற்குக் காரணம் எதுவுமில்லை மேலும், எட்டாவது சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்யவுமில்லை 'முன் அனுமதி பெறாமல் கூட்டமோ, ஊர்வலமோ நடத்தக்கூடாது' எனப் போடப்பட்டிருந்தத் தடை உத்தரவு, கிராமத்தில் விரிவாக விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது என்பது இதனால் தெளிவாகத் தெரியவருகிறது.

"20—2—56-ல் கூட்டம் நடத்துவதற்கும் ஊர்வலம் செய்வதற்கும் தம்மம்பட்டியைச் சேர்ந்த சத்தியநாராயணன் என்பவருக்கு அளிக்கப்பட்டிருந்த அனுமதிச்சீட்டை, பதின்மூன்றாவது சான்றாக போலீஸ் சார்பு பத்தாவது சாட்சி இங்கு கொடுத்துள்ளது. உத்தேசிக்கப்பட்ட முதல்—ஐந்தாவது குற்றவாளிகள், தங்கள் தலைவர்கள் மூலம் அனுமதி பெற்றிருப்பதாகக் கூறி உள்ளார்கள். அவ்வனுமதியை வைத்திருந்த சத்தியநாராயணன் அந்த அனுமதியுடன் காலை ஒன்பது மணியிலிருந்து சிறை அறைக்குள் மூடப்பட்டு இருந்திருக்கிறார். இவ்வகையில் பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாமல் அவர் (சத்தியநாராயணன்) தடுக்கப்பட்டு இருக்கிறார்.

"சத்தியநாராயணன் மூலம் அனுமதி கோரப்பட்டு பெறப்பட்டு இருந்தும், சத்தியநாராயணன் பெறப்பட்ட அனுமதி

[8-ம் பக்கம் பார்க்க]

சிறுகதை

# பேராண்மை.

சி. என். நாச்சியப்பன்.

தமிழ்நாடு உலகோடு சமமாக நின்ற காலம். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழித்தோங்கும் கோலம். ஞாலமே நம் தாயகத்தைக் கண்டு வாய் பிளந்து நின்றது, அன்று!

ஒரு கற்பனை நாடு...வீராசபுரம்! வீரர்களும், அவர்களுக்குரிய அரசனும் வாழ்ந்தபுரம் அது.

வீராசபுரத்தின் வீதிகளிலே ஒரு நாள், வெள்ளம்போல் தமிழர் கூட்டம் பொங்கி வழிந்தது. தங்கு தடையின்றித் தெருவிலே போகமுடியாத நிலை. காரணம், பக்கம் வந்து விட்டதாம் நாட்டிற்கு—படையெடுத்து வருகிறான் எதிரி...அதனால் மக்கள் உள்ளமெல்லாம் மாபெரும் உணர்ச்சி—தோள்கள் வீங்கின—வாள்கள் ஏங்கின, இரத்தப் பசியால். வேல்களைத் தாங்கி நின்ற வீரர்கள், வேல்விழி மாதரையும் மறந்து, பாசம் நேசமெல்லாம் துறந்து படை வரிசையிலே முன்னணியிலே நின்றனர்.

எதிரிநாடு, பெயர் ஞால சிங்கபுரம்.

அந்நாட்டு சேனாதிபதி—வீரன்—ஆனாலும் பெரும் மூர்க்கன்...அவனை இதுவரை வென்றவர்களே கிடையாது... தொடுத்த போரிலெல்லாம் அவனுக்கு எடுத்தவுடன் வெற்றிகிட்டும். ஆனாலும் அகம்பாவி...அநியாயமாக பிறநாட்டின்மேல் படையெடுப்பதுதான் அவனது பழக்கம் தன்னுடைய வெற்றிப் பிரதாபத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காகவே அவன் இவ்வாறு செய்வது வழக்கம்' அதோடு அவன், மேலும் ஒரு சவால் விடுத்திருந்தான்...என்னை யாராலும் வெல்லமுடியுமா? உயிரைக் கொல்லவும் முடியுமா; என்பதுதான் அது. அவன் பெயர் அக்கிரம சிங்கன்!

வீராசபுரத்தாருக்கு இந்தச் செய்தியெல்லாம் முழுதும் தெரியும். அந்த நாட்டு வீரர்கள் அனைவரும், இந்தப் போர் அக்கிரமசிங்கனை வென்று' அவன் அகம்பாவத்தை அடக்குவதற்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகவே கருதினர். போர் முரசம் கொட்டப்பட்டதும் அத்தனை வீரர்களும் சேர்ந்து தளபதியிடம் பேசினர், இதுபற்றி. வீராசபுரத்துத் தளபதி, உயர்ந்த வீரன்—நற்குண நற்செய்கைகளுடையவன். சுருக்கமாகச் சொன்னால், முழு வீரன்—மானமுள்ள தமிழன். பெயர் அன்புச் சிங்கம்!

அன்புச் சிங்கம் இந்தச் செய்தியைக் கேட்டதும் புன்னகை புரிந்தான். வாயொன்றும் பேசவில்லை. சில சந்தர்ப்பங்களில் மொழிவழியாக வெளிப்படும் உணர்ச்சிகளைக் காட்டிலும்—புலன் வழியாக வெளிப்படும் உள்ளுணர்ச்சிகளுக்கு அதிக மதிப்பு இருக்கத்தான் செய்கிறது!

* * *

புலிகள் போர்க்களத்தில் பாய்ந்தன...எலியென இருந்த கோழைகள் குப்புறச் சாய்ந்தன...வாள்கள் மின்னின—வேல்கள் ஒன்றையொன்று பின்னின கண்ணைப்பறித்தன, கத்தியும் கட்டாரியும். விண்ணைப் பிளந்தன, வேதனைக்குரல்கள். பண்ணைக்கட்டிய மென்மொழியார் தம் மார்பகத்திலே மகிழ்வோடு புரண்ட தலைகள், பல மைல்களுக்கப்பால் கொய்தெறியப்பட்டன!

அக்கிரமசிங்கனும்—அன்புச் சிங்கனும் மோதினார்கள். இடையிலே சேதி கூடப் பேசினார்கள். அக்கிரமன் சொன்னான், 'அடா, பொடியா! மடியப் போகும் உனக்கு மமதை வேறு? மாநிலத்தில் என்னை வென்றவர் யாருமில்லை" எனக் கர்ஜித்தான்...அன்பு பதில் பேசினானென நினைக்கிறீர்களா? இல்லை. அப்பொழுதும் அந்தப் புன்னகை...அவன் பேசுவானேன்? அவனுடைய கத்திதான் பேசிக்கொண்டேயிருக்கிறதே, உள்ளத்து உறுதியை. வீசிக்கொண்டே இருந்தான், விநாடிக்கு விநாடி வேகமாக...

வெற்றி அன்பின் பக்கமே! அக்கிரமம் எங்காவது வென்றதாகச் சரித்திரம் உண்டா?... சாஸ்திரமிருக்கலாம். ஆரிய அணைப்பிலே...! ராமஜெயம் கதையிலே...!

ஞால சிங்கபுரம் தோற்றது—வீராசபுரம் வெற்றி பெற்றது...அக்கிரமசிங்கன் தப்பி ஓடினான். அன்புச் சிங்கத்தின் படைகள் சொந்த நாடு திரும்பினர்...வீராசபுரத்துப் படைகளுக்கு வெற்றியில் திருப்தியேயில்லை. அக்கிரம சிங்கனைக் கொல்லாமல் விட்டது பெருங்குற்றம்—வீரத்திற்கு இழுக்கு, என்றெல்லாம் வாதிட்டனர், அன்புச் சிங்கத்திடம். அப்பொழுதும் அவன் தந்த பதில், அதே புன்னகை!

வீராசபுரத்திற்குத் திரும்பும் வழியிலே ஒரு பெருங்காடு நல்ல இருள்... தனிமனிதன் மட்டுமாயின் மருள் ஒன்றிலேயே மாண்டு போவான். அன்புச் சிங்கனின் படைகள் கூடாரமிட்டுத் தங்கின...குடித்து மகிழ்ந்து குதூகலித்தன—ஆடின—பாடின—அகமகிழ்ந்து அங்குமிங்கும் ஓடின—வெற்றிக் களிப்பு—சுற்றி நின்ற பகைமையைத் 'தூ' வெனத் தள்ளிவிட்ட எக்காளம் அவர்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து கிடந்தனர்.

அன்புச் சிங்கம் ஒதுங்கிப் போனான், ஒரு பாறையோரம் சென்று படுத்துக் கொண்டான். பெருமூச்சு விட்டான்—சிந்திக்க ஆரம்பித்தான்—எப்பொழுதுமே அவனுக்குத் தனிமையிலே கொஞ்சம் இனிமையுண்டு.

அக்கிரமசிங்கத்தைக் கொல்வது சரிதானா? என்பதுதான் அவனது சிந்தனைக்குக் கருவூலம்.

அன்புச் சிங்கத்தால் இன்னும் முடிந்த முடிவிற்கு வரமுடியவில்லை. மேலும் அவன் உள்ளம் கொஞ்சம் குழம்பிப் போயிருந்தது. சிந்தனைக்குத் தெளிவுப் பாதை ராஜபாட்டையைப் போல, குழப்பத்திற்குப் பின்புதான் தெளிவும் ஏற்படுகிறது! கண்ணை நன்றாக மூடிக்கொண்டான்.

திடீரென ஒரு பயங்கரமான குரல். சப்த நாடியும் ஒடுங்கிவிடும் போலிருந்

[7-ம் பக்கம் பார்க்க]

# எதிரொலி

வடநாட்டானையும் ஆரியனையும் எதிர்த்து நிற்பதென்றால் காங்கிரஸ்காரராலோ மற்றக் கட்சிகளாலோ முடியாது.

—விடுதலை.

அப்படிப்பட்ட முடியாத பஞ்சைகளை ஆதரித்து, அரியாசனத்தில் ஏற்றி வைக்க எங்களால் மட்டுமே முடியும் என்கிறாரோ விடுதலையார்?

* * *

பொதுத் தேர்தலில் பெண்களின் ஆதரவைப் பெற, விசேஷ முயற்சி செய்ய காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்திருக்கிறது.

—செய்தி

அரசியல் ஞானமற்றவர்கள் பெண்கள்; அவர்களைத்தான் எளிதில் ஏமாற்ற முடியும் என்று நம்புகிறார்கள் போலும்!

* * *

மராட்டியர்-குஜராத்திகள் கூட்டு மாகாணம், புதிய திட்டத்தை டெல்லி சர்க்கார் ஏற்றது.

—செய்தி.

சர்க்கார் ஏற்றிருக்கலாம்! மக்கள் ஏற்கவில்லையே! துப்பாக்கி வேட்டுச் சப்தம் காதைத் துளைக்கிறதே!

* * *

காங்கிரஸ்காரரின் கதர்க்குல்லாய்களை குஜராத்திகள் பிடுங்கி நடுத்தெருவில் தீவைத்துப் பொசுக்கினார்கள்.

—செய்தி.

குல்லாய்களுக்கே குல்லாய்கள்மேல் வெறுப்பு மூண்டதென்றால் வேதனை எவ்வளவு மிகுத்திருக்கும்?

* * *

பள்ளிக்கூடங்களில் மதபோதனை வகுப்புகள் நடத்த சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

—மந்திரி பக்தவத்சலம்

பலே! பொய், திருடு, கொலை, கொள்ளை, விபசாரம் முதலிய தெய்வீகக் குணங்களை இளம் வயதிலேயே எளிதாகக் கற்கலாம் சிறுவர்; சிறுமியர்கள்!

# சேலத்திலே அலுமினியம், செழிப்பதோ வடநாடு!

ஆகஸ்ட் 12-ம் நாள், புதுடெல்லி செய்தியொன்று கூறுகிறது:

"ஆண்டுக்கு சுமார் 10,000 டன்கள் உற்பத்தியுள்ள 3 அலுமினியத் தொழிற்சாலைகள் சென்னை, ஒரிசா மாநிலங்களில் ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னை மாநிலத்தில், சேலம்-மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவப்படும்; இது, சர்க்கார் பொதுத் துறையில் ஏற்படுத்தப்படுமாம்; இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் தொழில்-வர்த்தக இலாகா ஒரு அமெரிக்க நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறதாம்; இதற்கு 10 முதல் 12 கோடி ரூபாய்வரையில் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது; இதற்கான மின்சாரத்தை பெரியாறு நிலையத்திலிருந்து நியாயமான விலையில் தருவதாக இந்திய சர்க்காருக்குச் சென்னை சர்க்கார் வாக்களித்துள்ளது."

இந்தச் செய்தியாவது— உத்தேசத் திட்டமாவது—மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறதா? ஒரிசா மாநிலத்தில் நிறுவப்படும் தொழிற்சாலை, அந்த மாநிலத்தவர் பொறுப்பிலேயே நடைபெறும்! சேலத்தில் நிறுவப்படும் தொழிற்சாலையில் இங்கு யாருக்கும் பொறுப்பில்லை! சென்னை சர்க்கார் என்ன செய்கிறது?

அமெரிக்கரின் கூட்டுறவோடு, இந்திய சர்க்காரின் நேரடியான பார்வையில் நடைபெறும் இந்த அலுமினியத் தொழிற்சாலைக்கு, சென்னை சர்க்கார் உதவிமட்டுமே செய்வார்களாம்! அப்படியென்றால் என்ன பொருள்?

ஒரிசா அலுமினியத் தொழிற்சாலையின் நிர்வாகம், நடப்பு, இலாப நட்டம் யாவும் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவை. சென்னை அலுமினியத் தொழிற்சாலையின் நிர்வாகம், பொறுப்பு, நடப்பு, வளம் வாய்ப்பு எல்லாம் டெல்லி அதிகாரபீடத்தைச் சேர்ந்தவை! எப்படியிருக்கிறது உத்தேசம்?

"வடக்கை வளப்படுத்த வடவர் ஏகாதிபத்தியம் முயலுகின்றது; தெற்கைத் தேய வைப்பதோடு விடவில்லை; சுரண்டவும் முயலுகிறது" என்று எடுத்துக் காட்டினால் எரிந்து விழும் காங்கிரஸ் தோழனே! இதற்கு என்ன பொருள்? நீதான் சொல்லேன்!

—பகணன்.



## சேலத்தில் அண்ணா.

சிறப்புக் கூட்டம்.

20-8-56 திங்கள் காலை 10-மணிக்கு
சேலம் அம்பிகா டாக்கீசில்
**அறிஞர் அண்ணா,**
என். வி. நடராசன் பேசுவார்கள்.

நன்கொடை ரூ. 1—0—0, 0—8—0, பெண்கள் 0—4—0

இ. ஆர். கிருஷ்ணன், செயலாளர்,
நகர தி. மு. கழகம், சேலம்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 17—8—56 | இதழ் 6

## அரசாங்கம் நீதி வழங்குமா?

அரசாங்கப் புனரமைப்புச் சட்டம், அதன் விளைவான செயல்முறைகளில், தமிழகத்திற்குப் பெருந்தீங்கு இழைக்கப்பட்டது. தமிழனுக்குரிய நிலம்—எல்லை பறிபோயிற்று; தட்சிணப் பிரதேசம் என்ற சதித்திட்டம் உருவாயிற்று; தமிழ் மண்ணிற்குத் "தமிழ் நாடு"என்று பெயரிடவும் மறுக்கப்பட்டது. இவற்றை எதிர்த்து மக்கள் உரிமைக் குரல் எழுப்பினர்; ஆளவந்தோர் பொருட்படுத்தவில்லை. சதிக்கு உடந்தையான காங்கிரஸ் தவிர, சகல கட்சிகளும் தமிழகப் பிரச்சினையிலே ஒன்றுபட்டன. எழுந்தது ஃபிப்ரவரி 20 வேலை நிறுத்தம்—ஆர்த்தால்.

தமிழ்நாடுமுழுமையும் வெற்றிகரமாக நடைபெற்றது வேலைநிறுத்தம். குடியரசிலே மக்கள் பெற்றுள்ள உரிமைக்குக் களங்கம் ஏற்படாத வகையில் எங்கும் அமைதியாக ஆர்த்தாலை நடத்திக் காட்டினர். எனினும், போலீஸ்காரர்களின் வெறித்தனமான செயல்கள் சில இடங்களிலே பெரும் வேதனைகளை விளைவித்தன; அவசியமற்ற—நியாயமற்ற அடக்குமுறை தர்பார் நடைபெற்றது. மக்களின் உரிமையைப் பறித்திடும் அத்தகு கொடுமைகளில் ஒன்று—முக்கியமானது—தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகம்!

ஜனநாயக ஆட்சியிலே, ஆளவந்தார்களால் மக்களின் குரல் மதிக்கப்படாத நேரத்திலே, கிளர்ச்சிகள் தோன்றுவது இயற்கை. அச்சமயங்களிலே அமைதி காப்பதுதான் போலீசின் கடமையாக இருக்கவேண்டுமேயொழிய, அமைதி குலைப்பதன்று. தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகத்தில் போலீசின் முரட்டுத்தனமான நடவடிக்கை; கடமை மறந்த செயல்; கண்டிக்கத் தக்க நிகழ்ச்சியாகும்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறியர்களிடம் பணியாற்றிய போலீஸ் புலிகள், சுதந்திரம் கோரிப் போராடிய காங்கிரஸ்காரர்பால் நீட்டிய துப்பாக்கி முனையை இன்னும் அப்படியே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது தம்மம்பட்டி போலீசின் போக்கு. இது காங்கிரஸ் ஆட்சியினர்க்குக் கேவலம் என்பதோடு, ஜனநாயக முறைகளுக்கும் இழுக்குத் தருவதாகும்.

தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோக வழக்கை விசாரித்த ஆத்தூர் நீதிபதி அவர்கள், தமது தீர்ப்பில் போலீசின் தவறான நடத்தையினை நன்கு விளக்கியுள்ளார். "ஊர்வலத்திற்குப் பெற்றிருந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாமல் தடுக்கப்பட்டது" "விதிக்கப்பட்டிருந்த தடையை வேண்டுமென்றே மக்கள் மீறவில்லை" "பலாத்கார உணர்ச்சியுடன் மக்கள் நடந்துகொள்ளவில்லை, போலீஸ்மீது கல் எறியவில்லை" "மக்கள் கலகஉணர்ச்சியின்றி அமைதியாக இருந்து வந்தனர். எந்தவித முழக்கத்தையும் அவர்கள் முழங்கவில்லை" "வேண்டுமென்றே ஊர்வலத்தினர் தடையை மீறவில்லை" "அவர்கள்ஒன்றுகூடியிருந்ததும் சட்டவிரோதமான கூட்டமில்லை" இவ்வளவும் அவரது தீர்ப்பிலே இடம் பெற்றுள்ளன.

இவ்வளவு அமைதியாக—நேர்மையாக நடத்தப்பட்ட ஒரு கிளர்ச்சியை அடக்கிட, ஆணவ வெறிகொண்ட போலீஸ் மக்களை துப்பாக்கியால் சுட்டுத்தள்ள முனைந்ததென்றால், அது எத்தகைய கொடுமை, எத்தகைய மிருகத்தனமான செயல் என்பதை நாட்டின் எதிர்கால நன்மையிலே கருத்துள்ள அறிஞர்களும், நீதி பரிபாலிக்கும் பொறுப்பிலுள்ள ஆட்சியினரும் சிந்தித்தல் வேண்டும். இதுபோன்ற கொடுஞ் செயல்கள் இனியும் நிகழ்தல்கூடாது. எனவே, இந்த அக்ரமத்திற்கு வித்தான போலீஸ் அதிகாரியின்மேல் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். பாதிக்கப்பட்டோர்க்கு நீதி வழங்கவேண்டும்; செய்வார்களா? ●

## தி. மு. க. பொதுக்கூட்டம்.

20—8—56 திங்கட்கிழமை மாலை 7-மணிக்கு கொளத்தூர் சூளை மைதானத்தில் நடைபெறும்.

தலைமை: தோழர், கே. பி. நரசிம்மன்.

பேசுபவர்: அறிஞர், சி.என். அண்ணாதுரை

கே. குருசாமி,
செயலாளர், தி. மு. கழகம், கொளத்தூர்.

<u>கருத்துரை.</u>

## கலைக்கோயில்.

மதுரையினின்றும் திங்களுக்கு இருமுறை மலருகின்ற சிறந்த கலை இலக்கிய ஏடு! சிறுகதை, குறள் விளக்கம், இலக்கிய—கலை விமர்சனம், சிந்தனைக் கட்டுரைகள் மனம் கவருகின்றன, மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர் மிகப் பயனுள்ள படைப்பு. தோழர். ரவி, சரோஜா திரவியம் கட்டித்தரும் கலைக்கோயிலில் தமிழ் மணக்கிறது. தமிழ்ப்பண்பு மணக்கிறது; அன்பு மணக்கிறது; அறிவும் மணக்கிறது! படிக்கவேண்டிய இதழ். தனிப்படி 0—2—0. ஆண்டுக்கு 3—0—0.

**அலுவலகம்:** 27-சப்பாணி கோயில் தெரு. வடக்குமாசி வீதி, மதுரை.

## மலர்.

செந்தமிழ் இலக்கியப் பொன்னேடு. தமிழறிஞர்கள் மு. வரதராசனர், ஓ. இரா. கிருட்டினசாமி, ம. கி. சண்முகம். மு. ஆரோக்கியசாமி, புலவர் அ. சு, வே. கபிலன் போன்றூர்களை ஆசிரியக் குழுவினராகப் பெற்று திங்கள்தோறும் வெளிவரும் நல்லிதழ். சங்ககால இலக்கிய மணமும் தமிழுருமையும் பரப்பும் இனிய மலர். பதிப்பாசிரியர் கோ. செயராமன், மலரின் விலை 0—4—0 ஆண்டுக்கு 3—0—0

**அலுவலகம்:** தனம் பதிப்பகம், 5 ஆண்டியப்ப கிராமணி தெரு. சென்னை–13.


# பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு,முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.


# உப்பு மிஞ்சினல் தண்ணீர்; தண்ணீர் மிஞ்சினல் உப்பு!

**தம்பி:-** அண்ணு! குடியரசுத்தலைவர் ராஜேந்திரப் பிரசாத் 9-ம் ஆண்டு சுதந்திர விழாவைத் தென்னாட்டில் கொண்டாடினரே! காமராஜருக்கு எவ்வளவு பெருமை! எவ்வளவு மதிப்பு!

**அண்ணன்:-** பெருமை, இதுமட்டுமா? இன்னும் வரப்போகிறதடா தம்பி! "ஹோலி" பண்டிகையை தமிழ்நாட்டிலே கொண்டாடி, காமராஜரையும், அவரைத் தாங்கி நிற்போரையும் மகிழவைக்கப் போகிறார்களாம் வடவர்கள்! தெரியுமா!

**தம்பி:-** அது என்ன அண்ணு "ஹோலி"ப் பண்டிகை?

**அண்ணன்:-** அதுதானடா, இராவணன், இந்திரசித்தன், கும்பகர்ணனைப்போல் பொம்மைகள் செய்து, நெருப்பிலிட்டு எரித்து மகிழ்வது! அதற்கப்புறம் வடநாடு தென்னுடு என்ற வேற்றுமையே இருக்காது பாரேன்! இருக்காது!

**தம்பி:-** ஏனண்ணு! இதைக் காமராஜர் வரவேற்கலாம். களிப்படையலாம், சிரிக்கலாம்! அவரைத் தாங்கும் தன்மானத்தார்கள் என்ன நினைப்பார்கள்?

**அண்ணன்:-** நினைப்பதையெல்லாம் சொன்னால், சொல்லுவதையெல்லாம் செய்தால் நன்ருயிருக்குமா? நடக்குமா காரியம்? உப்பு மிஞ்சினல் தண்ணீர்; தண்ணீர் மிஞ்சினல்உப்பு! கலந்துகொள்ள வேண்டியதுதான்!

—வாலி.


பொதுச்செயலாளர் பொத்தனூர் வருகை.

20—8—56 திங்கள் மாலை 6-மணிக்கு திரு வி. க. திடலில் பொதுக்கூட்டம்.

தலைமை: தோழர், வி. காளியப்பன் B. A; B. L.

**நாவலர் இரா. நெடுஞ்செழியன் M. A.**

வி. சிவப்பிரகாசம் B. A; B. L. பேசுவார்கள்.

தி. மு. கழகம் பொத்தனூர் — மலை. சகந்நாதன், செயலாளர்.



திருமண அழைப்பு.

அன்புடையீர்! நாளது 19-8-56 ஞாயிறு காலை 9-மணி அளவில்

என் மகன் செல்வன்: காங்கயனுக்கும்

பேளுக்குறிச்சி மிட்டாதார் திரு V. சுப்பராயனுர் அவர்களின் மகள் செல்வி: மங்களம்மாளுக்கும்

என் இல்லத்தில் அறிஞர் C. N. அண்ணுதுரை அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும். வருகைதர வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

பேளுக்குறிச்சி. — G. P. சோமசுந்தரம்.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● மா. அரங்கசாமி,
15/81, திருமால் வீதி,
கோயமுத்தூர்.

பா. நடராசன், கோவை

கே: கல்வியில் பெரியவர் கம்பரா? வள்ளுவரா?

ப: சுவையூறச் சொல்லுவதில் கம்பர் பெரியவர்! அறிவூறச் சொல்லுவதில் வள்ளுவர் பெரியவர்!

* * *

கே: திரு விநோபாஜியைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: பகவத் கீதைப் பிரியர்; திருக்குறளின் பகைவர்! முற்போக்கு சமதர்மம் பேசும் பார்ப்பனர்; புத்துலகப் புரட்சியின் பகைவர்!

● இரா. பரமசிவம், காரமடை.

கே: "ஒற்றைப் பார்ப்பானைப் பார்த்துவிட்டுப் போனால் ஒரு காரியமும் ஆகாது" என்று ஆரியர்கள் சொல்லி வைத்ததன் நோக்கமென்ன?

ப: "அவாள்" சொன்னதல்ல இப்பழமொழி. ஆரியர் பண்பினை வெறுத்த திராவிட மூதியவர்களின் வேதனையிலே வெடித்தது; விஞ்ஞானம் ஏற்காதது!

* * *

கே: சாதியை ஒழிக்க வேண்டும் என்று கூறும் காங்கிரஸ்காரர்கள், பூணூல் கல்யாணத்திற்குத் தலைமை தாங்குவதேன்?

ப: ஐயோ பாவம்! சாதிப் பிரிவினைக்கு அடிப்படையே பூணூல் என்பதை அறிந்து கொள்ளாத அப்பாவிகள் என்று மக்களை நம்பச் செய்கிறார்கள்!

ஆ. பழ. குமரப்பன், வேகுப்பட்டி.

கே: நம்மாநிலத்தில், தமிழ்மொழி ஆட்சிமொழியாகுமென்று கவர்னர் கூறுகிறார்; புகைவண்டி, அஞ்சல் துறைகளில் இந்தி படித்தவர்களுக்குத்தான் உத்தியோகம் என்று டெல்லி கூறுகின்றது. இது எதைக் குறிக்கிறது?

ப: தமிழர்களை ஏய்க்கும் நாடகத்தில், "ஓயாமல் அடிக்கிறேன், நோகாமல் அழு" என்ற கட்டத்தை அழகாக நடிக்கும் டெல்லியாரின் நடிப்புத் திறமையைக் குறிக்கிறது!

மா. அரங்கசாமி, கோயமுத்தூர்

கே: தனித்தமிழ்ப்பாடல்கள் படத்துறைக்கு வந்தால் வெற்றியடையுமா?

ப: பாபநாசம் சிவன்களின் "முகுந்தா முராரே" காலத்தில் எழுந்த இந்த ஐயத்தை, நாராயணக்கவி, கண்ணதாசன், மருதகாசி, கல்யாணசுந்தரங்கள் முறியடித்து விட்டனரே!

* * *

● கே: பூதானத் தந்தை விநோபா, கீதைப் பேருரை எழுதக் காரணம் என்ன?

ப: புதிய கருத்துக்களை, பழைய கடவுள், மதம், புராண, இதிகாசங்களோடு இணைத்து நிலைக்கவைக்கும் எண்ணமாக இருக்கலாம்!

ச. ப. சுப்ரமணியம், சின்னகொல்லப்பட்டி.

கே. இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான யுகத்தில் கற்பனையைக் கடவுளாக்கி, மக்களை வழிபடச் செய்து உண்டுகளிப்போரை என்னவென்று அழைப்பது?

ப: மக்களின் அறிவுக் குறைவை கைமுதலாகவைத்து பக்தி வியாபாரம் செய்யும் எத்துக்கார மதப்பூசாரிகள் எனலாம் மதிப்போடு.

## கலைக்கூடம்

### தசாவதாரம்.

"உனது வணக்கத்திற்குரிய கடவுள், தூய்மையே உருவான தெய்வம் எப்படியிருக்கும், என்னவெல்லாம் செய்யும்" என்று கேட்டால்,

"மலந்தின்னும் பன்றியாக இருக்கும், மாதேவியைப் புணர்ந்து பிள்ளை தரும். சிங்கமாகவரும், சிதேவியைத் தூக்கிக் கூடிடும், ஆமையாக இருந்து, கடலைக்கடைகின்ற மத்தைத்தாங்கும். மோகினியாகவரும், பகைவருக்கு சுராபானம் கொடுக்காமல் சூதுபண்ணும், மீனாக உருவெடுக்கும், கடலுக்குள் கரைந்திடும் வேதங்களைக் காப்பாற்றும். வாமனப் பார்ப்பனனாகவரும்; வல்லவர்களை வஞ்சித்து மண்ணிலே புதைக்கும். கிருஷ்ணனாக வரும், கோபியர் பல்லாயிரவரைக் கற்புக்கோலங்கெடுக்கும். ராமனாக வரும், பெண்களின் அங்கங்களை அறுத்துக் கொலைசெய்யும்." என்று பெருமையாகச் சொல்லுவார் ரமாரமண பக்தர்!

பச்சையாக இப்படிச் சொல்லுவாரா என்று கேட்பீர்கள்; நியாயமான கேள்விதான். சொல்லமாட்டார், சொல்லவே மாட்டார்! பகவத், ஆத்மார்த்தம், அவதாரம். தார்மீகம், தேவான், அசுரான், மோட்சம், நரகம் என்ற பொருளற்ற சொற்களைப் போட்டுக் குழப்பி மகத்துவம் ததும்ப, பக்தி பிறிட்டெழ, மனம் குழையக் குழையச் சொல்லுவார்! எப்படிக் கூறினால் என்ன? விஷயம் இதுதானே?

ஒரு பக்தர் இதைக் கூறினாலாவது, "பாவம்! பகுத்தறிந்து பார்க்கமுடியாத தற்குறி" என்று அனுதாபம் கொள்ளலாம். மகாப்பெரிய கலை நிபுணர், நாடகக் கலைவேந்தர், நவாப் ராஜமாணிக்கம் மக்களைக் கூட்டிவைத்துக் கொண்டு இதை "தசாவதார" நாடகம் என்று நடத்திக் காண்பிக்கிறாரே, சேலத்தில்! அவரது அறிவு, பண்பு, அனுபவம், ஆற்றல் பற்றி என்ன நினைப்பது? எப்படிச் சொல்லுவது?

"பக்தி மிகுந்தால் புத்தியிருக்காது" என்பார்கள், அந்த இழிவு–பழிச்சொல், பக்தர்களோடு நிற்கப்படாதா? நாடகக் கலையை–நடிகர்களை–நாடக ரசிகர்களையுமா பற்றிக் கொள்ள வேண்டும்? இதுவா நவாப் ராஜமாணிக்கனாரின் அருங் கலைப்பணி?

—இந்திரசித்தன்.

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தது. சந்தேகமேயில்லை, வரிப்புலியின் சப்தம்தானது! கூடாரத்திற்குப் போய் விடலாமென எழுந்தான். அதையடுத்து ஒரு மனிதக்குரல்! ஐயோ! அம்மா! ஆ! தமிழன் குரல், தூக்கி வாரிப் போட்டது அன்புச் சிங்கத்தை. எந்தப்படை வீரனோ என்னவோ? கட்டாரியைக் கையில் பிடித்தான், வேகமாக எழுந்து குரல்வந்த திக்கில் புகுந்தான்.

புலியொன்று நிவட்டிக் கண்களைக் காட்டி வாலைச் சுருட்டி வட்டமிட்டபடி, பதுங்கியிருந்த மனிதனின்மேல் பாய எத்தனித்தது. திடீரென ஒரு யுக்தி தோன்றியது அன்பிற்கு. கட்டாரி வீச்சில் கெட்டிக்காரன்.

குறிபார்த்தான்—தவறவில்லை மீண்டும் அதே பயங்கரச் சப்தம். புலியின் கண்ணிலே இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது, பதுங்கியிருந்த மனிதன் எழுந்து திரும்பினான். அன்புச் சிங்கம் புன்னகையோடு வரவேற்றான் அவனை.

ஒருவரையொருவர் கட்டிக் கொண்டனர். அன்புச் சிங்கத்திற்கு ஆளை நன்றாகத் தெரிந்தது அவன் பதுங்கியிருக்கும் பொழுதே சிறு சந்தேகம், அணைத்துக் கொள்ளும் பொழுது அது தீர்ந்து விட்டது. ஐயமேயில்லை, அக்கிரம சிங்கன்தான்!

அவனுடைய உடல் பட, படத்து திடீரெனத் தேளைத் தீண்டியவனைப் போல ஒதுங்கிக் கொண்டான்—ஓடவும் முயிற்சித்தான், அவனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டபடியே புன்னகை புரிந்தான் அன்புச் சிங்கம்! ஆஃகா! அந்தப் புன்னகையில் தான் என்ன கவர்ச்சி! என்ன எழில்!

ஆனாலும் அக்கிரம சிங்கனின் ஐயப் பார்வை தெளியவில்லை என்பதை உணர்ந்து கொண்ட அன்பு பேச ஆரம்பித்தான். அங்கு அன்பே பேசிற்று.

கூடாரத்தில் கும்மாளமடித்த வீரர்களில் சிலர் குடல் நடுக்கம் கொண்டனர். சிலர் திக்பிரமையடைந்தனர், சிலரின் திகைப்புத் தீர வெகுநேரமாயிற்று, சிலர் செய்தியைப் புரிந்து கொண்டனர்.

பலரும் செய்த முடிவு! பாவியைக் கொன்றுவிட வேண்டும், சித்திரவதை செய்ய வேண்டும், உத்தரவு விடுங்கள், உடனே செய்து முடிக்கிறோம். அப்பொழுதுதான் வெற்றிவிழாப் பூர்த்தியாகும், என்பதுதான்.

அப்பொழுதும் அதே புன்னகைதான் அன்புச் சிங்கத்தின் பதிலாகக் கிடைத்தது அவர்களுக்கு. ஆனால் இப்பொழுது அந்தப் புன்னகையைக் கண்டு வெறுப்பே கொண்டனர், வீரர்கள்.

வீரர்களின் வெறுப்பு வந்தால் விரக்தியடைந்து—மதிப்பு வந்தால் மகிழ்ச்சியடையும் நிலையிலில்லை அவன். ஒரே கட்டளை! கடுமையானது.

"அக்கிரம சிங்கன் என் பாதுகாப்பிலே இருக்கிறார். தோற்றதால் ஏற்பட்ட நிலையுடன் நாடு திரும்ப மனமில்லாது, காடுநோக்கி நடந்தார். புலியிடமிருந்து புகலிடம் தர நான் முடிவு செய்து விட்டேன். விடியும் வரை அவர் என்னுடைய விருந்தாளி! யாரும் அவரை நெருங்கக்கூடாது, என் போன்ற இதயத்தினரைத்தவிர!"

இந்த அறிவிப்பு அன்பின் வாயிலிருந்து அனல் வேகத்தில் பிறந்தது. வீரர்கள் முகம் சுளித்து ஒதுங்கிவிட்டனர்.

மது, மாமிசம் எல்லாம் புதிய விருந்தாளிமுன் கொண்டுவந்து கொடுக்கப்பட்டது. ருசிக்க மனமில்லை அவனுக்கு. அறிவுக்குத்தான் புதிய உணவு கிடைத்து விட்டதே. மனக் குழப்பத்தோடு சோர்ந்து போயிருந்தான் அவன். அன்புச் சிங்கமும், அக்கிரம சிங்கமும் ஒரே படுக்கையில் உறங்கினர். பண்பென்னும் தேவிக்கு மட்டும் அன்று இரவு மட்டும் தூக்கமே வரவில்லை. பார்த்துக்கொண்டேயிருந்தாள். அன்பின் ஆச்சரியத்திற்குரிய செய்கைகளை தன்னை முழுதும் புரிந்து கொண்ட ஒருவனாவது இருக்கிறானே என்ற மகிழ்ச்சி அவளுக்கு!

விடிந்தது! விடைபெற்றுக்கொண்டான் அக்கிரமசிங்கன். வீரர்கள் சூழ்ந்துகொண்டனர்—விளக்கம் கேட்டனர், தலைவனை.

இதயம் தெளிய இருக்கிறது ஒரு மருந்து என்றான் அவன். எங்கே? என்றனர் வீரர்கள். இதோ, இங்கே, என்றான் அன்புச் சிங்கம்.

'பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு!'

"வீரர்களாய் மட்டும் இருந்தால் போதாது; விவேகிகளாகவும் இருக்க வேண்டும்" என்றான். ★★

TEL: Gurucures.
PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

யுடன் சிறையில் மூடப்பட்டு விட்டதால், ஊர்வலம் செய்வதற்கும், கூட்டம் நடத்துவதற்கும் குறிப்பிட்டுள்ள காலத்தை அறிந்துகொள்ள முடியாமல், 'அனுமதி பெற்றிருக்கிறோம்' என்ற உறுதிப்பாட்டில் நடந்துகொண்டுள்ளதாகக் குற்றவாளிகள் சார்பில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்க வழக்கறிஞரோ, 'சத்தியநாராயணன் மட்டுமே அனுமதியை வைதிருப்பதால், மற்ற குற்றவாளிகளுடன் அவர் ஊர்வலத்தில் வராததால், மற்ற குற்றவாளிகள் அந்த அனுமதியைப் பயன்படுத்த முடியாது' என்கிறார்.

''அந்த வாதத்தை என்னால் ஏற்க முடியவில்லை. கொடுக்கப்பட்டுள்ள அனுமதி ஒரு கட்சிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே. அல்லாது, ஒரு தனி நபருக்காகக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க வழக்கறிஞரின் கூற்று, 'ஒவ்வொரு தனி நபரும் தனித்தனியாகத் தன் பெயரில் அனுமதி பெறவேண்டும்' என்ற பொருத்தமற்ற முடிவைத் தருவதாக இருக்கிறது.

''காங்கிரஸ் கட்சி நீங்கலாக மற்ற கட்சிகள் அனைத்தும் அர்த்தாலில் கலந்துகொண்டதாகவும், ஒரு கட்சித் தலைவர் மூலமாக அனுமதி கோரப்பட்டதாகவும் போலீஸ் சார்பு இரண்டாவது சாட்சி கூறியுள்ளார். சத்தியநாராயணன், தான் பெற்ற அனுமதியுடன் சிறைக்குள் அடைக்கப்பட்டுவிட்டதால், அனுமதியில் உள்ள காலக்குறிப்பை மற்றவர்கள் தெரிந்திருக்க முடியாது; எனவே, அந்தத் தேதியில் கூட்டம் நடத்துவதற்கும் ஊர்வலம் செல்வதற்கும் தங்களுக்கு அனுமதி கிடைத்துவிட்டதாகக் குற்றவாளிகள் உணரலாயினர்.

''அனுமதியுடன் சத்தியநாராயணனை சப்-இன்ஸ்பெக்டர் தடுத்துவிட்டதின் மூலம், அனுமதியில் குறிப்பிட்டுள்ள காலத்தைப் பொதுமக்கள் தெரிந்துகொள்ளமுடியாமல் சப்-இன்ஸ்பெக்டர் செய்திருக்கிறார் என நான் முடிவாகக் கருதுகிறேன். மாலையில் ஊர்வலம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்ற நன்னம்பிக்கையின் மீதே ஊர்வலம் சென்றதாகக் குற்றவாளிகள் சார்பில் கூறப்பட்டுள்ள வாக்குமூலத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

''விதிக்கப்பட்டிருந்தத் தடையை வேண்டுமென்றே மக்கள் மீறவில்லை; தங்களுடைய தலைவர் சத்தியநாராயணனிற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற நன்னம்பிக்கையின்மீதே அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள்.

'பலாத்கார உணர்ச்சியுடன் மக்கள் நடந்துகொள்ளவில்லை. போலீஸ்மீது கல் எறியவில்லை.

''போலீஸ் சார்பு ஐந்து, ஆறு, ஏழு சாட்சிகள் தங்களுடைய தோழரை விடுவிப்பதற்காகக் குருதி கொட்டுவோம் எனக் கூச்சலிட்டதாகக் கூறியுள்ளனர். போலீஸ் சார்பு பத்தாவது சாட்சியான சப்-இன்ஸ்பெக்டர், மக்கள் எழுப்பிய முழக்கம்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. குருதி கொட்டப்போவதாக மக்கள் முழக்கமிட்டது குறித்து, போலீஸ் சார்பு ஏழாவது சாட்சியான தலைமை—கான்ஸ்டபிள், அதுபற்றி சப்-இன்ஸ்பெக்டரிடம் எதுவும் கூறவில்லை எனத் தானே ஒப்புக்கொண்டும் உள்ளார். போலீஸ் சார்பு ஐந்தாவது, ஆறாவது சாட்சிகள் தங்களுடைய இ. பி. கோ. 162—பிரிவு வாக்குமூலத்தில் இரத்தம் சிந்துவது பற்றி தன்னிடம் ஒன்றும் குறிப்பிடவில்லை என சப்-இன்ஸ்பெக்டர் ஒப்புக்கொண்டுள்ளார். அம்முழக்கம் பற்றிய குறிப்பு எதுவும் முதல் குற்றப் பதிவு அறிக்கையில் இடம் பெற்றிருக்கவில்லை. இவைகளை எல்லாம் ஏற்று ஆராயும்பொழுது, இரத்தம் சிந்துவதாக முழக்கமிடப்பட்டது எனப் போலீஸ் சார்பு ஐந்து, ஆறாவது சாட்சிகளின் கூற்று, வெறும் பின் நினைப்பின் விளைவு என்றே நான் நம்புகிறேன்.''

''போலீஸ் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்தாலே கூட்டம் கலைந்துபோயிருக்கும். அன்று தம்மம்பட்டி அமைதியாகவே இருந்தது என ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. பஸ் போக்குவரத்து நடைபெற்றது; பள்ளிகள் பணியாற்றின; மக்களும் கலக உணர்ச்சியின்றி அமைதியாக இருந்துவந்தனர்; எந்தவித முழக்கத்தையும் அவர்கள் முழங்கவில்லை. அந்த நேரத்தில், ஊர்வலம் செல்ல அனுமதி கிடைத்திருக்கிறது, என்ற தவறான நன்னம்பிக்கையின்மீது அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள். இந்த உண்மைகளை எல்லாம் கருத்துள்கொண்டு தடைஉத்தரவை மீறவேண்டும் என்ற கருத்தில், வேண்டுமென்றே ஊர்வலத்தினர் தடையை மீறவில்லை என நான் முடிவிற்கு வருகிறேன், அவர்கள் ஒன்றுகூடி இருந்ததும் சட்ட விரோதமானக் கூட்டம் எனவும் கூறுவதற்கில்லை.''

கலை, யார் யார் கையிலோ அகப்பட்டுக்கொண்டு படாதபாடு படுகின்றது. அதன் உயர்ந்த தத்துவங்களை—பண்புகளை உணர்ந்தவன் எங்கோ இருக்கிறான். ஆனால், அதன் நிழலைக்கூட அறியாதவன் உலகம் செவிடு படும்படி டமாரம் அடிக்கிறான்!

—யாரோ.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

| மலர் 6 | சேலம் 24-8-56. வள்ளுவராண்டு 1987. ஆவணி 9. | இதழ் 7. |
|---|---|---|


**அநீதி!**

மராட்டியர்களும், குஜராத்திகளும் விரும்பாத போது, அவர்கள்மீது இருமொழி பம்பாய்மாகாணம் திணிக்கப்பட்டிருக்கிறது இது, இவ்விரு சமுதாயங்களுக்கும் இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாகும்!

—டாக்டர், என். பி. கரே

# குணமில்லா திட்டத்திற்கு குசலகுமாரியின் நாட்டியமாம்!
# விளம்பரத்தால் மயக்கிடும் வெத்து வேட்டுகளின் வித்தை!

எங்கோ படித்தேன். ராஜாஜிதான் எழுதியிருந்தார். சென்னை மாநிலத்திற்கு இரண்டே வழிகள்தான் உண்டாம். ஒன்று பிற மாநிலங்களோடு சேர்ந்து தட்சிணப் பிரதேசமாக அமைவது. இல்லையென்றால் டில்லியின் நேரடியான ஆட்சியின் கீழ் வருவது. என்னே தீர்க்கதரிசனம்! ராஜாஜிதாசர்கள் இதனைப் பொன்னேட்டிலே தீட்டி சட்டைப் பித்தானில் தொங்கவிட்டுக் கொள்ளட்டும். வேண்டாமென்கவில்லை. ஆனால் ஒன்று. ஆண்டால், தான் ஆளவேண்டும்; இல்லையென்றால் உலகைக் கட்டியாண்ட தமிழகம் ஒருபிடி மண்ணாக வேண்டும் என்பது தான் அந்த அவதார புருஷனின் அபிலாஷையென்றால், அவரது எண்ணம் ஈடேறுவதாக! ஆம், பச்சையாகச் சொல்கிறேன் தமிழகம் அழிந்து ஒழியட்டும், வெந்தழலில் வேகட்டும்; துயர்க்கடலில் மூழ்கட்டும். அது மறைந்த இடத்திலே மணல் தூவி ஆரியக் கொடிக் கம்பம் நாட்டுக. மானங்கெட்டு வாழ்வதைவிட மறைவது எவ்வளவோ மேல். வரலாற்றிலாவது தமிழனின் மாண்பு விளங்கும். மானம் வாழும்.

ஆரியக்கலப்பற்ற தூய திராவிட ஆட்சி என்கிறார் பெரியார்! ஐயகோ! என் அடிவயிறு பற்றுகிறது. ஆட்சியா நடக்கிறது இந்த நாட்டில்? அறிவுள்ள மனிதனாகப் பிறப்பது எத்தனை ஆபத்து பெரியார்மீது எவ்வளவோ பற்றுண்டு; பாசமும் உண்டு. ஆனாலும் உண்மை கண்டு கொதிக்கும் உதிரத்தை எங்கே கொண்டு கொட்டுவது? நேயமும் அன்பும் நெஞ்சத்தைப் பிணித்தாலும், அறிவு அதனைப் பிளக்கிறது உண்மை தெரியாதவன் கொடுத்து வைத்தவன். கவலையற்று வாழ்கிறான். கண்மூடி எதையும் பின்பற்றுகிறான். பலவற்றையும் புரிந்து கொண்டவனோ புழுங்கிச் சாகிறான்; புழுவாய்த் துடிக்கிறான்.

'பெற்றதாய்' என்னும் உரிமை கொண்டவள் கூடத் தன் சிசுவைக் கொன்றால் சட்டத்தின் பிடியிலே சிக்குகிறாள். பரவாயில்லை, என் தந்தை தானே என்னைக் கொல்ல வந்தார்; நேற்று என் தங்கை இன்று நான்' என்று எந்த மகனும் மகிழ்ச்சியால் பூரித்து நான் கண்டதில்லை. ஆனால்,

பாராள்வோன் திராவிடன்—பச்சைத் தமிழன்—என்பதற்காக தமிழினம் தன்மானமிழந்து வாழவேண்டும்!

பச்சைத் தமிழன். என் இந்தச் சொல்லை இப்படிப் பாழ்படுத்துகிறார்கள்? தமிழன் என்ற இனப்பெற்று, தமிழ்மொழி என்ற உணர்ச்சி, எழுச்சி இவற்றைக் கனவிலாவது உணரும் வாய்ப்புக்கிடைத்திருக்கிறதா இந்த நாடாள்வோருக்கு? தன் இனத்தின் அழிவிலே — தன்மானத்தின் வீழ்ச்சியிலே—தன் மொழியின் தாழ்ச்சியிலே—தமிழ்நாட்டில் ஆட்சி! தமிழனின் ஆட்சியென்று இதற்குப் பெயர்! ஆளட்டுமே ஆரியம்—மாற்றார் ஆட்சி இப்படித்தான் இருக்கும் என்றாவது ஆறுதல் அடையலாமல்லவா?

★ ★ ★

ஐந்தாண்டுத் திட்டம் என்று ஒன்று தீட்டினார்களல்லவா? வடநாட்டை வாழ்விக்க? அது வடவரை வாழ்விக்கத்தான் என்பது நம் மாநில மன்றப் பொம்

[8-ம் பக்கம் பார்க்க]

சிறுகதை.

# சகோதரக் காதல்!

வே. மதுராம்பாள்.

மனோரமா சிரித்தாள்!

"உன் அழகு, புகழ், தைரியம், படிப்பு யாவற்றையும் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால்......" அவன் குரலில் சற்று கோபம் தொனித்தது; சிறு குழந்தைகள் ஏதேனும் ஒன்றைக் கேட்டுச் சிணுங்குவதும், அது கிடைக்காவிட்டால் கோபித்துக் கொள்வதுமான செய்கைபோல் இருந்தது அவன் கோபம்.

அதை உணர்ந்த மனோரமா மீண்டும் பலமாகச் சிரித்தாள். கன்னக் குழிகள் விழ, அந்த முல்லைப் பற்களைக் காட்டிக் கலகலவென நகைப்பது என்ன அற்புதமான காட்சி! இன்றெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம் போலிருந்தது அவனுக்கு.

"உன் அழகு-சமர்த்து இவைகளை விட கள்ளம் கபடு இல்லாத அந்தச் சிரிப்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது மனோரமா" என்றான்.

"அப்படியில்லாமற்போனால் என்னைக் கைதியாக வைக்கவேண்டிய அவசியமேயிராதே" என்றாள் அவள்.

"மனோரமா! நீ என் கைதியா? என்ன தப்பான எண்ணம், என் எஜமானி அல்லவா நீ!" என்றான் மனோகரன்.

"வசமாக அகப்பட்டுக் கொண்டாய். அண்ணா! உன் எஜமானி என்ன சொல்லுகிறாள் தெரியுமா? உனக்கு அடிமையான ஒரு அழகுப் பெண்ணை மணந்து கொள்ள வேண்டும். புரிகிறதா?"

"மா! பெண்ணை அடிமையாக்கும் ந் நான்?"

"ஊஹூம்! அப்படி யார் சொன்னது! பெண்ணுக்கு அடிமையாகும் உத்தமன்! சரிதானே அண்ணா?"

அவள் அண்ணாவென்று அழைப்பதும் அவனுக்கு ஓர் இன்பமாகத்தான் இருந்தது. பிறந்தது முதல் இந்தப் பறந்த உலகத்தில் தனக்கென யாருமேயில்லாத மனோகருக்கு, அண்ணாவென்று முறைகொண்டாட ஒரு பெண் கிடைத்தது மகிழ்ச்சிக்குரியதாகவே இருந்தது.

"மனோரமா! உண்மையைச் சொல். என் மேல் உனக்கு அன்பே கிடையாதா? என்னை ஒன்றுமேயறியாத காட்டுமிராண்டி என்று நினைக்கிறாய்? எனக்கும் கொஞ்சம் பகுத்தறிவு உண்டு. உண்மையை மறைக்காமல் கூறு. என் மேல் உனக்குக் காதலேயில்லை?"

மனோரமாவின் முகம் சிவந்தது. "காதல்—காதல்—காதல்! அந்தப் புனித வார்த்தையை ஏன் இப்படி கேவலப் படுத்துகிறாய்! உன்மேல் எனக்குக் காதல் உண்டு; ஆனால், சகோதரக் காதல்! அன்புத் தமையனைக் காதலிக்கிறேன். அண்ணா! உனக்கும் பகுத்தறிவு உண்டு என்கிறாயே, பிழைப்புக்காக வேலை தேடிவந்த ஒரு பெண்ணை கூண்டிலடைத்துவைத்து மனையாளாக்கு என்று பகுத்தறிவு சொல்லுகிறது? உன்போன்ற தமிழ் வீரர்களுக்கு சுயநலமா வெறி? என்போன்ற அனாதைப் பெண்களுக்குப் புரியும் கடமையா இது? பிறமங்கையர்கள் தங்களை வலிய வந்து அடைந்தபோதும் நிராகரித்து, ஒழுக்கத்தை நிலைக்க வைப்பதன்றோ மனிதாபிமானிகளின் கடமையாக இருக்கவேண்டும்? தூயவழியில் ஒரு மனையாளை அடைய நீ முயற்சி செய் அண்ணா!"

மனோரமாவின் பேச்சு வாள்போல் தாக்கியது அவனை! உள்ளமும், உடம்பும் வலிவிழந்து கலகலத்துப் போயின! ஏதுமே பேசத் தோன்றாது மௌனம் சாதித்தான் மனோகரன். பிறகு எழுந்து வெளியே சென்றான். கதவு பூட்டப் பட்டது!

மனோகர் வீட்டிற்கு வரவில்லை. மிகுந்த துணிச்சலாக மனோரமா அங்கிருந்த மேஜை நாற்காலிகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கினாள். அதன் மேல் ஏறி, ஓட்டைப் பிரித்து வீட்டின் மேல் ஏறினாள்.

* * *

அந்திப்பொழுது. இயற்கை அன்னையின் எழில், மனதை அள்ளி விளையாடியது. சிலுசிலு வென்ற இளங்காற்று உள்ளத்தைக் கவர்ந்தது. இந்தக் குதூகலமான வேளையில் மனோகரின் மனம் அவமானத்தால் குன்றிக்கிடந்தது. என்றாலும், பிடிவாதம் ஒருபக்கம் தலைவிரித்தாடியது. மனோரமாவை விட்டுவிடுவதா? தங்கையாகவேயிரு என்றாலும் இனி ஒப்புவாளா? உலகந்தான் நம்புமா? பலவாறு எண்ணி, எண்ணி ஏங்கியது இதயம். அவன் மெதுவாக ஆற்றங்கரை நோக்கி நடந்தான்.

சற்றுத் தொலைவில் முக்காடிட்ட பெண்ணுருவமொன்று ஆற்றைநோக்கி வேகமாக நடந்தது. உற்று நோக்கினான் மனோகரன். சந்தேகப் புயல் எழுந்தது அவன் உள்ளத்தில். அதனைப் பின் தொடர்ந்தான். அவள் ஆற்றை நெருங்கினாள்; அவனும் அவளை நெருங்கிவிட்டான். ஆற்று வெள்ளத்திலே பாய்ந்தாள் அவள்; அவனும் பாய்ந்தான் அவளைக் காப்பாற்ற!

படுக்கையில் துவண்டு கிடந்தான் மனோகர். அவன் அருகில் சித்தப்பிரமை கொண்டவள்போல் உட்கார்ந்திருந்தாள் மனோரமா.

[7-ம் பக்கம் பார்க்க]


பகுத்தறிவு.
(வாரஇதழ்)
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

# எதிரொலி

தமிழ்நாடு என்ற இருளடைந்த மண்டபத்தில் பிற இனத்தார், பிறநாட்டார், பிறமொழிக்காரர் ஆகிய வவ்வால்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

—"விடுதலை"

அவற்றின் வலுவிலே வாழுகின்றவர் விழாமல் தாங்கிப் பிடிக்க கொள்கைத் துரோகிகள் இருக்கும்போது கொண்டாட்டந்தானே!

*  *  *

பெயரளவில் தமிழ்நாடு ஆகிவிட்டால் போதுமா? பிறமொழிக்காரர்கள், பிற இனத்தவர், பிறநாட்டவர் ஆகியோரின் ஆதிக்கம் ஒழிய வேண்டாமா?

—"விடுதலை"

அதெல்லாம் ஒழியக்கூடாது என்று கண்காணிப்போருக்குக் கால்பிடித்துக் கொண்டே இந்த விருப்பு வேறு! வெட்கமில்லை?

*  *  *

என்பேச்சை அமைதியாகக் கேட்க மக்கள் வருமவரை உணவை உண்ண மாட்டேன்.

—பம்பாய் மந்திரி தேசாய்

இந்தப் பரிகார நிலை—பயங்கரமானக் கேடு—சென்னை மந்திரிகளுக்கு எப்பொழுதோ?

*  *  *

இதர மொழிகளிலிருந்து சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் வளம் பெருது.

—குன்றக்குடியார்.

உண்மைதான்! தனித் தமிழில் வேண்டினுல்—பாடினுல்— தொழுதால் ஆரியக் கடவுள்களுக்குக் கண் சிவக்கிறதாமே!

*  *  *

இன்று இந்தியாவில் நடப்பது பூணூல் ஆட்சி, ஆரிய ஆட்சி, வர்ணுசிரம ஆட்சி, இந்துமத ஆட்சி, முதல்தரமான மதவெறிகொண்ட ஆட்சி.

—"விடுதலை"

ஆனல், இதைக் கவிழ்க்கும் நோக்கத்தோடு வேறு கட்சியார் சட்டசபைக்குப் போனல் காமராசர் கவிழ்ந்து விடுவார்! ஆகவே, இவைகள் நீடூழி வாழ்க! நீடூழி வாழ்க!

திறனாய்வுக் கட்டுரை

# இன்றைய இலக்கியம்.

"தமிழ்த் தும்பி"

சென்ற மாதம் 27-ம் நாளிட்ட பகுத்தறிவு இதழில் சிறுகதை இலக்கியத்தில் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களை ஆதரித்து அன்னார் படைப்புகளை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாரம், தற்காலச் சிறுகதை இலக்கியத்தின் தூதுவர்களாக உலவிக் கொண்டிருக்கும் வார—மாத ஏடுகளைப் பற்றியும், அவற்றில் எழுதுவோரின் நிலை பற்றியும் ஆராய்வோம். வார ஏடுகளைப்பற்றி எண்ணும்போது 'விகடன்' 'கல்கி' போன்ற ஏடுகளே முதலில் நினைவிற்கு வருகின்றன. காரணம், அவை சிறுகதை இலக்கியத்திற்குச் சிறப்பான தொண்டு புரிகிறது என்ற காரணத்தினலல்ல. சிறுகதைத் துறைக்குச் சிறுபான்மைத் தொண்டும், பெரும்பான்மைப் பேரழிவும் புரிந்து வருகின்ற காரணத்தினலேயே என்க. இவ்விரண்டு ஏடுகளைக் காட்டிலும் சிறப்பாக 'ஆரியபுரி' இலக்கியத்திற்குத் தொண்டாற்றுவது "தினமணி கதிர்." இம்மூன்று ஏடுகளிலும் உள்ள தலையாய குறையாக நாம் குறிப்பிடுவது, அவற்றில் வரும் சிறுகதைப் பாத்திரங்கள் பெரும்பான்மையும் பார்ப்பனராக இருத்தலும், மொழிநடையும் அவ்வகுப்பாரின் கொச்சைத் தமிழாகவும் இருத்தலுமேயாம்.

நாடகமாக இருந்தால் பாத்திரத்திற்கேற்ற 'கொச்சை மொழி உரையாடல்' பொருத்தமானதே. ஆனல், சிறுகதையில் இவை நுழைக்கப்படுவது படிப்போர் எல்லோராலேயும் வரவேற்க இயலாததொன்று. இவ் ஏடுகளில் இக்குறைபாடுகள் இருந்தும் இவை அதிகம் விற்பனையாவதற்கும், செல்வாக்குடன் விளங்குவதற்கும் காரணம் என்ன என்று சிந்தித்தல் வேண்டும். இவற்றில் பொதுவாக எல்லோராலும் விரும்பப்படும் அம்சங்கள் ஒரு சில உள்ளன. அந்த ஒருசில அம்சங்களே பெரும்பான்மையோராகிய நம்மவர் பலரை அவற்றை வாங்கத் தூண்டுகின்றன. அதோடு மட்டுமல்லாமல், பொதுவான தமிழ் நடையில் செறிவான சிறுகதைகள் புனையும் தமிழர் சிலர் அவ் ஏடுகளில் அடைக்கலமாகிவிட்டனர்!

அன்னாரின் களங்கமற்ற படைப்புக்கள்தான் இவ் ஏடுகளை வளர்க்கும் உரமாக இருக்கின்றன. எனவே, இவ் ஏடுகளை 'செல்லாக் காசாக' ஆக்கிவிடும் திறமை அவர்களிடம் உண்டு. ஆனல், மனம் வேண்டுமே! தனித்தமிழ்ப் பண்பாட்டிற்கு ஊறு செய்யும் ஏடுகளுக்குத் தாங்கள் எழுதுவதில்லை என்ற உயர்ந்த உறுதியை அன்னார் மேற்கொண்டால், இழியனம் கொண்ட ஏடுகள் நாட்டில் உலவ இயலாது.

சிறுகதைத் துறையைச் சுவையுள்ளதாக்கி, இனிய கதைகள் எழுதும் 'அகிலன்' 'சுகி' போன்றோருடைய ஆற்றல்; சிறுகதை இலக்கியத்தில் சிறுமை செய்வோரின் வளர்ச்சிக்கல்லவா பயன்படுகிறது?

(தொடரும்)


## தென்றல் வெளியீடு.

**நாடகங்கள்.**

மு. கருணாநிதியின்

ஒரே முத்தம் 1—4—0

ப. கண்ணனின்

புரட்சிப் பாடகன் 1—8—0

வீரவாலி 1—4—0

கன்னியின் சபதம் 0—8—0

மின்னொளி 0—6—0

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

*

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சங்ககிரி துர்க்கம், :: சேலம் மாவட்டம்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 24—8—56 | இதழ் 7

## விசித்திர ஜனநாயகம்!

★

இருமொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்து, வடக்கே குஜராத்திய மக்கள் பெரும் கிளர்ச்சி புரிகின்றனர். ''மொழிவழியே மாநிலம் அமைத்தல் வேண்டும், தாயகத்திலே அன்னிய மொழியினரின் ஆதிக்கம் கூடாது'' என்பதே அடிப்படை நோககம். மொழிப்பற்று வடவர்க்கும் சரி; தென்னவர்க்கும் சரி; பொதுப் பண்பு தானே! யார் மறுப்பார் இதனை?

மராட்டியர்கள் தனி மாநிலம் கேட்டனர்; குஜராத்தியர்களும் கேட்டனர்; அமைத்துத்தர ஆட்சியினரும் விரும்பினர். பம்பாய் மராட்டியருக்கா, குஜராத்தியருக்கா என்ற பிரச்சினையிலே ஆளவந்தார்க்கு ஏற்பட்ட கொள்கைக் குழப்பமும், அதிகார வெறியும் மீண்டும் இருமொழியினர்க்கு ஒரு மாநிலமாக உருவெடுத்தது! குழப்பம் அதிகரித்தது. போராட்டம் எழுந்துவிட்டது.

இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாக சொல்லப்படுகிறது. ஆட்சியில் இருப்போர் முரட்டுத்தனமாகச்சொல்லுவதையும்மக்கள் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சண்டித்தனம் செய்வதற்குப் பெயர் தான் ஜனநாயக ஆட்சியென்றால்,ஒப்புக்கொள்ளலாம். மக்களுக்காக, மக்கள் மனதறிந்து, மக்களாட்சி நடத்துகிறோம் என்று சொல்லுகிறார்களே வெட்கமில்லாமல்! எப்படி ஒப்புவது?

''என்னுடைய பேச்சைக் கேட்க மக்கள் வந்து கூடவேண்டும். அப்படி அவர்கள் வராவிடில்உண்ணாவிரதம் இருந்து உயிர் விடுவேன்'' என்று பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய்பட்டினிக்கிடக்கிறார், ஆகமதாபாத்தில்! உலக ஜனநாயக நாடுகளிலே, எங்கணும் நடைபெறாத பரிதாபகரமான நிகழ்ச்சி! எந்த அமைச்சருக்கும் நேரிடாத மானக்கேடு!

அமைச்சரின் இருமொழி மாநில ஏற்பாட்டைப் பொதுமக்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, அவரது பேச்சைக் கேட்க யாரும் வரவில்லை! மக்களின் மனம்தான் வெளிப்படையாகப் பிரதிப்பலித்து விட்டதே; இந்த நிலையில் அமைச்சர் தேசாய் உணவையா விடுவது? பதவியையல்லவா விட்டிருக்க வேண்டும்? மக்கள் குரலை மதித்து, கருத்தை மாற்றிக் கொண்டிருந்தாலும் கண்ணியமாக இருந்திருக்கும். ''அதிகாரத்தில் உள்ளவர்களின் எதேச்சாதிகார முடிவுகளை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; இல்லையேல் நான் உயிரைவிட்டுவிடுவேன்'' என்று மிரட்டுவது சண்டித்தனத்தின் விளைவா, ஜனநாயகப் பண்பா என்று கேட்கிறோம்!

வங்க—பீகார் இணைப்பு முயற்சியை மக்கள் நிராகரித்ததைக் கொண்டும்; மலையாள—தமிழ்—கன்னட மாநிலங்களை இணைத்து, தட்சிணப் பிரதேசமாக்கும் முயற்சியைத் தென்னகத்து மக்கள் எதிர்த்ததைக் கொண்டும் இந்திய அரசினர், மக்களின் கருத்தை அறிந்துகொள்ளவில்லையென்றால், அது யாருடைய தவறு? மக்கள் கருத்தினை மதித்தல்; உரிமையை வழங்கல்; பாதுகாத்தல் என்பனவற்றிற்கு என்னதான் பொருள்? எங்கே ஜனநாயகம்?

தனது பேச்சைக் கேட்க மக்கள் வரவில்லையே என்பதற்காக உண்ணாவிரதம் இருக்கிறார் அமைச்சர் மொரார்ஜி தேசாய். அதே ஆகமதாபாத்தில், தனது பேச்சைக் கேட்க விரும்பியும் மக்களிடை பேச முடியாது தடுக்கப்பட்டு, சிறைச்சாலையிலே உண்ணாவிரதம் இருக்கிறார், தோழர் ஏ. கே. கோபாலன்!

ஒருவர், மக்கள் கருத்துக்கு விரோதமாக இருமொழி மாநில ஏற்பாட்டினை பலாத்காரமாகப் புகுத்த விரும்பும் அமைச்சர்; மற்றவர், மக்கள் கருத்துக்கு ஏற்றதான ஒருமொழி மாநில ஏற்பாட்டினை விரும்பும் டெல்லி ராஜ்ய மன்ற உறுப்பினர்.

இரண்டு உண்ணாவிரதங்களும், காந்தீயம் அங்கீகரித்துள்ள போராட்ட முறைகள்தான். மக்கள் சார்பிலே ஒன்று, ஆட்சியினர் சார்பிலே ஒன்று! காந்திய வழியில் நடப்பதாகப் பறைசாற்றிடும் ஆளவந்தார்கள், அவர்தம் கூலிகள், ஏடுகள்—இதழாளர்கள் ஒன்றை ஆதரிக்கின்றனர்! மற்றொன்றை மறுக்கின்றனர்; பழிக்கின்றனர்! என்னே இந்தியக் குடியரசின் விளங்காத போக்கு! விசித்திர ஜனநாயகம்!

ØOØ

ஊரம்பலம். ஒற்றன்.

# குருக்கள்விட்ட பெருமூச்சு.

அவசரமாக ஆலமரத்தடிக்கு வந்தார் சிவன் கோயில குருக்கள். வியர்த்து வடிந்த அவரது முகத்தைக் கண்ட மணியக்காரர் "என்ன சுவாமி?" என்று கேட்டார் பதற்றத்தோடு.

"ஒழிஞ்சுது! வாழ்க்கையே ஒழிஞ்சுது!" என்றார் குருக்கள்.

"ஏனுங்க? வீடு நெருப்பிலே வெந்து போச்சா?" என்றார் மணியக்காரர்.

"அது போனாலும் பாதகமில்லியே, ஆலயத்துக்கோன்னு ஆபத்து வந்துடுத்து! என்றார் குருக்கள்.

"என்னங்க?" புரியாமல் கேட்டார் மணியக்காரர்.

"வினோபா எங்களவா, ஆனகாலே அவரோட பூதான யாத்திரையை புனித யாத்திரையா மதிச்சோம், பேசினோம், ஆதரவுகாட்டினோம். நன்றிமறந்தபாவி மனுஷன், சேலம் பாப்பாரப்பட்டியிலே பேசறப்போ "கோயில்களுக்கு நிலம் கொடுக்கறது பாவம்னு" சொல்லிட்டாரே! என்ன அக்ரமம்! அப்படின்னு, இதுவரைக்கும் கோயிலுக்கு செஞ்சவாள்ளாம் மடையன்களா? பாவிகளா? இனிமே எவன் கொடுப்பான்? கோயில்லே செல்வம் பெருகலேன்னு ஐயயோ! எங்களவா எப்படிக்காணும் வாழமுடியும்? ஆஸ்திகத்தை வளர்க்க வேண்டியவர், நாஸ்திகத்தை யோன்னு வளர்க்கறார். வைதிகத்தோட மதிப்பு மறையறதே! ஆஸ்திகம் ஒழிஞ்சுடுமே, என்றார் குருக்கள்.

"அதெல்லாம் ஒண்ணுமே வராது" என்ற குரல்கேட்டது. திரும்பினார் குருக்கள். வாத்தியார் பரமசிவம் நின்று கொண்டிருந்தார்.

"என்ன சொல்றீர்?" ஆவலோடு கேட்டார் குருக்கள். வாத்தியார் கூறினார்: "கடவுள் இல்லே, அவர் சொன்ன சாஸ்திரமில்லே, புராணமில்லேன்னு தீவிரமா பிரசாரம் செஞ்சே ஒழியாத கோயிலுங்க, பகவத்கீதையை விற்பனை செஞ்சுகிட்டு, ராமன் வேணும் ராமாயணமும் வேணும்னு சொல்லிகிட்டுத் திரியற வினோபாவாலா ஒழிஞ்சிடப் போவுது! வைதீகத்தோட மூக்குமயிர் கூட அசையாது, பயப்படாதேயும். இப்பவும் அவர் ஒங்களவாதான்! சமுதாய அவகேடுகளுக்கெல்லாம் அடிப்படையா இருக்கறது எது எதுவோ, அதெல்லாம் ஒழியனும்னு அவர் எங்கேயும் சொல்லலியே. கவனிச்சீரா?"

குருக்களின் முகம் மலர்ந்தது. 'அப்படியா? நீ மகராஜனா இருக்கணும்!" என்றார், பெருமூச்சுவிட்டவண்ணம்! குருக்களின் காதுகளிலே "ரகுபதி ராகவ ராஜாராம, பதிதபாவன சீதாராம" என்று பாடுகின்ற வினோபாபாவேயின் பஜனை ஒலித்தது! ★

வள்ளுவர் நெஞ்சம்.

# உலக வாழ்த்து.

அதிகாரம் க. பாட்டு க.

"திருக்குறள்" எல்லா நாட்டுமக்களின் வாழ்க்கைக்கும் வழிகாட்டும் ஏற்புடைய நூலாகையால், முதல் அதிகாரமாக—மக்கள் வாழ்வதற்குரிய உலகையும், வாழ்க்கைக்கு உரிய குணங்களையும் கூறும் "உலக வாழ்த்து" அமைக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் நெஞ்சப்படி முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்தல்ல, உலக வாழ்த்துத்தான் என்பதை குறள் முழுவதையும் ஊன்றி ஆய்பவர் அறிவர்.

**"அகர முதல எழுத்து எல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"**

'எல்லா எழுத்துக்களும் ஒலிவடிவிலும், அவ்வொலிவடிவைக் காட்டுவதற்கு அடையாளமாக எழுதப்பட்ட வரிவடிவிலும், அகரத்தை முதலாக உடையன. அதேபோல உலகம், தோன்றுதற்கு சூரியனைத் தனக்கு முதலாக உடையது.

விளக்கம்:

பகலவன் எனுஞ்சொல் சூரியனைக் குறிக்கும் சொல்லாகும். படலம் என்பது படம் எனவும், சடலம் என்பது சடம் எனவும் மருவியுள்ளதுபோல "பகலவன்" என்பது பகவனெனக் குறுகியுள்ளது. சூரியனுடைய தீக்கோளத்திலிருந்து சிதறிய சிறுபொறியிலிருந்தே உலகம் உண்டாகியது என்பதுவும் சிந்திக்கத் தக்கது.

—மீ சு. இளமுருகு பொற்செல்வி.


எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!

தமிழ்ச்சுவையிலே தன்னையிழந்த தார்வேந்தன்; பல்லவ மாவீரனின் வரலாற்று நாடகம். வண்ணத் தமிழோவியம்!

ஆசிரியர், ப. கண்ணன் தீட்டிய

நந்திவர்மன்.

விரைவில் "பகுத்தறிவு" இதழில் ஆரம்பமாகின்றது.


இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம், கொழும்புக் கிளை.

வரும் ஆகஸ்டு திங்கள் 26—8—56 ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணியிலிருந்து இரவு 9-மணி வரையிலும் 7-வது ஆண்டு விழா இயல், இசை, நடனத்துடன் சாகிரா கல்லூரி "வள்ளுவர் அரங்கில்" நடைபெறும்.

எம். முக்தார்,
செயலாளர்,
140, செப்பட்டாந் தெரு,
கொழும்பு.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● ஓ. எம். சுப்ரமணியன்,
பொத்தனூர் P. O.
வேலூர். சேலம் Dt.

அ. கந்தசாமி, கடலூர்.

கே: அண்ணாவுக்குப்பின் தி. மு. க; பெரியாருக்குப்பின் தி. க; நேருவுக்குப் பின் காங்கிரஸ் நிலை என்ன?

ப: தி. மு. க. வுக்கும் படை பலமுண்டு. நிலைக்கும், தி. க. வுக்கு 'மணி' பலமுண்டு, இருக்குமவரை பிழைக்கும். அகில இந்திய காங்கிரசுக்கு நேருவே கடைசித் தலைவர்!

கே. எம். ரங்கநாதன், சின்னப்பம்பட்டி.

கே: சினிமாவுக்குக் கதை, வசனம் எழுதுவோருக்கும் நடிப்போருக்கும் தேர்தலில் எப்படி வோட்டுப் போடுவது?

ப: அவர்களது படம் வெளியான தியேட்டரில் வோட்டுப் பெட்டியைத் தேடாதீர். எந்தத் தொழில் செய்வோருக்கும் சரி; பெட்டிகள் வோட்டுச் சாவடியில்தான் இருக்கும்.

* * *

கே: பார்ப்பனியம் பெரு நோயெனக் கண்டும், மேல்புண்ணுக்கு மட்டும் சிகிச்சை செய்வது ஏன்?

ப: நோயின் எத்தனை வகையுண்டோ, சிகிச்சையிலும் அத்தனை வகையுண்டு. நமக்குத் தேவை குணம்தானே?

மா. பிச்சாண்டி, திருவண்ணாமலை.

கே: "பிச்சை எடுக்குமாம் பெருமாள், அதைப்பிடுங்குமாம் அனுமார்" என்கிறார்களே, இக்காலத்தில் யாருக்குத் தகும்?

ப: பதவி பெற்ற காமராசரும், பகிர்ந்துகொண்ட சுப்ரமணியனும் அந்தப் பரம்பரைகள் தானே!

சி. தியாகராசன், சேலம்.

கே: பாம்புக் கூட்டத்தில் ஒரு நல்ல பாம்பைத் தேர்ந்தெடுத்து கீரிப்பிள்ளை கொஞ்சி விளையாடுமா?

ப: நடக்கிறதே! இனத் துரோகி காங்கிரஸ் காமராசருடன், திராவிடப் பெரியார் கொஞ்சிக் குலாவுகிறாரே!

டி. பி. பழனிசாமி, துளசம்பட்டி.

கே: அரசர்கள் உலவும் அரண்மனை வாழ்வும், ஆண்டிகள் தங்கும் அரச மரத்தடியும் ஒரே தகுதியுடையனவா?

ப: இல்லவேயில்லை. இரண்டும் ஒன்றென வேதாந்தம் பேசிடுவோர் மக்கள் எழுச்சியின் பகைவர்!

* * *

கே: சிங்கத் திருவிடத்திலே, சிறிவரும் இந்தியை அடித்து விரட்டுவது என்று?

ப: காமராசர் போன்ற அடிமைகளும், அடிமைக்கு அடிமைகளும் தன்மானம் பெறுகின்றபோது!

● ஓ. எம். சுப்ரமணியன், பொத்தனூர்.

கே: அழகு மங்கைக்கும், உங்கள் அறிவு இயக்கத்திற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

ப: இன்பம்! அழகு மங்கை ஆளனின் கண்களுக்கு இன்பம்; அறிவு இயக்கம் மக்களின் வாழ்வுக்கு இன்பம்!

* * *

கே: வினோபா தானங்களை வாங்குகிறாரே ஒழிய, யாருக்கும் வழங்குவதாகத் தெரியவில்லையே! ஏன்?

ப: வழங்குகிறார் தோழரே! வழங்குகிறார். ஒரு ரூபா பெற்றுக்கொண்டு "பகவத் கீதை"யும் வழங்குகிறார்; அதற்கு முரண்பாடான பகுத்தறிவுக் கருத்துக்களையும் கூடவே வழங்குகிறார்!

# திரைக்கூடம்

## வெற்றி வீரன்.

கதையின் ஆரம்பத்தில் கணவனே கண்கண்ட தெய்வம்தான் நினைவு வருகிறது. கதாபாத்திரங்களின் அமைப்பு அவ்வாறிருக்கிறது. பிற்பகுதியில் மர்மமாக ஒரு வீரன் வந்து போகின்றான். அது யாரென்று கதாநாயகன் உட்பட, பலருக்கும் புரியவில்லை. பிரசண்டனுக்கும், பிரதாபனுக்கும் சண்டை நிகழும் பொழுது, மனதிற்குள் ஏதோ முடிவு செய்து கொண்டவரைப் போல, தலையாட்டிவிட்டுப்போகும் அஞ்சலிதேவியைக் கூர்ந்து கவனித்தவர்களுக்கு, மர்மவீரன் யாரென்று முதலிலேயே புரிந்துவிடும். திரண்டால் இந்தப் படத்தைப் பார்த்தபின்தான் கதாநாயகிக்கு முகமூடிமாட்டும் கற்பனை உதயமாயிற்றோ, அல்லது சொந்தச் சரக்கோ, அது அவர்களுக்கே வெளிச்சம்! பிரதாபன் குகையில் படைதிரட்டி வருகினன் கூறுவதும், தீமை நிகழுமிடங்களிலெல்லாம் அம்பை எய்வதும "மர்மயோகி"யை நினைவுப் படுத்துகிறது.

ஸி. எஸ். ஆரின் நடிப்பு நன்றாக இருக்கிறது. அதையும்விட மேலான முறையிலமைந்திருக்கிறது, சக்கரவர்த்தியாக நடிக்கும் முகமூடியின் குகை மனோபாவங்கள். ராமராவ் வரும்போதெல்லாம் கத்தியுடன்தான் வருகிறார். நடிப்பதற்கு பிரமாதமான சந்தர்ப்பமொன்றுமில்லை. சண்டையிலேயே படத்தை நடித்து முடித்து விடுகிறார். அஞ்சலிதேவியின் நடிப்பு எல்லாப் படங்களையும்போல நன்றாகவேயிருக்கிறது.

பேச்சிற்குப் பின்னணி அமைத்திடும் முறை (டப்பிங்) முதல்தரம். நடிகர்களின் சொந்தக் குரலைக் கேட்கும்படியிருந்தால் நன்றாயிருக்கும். பிரதாபனின் தந்தை இறப்பது—பிரதீப்தான் பிரதாபன் என உமாதேவி அறிவதுமாகிய கட்டங்கள், உணர்ச்சியிருந்தவையாயிருக்கின்றன. உமாதேவி பிரசண்டனின் கண்ணைக் கட்டிவிட்டுப் பிரதாபனுடன் காதல் பாட்டுப்பாடி நடனமாடுவதும்—ரேலங்கியின் துப்பறியும் ராமகிளிப் பாட்டுக் காட்சியும ரசிக்கத் தகுந்தவை.

கதையில் பழமை மின்னுகிறது. புதியக் கருத்துக்களுமில்லை. வீரர்கள் வெளிவரும் தற்காலத் திரையுலகவானிலே இந்த வீரன் பெயரளவிலேயே வெற்றிவீரன்!

—சி. என். காச்சியப்பன்.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

"என்னம்மா! உன் கணவன் எப்படியிருக்கிறார்?" என்று கேட்டுக்கொண்டே தன் பூட்ஸ் கால்கள் தாளம் போட நடந்து வந்தாள் அந்த வார்டு நர்சு சாந்தா.

அவளை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள் மனோரமா. "ஏன்! உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" எனச் சீறினாள்.

ஏளனமும், கோபமும் பொங்கியெழ "டாக்டரம்மா! எனக்கு உடம்பு சுகமில்லை. கொஞ்சம் தயவுசெய்து மருத்துவம் பார்க்கவேண்டும்" என்றாள் நர்சு சாந்தா.

மனோரமாவுக்கு ஆத்திரம் பொங்கியது. "டாக்டரம்மாளாக இருந்தால் மட்டும் போதாது! பண்பட்ட இதயம் வேணும். ஒரு ஆடவன் ஒரு பெண்ணுக்கு கணவனாகத்தான் இருக்க முடியுமா? தமயனோ, தம்பியோ அல்லது வேறு எந்த முறையாகவோ இருக்க முடியாதா? அவ்வளவுக்கு அறிவு எட்டினால்தானே!" என்றாள் கடுகடுப்பாக.

நர்சு சாந்தா சிரித்தாள். "பத்தினித் தங்கை—இது நாடக மேடையல்லடியம்மா, நீ நடித்துக் காட்டுவதற்கு" என்றாள்.

அவள் கன்னத்தில் சுடச்சுட நாலு இழுக்கத் தன் கையை ஓங்கினாள் மனோரமா? ஓங்கின கையை யாரோ பலமாகப் பிடித்ததை உணர்ந்தாள். அவள் சீற்றம் அதிகரித்தது. திரும்பிப் பார்த்தாள்......"

மனோரமா தன் கண்களையே நம்பாமல், அந்தப் பாதிரியாரின் முகத்தை உற்று நோக்கினாள். நேருக்கு நேர் அவரை நோக்க அவள் விழிகள் கூசின. அன்பும் அறிவும் போட்டியிட்டுப் பிரகாசித்தன, அவர் சாந்த முகத்தில்! கையை இழுத்துக்கொண்டு நாணத்தோடு தலை குனிந்தாள்.

அந்தக் கலகத்தைத் தடுத்த பாதிரியாருக்கு சாந்தாவும் மனோரமாவும் தங்களை மறந்து வணக்கம் செலுத்தினார்கள். அவரும் அன்புகனிய இனிய குரலில் "குழந்தைகளே! இதென்ன சண்டை?" என வினவினார்.

"அறிவைப் பயன்படுத்திப் பேசத் தெரியாத மக்களுக்கு சண்டையைத் தவிர வேறு என்ன தெரியும்?" என்றாள் மனோரமா.

மனோரமாவின் பேச்சு, தைரியம், அந்த முகபாவம் யாவும் அவர் மனதை ஏதோ செய்தன. எங்கோ பார்த்த முகம் போல், மனதின் அடித்தளத்தில் அடங்கிக் கிடந்த வேதனை கிளர்ந்தெழுந்தது.

அதே சமயம் "மனோரமா! தங்கை மனோரமா!" எனக் கூவினான் படுக்கையிலிருந்த மனோகரன்.

"இதோ, இருக்கிறேன் மனோகர அண்ணா!" என்று ஓடினாள் மனோகரிடம்.

மனோகர்—மனோரமா என்ற சொல், சாமியாரின் உள்ளத்தில் மின்னல் வேகத்தில் புகுந்து தாக்கியது. தன் காணாமற்போன இரட்டைக் குழந்தைகளை ஒரேயிடத்தில் தன்னிடம் காட்டிக்கொடுத்த இயற்கையின் விநோதத்தை எண்ணி வியந்தார்! திடீரென்று வந்த அந்த ஆனந்தத்தைத் தாங்கமாட்டாது அவர் இதயம் திக்குமுக்காடியது! குழந்தைகள் இருவரும் தந்தையை அடைந்த பெருமிதத்தால், துள்ளிக்குதித்து கூத்தாடினார்கள்! ஆற்றில் மடியப்போன தங்கையை எத்தனை வீரத்துடன் கரை சேர்த்திருக்கிறான் என வியந்தார். நாலு வயதில் குழந்தைகள் காணாமற் போனதைச் சகிக்க முடியாமல் சாமியாராக மாறிய தியாகராஜன்!

★★





"வீரவாலி" தீட்டப்பட்ட போர் வாள்—திராவிடத்தின் விடுதலைப் படைக்கலன்களிலே ஒன்று! —மு. க.

★


விலை 1–4–0

★

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம், :: சேலம் மாவட்டம்.



வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

மைகளுக்கும் தெரியும். சில போது தம்மை மறந்து தம் உணர்ச்சியை அவர்களே வெளியிட்டும் இருக்கிறார்கள். அதனை மக்கள் மறந்துவிட மாட்டார்கள். தேர்தல்குழப்பம் இன்று அமைச்சர்களைத் திண்டாட வைக்கிறது. அதன் விளைவாக குடியரசு என்ற எண்ணமே அவர்களுக்குத் தோன்றவும் மறுக்கிறது நாகரீகமின்றி, நாடாளத் தந்த பணத்தால் கட்சியின் நன்மையை—பணமூட்டைகளின் செல்வாக்கு மங்காமல் இந்த மாநிலத்தில் வாழ்வதற்காகவே வாழும் காங்கிரஸின் நன்மையைக்—கருத்தில் கொண்டு செயல் புரிகிறார்கள். குடியரசுக் கொள்கையைக் கொஞ்சம் புரிந்தவனும் அருவருப்பான்; அடாத செய்கை என்று எட்டி விலகுவான். பிரசாரத்திற்கென பல திட்டங்கள் உருவாகின்றன. முதலாவது விளம்பரம். கடந்த ஒன்பது ஆண்டுகளாக இல்லாத அக்கறை இன்று ஏன்? மக்களுக்குச் செய்ததோ பூஜ்யம். மார்தட்டிப் பேசக்கூடத் திறனில்லை ஆட்சியிலுள்ள ஒருவருக்கும். காரணம்? உண்மையாகப் பேசுவதற்கு ஒன்றுமேயில்லை! புளுகலாம் என்று தொடங்கினாலும் அது கொஞ்நாளில் 'புஸ்'ஸென்று போய்விடுகிறது. இந்த நிலையில் விளம்பர இலாகாவை விரிவு படுத்தியிருக்கிறார்கள்; படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்! காங்கிரஸ் ஆளவந்தார்கள்!

மாவட்டத்திற்கு ஒரு செய்தி விளம்பர அதிகாரி. அவருக்கு ஒரு மூடு வண்டி; காங்கிரஸ் நாற்றம் வெளியிலே வீசாமல் இருப்பதற்காகவோ என்னவோ! மாவட்டமெங்கும் சுற்றி, மாநிலத்தார் செய்த நன்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதே அவருடைய பணி. இதுபோக ஒவ்வோரிடத்திலும் திட்டக் கண்காட்சி ஒன்று நடக்கும். ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளை மக்களுக்குஉடனடியாக அறிவுறுத்தியே தீரவேண்டுமாம். ஆஃகா! மக்கள்மீது இந்த மகேசுவரன்களுக்குத்தான் என்னே அன்பு! என்னே பாசம்! என்னே அருள்!

கண்காட்சி மட்டுமில்லை. நாட்டியமும் உண்டு; திட்டத்தின் சாதனைகளைக் குசலகுமாரியின் மேனியிலே நிறுத்தி, மக்கள் நெஞ்சத்திலே நுழைக்கத் திட்டமொன்று உருவாகின்றதாம். நடன நாடகமாம்! திடீரென்று இப்போது என்ன வந்துவிட்டது விளம்பர இலாகாவிற்கு?

ராஜாஜி மண்டபத்திலே ஐந்தாண்டுத் திட்டக் கண்காட்சியைத் திறந்து வைத்தார் சொல்லின் செல்வராம் சுப்ரமணியம். அவர் பேசினார்:

விளம்பரம் எதற்கு என்று அவர் முன்பெல்லாம் எண்ணியதுண்டாம். ஆனால், மேநாடுகளுக்குச் சென்ற விடத்தில்தான் அதன் இன்றியமையாமையை உணர்ந்தாராம்! இரவு நேரத்தில் ஒரு கடைத்தெருவில் நுழைந்தார்களாம். ஒவ்வொரு இடத்திலும் கண்கவர் வனப்பிலே, கண்ணாடி மறைவிலே, மின்னிடும் எண்ணற்ற பொருள்கள் காட்சியறையிலே வைக்கப்பட்டிருந்ததாம்! கண்டவர்கள் மறுநாள் காலையில் அக்கடையினைத் தேடிச்சென்று பொருளை வாங்கினால்தான சிந்தை குளிருமாம். நெஞ்சம் ஆறுதலடையுமாம். 'பார்த்தீர்களா விளம்பரத்தின் பயனை?' என்று கேட்டார்.

கொல்லென்று சிரித்தேன். பலர் என்னை நோக்கினர். அமைச்சர் பெரிதும் ஏமாந்தார். அவர்தான் சிரித்தாரேயொழிய கூட்டத்தில் வேறு யாரும் (என்னைத்தவிர) சிரித்ததாகத் தெரியவில்லை. பாவம், அங்கிருந்த பலர் காங்கிரசிலே உண்மையாக பற்றுக்கொண்டவர்போல் தோன்றியது. அவர்கள் முகத்தில் வழிந்த அசடே அதற்குச் சான்று.

அமைச்சரும் நானுமே சிரித்தோம் என்றேனே; இரண்டும் ஒன்றல்ல. விளம்பரத்தின் தேவையை அழகிய உவமை மூலம் விளக்கிவிட்டதாக அவர் நினைத்தார்; அந்த மகிழ்ச்சி அவருக்கு. காங்கிரசின் பெயரால் நாட்டை ஆளுவோர் ஒரு 'வணிகக் கூட்டம்' என்பதை இவ்வளவு பச்சையாக ஒப்புகிறாரே என்று நான் எண்ணினேன்; நகைத்தேன். 'அமைச்சர் புரிந்தோ புரியாமலோ மானத்தை இப்படி வாங்கிவிட்டாரே' என்ற எண்ணத்தில் காங்கிரசின் பிறருக்கு அசடு வழிந்தது! உவமையைப் பாருங்கள். எவ்வளவு பொருத்தம். தன் ஓட்டை உடைசல்களை, எப்படியேனும், நப்பாசை காட்டி மக்களுக்கு விற்றுக் கொழுப்பதிலேதான் முதலாளிக்குக் குறி. அதற்காக விளம்பரம் அவனுக்கு மிகவும் பயன்படுகிறது; அவன் வாழ்வு வளமடைகிறது. அதைப்போலவே நம் அரசாங்கத்திற்கும் விளம்பரம் தேவையாம்! பொருட்செலவைப்பற்றிக் கவலையில்லையாம்! அதனால் பயனுண்டாம்! யாருக்கு? ஏமாந்து பொருளை வாங்குவோனுக்கா? கடைக்காரனுக்கா? கடையிலுள்ள வேலையாளுக்கா? யாருக்கு? அதிலும் தேர்தல் வருகின்ற நேரத்திலே!

—"இளந்தமிழன்"

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர் :- ம. கண்ணன்.

**சுதந்திரம்.**

சமத்துவம் காண்பதற்குச் சுதந்திரம் ஒரு சாதனமாக இல்லாவிடில், சுதந்திரம் என்பதற்குப் பொருளே இல்லை.

—மாஜினி.

கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6 | சேலம் 31-8-56. வள்ளுவராண்டு 1987. ஆவணி 16. | இதழ் 8.


## கண்காட்சி பாரீர்! காங்கிரஸ் திட்டமிழைத்த துரோகம் பாரீர்!

## கொழுநன் அற்ற குலக்கொடியா? கொதிக்கின்றதே நெஞ்சம்!

இதை மையிலே தோய்த்தெழுதவில்லை. இரத்தத்திலே குழைத்தெழுதுகிறேன். மானமிழந்து, மதிப்பிழந்து தான் பெற்ற புதல்வனே தன்னை மிதித்து நசுக்கிப் பொசுக்கும் தாழ்ந்த தமிழகத்தைக் குறித்து வேறு எப்படித்தான் எழுதுவது?

"சென்னை சர்க்கார் என்ன செய்கிறது?" கேட்கிறது பகுத்தறிவு ஏடு. 17-8.56 இதழிலே 'சேலத்திலே அலுமினியம், செழிப்பதோ வடநாடு' என்ற செய்தியைத் தரும் பகணன் எழுப்பியுள்ள அந்த வினா—அவரது நெஞ்சக் கொதிப்பால் தெறித்துவிழுந்த பொறி. இப்படி எத்தனையோ ஆயிரம் கேள்விகள், நாட்டின் நல்வாழ்வில் நெஞ்சம் ஒன்றியவர்களால், அவ்வப்போது எழுப்பப் படுகின்றன. நடுக்கடலிலே தெப்பத்தில் தவிக்கும் நாதியற்றோன் கூவுவதுபோலவெற்றுக் குரலாகப் போகின்றது. விடையில்லை. விடையிறுக்கத் தயாராகவில்லை நாடாள்வோர்! மன்னிக்கவும், நாட்டை ஆள்வது யார்? ஆள்பவர் மீதல்லவோ பழிசுமத்த வேண்டும். கொழுநன் அற்ற குலக்கொடி; கண்டக்டர் இல்லாத கார்; கடைக்காரன் இல்லாத மளிகை—இதுதான் தமிழகம். யார் வேண்டுமானாலும் வரலாம். கற்பின் பெருமையைப் பேசிக்கொண்டே குலக்கொடியுடன் குலாவி மகிழலாம். மனங்கோணமாட்டாள், முகஞ்சுளிக்கமாட்டாள். மாறாத அன்பை அனைவர் மீதும் அள்ளிச் சொரிவாள். 'அட கண்ணறுவியே' என்று யாரேனும் சுட்டிக்காட்டிவிட்டால் வந்தது இடர். 'வகையற்றவனே — வாழ்விழந்தவனே — வெறுக்கையற்றவனே-வெறுங்கையைச் சூப்பித் திரியும் விளையாட்டுப் பிள்ளையே—என்னே கூறினை? விபரீதமடா விபரீதம்! காமராசர் உடமையடா உடமை! அவர்மீதா பழி! அடுக்குமா? நாக்கு அழுகிடுமே நச்சுவாயனே! போடா போய்ப் புழுதியிலே விளையாடு! சிறுபிள்ளைத் தனமாக உளறாதே!' என்று சீர்கெட்டுப் பேசுகிறது' தன்மான இயக்கமாக நம் தாயகத்திலே ஒருகாலத்தில் தலையெடுத்த கழகம்.

வீண்பேச்சு வேண்டாம். விளக்கந்தருகிறேன். ஐந்தாண்டுத் திட்டம் என்ற அட்டைடமாரத்தை, மூலை முடுக்கெல்லாம் அடித்து முழக்கப் போகிறது சென்னை அரசாங்கம்! எட்டுத்திக்கும் தன் வெற்றியைக் கொட்டி முழக்கப் போகிறது! ஏற்கனவே தொடங்கி விட்டது! கிடுகிடுக்கிறது. திக்கெட்டும்! கண்காட்சி வேண்டாமப்பனே கங்காச்சி! கருத்துக்குக் காட்சி கொடு.

முதல் ஐந்தாண்டுத் திட்டம்—போடப்பட்ட முதலீடு 2244 கோடி. இதில் சென்னைக்குத் தரப்பட்டது 86 கோடி. சென்னை மாநிலத்தின் மக்கள் தொகை எவ்வளவு தெரியுமா? இந்த நாட்டின் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பங்கு. இதன்படி பார்த்தால், நமக்குக் கிடைத்திருக்க வேண்டிய தொகை 224 கோடி ரூபாய். கிடைத்ததோ 86 கோடிதான்!

தவற்றிற்குப் பொறுப்பாளி யார்? மத்திய அரசா? மாநில அரசாங்கமா? இதனைப் பின்னர் விளக்குகிறேன். சாதனை

(8-ம் பக்கம் பார்க்க)

வாழ்க்கைச் சித்திரம்

# ஆறாவது நாளிலே.

எம். கே. தாயப்பன்.

ஆகஸ்ட் 21

எட்டயாபுரத்தின் சரித்திரத்திலே இரத்தக்கறை படிந்த நாள்! தமிழகம் எங்குமே நடைபெறாத—நடைபெற முடியாத நிகழ்ச்சி நடைபெற்றுவிட்டது!

கூவாதகுயில்கள்—உலகமறியா சிறிசுகளான நான்கு குழந்தைகளை கிணற்றிலே தூக்கிப்போட்டு தானும் தற்கொலைக்கு துணிந்துவிட்டான்!

குழந்தைகள் செத்தன! அவன் பிழைத்துக்கொண்டான்! செய்தி கேட்போரின் ரத்தம் உறைந்துவிடக் கூடிய சோக நிகழ்ச்சி! தான் பெற்று வளர்த்த குழந்தைகளைக் கொன்றுவிட்டானே—அவன் பைத்தியமா? இல்லை.

பெற்றவயிறு, பற்றியெரிந்தது! தங்க நிற நெல்! பொன்னைப்பழிக்கும் மண்! வற்றாத ஜீவ நதிகள்! கனிகள்தரும் மலைவளங்கள்! இத்தனையும் கொண்ட தமிழகத்திலேதான் அவன் தானும் வாழமுடியாமல் — குழந்தைகளை காப்பாற்ற முடியாமலும் திண்டாடினான்!

வாழப்பிறந்த தமிழன்—வந்தவர்களிடம் வாழ்வை அடகுவைத்துவிட்டு சுண்டைக்காய் அளவுள்ள இலங்கையிலே நாயினும் கேடாக நலிகிறான்! வதைபடுகிறான்!

ஒண்ட வந்தவனிடம் வீட்டை அடகு வைத்துவிட்டு ஓடேந்திச் செல்லும் மனிதனைப்போல் வீரப் பண்பாடிய தமிழன் சிங்களத்திலே சீரழிய—தமிழகத்திலே தற்கொலை புரிந்து சாகிறான்!

இந்த இழிகெட்ட நிலைக்கெல்லாம் மூலகாரணம்—? வறுமை—மனிதனை மிருகமாக்கிடும் பயங்கர சக்திபடைத்த சாதனம்! துள்ளிவரும் வேலை மார்பைத் திறந்து நிறுத்தலாம் ஆனல் பொல்லாத வறுமையை? எதற்கும் கலங்காத தமிழன் வறுமைக்கு அஞ்சுகிறான்! பெற்ற குழந்தைகளை இரக்கமற்ற நிலையில் கொன்ற அந்தத் தாய் சட்டப்படி குற்றவாளிதான்! ஆனல் இந்த நிகழ்ச்சி ஏன் ஏற்பட்டது! பாசமற்றவளா அவள்?

"தாய்ப்பாசம்" சொல்லாதது ஏன் பார்களே? அப்படிப்பட்ட பாசத்தையே பாழுங்கல்லாக்கிக்கொண்ட சூழ்நிலை ஏன் ஏற்பட்டது அந்தத் தாய்க்கு? மனித இதயத்தை உலுப்பும் செய்தி...

கைப்பிடித்த கணவனுக்கு வேலை இல்லை! வாழ்வதற்கும் வழியில்லை! இந்த நிலையிலே குழந்தைகள் பட்டினி! வேலையோ கிடைக்கவில்லை! கையிலே காசுமில்லை! எத்தனை நாட்களுக்கு இந்த அவல வாழ்வு? "அம்மா பசி" என்ற நிலையில் குழந்தைகள் தாயின் முகத்தைப் பார்க்க தாய் கணவனைப் பார்க்க கணவன் ஆகாயத்தில் தூங்கும் ஆண்டவனைப் பார்த்து பெருமூச்சுவிடும் நிலையாகிவிட்டது! இந்த அவல நிலையிலேயிருந்து விடுபடும் வழியை மேற்கொண்டதால்தான் அவன்—சட்டப்படி குற்றவாளி என்ற நிலைக்காகிவிட்டான்! "தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இச்ஜெகத்தினை அழித்திடுவோம்" என வீரமுழக்கம் கிளப்பிய எட்டயாபுரத்திலேதான். இந்த பயங்கர சம்பவம் நிகழ்ந்திருக்கிறது! எந்த ஒரு பாரதியை பட்டினி போட்டுக் கொன்று—அவரது மறைவுக்குப் பின் மணி மண்டபம் கட்டி மகிழ்கிறதோ, அதே அரசாங்கம் அரசோச்சும் புனித நாளிலேதான் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது!

சென்றகிழமை! ஆகஸ்ட் 15-ன் போது நாட்டு விடுதலையின் பத்தாவது ஆண்டு அவலவிழா கோலத் திருநாளாக எட்டயாபுரத்திலே கொண்டாடப்பட்டது! கிணற்றிலே துடித்துச் செத்த அந்த மூத்த பையன் கையிலே மிட்டாயுடன் வீட்டிலே நுழைந்தான்!

ஏதடா மிட்டாய் எனத் தாய்கேட்க! இன்று கொடிகட்டிய திருநாள்! பள்ளியிலே கொடுத்தார்கள் அம்மாவென அவன் மழலைமொழி சிந்தப்பேசினன்!

உவகை பொங்கிய தாய், இன்ப போதையிலே ஆழ்ந்தாள்! வீதியிலே கட்டிய தோரணங்கள்—அலங்கார வளைவுகள் இன்னும் அப்படியே காட்சியளிக்கின்றது! ஆனல், அந்த விழாவிலே அவள் மைந்தன் ஆறாவது நாளிலே வேதனையுடன் சாகடிக்கப்பட்டான்!

தாய்—மைந்தர்களைக் கொன்றாள்—தாயை அந்த இழி நிலைக்கு ஆளாக்கியது அரசாங்கம்!

"அரசாங்கமா—?" ஆத்திரமுடையவர்கள் அலறுவார்கள்! அமைதியுடன் நாம் கூறுகிறோம்! அந்த தாயின் இந்த நிலைக்கு அரசாங்கம்தான் காரணம் என்று

நல்ல இதயம்படைத்தவர்கள் யாரும் இதை மறுக்கமுடியாது! பெற்ற குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பு

[7-ம் பக்கம் பார்க்க]




வைதீகர்களுக்கும், இராமாயண பக்தர்களுக்கும் புரட்சிகரமானது; சரித்திர ஆசிரியர்களுக்கும், இராமாயண—இலக்கிய ஆராய்ச்சியாளர்களுக்கும் பெரிதும் மகிழ்ச்சிகரமானது 'வீரவாலி' நாடகம். —அறிஞர் அண்ணா.

**விலை 1-4-0**

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சங்ககிரி. :: சேலம் மாவட்டம்.

## எதிரொலி

சென்னை நெசவுக் கலாசாலை சேலத்துக்கு மாற்றப்படும்.

—செய்தி.

சென்னையிலிருப்பதுதான் சேலத்துக்கு, டெல்லியிலிருப்பதல்லவே!

* * *

நாகப்பட்டினத்தருகே, நள்ளிரவில் மோட்டாரை நிறுத்தி துணிகரக் கொள்ளை. கத்தி முனையில் பணத்தைப் பறித்தார்கள்!

—செய்தி.

சரிதான்! கபீர்தாஸ், ராமதாஸ், திருமங்கை ஆழ்வார் பரம்பரை இன்னும் அழிந்து போகவில்லை!

* * *

நம் தாய் நாட்டுக்குத் "தமிழ் நாடு" என்று பெயரிட மறுப்பது, உன் தாயின் பெயரைச் சொல்லாதே என்று தடுப்பதாகும்.

—குன்றக்குடியார்.

பாரதமாதவே என் தாய் என்று கூறிடும் வெட்கங்கெட்ட காமராசரால் வேறு என்னதான் செய்ய முடியும்?

* * *

கோவை, போஜமாம்பட்டியில், காமராசர் அங்காளம்மன் சாமியைக் கும்பிட்டார்! மாலை சாற்றிக் கொண்டார்!

—செய்தி

சபாஷ்! இந்தக் காட்சியைப் படமெடுத்துப் போட்டு, இவருக்கே வோட்டுப் போடுங்கள், எதிர்ப்போரை ஒழித்துக்கட்டுங்கள் என்று "விடுதலை" முழங்கலாமே!

* * *

திருவள்ளுவர் நினைவு நாளுக்கு அரசாங்க விடுமுறை கிடையாது.

—சென்னை மந்திரியார்.

வள்ளுவரென்ன, கிருஷ்ணபரமாத்மாவைப் போல 16000 கோபியரோடு லீலா விநோதம் புரிந்தா களைத்து விட்டார், விடுமுறை கோருவதற்கு?

* * *

3 வருஷத்துக்கு ஒருகுழந்தை போதும். அதிகம் பெறாதீர்!

—மந்திரி ஷெட்டி.

ஆண்டு தவறாமல் கிருஷ்ணன் பிறக்கிறான், ஜயந்தி விழா கொண்டாடுகிறார்களே! அக்ரமந்தானே அமைச்சரே?

# "தமிழ் நாடு" வேண்டும்; தகிடுதத்தம் வேண்டாம்!

"தமிழ் பேசும் தேவிகுளம், பீருமேடு, சித்தூர், செங்கோட்டை முதலிய எல்லா பகுதிகளையும் தமிழ் நாட்டுடன் சேர்க்க உடனே நடவடிக்கை எடுக்குமாறு சென்னை அரசினைக் கோருகிறோம்.

இதுபற்றி போதிய உணர்ச்சி—ஊக்கம் காட்டாமல், தமது கடமை மறந்து தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுத்த சட்டசபை—பாராளுமன்ற அங்கத்தினரின் நடத்தையை வன்மையாகக் கண்டிக்கிறோம்; வரும் பொதுத் தேர்தலில் அவர்களுக்கு தக்க பாடம் கற்பிக்குமாறு மக்களைக் கோருகிறோம்!

சென்னை ராஜ்யம் என்றிருப்பதை மாற்றி "தமிழ் நாடு" அல்லது "தமிழ் திலகம்" என்பதாகப் பெயரிடப்பட வேண்டும் என்று கோருகிறோம்"

இக்கோரிக்கைத் தீர்மானங்கள், சேலம்—திருச்செங்கோட்டில் அம்பாள் டாக்கிசில் 26-8-56-ல் நடைபெற்ற தமிழ் நாடு பெயர் அமைப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மகிழத்தக்க—தன்மானமுள்ள—செயல்தான். ஆனால், நடைமுறையை நம்பமுடியவில்லையே! ஐயப்பாடுகள் எழுகின்றனவே!


தமிழ் நாட்டுக்குத் "தமிழ் நாடு" என்று பெயரிட மறுத்தவரும், "குளமாவது, மேடாவது" என்று கொக்கரித்தவரும், பச்சையான தமிழர் துரோகியுமான சென்னை முதலமைச்சர் கனம் காமராசரை கௌரவித்து, அவரது திருவுருவப் படத்தை மாநாட்டில் திறந்து வைத்துப் பாராட்டியிருக்கிறார்கள். இதற்கென்ன பெயர்? தன்மான முழக்கமா? தேர்தல் காக்காபிடிப்பா? தமிழ் நாடு பெயர் அமைப்பு மாநாட்டில், கண்டிக்கப்பட வேண்டிய காமராசர் போற்றப்படுகிறார் என்றால், மாநாட்டை நடத்துவோரின் நோக்கில் தெளிவு இல்லை என்றுதானே பொருள்?

மாநாட்டிற்குத் தலைமைதாங்க விருந்த திருக்குறள் தோழர், வி. முனிசாமி M. P. மாநாட்டிற்கே வரவில்லையாம். சேலம் பி. இரத்தினசாமி M. L. A. யும் வரவில்லையாம்! பொறுப்பற்ற செயல். தலைமை தாங்கிய வேலூர்த் தமிழர். கு. மு அண்ணல்தங்கோ, மற்றும் பாப்பாரப்பட்டி, டி. வி. அங்கண்ணன், ஏத்தாப்பூர், ஒய். எஸ். அருணாசலம் ஆகியோரும்; செயலாளர், எஸ். சி. ரங்கசாமி, வரவேற்பாளர், வி. எஸ் மணி ஆகியோருங்கூட எந்தக் கட்சியிலும், எந்தப் பொறுப்பிலும் இல்லாதவர்கள். எந்தக் கிளர்ச்சியிலும் ஈடுபடாதவர்கள். எனவேதான் நோக்கம் இலட்சியமுள்ளதாக—பயனுள்ளதாக இருந்தும், செயல் முறை பழுதுபடுகின்றது. தேர்தலை எதிர்பார்த்து சுழலும் சந்தர்ப்பவாதிகள்—அரசியல் பச்சோந்திகள்—அருட்பார்வைக்கு இணங்க, ஆரோக்கியர்களுக்கு தூபதீப நைவேத்தியம் காட்டியுள்ளனர் மாநாட்டில், வெட்கமின்றி! வேதனைப்படாமல்!

தேர்தல் நெருங்குகிறது; தமிழ் நாட்டில் இதுபோன்ற விசித்திர மாநாடுகள், கூட்டங்கள், விழாக்கள் பலவற்றை இனி எதிர்பார்க்கலாம். என்ன செய்வது? தன்மானமுள்ள தமிழன் பகுத்தறிவைப் பயன்படுத்தித்தான் தீர வேண்டும்! தமிழனுக்குத் "தமிழ்நாடு" வேண்டும்; தகிடுதத்தம் வேண்டாம்!

—வாலி.


அகத்திற்கழகு அன்பும் அறிவும்;
முகத்திற்கழகு மூக்குக் கண்ணாடி.




சிறந்த கண்ணாடி, பிரேம்களுக்கு:—

ராதா ஆப்டிகல்ஸ்,

முதல் அக்ரகாரம், சேலம்-1.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 31—8—56 | இதழ் 8

## கிருஷ்ணனா? வள்ளுவனா?

ஒரு பார்ப்பனன்கூட மந்திரி சபையில் இடம் பெறாத பச்சைத் தமிழன் ஆட்சியானது, திருவள்ளுவர் நினைவு நாளுக்கு பொதுவிடுமுறை யளிக்க மறுத்துவிட்டது. பார்ப்பன மந்திரி சபை செய்துவந்த கிருஷ்ண ஜயந்தி விடுமுறை யளிப்பை மறுக்கவில்லை. மறுத்திட மனதாலும் நினைக்கவில்லை!

சட்டசபையில் கேள்விக்கு விடையிறுத்த அமைச்சர் பக்தவத்சலனார் சொல்லுகிறார்: 'விடுமுறை மனப்பான்மையை வளர்க்கக் கூடாது என்பதே சர்க்கார் கருத்து' என்று. இந்தக் கருத்து நாணயமானதாக இருந்தால்; பூணூல் பண்டிகை, கிருஷ்ண ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி, ரம்ஜான், மொகரம், மகா சிவராத்திரி, ஆயுத பூசை, கிறிஸ்துமஸ், நல்ல வெள்ளி, விநாயக சதுர்த்தி, மாளய அமவாசை, தீபாவளி போன்ற கடவுள், மத, புராண, நம்பிக்கையின் அடிப்படையிலே விடப்படும் அரசாங்க விடுமுறைகளில் ஒன்றையேனும் குறைக்க முயன்றிருக்கலாமே; முயன்றதுண்டா? முடியுமா இந்த அடிமை அரசாங்கத்தால்?

அறிவைப் பாழ்படுத்தி, மனித சக்தியிலே மதிப்பிழக்கச் செய்து, சோம்பேறிகளாக்கும் வீண் விழாக்களுக்கு விடுமுறையுண்டு அவற்றைப் போற்றுவது—காப்பது சர்க்காரின் கடமைகளிலே ஒன்று; வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காம் வள்ளுவப் பெருந்தகையின் விழாவுக்கு விடுமுறையில்லை; வழிசெய்ய வக்கில்லை!

''கிருஷ்ணனின் மனைவிமார் எத்தனை பேர்? இராதை, ருக்மணி, சத்யபாமை, சம்பாவதி, மித்திரவிந்தை, லட்சுமணை, சத்தியவதி, பத்திரையை, காளிந்தியை—ஆகியோர்.

இவர்கள் மட்டுமல்ல; நரகாசுரன் பட்டினத்திலிருந்து கொணர்ந்த 16,000 பெண்கள்! பகதத்தன் பட்டினத்திலிருந்து கொணர்ந்த 11,600 பெண்கள்! மேலும் 16,000 கோபிகைகள்! நிஜாம் மன்னரின் அந்தப்புரத்தைப்போல் ஆயிரம் மடங்கு பெரிதாக!

இந்த யோக்கியன்தானா கடவுள் அவதாரம்? இவனைப் பின்பற்றுவதற்காகவா இன்றைய விடுமுறை? இவனைப் போற்றுகிறவனும், வணங்குகிறவனும் எப்படி யோக்கியனாயிருக்க முடியும்?''

இவ்வாறு கேட்கிறது 29—8—56 'விடுதலை' நாம் சொல்லுகின்றோம்: ''கிருஷ்ணனைப் போற்றுகின்ற விழாவுக்கு விடுமுறை கிடையாது'' என்று கட்டளையிட காமராசர் சர்க்காருக்கு யோக்யதையில்லை; ஆனால், பெரியார் ஈ. வே. ராவே போற்றுகின்ற பகுத்தறிவுத் தந்தை திருவள்ளுவர் விழாவுக்கு விடுமுறை கிடையாது என்று மறுக்க யோக்யதையிருக்கிறது; திறமையிருக்கிறது!

தமிழ் நாட்டு மக்களின் தன்மானத்தைப் பறித்திடும், புராண புருஷன் பகவான் கிருஷ்ணன் வேண்டும் என்கிறது அரசாங்கம்; தமிழனின் தன்மதிப்புக்குரிய வழிகாட்டி, பேரறிஞன் திருவள்ளுவர்வேண்டாம் என்கிறது அதே அரசாங்கம்! இந்த அரசாங்கத்திற்குப் பெயர்தான் பச்சைத் தமிழர் அரசாங்கம்! இந்த முதலமைச்சர் காமராசர்தான் தமிழர்களின் 'தலைவிதி'யை நிர்ணயிக்க வேண்டியவர்; இப்படிச் சொல்லுபவன் உண்மையில் எப்படி யோக்கியனாக இருக்க முடியும்? எப்படி பகுத்தறிவாளனாக இருக்க முடியும்?

திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை வேண்டுமென்று முழக்கமிட்டு வந்த விடுதலையாரின் பகுத்தறிவுத் தீப்பொறிகள், இந்த வேதனைப் புறக்கணிப்புக்காக வெடித்துச் சிதறவில்லையே! ''வடநாட்டுக் கிருஷ்ணனுக்குப் போற்றுதல், தென்னாட்டு வள்ளுவனுக்குப் புறக்கணிப்பா?'' என்று குத்திக் காட்டி விளாசவில்லையே, ''குத்தூசி''யார்! கிருஷ்ணன் வேண்டும், வள்ளுவர் வேண்டாம் என்று தீர்ப்பளித்துவிட்ட தமிழத் துரோகிகளின் தலைவர் காமராசராக இருப்பதால், கைமொடிந்து போய்விட்டதா? முனைமழுங்கிப் போயிற்று? தன்மானம் தலைதூக்கவில்லையா? சிந்தனையும், பகுத்தறிவும் ஆதரவு மூட்டைக்குள் அவசரமாகப் பதுங்கிக் கொண்டனவா? வோட்டுப் பிச்சைக்காக ஓய்வெடுத்துக் கொண்டனவா? அந்தோ! ''விடுதலை''யே! அந்தோ! ''குத்தூசி''யே! வெட்கப்படவேண்டாமா இந்தநிலை வந்ததற்கு?

# கருத்துரை

## உரிமை வாழ்வு.

திராவிடம், உரிமை வாழ்வு கோரிக் குரல் எழுப்புவதும், கிளர்ச்சிபுரிவதும் கல்லூரியில் பயிலும் மாணவர் பெரும் பாலோர்க்குப் புரிந்திருக்கலாம்; கல்வி நலனும், கருத்துவளமும் செழிக்காத கிராமிய மக்களின் பலருக்கு இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது. ஏன்? கல்லூரி மாணவர்களிலும் விளங்காதார் உண்டு!

நம்மில் படித்தோர் தொகை மிகக் குறைவு; படித்தோரிலும் அரசியல் தெளிவு பெற்றோர் தொகை மிகக் குறைவு, தெளிவு பெற்றோரிலும் விடுதலை வேட்கையோடு உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபடும் திறன்படைத்தோர் மிகக் குறைவு; அந்தக்குறைவை நிறைவு செய்யும் நோக்கத்தின் அடிப்படையிலே எழுந்துள்ளது இந்த "உரிமை வாழ்வு" எவரும் படிக்கலாம்; புத்துணர்வு பெறலாம்.

பேராசிரியர். க. அன்பழகனார் சிறந்த பகுத்தறிவுப் புலவர், செந்தமிழ்ச் செல்வர்; மொழியும் அரசும், கரையானும் கருநாகமும், தமிழும் திராவிடமும், வடக்கும் தெற்கும், புதுக்கணக்குப் போடுங்கள், உரிமை வாழ்வு என்பன போன்ற 10 தலைப்புகளில் அவர் வழங்கியுள்ள கருத்துரைகள், வாழவிரும்பும் திராவிடர்க்கு கரும்பு! விடுதலைப் போர்வீரனுக்கு வாள்! பேச்சு வழங்குவோர்க்குக் களஞ்சியம்! களஞ்சியம்! இத்தகு கொள்கை விளக்கநூல், ஒவ்வொரு தி. மு. க. கிளையிலும், படிப்பகத்திலும், தொண்டர்தம் கையிலும் இருத்தல் வேண்டும். திராவிடர்தம் உரிமை வாழ்வு பகுத்தறிவு பூர்வமாக செழித்தல் வேண்டும்.

இன்பத் தமிழிலே, இலகுநடையிலே பயனுள்ள "உரிமைவாழ்வு" சமைத்தளித்த ஆசிரியர், அன்பழகனார்க்கு எமது நெஞ்சுகந்த பாராட்டுகள். பக்கங்கள் 120. அழகான பதிப்பு; விலை 1—8—0. கிடைக்குமிடம்.

பாரி நிலையம்,
59, பிராட்வே, :: சென்னை-1.

## செயற்படுமா?

சேலம் நாட்டாண்மைக்கழகக் கூட்டம் தலைவர் தோழர், டி. எம். காளியண்ணன் எம். எல். ஏயின் தலைமையில் சேலத்தில் 20–8–56-ல் நடைபெற்றது. தமிழர்களின் நல்வாழ்வில் தங்களுக்கும் அக்கரையுண்டு என்பதைக் காட்டுகின்ற முறையில் அவசரத் தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

"இலங்கையிலிருந்து அகதிகளாகத் திரும்பிவரும் இந்திய மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும், எல்லாவித உதவிகளையும் செய்யவும், இந்திய யூனியனும், சென்னை அரசினரும் முன்வர வேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது." இதனை தி. மு. க. வைச் சேர்ந்த தோழர், ஆ. ஆனைமுத்து முன்மொழிய, தோழர், கருப்பண்ணன் வழிமொழிய, நகிரங்கமாக எதிர்க்க முடியாது காங்கிரஸ்காரர்கள் தத்தளிக்க, ஏகமனதாக நிறைவேறியது. தீர்மானம் நிறைவேறிவிட்டது. செயற்பட வேண்டுமே?

இந்திய அரசினர் கிடக்கட்டும்! இலங்கையினின்றும் அகதிகளாகத் திரும்பும் தமிழ்க்குடும்பங்களை, பச்சைத்தமிழன் ஆட்சியாவது பராமரிக்க முன்வருமா? ஓ.ஒ.

## கோயில் கட்டாதே!

இனிமேல் கோயில் கட்டுவதற்கு பணத்தைச் செலவிட வேண்டாம். அந்தப் பணத்தைக்கொண்டு குடிசையில் வாழும் ஏழை மக்களுக்கு வீடுகட்ட உதவிசெய்யுங்கள். நோயாளிக்கு மனப்பூர்வமாகச்சேவை செய்வதுதான் சிறந்த பக்தி. துன்பத்தைத் துடைப்பதுதான் பக்தி. மக்களுக்கு ஆபத்தில் உதவி செய்வதற்குத்தான், நாம் கடவுளிடம் பக்தி செய்வது என்று பொருள். திறந்த வெளியில், சுத்தமான இடத்தில் கடவுளைப் பூசிப்பது நலம்.

—வினோபாபாவே,
சேலம்–வெள்ளாற்றில் 18-8-56.

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து-உ.

அதிகாரம்-க. பாட்டு-உ.

"கற்றதனால் ஆய பயனென்கொல்-
-வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

நல்ல ஒழுக்கமுடைய பேரறிஞர்கள் பேணிப் பெருமைப்படுத்திய பண்பட்டவழி நடவாதவர்கள், பல நூல்களைப் படித்திருந்தாலும் படியாதவர்களே யாவரென்பதாம்.

விளக்கம்:

வாலறிவு=பேரறிவு, ஆகவே வாலறிவன் பேரறிஞர்களைச் சுட்டுகிறது.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி.

## நாயந்தானுங்களா எசமான்றே?

ஆண்டையிடம் அடிமையொருவர் இவ்வாறு முறையிடுகிறார்:

"உயர்தர தொழிற்கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் 18. ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதில், தென்பிரதேசத்திற்கு ஒரு நிறுவனம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இது மிகவும் அதிருப்திகரமான விஷயம்.

இதர வசதிகள் இல்லாததால் புதிய தொழிற்சாலைகளைத் தென்பகுதில் ஆரம்பிப்பது சாத்தியப்படுவதில்லை என்று கூறப்படுகிறது, அதிகக் கல்லூரிகளைத் தொடங்கும்படி கேட்டால், தென்பிரதேசத்தில் தொழிற்கல்வி அபிவிருத்தியடைந்திருக்கிறது என்று கூறப்படுகிறது!

இவ்வாறு முரண்பாடான கருத்துக்களுக்கு இடந்தாலாகாது, தென்பகுதிக்கு ஒரு கல்லூரி ஒதுக்கியிருப்பது நியாயமா என்பதை கமிட்டியார் கவனிக்க வேண்டும்."

—நிதி மந்திரி, சுப்ரமணியம்,
28-8-56-ல், கோவை, தென்பகுதி கல்வி மாநாட்டில்.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● ப. வெ. முரசுமணி,
48, வாழைத் தோட்ட தெரு,
திருவண்ணுமலை.

"மது" தாரமங்கலம்.

கே: திருக்குறளில் சில இடங்களில் கடவுள், பேய், பிசாசு, மறுமை பற்றி வள்ளுவர் குறிப்பிடுகிறுரே. திருக்குறளைப் பெருமைப் படுத்தும் தி. மு. க. அவைகளை ஏன் நம்பவில்லை?

ப: நம்புங்கள் என்று வள்ளுவரே சொல்லவில்லையே, தோழரே! "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப் பொருண் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று தானே சொல்லுகிறுர்!

*　　*　　*

கே: தமிழ் நாட்டில் மலையாளிகளும், பிராமணர்களுமே பெரும்பாலான உத்தியோகங்களில் இருக்கின்றனர். இது கூடாது என்று பெரியார் கூறுவதை, தி. மு. க. ஏன் ஒப்புக்கொள்ளவில்லை?

ப: நன்ருக ஒப்புக்கொள்கிறது; ஆனல், இந்த அக்ரமத்தை ஒழித்துக்கட்டும் அதிகாரமோ, ஆற்றலோ காமராசரிடந்தானே இருக்கிறது? அத்தகைய வீர காமராசரே பெரியார் கையில் இருக்கும்போது, நாம் வேறு குறுக்கிடவேண்டுமா? அவர்களே சுத்தமாகச் செய்து முடித்துவிடுவார்கள்!

நா. அரங்கசாமி, கன்னூர்பாளையம்.

கே: காந்தியார் ஏன் குல்லா போடவில்லை? மற்ற காங்கிரஸ்காரார் ஏன், எதற்கு குல்லா போடுகிறுர்கள்?

ப: இப்போதுவரும் பதவி வேட்டைப் புதிய காங்கிரஸ் பணமூட்டைகளுக்காக, அப்போதே வழிகாட்டியுள்ளார், காந்தியார்! தங்கள் தலையில் போடுவதற்கு பதிலாக, ஏழை எளியவர்களுக்கு குல்லா போடுகிறுர்கள் இவர்கள்!

கே: கோவிந்தன், சென்னை-1

கே: காங்கிரஸ் கெட்டது, காமராசர் நல்லவர், ஆகவே அவரை ஆதிரிப்போம் என்கிறுர்களே, மலம் கெட்டது என்ருல் அதிலே புழுத்த புழு எப்படியிருக்கும்?

ப: மலம்தான் உயர்ந்தது; நல்லது; அது வாழவேண்டும்; எதிராக வருவோர் ஒழிய வேண்டும் என்று மலப்பதிகம் பாடும் மலப்புழு! அதை விரும்புகின்றவர்கள் அதை ஆதரிப்பார்கள்!

கே ரமாமணி, சேலம்.

கே: தேர்தலில் இறங்கும் தி. மு. க.வைத் திட்டிநொறுக்கும் பெரியார்கள், தேர்தலில் நிற்பதில்லையென்று முடிவு செய்திருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள்?

ப: வளர்ந்துவிட்டதாகப் பெருமையடித்துக் கொள்ளுதுக! வரப்போகும் தேர்தலில ஒரு இடத்தில் நிற்க யோக்யதையிருக்குதா இதுகளுக்கு, என்று சொல்லியிருப்பார்கள்!

*　　*　　*

கே: ஒரு தந்தைக்குப் பிறவாதவர் என்று பெரியாரை விபூதி வீரமுத்துப் பண்டாரம் திட்டுகிறுரே; நியாயமா?

ப: ஒருவனுக்கும் ஒருத்திக்குந்தான் எவனும் பிறக்க முடியும் என்பது விஞ்ஞானம்! ஒருவனைத் தாக்கிட எதையும் கூறிடும் அரசியல் ஞானத்தை விபூதிப் பண்டாரம் மட்டுமா, பெரியார் படையும்தானே சேர்ந்து வளர்க்கிறது!

● ப. வெ முரசுமணி, திருவண்ணுமலை.

கே: ஒழுக்கமுடையோரை பொதுத் தேர்தலுக்கு தேடிக் கொண்டிருக்கும் காங்கிரஸ் தலைவர் திருவண்ணுமலைக்கு வந்தபோது, கதர் உடை அணிந்த மாணவரே கையெழுத்திடவேண்டும் என்று கத்துவானேன்?

ப: கதர்தான் ஒழுக்கத்தின் சின்னம்; ஆகவேதானே கள்ளு, சாராயம், அபின், கஞ்சா போன்றவைகளை கதர்ச் சட்டைக்குள்ளே எளிதாகப் பதுக்க முடிகிறது!

## கலைக்கூடம்

# இராஜ ராஜ சோழன்.

சேலத்தில் நடைபெறும் நகராட்சி மன்றப் பொருட்காட்சியிலே, டி. கே. எஸ். சகோதரரின் "இராஜ ராஜ சோழன்" நாடகம் நடைபெறுகின்றது.

கி. பி. 10-ம் நூற்ருண்டில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சி யொன்றினை வைத்து, அரு. இராமநாதன் அவர்களால் பின்னப்பட்டு, சகோதரர்களின் அனுபவச் சிறப்பால் வல்லவர் தீட்டிய வண்ணச் சித்திரமாக்கப் பட்டுள்ளது இந்த வரலாற்று நாடகம்.

தமிழன் இராஜ ராஜனின் மகள் குந்தவியை, தெலுங்கன் விமலாதித்தன் காதலிக்கிருன். ராஜ தந்திரி பட்டன் ஒருவன் குறுகிட்டு குழப்பம் விளைவிக்கிருன். இராஜ ராஜனின் வெளிப்படையில்லாதபரந்த திராவிடமனப்பான்மை, வெல்லுகிறது! காதலர் கூடுகின்றனர்; ஆட்சி வலுக்கிறது. சூழ்ச்சிக்காரன் ஒழிகிருன். கதையின் கருத்தோட்டம் இப்படிபொருத்தமாக அமைந்துள்ளது.

தஞ்சைப் பெரிய கோயில், நந்தி, தாண்டவப்பெருமான் காட்டப்படினும், பாதகமில்லை; பக்தி வெறி அளவு கடந்து ஊட்டப்படவில்லை, தமிழ்த் தாயே அரியாசனம் ஏற்றப்படுகிருள்.

விமலாதித்தனை வரும் சிதாராமனைத் தவிர, எல்லோருமே குறைக்கு இடமின்றி நடித்து நாடகத்திற்கு வலிவூட்டுகின்றனர். ஹேமலதாவின் துடிப்பான பேச்சும், நடிப்பும் மிக்க நன்று. நாட்டியம் நன்கமைந்துள்ளது. டி. கே. சண்முகம் வீரத்தை அள்ளி வீசுவதோடு, அழகாகக் காதலும் புரிகிறுர. உடை, காட்சியலங்காரங்கள் பிரமாதம். டி. கே பகவதியின் வேடம்தான் புராண கைகேசியை நினைவுறுத்துகிறது!

"கல்கி"யின் "சிவகாமியின் சபதம்" "பார்த்திபன் கனவு" "மோகினித் தீவு" ஆகிய மேடையேறிய வரலாற்று நாடகங்களை காட்டிலும், 100 மடங்கு மேலானது "இராஜ ராஜ சோழன்" தமிழன் பார்க்கலாம்; பார்த்துப் பெருமைப்படலாம். அதே சமயத்தில், "தசாவதாரம்" நடத்தும் நாடகமேதை நவாப் "இராசமாணிக்கத்தை நினைந்து ஒரு சொட்டுக் கண்ணீரும் வடிக்கலாம்.

—இந்திரசித்தன்.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

எப்படித் தாயை சேர்க்கதோ—அதைப் போன்று மக்களை வாழ்விக்கச் செய்வது மக்கள் அரசாங்கத்தின் மகத்தான பொறுப்பு! ஆனால்?

இன்றைய நாடாளச்சென்ற நாயகர்கள் நாட்டு மக்கள்மீது நல்லெண்ணம் கொண்டவர்களாக இருந்திருப்பார்களேயானால் இந்த சம்பவம் நிகழ்ந்திருக்காது!

வெள்ளையரை விரட்டியடிப்பதற்கு முன்—எல்லோருக்கும் வேலை—எல்லோருக இந்நாட்டு மன்னர்கள் என முழங்கிய தேசியத்தார் இன்று "வரும் தேர்தலில் பதவியிலே அமர இடம் கிடைக்குமா?" எனத் திட்டம்போடத் துவங்கிவிட்டார்கள்!

பத்துவருட சுதந்திர வாழ்விலே பாட்டாளிகள் கண்டபலன் என்னவோ பூஜ்யம்தான்! ஆனால் சீமான்கள்...? சந்தர்ப்பவாதிகள், சுயநலமிகள், நிலப்பிரபுக்கள், புதிய தியாகிகள்—இவர்கள் தான் நாடாளுவோரின் கண்பார்வையால் கடாட்சம் பெற்றனர்.

நாட்டிலே நடைபெறும் இந்த இழிநிலைகளை நிவர்த்திசெய்ய முயலாமல்—உலக நாடுகளின் மத்தியிலே பாரதத்தின் புகழ் ஓங்கிவிட்டது என தம்பட்டமடிக்கின்றனர் நாடாள்வோர்!

உள்நாட்டிலே துப்பாக்கிகளின் ஓசை! வெளிநாட்டிலே சமாதானம் என்ற பல்லவி! உள்நாட்டிலே வறுமைச்சாவு, வெளிநாட்டிலே விருந்து வேடிக்கை இந்த முரண்பாடான கொள்கைகளுடன் இந்திய அரசியல் சக்கரம் உருளுகிறது!

இந்தக் கேடுகெட்ட நிலைகளையெல்லாம் திரையிட்டு மறைக்க ஜால வித்தைக்காரன் செய்யும் மாயமால வேலைகளைப்போல் ஐந்தாண்டு திட்டப் பிரசாரம் ஆடலழகிகளின் துணைகொண்டு வேல்விழி மாந்தரின் ஆதரவோடு மக்களிடம் பிரசாரம் செய்யபோகின்றனர்: "நம்மை" நாடகமாடிகள் எனப் பழித்தோர்—பாவம் அந்த நாடகமாடிகளின் துணைதேடும் பரிதாபத்தை என்னவென்று சொல்வது?

வேலையில்லை: எனவே வாழ்வில்லை, எட்டயாபுரத்துத் தாய் தன் நான்கு மைந்தர்களை கிணற்றிலே தூக்கிபோட்டுக் கொன்றுவிட்டாளே! என்ன காரணம்? இதைப்போன்று நாட்டிலேஉள்ள தாய்மார்கள் செய்து விட்டால் வேலையில்லாக் கொடுமை ஒழிந்து ஊட்டியிலே "கனம்"கள் சுகம் அனுபவிப்பார்களா? கரைந்துவரும் காந்தியக் கோட்டைக்கு முட்டுக்கொடுக்கும் மூர்க்கர்கள் சிந்திப்பார்களா? குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் தாய் நீதிபதியை பார்த்து கேட்கிறாள்; எனக்கும் கணவனுக்கும் வேலை கிடைத்திருந்தால் நான் ஏன் கொலைகாரியாக மாறுகிறேன்?" என்று!

உழைக்க உடலிலே வலுவிருக்கிறது! உழைப்பதற்கேற்ற வாய்ப்பும் உள்ளது! இருந்தும் வாழ்விக்க வழிசெய்ய முடியவில்லை அரசாங்கத்தால்!

அவர்களது எண்ணமெல்லாம் "பதவி" பதவி என்பதுதான் அதை காப்பாற்றிக்கொள்ள அவர்கள் படுகிற பாட்டில் நாட்டு மக்களைப்பற்றி கவலை ஏது?

கொடுமைக்கு இலக்காகி வேதனைப் படும் தாய் குழந்தைகளை கொன்ற சோகத்திலே கேட்கிறாள்; நீதிபதியை பார்த்தல்ல—பொதுமக்களைப் பார்த்து "என்னைக் குற்றவாளியாக்கி விட்ட அரசாங்கம் தீர்ப்பு இதுதான் என்று என்னிடம் ஓலை நீட்டுமுன்—உங்களிடம், வோட்டுப்பிச்சைக்குக் கையேந்தி வரும நாடாள்வோருக்கு "தீர்ப்பு என்ன? கொடுக்கப் போகிறீர்கள்?" என்று!

அவளது கொந்தளிக்கும் தாயுள்ளத்தில் பொங்கியெழும் கேள்விக்கு மக்கள் அளிக்கு பதில்?

★★


## பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.



TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை. அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

களைக் காணத்துடிப்பார்களே, நம் கர்மராசரைக் கட்டிக்காக்கும் வீரர்கள். முதலில் அதைக் காண்போம்.

ஐந்தாண்டுத்திட்டக் கண்காட்சியில் சென்னை ராஜாஜி ஹாலில் நான் எடுத்து எழுதிக் கொண்ட புள்ளி விவரத்தைக் கீழே தருகிறேன்!

முதல் ஐந்தாண்டுத் திட்டம்—1951 ஏப்ரல் முதல் 1956 மார்ச் மாதம் முடிய.

சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 86 கோடி. செலவாகியுள்ளது, சுமார் 84 கோடி.

| | ஒதுக்கப்பட்டது ரூபாய் (லட்சத்தில்) | செலவாகியுள்ளது ரூபாய் (லட்சத்தில்) |
|---|---|---|
| உழவு | 902 | 857 |
| கால்நடை வளர்ச்சி | 56 | 43 |
| பால் உற்பத்தி | 13 | 16 |
| காடுகள் | 75 | 29 |
| கூட்டுறவு | 17 | 11 |
| மீன் இலாகா | 49 | 35 |
| நாட்டுப்புற வளர்ச்சி | 30 | 77 |
| நீர்ப்பாசனம் | 2019 | 2086 |
| மின்சாரம் | 3086 | 3068 |
| குடிசைத்தொழில் | 44 | 52 |
| ஏனைய தொழில் | 128 | 113 |
| பாதைகள் | 358 | 297 |
| கல்வி | 494 | 406 |
| மருத்துவம் | 248 | 248 |
| சுகாதாரம் | 518 | 475 |
| வீட்டுவசதி | 190 | 152 |
| பின்தங்கிய வகுப்பின் முன்னேற்றம் | 416 | 440 |
| மொத்தம் | 8643 | 8414 |

பார், பார், என்று பறைசாற்றுகிறதே நம் மாநிலப் பாராளுமன்றம்! என்ன காண்கிறீர் அங்கே? ஒதுக்கப்பட்ட 86 கோடி 43 லட்சத்தில் 84 கோடியும் 14 லட்சமும் தான் செலவாகியுள்ளது. எஞ்சிய பகுதி? இனிமேல்தான் செலவிடப்பட வேண்டும்.

'உழவைப் பெருக்குவோம்' 'உணவை மிகுப்போம்' என்று உரைத்தார்களே? உண்மை யார்வத்தாலா? உலர்ந்த வயிற்றை என்றேனும் குனிந்து பார்த்ததுண்டா, இந்தச் சென்னை மாநில மன்றத்தார்? அப்படியானால் ஏன் மீந்தது 45 லட்சம்? உழவுத் தொழிலுக்கு இன்றியமையாதது கால்நடை.

பிணிபோக்க வழியின்றி ஏற்ற வகையும் உணராது உழல்கிறான் உழவன். ஆடு மாடுகளோ பலரைக் கடனில் ஆழ்த்துகின்றன. நூற்றுக்கு 78 பேர் இந்த மாநிலத்தில் உழவர். அவர்களின் கருவி, உயிர்நாடி—கால்நடை. அதன் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையோ 56 லட்சம். அதில் 13 லட்சம் மீந்திருக்கிறது. ஐந்து ஆண்டு அல்லும்பகலும் உழைத்தனராம்! கொடிகட்டிப் பறக்கிறது விடுதலையாட்சி! வெட்கமில்லை?

"பருவம் மாறியது; அந்தகோ! பருவமழை பொய்த்தது! காடுகளை அழித்து விட்டனர் அப்பாவி மக்கள்! இதோ தொடங்கிவிட்டோம் மரம் நடுவிழா! கலெக்டர் பங்களா—கவர்னர் மாளிகை—கக்கூஸின் ஓரம்—கற்பாறையின் உச்சி—அங்கே பத்து—இங்கே பதினாயிரம்—இப்படியாக நட்டுத் தீர்த்தோம்! அதோ பாருங்கள் வானத்தை. ஆம் பலன்தரப் போகிறது மரம்! முகில்கள் முத்தமிடுகின்றன; இடியிடிக்கிறது; மின்னல் கண்ணைப் பறிக்கிறது! ஓடு ஓடு வீட்டுக்குள்ளே ஓடு—நனைந்து விடுவாய்—மரமந்திரி வாழ்க! வாழ்க எம்பெருமான் முன்ஷி" என்ற கூச்சல் வானை முட்டியதே, அவை அனைத்தும் உள்ளத்தின் ஒலிகளா? உண்மையிலே காடுகளைத் தழைத்திடச் செய்யும் கருத்துண்டா, கனம் அமைச்சர்களுக்கு?

இந்த மாநிலத்தின் காடுகளின் பரப்பு 60,05,574 ஏகர். வளப்படுத்த ஒதுக்கப்பட்ட தொகை ரூ 75 லட்சம்! இதிலே செலவாகாமல் மீந்துள்ளது 46 லட்சம்! என்னே ஆர்வம்! என்னே ஊக்கம்! என்னே உழைப்பு! வாழ்க சென்னை மாநில அரசாங்கம்! உலகம் உள்ளளவும் கொடிகட்டிக் கோலோச்சுக!

இப்படியே விளக்கிக் கொண்டே போகலாம். பயன்? காலம்வீணாகும். பாமரரிடையே பகுத்தறிவுப் பொறியைப் பற்றிடச் செய்வோரின் பொன்னான நேரத்தை வீணாக்க விழையேன். நீங்களே சிந்தியுங்கள், ஓய்வு கிடைத்த நேரத்தில் கண்காட்சி தரும் புள்ளி விவரத்தைக் கையிலே வைத்துக் கொண்டு புண்ணியவான்களால் மாநில மக்கள் பெற்ற ஏற்றத்தை நேரிலே சென்று காணுங்கள். செலவிட்ட கொஞ்சத்திலும் எத்தனை சொத்தை என்பது தெரியும்.

—"இளந்தமிழன்"

மனிதன் சிந்திக்கச் சிந்திக்க, அவன் விதியினின்று விடுதலையடைகின்றான். மனச்சிந்தனையே மனித சுதந்திரம். இந்த வகையில் மனிதமூளை, சிந்தனையால் விதியை எதிர்த்து அதனை அழிக்கவும் ஆற்றல் பெற்று விடுகிறது.

—எமர்சன்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர் - ம. கண்ணன்,


புரட்சி.

வாழ்க்கை என்னும் நிலத்தில் சிறந்த பயிர் வகைகள் வளர்வதற்காகப் போடப்படுகிற எரு இருக்கிறதே, அதன் பெயர்தான் புரட்சி.

—நெப்போலியன்.


கழக வார இதழ். ★ ★ ★ விலை அணா ஒன்று.

மலர் 6 | சேலம் 14-9-56. வள்ளுவராண்டு 1987. ஆவணி 30. | இதழ் 10


# தேயும் தென்னகம் தலைநிமிர்ந்து வாழ!

சொல்லின் செல்வர் ஈ.வே.கி. சம்பத்து அவர்கள் 28–8–56-ல், குழித்தலை பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்:

இப்போது எங்கும் ஒரு கேலிக்கூத்து நடக்கிறது, இரண்டாவது ஐந்தாண்டு திட்டப் பிரசாரம் என்ற பெயரில். ஒரு திட்டம் அமுல் படுத்து முன்பு அதன் முறையினை விளக்க வேண்டும், அல்லது அமுலாக்கப்பட்டபின் அதன் சாதனைகளை விளக்க வேண்டும். அதைவிட்டு 2-வது திட்டம் அமுலாக்கப்படுவதாகக் கூறிக்கொண்டு பிரசாரம் என்ற போர்வையில் தேர்தல் வேட்டையாடுகின்றனர், பள்ளி சிறுபிள்ளைகளையும், வயிறு ஒட்டி ஒடுங்கிய ஆசிரியர்களையும், மேலுயர்வு தயவுக்குக் காத்துநிற்கும் அதிகாரிகளையும் தெருவெல்லாம் சுற்றச்செய்து ஏதேதோ பேசி கணக்கு காட்டுகின்றனர். அவர்களது திட்டம்பற்றி நம்மைத்தவிர விளக்கமாக எடுத்துக்கூற எவராவது வருகின்றனரா? வந்தாலும் முடியுமா? அப்படி திட்டம் பற்றிப் பேசும் அதிகாரிகள் தான் மனதார வரவேற்றுப் பேசுகிறார்களா? உதட்டில் பிரசாரம் இருக்கும்; உள்ளத்தில் 'அடபாவிகளா, ஆபீசில் பைல்களுடன் கட்டி அழுதுவிட்டு வீட்டுக்குவந்து குழந்தை குட்டிகளுடன் நிம்மதியாக இருக்கலாமென எண்ணி வீடு திரும்ப முடியாது செய்து, தெருச்சுத்தி பேசச் செய்கிறீர்களே' என்றுதான் நெஞ்சு பேசும். அண்மையில் ஒரு விளம்பரம் வந்ததை நண்பர்கள் பார்த்திருக்கலாம்: 'காங்கிரசுக்கு மாதம் 150/- சம்பளத்தில் பிரசாரகர்கள் தேவை. மனுக்களை தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி, நரசிம்மபுரம், சென்னை' விலாசத்துக்கு அனுப்புங்கள் என்று! உலகத்தில் அஸ்தமனமாகிவரும் கட்சிக்கு ஏற்படும் கட்டம்—இப்போது காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டிருக்கிறது. விளம்பரம் தேவை விலைபோகா சரக்குகளை விற்பனை செய்ய. 'கல்நார் பொடிகழன்றுபோன பற்களை ஒட்டவைக்கும்' என்று விளம்பரம் செய்ய ஆள்தேவை. நல்ல சரக்கிற்கு மக்களே போட்டி போட்டு வருவர். காங்கிரஸ் நாற்றமடித்த குட்டையாகிவிட்டது; விற்பனையாகாத பண்டமாகி விட்டது, விளம்பரதாரர்கள் தேவைப்படுகிறது. ஏன் இந்த நிலை? எவ்வளவு பெரியஸ்தாபனமாக இருந்தது இத்தகைய இழிவை ஏற்படுத்திக் கொண்டது! ஏழைமக்களை விட்டுவிட்டு மேட்டுக் குடியினர்களை அண்டிவிட்டதால்தானே ஆள்தேடும்படலத்தில் இறங்க நேரிட்டது! ஆம்! நாங்களும் அந்தப்பிரசார பீரங்கிகளை-சம்பளம் பெற்று பவனிவரப் போகும் பேரறிஞர்களது வரவை எதிர்பார்க்கிறோம்—என்ன சொல்லுகிறார் என்பதைக் கேட்க! அவர்கள் எதைச் சொல்லி வோட்டுக்கேட்க முடியும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்,

★ ★ ★

ஐந்தாண்டுத் திட்டங்கள் வடகாட்டை வளப்படுத்துவதற்கும் தென்னாட்டைசுடுகாடாக்குவதற்குமே தயாரிக்கப்படுகிறது என்பதை தக்க புள்ளி விவரங்களுடன் விளக்கி வருகிறோம் நாங்கள். அதை மறுக்கவில்லை மாற்றுக்கட்சியினர், எதிர்க்கவில்லை அரசியலார்! அதற்குப் பதிலாக காமராஜர் முதல் பக்தவத்சலம்வரை பொருந்தா வாதங்களைக் கூறி, தி. மு. க,

[8-ம் பக்கம் பார்க்க]

# பாரத் மாதா கீ ஜே!

"இளந்தமிழன்"

இதற்கு மேலும் ஐந்தாண்டுச் சாதனையை விரிக்க வேண்டுமா?

தன் மொழியைத் தூற்றியது; தாழ்த்தியது; வெறுத் தொதுக்கியது; நடுத்தெருவிலே இழுத்துவிட்டுக் கைகொட்டிச் சிரித்தது—இன்றும் செய்கிறது—இது காங்கிரஸ் அரசாங்கம்! மறுப்பாரில்லை! கொண்டவன் பேரைக் கூற மறுக்கும் நாட்டுப்புறப் பத்தினிபோல் 'தமிழ்நாடு' என்னும் சொல்லை உச்சரிக்கக்கூட நாக் கூசுகிறது, மாநில மன்றத்திற்கு! "குமுத"மே இது குறித்து அனல் கக்கிற்று! அது காங்கிரஸ் பத்திரிகை!

மலேயாவிலுள்ள தமிழருக்காகச் சென்று வந்த ஒரு கப்பலும் நின்றுவிட்டது. தென்னாப்பிரிக்கா செல்லுவதற்கோ இன்னுமொரு கப்பல்கூட விடப்பட்டுள்ளது. வாய்திறக்கவில்லை, சென்னை அரசாங்கத்தார். ஊமையா அல்லது பொம்மையா இந்தச் சென்னை அரசு? என்று கேட்கிறது மலேயாவிலிருந்து வரும் "ரசிக ரஞ்சனி" என்னும் தமிழ்த்தாள். இது குறித்து எழுதும் அண்ணு 12—8—56 "திராவிட நாடு" இதழில் "ரசிக ரஞ்சனி அழக ஏடு அல்ல; பெயரே கூறும், விளக்கமும் தேவையில்லை" என்று எழுதுகிறார். பச்சைத் தமிழனாட்சியில் கடல் கடந்து சென்றுள்ள தமிழருக்கு இழைக்கப்பட்டுள்ள பச்சை அநீதி!

'தென்திசையை'க் குறித்து எழுத என்கை கூசுகிறது. தமிழ் அன்னையை ஆள்வோர் சிதைப்பது கண்டு ஆலாய்ப் பறக்கிறது தமிழ்நெஞ்சம்! உதவியில்லை தாயகத்திலிருந்து! மக்களோ உரிமையைப் பறிகொடுத்தவர்! அரசாங்கமோ டில்லி ஆட்டிட ஆடும் பொம்மை!

மொழி உயரவில்லை—இனம் உயரவில்லை—ஏழ்மை நீங்கவில்லை—பின் தங்கிய வகுப்பார் ஏற்றம் பெறவில்லை—சாதி நீங்கவில்லை—அது குறித்த அறிவை மக்களிடையே சுவரொட்டிகள் மூலம் விளக்கக்கூட (சட்டத்திற்கு உட்பட்டு) ஆள்வோருக்கு மனமேனும் இல்லை—அப்படியானால் இவர்கள் என்னதான் செய்தார்கள்? ஒன்பது ஆண்டுகளாக இந்தச் சென்னை மாநிலம் உண்மையிலேயே ஆளப்பட்டதா?

ஐந்தாண்டுத் திட்டத்தின் அழகைத்தான் முன்னரே கண்டோம்; நலிவுறும் நாட்டினர் நாளுந்தான் காண்கின்றனர்!

ஒரு முக்கிய செய்தியைக்கூற மறந்துவிட்டேன். ஐந்தாண்டுத் திட்டம் என்பது சரியல்ல—நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில்! இது ஒன்பதாண்டுத் திட்டம்!

உலகப் போர் முடிந்தவுடன் புதுப்பிக்கும் வேலையொன்று தொடங்கியது இந்த நாட்டில். 'போஸ்ட்வார் டெவலப்மென்ட்' திட்டங்கள் என்று அவை அழைக்கப்பட்டன.

நமது நீர்ப்பாசனத் திட்டங்கள் இருக்கின்றனவே இவை அனைத்துமே அப்பொழுது திட்டப்பட்டவைதான். செலவில் $51\frac{1}{2}$ கோடி, நீர்ப்பாசனத்துக்கும் மின்சாரத்துக்குந்தான் செய்யப்பட்டிருக்கிறது. இவை இரண்டிலும் செய்யப்பட்டவை அனைத்துமே சண்டைக்குப் பின்னர் உடனே உருவாக்கிய வளர்ச்சித் திட்டங்கள். பத்தாண்டு நிரம்பியவை!! எப்படி இருக்கிறது நம் ஆட்சி! உரக்கச் சொல்லாதே, பெரியார் சிரிப்பார்! போடு ஜே—"பாரத் மாதா கி ஜே!"—உயிர் போகும் வரையில் இக்கூச்சலைப் போட்டுக்கொண்டே இரு—அடக்கஞ் செய்வதற்குப் பெரியார் வருவார்!

## வருணப் போர்!

சதுர் வருணியம் புதிதல்ல, வேதங்களைப்போல் அதுவும்மிகப் பழமையானது. சனாதனத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று ஆரிய சமாஜிகள் கூறுவதற்கு அதுவும் ஒரு காரணமாகும். முன்னைய அனுபவங்களை ஆராய்ந்து பார்க்கும்போது தோன்றுவதென்ன? வருணாச்சிரம ஏற்பாடு முழுத் தோல்வியடைந்து விட்டது. எத்தனையோ பிராமணர்கள் க்ஷத்ரியரை வேரறுத்திருக்கிறார்கள். எத்தனையே க்ஷத்திரியர்களும் பிராமணர்களைக் கருவறுத்திருக்கிறார்கள். மகாபாரதத்திலும் மற்றும் பல புராணங்களிலும் பிராமண—க்ஷத்திரிய போராட்டக் கதைகள் ஏராளமாக இருக்கின்றன, யார் முதலில் வந்தனம் செலுத்த வேண்டும், பிராமணனும் க்ஷத்திரியனும் சந்தித்தால் யார் முதலில் வழிவிட்டுக் கொடுக்க வேண்டும் என்பனபோன்ற அற்ப விஷயங்களிலும்கூட அவர்களுக்குள் ஓயாப் போராட்டம் நடந்திருக்கின்றன. பிராமணனைக் காண்பது க்ஷத்திரியனுக்கும், க்ஷத்திரியனைக் காண்பது பிராமணனுக்கும் வெறுப்பாக இருந்தது. எனவே க்ஷத்திரியர்கள் கொடுங்கோலரானார்கள். ஆயுதம் தாங்கும் உரிமையற்ற பாமர மக்கள் கொடுங்கோலரான க்ஷத்திரியர்களின் இம்சையிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு கடவுளை வேண்டினார்கள். க்ஷத்திரியர்களை ஒழிப்பதற்காகவே மகாவிஷ்ணு, கிருஷ்ணனாக அவதரித்ததாக பாகவதம் கூறுகிறது! இவ்வண்ணம் வருணங்களுக்குள்ளேயே போட்டியும், போரும் நடந்து வந்திருப்பதை நாம் அறிந்திருந்தும், நால்வருணத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்து சமூகத்தை மீண்டும் சீர்திருத்தியமைக்க வேண்டும் என்று கூறுவதை யாராவது ஒப்புக்கொள்வார்களா?

—டாக்டர். அம்பேத்கார்.

## எதிரொலி

பார்ப்பன அடிமைகளும், நம் துரோகிகளும் நம் பெயரைக்கூறிப் பதவி பெறுகின்றார்கள்!

—பெரியார், ஈ. வே. ரா.

*ஐயா! காமராசர் நம்மவர், நல்லவராயிற்றே; போனால் போகட்டும் விட்டு விடுங்கள்!*

*   *   *

சட்டசபைக்குப்போய் இதுவரை யாரால் எதை அசைக்கமுடிந்தது?

—பெரியார்

*காமராசர் கல்வித் திட்டத்தை அசைத்தார்; சில பெரும் பதவிகளை அசைத்தார், பறிபோயிருந்த தமிழர்களின் நிலங்களையும் அசைத்துப் பிடுங்கினாராமே!*

*   *   *

கலைஞர்களுக்காக சட்டசபையில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில், மக்களோடு தொடர்பு இல்லாதவர்களை சர்க்கார் நியமிக்கிறது.

—நடிகர். சண்முகம்.

*மக்களோடு தொடர்பு கொண்டவர்கள், மக்களுக்காகத்தானே வாதாடுவார்கள்; சர்க்காருக்கு அது வா தேவை?*

*   *   *

முட்டாளாக இருந்தாலும் சரி, கருப்புச் சட்டை போட்டால்எல்லோரும் பயப்படுவார்கள்.

—எம். ஆர். ராதா.

*முட்டாளாக இருந்தாலும் விபூதி பூசிக்கொண்டால் அவனைப் பெரிய பக்தனென்று மதிப்பது போலவா?*

*   *   *

சேலத்தில் காமராஜருக்கு கருப்புக் கொடி காட்டினார்கள்.

—செய்தி

*அதனால்தான் சேலம் மாவட்டத்தில் மழையில்லை என்கிறார் ஒரு தி. க. தோழர்.*

*   *   *

நவராத்திரி, தீபாவளி பண்டிகைகளுக்கு ரயிலில் கட்டணச் சலுகை.

—செய்தி

*மடமையான மதப்பண்டிகைகளை வளர்க்க, இவ்வாறு தலைகீழாக நிற்கிறது மதமற்ற சர்க்கார்!*

---

வள்ளுவர் நெஞ்சம்.

### உலக வாழ்த்து-ரு.

அதிகாரம்-க.  பாட்டு-ரு.

மலர்மிசை ஏகினான் மாணடி
-சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

*மக்களின் அகமாகிய இருதய தாமரை மலரினிடத்து வாழும் நிலையுடைய உயிருக்கு எல்லாம் அன்பு செய்பவர், இந்த நில உலகத்தில் புகழ்பெற்று என்றும் பாராட்டுக்குரிய வாழ்வைப் பெறுவார்.*

விளக்கம்:

*நெஞ்சை 'இருதய கமலம்' என்று மலருக்கு ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. அந்தத் துடிப்பே உயிர்—கமலமலரில் உறைவதுதான் உயிர்த் துடிப்பு*

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி

---

## தமிழ் இளைஞர்களாம்!

*சேலத்தில் இம்மாதம் 8-9-ல், தமிழ் மாகாண இளைஞர் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. விளம்பரம் செய்தபடி பிரதம நேருவின் குமாரியும், தேபரும் வரவில்லை. பெருத்த ஏமாற்றம்! இளைஞர்களான தமிழ்நாட்டு மந்திரிகள் மூவரும், தேர்தல் பிரசாரப் படையோடு வந்திருந்தனர்.*

*"இலக்கிய மாநாடு" என்ற பெயரால் ஒரு வரட்டுத் திருக்கூத்தும், இரவில் தி. மு. க. எதிர்ப்பு நாடகங்களும் நடந்தன. வின்செண்ட், அனந்தநாயகி போன்ற நாகல் நடைப்பேச்சாளர் முதல், அமைச்சர் பெருமான்கள்வரை எதிர்க்கட்சிகளை, குறிப்பாக தி. மு. க. வைப் படுமோசமாகத் தாக்கிப் பேசினர் பொதுமக்கள் வெறுக்கும் அளவு.*

*பெயர் தமிழ் மாநில மாநாடு, ஆனால் கூட்டத்தின் "பிரம்மாஸ்டம்" காங்கிரசின் பெயரால் தேர்தல் வேட்டையில் இறங்கியுள்ள பிரபுக்களுக்கு, "இவ்வளவு பலவீனமான செல்வாக்கை நம்பியா நாம் காங்கிரசில் சேர்ந்து விட்டோம்" என்ற அச்சத்தையும் குழப்பத்தையும் கிளப்பிவிட்டது! மாநாட்டில் தமிழ்நாடு பெயரமைப்புப்பற்றியோ, பறிபோன தமிழ்நாட்டுப் பகுதிகளைப் பற்றியோ யாராவது நினைத்திருக்க வேண்டுமே! ஊஹ்... அதெல்லாம் யார் செய்கிறவேலை? தமிழர்களா இவர்கள்?*

---

TEL: Gurucures.  PHONE: 248.

### 60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.
அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

# குரு தைலம்.

# குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 14—9—56 | இதழ் 10

## மாதர்கள் முன்னேற.

—— )-( ——

பெண்ணுரிமை மறுப்பது; மனித சமுதாயத்தின் முற்போக்கைக் குலைப்பதாகும். அன்பின் வயப்பட்ட ஆணும் பெண்ணும் இன்பமாக இணைந்துவாழ இல்லற சமத்துவம் தேவை. வாழ்வுரிமை இருபாலர்க்கும் பொதுவானது.

ஆணின் வலிவும், பொலிவும், பண்பும் வேறு; பெண்ணின் வலிவும், வனப்பும், பண்பும் வேறாக இருக்கலாம்; அவற்றிலே உயர்வு இது; தாழ்வு இது என்று பிரித்துப் பேசுதல் மடமை.

ஆணும் பெண்ணும் மனித சமுதாயத்தின் இரு கண்கள். ஒன்றினை உயர்த்தி, அதனில் வெண்ணெயிட்டுப் பூசிப்பதும்; ஒன்றினைத் தாழ்த்தி அதனில் சுண்ணும்பிட்டுத் தூசிப்பதும் பகுத்தறிவு படைத்தோரின் செயலன்று; மனித சக்தியைக் குருடாக்கி ஒற்றைக்கண்ணோடு பரமபதம் செல்லப் பதைத்திடும் சமயச் சழக்கரின் நடைமுறையாகும், அது.

திராவிட சமுதாய வாழ்வில் பகுத்தறிவு போதிய அளவுக்குப் பரிமளிக்கவில்லை. சமய நம்பிக்கை, சமய நெறி, அதன் வழிப்பட்ட மடமைப் பழக்கவழக்கங்கள்தாம் அரசோச்சுகின்றன. பெண் பிறவி ஈனப்பிறவி, படித்தல் கூடாது, பெண்ணுக்கு மோட்சமில்லை, மறுமண உரிமையில்லை, மடமையே அவளுக்கு ஆபரணம், கணவன் சொற்படி நடப்பதே கற்பு, பிள்ளை பெறுவதே பிரதான வேலை, ஒருவன் பலரை மணக்கலாம், ஒருத்தி ஒருவனைத் தான் மணக்க வேண்டும் என்பன போன்ற ஓரவஞ்சனைக் கருத்துக்கள் ஒழிந்த பாடில்லை.

காந்தியடிகள் சமய நம்பிக்கையுள்ளவர் தான்; என்றாலும் பெண்ணின் அடிமை வாழ்வை நினைந்தபோது அவர் இதயம் கொதிக்கின்றது. "ஏகபுருஷன்—ஏகபத்தினி விரதத்தையே நான் ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் மாதர் மறுமணத்தையும் அனுமதித்தே தீரவேண்டும் என்பது என் கருத்து. ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியா?" என்று ஆத்திரத்தோடு வினவுகின்றார்.

முப்பது ஆண்டுகளாக, சுயமரியாதை இயக்கம் பெண்ணுரிமை முழக்கிவந்ததன் பயனாக, பெண்ணினத்திற்குச் சட்ட மூலமாக சிறுசிறு நன்மைகள் கிட்டியுள்ள தென்றாலும், பயனில்லை. சமுதாய நடைமுறைகள்—அடிப்படைக் கருத்துக்கள்—மாறாத வரையில் சட்டம் மதுவிலக்குச் சட்டம்போல் வெறும் வட்டமிட வேண்டியதுதான்; வல்லமையிருக்காது.

பெண்ணினத்தின் உரிமை வாழ்வுக்கும், வளத்திற்கும், பாதுகாப்புக்கும் பணியாற்றப் பெண்களே முனைந்து நிற்றல் மிகப் பொருத்தமான செயல். தி. மு. க. தலைவர்களின் இல்லத்தரசிகளும், தாய்மார்களும், முற்போக்கு எண்ணமுள்ள பெண்களும் கூடி, சென்ற 21—8—56-ல் சென்னையிலே "மகளிர் மன்றம்" தோற்றுவித்துள்ளனர். பெண்களின் உரிமை வாழ்வுக்கு மட்டுமல்லாமல், சாதி—கட்சி வேறுபாடுகளின்றி சமுதாய நலனுக்கும், தமிழகத்தின் உயர்வுக்கும் பணியாற்றுவார்களாம். மனமுவந்து வரவேற்கிறோம்! வாழ்த்துகிறோம்!

மகளிர் மன்றத்தின் பொறுப்புகளிலே; தலைவராக, தோழியர் சத்தியவாணி-முத்து, துணைத் தலைவர்களாக, தோழியர் இராணி-அண்ணாதுரை; அருண்மொழி—வில்வம்; செயலாளர்களாக, தோழியர்கள் புவனேசுவரி-நடராசன், வெற்றிச்செல்வி-அன்பழகன் ஆகியோரும். மற்றும் அலமேலு-அப்பாத்துரை, தயாளு-கருணாநிதி, பரமேசுவரி-ஆசைத்தம்பி போன்றபலர் செயற்குழுவினராகவும் அமைந்திருப்பது பாராட்டற்குரியவொன்று.

மகளிர் மன்றம் ஏட்டளவிலே நின்றுவிடாமல் செயற்படவேண்டும். சென்னைமட்டுமல்லாமல் திராவிடநாடுமுழுதும் நகரங்களிலே—பட்டிதொட்டிகளிலே தி.மு.க. கிளைகள் உள்ள இடங்கள் தோறும் கொம்பும் கிளையுமாகப் பரவ வேண்டும். மகளிர் மன்றத்திற்குப் பொது உறுப்பினர்கள் சேர்ப்பது, கிளைகள் அமைப்பது போன்ற பணிகளிலே, கழகத் தோழர்கள் தமது இல்லத்தரசிகள் ஈடுபட வாய்ப்பளிக்க வேண்டும், உற்சாகம் ஊட்டுதல் வேண்டும்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என்றார் புரட்சிக்கவி பாரதிதாசன். நமது மண்ணடிமை தீர்க்கும் விடுதலைப் பெரும்பணியில்,

# கலக்கம் தவிர்.

பி. எஸ். பி. ரங்கன்.

தாயகம் மீட்சிபெற — தாயகத்தின் தன்மானத்தை தழைத்திடச் செய்ய தன்னலத்தை மற; பொதுப்பணியில் ஈடுபடு.

திராவிடர்கள் திக்கற்றவர்கள், திராணியில்லாதவர்கள் என்ற அவச்சொல்லைப் போக்க முயலு. உன் செயலில் வன்மை ஒளிரட்டும்; பேச்சிலே, எழுத்திலே தீப்பொறி பறக்கட்டும்; அந்த ஒளி அவனி முழுவதும் தெரியட்டும்.

வளமிருந்த வண்டமிழ் நாட்டின் வரலாற்றினை எடுத்துக்கூறு. வகை வகையான—வாய்க்கு ருசியான உணவை நிறுத்து. வயோதிகனைப்போல் உன் உடலை எலும்புக்கூடாக்கிக் கொள். ஏழ்மையில் புரளு. தேசத்திலே லட்சிய வலுவேற்று!

ஏழடுக்கு மாளிகையும் வேண்டாம், எட்டடிக் குச்சிலும் வேண்டாம்: சிறையிலே தள்ளப்பட்டு, ஓரடி நிலவறையில் நின்று தவஞ்செய்ய முந்து.

உன் பத்தரை மாற்றுப் பசும்பொன் மேனியை நித்திரையிலாழ்த்தி நிலைகுலையாதே! நீதியை நிலைநிறுத்த நித்திரையைக் கலைத்து நெறிதவறாது நேர்மையோடு தலைநிமிர்ந்து நில். கண்விழித்துப்பார். பல இரவுகள் சாகட்டும்.

பட்டாடை உடுத்தி, பொன்னணி தரித்து புகழுடம்பை வளர்த்தது போதும்—தியாகத்தழும்புகளேற்று உடம்பில்! புழுதியிலிழுபட்டு வேதனைப்படவா. காராக்கிரகம் காத்துக் கிடக்கிறது. கஞ்சிக்கலயம் ஏங்கித்தவிக்கிறது.

உன் அழகை ரசிக்காதே—அறிவினைப் பெருக்கு; மானங் காப்பாற்றிக் கொள்ள தலைப்படு; உன் கரங்களில் விலங்கிடப் பட்டாலும், காப்பேறினாலும் கவலையுறாதே! கல்நெஞ்சங்கொள்; கலக்கம் தவிர்.

நெஞ்சை நிமிர்த்து; துப்பாக்கி ரவை பாயட்டும்; திரும்பிப்பார்-முதுகையும் துளைத்ததா என்று; சல்லடைக் கண்கள் தெரிகிறதா? சந்தோசப்படு. இல்லையா? புறநானூறு கேலி செய்யும்! வெட்கித்தலைகுனி. வேதனைப்பட்டு சா, இற, செத்துமடி!

கடற்காற்றைவிடு: கூரைக்காற்றை இழு. குப்பைமேட்டில் வசி! கூனிக்குறுகியோரிடம் பழகு. அனுபவம் பெற்று அங்கே போ. அசைக்க முடியாது உன் ஆற்றலை!

அல்லல்போக்கி அறம் வளர்க்க உன் அங்கத்தை வலுவாக்கு. உடலிலே வாட்களை மோதவிடு. ஈட்டிகளால் குத்தப்படு, வேல் முனையில் சாய்ந்துபார். முட்களில் படுத்துப்பார். உனக்குக் கிடைக்கப் போகும் பரிசுகளுக்கு பரிச்சயம் இது.

ஆசையால் அறிவிழக்காதே, உன் காதல் சோதி—அணையாவிளக்கு—இல்லற இன்பம்—இணைபிரியா இசைக்குயில் இணைந்தால், இசைந்தால் உன்னுடன் அழைத்துக்கொள், இல்லையானால் விடைபெற்றுக் கொள்—வழியனுப்பட்டும்.

கயல் விழியாளின் கடைக்கண் பார்வைகண்டு கலங்காதே! அந்தக் கூரிய வேல்விழி மாதுவிடும் கண்ணீரைத்துடை. புறக்கடைக்கு அழைத்துப் போ. ஆகாயத்தில் திரண்டுவரும் கருமேகத்தைக் காட்டு. முகில்மறைத்த முழுமதியின் நிலையைதெரிந்து கொள்ளட்டும். இடியும் மின்னலும், கருமேகங் கலையும் வரைதானே? முகில் விலகிவிட்டால் முழுமதி தெரியாதா? அதுவரை தானே அந்த ஆர்ப்பாட்டம். அதே போல வாழ்க்கையிலும் இன்னல்கள் இருக்கத்தான் இருக்கின்றன. ஒருநாள் அகன்றுபோம் என்று புரிந்துகொண்டால் நல்லது, இல்லை...புறத்தைக் காட்டு, அகத்தை நீட்டு, வீரப்பெண்களின் வரலாற்றை எடுத்துக்கூறு. கட்டாயம் வெற்றித் திலகமிட்டு அனுப்புவாள். அருகே நிற்கும் பாலகனை வாரி அணைத்து உச்சிமோந்து அவள் பக்கலில் விட்டுவா.

நீ கண்ட தெய்வங்கள், தாய்தந்தையரை வணங்கி விடைபெற்றுக்கொள்.

தாயக மீட்பு வேலையில் தலைமை தாங்கு. அடிமைத்தளை அகலும்வரை உன் அடிமைத்தலையைத் துரும்பாக மதி. துயரத்தைத் தூக்கி எறி. வீரமகனே! தூங்கினதுபோதும் எழுந்திரு! பொங்கியெழு புதுவாழ்வு பெற!

★★

ஜனநாயகவளர்ப்புத்தொண்டில் உரிமையும், தகுதியுமுள்ள தாய்மார்கள் ஈடுபட வேண்டாமா? வேண்டுமெனில் தொடங்குங்கள் உங்கள் ஊரிலும் ஒரு மகளிர் மன்றம்! வாழ்க பெண்ணினம்! வளர்க பெண்ணுரிமை! ஓங்குக மகளிர் மன்றம்!

# தோழர்கட்கு.

வணக்கம்!

"பகுத்தறிவு" இதழுக்குச் சிறுகதைகள் வந்து குவிகின்றன. மகிழ்கின்றேன். பகுத்தறிவு இலட்சியத்தை ஒட்டி சிறுகதை இலக்கியம் வளரவேண்டும் என்பது எனது நெடுநாளைய ஆசை. எனினும், பக்கங்களின் குறைவு காரணமாகவும், "நந்திவர்மன்" தொடர்நாடகம் வரவேண்டியிருப்பதாலும் இனி சிறுகதைகள் இடம் பெறா. தோழர்கள், தயைசெய்து அனுப்ப வேண்டாம்.

விரைவில் "பகுத்தறி"வின் அளவைச் சற்று பெரிதாக்கவும், எழுத்துக்களை மாற்றவும் ஏற்பாடுகள் செய்து வருகிறோம். அதுபோது மீண்டும் கதைகள் இடம் பெறும். எழுதுவதில் ஆர்வம் உள்ளவர்கள், இதழ் வளர்ச்சியிலும் சிறிது அக்கறை காட்டி, கையொப்பதாரர்களைச் சேர்த்தளிப்பின் எதிர்கால முன்னேற்றத்திற்கும், அவர்களின் எழுத்தார்வத்திற்கும் ஏற்ற பணியாக இருக்கும். சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் எழுதவேண்டும்? இதனைத் தோழர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,

ப. கண்ணன்.

ஆசிரியர், ப. கண்ணன்
வரையும்,
பல்லவ மன்னன் பைந்தமிழ் நந்தியின் வல்லமை செப்பிடும் வாழ்க்கை நாடகம்.
நந்திவர்மன்
28—9—56
'பகுத்தறிவு' இதழில் தொடங்குகிறது; சுவையுங்கள். விற்பனையாளரிடம் சொல்லிவிடுங்கள் பிரதிக்கு இப்போதே.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● புலியூர்—வலையாபதி,
எளம்பிள்ளை,
சேலம் மாவட்டம்.

மா குருநாதன், திருவண்ணாமலை.

கே: இனத்தினால் இமயமலைச் சிகரத்தையடையும் மக்கள், நடத்தையால் பசிபிக் கடலின் பாதளத்தை அடைவதேன்?

ப: பகுத்தறிவு நெறி பயிலாததே காரணம்.

*    *    *

கே: காளை மாட்டுச் சின்னத்தையுடைய காங்கிரஸ்காரர்கள், உழவர்களை முன்னேற்றாமல், பதவி வேட்டையில் காலங்கழிப்பதேன்?

ப: பசிக்குப் பருத்திக் கொட்டை தின்னுங்கள் என்று சென்னாலும் ஒப்புகின்ற தமிழர்களை மாடாகவே கருதிவிட்டபின் மருள்வார்களா? வாழ்வு அருள்வார்களா?

கே கோவிந்தசாமி, சென்னை-1

கே: ஆசிரியர், ப. கண்ணனின் ''பாசவலை''யின் கதை சரித்திரமா? சமூகமா? கடவுள்களின் திருவிளையாடலா?

ப: அது சரித்திரமோ, சமூகமோ, புராணமோ அல்ல; கடவுள்களுக்கு அதிலே வேலையுமில்லை ''பாசவலை'' பாசத்தை விளக்கிடும் ஒரு நாடோடிக் கற்பனைக் கதை.

*    *    *

கே: வரப்போகும் தேர்தலில் நிற்கப் போகும் காங்கிரஸ் பார்ப்பனரை, தி. க. ஆதரித்துப் பேசுமா? எதிர்த்து ஒழிக்குமா?

ப: பார்ப்பானே வெளியேறு என்பதுதான் எங்களது வீரலட்சியம்; என்றாலும், இவர் காமராசரை ஆதரிப்பதால் இங்கேயே இருக்கட்டும், இவருக்கு வோட்டுப் போடுங்கள் என்று கெஞ்சினாலும் வியப்பிருக்காது!

புலியூர்-வலையாபதி, எளம்பிள்ளை.

கே: திராவிடக் கழகம் ஏன் நம்மைத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டுவிட்டது?

ப: திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் பிறந்தது? வளர்ந்தது? வாழுகிறது? உரிமைக் குரல் எழுப்பிப் போரில் குதிக்கிறது? அதனால்தான்!

*    *    *

● கே: சினிமாவை ஒழிக்க வேண்டுமெனச் சொல்லுபவர்களே சினிமா பார்க்கிறார்களே; ஏன்?

ப: தி. மு. க. என்ற மூன்றெழுத்தை எண்ணியே சினிமா என்ற மூன்றெழுத்தைத் துப்புகிறோம் என்பதை, செயல்மூலம் ஒப்புகிறார்கள் அவர்கள்!

பா நடராசன், கோவை.

கே: திரு. ம. பொ. சி. யைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: தமிழ், தமிழன், தமிழ் நாடு வாழ்வுபெற, வடநாட்டுக் கரடியை அணைத்துக்கொண்டு குழம்புகிற அருமை மனிதர்.

*    *    *

கே: கிராம வாழ்க்கை நகர வாழ்க்கை; இவற்றில் சிறந்த வாழ்க்கை எது?

ப: நகரின் வசதிகளைக் கொண்ட கிராம வாழ்க்கை.

கே. ஆர். வெங்கடராமன்.
சிறுதையூர்.

கே: விரோதத்தை நீக்குவது இலக்கியமா? இலக்கணமா?

ப: இரண்டுமில்லை. பகுத்தறிந்து தெளிவு பெறும் பண்புதான்!

## கலைக்கூடம்

## மகாகவி காளிதாஸ்.

காளிகா தேவியின் கருணையால் கவிஞானதாகச் சொல்லப்படும் ''மகாகவி காளிதாஸ்'' தமிழ்ப் படத்தை பார்த்தேன். சி. ஹொன்னப்ப பாகவதர் கன்னடத்தில் தயாரித்த இந்தக் ''காளிதாச''னை, ஆர். கல்யாணராமன் என்பார் தமிழில் ''டப்பிங்'' செய்திருக்கிறார்.

மொழி மாற்று வேலை ஓரளவுதான் வெற்றியளித்திருக்கிறது. சமஸ்கிருத ஸ்லோகங்களையும், பாட்டுக்களையும், கன்னடத் தமிழ்க் கதம்பப் பேச்சுக்களையும் தமிழ் என்று காட்ட தைரியமாக முனைந்து, தலைகுப்புறக் கவிழ்ந்துவிட்டிருக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்!

திரைக்கதை எழுதிய கே, ஆர் சிவராம சாஸ்திரியாரே, டைரெக்ஷன் பொறுப்பையும் ஏற்றிருக்கிறார். சாஸ்திரியார் தமக்குள்ள சமஸ்கிருத நூலறிவையும், பக்திப் பெருக்கையும் கலையழகோடு காட்ட முனைந்திருக்கிறார்; காலம் ஏற்க மறுத்து விட்டது.

ஹொன்னப்ப பாகவதரின் பேச்சுதான் எடுபடாதவையென்றால், பாட்டுக்களும் எடுபடவில்லை. திராவிட நடிகை ராஜசுலோசனா வந்து போகிறார்.

படத்தில் ஒரு சிறந்த அம்சம்; காளிதாசன் காளியின் அருளால் மட்டும் கவிஞனாகிவிட்ட மூடனல்ல, ஏற்கனவே கல்விகற்று மறந்தவன் என்று காட்டுவதுதான்! தமிழில் இதுபோன்ற படங்களை மொழிப்பதிவு செய்யக்கூடாது என்பதற்கு இந்த மகாகவி ஒரு எடுத்துக்காட்டு

—இந்திரசித்தன்.



ஏழையின் துயர்கேட்டு மனம் பொங்கி, கல்லுருகப் பாட்டிசைத்த காவலன். மாடர்ன் தியேட்டர்ஸ் ''பாசவலை''யில் நடிப்பு மன்னன் எம். கே. ராதா.



# பிள்ளையார் பெருமை

இந்து மதக்காரர்கள் 8—9—56 சனிக்கிழமை விநாயக சதுர்த்தி விழா கொண்டாடினர். அவர் கடவுள்களுக்கெல்லாம் முதன்மையானவராம்; சக்தி வாய்ந்தவராம். நம்புகிறார்கள் கம்யூனிஸ்டுகள் கூட! புராணங்களில் உள்ளபடி அவரின் பிறப்பின் லட்சணத்தைப் பாருங்கள்:

## முதற் கதை.

அகில மாதாவாகிய பார்வதியம்மன் ஓர்நாள் குளிக்கப் போகையில், தனது அழுக்கைத் திரட்டி ஒரு குழந்தையாக்கி ஸ்நான அறைக்கு வாயில் காவலாக வைத்துவிட்டுச் சென்றதாகவும், அச்சமயம் பரமசிவன் அவ்வறைக்குள் புகவந்ததாகவும், அப்பிள்ளை அவரைத் தடுத்ததினால் அப்பிள்ளையை வெட்டியெறிந்துவிட்டு உள்ளே சென்றதாகவும், பின்னர் உமாதேவியின் துயரத்தைத் தணிப்பதற்காக அப்பிள்ளையை எழுப்ப எண்ணியபோது, அப்பிள்ளையின் தலை காணாது போய்விட்டதால் யானைத் தலையை வைத்துப் பொருத்தி யெழுப்பியதாகவும் சொல்லப்படுகிறது. தோழர்களே! இவ்வரலாற்றை பகுத்தறிவுடைய எவனாவது ஒப்புக்கொள்வானா?

எல்லாம் தெரிந்த சிவபெருமானுக்கு இக்குழந்தை உமாதேவியால் சிருஷ்டிக்கப்பட்டதென்பது தெரியாதா? சர்வ வல்லமையுள்ள கடவுள் வாளால் வெட்டித்தான் அக்குழந்தையைக் கொல்ல வேண்டுமா? "இக்குழந்தையிறக்கக் கடவது" என்றால் இறந்தொழியாதா? இக்குழந்தை இறந்தால் உமாதேவிக்குத் துக்கம் வருவானேன்? வேறு ஒரு குழந்தையைச் சிருஷ்டிக்க முடியாதா? காணாது மறைந்த தலையைக் கண்டு பிடிக்க முடியாத கடவுளும் ஒரு கடவுளா? யானைத் தலையைத்தான் ஒட்டவைக்க வேண்டுமா? மனிதன் தலையொன்று கிடைக்காமலா போய் விட்டது?

## இரண்டாவது கதை.

ஒரு காட்டில் யானைகள் கலவி செய்து கொண்டிருப்பதைப் பரமசிவனும் பார்வதியும் காண நேரிட்டதாகவும் உடனே பரமசிவனுக்கு மோகம் தலைக்கேறி உமாதேவியைக் கூடியதாகவும், அப்போது உமாதேவிக்கு யானை முகக் கடவுள் பிறந்ததாகவும் கூறப்படுகிறது.

சர்வ வல்லமையுள்ளவரும், இருந்தவிடத்திலே சர்வத்தையும் அறியவல்லமையுள்ளவருமான கடவுள் காட்டிற்கு எதற்காகச் சென்றார்? அங்கே சென்றாலும் யானைகள் கலவி செய்வதைக் கண்டால் காமம், வெகுளி முதலிய குற்றங்களற்ற கடவுளுக்கு, காம உணர்ச்சி எப்படி உண்டாகும்? உண்டாகிக் கூடினாலும் யானை முகக் கடவுள்தான் பிறக்க வேண்டுமா? என்னே கடவுளின் தன்மை!

## மூன்றாவது கதை.

'விநாயகர் புராண'த்தில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருக்கிறது. எல்லா உலகங்களையும் ஈன்ற உமாதேவியார், ஒரு காலத்தில் கருப்ப முற்றிருந்ததாகவும், அப்போது ஓர் அசுரன் காற்று வடிவமாக உமாதேவியின் கருப்பைக்குள்ளிருந்த குழந்தையின் தலையை வெட்டி விட்டதாகவும், அதனால் ஒரு யானையின் தலையை வெட்டிப் பொருத்தி உயிர் பெறச்செய்து யானை முகப் பிள்ளையாரை ஈன்றதாகவும் கூறப்படுகிறது.

உமாதேவி குழந்தைகள் வேண்டுமென்று நினைத்தால் குழந்தைகள் உண்டாகிவிடாதா? இதற்காக உமாதேவி கருப்பமுற்றிருக்க வேண்டுமா? உலக மாதாவாகிய பார்வதியின் கருப்பத்தை அசுரனால் அழிக்க முடியுமா? அன்றியும் கருப்பைக்குள்ளிருக்கும் குழந்தையின் தலையை வெட்ட முடியுமா? அல்லது கருப்பைக்குள் அசுரன் புகுந்திருக்க முடியுமா? காற்று வடிவமுடன் உள்ளேசென்ற அசுரன் உருவமுள்ள கத்தியை எப்படி வைத்திருக்க முடியும்? கருப்பைக்குள் கெடுதியுண்டானால் பார்வதி உயிர்தப்ப முடியுமா? சர்வ சக்தியுடையவளென்றால் அசுரன் புகுந்தது தெரியாமலா இருக்கும்? அப்படியிருந்தாலும் யானைத்தலையைப் பொருத்த வேண்டிய அவசியமென்ன? யானைத் தலையை கருப்பைக்குள் எப்படிச் செலுத்த முடியும்? அந்தோ! எத்தனை பொருந்தாப் புளுகுகள்!!

## நான்காவது கதை.

தக்கயாகப் "பரணி"யென்ற நூலில் அடியில் வருமாறு பிள்ளையார் சரித்திரம் கூறப்பட்டிருக்கிறது.

தக்கன் என்னும் அசுரன் ஒரு யாகம் செய்துகொண்டிருந்ததாகவும், அந்த யாகத்தை அழித்து வரும்படி பரமசிவன் விநாயக் கடவுளை ஏவினதாகவும், (அப்போது விநாயகருக்கு மனிதத் தலையிருந்தது போலும்) தக்கன் விநாயகனுடைய தலையை வெட்டி விட்டதாகவும், பின்னர் பரசிமன் ஏவலால் ஆறுமுகக் கடவுள் அங்கு சென்று அண்ணனைத் தேடிப் பார்த்ததில் தலை காணப்படாமல் முண்டம்மட்டும் காணப்பட்டதாகவும், அதனால் முருகக் கடவுள் ஒரு யானையின் தலையை வெட்டி வைத்துப் பொருத்தி விநாயகக் கடவுளையெழுப்பியதாகவும் சொல்லப்படுகிறது.

சர்வ வல்லமையுள்ள பரமேசுவரன் ஒரு அசுரன் யாகத்தை அழிப்பதற்காகத் தனது மகனைத்தான் அனுப்ப வேண்டுமா? 'அவன் யாகத்தோடு அழிய வேண்டும்' என்றால் அழிய மாட்டானா? அந்த முருகக் கடவுளுக்கு இறந்தவனை எழுப்பும் சக்தியிருந்தால் அவர் அண்ணனாகிய பிள்ளையாருக்கு ஏன் அந்தச் சக்தியில்லை? அந்தச் சக்தியிருந்திருந்தால் தக்கனால் இறக்கவேண்டிய அவசியமில்லையே? அப்படியிருந்தாலும் ஆறுமுகக் கடவுள் யானைத் தலையை ஏன் பொருத்த வேண்டும்? அன்பிற்கினிய நண்பர்களே! இந்த யோக்கியதையுள்ள விநாயகனுக்குப் பிள்ளையார் சுழி எப்படிப் போடுவது? இத்தகையவனைக் கடவுளென்று எப்படி நம்புவது? இக்கதைகளையெல்லாம் அறிவுடையார் ஒப்புக்கொள்வார்களா? இந்தக் கூமாலக் கடவுளைக் கொண்டாட அரசாங்கம் விடுமுறையளிக்கலாமா?

—கு. அ.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]


என்ன சாதித்தது' என்று கேலி பேசுகின்றனர். இவர்களது ஐந்தாண்டுத் திட்ட சாதனைகளையாவது பாரீர். தென்னாட்டில் திட்டமிட்ட கீழ்பவானி, வைகை, அமராவதி, மணிமுத்தாறு திட்டங்கள் எல்லாம் ஒன்று சேர்த்தால்தான் ஒருசில கோடிகளாகும் ஆனால் வடநாட்டில் பீகார் கோசி அணைக்கு ரூ 60 கோடி என்றும், ஒரிசா ஹீரா குடாவுக்கு 90 கோடி என்றும், வங்காள தாமோதர பள்ளத்தாக்கு அணைக்கு முதல் கட்டமாக 110 கோடி என்றும், பக்ரா நங்கல் திட்டத்திற்கு 130 கோடி என்றும்பல ஆயிரங்கோடிகள் செலவிடுகின்றனர்— செலவிட திட்டமிட்டிருக்கின்றனர். இந்த அநியாயத்தை எவர்தான் பொறுக்க முடியும்? இதுபற்றி எங்கள் மொழியில் கேட்டால் புரியாது. அவர்கள் பத்திரிகையான 'சுதேசமித்திரன்' பாஷையில் கேட்கிறோம். 'ஏன் இந்தப் பாரபட்சம்?' என்று! தேசிய ஏடு, 60 ஆண்டுகட்கு முன்பு தொடங்கப்பட்டது, அரசியலாரின் நடவடிக்கைகளை ஆதரிக்கும் ஏடு, எழுதுவதோடு மட்டுமல்ல, படமே போட்டுக் காட்டியது — ஐந்தாண்டுத் திட்டங்களில் இந்திய சர்க்கார் எப்படி வடநாட்டை வாழ செய்யவும், தென்னாட்டை தேயச் செய்யவும் திட்டமிட்டிருக்கிற தென்பதை! இதை எளிய மக்களும் எளிதில் புரிந்து கொள்கின்றனர். இதற்கெல்லாம் அந்தப் பிரசார பீரங்கிகள் என்ன பதில் சொல்லப் போகின்றன?

*     *     *

மத்திய சர்க்கார் தொடர்பற்ற சுதந்தர சமதர்ம திராவிடக் குடி அரசு சமைக்க நாம் போராடுகிறோம். அதற்கான அடிப்படைத் திட்டங்களுடன் தேர்தலில்ஈடுபடுகிறோம். சற்று சிந்தித்துப் பாருங்கள், 'தொழிலபிவிருத்தி வகையில் தென்னகத்துக்கு வடநாட்டாட்சி இழைக்கும் தீங்குகளை! மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த டாலாய் நகரம், ஒரிசாவில் உள்ள ரூர்கலா, வங்காளத்தைச் சேர்ந்த துர்காபூர் ஆகிய மூன்று இடங்களில் உருக்குத் தொழிற்சாலை நிறுவ 380 கோடி ஒதுக்கி உள்ளனர். அதுமட்டுமா? டாடா என்ற தனிப்பட்ட முதலாளி ஒருவரின் தொழில் விஸ்தரிப்புக்காக மேலும் 75 கோடி ரூபாய் கடன்தர, உலக பாங்கிக்கு சிபார்சு செய்திருக்கின்றனர். அதுமட்டுமல்ல, ஜாமீனாகவும் இருக்க சம்மதிக்கின்றனர். எங்காவது உண்டா இந்த அநியாயம்? டாடா என்ன அரிச்சந்திரன்வீட்டு வளர்ப்புப் பிள்ளையா? கடன் திரும்ப செலுத்தப்படாவிட்டால், கட்டவேண்டியவர்கள் சர்க்கார் அல்லவா? சர்க்கார் என்றால் மக்கள் தானே! இத்தகைய மதிகெட்ட செயல் நடக்க 'மத்திய சர்க்கார் இடம் கொடுக்க நாம் விடலாமா? எனவேதான் தனித் திராவிடம் கேட்கிறோம். அவர்களது ஓரவஞ்சனை செயலுக்கு மற்றுமோர் உதாரணம் கேளுங்கள். 'அமோனியம் சல்பேட் சிந்திரியில் தயாரிக்க 27 கோடியும், சித்தரஞ்சன் ரயில் என்ஜின் தொழிற்சாலைக்கு 32 கோடியும், மற்றும்பல ஆலைகள் தொழிற்கூடங்கள் தோன்ற வாய்ப்பளிக்கின்றனர். ஆனால், தென்னாடு செழிக்க தென்னக மக்கள் வாழ அவர்கள் ஆலோசித்துக் கொடுத்துள்ள திட்டம் சொம்பிலிருந்து சீப்பு, உலக பேனா எதைக்கொண்டும் எழுத இயலாத காகிதம், பனைநார், வார்தா செக்கு. அதெல்லாவற்றையும்விட மாபெரும் தொழிற்சாலை அப்பளத் தொழிற்சாலை இவைகளை அமைக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். இதை அமுல்படுத்தும் சென்னை மந்திரிகள், வெளிநாட்டுக் காட்சிகளைக் கண்டுகளித்து வந்தவர்கள் இந்த அபூர்வக் குடிசைத் தொழிலை ஆதரிக்கவும் உபதேசம் செய்கின்றனர். நான் வடநாடெல்லாம் சுற்றிபார்த்தேன் எங்கும் இத்தகைய குடிசைத் தொழில் வளர்ச்சியில் எவரும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக மாபெரும் நூல் ஆலைகளும், விஞ்ஞான பொறி கூடங்களும், டால்டா வனஸ்பதி ஆலைகளும் மலிந்திருக்கின்றன. இத்தகைய வஞ்சகத் திட்டங்களிலிருந்து விடுபடவும், தேயும் தென்னகம் வளம்பல பெறவும் நாம்விடுதலைபெற்றாக வேண்டும். அதற்கான ஏற்பாடு வருங்கால தேர்தல். தேர்தல் நல்லதொரு முடிவைக் காட்டும்!

திரட்டியவர்:
—"கிளர்ச்சிப்பித்தன்"


அகத்திற்கழகு அன்பும் அறிவும்;
முகத்திற்கழகு மூக்குக் கண்ணாடி.




சிறந்த கண்ணாடி, பிரேம்களுக்கு:—
ராதா ஆப்டிகல்ஸ்,
முதல் அக்ரகாரம், சேலம்—1.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணன் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

ஆசிரியர் :- ம. கண்ணையன்


**கலைஞன்.**

கைவேலை செய்பவன் வேலைக்காரன்; கையாலும் மூளையாலும் வேலை செய்பவன் வினைஞன்; கை, மூளை, உணர்ச்சி இவைகளை ஒன்றுபடுத்தி வேலை செய்பவன் கலைஞன் என்று பாகுபடுத்தலாம்.

—இரா. நெடுஞ்செழியன்.


கழக வார இதழ். ★ ★ ★ விலை அணு ஒன்று.

மலர் 6. | சேலம் 21-9-56. வள்ளுவராண்டு 1987. புரட்டாசி 6. | இதழ் 11


# சம்பத் அறிக்கை; சர்க்கார் பதில் எங்கே?

வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சியினரால் தென்னாட்டு நலன், தென்னாட்டு வளம் புறக்கணிக்கப்படுவதற்கு எத்தனை, எத்தனையோ ஆதாரங்கள் உண்டு. அவற்றிலே, சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலை அமைப்பதற்கு, அவர்கள் கவலைப்படாது காலங்கடத்தி வருவதும் ஒன்றாகும்.

வடநாடு நமக்குச் செய்யும் அநீதிகளை மக்கள்மன்றத்திலே வன்மையாக எடுத்துக் கூறி கண்டிப்பதற்கு, தென்னகத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் உள்ளது. அதன் தலைவர்களிலே ஒருவர் தோழர், ஈ. வே. கி. சம்பத்து. தென்னாட்டுக்கு உதவ முன்வரும் வெளிநாட்டார் உதவியைப் பொருட்படுத்தாத அரசினர் போக்கினைப் பாருங்கள். தோழர், சம்பத்து அவர்கள் தமது அறிக்கையிலே கூறுகின்றார்:

சோவியத் பிரதமர் புல்கானினும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் குருஷேவும், இந்தியத் துணைக்கண்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு இரஷ்யா திரும்பின சில நாட்களுக்கெல்லாம், பின்வரும் உதவி தரும் அறிக்கை வெளிவந்திருக்கிறது; அந்த அறிக்கையை இன்றுவரை இந்தியப் பேரரசு மறுக்கவில்லை.

சேலத்தில் அலுமினியம் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு சோவியத் அரசாங்கம் தர அறிவித்திருந்த உதவியைதான் ஏற்றுக்கொண்டதா—இல்லையா? ஏற்றுக்கொள்ள மறுத்திருந்தால் அதற்கு நியாயமான சமாதானம் என்ன?—என்பது பற்றி எல்லாம் இந்தியப் பேரரசு, இதுவரை மூச்சுப் பேச்சு இல்லாமல் இருந்து வருகிறது.

தொழில் துறையில் தென்னிந்தியா பின்தங்கிக் கிடக்கிறது என்ற உண்மை, இரஷ்யத் தலைவர்களாலும் நன்கு உணரப்பட்டிருக்கிறது என்பது, அவ்வறிக்கையின் தனிச் சிறப்பாகும்.

இவ்வறிக்கையின் உள்ளடக்கம் குறித்தும், அவ்வறிக்கையில் காணப்படும் இரஷ்ய உதவியை ஏற்கவும்-மறுக்கவும் செய்யாது வாயடைத்து இருந்துவரும் இந்தியப் பேரரசினுடையவும், சென்னை ஆட்சியினுடையவும் நாணயமற்ற—நேர்மையற்ற போக்கை, நான் பற்பல கூட்டங்களில் எடுத்துக் காட்டிக் கண்டித்துள்ளேன்.

நான் பேசிவருவதின் உண்மையைத் தாங்கலும் ஆதாரத்துடன் தெரிந்திருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பலரும், ஏதோ நானுகக் கற்பனை செய்துகொண்டு அவ்வாறு பேசி வருகிறேன் என்ற சந்தேகத்தில் சிலரும், இரஷ்ய உதவி பற்றிய அறிக்கையைப் பிரசுரிக்கும்படிக் கோரி, எழுதி வருகின்றனர். தனித்தனியாகக் கடிதம்எழுதி உண்மையை எடுத்துக்காட்ட இயலாத அளவில், கோரிக்கைக் கடிதங்கள் என்னிடம் குவிந்து கிடக்கின்றன.

கோரினவர்கள் உண்மை அறியவும், இரண்டிலும் சேராது இருக்கும் பெரும்பான்மையினர் விஷய விளக்கம் பெறவும், 'மெயில்' இதழில் வந்த இரஷ்ய உதவிச் செய்தியை ஆங்கிலத்திலும், தமிழிலும் (தமிழில் மட்டும். ஆ-ர்) இதன்கீழ் தந்திருக்கிறேன். கழகத் தோழர்களும், மற்ற பொதுமக்களும் உண்மையை உணர்ந்து, இந்தியப் பே

(8-ம் பக்கம் பார்க்க)

# பெரியார் குரங்கு!

"இளநீரின் அருமையை அறியாத குரங்கு அதைக்கீழே கொட்டுவதுபோல், ராமாயணத்தின் அருமை பெருமைகளைப் புரிந்துகொள்ளாதவர்கள் அதை எரிக்க முற்படுகிறார்கள்."

வினோபாவின் இந்தப் புன்மொழிக்குப் படம்போட்டுக் காட்டுகிறது 16-9-56 "கல்கி" இதழ். நமது கண்கள் சிவக்கின்றன.

ஒரு தென்னைமரம், கீழே மூன்று குரங்குகள் நிற்கின்றன. மரத்தின் மேல் ஒரு குரங்கு—பெரியார்! இளநீரைப்போத்து, மேலிருந்து நீரைக் கொட்டுகிறாராம்! இது புண்படுத்தும் கேலிச் சித்திரம்!

"கல்கி" எழுதுகிறது என்றால் ராஜாஜி சொல்லுகிறார் என்பதே பொருள். ராஜாஜியோ பெரியாரின் அந்தரங்க நண்பர்; நம்பிக்கைக்கு உரியவர்; என்றாலும் அவர் ராமாயணத்தைப் பாதுகாக்க வேண்டியவர்—ஆரியர். இவரோ அதனை ஒழிக்கவேண்டியவர்-திராவிடர்!

ஒரு ஆரியத் தலைவர், திராவிடத் தலைவரைக் குரங்கு என்கிறாரே; நியாயமா இது? நியாயந்தான் என்கிறார். ராமாயண பக்தர். ஆமாம்; பிறகென்ன? ராமாயணமும் இப்படித்தானே சொல்லுகிறது? அதைத்தானே ராஜாஜியும் சொல்லுகிறார், காமராஜியும் சொல்லுகிறார்! இந்தப் பிரச்சினையிலே "அவாள்" ஒன்றுதானே! இருந்தாலும் அவாள் இருவருமே பெரியாரின் நண்பர்கள். நாமோ....? நமதுகழகமோ....?

# விந்தை மனிதர்!

"இளந்தமிழன்"

கிணற்றிலே நெடுநேரம் மூழ்கி ஆடியபின் கரையேறினால் உலகமே புகைமண்டலமாகக் காட்சி அளிக்கும். கோளாறு கண்ணிலேதான்—மண்ணிலேயல்ல! பித்தனுக்கு வையமே பித்தர் வாழ்விடமாகத் தோற்றும். நம்மைக் கண்டு சிரிப்பான்—எள்ளி நகையாடுவான்—சிலநேரம் அழவும் செய்வான். பாவம், அந்த ஏழைக்காக நாம் இரக்கப்பட வேண்டுமேயல்லாது, அவன் மீது எரிந்து விழலாகாது. அறுசுவை உண்டி; அதனினும் இனிய மனையாள்; அன்போடு ஊட்டுவாள்—கசக்கிறது என்று காறி உமிழ்வான் கொண்டவன். அவள் அன்பு நெஞ்சமோ வேகும். அவன்தான் என்ன செய்வான்? பாழும்காய்ச்சல் உண்டியைக் கசக்கும்படிச் செய்கிறது. பசி வேகத்தில் அவனால் அதை உணரமுடியவில்லை. இப்படிக் கண் சிவப்பால் திகைப்போரும், அறிவுப் பிறழ்ச்சியால் அலைவோரும் காய்ச்சலின் விளைவால் தொல்லைப்படுவோரும் இந்திய நாட்டில் பல்கிக்கொண்டே வருகிறார்கள். சிலர் சிரிக்கிறார்கள்! சிலர் அழுகிறார்கள்! சிலர் இரண்டுங்கெட்டாந்தனமாக அங்கும் இங்கும் ஓடுகிறார்கள். உழைப்புக்கோ ஒன்றுமில்லை—ஓய்வுக்கோ நொடிநேரமும் கிடைப்பதில்லையாம்! விந்தையான மனிதர்கள்!

9-8-56 வியாழக்கிழமை மாலை 7-மணிக்கு இத்தகைய மனிதர் ஒருவரைச் சந்தித்தேன். சென்னையிலே உள்ள திருமயிலையிலே—அதுவும் ரசிக ரஞ்சனி சபாவிலே அவரைக்காணும் பேறு இந்த ஊனக் கண்களுக்குக் கிட்டியது. நல்ல சிவப்பான மேனி. நரைத்த தலை. தளர்ந்த மேனிதான், என்றாலும் உணர்விலோ, சொல்லிலோ தளர்வில்லை—தட்டுத்தடங்கலில்லை. இவ்வளவு முதியவருக்கா இந்த நிலை நேர வேண்டும்?

நான் குறிப்பிடும் ஆள், பழைய சோஷலிஸ்ட் கட்சித்தலைவராக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன், பேச இருந்த தலைப்போ நிலக்கொடை இயக்கம். இந்தநாட்டிலே நடப்பது குடியாட்சியல்ல கோனாட்சிதான் என்பதை மெய்ப்பிப்பதற்காகவே நடந்துவரும் இயக்கம் அது என்பது எனக்கு அதைப்பற்றிய கருத்து. இருந்தாலும் அந்தப் பெரியவர் ஏதோ தத்துவ விளக்கம் தருகிறார் என்றார்கள். எனவே வியர்வை சொட்ட அங்குவிரைந்தேன். நான் என்றுமே நுழைவதில்லை என்று கொண்டிருந்த சூளையும் மறந்து, எனது பாதங்களால் அந்த அவையைப் புனிதப் படுத்தினேன். கடைசியிலே அது இப்படிக் கூத்தாக முடியுமென்று நினைக்கவேயில்லை! கலித்தொகையிலே ஒரு அழகான பாட்டு: காதலனை எதிர்நோக்கிக் காத்திருக்கிறாள் ஒரு கட்டிளம் பெண். திணிந்த இருள். அந்நேரத்தில் அங்கு எவன் வருகிறான் தெரியுமா? குட்டத்தால் உடல் முடங்கி, தலை வழுக்கலாகி, நாற்றமெடுத்தும் ஆசை மட்டும் அவியாமல் கொழுந்து விட்டெரியும் ஒரு பார்ப்பனன்! ஜெயப்பிரகாஷ் கூட்டம் முடிந்து திரும்பும்போது ஏனோ இந்தப்பாடல் என் நினைவுக்கு வந்தது.

நிலக்கொடை இயக்கம் பற்றிய அவரது தத்துவார்த்தம் நமக்கு வேண்டாம். அவர் மனக்குழப்பத்தில் குழறிய சொற்களைப் பற்றியதே நமது ஆராய்ச்சி. அவர் பேசிய தலைப்புக்கும் இறுதியில் அவர் கூறிய சில தொடர்களுக்கும் தொடர்பில்லை என்பது பற்றிக் கூட அல்ல என் குற்றச்சாட்டு. ஆரிய திராவிடப் போராட்டம் அர்த்தமற்றது என்ற அவர் கூற்றுபற்றியும் நான் கவலையுறவில்லை. அது அவருடைய கருத்து. அர்த்தம் உண்டா இல்லையா என்பதை அவருக்கு உணர்த்த வேண்டியது அதில் நம்பிக்கை கொண்டோர் செய்யவேண்டிய பணி. முன்னேற்றக் கழகத்தை எள்ளி நகையாடியது, அவர்கள் (முன்னேற்றக் கழகத்தார்)

[7-ம் பக்கம் பார்க்க]

# எதிரொலி

தேர்தலுக்கு நிற்காத இயக்கங்களால் தான் நாட்டுக்கான நன்மை செய்யமுடியும் உண்மையை ஒளிக்காமல் கூற முடியும்.

—"விடுதலை"

அதுவும் ஒரே தலைவரின் கீழ், ஒரே கொடியின் நிழலில், ஒரே பத்திரிகையின் எழுத்தில், வாழுபவரால்தானே முடியும்! இல்லையா?

* * *

அணுகுண்டை முதன் முதலில் கண்டு பிடித்தவர் முருகக் கடவுள்

—முத்துராமலிங்கதேவர்.

பழிபாவி; துரோகி; சண்டாளன்; நன்றி கெட்டவன்; தன்னை மதியாத மேலைநாட்டானுக்கா அதைச் செய்யும் விதம் கூறினான்?

* * *

2000 கோடி ரூபா தரச்சொல்லுகிறேன், அண்ணாதுரை அதற்கான திட்டம் கொடுத்துவிட்டால் நான் மந்திரி பதவியை விட்டுவிடுகிறேன்.

—மந்திரி. சுப்ரமணியம்.

போகிற பதவி இப்படியாவது போகட்டுமே என்ற அசட்டுத் துணிச்சல்! திட்டம் தரப்படும் உரிய காலத்தில். இதுவரை செய்த பாபங்களுக்கு மன்னிப்பு கேட்பீரா மக்களிடம்?

* * *

உசிலம்பட்டிக்கு அருகே ஒரு வேள்ளைக் காகம் கிடைத்தது.

—செய்தி.

கம்யூனிஸ்டுகள் கும்பலில் ஒரு பகுத்தறிவுவாதி கிடைத்ததுபோல்!

* * *

இந்தியா முழுவதற்கும் ஒரே ஆட்சி ஏற்படுத்துவது இயலாது.

—அனந்தசயனம்.

அதனாலேயே திராவிட நாட்டைப் பிரித்து விடும்படி திராவிடர்கள் கேட்கின்றனர்.

* * *

நாட்டில் போதிய உணவு இருக்கிறது, மக்கள் பீதிகொள்ளத் தேவையில்லை.

—உணவு மந்திரி.

எங்கோ ஒவரிடத்திலோ நாட்டில் இருக்கலாம்; பசித்தவன் வீட்டில் அது இல்லையே!

# கலைக்கூடம்

## எது நிஜம்?

ஒரு கிராம முன்சீப்பின் அக்ரமத்தையும், அதிகாரத்தையும் கதையின் மூலமாகக் கொண்டது பிரதிபாவின் "எது நிஜம்?" இது ஒரு மொழிமாற்றுப் படம்!

பழைய சம்பவங்களை புதுமெருகோடு கட்டுக்கோப்பாகப் படமாக்கியிருந்தாலும், சில இடங்களில் சலிப்புத் தட்டுகிறது. டைரக்ஷன் எஸ். பாலச்சந்தர், இன்னும் முயன்றிருந்தால் அந்தக்குறையை நிறைவுபடுத்திருக்கலாம்.

கோதண்டனின் மறைவிடத்தை போலீசார் கண்டுபிடித்து முற்றுகை யிடும்போது—அங்கே அவன் மனைவி லட்சுமி பிரசவ வேதனையிலிருக்கும் கட்டம்—பழிக்குப் பழிவாங்கவந்த கோதண்டனை தன் மனைவி பிரசவத்திற்கு அழைப்பதும் டாக்டர் உடனே புறப்படுவதும்—நல்ல அம்சம். டாக்டருடைய குணநலம் முன்னுக்குப்பின் முரணாகயிருப்பதை கதாசிரியர் ஏனோ கவனிக்கவில்லை.

தஞ்சை, டி. கே. கோவிந்தன் வசனங்களை அர்த்தபுஷ்டியுடன் நன்றாகவே அமைத்திருக்கிறார். வாயசைப்புக்கேற்ற முறையில் வசன உச்சரிப்புகள் பல இடங்களில் இல்லாவிட்டாலும் 'டப்பிங்' முறையில் ஓரளவு வெற்றி என்றே சொல்லலாம்.

பாடல்களை கு. மா. பாலசுப்ரமணியமும், கு. சா. கிருஷ்ணமூர்த்தியும் இயற்றியுள்ளனர். கருத்துச்செறிவற்ற பாடல்களாயினும் இசையமைப்பின் சுமார் ரகத்தைப் பெறுகின்றன.

கதை ஆரம்பத்தில் எது நிஜம் என்ற சீர்காழி கோவிந்தராஜன் குழுவினர் பாடும் பாட்டு இனிமையாகவேயிருக்கிறது.

மற்றும் ஜிக்கி, கானசரஸ்வதி, வி. ஜே. வர்மா, மாதவப்பள்ளி சத்யம் ஆகியோர் பின்னணி பாடுகிறார்கள்.

"ஜோரான ஜோடி மாமா... சோறுண்ண வாங்க..." என்ற ஜிக்கி பாடும் பாட்டிற்கு ஈ. வி. சரோஜாவின் நடனம் ரசிக்கத்தக்கதாக இருக்கிறது. மாடிலட்சுமி நடனம் எடுபடவில்லை.

சௌகார் ஜானகியின் நடிப்பு சிறப்பாகவேயிருக்கிறது. மற்றவர்களும் திறமையைக் காட்டியிருக்கிறார்கள். பரவாயில்லை!

முற்பகுதியில் கொஞ்சம் விறுவிறுப்புக் குன்றினாலும், பிற்பகுதி சம்பவங்கள் ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு வேகமாக ஓடுகின்றது!

"எது நிஜம்?"—ஒருமுறை பார்ப்பதற்கேற்ற சுமாரான படம், என்பது நிஜம்.

—க. அண்ணாமலை.

## சிங்கள ராமன்!

மாடர்ன் தியேட்டர்சார், சிலோன் குணரத்னாவிற்காக, தெலுங்கிலிருந்து தமிழுக்கு வந்துள்ள இருட்டுராமனை சிங்களம் பேசும் ராமனாகத் தொடங்கியிருக்கிறார்கள். தோழர், தட்சிணாமூர்த்தியின் இசை டைரக்ஷனில், இலங்கை மொகிதீன்பெக், லதா ஆகியோரைப் பாடவைத்து, சில பாடல்களும் பதிவாக்கப்பட்டுவிட்டன.

நாடகம்.

## மணிமகுடம்.

கலைஞர், மு. கருணாநிதியால் வரையப்பட்டு, புரட்சி நடிகர். எஸ். எஸ். ராசேந்திரன் குழுவினரால் நடத்தப்பட்டுவரும் "மணிமகுடம்" நாடகம், நடமாடும் தமிழ் நாடகங்களிலே நற்சிறப்புக்குரிய ஒன்று.

மாநாடுகளிலே, மாநகரங்கள் பலவற்றிலே நடத்தப்பெற்று, மக்களிடையே புத்துணர்ச்சி மலர வைத்த "மணி மகுடம்" நூறுவது நாடகவிழா அண்மையில் சென்னையிலே நடைபெற்றது. அறிஞர்கள் பலர் வருகை தந்து வாழ்த்தியுள்ளார்கள். பகுத்தறிவு பூர்வமாகச் சமைத்த கலைச் செல்வமான "மணி மகுட"த்தின் வெற்றி, நமது கொள்கையின் வெற்றியாகும். அதனைச் செவ்வையாக நிறைவேற்றிய கலைஞர்களை உளமாரப் பாராட்டுகிறோம்; வாழ்த்துகிறோம்.

—இந்திரசித்தன்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்.

## இதயம்

மலர் 6 | சேலம் 21—9—56 | இதழ் 11

# கடவுளைக் காப்பாற்ற.

சினிமாக்களிலே இந்து தெய்வங்கள், புராணங்களிலே இருப்பதுபோல் சரிவர சித்திரிக்கப் படுவதில்லையென்றும், அவைகள் நடந்து கொள்ளும் விதமும், பேசுகின்ற பேச்சும் அவைகளைக் கேலிசெய்வதுபோல் இருப்பதாகவும் பலர் மத்திய தணிக்கை போர்டுக்குப் புகார் செய்திருக்கிறார்களாம். பரலோக வாசிகளைப் படங்களில் காட்டும்போது, அவர்கள் அணிகின்ற ஆடைகள் ஆபாசமாகவும் இருக்கின்றனவாம்.

இது, ஆஸ்திகர்களின் பக்தியுள்ளத்தைப் பாதிக்கும் செயலென்று மத்திய தணிக்கை போர்டு கருதுகின்றதாம். எனவே, தெய்வங்களைச் சீரழிக்கும் முறையில் படப்பிடிப்புகள் இருக்கக் கூடாது என்று தயாரிப்பாளர்களுக்கு சுற்றறிக்கையொன்று விரைவில் அனுப்பப் போகிறதாம்.

மத்திய தணிக்கை போர்டில் அங்கம் வகிப்பவர்கள் தற்குறிகளாக இருக்க முடியாது. அறிவு நல்கும் ஆங்கிலப் படிப்புதான் அவர்களுக்கு முக்கியம் என்றாலும், நமது மேலான இந்து மதத்தின் பிரசாரப் பொன்னேடுகளாம் அற்புதமான இதிகாச, புராணக் கதைகளை அவர்கள் சிறிதேனும் சுவைத்திருக்கவேண்டும். இல்லையென்றால், "தெய்வங்களைச் சீரழிக்கும் முறையில் படம் பிடிக்காதே" என்ற அறிக்கை வெளியிடுவதற்கு முன்பு, அவர்கள் தயைசெய்து ஒருமுறை இந்துமத புராணப் புத்தகங்களைப் புரட்ட வேண்டுகிறோம். காமாந்தகார, வேசி போல, விபசாரவித்தக, கொலை களவுவல்ல, பொய்சூது தேர்ந்த, பொல்லாத பயங்கர, மிருகங்களுக்குப் பிறந்த, பறவைகளாகப் பறந்த, புழுவாக நெளிந்த, குடித்து, வெறித்து பஞ்சமா பாதகங்களையே தர்ம நெறியாகக்கொண்டு வாழ்ந்த ஆயிரம் ஆயிரம் தெய்வங்களின் அதிசயவரலாறுகளைப் பரக்கக் காணலாம், அங்கே!

மிகப்பெரிய தெய்வங்களான கோயில், குளம், விழாக்கள் என்று கொண்டாடுகின்ற சிவன், விஷ்ணு, பிரம்மா, விநாயகர், சுப்ரமணியன் போன்றோரின் ஈனப்பிறப்பும், இழிதகமைச் செயலும், கேவலமான—அருவருக்கத் தக்க—ஆபாசமான நடத்தைகளும் பார்த்தாலே போதுமே! மனிதன் மனதாலும் எண்ணமுடியாத கீழ்த்தரமான செயல்களிலே எதை விட்டார்கள்? எதை மறந்தார்கள்? பெரிய தெய்வங்களே இப்படியென்றால், குட்டித் தெய்வங்கள் அடித்த கொட்டத்தைக் கேட்க வேண்டுமா?

அவற்றை உள்ளது உள்ளபடி சினிமாவில் காட்டுவது எப்படித் தவறாகும்? எப்படி அவைகளைச் சீரழிப்பதாகும்? எந்த இதிகாசம், எந்த புராணம் இந்தக் கடவுள்களின் தோற்றத்திற்கே காரணமாக இருக்கின்றதோ, அதுவே ஆபாசக் களஞ்சியமாக இருக்கிறதென்றால், அது யார் செய்த தவறு? ஆபாச இந்துமதக் குழியிலே முளைத்தெழுந்த கடவுளரின் காம வெறிச் செயல்களை தமிழ் நாட்டுக் கோபுரங்களின் சிற்பங்கள் பச்சையாகக் காட்டுகின்றனவே! சிரிக்கின்றார்களே வெளிநாட்டினர்; பரிகசிக்கிறார்களே வேறு மதத்தவர்; சீரழியவில்லையா அந்தத் தெய்வங்கள்? சினிமாதான் சீரழிக்கின்றதா?

கேவலமான இந்தக் கடவுள்களை மேலான தெய்வங்களாக—பரிசுத்தமானவைகளாகப் படம்பிடித்துக் காட்ட வேண்டுமென்றால், தணிக்கைபோர்டு புதிய இதிகாசங்கள், புதுப் புராணங்கள் எழுத வேண்டும். இல்லையெனில் புராணப் படங்களை எடுக்கவேண்டாம் என்று படத் தயாரிப்பாளர்களைத் தடுத்துவிட வேண்டும். படத்துறை வளர்ப்பிலே தெய்வங்களைப் பெருமைப்படுத்தலை முக்கியமாகக் கருதுகின்ற மத்திய தணிக்கை போர்டார், இவற்றில் ஒன்றைச் செய்வார்களா, கடவுளைக் காப்பாற்ற?

நாடகத்திலே, சினிமாவிலே பகுத்தறிவுச் சுடரொளி பரவுவது கண்டு பதைக்கின்றனர் மதவாதிகள்; அதனை அணைத்திடத் துடிக்கின்றனர்! தணிக்கை போர்டாரிடம் புகார் செய்து, ஏற்கனவே மதவெறி என்னும் சாணைக் கல்லில் தீட்டப்பட்டுள்ள தணிக்கை கத்திரிக்கோலில் இன்னும் சிறிது கூர்மை ஏற்றுகின்றனர்; இதற்கு மதச்சார்பற்ற அரசாங்கமும் செவி சாய்க்கின்றது. எனினும், ஒளியை அணைத்திடல் ஒல்லுமோ? மடமை மதவெறி வெல்லுமோ?

அன்பர்கள் கவனத்திற்கு.

# வளர்ச்சியில் மகிழ்ச்சிதானே?

—:-:—

"பகுத்தறிவு" வளர்ச்சி குறித்து, நண்பர்கள் பலர் ஆதரவோடு ஆலோசனைகள் கூறுகின்றமைக்கு நன்றியுடையேன். முடிந்தவரையில் ஏற்பனவற்றை செயற்படுத்தவும் விரும்புகிறேன். சிலோன்-யாழ்ப்பாணம் தோழர் ஒருவர் எழுதுகிறார்:

2-ம் தெரு, யாழ்ப்பாணம், சிலோன்.

ஆசிரியர் அவர்கட்கு,

அன்புடையீர்!

தங்களுடைய வாரஇதழ் "பகுத்தறிவு" அளவில் சிறிதானாலும் அறிவில் சிறந்த இதழ். என்றாலும் கவரும் சக்தியில்லை. கருத்தில் அல்ல; உருவில்.

ஆசிரியரே!

தங்கள் "பகுத்தறிவு" இதழ், மதுரையில் இருந்து வெளிவரும் "கலைக் கோயில்" இதழ் அளவிலும், நல்ல அழகிய முகப்பு எழுத்துக்களுடனும் 8 அல்லது 12 பக்கங்களுடன் 2 அணா விலையுடன் வாராவாரம் வெளிவருமானால், நிச்சயம், முரசொலி, தென்றல், இதழ்களுடன் பகுத்தறிவும் ஒரு சிறந்த நிலையடையும் என்பது என் எண்ணமும் விருப்பமும்.

பகுத்தறிவு இதழின் உருவைமாற்றிய பிறகே "நந்திவர்மன்" நாடகத்தை தொடங்கவும்.

எஸ். எஸ். ராஜா.

இதுபோன்ற அன்புக்கட்டளையை வரவேற்கிறேன். இதே கருத்தோடு வேறு பல தோழர்களும் எழுதியுள்ளனர். "பகுத்தறி"வின் அளவைப் பெரிதாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுக்கிறது என்பதை நண்பர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும்,

28-9-56 முதல் "நந்திவர்மன்" வருவது கருதி, தற்போதைய அளவிலே மேலும் இருபக்கங்கள் கூட்டி, 10 பக்கங்களாக ஓரணா விலையிலேயே தருவது என்று முடிவு செய்துள்ளோம்.

அந்த இருபக்கங்களையும், நந்திவர்மன் நாடகத்திற்காக தனியே ஒதுக்கிவிட்டால் சேர்த்து வைத்து, முடிவில் புத்தகம்போல் தைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்று அச்சகத் தோழர்கள் கருத்துரை வழங்கினர். அஃது, தொடர் விரும்பிகளின் எண்ணத்தின் பிரதிபலிப்பாதலால் மறுப்பின்றி ஒப்புக்கொண்டேன். மகிழ்ச்சிதானே?

பகுத்தறிவு வளருகின்றது. தோழர்களின் அன்பும், ஆதரவும் மேலும் பெருகவிழையும்.

ப. கண்ணன்,
ஆசிரியர்.

தலைமை நிலையச் செய்தி:

## தேர்தல் ஆய்வுக்குழுச் சுற்றுப்பயணம்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள், ஈ. வே. கி. சம்பத்து, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஆகியோரும், அக்டோபர் திங்கள் 1-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தங்கியிருந்து அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும் கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் அறிவார்கள். தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக் கூடிய அந்தந்த தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

'அறிவகம்' சென்னை, 19.9.56. தலைமைக் கழகம் (தி. மு. க.)


# பகுத்தறிவு.

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.


## சேலம் அம்மாப்பேட்டை தி.மு.க. 6-ம் ஆண்டுவிழா.

நிகழ்ச்சி நிரல்.

30—9—56 ஞாயிற்றுக்கிழமை காலை 8-மணிக்கு ஊர்வலம். கொடியேற்று விழா.

காலை 10 மணிக்கு, பீர்ன எல்லப்ப செட்டித் தெரு அழகிரி பந்தலில்,

**ஆண்டுவிழா.**

தலைவர்: கே. பி. நஞ்சப்பன்.
பேச்சாளர்: கி. மனோகரன், ப. உ. சண்முகம், E. R. கிருஷ்ணன், சிற்றுளி—சுப்ரமணியம்.

மாலை 6 மணிக்கு, பீர்ன எல்லப்ப செட்டித் தெருவில்,

**பொதுக்கூட்டம்.**

தலைவர்: C. A. சித்தையன்,
பேச்சாளர்: கி. மனோகரன், ப. உ. சண்முகம், E. R. கிருஷ்ணன், சிற்றுளி—சுப்ரமணியம்.

K. S. மணி,
செயலாளர்.

மல்லசமுத்திரம், தி. மு. க.
திராவிடநாடு விடுதலைநாள் கொண்டாட்டம்.

23—9—56-ந் தேதி இரவு திறந்தவெளி அரங்கில்,

## அரக்கு மாளிகை

நாடகம் நடைபெறும்.

எம். ஆர். ஆறுமுகம்,
செயலாளர்.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● பொ. ப. ஆறுமுகம்,
பெள்ளாதி,
கோவை மாவட்டம்.

**சி. வாசுதேவன், திருச்சிராப்பள்ளி.**

கே: 'தி மு க.' என்ற மூன்றெழுத்தை எண்ணி, மூன்றெழுத்து 'சினிமா'வை ஒழிப்பதாக தி. க. வினர் பேசுவதற்கு 'பொறாமை' என்ற மூன்றெழுத்தே காரணம் என்பது தவறு?

ப: ஆத்தோடு "ஏலாமை" என்ற மற்றொரு மூன்றெழுத்தைச் சேர்த்தாலும்கூட தவறாகாது, தோழரே!

* * *

கே: திருச்சியில் பேசிய தி. க. பொதுச்செயலாளர், நாங்கள் காங்கிரசில் சேருவோம் என்கிறாரே: சேர்ந்து என்ன செய்வார்கள்?

ப: காடியைக் காடி தழுவுதலே முறை. மனிதன் தழுவிக் கொண்டால், அப்புறம் அவன் செய்வதற்கு அங்கு என்ன இருக்கும்? எல்லாம் அதன் செயல்!

**கே. ஆர். வெங்கடராமன், சிறுதையூர்.**

கே: தமிழ் இனம் இத்தகையது என்பதை விளக்க ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா?

ப: ஒன்றல்ல; இரண்டல்ல; நூற்றுக்கணக்கான வரலாற்று, பூகோள, விஞ்ஞான, இலக்கிய ஆதாரங்கள் நூல்வடிவிலும், பொருள் வடிவிலும் கலாசாலைகளிலே — காட்சிக் கூடங்களிலே உள்ளன.

* * *

கே: ஒரு பத்திரிகை ஆசிரியர்மீது மற்ற பத்திரிகை ஆசிரியர் ஏன் அவதூறாக எழுதுகிறார்?

ப: அவதூறாக, அக்கிரமமாக, ஆபாசமாக எழுதுவதிலே; பாவம், அவர் வாழுகிறார்!

**மா. திராவிடமணி, திருவண்ணாமலை.**

கே: வாடைக்காற்று வீசினால் வீட்டுக் கதவை சாத்தச் சொல்லுகிறார்களே; ஏன்?

ப: இந்திபோல், வாடைக் காற்று வடக்கிலிருந்து வருவது, இந்தி தமிழ்வளத்தைக் கெடுப்பதுபோல், அது நமது உடல் நலத்தைக் கெடுப்பது!

**முரசுமணி, திருவண்ணாமலை**

கே: கற்பை காசுக்கு விற்பனைசெய்யும் பாவைக்கும், பிறந்த நாட்டின் பெயரை விரும்பாத காமராசருக்கும் என்ன வித்தியாசம்?

ப: அவள் பெண்; அவர் ஆண்.

**க. இராதாகிருஷ்ணன், முலக்காடு.**

கே: வகுப்புபேதமற்றது என்று சொல்லப்படும் காங்கிரசின் ஆட்சியிலே, இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனில் நியமிக்கப்பட்டவர்கள் அனைவரும ஆரியர்களாகவே இருப்பது ஏன்?

ப: எல்லோரும் ஆரியர்களாகவே இருந்தும், அவர்களையே நியமித்ததுதான் வகுப்புபேத மற்ற தன்மை என்பார்களோ, பாரதமாதாவின் புத்திரசிகாமணிகள்.

**இரா. வசந்தகோபால், சேலம்.**

கே: தமிழரசுக்கழகம் தேர்தலில் ஈடுபடுமா?

ப: இது அவர்களுக்கே புரியாத விஷயமாயிற்றே!

* * *

கே: கதை, வசனம் எழுதுவது தொழிலா? பிரசாரமா?

ப: இரண்டும் கலந்தது.

**● பொ. ப. ஆறுமுகம், பெள்ளாதி.**

கே: வணிக குலத்தில் பிறந்த கண்ணகி, கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி; இவர்களில் கற்புத் தெய்வம் யார்?

ப: இருவரும் இருவகையில் சிறந்த தமிழச்சிகள்; ஆனால், இருவருமே தெய்வமல்ல! வரம் அருளவும் மாட்டார்கள்.

## வருகிறது நவராத்திரி!

விரதங்களில் ஒன்று. இது புரட்டாசிமாசப் பூர்வபக்ஷப் பிரதமை முதல் திரிதை வரையில் உருத்திரியையும், சதுர்த்தி முதல் ஷஷ்டி வரையில் இலக்குமியையும், சப்தமி முதல் நவமி வரையில் சரஸ்வதியையும், பூசித்துத் தசமியில் முடிப்பது. இதனைச் சுகேது என்னும் அரசன், அரசாட்சியிழந்து வருந்தியதால் அவன் மனைவியாகிய சுவேதியை ஆங்கிரச முனிவர் இவ்விரதம் அநுட்டிக்கக் கற்பித்தனர். அவ்வகை அவள் அநுட்டிக்க அவ்வநுட்டானத்திற்குப் பின் அவள் வயிற்றிற் பிறந்த குமாரனாகிய சூரியப்பிரதாபன் இழந்த நாட்டைப் பகைவரிடமிருந்து மீட்டனன் என்பர்.

—அபிதானசிந்தாமணி.

மேலும் இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள், இரண்டு வயது முதல் பத்து வயதுவரையுமுள்ள கன்னிகைகளுக்குப் பூசை புரியவேண்டும். வேதம் உணர்ந்த வேதியர்கள், ஒன்பதுபேர், அல்லது ஐந்துபேர், மூன்று பேரை அழைத்து ஆசனத்தில் வைத்துப் பூசிக்க வேண்டும். என்பதாக இன்னும் பலப் பலபுரிய—சாஸ்திரம் இருக்கிறது—சம்பிரதாயம் இருக்கிறது. அப்படியெல்லாம் செய்து இந்த நவராத்திரி விரதம் கொண்டாடினவர்களுக்கு எல்லா பாக்கியங்களும், செல்வங்களும் தானாக வந்தடையுமாம். உயர்பதவி கிடைக்குமாம். இழந்த நாடும், துறந்த பதவியும் கிட்டுகிறதாம்.

நவராத்திரி விழா கொண்டாடும் நல்லவர்களே! இவற்றையெல்லாம் நம்புகிறீர்களா? நம்பி இந்நாள்வரை கொண்டாடியதால் பலன் கண்டதுண்டா?

அறிவுடைமை பிறப்பினால் ஏற்படுவதல்ல; ஒவ்வொருவனும் தானே அதைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். —ஞானி.

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

இருபதாம் நூற்றாண்டிலேதான் இருக்கிறார்களா என்ற வினாவும் பண்புடையோர் வாயிலிருந்து, அவரது அறிவிலே ஏதேனும் கலாம் நிகழ்ந்திருந்தாலொழிய—கண்டிப்பாக வெளிவரமாட்டா, அவரது உடலுக்கு ஊறு ஒன்றும் நேராமல் அவரை ஊர்திருப்பிவிட்டோமே, அதுவே நமது பண்பாட்டைக் காட்டவில்லையா? நாம் இருபதாம் நூற்றாண்டில் இடைப் பகுதியிலே முன்னேற்றக் கழகம் என்பதற்கேற்ப முன்னோடிகளாகத்தான் வாழ்கிறோம்—என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று?

"சொல்லைச் சிந்துமுன் இருமுறை சிந்தி" என்று ஆங்கிலத்திலே ஒரு பழமொழியுண்டு. 'ஆரியசமாஜம்' என்ற பெயராலே இந்த நாட்டிலே ஒன்று நிலவி வருகிறது. எல்லோரும் கலந்துவிட்ட நாட்டிலே எப்படி வந்தனர் ஆரியர்? எவ்வாறு முளைத்தது ஆரிய சமாஜம்? அதுதான் போகட்டும்—"அகில உலக ஒற்றுமை முகிழ்த்துவரும் நாள் இந்த நாள்; அனைத்துலகும் இணைந்து "ஓரரசு அமைக்க வேண்டிய பொன்னாள் நம்மை நெருங்கிவரும்வேளை இது" என்றார். தமிழ்கற்ற என் நெஞ்சம் உண்மையிலேயேபூரித்தது. மேய்ச்சலிலிருந்து மீளும் கறவையை எதிர்நோக்கும் கன்றைப்போல தமிழர் அந்த நாளை எதிர்நோக்குவர், அத்தகைய தமிழருக்கு அறிவுரை புகல வரும் நாராயணருக்கு இந்துமகா சபை என்று இந்த நாட்டிலே ஒன்று இருப்பது தெரியுமா? அடுக்குமா இது? அத்தகைய ஒரு அமைப்பு நாட்டில், அதுவும் சமயச்சார்பற்ற நாட்டிலா? ஒற்றுமையைக் குலைப்பதன்றோ? இந்த இரண்டுமே நாராயணர் வாழும் வடநாட்டிலே தோன்றி அங்கேயே வாழ்ந்து வருபவைதான்.

அங்கிருந்து சென்னைக்கு ஓடிவந்து 'ஓ அஞ்ஞானிகளே' என்னும் இந்த ஞானகுரு, தம்மூரில், தம் திருவாயைத் திறந்திருந்தால் என்ன நேரிட்டிருக்கும்? இந்து மகாசபையினரைப் பார்த்து, 'மக்கள் ஒற்றுமைக்கு ஊறு விளையும்—வேற்றுமையை வளர்க்கும்' என்று ஒரு வார்த்தை கெஞ்சுதலாக, அல்லது கொஞ்சுதலாகவோ கூற இவரால் ஆகுமா? ஆகலாம், இவர் சாகத் துணிந்தால்!

1921-ம் ஆண்டிலே எடுக்கப்பட்டது ஒரு மக்கள்தொகைக்கணக்கு. சென்னை மாநிலத்தில் அப்பொழுது நூற்றுக்கு தொண்ணூற்று நாலுபேர் சூத்திரர் என்று குறிக்கப்பட்டுள்ளது! 100-க்கு 94 பேர் சூத்திரர்! உயிரோடுதானே இருந்தார் இந்த நாராயணர்? புள்ளிக் கணக்கை வெள்ளைக்காரனா எடுத்தான்? எடுக்கப்பட்டதென்னமோ வெள்ளைக்காரன் ஆட்சிக்காலத்திலே. ஆனால், அன்று அவ்வேலையிலே அமர்ந்திருந்தோரெல்லாம் அவாள்தானே! அந்தச் சூத்திரரைப் பார்த்துத்தான் இப்பொழுது கேட்கிறார்—இவர்களெல்லாம் இருபதாம் நூற்றாண்டில்தான் வாழ்கிறார்களா என்று! விடுதலை கிட்டிய மறு ஆண்டிலேயே இவர்கள் பூண்டோடு அழிந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தார் போலும்!

இந்த நாட்டிலே ஆரிய சமாஜம் வாழலாம்—இந்து மகாசபை செல்வாக்குப் பெறலாம்—மதச்சார்பற்ற நாடென்று சட்டத்தில் தீட்டிவிட்டு மதத்தின் பெயரையே நாட்டிற்குச் சூடலாம்—இவை அனைத்தும் ஒற்றுமை கூட்டுபவை! உலகமொழியான ஆங்கிலத்தை அழித்துவிட வேண்டும். உலக ஒற்றுமையை நோக்கித்தான் அதுவும் செய்யப்படுகிறது. நிறைய மக்கள் பேசுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக யாவரும் இந்தி கற்க வேண்டும்; அதிலேதான் அகில இந்தியாவே அடங்கிக் கிடக்கிறது. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற பாகுபாடு பைத்தியக்காரத்தனம். ஆனால், வேறுபாடு கற்பிக்கும் புராண இதிகாசங்கள்தான் நம் இந்தியப் பண்பாட்டின் காவலர்கள். அவை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். அதுதான் போகிறது. அரசாங்கப் பதிவுகளிலேயே அந்த வேறுபாடு இன்னும் வாழ்கின்றதுவே; அது ஏன்?

நாடார், பிள்ளை, முதலி, செட்டி, கிராமணி, கவுண்டன், உடையார், நாய்க்கர், தேவர், ஐயர், ஐயங்கார், ஆச்சாரி, சாஸ்திரி அப்பப்பா; எத்தனை வாலுகள்! அகில உலக ஒருமைப்பாட்டிற்கு வேண்டியவைதானா? உமது பெயரிலேயே நாராயணன் ஒட்டிக் கொண்டிருக்கிறானே, அது சைவாளுக்குச் சங்கடந்தாராதோ?

ஆனால், நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார் நாராயணர்!

உலகம் சுழலவில்லை, ஐயனே! நீர்தான் சுழலும் ராட்டினத்திலே உட்கார்ந்திருக்கிறீர்!

உலகம் புகை மண்டிலமில்லை—நுமது கண்களிலேதான் புகை மண்டிக் கிடக்கிறது.

தமிழகம் பித்தர் கூடாரமல்ல—தமிழகத்திற்கு வருவோருக்குத்தான் ஏனோ இந்த வெய்யில் ஒத்துக்கொள்வதில்லை.

அன்பு வழியை, வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் கடைப்பிடிக்கும் வழிகளைப் பிழிந்துதரும் குறள் எங்கள் மறை. அதன்வழி நின்று பேசப்படும் பகுத்தறிவு, வன்கண்மை படைத்ததாகக் காணப்படுமேல் உமக்காக நாங்கள் கட்டாயம் இரக்கப்பட வேண்டும்!

ஆசிரியர், ப. கண்ணன் வரையும்,
பல்லவ மன்னன் பைந்தமிழ் நந்தியின்,
வல்லமை செப்பிடும் வாழ்க்கை நாடகம்.

# நந்திவர்மன்

* * *

அடுத்த இதழில்

தொடங்குகிறது; சுவையுங்கள். விற்பனையாளரிடம்
சொல்லிவிடுங்கள் பிரதிக்கு, இப்போதே.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

சின் ஓரவஞ்சனையையும், கனம் காமராசர் ஆட்சியின் அலட்சிய புத்தியையும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,
ஈ. வே. கி. சம்பத்.

## "தொழில் துறையில் தென்னிந்தியா பின்தங்கிக் கிடக்கிறது"

## "சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவக் கடனும் தொழில் துறை உதவியும் தருகிறோம்"

புதுடில்லி, ஜன. 20—தென்னிந்தியாவில் ஒரு அலுமினியம் தொழிற்சாலையை நிறுவவும், ஒரு நீர் மின்சார உற்பத்தித் திட்டத்தை நிர்மாணிக்கவும் உதவிதர இரஷ்யர்கள் அறிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

யூனியன் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள இரஷ்ய உதவி, பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

சேலம் அருகில் அலுமினியம் தொழிற்சாலையை நிர்மாணிப்பதே ஏற்பாடு; அங்குதான் 100 இலட்சம் டன் உயர்தரமான பாக்சைட் கிடைக்குமெனச் சொல்லப்படுகிறது.

ஆந்திராவில் உள்ள மச்குண்ட் மின்சாரத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே நீர் மின்சார உற்பத்தி ஏற்பாடு இருக்கக்கூடும். இத்துறையில் இரஷ்ய முதலீடு 10 கோடி ரூபாயாகும்.

இவ்விரு திட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றுவதற்காக, நீண்டநாள் தவணைக் கடனுகப் பணமும் தொழில் துறை உதவியும் தர, சோவியத் அரசாங்கம் அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

எங்கு உதவி அதிகமாகத் தேவைப்படுகிறதோ, அங்கு உதவி செய்வது என்ற சோவியத் குறிக்கோளின் உள்ளடக்கமாகும் இவ்வுதவி என சொல்லப்படுகிறது.

தொழில் துறையில் தென்பகுதி பின்தங்கிக் கிடப்பதாகவும், அதன் பலனைகத் தங்கள் உதவியில் தென் பகுதிக்கே உயர்ந்த முதலிடம் தரப்பட வேண்டும் எனவும் இரஷ்யர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

'மெயில்' 21—1—56

இந்தச் செய்தியின்மேல் தோழர், சம்பத்து அவர்கள் நூற்றுக்கணக்கான பொதுக் கூட்டங்களிலே தமது கருத்தினைச் சொல்லியுள்ளார். இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனையையும், கையாலாகாத சென்னை அரசினர் போக்கினையும் பகிரங்கமாக—மக்கள் ஆரவாரிக்கும்வண்ணம்கண்டித்திருக்கின்றார். கூட்டத்திற்கு முன்னால், கழகத் தோழர்கள் போட்டுக் கொடுத்த ஆசனத்திலே அமர்ந்துகொண்டு, கண்கொட்டாமல் பேச்சைக் குறிப்பெடுக்கும், சி. ஐ. டி. அரசாங்க ஒற்றர்களின் அறிக்கையை அரசினர் பார்த்திருக்க வேண்டுமே! தோழர், சம்பத்து அவர்கள் பேசிவருவது பொய்யென்றும், புரளியென்றும், இதுவரை அமைச்சர்களோ அரசாங்க அலுவலரோ, காங்கிரஸ் கட்சியினரோ, அவர்தம் ஏடுகளோ மறுத்ததுண்டா? அவராவது இந்த அறிக்கையையேனும் மறுக்க முன்வருவார்களா? ஆண்மையிருக்குமா? பொறுத்துப் பார்ப்போம்.


—வாலி.

### ஐயோ, போச்சே!

ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர் என்றால் நம்பலாம்; பொய்சொல்ல மாட்டார்; திருடமாட்டார்; யோக்கியர் என்று எந்த ஊரிலும், எந்தக் கூட்டத்திலும் நம்பிக்கையிருந்தது.

—"கல்கி" 16-9-56.


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப.கண்ணன்

மலர் 6. | சேலம் 28—9—56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 12


## பசிக்குப் புசிக்கி பாலகனைக் கொடு—வரிப்புலி.

திராவிடத்தின் . வளத்தை, ஏக இந்திய வாதத்தின் பெயரால் எத்தர்கள் சுரண்டுகின்றனர். "பாரத மாதாவின் புத்திர சிகாமணிகள் நாமெல்லோரும்" என்று பஜனை பண்ணிக் கொண்டே தென்னாட்டை மெலிய வைத்து வடநாடு வலுக்கிறது. பலமான மத்திய அரசாங்கம் தேவையென்று, வளமான வரியனைத்தும் இங்கிருந்து வாரிச் செல்லுகின்றனர் வரிப்புலி நெஞ்சம் வாய்ந்தவடவர்கள்.

அண்மையில் சென்னை கூட்டமொன்றிலே அறிஞர் அண்ணா பேசுகையிலே கூறினார்கள்:

"தன் அருமைப் பாலகனை வீட்டில் தூங்கவைத்துவிட்டு தன் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்த தாய், திடீரெனப் புறக்கடையிலே, "ஓநாய் ஓநாய்" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள். அக்கம்பக்கத்திலிருப்பவர்களின் துணைகொண்டு ஓநாயை விரட்டிவிட்டாள். குழந்தையைப் பார்க்க உள்ளே சென்றாள்.

அங்கே ஒரு புலி வாட்டசாட்டமாக உட்கார்ந்திருக்கக் கண்டாள் அந்தத்தாய், "ஐயோ, புலி வந்திருக்கிறதே!" என்று அலறினாளாம். அப்போது "ஓநாய் ஓட உதவி செய்யவந்த உபகாரியாயிற்றே நான்; என்னைக்கண்டு ஏன் நடுங்குகிறாய்? நான் ஓநாயை விரட்டாதிருந்தால் உன் குழந்தை உயிர் பிழைத்திருக்கமுடியாதல்லவா? ஆதலாலே, நான் இங்கேயே இருக்கிறேன்; உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்; எனக்குப் பசிக்கும்போது மட்டும் உன்னுடைய பாலகனைக் கொடுத்தால் போதும்' என்று புலி கேட்டால்,

எவ்வளவு அக்கிரமமாக —அவ்விதம் கும் புலி ஓநா விட எவ்வளவு நெஞ்சம் ப ததோ அ போலத் த இன்று வட னர் 'வெ கனை விரட் கள் உதவி வில்லையா? லே திரா வளப் கள் பயன் கொள்ள யிருந்தால்




[10-ம் பக்

# அரசாங்கப் புள்ளி விபர அலங்கோலம்!

திறமையான நிர்வாகம்—நேர்மை [..] ஆட்[..]ணையமுள்ள ஆட்சியாளர்—இவைகளைக் காணவேண்டுமா? உடனே கட்டிச்சோறு கட்டிக்கொண்டு தாமதிக்காமல் புறப்படுக. சென்னை என்ற ஒரு பெருநகரம் வங்காள விரிகுடாவின் கரையிலே உள்ளதாம். அங்குள்ள கலங்கரை விளக்கைக் கடந்து சென்றால் ஒரு கோட்டை உள்ளதாம், கோட்டைக்குள் நேராக நுழைந்து செல், யாரும் உன்னைத் தடுக்கமாட்டார்கள். நாய்கூட நுழையலாமாம். காரில் வரும் காக்காய்களுக்கோ அளவே இல்லையாம்! அங்கே உன் வரிப்பணம் சிந்திக்கிடக்கும் அலங்கோலத்தைக் கண்முன்னர்க் காணலாம். நெஞ்சு சோர்ந்து, குருதி வற்றி, ஊன் வாடிச் சாகலாம். கவலைப்படமாட்டார் அங்குள்ள சீமான்கள்.

இது என் கற்பனைதான். என்றாலும் உண்மை. அரசாங்கத்தாரின் வெளியீடுகளே அவர்தம் அலங்கோல ஆட்சிக்குச் சான்று பகர்கின்றன. அவற்றைப் [..]டிக்கும் சிந்தனையுள்ள எவர்க்கும் [..]ன்னை அரசாங்கக் காரியாலத்தைப் [..] ஊனகுத் தோன்றிய இத்தகைய [..]ணம்தான் தோன்றமுடியும். சிந் [..]தே பாவம் என்று நினைப்போரும், [..]மை வாழ்விலேயே ஊறி, மணம் உரிமைப் பூங்காவிலே உலவினால் மரணம் வந்தெய்திடுமோ என் [..]அச்சாக்கலையே சுகமென்றி [..]பூழ்க்களும் மட்டும் இதற்கு [..]ரு.

அலங்கோலம் பக்கிங்காம் [..]ரும் அர[..]ப் பக்கத்திலேயே [..]க்கூட[..]ா? உள்நாட்டி[..] ஆரம்பித்து விட்டதுதான் [..]ருத்தத்தைத் தருகிறது. [..]யைக் கொடுத்து விட்டோம், [..]றைவாக என்னவேண்டுமானு [..]ந்து தொலைக்கட்டும் என்று [..]ாக இருக்க விடமாட்டார்கள் [..]றதே! விளம்பரம் என்ற [..]மது வயிற்றெரிச்சலையும் விடுகிறார்கள்!

சென்னை அரசாங்கச் செய்தித் துறையைக் காங்கிரஸ் பிரசார அமைப்பாக மாற்றினர், ஆறுதலடையவில்லை அரசாங்கம். குசலகுமாரியின் ஒளிவிலேகூட அவர்களுக்குக் குதூகலம் பிறக்கவில்லை! முதல்திட்ட சாதனைகளை ஒலிப்பதிவு செய்து மூலை முடுக்கெல்லாம் ஒப்பாரி வைக்க அனுப்பினால் போதும் என அமைதியுறும் மனமும் இல்லை. மாவட்டத்திற்கொரு டமாரத்தைப் போட்டு முழக்குவதும் போதாதாம். அமைச்சர்களே தாம் செல்கின்ற இடமெல்லாம் தம் நாவே கோலாக, வாயே பறையாகக் கொட்டி முழக்குகின்றனர். சிரக்குவயிடுபோட்டு சிரத்தையோடு மறுவினையைக் கேட்கலும் ஒன்றிரண்டு சீமான்களாவது அங்கங்கே உண்டல்லவா? ஆனால், அரசாங்கம் இப்பொழுது ஓயாமல் கூக்குரலிடத் தொடங்கியிருக்கிறது. ஆனால் ஒவ்வொன்றும் தெளிவாக, அது மந்தை என்பதைத்தான் திருப்பத்திருப்ப வற்புறுத்துவதாக உள்ளது. 2000 கோடி ரூபாய்களை கேட்டு வாங்கேன் என்றால், ஐயோ இரண்டாயிரம் கோடியா என்று வாயைப் பிளக்கிறது! பணத்தை எப்படிச் செலவழிப்பது என்று விழிக்கிறது! திட்டம் ஒன்று தருகிறாயா என்று நம்மையே திருப்பிக்கேட்கிறது! ஐயோ, இது மந்தைகூட அல்ல போலிருக்கிறதே! வேறு என்னவோ... சரியாகத் தெரியவில்லை!

## "இளந்தமிழன்"

இதை மேலும் நன்கு மெய்ப்பிக்கும் ஒரு சுவையான உண்மையைக் கூறுகிறேன், கேளுங்கள். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் மாநி[..] அரசாங்கம் தனக்கு வேண்டுமென்[..] கேட்ட பங்கு 400 கோடி ரூபாய் எ[..]றும், ஆனால், பெற்றுள்ளது 170 கோ[..] ரூபாய் என்றும் பல செய்தி ஏடுக[..] ஒருமுகமாகக் கூறுகின்றன. மாநி[..] மக்கள் தொகைக்கு ஏற்பப் பார்த்தா[..] குறைந்தது 400 கோடியாவது நம[..] வந்துதான் ஆகவேண்டும். ஆ[..]

அமைச்சர், திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்:

"இம்மாநிலத்தின் மக்கள் தொகைக்கு ஏற்ப, இம்மாநிலத்தின் திட்டங்கள் முழுவதற்குமாகச் சேர்த்து 220 கோடி ரூபாய் கேட்கப்பட்டது. திட்டக்குழு இன்னும் அதற்கு இசையவில்லை—" (இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய பொதுநோக்கம்—பக்கம்-5)

இந்த நூல், இந்த ஆண்டில்தான் வெளிவந்துள்ளது. 220 கோடி ரூபாய் கேட்கப்பட்டதாகச் சொல்லுகிறார்! அப்படியானால் 400 கோடி ரூபாய் கேட்கப்பட்டிருப்பதாக மக்களிடம் சொல்லியது என்ன ஆயிற்று? அசட்டுப் பிள்ளை தான் என்பது அப்பட்டமாகத் தெரிகிறதல்லவா? இதோடு முடிந்து விடவில்லை கதை, ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை என்ற ஒரு சிறு நூலை 1955-ம், ஆண்டிலே வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு தொடர்:

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் [..]ருவாகிறது. அதன்படி ரூ 200 கோடி [..]சன்னை ராஜ்யத்திற்குச் செலவு செய்[..]ப் படலாம்" (ஐந்தாண்டுத் திட்டத்தில் [..]சன்னையின் சாதனை—பக்கம்-2) நமது [..]நில மன்றம் 200 கோடி ரூபாயைத் [..]ன் எதிர்பார்த்துள்ளது! 200 கோடி [..] எதிர்பார்த்து, எதற்கும் 20 கோடி [..]ர்த்துக் கேட்கலாம் எனத் தயங்கிய [..]ற 220 கோடி ரூபாயைக் கேட்டு, [..]ளிடம் தலைதப்ப வேண்டுமே என் [..]ாக 400 கோடி ரூபாய் கேட்டி[..]ரும் என மார்தட்டியிருக்கிறது! [..] நம் பிள்ளையின் சூரத்தனம்!

திட்டம் நாளொரு மேனியும் [..]தொரு வண்ணமுமாக வளர்ந் [..]நிலையைப் பார்த்தால் இன்னும் [..]திறமை புலப்படும். 'முதல் ஐந் [..]டுத் திட்ட சாதனைகள்' என்னும் [..]ல், முதல் ஐந்தாண்டுத் திட்டம் [..]தமிழகு ஒரு நூல் வெளியிடப் [..]ள்ளது. அதன் இறுதியிலே, இரண் [..] திட்டத்தில், நம் மாநிலத்தில்

[9-ம் பக்கம் பார்க்க]

# எதிரொலி

லஞ்சம் கொடுக்காமல் தேர்தலில் ஜெயிக்க முடியுமா என்று நான் கேட்கிறேன்.

—ராஜாஜி

குடியரசு நாட்டிலே, கொல்லை வழியிலே புகுந்து, அதிகாரத்தைக் கைப்பற்றுபவன் யோக்கியனா என்று நாம் கேட்கிறோம்.

* * *

கோர்ட் செய்திகளைப் படிக்கும்போது, வக்கீல் வேலை பார்க்கலாமா என்ற ஆசை ஏற்படுகிறது.

—மந்திரி. சுப்ரமணியம்

நாட்டு நிலையைப் பார்க்கும்போது, தேர்தலில் ஜெயித்து மந்திரியாக வருவது முடியாது போலவும் தெரிகிறது, இல்லையா?

* * *

ஈ. வே ரா. பெரியாருக்கு குன்றக்குடி அடிகளார் பொன்னாடை போர்த்தினர்.

—செய்தி.

காமராஜர் போர்த்துவதில் உள்ள ஆபத்தைக் காட்டிலும், இது சற்று குறைவுதான்.

* * *

வ. உ. சி. கப்பல் ஏலம் போயிற்று

—மந்திரி, சுப்ரமணியம்.

ஆனாலும், மந்திரிகளின் மானம் போகவில்லை.

* * *

இந்தி தேசீய மொழியல்ல; பொது மொழியே!

—கவனர், ஸ்ரீ பிரகாசா.

உண்மை. தேசத்துக்கு உரியதுவே தேசிய மொழி. இந்தி நம தேசத்துக்கு உரியதல்லவே!

* * *

ஓடும் ரயிலுக்கு தீ விபத்து. 5 பெட்டிகள் பாழாயின.

—செய்தி.

பார்ப்பனர்கள் இருந்திருப்பார்கள். அவாளின் வலது கையில்தான் அக்கினி இருப்பதாக சாஸ்திரம் சொல்லுகிறதே!

# டாக்டர் மதுரம்.

தமிழ்ப் பெருமக்களுக்கு டாக்டர் மதுரம் என்றால், திருச்சிராப்பள்ளி நினைவு வரும். அடுத்து அவர் நிர்மாணித்த குருமருந்துசாலை நினைவுக்கு வரும், அடுத்து வருவன. புகழ்பெற்ற குரு பற்பொடி, குருதைலம் போன்றவை.

இன்று, குருமருந்துசாலை உரிமையாளரும், டெல்லி சட்டசபை உறுப்பினருமான டாக்டர் பால் மதுரம் அவர்களின் தந்தையாரே இவர்.

டாக்டர், அய்யாத்துரை மதுரம் 29-6-1877. திருச்சி மாவட்டத்திலுள்ள இருங்களூர் கிராமத்தில் பிறந்தார். அவருடைய தந்தையார் டாக்டர் சாமுவேல் மதுரம்.

இவருடைய குடும்பமும். குடும்பத்தைச் சார்ந்தவர்களும் மூன்று, நான்கு தலைமுறைகளாக தமிழ், ஆங்கில வைத்திய முறைகளில் பட்டங்கள் பெற்றுப் பணியாற்றியவர்கள் ஆவார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாசரேத் இவர்களுடைய சொந்த ஊர்.

டாக்டர், அய்யாத்துரை மதுரம் அமெரிக்கா, இலண்டன் கெமிக்கல் ஆராய்ச்சி நிலையத்தில் 1907 முதல் 1915 வரை இந்தியாவின் பிரதிநிதியாக இருந்தார். 9 ஆண்டுகள் திருச்சி நகரசபை உறுப்பினராகவும், 9 ஆண்டுகள் மாவட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்தார். திருச்சி மாவட்ட நீதிக்கட்சித் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார். கல்லூரி நிருவாகக்குழுக்களிலும், பொது நிலையங்களிலும் ஆதரவாளராக இருந்திருக்கிறார். பல நிலையங்களுக்கும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் நன்கொடையாக வழங்கி இருக்கிறார்.

அண்மையில், திருச்சியில் இவரது உருவச்சிலையை சென்னை முதலமைச்சர் கனம் காமராசர் திறந்துவைத்தார். டாக்டர் மதுரத்தின் மருத்துவப் பணியின் சிறப்பு குறித்துப்பல அறிஞர்கள் பாராட்டினர். ஆங்கில வைத்திய முறைகற்று, தமிழ்முறை தேர்ந்து, இரண்டினையும் கலந்து புதுமுறையில் தயாரிக்கப்பட்ட எளிய விலையுள்ள குரு மருந்துகள் மிகப் பயனுள்ளவை என்பது அனுபவஉண்மை. டாக்டர் மதுரம் அவர்களின் இக்கூட்டு மருத்துவப்பணியினை நாம் மனமுவந்து பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்!

திறப்பு விழாக் கூட்டத்திலே தி. க. பொதுச் செயலாளர் தோழர், எஸ். குருசாமி "நாங்கள் காங்கிரசில் சேரப் போகிறோம்" என்றாராம், காமராசர் முன்பு. சிரித்தாராம் அவர்.

மேல்நாட்டு மருத்துவமும் தமிழ்நாட்டு மருத்துவமும் இணைந்ததால், மருத்துவத் துறையிலே டாக்டர் மதுரம் பலன்காண முடிந்தது. வடநாட்டு அரசியல் அடிமைகளையும், தென்னாட்டு விடுதலை வீரர்களையும் இணைத்து, குத்தூசி குருசாமியார் அரசியல் துறையிலே என்ன பலன் காணப் போகிறாரோ! பார்ப்போம். ∅∅

## எனக்கு நம்பிக்கையில்லை!

நான் தனித்தமிழ்நாடு (மத்திய ஆட்சி, ஆதிக்கம் இல்லாத தமிழ்நாடு) கேட்கிறேன். அவர் (காமராசர்) அது கூடாது என்கிறார். நான் கேட்கும் காரணம் தனித்தமிழ்நாடு (பூரண சுயேச்சை உரிமையுள்ள தமிழ்நாடு) இல்லாவிட்டால் தமிழர் வாழ்வு சிதைந்து போகும், தமிழ்நாடு சுரண்டப்பட்டுவிடும் என்கிறேன்.

அவர், அதுகூடாது என்பதற்குச் சொல்லும் காரணம்: தமிழர் சிதைய மாட்டார்கள், சுரண்டப்பட மாட்டாது, நான் பார்த்துக் கொள்கிறேன் என்கிறார். இவர் இப்படிச் சொல்லுவதில், அதாவது "நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. —பெரியார் ஈ. வே. ரா.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 28—9—56 | இதழ் 12

## தீண்டாமை ஒழிக்க.

———)-(———

பெரியார் வினோபா கூறுகின்றார்:

"சூரியனது கிரணங்கள் ஒவ்வொரு வீட்டிலும் பிரவேசிக்கின்றன. அரிசனங்கள், சாதி இந்துக்கள், முசல்மான்கள் அனைவரது வீட்டிலும் சூரியனுக்கு எவ்வித வேற்றுமையும் கிடையாது. இவ்விதப் பாகுபாடுகளைப் பாராட்டுவது தவறாகும். எங்கு எல்லோரும் எவ்விதத் தடையுமின்றி போவதற்கு அனுமதியிருக்கிறதோ, அந்த இடந்தான் ஆண்டவன் வாசம் செய்யும் இடமாகும்."

14-9-56-ல் பெத்தநாய்க்கன் பாளையத்தில் இவ்வாறு பேசிய திரு. வினோபாபாவே, சாதி இந்துக்களைப் பார்த்து மேலும் கூறுகின்றார்:

"நாய், பூனை, எலி போன்ற பிராணிகளை வீட்டில் வைத்துக்கொள்ளும் மேல் சாதிக்காரர்கள், அரிசனங்களைக் கண்டுமட்டும் ஏன் அருவருக்க வேண்டும்? கிராமத்தில் தங்களோடு அவர்களை வாழவிடுவதில் என்ன தவறு? ஒரு மனிதனை மற்றொரு மனிதன் தீண்டத்தகாதவன் என்று வெறுப்பது பெருங்குற்றம். சாதி, குலம், பிறப்பு என்ற மாயச்சுழலில் சிக்கிச் சீரழியாதீர். இழிந்த எண்ணத்தை இன்றோடு விட்டு விடுங்கள். அரிசனங்கள் ஆட்டுச் சாதியாகவும், மேல் சாதிக்காரர் ஓநாய்ச் சாதியாகவுமா வாழுவது? மனிதர்களுக்குள் ஒருவருக்கொருவர் பயமுறுத்தவோ, பயப்படவோ கூடாது."

இப்படிக் கூறிய வினோபா வாயளவோடு நிற்கவில்லை. ஆதித் திராவிடர்க்கும், சாதி இந்துக்களுக்கும் அங்கு நிலவிய பூசலை நீக்கிட, முத்தன் என்ற தாழ்த்தப்பட்டோன் கரத்தைப் பற்றி, சாதி இந்து ஒருவரது கரத்தோடு சேர்த்தார். "நான் சென்றபிறகும் இவர்களை பயமுறுத்தக் கூடாது" என்று சத்தியம் வாங்கினார். பிறகு அங்கேயே தயிர் அருந்தினாராம். சாதி இந்துக்களை நோக்கிக்கேட்டாராம்: "இந்த அரிசன சகோதரனைத் தீண்டிவிட்டு இப்போது நான் சாப்பிட்டேன், நான் நரகத்திற்குப்போவேன்; நீங்கள் மட்டும் சொர்க்கத்தில் சுகமாக இருப்போம் என்று எண்ணுகிறீர்களா?" என்று.

பெரியார் வினோபாவின் இந்தப் பேச்சையும், செயலையும் நாம் மனமுவந்து ஒப்புகிறோம். பாராட்டுகிறோம். இந்துமதத்தின் சொத்தான தீண்டாமை யெனும் இழிவைப் போக்குவதிலே பகுத்தறிவு இயக்கத்திற்குப் பெரும்பங்கு உண்டு. தீண்டாமைக்கு எதிராக மனப்புரட்சியை மலரவிட்டு கல்லடியும், சொல்லடியும் பெற்றவர்கள், தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுயமரியாதைக்காரர்களே ஆவார்கள்.

பார்ப்பானையும், பறையனையும் ஒன்றாக்க விரும்புகிறவன்; வேத நிந்தகன், சாஸ்திர விரோதி, சம்பிரதாயப் பகைவன், கடவுளை மறுக்கும் கயவன் என்றெல்லாம் இழித்தும் பழித்தும் பேசினார்கள்; இடையூறுகள் பல செய்தார்கள்; அடி, உதை, குத்துக்களைப் பரிசாகத் தந்தனண்டு மதவெறிகொண்ட ஆத்திக மணிகள்! அத்தனையும் சமாளித்துக்கொண்டு நாம் கூறினோம்: "தீண்டாமை இருக்க வேண்டும் என்று வேதம் கூறினால் அதனை அழிப்போம்; சாஸ்திரம் சாற்றினால் எரிப்போம்; சம்பிரதாயம் இருந்தால் சாய்ப்போம்; கடவுள் குறுக்கிட்டால் மாய்ப்போம்" என்று. அன்று நாத்திகர் என்றார்கள்; இன்றும் சொல்லுகிறார்கள்.

அன்னாளில் தீண்டாமை ஒழிப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்ட காந்தியார், இந்துமதத்தைக் காப்பாற்றும் கடமையை மேற்கொண்டு, தீண்டாமை வளர்வதற்கான ஆதாரங்களை வாழவிட்டு, தீண்டாமையைமட்டும் ஒழிக்க முனைந்தார்; பயனற்ற பணி என்றோம். அவர் வழியினைப் பின்பற்றி காங்கிரஸ் ஆளவந்தார்கள் சட்டங்கள் பல செய்தார்கள்; ஆலயப்பிரவேச ஆர்ப்பாட்டம் நடந்தது. கண்ட பலன் என்ன? ஒழிந்ததா தீண்டாமை? தீர்ந்ததா வேற்றுமை நோய்? சாய்ந்ததா சாதி பேதம்? சமரசம் தழைத்ததா கிராமங்களில்? ஏன் இல்லை? ஏன்? ஏன்?

பூணூலையும், உச்சிச் குடுமியையும் வாழ்த்திக்கொண்டு பார்ப்பனீயத்தை ஒழிக்க முடியாது. ராமநவமி விழாக்கொண்டாடி மதப்பூசலை மாய்க்க முடியாது. பகவத்கீதையை பாராயணம் செய்துகொண்டு பகுத்தறிவு சமதர்மம் வளர்க்க முடியாது என்பதை, தீண்டாமை ஒழிக்க விரும்பும் தீரர் வினோபாவுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். சிந்திக்க மறுத்திடும் சிறுமதியாளரல்லவே! சிந்திப்பாரா இதுபற்றி? ● ●




## காட்சி 1.

(வித்யாவதி வீடு. பாடியவண்ணம் மாலை தொடுக்கிறாள் வித்யாவதி. அணிந்து கண்ணாடியில் அழகு பார்க்கிறாள். பின்னர் கையில் வைத்து ஆளனை எதிர்பார்க்கிறாள்; சந்திரவர்மன் வருகிறான். ஆசையோடுசென்று மாலையைக் கழுத்தில் அணிவித்து, திருஷ்டி கழிக்கிறாள்)

சந்திர:- (தழுவி) இன்பம்! வித்யாவதி! இன்பத்தின் எழில்வடிவம்! இசைக் கலையின் சுவைக் கடல்! சௌந்தரியத்தின் சிகரம்! காதலின் கலையமுது! உனக்கல்லவோ கண்ணேறு கழிக்க வேண்டும்!

(திருஷ்டி கழிக்கிறான்: கைகளை பற்றிக்கொள்கிறான்)

வித்யா:- எனக்கின்பம் தருபவர் நீங்கள், பெறுபவள் நான்!

சந்திர:- தருவதும் பெறுவதுமான காதற் கலையிலே, மணிமுடி புனைந்த மகாராணி நீ!

வித்யா:- சுவாமி! தகுதியற்ற தங்கள் அடிமைக்கு, எவ்வளவு மிகுதியான பாராட்டுகள்! கொஞ்சமும் பொருந்தாது சுவாமி!

சந்திர:- வயிரத்தின் தகுதி, அதனை வைத்திருப்பவர்க்கல்லவோ தெரியும்! வித்யாவதி! அரச குடும்பத்திலே பிறந்தும் அரியாசனமிட்டாதவன். கல்லதமிழறிந்தும் நாடோடியாகச் சுற்றுபவன். நான் கற்றுமறந்த கல்வியை, உன் காதலின்

ப. கண்ணன்

பேரொளி பெற்றுத் தந்ததடி எனக்கு!

வித்யா:- அப்படி என்னிடம் என்ன சுவாமி இருக்கிறது?

சந்திர:- மனிதன் விரும்புகின்ற கலையின்பம் அத்தனையும் மண்டிக்கிடக்கிறதே, இந்தத் தங்கத் திருமேனியில்!

வித்யா:- உண்மைதானா சுவாமி?

சந்திர:- காற்று வீசுவதும், கதிரவன் காய்வதும் உண்மைதானே?

வித்யா:- (அணைத்து, அவன் உதடுகளை கிள்ளி) இந்தச் சுவையான இன்பம்போல, அவை நிலையான உண்மையாகிற்றே!

சந்திர:- ஒப்புக்கொள்ளவேண்டும் அப்படி. இதுதான் நாணயம். (அணைத்தல்)

(கையிலே ஓவியத்தோடு, பின்புறம் வந்து நிற்கிறான் மைத்ரேயன்)

மைத்ரே:- கொஞ்சம் திரும்பவேண்டும் இப்படி. இதுதான் ஓவியம்!

சந்திர:- (விலகி) ஓ! மைத்ரேயரா? வாரும். முடித்துவிட்டீரா ஓவியத்தை?

மைத்ரே:- அசந்தர்ப்பம் ஏதுமில்லையென்று நினைக்கிறேன், அப்படியிருந்தால்... மன்னிக்க வேண்டும்.

சந்திர:- (ஓவியத்தை வாங்கிப் பார்த்து) முடியாது. மன்னிக்கும்படியான காரியத்தையா நீர் செய்திருக்கிறீர்? வித்யாவதி! பார்த்தாயா ஓவியத்தை?

வித்யா:- (பார்த்து) அற்புதமான சித்திரம்! பாடுகின்ற நீங்கள், அபிநயம்பிடித்து ஆடுகின்ற நான்! அடடா!

மைத்ரே:- ஆமாம், தேவலோகத்து சித்திரசேனனும் ஊர்வசியும்போல!

சந்திர:- அன்பின் மிகுதியால் நம்மைச் சேர்த்துவைத்த மைத்ரேயர்; கலையின் திறத்தால் நம்மை அமரக் காதலராக்கி விட்டார்! வித்யாவதி! எப்படி இவரை மன்னிப்பது? என் கையிலே ஆட்சி இருந்தால், பொற்காசுகளை வள்ளம் வள்ளமாக இவரது தலையிலே கொட்டி, அந்தக் குவியலிலே திணறடிப்பேன் இவரை!

மைத்ரே:- அப்படியானல், மன்னன் நந்திவர்மனின் பாராட்டினை ஓவியம் பெறப் போவதில்லையா?

சந்திர:- ஏன் பெருது? செங்கரும்பை விரும்பாத யானையுண்டோ?

மைத்ரே:- நாம் சந்திக்கும் நேரத்தில், யானைக்கு மதம் பிடித்தால்........?

சந்திர:- நான் அடக்குகிறேன். மைத்ரேயரே! மன்னனின் பாராட்டைப் பெறவேண்டும் இந்த மகத்தான சித்திரம். அவ்வளவுதானே? அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

மைத்ரே:- அரசவைக்கு நான் புதியவன்.

சந்திர:- அச்சம் வேண்டாம். அருகிலேயே நான் இருப்பேன்.

மைத்ரே:- வெறும் நாயோடு சந்தைக்குப் போய், வெள்ளிக் கோலால் அடிபட்ட கதையாகிவிடக் கூடாதே!

வித்யா:- கலைவளர்க்கும் பல்லவ மன்னன் சபையிலே, மைத்ரேயரின் ஓவியத்திற்கு மதிப்பில்லையென்ருல், கலைமகளின் கண்களுக்கு ஒளியில்லையென்றுதான் பொருள்.

சந்திர:- பொன்னை பேச்சு!

மைத்ரே:- பிறகென்ன; செம்பு பித்தளையாகவா இருக்கும் என் சிஷ்யையின் வாய்மொழி?

(அவளைத் தட்டிக் கொடுக்கிருர் மைத்ரேயர். சிரிக்கின்றனர்)

## காட்சி 2.

(காஞ்சியின் தெருவொன்று. பச்சை, ஒரு வாழைப்பழத்தை உரித்துத் தின்றவண்ணம் வருகிருன். எதிரே உச்சிக்குடுமியைத் தட்டி முடிந்தவண்ணம் மைத்ரேயன் வருகிருன்)

மைத்:- என்ன பச்சை! வாழைப்பழம் தின்கிருயா?

பச்:- பச்சை வாழைப்பழமா? அருமையான தேன் கதலி சுவாமி! ஒமக்கு வேணுமா? வாங்கிட்டு வர்றேன். பக்கத்து தெருக்கோயில்லேதான் பிரசாதப் பட்டுவாடா நடக்குது.

மைத்:- (சிரித்து) பச்சை! வாழைப்பழம் ஒரு ஏழைப் பழமப்பா! உனக்குச் சரிதான்; எனக்குப் பிடிக்காது.

பச்:- அப்படியானல், நீங்க சாப்பிடறது?

மைத்:- பலகாரம்.

பச்:- பலகாரம்! பழ ஆகாரம்! இந்தப் பழ ஆகாரந்தான் நாளடைவிலே பலகாரம் என்பதாகமருவிற்று. ரெண்டும் ஒண்ணுதான் சுவாமி!

மைத்:- நீயும் கெட்டாய், உன் தமிழும் கெட்டது, போ! ஏண்டா! ஏழையும் பிரபுவும் ஒன்ருக முடியுமா?

பச்:- ஏனுங்க? கண்ணு, காது, காலு, கையி எல்லாம் ஒண்ணுதானுங்களே?

மைத்:- உணவு?

பச்:- மனுஷனுங்க திங்கறதைதான் ஏழைங்க திங்கருங்க, பிரபுவுங்க?......

மைத்:- தேவர்களின் உணவைச் சாப்பிடுகிருர்கள். தேவர்கள் பாஷையிலேயே பேசுகிருர்கள்!

பச்:- தேவர் உணவுன்னு சொன்னீங்க! பொங்கல், புளியோதரை, தேங்கா, பழம் அது இது சரிதான்! அதென்னங்க தேவபாஷை?

மைத்:- மண்டு! அதுதாண்டா சம்ஸ்கிருதம்! பவித்ரமான பாஷை. மகான்கள்—பக்தர்கள்—உயர்ந்தவர்கள் போற்றிப் பாதுகாக்கும் மேலான பொக்கிஷம்!

பச்:- தமிழுங்க?

மைத்:- தமிழ்! மிகத் தாழ்ந்தது. பாமர மக்களின் பாஷை! பகவானுக்குப் புரியாதது!

பச்:- கெடையாது, நீங்க சொல்றது தப்பு. (தொலைவில் நோக்கி) சுவாமி! தோ; புலவர் பெருந்தேவனர் வர்ருர். கொஞ்சம் இருங்க. அவருகிட்டையே கேட்டுடுவோம்.

மைத்:- (பார்த்து அஞ்சி) ஐயயோ! பச்சை! வேண்டாம்! விஷப் பரீட்சை! (பணம் எடுத்துக் கொடுத்து) இந்தா, இதை வைத்துக்கொள். நாம் பேசியதை அவரிடம் சொல்லிவிடாதே!

பச்:- ஏனுங்க சுவாமி?

மைத்:- பெரியவர்களிடம் விவாதம் பேசக் கூடாதடா! நான் வருகிறேன். சாயுங்காலம் வித்யாவதியின் வீட்டுக்கு வருகிருயா?

பச்:- வர்றேனுங்க.

(மைத்ரேயன் ஒரு பக்கம் போக, மறுபக்கம் பெருந்தேவனர் வருகிருர்)

(வளரும்)

# மறைந்திட்ட மாவீரன்.



"திராவிடம் பிரிந்ததும், முதல் கவர்னர் ஜெனரல்" என்று பெரியார் சாமியைப் பாராட்டினார், திராவிடம் பிரியு முன்பே, நம்மைவிட்டுப் பிரிந்தாரே! பெரியாரும் இலட்சியத்தை மறந்தாரே!

ஐயகோ! நெஞ்சொடிக்கும் அயரச் செய்தி கேட்டோம்! வேதனைப் புயலில் சிக்கினோம்! தென் பாண்டி வீரன், பாண்டியனார் வழித்தோன்றல்; திராவிடத்தின் விடுதலைப்பணி முதல்வன், தன்மான இயக்கத்துத் தமிழ் மறவன், தூத்துக்குடி கே. வி. கே. சாமி தூர்த்தனால் கொல்லப்பட்டார்! எண்ணக் கலங்குகிறது இதயம்! எழுத நடுங்குகின்றது கை! அந்தோ! அண்ணா வென்றழைத்து அன்புமொழி பேசிடும் செயல்வீரனை—சிங்க ஏறினை இனி என்று காண்போம்! "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைக்கோர் எடுத்துக்காட்டாக—ஆற்றல்மிக்க குணக்குன்றாக—பொதுவாழ்வின் பண்பறிந்த வீரனாக—பகுத்தறிவின் முழக்கமாக—பாட்டாளிகளின் தலைவனாக—கழகத்தின் காவலனாக விளங்கிய கர்மவீரன், ஐயகோ வீழ்த்தப்பட்டான்; தேம்புகின்ற திராவிடமே! நினது விடுதலைக்காகப் போராடிய மாவீரன் ஒருவன் மடிந்திட்டான்! எமது வீர வணக்கத்தை, சவமாகிவிட்ட எங்கள் சகோதரன், தூத்துக்குடி சாமியின் பாதங்களிலே படைக்கின்றோம்! அன்னாரின் குடும்பத்தினர்க்கு வழிகின்ற கண்ணீரோடு அமைதி கூறுகின்றோம்; ஆறாத் துயரிலே பங்கு கொள்ளுகின்றோம்.

—ப. கண்ணன்.

TEL: Gurucures    PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

## சேலத்தில் துக்கம்.

தூத்துக்குடி மாவீரன் கே. வி. கே. சாமியின் கோரமரணம் கேட்டு, சேலத்துக் கழகத் தோழர்கள் கொதிப்படைந்தனர். பெருங் கவலையுற்றனர். சேலம் நகர தி. மு. க. சார்பில் 23—9—56. ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு பெருத்த அனுதாப ஊர்வலம் நடைபெற்றது. கருப்புச் சின்னமணிந்த 1000-க்கு மேற்பட்ட தோழர்கள் அமைதியாகச் சென்ற காட்சி, பார்த்தோரின் நெஞ்சை உருக்கிற்று.

ஏற்பாடு செய்திருந்த குமாரசாமிப்பட்டி, தி. மு. க. கிளையின் ஆண்டு விழாக் கூட்டம் நடைபெறும் இடம் வந்து ஊர்வலம் முடிந்தது. தோழர், எஸ். மெய்யப்பன் தலைமையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேறியது. பிறகு தோழர், வெ பெரியசாமி தலைமையில் நடைபெற்ற ஆண்டுவிழாக் கூட்டத்தில் கல்லூரி மாணவர் பெரியசாமி, கவுன்சிலர்கள் பி. கே. வரதராசுலு, எ. மாரியப்பன் ஆகியோரும், பி. என். அம்மச்சி ப. கண்ணன், ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி—சுப்ரமணியம் ஆகியோரும் திராவிட விடுதலைப் போராட்டம் குறித்தும், மாவீரன் சாமியின் தியாகம் குறித்துப் பேசினர். —ந-நி

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● கு. இரா. பரமசிவம்,
தெற்குரத வீதி,
காரமடை.

**மு. முருகேசன், கம்பம்.**

கே: கலையுலகில் நடமாடும் பச்சோந்திகள் பற்றித் தங்கள் கருத்தென்ன?

கே: அவர்களின் தகுதி—தரத்தினை உணரும் சக்தி, கலாரசிகர்களிடம் வளரவேண்டும் என்பதுதான்.

**மா. அரங்கசாமி, கோவை,**

கே: எல்லாவித பாசங்களையும் அடக்குபவர்கள், எந்தப் பாசத்தை அடக்க முடியாமல் தவிக்கிறார்கள்?

ப: எல்லாப் பாசங்களையும் அடக்கும் வன்மை பெற்றவர்கள், எந்தப் பாசத்தையும் அடக்கிடுவார்களே!

* * *

கே: வருகிற பொதுத் தேர்தல் ஜுரம், எத்தனை டிகிரியாக அதிகரித்து உள்ளது?

ப: காங்கிரஸ் மந்திரிகளுக்குத் தவிர, மற்றவர்க்கு "நார்மல்"தான் நிற்கிறது.

**● கு. இரா. பரமசிவம், காரமடை.**

கே: "மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்!" என்ற குறளின் கருத்துக்கும், "வாழ்வு நிலையாதே—நீ மயங்கித் திரியாதே" என்ற மதவாதியின் கருத்துக்கும் வித்தியாசம் என்ன?

ப: இவ்வுலகில் வாழ அனுமதிப்பது குறள். "அவ்வுலக" ஆசையினை எழுப்பி வாழ்வைக் குலைப்பது மதம்! ஒன்று பசும் பால்; மற்றொன்று எருக்கம் பால்.

* * *

கே: புராணங்களைச் சாடுவோர் மீது, முத்துராமலிங்கத் தேவர் ஏன் சீறிவிழுகிறார்?

ப: கண்ணொளி மங்கியிருக்கலாம்; அதனால் கண்டிக்கப்பட வேண்டியவர்களை அடையாளம் புரிந்து கொள்ளாமல் பாவம், அவர் எங்கெங்கோ மோதிக் கொள்கிறார்.

**எம். சுப்பராமன், சென்னை 1.**

கே: மாடர்ன் தியேட்டரின் "பாசவலை" படத்தில், தோழர் டி. வி. நாராயணசாமி ஒப்பந்தம் செய்யப்பட்டு பிறகு நடிக்க மறுத்துவிட்டது உண்மையா?

ப: அப்படி ஒன்று நடந்ததாக நண்பர் நாராயணசாமியே ஒப்பமாட்டார். அவ்வளவு பொய்.

* * *

கே: "பாசவலை"யில், மாயாஜால மந்திர தந்திரக் காட்சிகள் உண்டா?

ப: எது இருக்கிறது எது இல்லை என்பது, படத்தைப் பார்த்த பிறகுதான் தெரியும்.

**கே. தருமன், கடலூர்**

மந்திரி சுப்ரமணியம் முதன் மந்திரியாகவும், காமராசர் நிதி மந்திரியாகவும் இருந்திருந்தால்......?

கே: கட்டாய இந்தி வேண்டாம் என்று கூறிட, ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிமான தொகை பெற்றிட முடியாமல், அப்போதும் இப்படித்தான் விழிப்பார்கள்!

**கடல்வேந்தன், தாரமங்கலம்.**

கே; திராவிடம் பிரிந்தால், கம்யூனிஸ்டுகள் தேவைப்படுவார்களா?

ப: சமதர்மக் குடியரசு வெற்றிபெற அவர்கள் ஒத்துழைத்தால், வரவேற்கத்தானே வேண்டும்!

**ஏ. மாணிக்கம், துளசம்பட்டி.**

கே: நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திறவுகோல் எது அண்ணா?

ப: கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்பு நிறைந்த உழைப்பு, தம்பி!

---

தலைமை நிலையச் செய்தி:

# தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப் பயணம்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத்து, ஏ வி பி ஆசைத்தம்பி, என். வி நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து, 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத்தேர்தல் சூழ்நிலை குறித்துவிவரம் அறிவார்கள்.

**ஊர்கள்:**

காஞ்சீபுரம், வேலூர் (வ ஆ) திருப்பத்தூர், கிருஷ்ணகிரி சேலம், ஈரோடு, கோயமுத்தூர், உடுமலைப்பேட்டை, கரூர், திருச்சி, பெரியகுளம், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, நாகர்கோவில், குற்றாலம், காரைக்குடி, பட்டுக்கோட்டை, மாயவரம், கடலூர்.

தேர்தல் சூழ்நிலை குறித்து விவரம் தெரிவிக்கக் கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ளவைக் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், அன்பு கூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

—தலைமைக்கழகம் (தி. மு. க)
'அறிவகம்' சென்னை 20-9-56

[2-ம் பக்கம் தொடர்ச்சி]

ஒவ்வொரு துறைக்குமாகச் செலவிடப் போகும் தொகையைப்பற்றிய பட்டியல் ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அதில் காணப்படும் தொகை விவரம் எவ்வளவு தெரியுமா? 184 கோடியே 66 லட்சம் ரூபாயாகும். இப்புத்தகம் அச்சாகி அங்காடிக்கு வருவதற்குள் 14 கோடி ரூபாயைக் கோட்டை விட்டிருக்கிறார்கள்! தேவிகுளம், பீர்மேட்டைக் காப்பாற்றப்போய் செங்கோட்டையையும் பறிகொடுத்த வீரத்திற்கு இழுக்கு நேரலாமா? எனவே, விட்டுக்கொடுப்பதையே தம் பணியாகக் கொண்டிருக்கிறான் நம் கந்தப்பிள்ளை. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளராதோ என்பது அவன் சித்தாந்தம்!

82 கோடியை நிறுத்தி நிதானமாக ஐந்து ஆண்டுகளில் செலவழித்திருக்கிறதே, அதையேனும் ஒழுங்காகச் செலவு செய்திருக்கிறதா என்றால் அதுவுமில்லை! ஒருசில சிக்கல்களை உங்கள் முன் வைக்கிறேன். விடை கண்டுபிடிக்க முடியுமா என்று முயலுங்கள்:

'வழவழா' என்று படங்கள் நிறைந்து கவர்ச்சியோடு கூடிய ஒரு நூல், தொடுவதற்கு நன்றாக இருக்கிறது! ஆங்கிலத்தில் எழுதப்பட்டு உள்ளது. "சென்னை மாநிலத்தில் பாசனம்" (Irrigation in Madras State) என்னும் தலைப்பில் 1955-ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. "ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னையின் சாதனை" என்ற தமிழ் நூலும் அதே ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டிலும் குறிப்பிட்ட சில தேக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகை, ஒன்றோடொன்று உதைத்துக் கொள்கிறது. அதற்குள் கொஞ்சமும் ஒற்றுமையைக் காணோம்! இதை யாரிடம் சொல்லி அழுவது? இரண்டும் அரசாங்க வெளியீடுகள்! ஒரேயாண்டில் வெளியிடப்பட்டவை!

மணிமுத்தாறு தேக்கச் செலவு மதிப்பீடு; ஒன்றிலே 398 லட்சம், இன்னொன்றிலே 500 லட்சம்! வைகை நீர்த்தேக்கத் திட்டத்தின் செலவு மதிப்பீடு; ஒன்றிலே 243 லட்சம், மற்றொன்றிலோ 310 லட்சம்! சாத்தனூர் தேக்கத்திட்டம் 263 லட்சத்தைச் சாப்பிடும் என்று எண்ணப்பட்டது ஒரு ஏட்டில். ஏனைய ஒன்றில் அதன் செலவீடு 289-ஆக உயர்ந்துள்ளது! இவை இரண்டு நூல்களும இப்படி முட்டிக்கொள்வது போதாதென்று "முதல் ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்" என இந்த ஆண்டிலே வெளியிடப்பட்டிருக்கும் நூலும் இவற்றை இடிக்க வருகிறது. இதன்படி மணிமுத்தாறு நீர்த்தேக்கச் செலவு ஐந்துகோடியே ஐந்து லட்சம்! ஓராண்டில் ஐந்து லட்சமேனும் உயரவேண்டாமா? வைகைத் தேக்கம் இன்னும் சற்று முன்னேறிப் பாய்கிறது. இந்நூலின் கணக்குப்படி வைகைத் திட்டத்தின் செலவு மதிப்பீடு மூன்று கோடியே முப்பது லட்சம்! ஒரே ஆண்டில் இருபது லட்சம் ஏறியுள்ளது! இதன்முன் மணிமுத்தாறு மண்ணைக் கவ்வுகிறது. 5 லட்சந்தானே அதனால் உயர முடிந்தது? வைகையைப் பாருங்கள், 20 லட்சம் எட்டிக் குதித்துள்ளது! எப்படி நமது நிர்வாகம்?

இதைவிட மோசமாம் வடக்கே. இந்திய அரசின் மாட்சிமையைக் கற்பனை செய்து பார்க்கக்கூட ஒருவராலும் இயலாது. மலையினும் மாணப் பெரிது!

உயர்வெல்லாம் செலவிலே மட்டும் தான். வரவிலேயல்ல. செலவினம் உயர்ந்திருப்பதுபோல் (ஏன் உயர்ந்ததென்று ஒருவருக்குமே தெரியாது போலும்!) நீர்பாயும் பரப்பு அதிகரிக்கவில்லை. ஆனால், இதற்கு மாறாகச் செலவு மதிப்பீட்டுக் காலத்தில் இவ்வளவு பாயும் எனத் திட்டமிடப்பட்டிருந்த பவானித் தேக்கம், அத்தனை ஏக்கருக்கும் நீர் தருவதாக இல்லை. செப்டம்பர் 15-ம் தேதிக்குப் பிறகு கீழ்பவானித் தேக்கம் மட்டும், சுமார் 1 லட்சத்து 95 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்வசதியளிக்கும்—இது 'இந்து' ஏடு தரும் செய்தி. இந்தமாதம் முதல்வாரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். (தேதியை நான் குறித்து வைக்கவில்லை) ஆனால் இத்தேக்கம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கருக்கு நீர்ப்பாய்ச்சும் என்று எதிர்பார்க்கப்பட்டது! ஆர்ப்பரிப்பதைக் கண்டு மயங்காது சிந்தித்தால் அனைவருக்கும் நன்மையுண்டு.

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து-ச.

அதிகாரம்-க. பாட்டு-ச.

**வேண்டுதல் வேண்டாமை**
**-இலான் அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

எதிலும் விருப்பமும், வெறுத்தலுங் காட்டாது; யாவையும் சமநோக்குடன் கருதி வாழ்கின்றவருக்கு எவ்விதத் துன்பங்களும் உண்டாவதில்லை. துன்பங்கள் எல்லாம் ஆசையாலும், அகங்காரத்தாலுமே விளைவதாகும். அவை அகற்றப்பட்டு விட்டால் துன்பமில்லையாம்.

விளக்கம்:

"இலான் அடி" என்பது அறிவை "ஆன்" விகுதி கொடுத்துளது சிறப்பு கருதி.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி


## தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

மு. கருணாநிதியின்

ஒரே முத்தம் 1—4—0

ப. கண்ணனின்

புரட்சிப் பாடகன் 1—8—0

வீரவாலி 1—4—0

கன்னியின் சபதம் 0—8—0

மின்னொளி 0—6—0

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

*

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம், :: சேலம் மாவட்டம்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

என்று கூறுகின்றனர்—'ஏக இந்தியா' பேசுகின்றனர்!


ஆனால், கொடும் புலிகூட அவனிடம் கேட்காது—வடவர் கேட்கின்றனர்!

இந்தியத் துணைக்கண்டத்தில் அதிகாரம் செலுத்திவந்த வெள்ளையரை ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெளியேற்ற அனைவருமே கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாயினர்; இன்னும் சொல்லப்போனால் தென்னாட்டு மக்கள்தான் தீவிரக் கிளர்ச்சிகளில் முன் நின்றனர். ஆனால், இன்று வடநாட்டினர் ஏக போக உரிமை கொண்டாடுகின்றனர்.

வெள்ளையர் ஆட்சி கொடுமையானதென்றால், வடவர்கள் ஆட்சி, கொடுமையும் வஞ்சகமும் நிறைந்ததென, நம் நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்களே தங்களையும் மறந்து சில நேரங்களில் உண்மை பேசுவதை நாம் கண்டு வருகிறோம்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எடுத்துக்கொண்டால்கூட மக்கள் எண்ணிக்கைப்படி குறைந்தது 700 கோடி ரூபாயாவது ஒதுக்கியிருக்க வேண்டும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நேரு சர்க்காரின் வஞ்சனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நம் நாட்டுக்கு 1,000 கோடி ரூபாயாவது ஒதுக்கிப் பெருந்தொழிற்சாலைகள், அணைக்கட்டுத் திட்டங்கள் அமைக்க முன்வந்திருக்கவேண்டும். நேரு பண்டிதர் செய்ததென்ன? 170 கோடி ரூபாய்தான் தர முடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்"

●



## தாய்க்குப்பின் தாரம்:

சொல்லும் முறை தெரிந்து சொன்னால் அது சிறிய விஷயமாயினும் சோபிதமளிக்கும் என்ற கருத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது "தாய்க்குப்பின் தாரம்!"

அகந்தையும், ஆணவமும் கொண்ட பண்ணையார் துரைசாமி துறையூர் கிராமத்திற்கு ஒரு சர்வாதிகாரி! அவர் அதிகாரத்திற்குப் பணிய மறுக்கின்றனர் ரத்தினம்பிள்ளையும் அவன் மகன் முத்தையனும்! பண்ணையார் அதிகார வெறி ரத்தினம்பிள்ளையை பலி கொள்ளுகிறது! முத்தையன் மனதில் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற பகை வளர்கிறது. அதற்கு உரமிடுகிறாள் முத்தையனுடைய அன்னை. இடையிலே பண்ணையார் மகள் சிவகாமி முத்தையன் இருவரும் காதலில் இணைகின்றனர். முடிவிலே முரட்டுக்காளையால் சிவகாமிக்கு நேரவிருந்த பேராபத்திலிருந்து அவளைக் காப்பாற்றி, துரைசாமியின் ஆணவத்தை முறியடித்து, தன் தாய்க்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி தன் சபதத்தை முடித்து சிவகாமியை மணக்கிறான் முத்தையன்!

கதையில் பிரமாதமான கருத்துக் குவியலோ, கற்பனைப் பின்னலோ, கதையமைப்போ இல்லை! என்றாலும் ஆர்வத்துடன் ரசிக்கச் செய்கின்றன கதையை விவரித்திருக்கும் முறையும், காட்சிகளைப் படமாக்கி இருக்கும் கற்பனைத் திறமையும்!

முரட்டுக் காளையுடன் முத்தையன் போராடும் கட்டம் கதையின் உச்சம்! பண்ணையாரின் உயிரை வாங்கிவிடுவதென்று ஓடிய முத்தையன் அவர் கன்னத்தில் மட்டும் அறைந்துவிட்டு ஓடுவது அவன் வீரத்திற்கு ஒரு இழுக்கு!

சில காட்சிகள் மனோகரா, பொன்முடி, காலம் மாறிப்போச்சு போன்ற வெற்றிப் படங்களை நமக்கு நினைவூட்டுகின்றன!

முத்தையன் தந்தை இறந்து விட்டதைக் கேட்டுக் கதறுவதும், தாயைக் கட்டிக்கொண்டு அழுவதும் உணர்ச்சிகரமாக இருந்தாலும், மிகைபடக் காணப்படுவதால் சலிப்பாக இருக்கிறது!

வள்ளியாக வரும் ஜி. சகுந்தலா மற்றப் படங்களில் நடித்ததைவிட இதில் நன்றாக நடிக்கிறார்.

ச. அய்யா(பிள்ளை)வின் வசனங்கள் நன்றாக இருக்கின்றன. பகுத்தறிவுக் கருத்துக்களும் தெறிக்கின்றன. திரையுலகின் பின்னால் மறைந்து நின்றவர் முன்னால் வந்தார்; வெற்றிபெற்று விட்டார். வாழ்க!


மருதகாசியின் "மனுசனை மனுசன் சாப்பிடுறாண்டா தம்பிப் பயலே!" என்ற ஒரு பாட்டைத் தவிர மற்ற பாடல்கள் சோபிக்கவில்லை!

படத்தை விறுவிறுப்புடன் கொண்டு செல்வது 'எடிடிங்!' இதைச் செய்தவர் எம். ஏ. திருமுகம்! டைரக்டரும் இவரே. டைரக்ஷனில் புதுமை இல்லாவிட்டாலும் சோடை இல்லை!

மக்களின் ஆரவாரத்தையும், கைதட்டலையும் கொண்டு ஒரு படத்தின் வெற்றியை நிர்ணயிப்பதானால் "தாய்க்குப் பின் தார"த்தை ஒரு வெற்றிப் படமென்றே கூறலாம்!

—"அமரன்"

டாக்டர் சோதனை விளக்கத்தின்படி
ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்–1.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 5—10—56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 13


## கடவுளை சமுதாய உடமையாக்கு—குன்றக்குடியார்.

சேற்றிலே செந்தாமரை பூப்பதுபோல், அவலட்சணத்திலே அழகு மலர்வதுபோல், நஞ்சிலே நல்லமுது விளைவது போல்—சந்நியாசிக் கோலத்திலே சமதர்மம் பேசும் விசித்திர சாதுவாக விளங்குகிறார் குன்றக்குடி அடிகளார், திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள்! இவர் துணிகரமாக வெளியிடும் சில கருத்துக்கள், சுரண்டல் பார்ப்பனீயத்தின் சுகவாழ்வுக்குப் பேரிடியாக உள்ளன. எனவே, பதைக்கின்றது பார்ப்பனீயம்! அருள் நெறிக் கழகம் தோற்றுவித்தவர்; ஆத்திகத்தின் பெயரால் நாட்டிலே நடைபெறும் அக்கிரமங்களுக்கெல்லாம் ஆதரவாளராக; நாத்திகத்தை அழிக்கும் பிரசார "பீட"மாகத் திகழுவார் என்று எதிர்பார்த்தவர்கள் திகைத்து நிற்கின்றனர்; திக்கு முக்காடுகின்றனர், அவர் சிந்திடும் அறிவுரைகள் கண்டு!

காரைக்காலில், 23-9-56-ல் சுவாமி விவேகானந்தர் வாலிப சங்க 20-ம் ஆண்டு விழாவில் பேசுகையில் குன்றக் குடியார் கூறுகிறார்: "தமிழ் ஆட்சி மொழியாகவும், கோயில்களில் அர்ச்சனை மொழியாகவும் ஆக வேண்டும்.... முன்னேற்றத்திற்கு சிந்தனைதான் அடிப்படை, சிந்தனைக்கு மொழிதான் அடிப்படை. எங்கு மொழிவளர்ச்சி இல்லையோ அங்கு முன்னேற்றம் ஏற்படாது." என்று.

இந்த முற்போக்குக் கருத்துக்களைக் கேட்கும்போது; முகம் சுளிக்காதா வைதிகம்? "தேவபாஷை சம்ஸ்கிருதம்; அதுதான் ஆண்டவனுக்குப் ரீதி; நீந்தமிழ் கேட்டால் தேய்ந்துவிடும் எங்கள் தெய்வத்தின் செவிகள்" என்று எத்திப் பிழைக்கும் பித்தலாட்டக்காரர்கள், எப்படிச் சகிப்பார்கள் இந்தச்சிறு புரட்சியை? மொழி மாற்றத்தை? மேலும்,

திருவாரூரில் 24-9-56-ல், உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டத்தில் அடிகள் கூறினார்: "சமயம், கடவுள் பெயரால் நடக்கும் அட்டூழியங்கள் ஒழிய வேண்டும். ஆண்டவனைப் பொறுத்தவரை, நாத்திகர் திரு ஈ. வே. ரா. உட்பட எந்தக் கட்சியினரும் கடவுள் இல்லையென ஒருபோதும் மறுக்கவில்லை. கடவுள் சமயம் அனைத்தும் சமுதாயத்தோடு ஒட்டியதாக இருக்க வேண்டும். சாதி, சமயம் ஒழிந்து, சமதர்ம சமய நெறி—நல்லொழுக்கம் — நீதி — நேர்மை ஓங்கவேண்டும். ஏழ்மைநிலை மாறவேண்டும். கடவுள் சமுதாயத்தின் பொதுப் பொருளாக்கப்பட வேண்டும்" என்று.

அருள்நெறி இன்னதுதான் என்பதை அடிகளார் புரிந்து கொண்டார் போலும்! அறிவு மணக்கிறது அவரது பேச்சிலே; அன்பு மிகுக்கிறது; அவரது அருட்பார்வை, தமிழ்ப்பார்வையாக — பொதுமைப் பார்வையாக மாறியுள்ளது. நில முதலாளித்துவமும், பண முதலாளித்துவமும் சமதர்ம நெறிக்கு முட்டுக்கட்டையாக நிற்பது போல, கல் முதலாளித்துவமும் (தெய்விக முதலாளித்துவம்) ஒரு முட்டுக்கட்டை என்பதை சிந்தனையாளர் நன்கறிவர். எனவேதான், கடவுளைத் தம்முடைமையாக்கிக் கொண்டு, பல வகையாலும் சமுதாயத்தைச் சுரண்டிப் பிழைக்கும் சதிக் கும்பலை பகிரங்கப்படுத்துகிறது அறிவு இயக்கம். அதனையே மெருகோடு சொல்லுகின்றார்: "கடவுள் சமுதாயத்தின் பொதுப் பொருளாக்கப்

[10-ம் பக்கம் பார்க்க]

# நமது பகவத்சிங்கை நாம் இழந்தோம்.

—ப. உ. சண்முகம்.

**திருவண்ணாமலை முன்னாள் நகராண்மைக் கழகத் தலைவர், தோழர். ப. உ. சண்முகம் அவர்கள் 30–9–56 அன்று, தோழர் கே. பி. நஞ்சப்பன் அவர்கள் தலைமையில், சேலம் அம்மாப்பேட்டையில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆண்டுவிழாக் கூட்டத்தில் பேசியதன் சுருக்கம்:**

இந்த ஆண்டு விழாவை எவ்வளவோ சிறந்த முறையில் நடத்தவேண்டுமென்று இங்குள்ள தோழர்கள் பாடுபட்டிருப்பார்கள். ஆனால், நமது அருமைத் தோழர் சாமியின் மறைவுக்குப் பிறகு, பொதுச்செயலாளர் விட்ட அறிக்கையின்படி இதைப்போன்ற பல ஆண்டு விழாக்கள் அனுதாபக் கூட்டங்களாக மாறவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

படுகொலை செய்யப்பட்டார் சாமி என்று அறிந்தவுடன், அவரைப் பார்த்திராதவர்கள், அவருடன் பழகாதவர்கள் கூட சோகக் கடலிலே தள்ளப்பட்டனர். தொண்டர்கள் துடித்தனர்; நாமெல்லாம் அழுதோம்; செய்திகேட்ட அண்ணா சிலையானார்! கே. வி. கே. சாமி ஒரு பெருந்தொண்டர். அவருக்கு நேர்ந்தது இயற்கை மரணமாயிருந்திருந்தால், ஒரு அனுதாபத் தீர்மானம் போடுவதோடு நின்று விடுவோம். இன்று நம் நிலைமை வேறு விதமாயிருக்கிறது.

இதையெல்லாம் பார்க்கும்பொழுது தி. மு. க. பட்டுமெத்தையில் வளர்ந்தது அல்ல. கல்லறைகள் பலவற்றைத் தாண்டி வந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. மஜீத், வேலாயுதம், பாண்டியன் போன்றோருடைய முடிவு இந்த உண்மையைத்தான் பலப்படுத்துகிறது. தூத்துக்குடி மாநாட்டில் சாமியின் தொண்டைப் பார்த்துவிட்டு, பட்டம் கொடுப்பதில் 'கருமி'யான பெரியாரே "எதிர்கால திராவிட நாட்டின் கவர்னர் ஜெனரல்" என்ற பட்டத்தை அவருக்கு அளித்தார். அந்தப் பட்டம் வெறும் புகழ்மாலை அல்ல; அவருடைய தொண்டின் எதிரொலி! அன்று குமரனை இழந்த கோவை மாவட்டம்போல, இன்று சாமியை இழந்த திருநெல்வேலி மாவட்டம் தேம்பியழுகிறது. தி மு க. தன்னுடைய பகவத்சிங்கையே இழந்துவிட்டது என்றுகூடச் சொல்வேன்.

கழகத்தின் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட கண்ணியமிக்கவர் அவரைக் கொன்றது எத்தகைய கொடியவரமாயிருந்தாலும்—அந்தக் கொடிய நெஞ்சு எத்தகைய நஞ்சை ஏற்றிக் கொண்டிருப்பினும், அது ஒரு ஒளிவிளக்கை அணைத்துவிட்டது. உலகம் போற்றும் பல அறிஞர்கள் சாதாரணமாக இறந்திருக்கின்றனர். அவர்களையெல்லாம் நாம் நினைப்பதில்லை. ஆனால், நஞ்சு குடித்த சாக்ரடீஸ், சுடப்பட்டு இறந்த ஆப்ரகாம் லிங்கன், சிலுவையில் அறையப்பட்ட இயேசு இவர்களை நம்மால் மறக்க முடியவில்லை. அவர்களுடைய முடிவு அத்தகையது. அந்தப் பட்டியலிலே காந்தியார்தான் கடைசியாக இருப்பார் என்று கருதினோம். இன்று சாமியும் அதில் சேர்க்கப்பட்டு விட்டார். திராவிடத்தின் வரலாற்றில் சாமியின் முடிவு கண்ணீரால் எழுதப்படும்.

உலக நாடுகளின் விடுதலை வரலாற்றில், பல தலைவர்களுக்குக் கல்லறை கட்டிய பின்புதான், பலர் பலி கொடுக்கப்பட்ட பின்புதான் விடுதலைச் சாசனங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. என்றாலும், ஏ தமிழகமே! அரசியலிலுள்ள கருத்து வேற்றுமைகளினால் ஏற்படும் இதுபோன்ற கோரச் செயல்களை இனியும் ஏற்றுக் கொள்ளாதே! சாமியின் மரணமே கடைசியாக இருக்கட்டும். இந்த நிலைமை நீடித்தால், நம் கழகத்தைக் கண்டு பலர் பயப்படுவார்கள்; சிலர் கேலி செய்வர்; இன்னும் சிலர் வாழ்த்தவும் செய்வர், எதிர்க் கட்சிகளாயிருந்தால்! சாமி விட்டுப்போன பணியினைத் தொடர்ந்து முடிப்போம். வாழ்க சாமியின் பெயர்!

# சாமியின் இரத்தம்; வீண்போக விடோம்.

—கி. மனோகரன்.

**அடுத்து, நாகர்கோவில் தோழர். கி. மனோகரன் பேசியதாவது:**

மூன்று மாதங்களுக்குமுன்பு, நான் தூத்துக்குடி சென்றிருந்தபோது சில நண்பர்கள் சாமியைப்பற்றி என்னிடம் சொன்னார்கள்: "சாமி மிக்க உணர்ச்சியுள்ளவர்; அவரால்தான் கழகம் வளர்ச்சியடைகிறது. இதைக்கண்டு எதிர்கட்சியினருக்கு வயிற்றெரிச்சல் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சிலமாதங்களுக்குள் அவர் வெட்டப்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை" என்று. அவர்கள் சொன்னது இன்று உண்மையாகி விட்டது. தூத்துக்குடிப் பகுதியிலே சாமி தன்னுடைய பணியை ஆரம்பித்தவுடனேயே, அதுவரை அங்கே ஓடியாடிக்கொண்டிருந்த எதிர்க் கட்சிகளெல்லாம் உட்கார்ந்து விட்டன; சிறிது காலத்தில் படுத்துவிட்டன; சாமி கொலையுறுவதற்கு சின்னாட்களுக்கு முன்பே அந்தக் கட்சிகளில் சில கண்ணையும் மூடிக்கொண்டன. "இந்த நாட்டிலே பொதுவாழ்க்கையென்பது மணம்வீசும் மலர்த்தோட்டமல்ல; அது ஒரு மயானம்" என்பதற்கு சாமியின் முடிவே சான்றாகிவிட்டது. வடநாட்டில் காந்தியும், பாகிஸ்தானில் லியாகத் அலிகானும் சுடப்பட்ட பொழுது, தமிழகத்தில் இதுபோன்ற அபாயங்கள் இல்லை என்று நினைத்தோம். ஆனால், தொள்ளாயிரத்து நாற்பத்தேழிலிருந்து நாம் பலரைப் பலிகொடுத்தோம்; கல்லறைக்கு அனுப்பினோம்; மரண சாசனம் தீட்டினோம். உலகத்தின் மற்றப்பகுதிகளின் பொதுவாழ்க்கையில் கடமையும், மகிழ்ச்சியும், பெருமையும், வாழ்த்தும் கலந்திருக்க, தமிழகத்தின் பொது வாழ்வில் மட்டும் அச்சமும், அவநம்பிக்கையும் குடிபுகுந்து கொண்டன.

பொது வாழ்வைச் சுற்றி போடப்பட்டுள்ள திரைகளுக்குப் பின்னால் ஒரு புறம் பட்டாக் கத்திகளையும், மற்றொரு புறம் அக்னித் திராவகங்களையும், இன்னொரு புறம் தூக்குமேடைகளையும் பார்க்கிறேன். இவை இணைந்து பணி

[9-ம் பக்கம் பார்க்க]

## எதிரொலி

6 பேர் போய் சட்டசபையில் சாதிக்கப் போவதென்ன?

—"விடுதலை"

ஒருவர்—காமராசர்—என்ன சாதிப்பாரோ, அதைவிடச் சற்று அதிகமாகவே!

*　*　*

காமராசருக்குத் தமிழ்நாட்டைத் தனி நாடாக்க ஒரு அதிகாரமுமில்லை.

—பெரியார்.

ஆண்மையற்ற பேடிதான்; என்றாலும அவரே என் ஆசை நாயகர் என்றுளாம் வேசி வேதநாயகி!

*　*　*

காமராசருக்குத் தமிழர் என்ற உணர்ச்சி இருக்கிறது; தமிழர் நன்மைக்கு உழைக்கும் எண்ணமிருக்கிறது.

—பெரியார்.

என்றாலும், பொட்டுக்கட்டிய தங்கை! பாவம்! பார்ப்பனரோடும், பனியாப் பயல்களோடும் உறவாடி உடலையும் கெடுத்துக்கொண்டு, தமிழரின் மானத்தையும் கெடுத்து விடுகிறாள். ஆமாம்! அது அவள் கடமை!

*　*　*

ஆந்திரர்களும், தமிழர்களும் இரு மொழி ராஜ்யத்தில் ஒன்று சேருவது சாத்தியமே!

—காமராசர்.

அப்படியானால், இது தக்ஷிணப் பிரதேசமல்ல; தமிழ்நாடுதான் என்று பெரியார் பாடத் தொடங்குவதும் சாத்தியமோ?

*　*　*

மேற்கு ரயில்வேயில், வண்டி தடம் புரண்டது

—செய்தி.

தண்டவாளம் தி. க. பாணியில் இருந்திருக்குமோ?

*　*　*

முதல் மனைவி இருக்கையில் மறுமணம் புரிந்து கொண்டதாக வழக்கு.

—செய்தி

பகவான் கிருஷ்ணமீதல்ல; அவர் காட்டிய வழியில் நடந்த திருவண்ணாமலை ராதா கிருஷ்ணன் மீது!

---

தலைமை நிலையச் செய்தி.

# தேர்தல் ஆய்வுக்குழுச் சுற்றுப்பயணம்

பொதுச் செயலாளர், இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள், ஈ. வே கி. சம்பத், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஆகியோரும் அக்டோபர் திங்கள் 12-ம் நாளிலிருந்து 23-ம் நாள்வரை கீழ்க்கண்ட தமிழகத்தின் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டுமே சென்று தங்கியிருந்து, அந்த இடங்களைச் சுற்றியுள்ள தொகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும் சந்தித்துப் பொதுத் தேர்தல் சூழ்நிலை குறித்து விபரம் அறிவார்கள்.

## ஆய்வுக் குழு செல்லும் இடங்கள்.

| அக்டோபர் | | | அக்டோபர் | | |
|---|---|---|---|---|---|
| 12: | காஞ்சீபுரம் | ... காலை 9 மணி | 17: | பெரியகுளம் | ... மாலை 6 மணி |
| ,, | வேலூர் | ... மாலை 6 ,, | 18: | மதுரை | ... காலை 9 ,, |
| 13: | திருப்பத்தூர் | ... காலை 9 ,, | ,, | விருதுநகர் | ... மாலை 6 ,, |
| ,, | கிருஷ்ணகிரி | ... மாலை 6 ,, | 19: | திருநெல்வேலி | ... காலை 9 ,, |
| 14: | சேலம் | ... காலை 9 ,, | ,, | நாகர்கோவில் | ... மாலை 6 ,, |
| ,, | ஈரோடு | ... மாலை 6 ,, | 20: | குற்றாலம் | ... மாலை 6 ,, |
| 15: | கோயமுத்தூர் | ... காலை 9 ,, | 21: | காரைக்குடி | ... மாலை 6 ,, |
| ,, | உடுமலைப்பேட்டை | ... மாலை 6 ,, | 22: | பட்டுக்கோட்டை | ... காலை 9 ,, |
| 16: | கரூர் | ... காலை 9 ,, | ,, | மாயவரம் | ... மாலை 6 ,, |
| ,, | திருச்சி | ... மாலை 6 ,, | 23: | கடலூர் | ... காலை 9 ,, |

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்.

*தேர்தல் சூழ்நிலை குறித்து விபரம் தெரிவிக்கக்கூடிய அந்தந்தத் தொகுதியிலுள்ள கிளைக் கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் அன்புகூர்ந்து அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.*

குறிப்பு:— தேர்தல் ஆய்வுக்குழு, திட்டமிட்டுள்ளபடி செல்லுமிடங்களில் தொடர்ந்து தன் பணியில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டியிருப்பதால், எந்த இடத்திலும் எக்காரணங்கொண்டும் பொதுக் கூட்டங்களோ, வேறு பொதுநிகழ்ச்சிகளோ ஏற்பாடு செய்ய வேண்டாம் என்று, கிளைக் கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க)

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 5—10—56 | இதழ் 13

தூத்துக்குடி கே. வி. கே.
சாமிக்கு எமது அஞ்சலி.

# தளபதி கே. வி. கே. சாமி.

சமுதாயக் கொடுமைகளை எதிர்த்து சமதர்மப் போராட்டம் நடத்திய நல்லவர்கட்கு, அரசியல் விடுதலை முழக்கி சுதந்திரப்போரில் ஈடுபட்ட வீரர்கட்கு—"துன்மரணம்" பரிசாக நல்கப்பட்டுள்ள சேதிபல உலக வரலாற்றிலே காணுகின்றோம். அதுபோன்ற ஒன்றினை திராவிட வரலாற்றிலே தீட்டும்படிச் செய்துவிட்டது, எனது நண்பர்—மாவீரன் தூத்துக்குடி சாமியின் படுகொலை!

நாம் ஒன்றாக—திராவிட கழகமாக—இருந்த போது இயக்கம் பெற்றெடுத்த மாமணியே தோழர் சாமி. கொள்கையை—இலட்சியத்தை—முன்நிறுத்தி நாம் வெளியே வந்தபோது, அண்ணாவின் அருமைத்தம்பிகளில் ஒருவராகப் பின்தொடர்ந்தகொள்கைவீரன்; சர்வாதிகாரப் பகைவன்; தொழிலாளர் துணைவன்; அஞ்சாத நெஞ்சன்; சமதர்ம வாழ்வுக்குப் போராடும் சமரன்; கழகத்தைக் கட்டிக்காத்த கர்ம வீரன்; "நெல்லைச்செய்தி" வார இதழின் ஆசிரியன்—எழுத்தாளன்; மேடைப் பேச்சாளன்; திராவிடத்தின் மேனிலைக்கு அல்லும் பகலும் பாடு பட்டவன்; சிறைச்சாலையைப் பூஞ்சோலையாகக் கருதிய செம்மல்; 32 ஆண்டுகளே நிரம்பப் பெற்ற திறமையான அரசியல்வாதி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணையாத ஒளி விளக்குகளிலே ஒன்று அணைந்து விட்டது—இல்லை—அணைக்கப்பட்டுவிட்டது துரோகிகளால்; தூர்த்தர்களால்; கட்சி வேற்றுமை—கருத்து வேற்றுமைகளை கத்தி முனையிலே தீர்த்துக் கொள்ள முற்பட்ட கயவர்களால்!

சுமார் 4 மாதங்களுக்கு முன்பு, தோழர் சாமியைக் கொல்ல முயன்ற குண்டர்கள், வெட்டுக் காயங்களோடு விட்டு ஓடினர் என்ற செய்தி வந்தது. திகைப்பும் பதைப்புமாக விபரம்கேட்டு எழுதினேன் சில விபரங்கள் கூறிவிட்டு நண்பர் சாமி மேலால் எழுதினார்: "என்ன செய்வது; தாங்கித்தானே ஆகவேண்டும்? இதையெல்லாம் எதிர்பார்த்துத்தானே நாம் இந்த இயக்கத்தில் இருந்தோம்—இருந்து வருகிறோம். இதை அற்பர்கள் உணர மறந்து விட்டார்கள்" என்று.

எதிர்ப்புக்கு நடுங்கும் கோழையல்ல, அவர். கொண்ட கொள்கை மறந்து பகைவர் பாதந் தாங்கும் பச்சோந்தியல்ல; கொலை விழுந்தாலும், மலை குலைந்தாலும், இலட்சிய நிலை குலையாத மாவீரன் என்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டு; வீரத்தின் மரண சாசனம்.

20—9—56 இரவு நம்மையெல்லாம் கலங்க விட்டு—கண்ணீர் சிந்தவிட்டு மறைந்து விட்டது அந்த மதிப்புயர்ந்த மாணிக்கம். நமது பொதுச் செயலாளரின் அறிவிப்பின்படி 30—9—56-ல், நாடெங்கும் அனுதாபக் கூட்டங்கள், மௌன ஊர்வலங்கள் நடைபெற்றன. மறைந்த மாவீரனுக்கு இறுதிமரியாதை-இதயக் கனிவான அஞ்சலி தெரிவித்துக் கொண்டனர் தோழர்கள்.

திராவிடத்தின் விடுதலைக்காக எதிர்காலத்தில் நடத்தப்பட வேண்டிய போராட்டங்களிலே தலைமை தாங்கும் தகுதிவாய்ந்த ஒரு தளபதியை இழந்து விட்டோம். மாறாத துயரம், மறக்க முடியாத இழப்பு!...என் செய்வது? பத்து நாட்கள் துயர்காத்தோம். இனி மாவீரனின் கொள்கை காத்தலே முறை. அதுவே தோழர் சாமிக்கு—நாம் செய்யும் கைமாறு—நாம் காட்டும்மரியாதை! கண்ணீரைத்துடைத்துக்கொண்டு கடமையாற்ற முனைவோம், நமது சமுதாய—பொருளாதார—அரசியல் விடுதலைப் பணியிலே வீறுகொள்வோம்; வாழ்க சாமிவளர்த்த கழகம்! வாழ்க சாமியின் புகழ்!

—ப. கண்ணன்.

# நந்திவர்மன்

ப.கண்ணன்



[முன் இதழ் தொடர்ச்சி]

பச்:- வணக்கம்.

பெருந்:- வாழ்க! பச்சை! நலமாக இருக்கின்றாயா?

பச்:- அப்பாவும் போயிட்டாரு. அம்மாவும் போயிட்டுது. வீடும், சொத்தும் கடனுக்குப் போயிட்டுதுங்க. என்னமோ தெருவிலே சாப்பாடும், திண்ணையிலே தூக்கமுமா காலம் போவுதுங்க.

பெருந்:- (வருந்தி) அம்மாவும் இறந்து விட்டார்களா? இருக்க இடமற்றுவிட்டதா? அடடா! என்ன பரிதாபம்! ஒரு தமிழ்ப் புலவரின் மகனுக்கு இத்தகைய தாழ்வா வரவேண்டும்? பச்சை! மன்னருக்கு உன் நிலை தெரியுமா?

பச்:- அவர் தம்பி சந்திரவர்மன்தான் என்னை ஆதரிக்கிறாருங்க. அவரு சொன்னதைச் செய்வேன். கொடுத்ததைத் தின்பேனுங்க!

பெருந்:- சந்திரவர்மனிடம் நட்புரிமை கொண்டிருக்கிறாயா? நன்று. இடம் நல்லது தான், நடத்தை........

பச்:- ஒண்ணும் மோசமில்லே. எதிலேயும் கொறையில்லேண்ணேன். ஆனா, மகாராஜா கையிலே செங்கோல் இருக்குது. இவருகையிலே அது இல்லே! அது ஒண்ணுதான் கொறை!

பெருந்:- குறையும், நிறையும் பற்றி உனக்கும் தெரிகிறது. நன்று. நான் வரட்டுமா?

பச்:- போயிட்டு வாங்க. கொஞ்சம் நில்லுங்க. ஏதாவது சில்லரை இருக்குமா?

(மடியினின்றும் ஒரு பொன் எடுத்துக் கொடுக்கிறார், பெருந்தேவனார்)

பச்:- (வியந்து) அடடே! ஒரு பொன்னையே குடுத்திட்டீங்களே! என்ன தயாளம்! இது தான் தமிழ்நெஞ்சம். மைத்ரேயனைவிட நீங்க பெரியவங்க தான்; சந்தேகமேயில்லை; சந்தேகமேயில்லை. வணக்கம்.

(வணங்கிச் செல்கிறான் பச்சை)

பெருந்:- (அவனைப் பார்த்திருந்து விட்டு) வேங்கையின் வயிற்றிலே வெள்ளாடு பிறக்காது என்பார்கள். பொய்! பச்சையைப் பார்க்கிறேனே கண்களால்! தமிழ்த்தாயே! கருணை கூர்ந்து என் நண்பரின் மகனைக் காப்பாற்று.

(வணங்குகிறார்)

## காட்சி 3.

(நந்திவர்மன் சபை. சிங்காதனத்தில் மன்னரும், மகாராணி சங்காதேவியும் இருக்க, மந்திரி பிரதானியர் சூழ்ந்திருக்கின்றனர். நடனம் நடைபெற்று முடிகின்றது)

பெருந்:- (எழுந்து) மன்னர் வாழ்க! பல்லவமா நந்தி வாழ்க! காடவர்கோன் கழற்சிங்கன் வாழ்க! வாழ்க!

(பாடுகிறார்)

வரைபெரிய மத்தாக வாளரவம் கயிறாக
திரையிரியக்கடல்கடைந்து திருமகளைப்படைத்தனையே
உலகோடு நிலவிய ஒருபுகழ் சுமந்தனையே

நிலமகள் கேள்வனும் நேர்கழலினனும்
நலமிகு கச்சியார் கோவென்பவே
நலமிகு கச்சியார் கோவாயினனும்
சிலைமிகு தோள்சிங்கன் அவன் என்பவே
செருவிடை யானை அவன் என்பவே.

நந்தி:- வாழ்க தமிழ்! வாழ்க புலவர்! பெருந்தேவப் புலவரேறே! தமிழ்ச் சுவையும், வீரச் சுவையும் பாடல்களிலே பொங்கி வழிகின்றன. பாராட்டுகின்றேன். நீர் தகுதிவாய்ந்த தமிழ்ப் புலவர்! பல்லவ நாடெங்கும் தமிழ் தழைக்கச் செய்யும். அதற்கென நிரந்தர நிதியளிப்போம். அமைச்சரே!

சீலா:- (எழுந்து) மன்னர் பெரும!

நந்தி:- தமிழ்த்தாயின் திருப்பணிக்காக புலவர் பெருந்தேவனுர்க்கு ஆண்டுதோறும் ஆயிரம் காடி நெல்லும், இருபது கழஞ்சு பொன்னும் வழங்கப்பட வேண்டும். பட்டயம் செய்து தாரும்.

சீலா:- கட்டளை!

பெருந்:- மன்னவ! வளர்க நின் தமிழார்வம்! வளர்க நின் கொற்றம்! என்றுமுள செந்தமிழ்போல் நின்று நிலவுக நினது புகழ்!

சந்தி:- (எழுந்து) மன்னர் பெரும! காவியப் புலவரை கௌரவித்தீர்கள். ஓவியப் புலவர் ஒருவர் தமது ஓவியத்தோடு வந்துள்ளார், நமது சபைக்கு.

நந்தி:- கௌரவிப்போம் தம்பி!

சந்தி:- மைத்ரேயரே! .......

மைத்:- (எழுந்து) மகாபாக்யம்! மகாபாக்யம்! நாட்டியம், சிற்பம், சித்திரம் ஆகிய நற்கலைகளைப் பேணி வளர்க்கும் பெருந்தகையே! கலைஞர்களின் கற்பகத் தருவே! அடியேன் நமஸ்காரம். எனது ஓவியத்தைப் பார்த்து ரசிக்கப் படைக்கின்றேன், தங்கள் திருமுன்.

(ஓவியம் கொண்டு தர)

நந்தி:- (வாங்கிப் பார்த்து) பாட்டிசைக்கும் பாவாணர். நாட்டியமாடும் நங்கை மடவன்னம்! நன்று. இந்தப் பாடகனின் வடிவம் என் தம்பியை ஒத்திருக்கிறதே! (பார்த்து) கற்பனை மிக நன்று. சங்கா! இதனைப் பார். பார்த்து மதிப்பிட்டு, உனது கருத்தினைச் சொல்,

(மன்னர் கொடுக்க, மகாராணி பெறுகிறர். உற்றுப் பார்க்கிறர்)

சந்தி:- அண்ணு! மைத்ரேயன் ஓவிய மன்னன். வல்லவன் ஆக்கிய சித்திரம் இது. நீங்களே மதிப்பிட வேண்டும். ஒளிமிகுந்த முத்துக்கள் மன்னரின் மணிமுடியைத்தானே அலங்கரிக்க வேண்டும்?

நந்தி:- தம்பி! இவர் உனது அன்புக்குரிய நண்பரென்று கருதுகின்றேன். மெய்தானே?

சந்தி:- இல்லை. உம்...ஆமாம், தெரிந்தவர்.

சங்கா:- மன்னர் பெரும! ஓவியம் பற்றிய எனது கருத்தை ஒளியாது சொல்லட்டுமா? தவறு இருந்தால்........

நந்தி:- கலைஞர் திருந்துகிறார். கலைத்துறையிலே தேர்ந்தவள் நீ. உன் மதிப்பீடுதான் பொருத்தமாயிருக்கும். சொல்லு சங்கா! விமர்சனம், கலைகளை வளர்க்கத்தானே?

சங்கா:- பொதுத் தோற்றத்திலே ஓவியம் குற்றமற்றது. இசையையும், நடனத்தையும் இணைத்திடும் கருத்து பாராட்டத் தக்கது. ஆனல், கலை நுணுக்கங்கள், கற்பனைத்திறன், பிரத்தியட்ச வருணனை மிகக் குறைவு! இதிலே குறிப்பிடத் தக்கது வீணை. இது தமிழ் நாட்டுக் குரியதல்ல; வடநாட்டுப் பாணியிலே உள்ளது. ஆகவே, இதைத் தீட்டியவர் நிச்சயமாக வெளி நாட்டாராகவே இருக்க வேண்டும்.

நந்தி:- குற்றத்தை மறந்து குணத்தைப் போற்றுவோம். வளரட்டும் ஓவியக் கலை. மைத்ரேயரே!

மைத்:- மகாராஜா!

நந்தி:- நீர் எந்நாட்டைச் சேர்ந்தவரோ?

மைத்:- ஏன்? தமிழ் நாட்டான்.

நந்தி:- இல்லை. உண்மையை ஒளியாது சொல்லும்.

மைத்:- (தடுமாறி) மன்னிக்க வேண்டும். நான்....நான்... ஓவியன்...இருப்பது தமிழகமே... ஆனல், பிறந்தது வடக்கே.... சாளுக்கியபுரம். என்றாலும்........

நந்தி:- காஞ்சிமா நகரில் வந்து கலை வளர்க்கின்றீர். அச்சம் ஏன்? நாடு, இனம், மொழி எல்லைகளைக் கடந்தவளன்றோ கலைமகள்! அப்பொதுமகளை ஆராதிப்பதிலே எந்நாட்டவரும் பங்குகொள்ளலாம். இதோ, இந்தப் பொன்முடிப்பு, உமது ஓவியத்திற்குப் பரிசு!

மைத்:- மகாபாக்யம்! மகாபாக்யம்!

(மன்னர் தர, மகிழ்வோடு பெற்றுக் கொள்கிறன்)

## காட்சி 4.

(வித்யாவதி வீடு. மனவேதனையோடு மைத்ரேயனும், சந்திரவர்மனும்)

சந்தி:- மகாராணியின் ஓவிய விமர்சனம், என் மனதை அறுத்துவிட்டது மைத்ரேயரே!

மைத்:- சித்ரவதையால் என்னைப் படுகொலையே செய்துவிட்டதே! சந்திரவர்மா! உமது அண்ணன் ஒரு மன்னனு? மடையன்! பெண் புத்தி கேட்கும் பித்தன்!

சந்தி:- என் மனம் பொறுமையை இழக்கின்றது.

மைத்:- ஓவியத்திலே உம்மைக் கண்டதும், மகாராணியின் மந்தகாச வதனம் போன போக்கைப் பார்த்தீரோ?

(வளரும்)

# ★ விதி. ★

பாவலர்—வேலாயுதசாமி

விதி என்னும் சொல், கடவுளால் விதிக்கப்பட்டது என்பதாகும். அதாவது, மனிதர்களுக்கோ, மற்ற உயிர்ப் பிராணிகளுக்கோ உலகத்தில் இன்னின்ன காலங்களில், இன்னின்ன நாட்களில், இன்னின்ன நேரங்களில் இன்னின்னவற்றை அநுபவிக்கக் கடவது என்று, ஆண்டவன் உயிர்களைப் படைக்கும்போதே கட்டளையிட்டு அனுப்பும் ஒரு நிபந்தனை. இதைத்தான் தலையெழுத்து என்றும் சொல்வது. ஆண்டவன் அப்படி எழுதி யனுப்பிய தலையெழுத்தின்படி அநுபவிக்கும் பயனைத்தான் அதிருஷ்டம் என்பது. தலையில் எழுதி யனுப்பியுள்ளபடி நல்ல பயனை அநுபவித்தால் நல்ல அதிருஷ்டம் என்றும், கெட்டபயனை அனுபவித்தால் கெட்ட அதிர்ஷ்டம் என்றும், சொல்லப்படும். ஒவ்வொரு மனிதனுடைய—பிராணிகளுடைய ஆயுள் வரம்பு இதற்குட்பட்டவைகளே. இதைச் சற்று ஆராய்ச்சி நெருப்பிலிட்டு உண்மைப் பொருளைக் கண்டுபிடிப்போம்.

முன் கட்டுரையில் கடவுள் என்பது இத்தகையது என்பதை விளக்கினோம். அதன்படி பார்ப்போமானால், ஆண்டவன் என்ற ஒருவன் இல்லையென்றும், அதனால் பிராணிகள் அவன் பார்த்து உற்பத்தி செய்யப்படுவதில்லை யென்றும் ஏற்படுகிறது. ஆனால், உலகத்தில் நிகழக் கூடிய கோடானுகோடி சம்பவங்களில் நேராகவும், மாறுபட்டும், ஒழுங்காகவும், ஒழுங்கீனமாகவும் நடைபெறக் காண்கிறோம். மனிதர்களில் பணக்காரன், ஏழை, பலசாலி, பலமில்லாதவன், அறிஞன், மடையன், அழகன், அழகில்லாதவன் இவைபோல் எத்தனையோ விதமான மாறுபாடுகளைப் பார்க்கிறோம், இவைகளல்லாமல் எண்ணிச் செய்யும் காரியங்கள் முடிகின்றன. முடியாமற் போய்விடுகின்றன, இலாபம் வரும் என்று நினைத்துச் செய்யும் வாணிகத்தில் நட்டம், நட்டம் வந்தாலும் வரட்டும் என்று எண்ணிச் செய்தால் இலாபம்; இப்படி முரண்பாடாக முடிகின்றன. இவைகளையெல்லாம் நோக்குமிடத்து, இவைகளுக்குக் காரணமென்ன என்ற கேள்வி எழுகின்றது.

இக் கேள்வியைக் கேட்பது வெகு எளிது. பதில் சொல்வதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஒரே வார்த்தையில் சொல்லிவிடக் கூடியதும் அல்ல, பின் எப்படி?

ஒரு சம்பவம் நடப்பதானால் அந்தச் சம்பவத்தில் நூற்றுக்கணக்கான—ஆயிரக்கணக்கான காரணங்கள் அடங்கியிருக்கின்றன. அச் சம்பவத்தின் ஒவ்வொருசிறிய அணுக்களுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டென்று கொள்ளவேண்டும். அவ்விதமான காரணங்களெல்லாம் ஒன்றுபட்டு ஒத்துழைத்தால்தான் நாம் செய்ய எடுத்துக்கொண்ட காரியம் நன்கு முடியும். அக்காரணங்களில் சில கூடியும், சில கூடாமலும் போய்விடுமானால் காரியம் தடைபட்டுவிடும். அல்லது சீர்கேடாக முடியும். இது சந்தர்ப்பத்திற்கேற்றபடியும், சூழ்நிலைக்குத் தகுந்தமாதிரியும் நடக்கும். இவை தற்செயலாக நடக்கக் கூடிய நிகழ்ச்சிகள். பொதுவாக, காரணமில்லாமல் காரியமில்லை என்று சொல்வதே அதன் முடிந்த முடிவாகும்.

இப்படித் தற்செயலான் முரண்பாடாகவும், மாறுபட்டும் நடக்கும் காரியங்களை நம் அறிவைக்கொண்டு முறைப்படுத்தி, சூழ்நிலைகளை ஒழுங்காக்கிச் செவ்வனே நடைபெறச் செய்யலாம். இதை இரண்டொரு உதாரணங்களின் மூலம் விளக்குவோம்.

நன்றாக எரிந்துகொண்டிருக்கிற விளக்கு மங்குகிறது; திரியும் இருக்கிறது. காரணம், எண்ணெயில்லை. உணர்ந்தோம், எண்ணெய் விடுகிறோம், இப்போது நன்றாக எரிகிறது.

ஏன்? உங்களுக்குக் கேலியாக இருக்கிறதா? என்னடா விளையாட்டுப் பிள்ளைகளிடம் சொல்கிறமாதிரி சொல்கிறானேயென்று நினைக்கிறீர்களா?

ஆம்; சிறு சம்பவந்தான்! முதலில் இரண்டிலை விட்டுச் சிறிய செடியாயிருந்துதான் பிறகு பெரிய பெரிய மரங்களாகின்றன. இது, ஒரு காரணத்தைக் கொண்ட சம்பவம். காரணம் இன்னதென்றறிந்தோம்; தக்க பரிகாரம் தேடினோம். இதேபோல் பல காரணங்களைக் கொண்டு நிகழும் சம்பவங்கள் பலவுண்டு. இதைப் போல அவைகளின் காரணங்களையும் தெரிந்துகொண்டு முயற்சியுடன் பரிகாரம் தேடினால், எந்தக் காரியங்களிலும் தடையில்லாமல் வெற்றி பெறலாம்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● இரா. இளந்தென்றல்,
131, திருவொற்றியூர் பெரியசாலை
சென்னை-21

தங்க-மாணிக்கம், குளியமுத்தூர்.

கே: கௌதம புத்தர் போதி மரத்தடியே, யோக நிலையில் இருக்கையில் தாடி மீசை இல்லாது படம் வந்துள்ளதே, அப்போது சவரம் செய்துக் கொண்டிருக்கத் துணை செய்தது யார்?

ப: தாடி, மீசை வளர்ந்திருப்பதுபோலும் சில ஓவியங்கள், சிற்பங்கள் இருக்கின்றன. எனினும் கண்டவர் யாரென்று விண்டிட முடியாது.

எம். ஆர். சேகர், சின்னப்பம்பட்டி.

கே: தேர்தலில் தி.மு.க, வெற்றி பெற்று சட்டசபைக்குப் போனால், இன்னும் இரண்டு சினிமா தியேட்டர்கள் தான் கட்டுவார்கள் என்று "கொள்கைத் துரோகிகள்" சொல்வது சரிதானா?

ப: சினிமாக் கூடாரம் நடத்தி, தியேட்டர் கட்ட யோசிப்போரும், படவினியோகம் செய்து படம் பிடிக்க முயலுவோருமான தி. க தோழர்களுக்கு இதனை அர்ப்பணிப்போம்.

* * *

கே: எங்கும் திருந்திய திருமணம் நடக்கிறதே; புரோகிதம் செய்து பிழைக்கும் பார்ப்பனர் கதியென்ன?

ப: தொழில் வாழ்க்கைக்கு எழில். உடற்தொழில் புரிந்தால் உணவு உற்பத்தியாவது பெருகுமே!

சு. ம. சண்முகம், திருவண்ணாமலை

கே: இந்திய தியேட்டர்களில் ஓடுகிற படங்களில், அதிகமாக நாம் காணும் நடிகர் யார்?

ப: ஆசிய ஜோதி, பண்டித ஜவகர்லால் நேரு.

கே: விருதையில் தமிழ்நாடு வேண்டி ஒரு காங்கிரஸ்காரர்—சங்கரலிங்கம், 65 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கிறாரே; முடியுமா?

ப: அந்தத் தமிழனின் உண்ணாவிரதம் குறித்து கவலைப்படாதிருக்க, பச்சைத் தமிழன் மந்திரி சபையாலும் முடிகிறதே!

இரா. இளந்தென்றல், சென்னை-21.

கே: "பகுத்தறிவு" தலையங்கத்திற்கு மேலுள்ள குறளில் 'பொருண்' என்று வெளியிடுகிறீர்களே; 'பொருள்' என்றல்லவா இருக்கவேண்டும்?

ப: "பொருண்" என்பது "பொருளினுள்" என்பதாகும். பழைய பதிப்புக்கள் சிலவற்றில் இவ்வாறுள்ளது. இதுவே பொருந்துமென்க.

* * *

"வீரவாலி" நாடகத்தில், வாலி வானவூர்தியில் சென்றான் என்கிறீர்களே; பக்தர்கள் கூறும் புட்பக விமானந்தானே அது? அக்காலத்தில் ஆகாய விமானம் இருந்ததா?

ப: கிடையாது. யந்திரப்பொறிகள் இருந்ததாக சமண இலக்கியங்கள் சாற்றுகின்றன. அதன் விளைவே இது.

தா. அரங்கசாமி, கன்னூர்பாளையம்.

கே: கோயில் பூசாரிக்குத் தரும் காசுக்கு "காணிக்கை" என்றும், ஏழைக்குத் தரும் காசுக்கு "பிச்சை" என்றும் ஏன் பெயர் வந்தது?

ப: தன்னல பக்தியே உயர்வென்றும், பிறர் நலக் கருணை தாழ்வென்றும் மதிக்கச் செய்திட்ட—பகுத்தறிவற்ற—பக்திப் பிரசாரமே காரணம்.

* * *

கே: துறவி, சந்நியாசி, முனிவர்கள் முற்காலத்தில் எப்படி இருந்தனர்? இப்போது எந்நிலையில் இருக்கின்றனர்?

ப: முற்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி; எத்திப் பிழைப்போர்க்கு— ஆண்டவன் பிரதிநிதியென்போர்க்கு— ஆனந்த வாழ்வுதான்!

## கலைக்கூடம்

## வாழ்விலே ஒரு நாள்.

சிறுவயதிலே தாய் தந்தையர்களை இழந்து—உலகத்தின் தொட்டிலிலே—தாலாட்டப்பட்டு வளர்ந்து வாழவந்தாரின் வஞ்சனை மிகுந்த கொடுமைகளால் வாழ்நாளெல்லாம் வதைபட்டு—வேதனைக்காளாகி கண்ணீர் சிந்திய இரு உயிர்களின் சோகக்கதையை மெர்குரி பிலிம்ஸார் 'வாழ்விலே ஒருநாள்' என்ற பெயரில் படமாக்கியிருக்கின்றனர்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி கதை, வசனங்களை அமைத்திருக்கிறார். நல்ல கதை. கிளைமாக்ஸ் என்னும் கதை உச்சத்தை அமைக்கவேண்டிய முறையில் படத்தயாரிப்பாளர்கள் கவனம் செலுத்தவில்லையாதலால், கதை கவர்ச்சியற்றிருக்கிறது. உயிரோட்டமுள்ள பல சம்பவங்கள் சிதறிக் கிடக்கின்றன. வசனத்தில் குறை எதுவும் கூறுவதற்கில்லை. செந்தமிழ் மொழியிலே செழிப்பான வசனங்கள் நற்றமிழ் நடையில அளவோடு அமைக்கப்பட்டிருக்கின்றன.

பகுத்தறிவுக்கான கருத்துக்கள் பாடல்களில் இல்லை. ஏ. காசிலிங்கம் டைரெக்ஷன் பொறுப்பை திறமையாகக் கையாண்டிருக்கிறார். சாவித்திரி—திரௌபதி வஸ்திராபரணம் நாடகம் படத்தின் வேகத்தையும் விறுவிறுப்பையும் வழி மறிக்கின்றன, 'பக்கோடா மிட்டாய்'—ராஜசுலோசனாவின் நடனம் பொறுமையின் சோதனை; வெட்டியெறிந்திருக்கலாம்.

கண்ணன் என்ற பாகத்தில் ஏழையாக—ஞானகியின் காதலனாக சிறைக் கைதியாக—கள்ளனாக தந்தையாக—கிழவனாக சிவாஜி கணேசன் நடிக்கிறார். முதல்தரம். வசன உச்சரிப்புகள் உயிர்த்தன்மைப் பெறுகின்றன. ஸ்ரீராம் பாத்திரத்தை உணர்ந்து நடிக்கத் தவறிவிட்டார். ஜி. வரலட்சுமி, ராஜசுலோசனா முதலானோர் ஏதோ வந்துபோகிறார்களென்று கான் சொல்லலாமே தவிர, பொறுப்போடு நடிக்கவில்லை. காதல் பிரமாதம்!

ஒலி, ஒளிப்பதிவுகள் சரியாக இல்லை. குறைகள் பல இருந்தாலும் ஆசைத்தம்பியின் கருத்து நிறைந்த வசனத்திற்காக பார்க்கலாம்

'போனமச்சான் திரும்பிவந்தான்' சில்லரைக் கதையை படமாக்கிய மெர்குரி பிலிம்ஸாருக்கு பெருமைக்கு ஒரு படம்—'வாழ்விலே ஒரு நாள்'

—கு. அண்ணாமலை,

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

புரிவதால், அங்கே உயிரற்ற உடலங்களையும் பார்க்கிறேன். இங்கிலாந்து தேசத்துப் பிரதமர் ஈடனும், எதிர்க்கட்சித் தலைவரும் சண்டை போட்டுக் கொள்வது போல் பார்லிமெண்டில் பேசிக் கொள்கின்றனர். வெளியில் சந்திக்கும் பொழுதோ, ஒருவரோடொருவர் கரம் குலுக்கி, இன்பப் பண்ணிசைத்து, "நலந்தானா?" என்ற நாகரிக வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். இந்த நாட்டில் எத்தனை தலைவர்கள் அப்படி இருக்கிறார்கள்? என்னுங்கள், பார்க்கலாம்! இங்கே உள்ள அநாகரிகம் வேறெங்கும் இல்லை. கருத்துக்களை மோத விட்டால்தான் ஜனநாயகம் வளரும்; நாடும் வளரும்! இங்கோ, கருத்துக்குப் பதில் கத்திமுனையைக் காட்டுகிறார்கள்! "பட்டாக் கத்திக்குப் பதில் சொல்" என்னும் தலைவர்களைத்தான் இங்கு பார்க்கிறோம். தோழர், சாமியினுடைய இரத்தம் அரசியலிலே படிந்துள்ள இதுபோன்ற அநாகரிகக் கறைகளைக் கழுவட்டும். நாம் இரத்தம் சிந்தத் தயார்! ஆனால், அது வீண்போக மட்டும் விடமாட்டோம்.

கோவை மாவட்டத்திலே நான் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த பொழுது, "சாமி கொலையுண்டதைக் கண்டு சிலர் மகிழ்ச்சி சிந்து பாடினார்கள்" என்று என்னிடம் தோழர்கள் சொன்னார்கள். அவர்களைப் பார்க்கும் பொழுது, தமிழகத்தில் இழுக்கப்பட வேண்டிய பகுதிகள் இன்னும் பல இருக்கின்றன என்பதைத்தான் அறிகிறோம். அண்ணா எழுதிய "மரண சாசன"த்தில் ஒருவன் கூறுகிறான்: "நான் சாகவில்லை; கொல்லப்பட்டேன்!" என்று. அதைப் போன்ற மரண சாசனங்களை மடியிலேந்திக் கொண்டு, ஆயிரக்கணக்கான அடலேறுகள் நம் கழகத்திலிருந்து புறப்பட்டுள்ளனர்.

ஜனநாயகத்தின் முதல் பகுதி கல்லாக்களி மக்களாலும், கபோதிகளாலும், அயோக்கியர்களாலும், சுயநலமிகளாலும் கைப்பற்றப்பட்டு இருண்டு கிடக்கிறது. இரண்டாம் பகுதி ஒளி பொருந்தியது; நமக்குத் தேவையானது அதை உருவாக்கத்தான் சாமி இரத்தம் சிந்தினார். வாழ்க அவர் புகழ்!

தொகுத்தவர்:
சேலம், ஏ. பெரியசாமி

# பகுத்தறிவு தேவைதான்!

பகுத்தறிவு என்றவுடனே ஒரு சிலருக்கு அருவருப்புஉண்டாகிறது. பகுத்தறிவு என்ற சொல் தமிழல்லவா? அது தமிழனுக்கு உரிமையில்லையா? அது ஜாதியா? மதமா? கட்சியா? இல்லை, தமிழ் வார்த்தைதான்.

பகுத்து-அறிவது பகுத்தறிவு. பகுத்து—இது நல்லது இது கெட்டது, இது செய்யத் தகுந்தது, இது செய்யத் தகாதது என்று அறிவது—ஆராய்ந்து தெரிந்துக் கொள்வதாகும். இந்த அறிவு எல்லாரிடத்திலும் இருக்கிறது.

மக்களாகப் பிறந்த மனித வர்க்கம் உயர்வதே பகுத்தறியும் வன்மையினால்தான். தக்க இன்ன, தகாதன இன்ன என்று அறிந்துகொள்ள முடியாதவன் விலங்கொடு சமமாகின்றான். நல்லது கெட்டது பகுத்தறிந்தவனே மனிதனில் மனிதனாக உயர்ந்து விளங்குகின்றான். இது யாருமறிந்த உண்மை.

பகுத்து அறிவிப்பதுதான் அறம். அந்த அறத்தை விளக்கிக் கூறுவது திருக்குறள் போன்ற பல நூல்களாகும். ஆகவே, பகுத்தறிவை நமக்குச் சொந்தமில்லை என்றும், அஃது ஒரு சிலருக்கு உரியதென்றும், அதொரு கட்சி என்றும் கொள்ளக்கூடாது.

**'பகுத்தறிவு' என்னும் மாதப் பத்திரிகை இப்போது மாறி வார இதழாக வெளிவருவது மிக்க மகிழ்ச்சி. இவ்வளவு பெரிய உலகத்தில் இத்தகைய பத்திரிகைகள் பணிசெய்ய வேண்டியதுதான். அஃது, ஆண்டவன் அருளால் நீடூழி வாழ்க!**

ஆறறிவாகிய பகுத்தறிவு படைத்த மனிதன் விதித்ததைச் செய்து, விலக்கியதைத் தள்ளி நடந்துகொள்ள வேண்டும். அப்படிக்கின்றி ஆசையினால் நீதி இன்றி, நேர்மை இன்றி ஆத்திரப்பட்டு அபகரிப்பானேயானால், இது நல்லது இது கெட்டது என்று அறிந்த பகுத்தறிவு படைத்தவன் அவனைத் திருத்தத்தானே வேண்டும்.

அப்படித் திருத்த முயன்றவன் சுயநலமின்றி, தான் கொண்ட கருத்திற்காக கற்ற வித்தையினால் நல்லதைக் கெட்டதாகவும், கெட்டதை நல்லதாகவும் சொல்ல முடியுமாகையால் அவனும் நேர்மையாக, நியாயமாக, பட்சபாதகமின்றி, நடுநிலைமையாக நடந்து திருத்த வேண்டும்.

* * *

(அடியார்கள்) நடிப்பும் பக்தி வேஷமும் அனாவசியமாக ஆண்டவன் திருநாமத்தை சுவீகரித்துச்சொல்வதையும் பார்த்தால் ஏன் பகுத்தறிவாளர்கள் கண்டிக்க மாட்டார்கள்? கண்டிப்பது நாஸ்திகம் ஆகாது.

* * *

நாட்டிலே முருகன் பக்தியும் ராம பக்தியும் வளர்ந்து இருப்பது போற்றத் தகுந்தது. ஆனால், முறைதவறி தன்னலத்திற்காக முருகா முருகா என்றும், ராமா ராமா என்றும் சொல்லிக்கொண்டு செய்யும் அட்டூழியத்தைநாம் சொல்லித் திருத்தவில்லையானால் பிறர் பரியாசம் செய்து பழிப்பார்கள்.

—"அறநெறி"
ஆத்திகப் பிரச்சார இதழ்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட வேண்டும்" என்று, கடவுளை-கோயில்களை—சொத்துக்களை பொதுப் பொருளாக்கி சமூக வாழ்வுக்கு, வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதுதான் உண்மையான அருள்நெறியாகவும், அருட்பணியாகவும் இருக்கமுடியும். எனவே அடிகளாரின் இக்கருத்தினை வரவேற்கிறோம்: அவரை மனமுவந்து வாழ்த்துகிறோம்!

இதில், மக்கள் சார்பிலே பேசுகிறது பகுத்தறிவு இயக்கம்; சுரண்டல்காரர் சார்பிலேபேசுகிறது வைதிகம்; நடுவில் நிற்கிறார் குன்றக்குடியார். இதனை அறிய விரும்புகிறவர். 30-9-56 "ஆனந்த விகடன்" இதழைப் பாருங்கள். ஆத்திக—வைதிக—வேததர்ம-பார்ப்பனீயப் பாதுகாப்புக்காகப் பணியாற்றும் அவ்விதழ் "இவர்கள் சந்தித்தால்?" என்ற தலைப்பில், தருமபுர மடாதிபதியையும், குன்றக்குடி மடாதிபதியையும் மோதவிட்டு தன்குலத்தைப் பாதுகாக்க முனைந்திருக்கிறது! "ஐயோ எங்கள் பிழைப்பு?" என்று சொல்லாமற் சொல்லி அலறியிருக்கின்றது!

முட்டை திருடும் பார்ப்பனச் சிறுவனும் பட்டம் ஏற்று, லோககுரு சங்கராச்சாரியாகலாம் என்பதை மறந்துவிட்டு, பட்டாளத்தில் சேர மனுப் போட்டவர், கரிமூட்டை சுமக்க பயந்து, பஸ் கண்டக்டர் வேலை ஏற்காதவர். கடியாப்பட்டியில் கணக்குவேலை பார்த்த ரங்கநாதன் தம்பிரானாகி, மடாதிபதியாகிவிட்டார் என்பதாக இழிவுபடுத்துகிறது அடிகளாரை. இதற்குத் தக்கபதில் அருள்நெறித் திருக்கூட்டத்தார் சொல்லுவார்கள் வலிமை இருந்தால், நாம் சொல்லுவது: 'பக்தி' வழிபாடு, அர்ச்சனை, ஆலயம், திருவிழா என்பனவற்றிலும் பார்ப்பான் வேறு, தமிழன் வேறு என்பது வைதிகத் தமிழர்களுக்கே இன்னும்புரியவில்லையே!' என்பதுதான்! ●●


வாய்வு நூரணம்.


உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு. பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தநூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த நூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது (பத்தியமில்லை)

5-பலம் டின் ரூ 3—0—0

சம்பு இண்டஸ்ட்ரீஸ்,

சேலம்-2.






சேலம் சென்ட்ரலில்

6-10-56 முதல்

3-வது வாரம்,

வாழ்விலே ஒருநாள்

உன்னத சமுகச் சித்திரம்.

சிவாஜிகணேசன், ஜி. வரலட்சுமி, ஸ்ரீராம், ராஜசுலோசனா வி. கே. ராமசாமி

மற்றும் பலர் நடித்தது.

கதை, வசனம்: ஏ. வி பி. ஆசைத்தம்பி.

டைரெக்ஷன்: ஏ. காசிலிங்கம்.

பின்னணி:

சௌந்தரராஜன், ஜெயராமன், முத்து, ஜீவரத்தினம், ஜிக்கி.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 12-10-56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 14


# எல்லை மீட்புப் போரிலே தமிழரசுக் கழகம்!

"தனித் தமிழ் மாநிலம் கோருவவதும், எல்லைக்காகக் கிளர்ச்சிசெய்வதும் பைத்தியக்காரத்தனம்" என்று பச்சைத் தமிழனையே சொல்ல வைக்கும் அளவுக்கு வடநாட்டு ஏகாதிபத்தியம் வலுப்பெற்று, மதங்கொண்டுநிற்கிறது. இந்த நிலையில் வடக்கெல்லை மீட்புக்காக அக்டோபர் 15-ல் நாடெங்கும் மறியல்—இரயில் நிறுத்தம்—கருப்புக் கொடி காட்டல் போன்ற கிளர்ச்சி செய்ய, தமிழரசுக் கழகம் முடிவு செய்திருக்கிறது. துணிவான செயல்தான்; வரவேற்கின்றோம்.

* *

"தமிழ்நாடு தமிழருக்கே" என்ற சுதந்தர முழக்கம், சென்ற 1938-ல், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது எழுந்தது.

பெரியார் ஈ. வே. ராமசாமி, சி. டி. நாயகம், தோழர் கே. எம். பாலசுப்ரமணியம், அண்ணா போன்றவர்கள் கிளர்ச்சியின் பயனாகச் சிறையிலே அடைக்கப்பட்டு விட்டனர். பெரியாரின் வாரிசாக திருச்சி தோழர், கி. ஆ. பெ. விசுவநாதம் கிளர்ச்சிப் பொறுப்பினை ஏற்று நடத்தி வருகிறார்.


அப்போது, வேலூரில் நடைபெற்ற தமிழர் மாநில மாநாட்டில், அறிஞர். சோமசுந்தர பாரதியாரும், திரு. பன்னீர் செல்வம், விசுவநாதம் ஆகியோரும் எழுப்பிய சுதந்திரக் குரலே "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற பேரொலி! பின்னரே, பெரியாரால் 'திராவிட நாடு திராவிடருக்கே" என்று அது விரிவாக்கப்பட்டது.

* *

இந்தியைக் கட்டாயப் படிப்பாக்குவதிலே அன்னைய முதலமைச்சர் ஆச்சாரியார் காட்டிய பிடிவாதம்—வடவர் செய்த பலாத்காரம்—காங்கிரஸ்காரரின் கண்

(10-ம் பக்கம் பார்க)

## கடவுளை சமுதாய உடைமையாக்கி விடு!




குன்றக்குடியாரின் வெடிகுண்டு, கல்முதலாளிகளின் கலக்கத்தை அதிகமாக்கியிருக்கிறது.

# சந்தனக்காடு சாக்கடையாகிறது. —கி. மனோகரன்.

தி மு க தேர்தலில் கலந்துகொள்ள முடிவு செய்ததும், காமராஜர் முதலில் பாராட்டினார். திருச்சியிலே பேசும்பொழுது, "இவர்கள் தேர்தலில் குதிக்கப் போகிறார்களாமே! பணமெங்கே? பலமெங்கே? பரிதாபம்!" என்று வேதனையுடன் சொன்னார் அந்த விருதை வீரர். பிறகு வேறொரு இடத்திலே, "இவர்களுக்கு யார் ஓட்டுப் போடுவார்கள்?" என்று கேட்டுவிட்டு, அதற்குக் காரணமும் சொன்னார், "இவர்கள் ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் செருப்பிட்டுச் சென்றனர்" என்று. எப்படி?

30–9–56 அன்று சேலம் அம்மாப்பேட்டையில் தோழர், சி. ஏ. சித்தையன் தலைமையில் நடைபெற்ற தி. மு க. 6-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர், கி. மனோகரன் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் கூறினார்:

கொங்கு நாடு பெற்றெடுத்த செங்கரும்பு—நிதி அமைச்சர் சுப்ரமணியனார் "இவர்களை ஒரு கை பார்க்கிறேன்" என்கிறார். டார்வின் சித்தாந்தத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் அமைச்சர் பக்தவச்சலனார் "இந்த முன்னேற்றக் கழகத்தார் எப்படி ஜெயிக்கிறார்கள் என்று பார்க்கலாம்" என்று சவால் விடுகிறார். காமராஜர் இத்தனை நாள் வாயைத் திறக்காமலேயே இருந்தார். இன்று வாயைத் திறந்தவுடன், அரசியல் சந்தனக்காடு சாக்கடையாகி விட்டது! பெண்களை நிறுத்தியே இந்த தி. மு. கழகத்தாரைத் தோற்கடித்து விடுவோம் என்கிறார். ஏன்? ஆண்களிலே யோக்கியமான அபேட்சகர்கள் இல்லை போலும்! ஆனால், பெண்கள் நின்றால் அவர்களது வெற்றிக்காக நாங்களே உழைப்போம் என்று அண்ணா சொல்லிவிட்டார்.

பனம்பள்ளி கோவிந்தமேனன், ஹனுமந்தய்யா, கோபால ரெட்டி, ராமகிருஷ்ண, மொரார்ஜி தேசாய், ராய், சின்ஹா, நேரு, அபுல்கலாம் ஆசாத், முன்ஷி போன்ற பல அமைச்சர்கள் நாட்டிலே இருக்கின்றனர். அவர்களெல்லாம் கற்றுத் தேர்ந்தவர்கள். ஏதோ சில குற்றம் குறைகள் இருந்தாலும், அவர்களுடைய அறிவுத்திறனைப் போற்றாமலிருக்க முடியாது அவர்கள் எழுதிய பலபுத்தகங்கள் பள்ளிகளிலே பாடங்களாக வைக்கப்பட்டுள்ளன. ஆனால், காமராஜர்......? அவருக்கு அரசியலும் தெரியாது; சட்ட நுணுக்கமும் தெரியாது; பொருளாதாரமும் புரியாது; விஞ்ஞானமும் விளங்காது. அதனால்தான் காமராஜர் மட்டும், "நாடகமாடுபவர்கள் நாடாள முடியுமா?" என்று கேட்கிறார்; மற்ற மாகாணங்களில் உள்ள முதலமைச்சர்கள் கேட்கவில்லை. ★

# எங்கும் காங்கரசுக்கு எதிர்ப்பு. —ப. உ. சண்முகம்.

அடுத்து தோழர், ப உ. சண்முகம் பேசுகையில் குறிப்பிட்டார்:

நண்பர் மனோகரன் கூறியதுபோல, காமராஜர் ஏதேதோ பேசுவதும், அதற்கு சுப்ரமணியம் பக்கப்பாட்டு பாடுவதும், பக்தவச்சலம் அனுமார் ஆட்டம் ஆடுவதும் மிகச் சாதாரணமாகி விட்டது. "வடநாடு வாழ்கிறது; தென்னாடு தேய்கிறது" என்று சொல்வதெல்லாம் அரசியல் பித்தலாட்டம் என்கிறார் காமராஜர். அவருடைய மந்திரி சபையிலிருக்கும் சுப்ரமணியமோ, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் தென்னாடு பெருமளவுக்குப் புறக்கணிக்கப்படுகிறது என்பது உண்மைதான். சில அரசியற் கட்சிகள் போடும் கூச்சல் என்று இதை ஒதுக்கி விடுவதற்கில்லை" என்று கோவையில் கூறியிருக்கிறார். வடநாட்டிலே பக்ராநங்கல் திட்டம் என்றால் இங்கும்தான் சாத்தனூர் அணைக்கட்டு திறக்கப்படப் போகிறது என்கிறார்கள். ஆனால், 2000 என்ஜினீயர்களைக் கொண்டு கட்டப்படும் பிரம்மாண்டமான பக்ரா நங்கல் அணைக்கட்டும், இரண்டே இரண்டு என்ஜினீயர்களைக் கொண்டு கட்டப்படும் சாத்தனூர் அணைக்கட்டும் ஒன்றாகி விடுமா? பக்ராநங்கலுடன் சாத்தனூரை ஒப்பிட்டால், இது ஒரு வாய்க்கால் என்றுகூட சொல்வதற்கில்லை. ஒரு சாக்கடை.

அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் 3012 இடங்களிலும் காங்கிரஸ் அபேட்சகர்கள் நிறுத்தப்படுவார்களாம். ஆனால், இந்திய உபகண்டத்திலே காங்கிரஸ் கட்சிக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறது? பஞ்சாபிலே அகாலி தளமும், இந்துமகாசபையும், சீக்கிய ஸ்தாபனமும் காங்கிரசுக்கு எதிராக வேலை செய்கின்றன. நாக நாட்டிலே நாகர்களின் தனிநாடு கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. வங்காளத்தின் சிறு பகுதி பீகாருடன் சேர்க்கப்பட்டதால் அங்கு 10 லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர். மகாராஷ்டிரத்திலே பெரும் புயல் வீசுகிறது. நேருவினுடைய படத்திற்கு செருப்புமாலை! அவருடைய ஓவியத்திற்கு நெருப்பு வைக்கப்படுகிறது! குஜராத்திலும் போராட்டம். நேருவுக்குக் கொடும்பாவி! மந்திரியின் மகன் மெத்தைப் படியிலிருந்து உருட்டி விடப்பட்டான். கதர்க் குல்லாய்கள் காற்றிலே பறந்தன! மொரார்ஜி தேசாய்க் கூட்டத்தில் கல்லடி! தென்னாட்டில், மலையாளத்தில் காங்கிரஸ் நிச்சயமாக வரமுடியாது. கன்னடத்தில் எதிர்ப்புகள் உருவாவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. கோலார் தங்கச் சுரங்கத்தைத் தேசியமயமாக்க வெள்ளையருக்கு 84 லட்சம் ரூபா நஷ்டஈடு கொடுத்தால் போதும் என்று ஹனுமந்தய்யா தீர்மானம் நிறைவேற்றியிருக்க, நேரு அதை மதிக்காமல் 11 கோடி ரூபாயாவது நஷ்டஈடு தரவேண்டுமென்று கூறிவிட்டார். இதனால், கன்னடத்தில் காங்கிரஸின்மேல் மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆந்திராவில் ஏற்கனவே இரத்தக்கறை படிந்திருக்கிறது. தமிழகத்தில் காங்கிரசை எதிர்க்க 'நாம்' இருக்கிறோம்.

(9-ம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

ஏழைப் பிள்ளைகளுக்கு சம்பளம் இல்லாதது மட்டுமல்ல; சோறு போடவும் ஏற்பாடு செய்துவிட்டார் காமராசர்.

—பெரியார்

எங்கே, எப்போது, எப்படி என்று விழிக்கிறீர்களா? தேர்தல் பிரசாரம் தோழரே. தேர்தல் பிரசாரம்!

*  *  *

காங்கிரஸ் கொள்கைக்கு மாறுபாடு இல்லாமல்-மத்திய சர்க்காருக்கு முரண்படாதபடி- இடமிருந்தால்-வாய்ப்பிருந்தால்-நன்மைகளை (காமராசர்) தமிழருக்கே செய்து வருகிறார்.

—பெரியார்

இடமிருந்தால்—வாய்ப்பிருந்தால்—கழுதைகூட சிம்மகர்ச்சனையே புரியுமே! வேறு தகுதி—திறமை—யோக்யதை—என்னவாம்?

*  *  *

தேர்தல்என்பது பித்தலாட்டம் நிறைந்தது நன்றாகப் புளுகத் தெரிந்தவனே வெற்றிகாண முடியும்; துணிந்து அயோக்யத்தனம் செய்ய வேண்டும், பணம் ஏராளமாக வேண்டும்.

—எஸ் குருசாமி.

இந்த எல்லா தகுதி-திறமைகளையும் பெற்றவர் காங்கிரஸ்—காமராசர்ஒருவர்தான்! ஆகவேதான் "இவாள்" "அவாளை" ஆதரித்துப் பிரசாரம் தொடங்கியிருக்கிறாக.

*  *  *

தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் காங்கிரசுக்கு பலமான ஒரு எதிர்க்கட்சியாயிருப்பது திராவிட கழகந்தான்.

—"விடுதலை"

சில அதிகார எலும்புத் துண்டுகளைக் கண்டதும் வாலைக் குழைத்துக்கொண்டு காமராசரின் காலைச் சுற்றுவதும், காங்கிரசை எதிர்ப்போர்மேல் பாய்வதுமான பலசாலிகளும் இவர்கள்தான்!

*  *  *

சமயத்துக்கேற்றபடி கொள்கையைப் பறிகொடுக்காத ஒரே கட்சி-திராவிடர் கழகந்தான்.

—"விடுதலை"

"திராவிட நாடு கேட்பவன் முட்டாள்" என்று திட்டுகின்ற காங்கிரஸ்காரனை வெட்கமில்லாமல் தோளிலே சுமந்துகொண்டு, "திராவிட நாடாவது வெங்காய நாடாவது" என்று பரிகசிக்கும் ஒரே பச்சோந்திக் கழகமும் இதுவேதான்!

## கலைக்கூடம்

### இரம்பையின் காதல்.

நம்பமுடியாத நிகழ்ச்சிகள்கொண்ட பகுத்தறிவுக்கு ஒவ்வாத மூலக்கதையை மூவர் சேர்ந்து திரைக்கதையாக்கியிருக்கின்றனர். கூழாங்கல்லை மாணிக்கமாக்கும் முயற்சி; முடியுமா? முதல் காட்சியிலேயே கொட்டகையில் கொட்டாவிகள் கிளம்புகின்றன, கடைசிவரை சலிப்புத் தட்டுகிறது.

வசனங்கள் ஏ. எல். நாராயணன் என்பவரால் தீட்டப்பட்டிருப்பதாக திரையில்காட்டப்படுகிறது. அர்த்தமற்ற அடுக்குச் சொல், அவசியமில்லாத வார்த்தை, பொருத்தமில்லாத பேச்சு படமெங்கும் ஒலிக்கின்றன.

பாடல்களை, தஞ்சை ராமையாதாசும் எழுதியிருப்பதால் "டப்பாங்குத்து" பாடல்களும் இல்லாமலில்லை; அ மருதகாசியும் வரைந்துள்ளார். எந்தப் பாடல்களிலும் பொருள் நயம் இல்லை, உயர் கருத்தில்லை.

டி. ஆர். பாப்பா, கே. எச். ரெட்டியின் உதவியுடன் இசையமைப்பைச் செய்துள்ளார். புதுமையொன்றும் இல்லை.

ரம்பை—பானுமதியின் நடிப்பு சோபிக்கவில்லை. பேயாகவந்து அழும் கட்டங்கள்—சோகம்; சிரிப்பைத்தான் உண்டாக்குகின்றன. கொடுக்கப்பட்ட பாகத்தை விளக்கிக்கொண்டு நடிக்கவேயில்லை. அவர், கணவன்—மனைவி உறவு காட்டி உரையாடும் கட்டங்கள் பரிதாபமாகவிருக்கின்றன.

தங்கவேலு கதாநாயகனாக வருகிறார் அசட்டு அழகாகயிருக்க வேண்டியவர் சில இடங்களில் டணல் தங்கவேலுவாக மாறுகிறார். குஷ்டரோக வயோதிகன் பாணியிலும் பேசுகிறார். ஏனோ இந்த முரண்? குழப்பம்?

காரதர்—எம். என். நம்பியார் வேஷப் பொருத்தமும் பேச்சும்—'நாராயண'!

எமதர்மனாக வரும் பாலையா; இந்திரன்—ஈ. ஆர். சகாதேவன் கசாப்புக் கடைக்காரரைப்போல மேக்கப் செய்யப்பட்டு நடிக்கின்றனர். ரசிக்கத் தக்கதாகஇல்லை. வெறுப்புத் தட்டுகிறது.

எம். என். ராஜம், ஈ. வி. சரோஜா, காகா ராதாகிருஷ்ணன், எஸ். வி. சுப்பையா முதலானோரும் வருகின்றனர். திறமையைக் காட்ட பாத்திரமேது?

பேய் ஓட்டும் காட்சி—ரசிகர்களை தியேட்டரைவிட்டே விரட்டும்படியாக இருக்கிறது. மயானக் காட்சி மட்டுமென்ன? சோற்றுச் சாமியார் சத்திரமாகவிருக்கிறது. அதற்குத் தகுந்தபடி பாட்டு வேறு! மற்ற காட்சிகளும் அனுதாபத்திற்குரியவை. உருப்படாத ஒலிப்பதிவு சற்றுயர்ந்த ஒளிப்பதிவு.

ஆர். ஆர். சந்திரன் படத்தைத் தயாரித்திருப்பதுடன், டைரக்ஷனும் செய்திருக்கிறார். திறமை குறைவு. பணத்தைச் செலவிட்டுப் படத்துறையில் பயிற்சி பெறுகிறார்! போலும். பொது மக்களுக்குத் தேவையான படங்களைத் தயாரிக்க வேண்டியவர், பையாகத்தைத்து விற்பனைச் செய்யவா ரம்பையின் காதலைப் படமாக்கினார்? பாவம்!

ஒரு புராணப்படத்தின் தோல்வி பத்து சமூகப் படங்களின் வெற்றி. ஒரு புராணப் படத்தின் வெற்றி ஒரு சமூகப்படத்தின் தோல்வி என்பதைநினைவு படுத்துகிறது "ரம்பையின் காதல்."

விளம்பரங்களைப் பார்த்து புதுப் படமென்று போகிறவர்கள் தலைவலி மாத்திரையுடன் செல்லுங்கள்.

எடுபடவில்லை—ரம்பையின் காதல்.

—க. அண்ணாமலை.

**வாய்வு சூரணம்.**

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தநோய், சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது (பத்தியமில்லை)

**5-பலம் டின் ரூ 3—0—0**

**சம்பு இண்டஸ்ட்ரீஸ்,**

**சேலம்—2.**

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

## இதயம்

மலர் 6 | சேலம் 12—10—56 | இதழ் 14

# ஆயுதபூசை தேவைதானா?

கண்ணால் காணாததை மட்டுமல்ல; கண்டதையெல்லாம் கடவுளென்று கையெடுத்துக்கும்பிடும் அறியாமை, நம்மிடையே மிகவுண்டு. அதனை ஆண்டுதோறும், சிந்திப்பார்க்கு நினைவுறுத்துவது, ஆயுத பூசை!

நமது நாட்டிலே பகுத்தறிவு வளர்ச்சிக்குப் பெருந்தடைக் கற்களாக உள்ளவற்றிலே குறிப்பிடத்தக்கன; கோயில், குளம், தேர், திருவிழா, பூசை, விரதம் இவைகளாகும். இவை ஏன் ஏற்பட்டன, எப்படி ஏற்பட்டன, எதற்காக ஏற்பட்டன என்பனவற்றை எண்ணிப்பார்க்க முடியாதபடி ''தெய்வீகம்'' நமது புத்தியைத் தேய்த்து, மாய்த்து விட்டது! இன்னும் அது, தனது கோரப்பிடிப்பை தளர்த்தவில்லை.

கண்ணிருந்தும் ஒளியற்றவராக—அறிவிருந்தும் ஆராயும் திறனற்றவராக—பண்பிருந்தும் பகுத்தறிவை மதியாதவராக—மடையர்களாக—மண்ணாங்கட்டிகளாக ஆக்கப்பட்டு விட்டோம்! இல்லையென்றால், நம்மை அடிமை யென்றும், தாசிமகனென்றும் இழித்துரைக்கின்ற இதிகாச புராணங்களைக் காலிலே போட்டு மிதிக்காமல் "கலைகள்" என்று கண்களிலே ஒற்றிக் கொள்வோமா? ''இலக்கியம்'' என்று ரசித்து மகிழ்வோமா?

கலைமகள்—சரசுவதியைப் பற்றி புராணங்கள் சொல்லுகின்ற கதைகளைப் பார்த்தால், ஒரு கூச்சக்காரியினும் கேவலமாகவே மதிப்போம்! அவளைத் தெய்வம் என்றும், கல்விக்குக் கடவுள் என்றும் கூறி நம்பவைத்து கருத்துக் குருடாக்கி விட்டது கல்மனப் பார்ப்பனீயம்!

ஆண்டுதோறும் நவராத்திரி விரதம், ஆயுத பூசை, சரசுவதிபூசை, விஜயதசமிவிழா கொண்டாடுகிறோமே: கண்ட பலன் என்ன?

நவராத்திரி விரதமிருந்தால் இழந்த ராச்சியம் கிடைக்குமாமே! சேர சோழ பாண்டியன் பரம்பரையினர் யாருமில்லையா? இன்றுவரை சிங்காதனம் ஏன் ஏறவில்லை?

தராசு, படி, உழக்கு முதல்; மண்வெட்டி, கோடாலி, ஆணிவரை ஆயுதங்களுக்குப் பூசையிட்டால் செல்வம் வளருமென்றார்களே! பட்டை பட்டையாக திருநீற்றைப் பூசிப் பொட்டு வைத்தோமே; விழுந்து கும்பிட்டோமே! வளம் சுரக்கவில்லை, வறுமை தொலையவில்லை, பிச்சைக்கார கும்பல் குறையவில்லையே!

சரசுவதிக்குப்பூசை போட்டால் கல்வி தருவாள் என்றார்கள்; பொய்க்கணக்குப் புத்தகம் முதல் புராண ஏடுகள் வரை அடுக்கி, மஞ்சள் பூசி, மலர் போட்டுப் பூசிக்கவில்லையா? அந்தோ; 100-க்கு 80 பேர் தற்குறிகளாக வாழும் பரிதாப நிலை—கேவலம்— உலகிலேயே நம் நாட்டில் தானே இருக்கிறது? கருணைகாட்டினாளா கலைமகள்? நமக்குப் புரிந்த தாய்மொழியைப் பறித்துக் கொண்டு, புரியாத இந்திமொழியைத் தலைமேல் சுமத்துகிறாளே, அந்த நன்றி கெட்டத் "தட்டுவாணி!"

விஜயதசமி விழாக் கொண்டாடினால் வெற்றிச்செல்வி—சக்தி தேவியின் அருள் கிட்டுமாமே; எவ்வளவு காலமாகக் கொண்டாடினோம்? போரிட்டுப் புதுநாடுகளைப் பிடிக்க வேண்டாம், நமக்கிருந்த எல்லைகளையாவது இழக்காமல் காப்பாற்றினோமா? இன்றும், சித்தூர், திருத்தணி, தேவிகுளம், பீருமேடுகளை இழந்துகொண்டுதானே இருக்கிறோம்; மகிஷாசுர மர்த்தனிக்குப் பெருவிழா நடத்துகின்ற மைசூர் மன்னர் பரம்பரையே ஆட்சியின் உரிமை இழக்கின்றதே; ஏன்?

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தோமா? செல்வத்திற்கு அதிபதி ஒருத்தி, கல்விக்கு அதிபதி ஒருத்தி, வெற்றிக்கு அதிபதி ஒருத்தி, வீரத்திற்கு அதிபதி ஒருத்தி என்றுபெண்தெய்வங்களை உருவாக்கி, இவர்களை விரதமிருந்து பூசித்தால்—விழாக் கொண்டாடினால் எல்லாம் கிடைக்கும் என்று எத்தர்கள் புளுகினார்கள்; அவற்றைநம்பி பித்தர்களாக; தன்னறிவு—தன்முயற்சி—தன்மானமற்ற பேடிகளாகமாறி விட்டோமே;—மாற்றப் பட்டு விட்டோமே; இனியாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

அறிவைப் பாழாக்கும் ஆயுத பூசை—சோம்பேறிகளாக்கிடும் சரசுவதி பூசை—வீணர்களாக்கும் விஜயதசமி விழா, இன்னும் நமக்குத் தேவைதானா?

—ப. கண்ணன்.




ப. கண்ணன்

[முன் இதழ் தொடர்ச்சி]

சந்தி:- ஆம்! என் உருவைக்கண்டு பொங்கி யெழுந்த பொறாமைதான், அவர்கள் கலைக் கண்களையே குருடாக்கிவிட்டது.

மைத்:- வெளிநாட்டான் என்று என்னை இகழ்ந்தார்கள். தொலையட்டும்! சொந்த நாடு, சொந்த இனம், சொந்தத் தம்பி உனக்கென்ன மதிப்பளித்தார்கள்? அந்தச் சிங்காதனத்திலே நீர் இருந்திருந்தால்.......?

சந்தி:- நடந்திருக்காது இந்த ஓரவஞ்சனை. மைத்ரேயரே! பொறுத்தது போதும். ஒழித்துக் கட்ட வேண்டும் இந்த ஆட்சியை!

மைத்:- (சிரித்து) மானக்கேடு வரும்போது மனக்கொதிப்பு; பிறகு சுடுகாட்டு அமைதி. நல்ல வேடிக்கை! என் ஆறுமாத அனுபவத்தில் இது தானே உமது வாடிக்கையாக இருக்கிறது!

சந்தி;- வெறுத்துவிட்டது மனம். வெந்து நீறுகிவிட்டது பாசம். இனி விட்டிருக்கப் போவதில்லை அந்தக் கட்டெறும்புகளை!

மைத்:. வெறும் வாய்ப் பந்தல்! படையெடுத்தால் உதவி செய்வதாக, பாண்டியனுக்கு ஓலையனுப்ப முடிவு செய்தோம். ஒன்றரை மாதங்களாயின. இன்றுவரை அனுப்பவில்லையே?

சந்தி:- சேனுபதியை வசப்படுத்துவதாக நீரும்தான் சொன்னீர். என்ன சாதித்தீர்?

மைத்:- எதைச் சாதிக்க வேண்டுமோ, அதைச் சாதிப்பதிலே இந்த மைத்ரேயன் அணுவும் பின்னடைய மாட்டான். சந்திரவர்மா! வியப்படைய வேண்டாம். சேனுபதி விக்ரமகேசரி, இப்போது என் கையில்! ஆனல், அந்த வீரனை நாம் பயன்படுத்த நீர் ஒரு மகத்தான தியாகம் செய்ய வேண்டும். முடியுமா?

சந்தி:- பல்லவ சிங்காதனத்தில் அமர, இந்தப் பாவலன் எதையும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

மைத்:- வேறொன்றுமில்லை. சேனுபதியோடு வித்யாவதி கொஞ்சி விளையாட நேர்ந்தால், நீர் நெஞ்சம் பதைக்கக் கூடாது! அவ்வளவுதான்.

சந்தி:- (திடுக்கிட்டு) ஆங்! என்ன சொன்னீர்?

மைத்:- மகுடம் பெறுவதற்கு மார்க்கம்.

(வித்யாவதி வருகிறாள்)

சந்தி:- (வெறுப்போடு) மகுடம் பெறுவதற்கு மார்க்கம்!

வித்யா:- (புரிந்துகொள்ளாமல்) மனமிருந்தால் எதற்குத்தான் மார்க்கமில்லை கண்ணாளா?

மைத்:- சபாஷ்! அப்படிச் சொல்லடி என் செப்புச்சிலையே!

வித்யா:- சுவாமியாரோ ஒரு குதிரைவீரன் உங்களைப் பார்க்க வாசலில் காத்திருக்கிறான்.

மைத்:- (வியந்து) அடடே! இதோ வந்திட்டேன்.

(அவசரமாகப் போகிறார்)

சந்தி:- (வருந்தி) வித்யாவதி! உன்னை மறந்து ஒருகணமும் தாளமுடியாது என்னால்.

வித்யா:- சுவாமி! உங்களைப் பிரிந்து, புவியில் வாழவே முடியாது என்னால்.

(கட்டித் தழுவிக் கொள்கின்றனர்)

## காட்சி 5.

(அந்தப்புரம். மன்னன் நந்திவர்மனும், மகாராணி சங்காதேவியும் சதுரங்கம் ஆடிக்கொண்டிருக்கின்றனர்)

நந்தி:- (காய்நகர்த்தி) இதோ வெட்டு! வெட்டிவிட்டேன். இனி என்ன செய்ய முடியும் உன்னால்?

சங்கா:- அப்படியா சொல்கிறீர்கள்........ பார்ப்போம்...... (காய் நகர்த்தி) இதோ கட்டி விட்டேன். மன்னவரே! உங்கள் படைவீரர்களால் இனி ஒரு அடியும் நகர முடியாது. வெற்றி எனக்கு!

நந்தி:- (அதனைப் பார்த்து) ஆம். நான் தோற்றேன்! சங்கா! (அவள் கைகளைப் பற்றி எழுந்து) நீ பல கலையும் கற்ற கலையரசி மட்டுமல்ல, அரசியல் அறிவுபெற்ற ஞானத் தமிழரசி! சதுரங்கத்திலே பகைவனின் படையைக் கட்டி வெல்வது, ஆட்சித் துறையிலே அறிவுகொண்டு பகைமை வெல்லும் திறமைக்கு அடையாளம்! சங்கா! மங்காத மாணிக்கமே! பல்லவர் பெருங்குடிக்கு நீயொரு அணையாத மணிவிளக்கு!

(அன்போடு அணைக்கிறான்)

சங்கா:- (மார்பில் சாய்ந்து) விளக்கு நான்; ஒளி நீங்கள். தென்றல் நான்; குளிர்ச்சி நீங்கள். கண்ணாளரே! இந்த வெற்று ஓவியத்திற்கு, நீங்களல்லவோ உயிர்!

நந்தி:- கண்ணே! தங்கக் குடத்திலே கொம்புத்தேன். என் தமிழரசியிடம் கலைத் தேன், காதல்தேன், அன்புத்தேன், அறிவுத் தேன், சுவைத்தேன். சுவைத்தேன் சங்கா! மகாராணியென்றால் எல்லா தகுதியும் பெற்ற நீதான் மகாராணி!

சங்கா:- (நாணி) போங்கள் காதா! போதும் பரிகாசம்.

நந்தி:- பாராட்டுக்குப் பெயர் பரிகாசமா கண்ணே?

(சிறுவன் நிருபதுங்கன் குரல் கேட்கிறது)

நிருப:- அம்மா! அம்மா!

சங்கா:- (விலகி) நிருபதுங்கா! வாடா கண்மணி.

(நிருபதுங்கனும், சந்திரவர்மனும் உள்ளே வருகின்றனர்)

நிருப:- அப்பா, அம்மா........

(தாய் அணைத்துக்கொள்ள)

சந்தி:- வணக்கம்.

நந்தி:- சந்திரவர்மா! ஏது நிருபதுங்கன், உன்னோடு?

சந்தி:- கல்லூரியிலிருந்து வந்து கொண்டிருந்தான்; வழியிலே சந்தித்தேன், இருவருமாகச் சேர்ந்து வந்தோம்.

சங்கா:- கல்வி கற்பது எப்படியடா கண்ணே இருக்கிறது?

நிருப:- யாருக்கு எப்படியிருந்தாலும், எனக்கு கற்கண்டுபோல் இனிப்பாக இருக்கிறதம்மா. எண்ணும், எழுத்தும் கண்களல்லவா?

சந்தி:- சபாஷ் துங்கா! கல்விதான் கலைகளின் ஜன்மபூமியென்று, பெரியவர்கள் சொல்லுவார்கள். உண்மையில்......? (மகாராணியைப் பார்க்கிறான்)

சங்கா:- என்ன சந்தேகம்? கல்வி வளமற்ற கலையும், கலை வளமற்ற கல்வியும் உயிரற்ற சடலங்களாயிற்றே!

சந்தி:- அண்ணியாரிடம் ஒரு சந்தேக விளக்கம் பெறவேண்டும். முடியுமா?

சங்கா:- முடிந்தவரையில் விளக்குகிறேன்.

சந்தி:- கலைகளின் படைப்புக்கு அடிப்படையாகக் கொள்ளத்தக்கது அன்பா? பக்தியா? சிறந்தது எது?

சங்கா:- அன்புதான் சிறந்தது.

சந்தி:- தப்பு! பக்திதான் சிறந்தது.

சங்கா:- பக்தி தன்னலம். அன்பு பொது நலம். எவ்வாறெனில், ஆண்டவனை நாடி நிற்பது பக்தி; அனைத்துயிரையும் வாழவைப்பது அன்பு. எனவே, அன்புதான் சிறந்தது.

சந்தி:- அப்படியானால், கலைகள் யாவும் தெய்வீக சான்னித்தியம் பெற்றவை யென்பது பொய்தானா?

சங்கா:- தெய்வமே அன்பின் வடிவமாயிற்றே! அன்பே கடவுள்; அன்பே வாழ்வு; அன்பே உலகம்; அன்பே அறமாகும்! "அன்பு இலதனை வெயில் போலக் காயுமே அன்பு இலதனை அறம்" என்பது குறள் நீதி.

சந்தி:- பக்தியை இழிவுபடுத்தும் தப்பான வாதம். இதை, ஒப்ப முடியாது.

சங்கா:- உண்மையை ஒப்புவது வாதம். மறுப்பது பிடிவாதம்.

நிருப:- (பந்தைக் காட்டி) சித்தப்பா! வரும்போது அங்காடியில் எனக்குப் பந்து வாங்கிக் கொடுத்தீர்களே! ஏன்?

சந்தி:- ஏன்? விளையாடுவதற்கு.

நிருப:- (தூக்கிப்போட்டுப் பிடித்து) நான் விளையாடுவதை நீங்கள் விரும்பக் காரணம்?

சந்தி:- அதுவா? உன்மேலிருக்கும் அன்பு.

(வளரும்)

## ஏ. வி. பதி வெட்டப்பட்டார்!

தஞ்சைமாவட்ட தி. மு. க. பொருளாளரும், தஞ்சை நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர், ஏ. வி. பதி. அவர்கள், சென்ற 30–9–56 இரவு, தஞ்சை கீழ்வாசலில் அவரது கடைமுன்பாக ஆயுதந் தாங்கிய சிலரால் தாக்கப்பட்டார்.

தலையிலும், வயிற்றிலும் பலமான வெட்டுக் காயமேற்ற தோழர் பதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். போலீசார் தாக்கியவர்களைக் கைதுசெய்து ஜாமீனில் விடுதலை செய்திருக்கின்றனர்.

வெட்டியதன் காரணமாக கைது செய்யப்பட்ட அருணாசலம் என்பவர், சென்ற நகரசபைத் தேர்தலில் தோழர் பதியை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகராம்.

## தோழர்களுக்கு.

"பகுத்தறிவு" வளர்ச்சி குறித்து நண்பர்கள் பலர் பாராட்டும், ஆலோசனைகளும் வழங்குகின்றனர். மிக்க நன்றி.

"பகுத்தறி"வில் வெளியிடுவதற்கென்று செய்திகள் அனுப்புகின்றனர். வரவேற்கிறோம். எனினும், "பகுத்தறிவு" கருத்து இதழ். கட்டுரைகள்–கருத்துரைகளுக்கே இடம் போதவில்லை. இங்கிலையில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும் பிரசுரித்தல்சாத்தியமில்லை. எனவே நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளை மட்டும், முன்கூட்டியே தெரிவிப்பின்–துண்டு விளம்பரம் அனுப்பினும்–வெளியிடுவோம். அடுத்த கிழமை முதற்கொண்டு அதற்கென்றே "முன்னேற்றப் பாதையிலே" என்ற ஒரு பகுதி துவக்கப்படுகிறது. நமது தோழர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக.

அன்பன்,

—ப. கண்ணன்.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● மா. பாலு,
கைலாசபுரம்,
பாலவனத்தம் (அஞ்சல்)
(வழி) விருதுநகர்.

**கே. பி அர்த்தனரி, கோனேரிப்பட்டி.**

கே: கடைமில்லாத மாட்டுச் சின்னத்தை வைத்துக்கொண்டு காங்கிரஸ் ஓட்டுக் கேட்பதன் மர்மம் என்ன?

ப: பசுத்தோலைப் போர்த்துக் கொள்கின்ற புலிக்குத்தானே ஊருக்குள் நடமாட உரிமை கிடைக்கும்? ஏமாற்ற வழி கிடைக்கும்?

*  *  *

கே: "கள்ளனை நம்பினாலும் கடவுளை நம்பாதே" என்கிறார்களே, ஏன்?

ப: கள்வனின் இதயத்திலாவது; நரம்பு, தசை, இரத்தம், ஈரம் இருக்கும். கடவுளின் இதயத்தில் கல், மண், இரும்பு, பித்தளை, வெங்கலந்தானே இருக்கும்? கனிவு பிறக்காதே!

**சி. கோபாலன், சேலம்–2**

கே: புரட்சிக்கவி பாரதிதாசன் தற்போது எந்தக் கழகத்தில் இருக்கிறார்?

ப: அவர் "கழகத்தில்" இல்லை. சற்று மறை கழன்று போய் 'கலகத்தில்' இருக்கிறார்.

*  *  *

கே: செயல் வீரன் கே. வி. கே. சாமியின் கொலை மர்மம் என்ன?

ப: நீதிமன்ற விசாரணையிலே வெளிப்பட்டு, நீதிபதியின் தீர்ப்பால் நிச்சயிக்கப்படும்.

**அ. தமிழ்த்தாசன், சகண்டபுரம்**

கே: "திராவிடம்" என்ற சொல்லுக்கு சங்க இலக்கியங்களிலே சான்று இருக்கிறதா?

ப: தேவையில்லையே! இதிகாசங்களிலே "குடியரசு" என்ற சொல் உண்டா இல்லையா என்று ஆராய்ந்து பார்த்தா குடியரசை நிர்மாணித்தார்கள்?

*  *  *

கே; திராவிடநாடு என்று கூறப்படும் பகுதிகளை உங்களுக்குக் கொடுத்துவிட்டால், மலையாள, ஆந்திர, கன்னட அரசினர் உங்களோடு சேருவார்களா?

ப: உங்கள், நம்முடைய, நாம் என்பதெல்லாமே அவர்களையும் சேர்த்துத்தானே! பிரிட்டிஷ் காமன்வெல்த்தோடேயே இந்தியா இணையும் போது, நம்மோடு நம்மவரால் இணைய முடியாதா என்ன?

**● மா. பாலு, கைலாசபுரம்.**

கே: கல்விக்குக் கடவுள் இருக்கும் நம் நாட்டில், கற்றவர்கள் குறைவாக இருப்பதேன்?

ப: கல்வி கடவுளல்ல என்பதை ஒப்புக்கொள்ளும் பகுத்தறிவாளர்கள், மிகக் குறைவாக இருக்கிறார்களே!

*  *  *

கே; மந்திரி மாணிக்க வேலரும், எஸ். எஸ். ராமசாமியும் செய்நன்றி கொன்றவர்கள்தானே?

ப: மக்களிடம்தான் அப்படி. முதன் மந்திரியாரிடம் அதைக் கொல்லாமல்தானே இருக்கிறார்கள்!


## புத்தகங்கள்.

திராவிட இயக்கப் புத்தகங்கள், தென்றல் வெளியீடுகள், திருமணப் பரிசுக் கேற்ற பல வகை நூல்களும் இங்கே கிடைக்கும்.

*

அண்ணா–நெடுஞ்செழியன்
இணைந்த படம்.

ஒன்றின் விலை 0—6—0
டசன் விலை 3—0—0

தபாற் செலவு தனி

பகுத்தறிவு அலுவலகம்,
குமாரசாமிப்பட்டி :: சேலம்–1.

# தெற்கென்றால் புறக்கணிப்பு. ★ ★ வடக்கென்றால் வளப்பெருக்கா?

வடநாட்டினின்றும் தென்னாட்டுக்கு வரும் மந்திரிகள், அதோ நெய்வேலித் திட்டம் முடியப் போகிறது, இதோ சேலம் இரும்புத் தொழிற்சாலை முளைக்கப் போறது என்று சவடாலடிப்பதில் குறைச்சல் இல்லை. அவற்றை நம்பி ஏமாறுகின்ற கதர்ச் சட்டைகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால், உண்மையிலேயே ஆளவந்தார்கள் என்ன செய்கிறார்கள்?

நெய்வேலி நிலக்கரியைத் தோண்டி எடுக்கவும், அதைப் பதப்படுத்துவதன் மூலம் இரும்புக் கனியை உருவாக்கக் கூடிய நிலக்கரியைத் தயாரிக்கவும், அதனைக்கொண்டு சேலம் இரும்புக் கனிகளை உருக்கி வார்க்கவும் ஆன திட்டங்களுக்குக் கிழக்கு ஜெர்மனி சர்க்கார், பொருளாதார—மற்றும் தொழில் நுட்ப உதவிகளைச் செய்யத் தயாராகவிருப்பதாகக் கிழக்கு ஜெர்மனி வர்த்தகக் குழுவைச்சேர்ந்த ஒருவர் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

உலகிலேயே பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் விவகாரத்தில் அதிகமான அனுபவ அறிவு பெற்றுள்ளவர்கள் என்ற முறையில், கிழக்கு ஜெர்மனி நிபுணர்கள் நெய்வேலியையும் சேலத்தையும் பார்வையிட்டுவிட்டு, நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவக்க முடியும் என்ற கருத்தைத் தெளிவாக அறிவித்ததை ஒட்டியே, வர்த்தகக் குழுவினர் டெல்லி சர்க்காரிடம் திட்டங்களுக்குத் தாங்கள் உதவுவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

உதவியளித்து இரு தொழிற்சாலைகளையும் துவக்குவதற்கு கிழக்கு ஜெர்மானியர்கள் மேற்கொண்ட இந்த முயற்சி தோல்வியடைந்து விட்டது என்று, தற்போது டெல்லிவட்டாரங்கள் கூறுகின்றன.

டெல்லி சர்க்கார், கிழக்கு ஜெர்மனி நிபுணர்களின் கருத்திற்கு உரிய மதிப்பளிக்கத் தயாரில்லை என்றும், அதனால் திட்டமான அறிவிப்பு எதுவும் இல்லை என்று சாக்குப்போக்கு கூறுவதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனி வர்த்தகக் குழுவினர், பத்திரிகையாளரைக் கூட்டி வைத்து, தங்கள் சர்க்கார் உதவியளிக்கத் தயாராக இருப்பதைப் பகிரங்கமாக அறிவித்திருந்தும்—தெளிவாகத் திட்டவட்டமாக விளக்கியிருந்தும்கூட, டெல்லி சர்க்கார் வட்டாரங்கள், உதவியை ஏற்றுக்கொண்டு செயல்படுவதற்குமாறாக, திட்டமான அறிவிப்பு இல்லை என்று பொய் கூறுகின்றனவாம்!

டெல்லி சர்க்கார் உற்பத்தி இலாகா அதிகாரி ஒருவர், "நாடு முழுவதையும் ஒருசேரக் கவனித்தால், இரும்புத் தொழிற்சாலை துவக்குவதுபோன்ற விவகாரங்களில் நாம் மிகச் சிக்கன மனப்பான்மை யுடையவர்களாயிருக்க வேண்டும்; ஏனெனில், சேலத்தில் கிடைப்பதைவிட வளமான இரும்புக் கனிகள், நிலக்கரி கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே—நாட்டின் இதர பகுதிகளில் (வடநாட்டில்?) கிடைக்கின்றன; எனவே, அந்த இடங்களில் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் துவக்குவதே இந்தியாவின் பொருளாதார நிலைக்கு உகந்ததாகயிருக்க முடியும்; சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை துவங்குவதில் பல கஷ்டங்கள் அடங்கியுள்ளன." என்று கூறியிருப்பதாக 'மெயில்' நிருபருக்குத் தெரியவந்துள்ளதாம்.

அதிகார மூக்கணாங்கயிறு வடநாட்டான் கையிலிருக்கிறது; சுண்டிவிட்ட பக்கம் செல்லுவதற்குத்தான் தென்னாட்டு "மாடு"களுக்கு உரிமையும், தகுதியும்! அபிவிருத்தி வண்டி வடக்கேயே சுற்றுகிறதே, வளம் கொழிக்கிறதே; தெற்குப்புறம் செல்லுவோமே, வெளிநாட்டு நிபுணர் காட்டிய வழி காரிய மாற்றுவோமே என்று செப்பிடத் துணிவில்லை இவர்களுக்கும்; செய்திட விருப்பமில்லை அவர்களுக்கு; கொழுக்கிறது வடநாடு; குலைகிறது தென்னாடு! பிறகு இதற்கெல்லாம் வேறு என்னதான் பொருள்?

○★○


TEL: Gurucures.

PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலிலே வெற்றிபெறுவதே நமது நோக்கமல்ல காங்கிரஸின் ஊழல்களை மக்களிடையே எடுத்துச் சொல்லி "அவர்களுக்கு ஓட்டுப் போடாதீர்!" என்று சொல்லத்தான் நாம் தேர்தலில் நிற்கிறோம். ம. பொ. சி. யின் வடஎல்லைப் போராட்டப் பிரச்சினையும் நம் குற்றச் சாட்டுகளில் ஒன்றாக இருக்கும். 150 ரூ. சம்பளம் வாங்கத்தான் நாம் தேர்தலிலே நிற்பதாகப் பெரியார் சொல்கிறார் ஆனால் தேர்தலிலே நின்று வெற்றி பெறுவதென்பது அவ்வளவு எளிதா? "காங்கிரஸ் ஏழைகளின் ஸ்தாபனம்" என்கிறார் காமராஜர். என்ன விந்தை! முத்தைய செட்டியார், மதுரைப்பிள்ளை போன்ற பெரும் பணக்காரர்கள் கதர் குல்லாய்க் கடியில் அல்லவோ இருக்கிறார்கள்! நம்மைப் பார்த்து "வெள்ளையரின் அடிமைகள்" என்கிறார் சுப்ரமணியம். வெள்ளையரின் அடிமைகள் நாங்களல்ல. கோபாலசாமி ஐயங்காரும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் வெள்ளையரின் அடிமைகள்! "2000 கோடி ரூபாய்க்கு அண்ணுதுரை திட்டம் தர வேண்டும். அதை ஒரு வெள்ளைக்கார நிபுணர் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று சொன்ன சுப்ரமணியமே! உமக்கிருப்பதல்லவா அடிமைப்புத்தி? இந்தியா வெள்ளையனின் பிடியிலிருந்து சுதந்திரம் அடைந்து விட்டதாம். ஆனால், பக்கிங்ஹாம் கர்னாடிக்மில், பேரி கம்பெனி போன்ற 400 வெள்ளையர்களின் ஸ்தாபனங்கள் மூலம்—சராசரி ஒரு ஸ்தாபனத்தின் வருமானம் ஆண்டொன்றுக்கு ஒருகோடி என்று வைத்துக் கொண்டால்கூட—ஆண்டொன்றுக்கு 400 கோடி ரூபா இந்த நாட்டிலிருந்து இன்னும் வெள்ளையரால் கொள்ளையடிக்கப்படுகிறது. இதுவா சுதந்திரம்? வெள்ளையன் ஆட்சியில் இராணுவத்திற்கு செலவிடப்பட்டது 70 கோடி ரூபா. இன்று காந்தி சீடர்களின் ஆட்சியில் இராணுவத்திற்காக செலவிடப்படுவது 200 கோடி ரூபா. அன்று ஒரு கார்டின் விலை அரையணு; இன்று ஒரு கார்டின் விலை முக்காலணு! அன்று ஒரு கவரின் விலை ஒன்றரையணு! இன்று அதன் விலை இரண்டணு! அன்று சிலவரி ரூபாய்க்கு மூன்றரை அணு; இன்று ஒன்பது அணு! இதுவா சுதந்திரத்தின் இலட்சணம்? வடநாட்டிலுள்ள கடைசி நாணயமானவர் நேரு. அவருக்குப்பின் இந்தியா சுக்கல் சுக்கலாக உடைந்து போகத்தான் போகிறது. அதில் சந்தேகமேயில்லை!

தொகுத்தவர்:
சேலம், ஏ. பெரியசாமி.

# விதி.

இங்கிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள ஒரு ஊருக்கு ஒரு நண்பனைப் பார்க்கக் காலை ஒன்பது மணிக்குப்புறப்பட்டுப் பத்து மணிக்குப் போய்ச் சேருகிறோம். நண்பர் வீட்டில் இல்லை; அவர், ஒரு காரியமாக அங்கிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குக் காலை ஒன்பது மணிக்கே புறப்பட்டுப் போய்விட்டார், மறுநாள் தான் வருவார் என்று கேள்விப் படுகிறோம். திரும்பி வீடுவந்து சேர்ந்து விடுகிறோம். இப்போது நாம் கருதிச் சென்ற காரியம் கைகூடவில்லை, ஏன்? சிந்திக்கிறோம்; காரணம் விளங்கி விட்டது. மறுநாள்,

5-10-56-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு நான் தங்களைச் சந்திக்க அங்கு வருகிறேன்" என்று ஒரு கடிதம் எழுதித் தபாலில் போட்டு விட்டுக் குறித்த நாளில், குறித்த நேரத்தில் அங்கு போகிறோம். நண்பர் வீட்டிலேயே நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். பேசவேண்டியவைகளைப் பேசிவிட்டு வந்து விடுகிறோம். இப்பொழுது நாம் கருதிச்சென்ற காரியம் கைகூடி விட்டது. முன்னர் முடியாமல் போன காரியத்தின் காரணத்தைத் தெரிந்து தக்கபடி செய்தோம்; காரியம் முடிந்தது. இப்படியே ஒவ்வொரு காரியத்திலுமுள்ள காரணங்களை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். பிறகு அதற்குரிய திட்டம் வகுக்க வேண்டும். அதன்படி நடக்கவேண்டும்.


வண்டிகள், பாதைக்கு இடதுபுறமாகப் போகவேண்டும் என்ற சட்டமும், பாதசாரிகள் நடைப் பாதையிற் செல்ல வேண்டும் என்ற திட்டமும் இல்லாமலிருந்து, பாதையை ஒழுங்குபடுத்தும் சேவகனும் இல்லாமலிருந்தால் வண்டிகளும், மனிதர்களும், தாறுமாறுகப் போய்க்கொண்டிருந்தால் சென்னை நகரில் ஒரு நாளைக்கு எத்தனை ஆபத்துக்கள் விளையும்? எத்தனை வண்டிகள் சேதமாகும்? எத்தனை உயிர்கள் நாசமடையும்? என்பதை எண்ணிப் பாருங்கள். அவைகளைத் தவிர்க்கத் தகுந்த காரணங்களைக் கண்டு பிடித்து, அதன்படி நடப்பதனுல் விபத்துக்கள் குறைகின்றன. என்றாலும், மோதல்கள் நின்றபாடில்லையே யென்றால், பாதை ஒழுங்கை மனதில் வைக்காமல் மறந்துபோய், அல்லது அசட்டையாய் தவறுதலாக வண்டியோட்டிகளோ, செல்லும் மனிதர்களோ நடந்துகொள்வதால்தான் இரண்டொரு கேடுகள் நேருகின்றன.

எவரும் ஒரு தவறுதலும் இல்லாமல் ஒழுங்கை அனுசரித்து நடப்பார்களானுல், ஒரு கெடுதியும் சம்பவிக்க மார்க்கமில்லை என்பதை நன்குணரலாம்.

இப்பொழுது பாருங்கள்; விதியின் செயலா, நம் செயலா என்று. விதியின் செயல் என்று வீணே இருந்துவிட்டால் உலகில் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. ஒவ்வொன்றுக்கும் காரணத்தைக் காண முயல வேண்டும். பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும், ஆராய்ச்சி செய்யவேண்டும். கண்டு பிடிக்க வேண்டும். பிறகு தக்கன செய்தல் வேண்டும். காரணம் விளங்குபவற்றை ஒப்புக்கொண்டு, விளங்காதவைகளை விதி என்று சொல்லிவிட்டுவிடுக் போதுதான் நாம் பெரிய தவறு செய்தவர்கள் ஆகிறோம். ஆகவே விதி, அவன் செயல், ஊழ்வினை என்று சொல்வதை விட்டுச் சூழ்நிலை என்று சொல்வோம்.

—பாவலர், வேலாயுதசாமி.

டாக்டர் சோதனை விளக்கத்தின்படி
ஏற்ற கண்ணுடி எம்மிடம்கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்—1.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

முடித்தனம்—அரசினரின் அடக்குமுறை வெறியாட்டம்—பல்லாயிரவர் சிறை—தாளமுத்து நடராசன் பலி ஆகியன, தூங்கிக்கிடந்த தமிழர் நெஞ்சங்களிலே புத்துணர்ச்சியைப் பாய்ச்சி விட்டன! தன்மான உணர்வுபெற்ற தமிழர்கள், இந்த இழிவுக்கெல்லாம் விமோசனம்தமிழ்நாடுதமிழர்களுக்கே ஆவதுதான் என்ற முடிவுக்கு வந்தனர். முழக்கிய பேரொலி இலட்சிய உறம் பெற்று, மொழி, இலக்கிய, அரசியல் துறைகளிலே கொப்பும் கிளையுமாகப் படரத் தொடங்கியது.

* * *

இந்தி எதிர்ப்பு இயக்கம் தோற்றுவித்த தமிழ், தமிழன், தமிழ்நாடென்ற நல்லுணர்ச்சி, எதிர்முகாமில்—காங்கிரசில் இருந்த தோழர், ம. பொ. சிவஞானம் அவர்களை ஈர்த்தது. அவரது மொழிப்பற்று, இலக்கியப்பற்று, இனப்பற்று பொங்கிப் பெருகின. "தமிழ் முரசு" இதழ் துவக்கினர்; தமிழரசுக் கழகம் தோற்றுவித்தார். "தமிழ்நாடு தமிழருக்காகி, தமிழர்களே தமிழில் சுதந்திர ஆட்சி நடத்த வேண்டும். அந்த ஆட்சி சமதர்மக் குடியரசாகத் திகழ வேண்டும்; வடவர் ஆதிக்கம் ஒழியவேண்டும்" என்று சுதந்திர முழக்கமிட்டார். மகிழ்ந்தோம்; வளர்ந்தோம்.

* * *

சுயமரியாதை இயக்கத் தலைவர்—தென்னிந்திய நலவுரிமைச் சங்கத் தலைவராகிவிட்ட—பெரியார் இராசாமி, "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற இலட்சியத்தை வலுவாக்கினர். தோழர்களின் பரிபூரண ஒத்துழைப்பினைப் பெற்று, பிரசாரத்தைவிரிவாக்கினர்; முறையாக்கினர்; வளர்ந்தது திராவிட இயக்கம்! அறிஞர் அண்ணாவின் கருத்துப்படி அது நாளடைவில் திராவிட கழகமாகவும் மாறிற்று.

தமிழரசு, திராவிட அரசுக்கு மாறுபட்டதோ, முரண்பட்டதோ அன்று. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் நான்கும் மொழியரசுகளாகப் பிரிந்து, திராவிடக் கூட்டரசாக இணைந்து வாழ வேண்டுமென்பதே திராவிட இயக்கத்தின் குறிக்கோள். ஆனால், சுதந்திரத் தமிழரசு கோரிய தமிழரசுக் கழகம் இடையிலே சற்று துவண்டு, தன் குரலை மாற்றியது; "இந்திய யூனியனோடு இணைந்த தமிழரசு வேண்டும்" என்று.

திராவிட இயக்கம் இந்திய யூனியனோடு இணைந்து—அடிமைப்பட்டு—அல்லற்பட்டு வாழ விரும்பவில்லை வடநாட்டு இந்தி வெறியர்களின் ஏகாதிபத்தியப் போக்கும், தென்னகத்தை சுரண்டிக் கொழுக்கும் பேராசையும் பார்த்தோம்—பார்க்கிறோமே!

* * *

"புதிய மாநில அமைப்பிலே, தமிழ் நாட்டின் வடக்கெல்லையான சித்தூர், திருத்தணி பகுதிகள் தமிழ்நாட்டோடு இணைக்கப்பட வேண்டும்" என்று கோரிற்று, தமிழரசுக் கழகம். அந்தக் கோரிக்கையை முன்வைத்து, தி. மு. க. வின் துணையோடு திருத்தணியில் எல்லைப் போராட்டமும் நடந்திற்று. "கவனிக்கிறேன்" என்றார் காங்கிரஸ் பிரதமர் ஜவகர்லால் நேரு நம்பினர்; ஒப்பினர்; மகிழ்ந்தார் ம. பொ. சிவஞானம்! ஆண்டுகள் உருண்டன. கோரிக்கையும், ஒப்புதலும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி, இப்போது கட்டெறும்பும் சிற்றெறும்பாகி விட்டது!

6-10-56-ல், சேலம் போஸ் மைதானக் கூட்டத்தில் பேசுகையில் தோழர், ம. பொ. சி. கூறினர்: "காமராஜரே! நேருவிடம்கேட்டு நீதி பெற்றுத் தர உங்களால் முடியாவிட்டால் பதவியை விட்டு விலகுங்கள். நாங்கள் அந்த டெல்லியைப் பார்த்துக் கொள்கிறோம்" என்று. பின்னர் கூறினர்: "எங்களுடைய நம்பிக்கையைச் சிதறடித்துவிட வேண்டாம். அப்புறம் "இந்தியா வாழ்க!" என்று சொல்வதற்குத் தமிழகத்தில் ஒரு குரல்கூட இருக்காது" என்று. மேலும் கூறினர்: "ஒன்று நமக்கு நீதி கிடைக்க வேண்டும். அல்லது இந்த அரசாங்கம் ஒழிய வேண்டும்" என்று. சென்னை-மத்திய அரசாங்கங்கள் கவனிக்குமா? இல்லை, தூபம் போடுகின்ற துரோகிகளை நம்பிகிளர்ச்சியை புறக்கணித்துப் பேயாட்டம் ஆடுமா?

திராவிட நாட்டுப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட, இந்த தமிழ்நாட்டு எல்லைப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டிய ஒன்றுதான். தமிழனுக்குரிய பூமி தமிழனுக்கே ஆதல் வேண்டும் என்பதில், மாற்றானுக்கு அடிமைப்படாத-எடுப்பார் கைக்குழந்தையாகாத — மானமுள்ள — தமிழன் எவனுக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. குடியரசுநாட்டிலே நியாயமான கிளர்ச்சிசெய்ய எவருக்கும் உரிமையுண்டு. அதற்காகவே பிறந்தார்யாருமில்லை எனவே, எல்லை மீட்புக் கிளர்ச்சிக்குத் தமிழர்கள் ஆதரவு நல்க வேண்டும். மொழிவழியே மாநிலங்கள் பிரிதல் வேண்டும், தமிழ்மொழியே ஆட்சிமொழியாதல் வேண்டும் என்ற உரிமைக்குரல் ஓங்க வேண்டும். உயர வேண்டு தமிழகம்.

—வாலி.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 19-10-56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 16


## மனிதர்கள் இல்லை; மந்திரிகளே உண்டு.

**7—10—56-ம் நாள், சேலம் கல்லாங்குத்து தெருவில் தோழர், ஏ. மாரியப்பன் அவர்கள் தலைமையில் நடந்த தி.மு.க. கூட்டத்தில் தஞ்சை திரு. டி.கே. தாமரைச் செல்வன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்:**

''தேர்தலில் நாம்'' என்பதைப்பற்றி தலைவர் என்னைப் பேசச் சொன்னார். அதைவிட 'தேர்தலில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் நிலை'' என்பதைப் பற்றிப்பேசினால் இன்னும் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறேன். காங்கிரஸ்காரர்கள் இப்பொழுதே தேர்தல் வேலைகளில் இறங்கிவிட்டார்கள். நேரு அகாலிதளத் தலைவருடன் ஒப்பந்தம் செய்துகொள்ள முயலுகிறார். கல்லறைக்குள் மறைந்துபோனவர்களைக்கொண்டுவந்து காட்டி ஓட்டு கேட்கிறது காங்கிரஸ், இதற்கு ஒரு எடுத்துக் காட்டுதான் நாடெங்கும் கொண்டாடப்படும் காந்தி ஜெயந்தி! என்றுமில்லாதபடி இந்த ஆண்டுமட்டும் காந்தி ஜெயந்தியின்மேல் ஏன் இவ்வளவு அக்கரை? காந்திஜெயந்தி கொண்டாடுவதைத் தவறு என்றோ, கொண்டாடக்கூடாது என்றோ நான் சொல்லவில்லை. வீதியிலே அநாதைச் சிறுவன் ஒருவன் இறந்து போய்விட்டால், அந்தப் பிணத்தைப் பார்ப்பவர்கள் எல்லோருமே அனுதாபப் படுவார்கள்; சிலர் அழுவார்கள். ஆனால், ஒருவன் அந்தச் சிறுவனின் பிணத்திற்குப் பக்கத்தில் நின்றுகொண்டு பிச்சை எடுக்க ஆரம்பித்தானானால், அவனைப்பற்றி நாம் என்ன நினைப்போம்? அதைப்போலத்தான் காந்தியாரின் மேல் நமக்குள்ள அனுதாபத்தை வைத்துக்கொண்டு ஓட்டு சேகரிக்க முயலுகிறது காங்கிரஸ்! காந்தியாரை அவமானப் படுத்துகிறார்களே என்று சிலர் கூறலாம். வாணியன் சுத்தமான எண்ணெயைத் தான் வியாபாரியிடம் விற்கிறான். வியாபாரி அதில் கலப்படம் செய்து பொதுமக்களுக்கு விற்பனை செய்யும்போது 'இது கலப்படமான எண்ணெய்' என்று யாராவது கூறினால், ''ஐயோ! வாணியனைக் குறை கூறுகிறீர்களே'' என்று வியாபாரி சொன்னால், அது எவ்வளவு பொருளற்ற பேச்சாகும்? அதுபோல்தான், நாம் காங்கிரசின் ஊழல்களை எடுத்துச் சொல்லும்போது அந்தப் பழியைத் தியாகிகளின் மேல் கொண்டுபோய்ப் போடுகிறார்கள்.

'வெள்ளைக்காரன் பல வரிகள் போட்டு நம்மை வதைக்கிறான். அதனால் அவனை விரட்ட வேண்டும்'' என்று காங்கிரஸ்காரர்கள் அன்று பிரச்சாரம் செய்தார்கள். பொதுமக்கள் முதுகின்மேல் தாங்கமுடியாத வரி மூட்டைகள் சுமத்தப் படுகின்றன என்று 'ஆனந்த விகடன்' 'கார்ட்டூன்' போட்டுக் காட்டியது. 1947-ல் வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போனான். பாரதமாதாவின் அருந்தவப் புதல்வர்கள் ஆட்சி பீடத்திற்கு வந்தனர். சுதந்திரம் வந்து ஒன்பதாண்டு காலம் ஆகிவிட்டது. இவர்கள் எந்த வரி மூட்டையை எடுத்தார்கள்? எப்படி வரிபோடுவது என்பதையே வெள்ளையனுக்கு இவர்கள் கற்றுக்கொடுப்பார்கள் போலிருக்கிறதே! விற்பனைவரி என்ற பெயரில் வாங்குபவர்களுக்கு வரிபோடுகிறார்கள்! சுதந்திரம் வந்தும் ஏன் வரிகளைக்

(10-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டுக் காங்கிரஸ் — இளைஞனுக்கு!

சேலத்தில் மாநாடு என்ற பெயரால் சிறு கூட்டம் ஒன்று நடத்திய தமிழ்நாட்டுக் காங்கிரஸ் இளைஞனே! உனக்கொன்று கூற விரும்புகின்றேன், தமிழகம் உருப்படவேண்டுமானால், தமிழன் சிறிதேனும் சிந்திக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பொறுமையாக சிறிதே நினைக்கக் கற்றால்கூடப் போதும். 'எண்ணுவதால் மூளை கொதிப்பேறி ஏதேனும் கோளாறு நிகழ்ந்துவிட்டால்...!' என்று தயங்க வேண்டாம். அது குழப்பத்தின் விளைவு. நெஞ்சத் தெளிவற்றோர் அஞ்ச வேண்டிய ஒன்று. உன்னை அந்த அளவுக்கு நின் மூத்தோர் ஆளாக்கமாட்டார் என்று நம்புகிறேன். எளிய—ஒன்றும் வரிக்கூட்டலையே நான் போடச் சொல்லுகிறேன். கழித்தல் பெருக்கலுக்குக் கூடப்போக வேண்டாம்.

உன் துணிவையும், நீ நடத்திய மாநாட்டின் வெற்றியையும் குறித்து உன்னைப் பாராட்ட வேண்டும். இது என் நெடுநாள் ஆவல். எனினும் பாராட்டுக்களை வெறுமனே வழங்கிடலாமா? வெறுங்கையோடு தருவது உன்னை அவமதிப்பதாகுமல்லவா? நறுமண மலர்களை தங்கத்தட்டிலே ஏந்தி நின் திருமுன் படைத்து, நின்னைப் பாராட்டத் தொடங்குவதுதானே முறை? அதைப் பிறகு செய்வேன். பாராட்டிற்குரிய காரணங்களைச் சற்று விளக்கமாக மொழிந்திடுதல் என் முதற்பணி. அப்பொழுதுதான் நீயும் அதனை ஏற்கத்தயாராக முடியும். ஆனால், ஒன்று; நான் கூறும் காரணங்களை மட்டும் சற்றுப் பொறுமையாகச் செவிமடுக்க வேண்டும். கன்னியொருத்தியைக் கைப்பிடிக்கப்போகும் களிப்பிலே, கவின்மிகு துளிர்மீசை முகத்தை, நாவிதன் மழிப்பதையும் பொருட்படுத்தாது மகிழ்ந்திருக்கும் காளையரைப் போல, நின் வெற்றிக்களிப்பிலே என் வாய்ச்சொல்லினை சினவாது உளத்துக் கொள்க.

ஒன்றை வரிக்கூட்டல் என்று முதலிலேயே சொன்னேன். அவ்வளவு எளிய ஒன்று. அதுவும் இன்றைக்கு, ஒன்றே ஒன்றுதான். ஒரு கணக்குக்கு மேல் கொடுத்தால் நீ சினுக்குவாய்! "தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநாடு" என்றுதானே பெயரிட்டிருந்தாய்? இது நினக்கு அழகா? அடுக்குமா? காங்கிரஸ் வருகிற தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதே உன் குறிக்கோள். காங்கிரஸின் பிரசாரத்திற்காகச் சிட்டாகப் பறந்து பணிபுரிய உனக்குப் போதிய இறக்கைகளை நல்கியிருக்கிறார் மகான் காமராசர். சேலத்தில் நடந்த மாநாடு காங்கிரஸ் இளைஞர் பிரசாரத் துவக்க விழா என்பதை, உங்கள் தீர்மானமே சொல்லுகிறது. வெளிப்படையாகவே விளம்பியிருப்பதோடு செயலிலும் காட்டத் தொடங்கி விட்டீர்கள் என்பதை, நீங்கள் பத்திரிகை ஆரம்பித்தது கொண்டு துணிய முடிகிறது. உடல், பொருள், ஆவி அனைத்தும் இனி உனக்குக் காங்கிரஸ்தான். 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நின்றிருக்கும்' காளைமாடன்றி பிறவற்றைக் காணப் பொருய் இனிமேல்! உன்னை சரியாகப் புரிந்து கொள்ளுகிறவர்கள் இனிமேல்தான் இந்த நாட்டில் பிறக்கவேண்டும்! ஏட்டைத் திருப்பும் காதலன் எழுத்தைக் காணாது, தன் உள்ளத்தைக் கவ்விச்சென்ற செவ்விதழாளைக் காணுவதுபோல் காதலுணர்வு சித்திரிக்கப் படுவதுண்டு கதையில். அது புனைந்துரை— உணர்ச்சியைத் தூண்ட ஆசிரியன் பூசும் கைவண்ணம். ஆனால் நீ புத்தகத்தைத் திருப்பினால் உண்மையாகவே காளைமாடல்லவோ உன் கண்ணுக்குப் படுகிறதாம்! ஆஹா! என்னே கட்சியுணர்வு! உனது ஆழ்ந்த பற்றினை எங்ஙனம் எடுத்தியம்புவேன்! இப்புன்னுவால் அதனைக் கிளைத்த வல்லமை அல்லோ! எனினும் ஒரு சிறு வார்த்தை— ஒரு சின்ன ஐயம். 'தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநாடு' என்றுதானே பெயர் வைத்திருந்தாய்?

இதேதடா தொல்லை' அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு' என்கிறாயா? அதுதானே எனக்கும் புரியவில்லை. புரியாததனால்தான் உன்னைக் கேட்கிறேன். தமிழ்நாடு என்னும் பெயர்சூடல் தகாது, அடாது, உலகே ஏற்காது என மக்கள் மன்றத்திலே கொக்கரித்த காங்கிரஸ்தானே உனது காங்கிரஸ்? அவர்களை முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்டதால்தானே புத்தகத்தைக் கூட வீசி விட்டுத் தேர்தலுக்குத் தோள் தட்ட வேண்டுமென்று விரும்புகிறாய்? இவ்வளவும் செய்யும் நீ—ஆழ்ந்த கட்சியுணர்வு கொண்ட நீ—காமராஜின் அடியில் அணுவும் பிறழாது செல்லும் நீ—காளையே கண்ணாகக் கொண்ட நீ—நெருங்கிவரும் தேர்தல் வெற்றியே வாழ்வின் குறிக்கோளெனக் கொண்ட நீ—'சென்னை மாநில இளைஞர் மாநாடு' எனப் பெயர்சூட்ட ஏன் தவறி விட்டாய்? இதுதான் எனக்குப் புரியவில்லை. பெயரிலேயே 'பெரிய' காங்கிரசோடு முரண்படுவது மட்டுமல்ல—அவமதிக்கவும் செய்கிறாய், அதனை! தமிழ்நாடு என்ற பெயர் எங்கேயிருந்தது? என மக்கள் மன்றத்திலே கேட்ட நுண் ஆராய்ச்சிப் பேரறிவாளரின் இடைத் தற்சரிய நுண்மாண் நுழைபுலப் பெருமொழியினையும், அதற்கு ஆமாம் போட்ட முதலமைச்சரின் தலையாட்டத்தையும் கொஞ்சமும் மதியாது, அரிய உரையைக் காற்றிலே பறக்கவிட்டு விட்டு, அவர்களின் வெற்றியே எனது குறிக்கோள் என்கிறாய்! தமிழினத்தைக் காக்கத்தான் தமிழினப் பகைவரோடு தொடர்பு கொண்டுள்ளேன் என்று கூறும் பெரியாரைப் புரிந்து கொண்டால்கூட, உன்னைப் புரிந்துகொள்ள முடியாது போலிருக்கிறதே! நீயா அவர்களுக்கு உழைக்கப் போகிறாய்? அவர்களும் அதை நம்புகிறார்களா?

எது வேண்டுமானாலும் செய். ஆனால் நம்பிக்கை மோசம் மட்டும் செய்யாதே அதுவும் ஓர் இளைஞனுக்கு அது அழகல்ல. ஒரு சில இளைஞர் இப்படி அடுத்துக்கெடுக்கவும், நம்பிக்கை மோசம் செய்யவும் கிளம்பியிருப்பது இந்நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமல்ல

(9-ம் பக்கம் பார்க்க)

"இளந்தமிழன்"

## எதிரொலி

இலங்கையில் காதல் கல்யாணங்கள் அதிகரிப்பு.

—செய்தி.

சிங்களமும், தமிழும் சேர்ந்தினிது வாழ்க!

*    *    *

அதிசயம்! கொம்பு முளைத்த கோழி முட்டை.

—செய்தி

ஆறுமுகச்சாமியின் அண்ணன், ஆனைமுகச் சாமியின் மனைவி போட்டிருப்பானோ?

*    *    *

வாழ்க, ஒழிக என்று கோஷம் போடுபவர்கள் தேச பக்தியுடையவர்களல்ல.

—ராஜாஜி.

அவர்கள், இராமன் வாழ்க—இராவணன் ஒழிக; இராமாயணம் வாழ்க—இராவண காவியம் ஒழிக என்று கோஷித்தால்...?

*    *    *

காமராஜருக்குக் கருப்புக்கொடி

—செய்தி

இந்தப் பச்சைக்கு, கருப்பைக் காண்பதென்றால் வெறுப்பாமே!

*    *    *

பாரதத்தின் சீரிய முன்னேற்றத்திற்கு அட்லி பாராட்டு.

—"சுதேசமித்திரன்"

தெருவிலே அம்மணமாய்க் கிடக்கும் மக்களைப் பாராமல், திரௌபதையின் துகிலை துச்சாதனன் உரிவதையும், கிருஷ்ணபகவான் சேலையைத் தருவதையும் பார்த்திருப்பார்!

*    *    *

உண்ணாவிரதி விருதை-சங்கரலிங்கம் தமிழ் நாட்டுக்காக உயிர் விட்டார்.

—செய்தி.

முதல் மந்திரி விருதை—காமராசர் அடிமைப் புத்தியை ஓராணுவும் விடவில்லையே!

*    *    *

நேரு முன்னிலையில் ராவணன் கொடும்பாவி எரிப்பு. ஜனாதிபதியும் கண்டு களித்தார்.

—டெல்லி செய்தி

என் தலைவர் நேருவே என்கிறார் விபீஷண காமராசர். அவருக்குப் பந்தம் பிடிக்கிறாரே இராவணப் பெரியார்.

# ஆய்வுக் குழுவும் மக்கள் ஆர்வமும்.

திருச்சி மாநில மாநாட்டில் மக்களின் விருப்பம் கேட்டு, பல்லாயிரக் கணக்கானவர்களின் பேராதரவோடு—"தி. மு. க. தேர்தலில் ஈடுபட வேண்டும்" என்ற முடிவு செய்யப்பட்டது. இவர்களாவது, தேர்தலில் நிற்பதாவது என்று வெகு அலட்சியமாகப் பேசியவர்களை நாக்குளறவைத்தது அந்த நல்ல முடிவு. மட்டரகம் முதல் மந்திரி வரை நகைமைத் திட்டாத நாளில்லை.

இப்போது, கழகம் பொதுத் தேர்தலில் கலந்து கொள்வது குறித்து, தமிழ்நாட்டின் சூழ்நிலைகளை அறிந்து கொள்வதற்காக தி. மு. க. தேர்தல் ஆய்வுக் குழுவினர் கிளம்பியிருப்பது தானது, அந்த அரசியல் வாணிபர்களுக்கு பீதியையே கிளப்பிவிட்டிருக்கிறது!

தேர்தல் ஆய்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள், இரா. நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத்து, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஆகியோர் அண்ணா அவர்களின் காஞ்சி, செங்கல்பட்டு, வடாற்காடு மாவட்டங்களை முடித்துக்கொண்டு 13-10-56 பிற்பகல் 6 மணிக்கு சேலம் மாவட்டம் கிருஷ்ணகிரிக்கு வந்து சேர்ந்தனர்.

கூட்டுறவுக் காலனியில், தோழர், டி. கிருஷ்ணமூர்த்தி M. L. A. அவர்கள் பங்களாவில் சேலம் மாவட்ட செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், துணைச் செயலாளர் ப. இராமலிங்கம், பொருளாளர் பி. எம். குப்புசாமி, எக். பி. சுப்ரமணியம் M. L. A, ஓமலூர் எஸ். கே. பேபி கந்தசாமி M. P. டி. கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணகிரி நாராயணன் ஆகியோர் குழுவினரை வரவேற்றனர்.

ஆய்வுக் குழுவினர் தனி அறையிலே வீற்றிருந்து தொகுதி வாரியாகப் பிரதிநிதிகளிடம் தனித்தனியாக விசாரித்து விபரம் அறிந்து பதிவு செய்து கொண்டனர்.

மறுநாள் 14-10-56 காலை திட்டப்படி குழுவினர் சேலம் புறப்பட்டனர். 10-30 மணிக்கு சேலம்—அம்மாப்பேட்டை சித்தேஸ்வரா டாக்கீசை வந்தடைந்தனர்.

மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் குழுவை வரவேற்றனர். சேலம் நாட்டாண்மைக் கழக—நகரசபை உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள், சட்டசபை, பார்லிமெண்ட் உறுப்பினர்கள், கல்லூரி மாணவர்கள், மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

தலைவர்கள் வந்தனர், ஆசனத்தே அமர்ந்ததும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் எழுந்து, மொழிவழியே தமிழ்நாடு வேண்டும்; சென்னை மாநிலத்திற்குத் "தமிழ்நாடு" எனப் பெயரிட வேண்டும் என்று கோரி, 77 நாட்களாக உண்ணாவிரதமிருந்த தியாகி, சு. பெ. சங்கரலிங்கம் அவர்கள் உயிர்நீத்த விபரத்தை துயரத்தோடு அறிவித்தார். மிக வருந்திய வண்ணம் அவரைப் பற்றிய விளக்கம் தந்தார். திராவிட முன்னேற்றக் கழகச் சார்பிலும், ஆய்வுக்குழுவின் சார்பிலும் மறைந்த மாவீரர் சங்கரலிங்கனார்க்கு வீரவணக்கமும், அவரது குடும்பத்தினர்க்கு அனுதாபமும் தெரிவித்தார். எல்லோரும் கண்கலங்கி இரண்டு நிமிடம் எழுந்து நின்று, செத்தொழிந்த செந்தமிழனுக்கு வீரவணக்கம் செலுத்திய காட்சி, ஆத்திரமும், அவலமும் பொங்க வைப்பதாகவும், வருகிற பொதுத் தேர்தலில், அந்த மாவீரனை மாளவிட்ட மதோன் மத்தர்களுக்குப் படிப்பினை கற்பிக்க வேண்டும் என்ற நெஞ்சுறுதியை நல்குவதாகவும் இருந்தது.

பின்னர் ஆய்வுக் குழுவினரின் பணி தொடங்கிற்று. தனி இடத்திலே அமர்ந்து விசாரணையைத் துவக்கினர். சுமார் 500 தோழர்கள் நுழைவுச் சீட்டுப் பெற்று, தனித்தனியாகவும், குழுக்களாகவும் சென்று, தத்தம் தொகுதி நிலைகளையும், அபேட்சகர்களையும், அறிவித்தனர். இந்த நிகழ்ச்சியினைப் பார்க்க பலதரப்பட்ட தோழர்கள் ஆங்காங்கு ஆர்வத்தோடு கூடியிருந்தனர்.

மாலை 6-மணிக்கு ஆய்வுக்குழுவின் பணிமுடிந்தது. விசாரணை மிக திருப்திகரமாகவும், நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டுவதாகவும் இருந்ததென்று, தோழர், இரா. நெடுஞ்செழியன் நமது ஆசிரியரிடம் கூறினார். பிறகு அனைவர்க்கும் நன்றி கூறிவிட்டு, ஆய்வுக் குழுவினர் ஈரோட்டைநோக்கிப் புறப்பட்டனர்.

ஆய்வுக் குழுவின் வருகையும், விசாரணையும், நடைமுறையும், பொதுமக்கள் காட்டிவரும் ஆர்வமும், ஆதரவும், காங்கரஸ் வட்டாரங்களைக் கலங்க வைத்திருக்கிறது! எங்கணும் ஆய்வுக் குழு வந்து சென்ற பேச்சும், பரபரப்பும் எதிரொலிக்கின்றன.

கோவை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களிலே இதைக் காட்டிலும் அதிக உற்சாகம் இருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

—வாலி.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 19—10—56 | இதழ் 15

## அட்லியின் அறிவுரை.

பார்லிமெண்டரி வேலை ஒழுங்காக நடைபெற பலமானதொரு எதிர்க்கட்சியும் எதிர்க்கட்சித் தலைவரும் தேவை. பிரிட்டிஷ் பார்லிமெண்டில், மற்றவர்களைக் காட்டிலும் நான்தான் நீண்டகாலம் எதிர்க்கட்சித் தலைவனாக இருந்திருக்கிறேன். மூர்த்தண்யமான கேள்விகள் மூலம் சிறந்த விஷயங்கள் வெளிப்பட்டுள்ளதை எனது அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

பிரிட்டனின் முன்னாள் பிரதமரும், தொழிற் கட்சிப் பிரமுகருமான திரு. அட்லி பிரபு சென்னை வரவேற்பு உபசாரக் கூட்டத்தில் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார். ஏகக் கட்சி வெறியிலே தோய்ந்து கிடக்கும் காங்கிரஸ்காரர்களின், எதேச்சாதிகார மயக்கத்தைத் தெளிய வைக்கும் மாமருந்து, இது.

இந்திய துணைக்கண்டம் சுதந்திரம் பெறுவதற்குத் துணைபுரிந்தவர்களிலே முதன்மையாளர்—சிறந்த அரசியல்வாதி—பாராளுமன்ற நடைமுறை தேர்ந்தவர் என்று காங்கிரஸ்காரர்களாலேயே போற்றப்படுகின்றவர் அட்லிபிரபு. எனவே, அவரது அறிவுரையை ஆகாதது, இந்திய மண்ணில் விலைபோகாதது என்று வீசியெறிந்துவிட மாட்டார்கள்; அவர்கள் விவேகிகளாக இருந்தால்!

"இன்னும் மூப்பதாண்டுகள் காங்கிரஸ் கட்சிதான் நாடாள வேண்டும்" என்ற பேராசையோடு நடமாடும் காங்கிரஸ் பெருந்தலைவர்களுக்கு — சனநாயகம் — குடியரசு— பார்லிமெண்டரி முறை என்பதையெல்லாம் மறந்துவிட்ட சர்வாதிகாரப் பித்தர்களுக்கு — அட்லியின் அறிவுரை கசப்பு மருந்து பாவம்; தேர்தல் வருகிற நேரத்தில் இவர் ஏன் வந்தார், இப்படி ஏன் பேசினார் என்றுகூட எண்ணுவார்கள்!

காங்கிரஸ், ஆட்சிபீடத்தைவிட்டுவிட வேண்டும் என்று அவர் கூறிடவில்லை. அவர் அவர்களுக்கும் வேண்டியவர்தான். என்றாலும் ஆட்சி ஒழுங்காக—திறமையாக— நடைபெற எதிர்க்கட்சி வேண்டும் என்கிறாரே, எப்படிச் சகிக்க முடியும்? எதிர்க்கட்சிகளை வளரவிட்டால் தகுதியற்ற சர்க்கார் தலைகுப்புறக் கவிழ்ந்துவிடாதா? எனவேதான் கலக்கம்.

"சுயராச்சியம் வாங்கினோம், ஆகவே சுரண்டுகிறோம்" என்ற முறையிலே குறுக்கு வழியில் கொழுக்கின்ற கதர்ச்சட்டைகளுக்கு; நாட்டிலே நடப்பது குடியரசுதான், ஆளும் உரிமை அனைவர்க்கும் உண்டுதான், அக்ரமம் செய்தால் கண்டிக்க எதிர்க்கட்சி தேவைதான் என்றகருத்தோட்டம்—குடியரசுப் பண்பு—முளையிலேயே கருகிவிட்டதே; பதவி போய்விடுமே என்ற அச்சமன்றோ அவர்களைப் பேயாட்டம் போடச் செய்கிறது! மாற்றுக் கட்சியினைத் தாக்கி அழிக்க முயலுவதும், பேசப்படுத்துவதும், பிரியம் காட்டி பிடித்திழுப்பதும், குறைகளைக்கூறினால் கோபித்துச் சீறுவதும், அடக்குமுறையை ஏவுவதும், தங்களைத் தவிர மற்றவர்க்குத் தகுதியில்லையென்று தம்பட்டமடிக்கப் பிரசாரத் திட்டமிட்டு, பொதுமக்களின் வரிப் பணத்தைப் பாழாக்குவதுமான சனநாய விரோத வேலைகளிலே முனைந்து நிற்கிறது அந்த முதுபெருங் கட்சி! இந்திய துணைக்கண்டத்தின் அரசியல் பொதுநலத்தையும், பார்லிமெண்டரி முறையையும் பாதுகாக்க, அட்லி பிரபுவின் அறிவுரைக்குப்பிறகேனும் அவர்கள் முன்வருவார்களா?


## திருமண அழைப்பு.

பேரன்புடையீர்! வணக்கம்.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, 1899, ஐப்பசித் திங்கள் 10-ம் நாள் (26-10-56) வெள்ளியன்று காலை 9-மணியளவில் திருவிழிமழலை மணமகள் இல்லத்தில் திருவாளர், எஸ். கல்யாணசுந்தரம் அவர்களது

திருநிறைச் செல்வி: பரமேஸ்வரியை

அறிஞர் அண்ணா அவர்கள்

தலைமையில், எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளவிருக்கிறேன். இதனையே அழைப்பாகக்கொண்டு, அதுபோது தாங்கள் வந்திருந்து மணவிழாவினைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அன்பன்,
சேலம். வி. சிவப்பிரகாசம்.




[முன் இதழ் தொடர்ச்சி]

நிருப:- அதுதான் சித்தப்பா முக்கியம். பற்று, பாசம், பக்தி எல்லாவற்றிற்கும் அடிப்படையே இந்த அன்புதான். அதனால்தான் அன்பே சிவம் என்று கூடச் சொன்னார்கள். புரிந்ததா சித்தப்பா?

நந்தி:- (சிரித்து) சங்கா! செல்வன் கெட்டிக்காரன்! வாதத்தில் சந்திரவர்மனையே மடக்குகிறனே!

சங்கா:- கற்குமிடம் நமது காஞ்சிக் கல்லூரியாயிற்றே!

நிருப:- சித்தப்பாவும் அங்குதானே படித்தார்! ஊரெல்லாம் சுற்றினார். கற்றதை மறந்து, கண்டதை நுகர்ந்தார். இப்போது அறிவை மறந்து, அன்பே வேண்டாமென்று வாதம் புரியவும் துணிந்துவிட்டார்.

சங்கா:- (சினந்து) நிருபதுங்கா! நாவடக்கிப் பேசு. யாரிடம் எதை, எப்படிப் பேசுவது என்ற வரம்பு வேண்டாமா? இதுவா படிப்பினுடைய பண்பு?

சந்தி:- மண்ணின் சாரம் மரத்தில், மரத்தின் சாரம் பழத்தில்! உன்னைச் சொல்லி என்னடா செய்வது? தந்தை சைவ மதம், தாய் சமண மதம், உனக்கு வாய் மதம்!

நிருப:- (மண்டியிட்டு வணங்கி) மன்னியுங்கள் சித்தப்பா! சிறுபிள்ளைத்தனமாகப் பேசிவிட்டேன். மன்னித்து விடுங்கள்.

சந்தி:- (சினந்து) பேசு! பேசடா பேசு! பெற்றோரும் மகிழ்வார்கள். பெருமையும் கொள்வார்கள். சின்னப் புத்தியின் பயன், பின்னாலல்லவோ தெரியும்! அண்ணா! .......

நந்தி:- தம்பி! பயமறியாத இளங்கன்று. நிருபதுங்கன் சிறுவன்.

சந்தி:- இன்று சிறுவன்; நாளை? பக்தியைத் தாழ்வு படுத்தும் இவனது மனப்பான்மை, பக்தியின் அடிப்படையிலே மகத்தான கலைகளை வளர்த்த நமது பல்லவ மன்னர் பரம்பரைக்கே இழுக்கு! அண்ணா! இவர்கள் எண்ணத்திலே நமது முன்னோர்கள் அறிவிலிகள்; மூடர்கள்! பேசுகிறார்கள். நீங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். என்னால் முடியாது. சே! அவமானம் அவமானம்!

(வெடுக்கென்று திரும்பி வேகமாகப் போகிறான்)

நந்தி:- தம்பி! சந்திரவர்மா! தம்பி! (வருந்தி) என்ன பொல்லாங்கு! போய்விட்டானே!

சங்கா:- (அஞ்சி) நாதா! மன்னிக்க வேண்டும். எதிர்பாராத சம்பவம். விவாதத்திலே........

நந்தி:- (சினந்து) அகம்பாவம் அரசோச்சியது. பரிகாசம் துள்ளிவிட்டது. மமதையும் செருக்கும் என் மனதைக் குத்திக் குடைந்தன! சங்கா! என் வேதனையை விரிவாக்க வேண்டாம். பேசாதே! போ!.... போ!

(வெறுப்போடு முகம் திருப்பிக் கொள்கிறான் மன்னன்)

## காட்சி 6.

(வித்யாவதி வீடு. மைத்ரேயனும், சேனாபதி விக்ரமகேசரியும் இருக்கின்றனர்)

மைத்:- சேனாபதியாரே! சந்தேகமே வேண்டாம். எம்மோடு ஒத்துழைத்தால் எல்லா சுக போகங்களையும் ஏற்றவகையில் பெறுவீர்.

விக்ர:- பாலை வெறுக்கும் பூனையேது சுவாமி? என்றாலும், மன்னருக்கு துரோகம் செய்வதா?

மைத்:- மனம்போல் வாழ்வுபெற சுருக்கமான வழி. திட்டம் வென்றால் திகட்டாத பேரின்பம்! பட்டம் பதவிகள்! பகட்டான யோகம்!

ப. கண்ணன்

விக்ர:- தோற்றுலோ?

மைத்:- தோஷம் வராது. வெளிப்படையாகவா இருக்கும் நமது வேலைகள்?

(ஆத்திரத்தோடு வருகிருன் சந்திரவர்மன்)

சந்தி:- மைத்ரேயரே! மானம், என் மானமே போய்விட்டது! (சேனபதியைப் பார்த்து) ஓ! சேனபதியாரா? வாரும், வணக்கம்.

விக்ர:- வணக்கம்.

சந்தி:- வந்து நெடுநேரமாயிற்ருே?

விக்ர:- ஐந்து நாழிகை இருக்கும். சந்திர வர்மரே! மன்னரைக் குறித்து ஓவியர் சொன்னதெல்லாம்.......

சந்தி:- நானே சொன்னது போல். எனக்கு உமது பேருதவி தேவை. கிடைக்குமென்று நம்பலாமோ?

விக்ர:- உம்.... எனது நலம் கவனிக்கப் படுமல்லவா?

சந்தி:- தாராளமாக.

மைத்:- சபாஷ்! இதுதான் புத்திசாலித் தனம். சந்திரவர்மரே! உமது மானம்போயிற்று என்றீரே! எங்கே? எப்போது? எப்படிப் போயிற்று?

சந்தி:- அரண்மனையில் அரசியாரிடம் விவாதம். பக்தி பெரிதென்றேன் நான். அன்பே பெரிதென்று நமது சைவ சமயத்தையே அவமதித்துவிட்டாள் அந்த அமோகவர்சன் மகள்.

விக்ர:- சமணச் சாக்கடையிலே பக்தி மணமா வீசும்?

சந்தி:- துர்நாற்றம்! துர்நாற்றம்! அந்த சாக்கடைப் புழு—பொடிப் பயல் நிருபதுங்கன் புண்படுத்தினுன் எனது உள்ளத்தை.

மைத்:- மமதை கொண்டவர்கள் எதுவும் செய்வார்கள்.

விக்ர:- சந்திரவர்மரே! சமண மதத்தவளான சங்காதேவியை மன்னவர் மணந்ததே தவறு. பட்டத்து ராணியாக்கியது மாபெருந் தவறு. சைவம் கொலுவிருக்கவேண்டிய அரியாசனத்தில், சமணத்தைப் பார்க்குந் தோறும் பதைக்கின்றது என் மனம்!

சந்தி:- நெருப்பாக எரிகின்றது என் நெஞ்சம்!

மைத்:- கவலை வேண்டாம். எண்ணெயும், செத்தையுமாக நாங்கள் இருக்கிறேமே சித்தமாக!

சந்தி:- மூட்டுவோம் தீயை. எரிப்போம் எண்ணத்தில் மாறுபட்டோரை. செங்கோலைக் கவர்ந்துகொண்டு தேசத்தைவிட்டே ஓட்டுவோம் மன்னனை.

மைத்:- சபாஷ்! சபாஷ்! சந்திரவர்மா! பிறந்து விட்டது நல்ல காலம்! (சிரிப்பு)

## காட்சி 7.

(சிவன் கோவில். கபாலிகர்—சக்திமுனையர், பிராகார ஒதுக்குப் புறத்தில் தியானத்தில் அமர்ந்திருக்கிருர். பச்சை, கணிகை முல்லையைத் துரத்த இருவரும் ஓடிவருகின்றனர்)

பச்சை:- (நின்று) முல்லே! முல்லே! என் சொல்லைக் கேக்க மாட்டியா? கேக்கமாட்டியா?

முல்லை:- முடியாது. என்னைத் தொட்டியா பல்லைத் தட்டிடுவேன். ஏய்யா! என்னை என்னுன்னு நெனச்சுகிட்டே?

பச்சை:- கோயில் தாசின்னுதான்.

முல்லை:- கோயிலுக்குத்தானே! ஒனக் கில்லியே?

பச்சை:- முல்லை! நாந்தான் பணம் குடுக்கிறேன்னு சொன்னேனே. நம்பிக்கையில்லியா?

முல்லை:- நம்பிக்கையும் மொகரக்கட்டையும்! இப்படிச் சொல்லி எத்தனை தடவை என்னை ஏமாத்தியிருக்கே?

பச்சை:- தோ பாரு முல்லை! போனதெல்லாம் மறந்திடு. சந்திரவர்மன் நாளைக்கு எனக்கு ரெண்டு பொன் தர்றதாகச் சொல்லியிருக்கார். வாங்கினதும் அப்படியே மொன்னை மூறியாமெ ஒங்கிட்டே குடுத்திடறேன். அப்பறம் நிரந்தரமா நீ காதலி! நான் காதலன்! வித்யாவதியும் சந்திரவர்மனும்போல, எப்படி?

முல்லை:- பச்சை! எதா இருந்தாலும் வீட்டுக்கு வா, பேசிக்கலாம். கோயில்லே வந்து அப்படி இப்படீன்னு தொரத்தறதை, நிர்வாகி சக்திமுனையர் பாத்திட்டா என்ன ஆகுந் தெரியுமா?

பச்சை:- என்ன ஆயிடுமாம்? அதெல்லாம் இவருகிட்டே நடக்காது. நான் செய்யறது தவறுன்னு; தோ அந்தக் கோபுரத்திலே ஒரு முனிவரும், தாசியும் சல்லாபிக்கிறமாதிரி பொம்மை இருக்கே! இருக்கலாமா கோயில்லே? தப்புதானே?

(வளரும்)

## மாண்ட தமிழனின் பத்து கோரிக்கைகள்.

**கராச்சி காங்கிரஸ் தீர்மானத்தை காங்கிரஸ் சர்க்கார் காற்றில் பறக்க விட்டுவிட்டது!**


1. மொழிவழிராஜ்யம் ஏற்படுத்த, 2 சென்னை மகாணத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிட, 3 விவசாயிகளுக்கு 100-ல் 60 வாரம் சட்டத்தை உடனடியாக அமுல் நடத்த, 4. கவர்னர், மந்திகள் டம்பச் செலவை வக்குறைக்க, 5. மாணவர்களுக்கு தொழில் கல்வி புகட்ட, 6. ராணுவச் செலவைக் குறைக்க, 7. வேலையில் லாத்திண்டாட்டத்தைப் போக்க, 8. கைத்தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க, 9 இந்தியா பூராவும் மது விலக்கு அமுல் நடதத, 10. மக்களுக்குக் குடியிருப்பு வசதி செய்ய

மேற்கண்ட கோரிக்கைகளை சர்க்கார் நிறைவேற்றுதலைக் கண்டித்து சாகும்வரை உண்ணு விரதமிருக்கத் தீர்மானித்துள்ளேன். பொதுமக்கள் ஆதரவு தர வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
க. பெ. சங்கரலிங்க(நாடார்)

*இந்தக் கோரிக்கைகளை போர்டில் எழுதிவைத்து அறிவித்துக்கொண்டு, 27-7-56-ல் உண்ணு நோன்பைத் துவக்கினர் விருதை பொதுவுடைமைத் தோழர்கள் பணிவிடை செய்து வந்தனர். பலவீனப்பட்ட நிலையில் தலைவர்கள் அண்ணு, சிவஞானம், கரையாளர், தங்கமணி, இராமமூர்த்தி ஆகியோர் சென்று பார்த்தனர். நிலை மோசமாகவே 75 வது நாள் 10-10-56-ல் எடுக்கப்பட்டு மதுரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் சிகிச்சை யளித்தனர் 78-வது நாள்–13–10–56-ல் மரணமடைந்தான் அந்த மாவீரன்!*

*காங்கிரஸ் போக்கினைக் கண்டித்து உண்ணு நோன்பை மேற்கொண்ட இந்தக் காங்கிரஸ் தமிழனின் அநியாய மரணம், தமிழ் நாட்டுக்கு அறிவிக்கும் செய்தியென்ன?*




## குலதெய்வம்.

*சாகப்போகும் தந்தை மூத்த மகனை அழைத்து "எவ்வளவு கஷ்டப்பட்டாவது உன் தம்பிகளைப் படிக்கவைத்து நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும்" என்று சொல்லி உறுதி வாங்கிக் கொண்டு கண்ணை மூடுகிறார்.*

*சாதாரண நிலையில் இருந்த குடும்பத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவந்து குடும்பம் ஒன்ருய் இருக்கப் பாடுபட்டு அதற்காகவே உயிர்விடுகிறுர் அந்த அண்ணன். இப்படி ஒரு மராத்திய குடும்பக் கதை. நல்ல கதை.*

*முத்தையா கொடுத்த வாக்குறுதிப் படி தம்பிகளைப் படிக்கவைத்து குடும்பத்தை மேநிலைக்குக் கொண்டு வருகிருன். தம்பிகளுக்கு வரும் மனைவிமார்களினுல் குடும்பத்தில் புயல் வீசத் தலைப்படுகிறது. கலைந்தகுடும்பம் இறுதியில் அதன் விளக்கான முத்தையன் உயிரைவாங்கிவிட்டு ஒன்று சேர்கிறது. இடையிலே பல மனமுருக்கும் நிகழ்ச்சிகள் பளிச்சிடுகின்றன. எனினும், சம்பவங்கள் அதிகம். இடையிலே சலிப்புத் தட்டுகிறது. அதையெல்லாம் சமாளித்து விடுகின்றன முரசொலி மாறனின் முத்தமிழ்ச் சுவைத்ததும்பும் வசனங்கள்! தோழர் மாறனின் முதல் முயற்சி, நல்ல வெற்றியைக் கொடுத்திருக்கிறது, வாழ்த்துகிறேம்.*

*முத்தையாவாக சகஸ்ரநாமம் உணர்ச்சியுடன் நடித்திருக்கிறுர். மனையாக நடிக்கும் பண்டரிபாய் சிறந்த நடிகை என்பதைக் காட்டியிருக்கிறுர்.*

*நடிகமணி எஸ். எஸ் இராசேந்திரன் நடிப்பு மற்ற படங்களைக் காட்டிலும் புதிய பாணியில் அமைந்து, நன்கு சோபிக்கிறது மக்களின் பாராட்டுதலைப் பெருகிருர். அண்ணவுக்கு அடங்கி நடக்கும்போதும், மனைவியிடம் வெறுப்பு ஏற்பட்டு குடிப்பழக்கத்தை மேற்கொள்ளும் போதும், குடிவெறியில் தன் அண்ணியின் முன் தலைகுனியும்போதும் நடிப்பு அபாரம். வசனம் பேசுவதிலே மட்டுமல்ல, நடிப்பிலும் இராசேந்திரன் வல்லவர் என்பதை குலதெய்வத்தில் நிரூபித்துவிட்டார்!*

*வக்கீலாக நடிக்கும் முஸ்தபா சுமார். புதுமுகம் இராசகோபால் தேவலாம். எம். என். ராஜம் தன் வகையில் போற்றும் படியாக நடித்திருக்கிருர். புது நடிகை விஜயகுமாரிக்கு நல்ல எதிர்காலம் இருக்கும். மைனவதியின் துடுக்கான நடிப்பு மிக நன்று. குறும்புத்தனமும், பிறகு விதவைக் கோலத்தில் குமையும் சோகமும் நடிப்பில் நல்ல மாற்றத்தைக் காட்டுகின்றன. சந்திரபாபுவும், கருணாநிதியும் பாதர் வெள்ளை தெருக்கூத்து நடத்துகின்றனர் கொட்டகையே சிரிப்பால் அதிருகின்றது. என்றாலும் படக்கதையின் ஓட்டத்தைத் தேக்குகின்றது.*

*பாடல்கள் தேவலாம். புரட்சிக்கவி பாரதிதாசனின் "கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே" என்ற பாட்டினை சிதம்பரம் ஜெயராமன் வெகு இனிமையாகப் பாடிருக்கிருர். கருத்தறிந்து ரசிக்கிறேம்.*



மாடர்ன் தியேட்டர்ஸ் "பாசவலை"யில் எம். கே. ராதாவும், ஜி. வரலட்சுமியும்.

*டைரெக்டர்கள் கிருஷ்ணன் பஞ்சு திறமையாக படத்தை டைரக்ட் செய்துள்ளார்கள் ஒளி, ஒலிப் பதிவுகளில் குறையில்லை. தமிழ்ப்பண்புக்கு மாருன சில நிகழ்ச்சிகள் இருப்பினும், வெற்றியடைந்த குடும்ப—சமூகப் படங்களின் வரிசையிலே குலதெய்வத்தையும் வைக்கலாம்.*

**—வே. அ. வடிவேலு.**

## வாய்வு சூரணம்.

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு. பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்ததூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினுல் தயாரிக்கப் பெற்றது (பத்தியமில்லை)

**5-பலம் டின் ரூ 3—0—0**

சம்பு இண்டஸ்ட்ரீஸ்,
சேலம்–2.

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● துரை-முருகேசன்,
பசுபதியப்பா உ. ஆ. பள்ளி,
காரமடை,
கோயமுத்தூர் DT

● துரை-முருகேசன், காரமடை.

கே: பாரத அரசாங்கம் வெளியிடும் தபால் தலைகளில் வடநாட்டுத் தலைவர்களின் படங்களே காணப்படுகின்றனவே; அவற்றில் வள்ளுவர், ஒளவையார், திரு. வி. க., மறைமலையடிகள் போன்றோரைக் காண்பது எப்போது?

ப: அந்த பாரதக்காரரிடமிருந்து திராவிடம் விடுதலை பெற்று, இங்கே சுதந்திரக் குடியரசு நடத்தும்போதுதான் நாம் காணமுடியும்.

* * *

கே: ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்கிறார்கள். ஆலயம் அமைத்த தொழிலாளி கோவிலுக்குள் நுழைந்தால் திட்டென்று கும்பாபிஷேகம் செய்வது ஏன்?

ப: கரையான்கள் புத்தெடுக்கும், கருநாகம் குடியேறுமாம்! அந்தப் புரோகித—பூசாரிப் பாம்புகள் பிழைப்புக்குச்செய்துகொண்ட "ஆசார" ஏற்பாடுகளே காரணம்.

வி. ஆர். முத்து, வெள்ளாளப்பட்டி.

கே: பட்டம் பதவிகளை மதிக்காமல் நேர்மையாக வாழும் பிரமுகர்கள் யார்?

ப: கொல்லர், தச்சர், கொத்தர், உழவர், நெசவர் போன்ற உழைக்கும் தொழிலாளிகள் தாம்!

* * *

கே: வீண் சச்சரவுகளை விளம்பரப்படுத்தாமல், கருத்துக்கு மட்டும் மதிப்பளிக்கும் பத்திராதிபர் யார்?

ப: அந்த அப்பிராணியைக் கண்டுபிடிக்கவே முடியாதே; விளம்பரமற்று எங்கோ மூலையிலே ஒதுங்கிக் கிடப்பார்!

டி. இராமலிங்கம், திருவண்ணாமலை.

கே: புதுடெல்லி ராமலீலா உற்சவம் நடத்த—ராவணன் கொடும்பாவி கொளுத்த—குடியரசுத் தலைவர் தலைமை தாங்குகிறாரே; இங்கே ராமன் படம் கொளுத்த பச்சைத்தமிழர் வருவாரா?

ப:- நிச்சயமாக வரமாட்டார், வந்துவிட்டால் மந்திரியாக இருக்க மாட்டார், பெரியார் தாங்கினாலும் கவிழ்த்து விடுவார்கள் வடவர்கள்.

* * *

கே: அரசாங்கம் செய்திப் படங்கள் காட்டி தமிழ்நாட்டில் சினிமா மூலம் இந்தியைப் புகுத்துகிறதே; இதைத் தடுக்க தி. மு. க. நடவடிக்கை எடுக்குமா?

ப: எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறோம், பலாத்கார இந்தி ஒழிப்புக்கு தீவிரக் கிளர்ச்சி தொடங்குகையில் இதனையும் பார்ப்போம்!

நா. விசுவநாதன், வேலூர்.

கே: காங்கிரஸ் சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பிரச்சாரம் செய்வதன் நோக்கமென்ன?

ப: செய்த ஊழல்களை—திறனற்ற நிர்வாகத்தை—ஓரவஞ்சனைகளை மறைத்து இன்னொரு முப்பதாண்டுகள் அதிகார பீடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஆசையேதான்!

* * *

கே: சூயஸ் தகராறில் பண்டித நேருவின் பஞ்சசீலம் என்னவாயிற்று?

ப: ஏகாதிபத்திய நாடுகளின் ஏவலாளிபோல் நடந்துகொண்டதைத்தான் லோகியா அம்பலப்படுத்திவிட்டாரே!

## கன்னித்தமிழ்நாடு

பாவலர்—வேலாயுதசாமி.

குடம்போலத் தேனீக்கள்
கூடுகட்டும் காடு
கொண்டலது கண்ணுறங்கும்
கொல்லிமலை நாடு
தடமெல்லாம் இதழ் விரிந்த
தாமரைப் பூக் காடு
சங்குகள் முழங்கும் வயல்
தங்கியநன் னாடு

தாழையிரு கரைகளிலும்
தழைத்தழகு காட்ட
சலசலவென் றோடிவரும்
தண்புனல்நீ ரோடை
வாழை தென்னை கமுகு நன்றாய்
வானுறவே ஓங்கி
வளர்ந்து குலை தள்ளும் நல்ல
வளமிகுந்த நாடு

வழியிலுள்ள பொருளையெல்லாம்
வாரிக்கொண்டு விரையும்
மலையருவி பாய்ந்துதரும்
வண்டல்நில நாடு
உழவைவிட வாழ்வளிக்க
உலகினில்வே றேதும்
உயர்ந்ததொழில் இல்லையென்ற
உண்மைகண்ட நாடு

மன்னவர் மூவர்செங்கோல்
வாய்மைகொண்ட நாடு
வள்ளுவனை, இளங்கோவை
வழங்கிய தென்னாடு
கன்னலும் நெல்லுமெங்கும்
கண்குளிர விளையும்
காவிரிநன் னதிபெருகும்
கன்னித்தமிழ் நாடு.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இளைஞருலகுக்கேபெருத்த அவமானம். கேவலம் 'தமிழ் நாடு' என்ற நறுமண மலரைச்சூடி, காங்கிரஸ் மங்கையின் மேனியை நாற்றப்படுத்தலாமா? அவளே அணிய ஒருப்படாதபோது, வலிந்து நீ அதை அணிவிக்கலாமா? என்னொத்த இள நண்பனே! செய்வன திருந்தச் செய். உடனே பெயரை மாற்றிக்கொண்டு தாய்க் காங்கிரஸ் கொண்ட கொள்கையொடு முரணது பிறழாது அதற்காகப் பாடுபடுகிறேன் என்று சொல்லிக்கொள். அப்பொழுது தான் என்னைப்போன்ற இளைஞர்கள் உன்னை நம்ப முடியும். இன்னும் ஒரே யொரு தொடரோடு இன்றைய உரை யாடலை முடித்துக்கொள்வோம். காங் கிரஸ் ஒரு மருத்துவக் கல்லூரி மாணவி. 'தமிழ் நாடு' என்னும் மணம் மிக்க மலரை அவள் சூடமாட்டாள், சூடக் கூடாது! இனியேனும் உணருவாயா? ØØ

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து-ரு.

அதிகாரம்-க. பாட்டு-ரு

இருள்சேர் இருவினையும்
-சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்பரிந்தார்
-மாட்டு

அறிவுத் தெளிவு பெற்று உலகக் கடமையைச் செய்து வாழ்பவர்களிடம், அறியாமையால் ஏற்படும் தொல்லைகளும், தவறுகளும் ஏற்படாது. அறியாமையுடையவர்தான் தவறு செய்து அதனால் தொல்லைகளும் அனுபவிப்பர்.

விளக்கம்:

''இறைவனாகப் பொருள்'' என்ற பெயருடன் பொருளிலக்கணநூலே உளது, எனவே, இறைவன் என்பது கல்வியை நயங் கருதிக் கூறியதாகும்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி

# ஆண்டதமிழன் ஆளப்படுகிறனே!

சண்டைசெய்து, போர்முனையிலே தமிழனை வெற்றிகண்டார் யாருமில்லை. சாதி, மதம், கடவுள், புராணம் என்ற பெயரால் பல சூழ்ச்சிகள் செய்தே தமிழினத்தை மற்றொரு இனம் அடிமைப் படுத்திவிட்டது.

வருவோரை வாழவைக்கும் தமிழனின் பரந்த நோக்கம், தமிழர்களை அடிமையாக்கப் பகைவர்க்கு உதவி செய்தது. இதுவரை, பரந்த நோக்கத்தை தமிழரின் பகைவர்கள் தமக்குச் சாதகமாகவே பயன் படுத்திக் கொண்டனர். இனி, தமிழனுக்கு அத்தகு பரந்த நோக்கம் தேவையில்லை. உலகம் குறுகிய நோக்கத்தோடே வளர்ந்து வருகிறது. அவ்வுலகத்தோடு ஒட்டி வாழ்ந்தால் தான் தமிழன் வாழமுடியும்.

ஒரு காலத்திலே உலகமெல்லாம் புகழ வாழ்ந்தவன், தமிழன். வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து வான்புகழ் கொண்டவன். இமயத்திலே வெற்றிக்கொடி நாட்டியவன். தமிழனைப் பழித்த வடநாட்டு அரசர்கள் தலையில் கல்லேற்றி வந்து, கண்ணகிக்குக் கோயில் கட்டியவன்! அத்தகு தமிழனின் இன்றைய நிலையென்ன? புகழ் இழந்து, வாழ்வு இழந்து அடிமையாகக் கிடக்கிறன். அன்று இமயத்திலே கொடியேற்றியவன், இன்று இமயத்திலே இருப்பவர்களால் ஆளப் படுகிறன்!

தமிழன் உரிமையை மட்டும் இழக்கவில்லை; வடக்கேயும் தெற்கேயும் அவனது எல்லைகளையும் இழந்துவிட்டான்........

நாடும், மொழியும், இனமும் வாழ்ந்தால்தான் சமயம்வாழும். ஆகவேதான் நாட்டையும், மொழியையும் இனத்தையும் முன்னேற்றுவதையே முதற் பணியாகக்கொண்டுவிட்டேன். சாதிமத பேதமற்ற—சமரச—சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதே எனது லட்சியமாகும்.

—குன்றக்குடியார்,
குழித்தலை தமிழ் ஆட்சிமொழி
மாநாட்டில். 7-10-56.



வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)


கண்டு வருணபேதம் கற்பித்து பார்ப்பனர்க்கு உயர்வளித்துபாட்டாளியைத் தாழ்த்தியதே; தன்னம்பிக்கையைக் கொன்று மக்களை மகேஸ்வரன் பக்தர்களாக்கிப் பாழாக்கி விட்டதே!

குடியரசுத் தலைவர் கூறுவதுபோல்: "இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற சமஸ்கிருத நூல்களும், பல ஐதிக ஆபூஷ்டிக இலக்கியங்களும் வளர்ந்து செல்வாக்குக் கொண்டிருந்ததை மறுக்க முடியாதுதான். ஆனால், அந்தச் செல்வாக்கினாலே திராவிடம் பெற்ற மாபெரும் தீங்கினையும், மானக்கேட்டினையும் யாரால் மறுக்கமுடியும் என்று கேட்கிறோம். ஆரியமொழிக் கலப்பால் திராவிடனுக்கு நேர்ந்த கேடுகளை நினைந்து நினைந்து நெஞ்சங்குமுறி, விரிந்து நின்று மானத்தோடு வாழத்துடிக்கும் நம்மிடம் வடமொழிப் பெருமைகூறி, கலாச்சார ஒற்றுமை காட்டி, பழங்கதை பேசி இணைத்து வைக்க முயலுவது வெறுங் கனவு! வேதனை தரும் முயற்சியாகும்!

சமுதாய அடிமைமுறை வளர்க்க சமஸ்கிருதம், அரசியல் அடிமை முறை வளர்க்க இந்தியா? இதனைப் பகுத்தறிந்து பாராயோ திராவிடனே!

—வாலி.

பகுத்தறிவு.
(வார இதழ்)
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு; முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.




நாடகம்

## காமலீலா.

சேலத்திலே விக்டோரியா கொட்டகையில் கிருஷ்ணலீலா நடக்கிறது! புராண பக்தி நாடகங்களின் மூலம் மடமை வளர்க்கும் பணியை 'மகான்' இராசமாணிக்கம் இப்போதைக்கு விட மாட்டார் என்பதற்கு, இந்த நாடக லீலா விநோதம் ஒரு எடுத்துக்காட்டு!

பகவான் கிருஷ்ணன் செய்த லீலா விநோதங்கள் என்ன சாமான்யமானவைகளா? புராணங்களில் உள்ளபடி பார்ப்போம்.

1. தாய்மாமனைக் கொலை புரிந்தான். 2 வயதில் மூத்தவளான ராதையை மணந்தான். 3. அன்னியர் வீட்டில் வெண்ணெய் திருடினான். 4 கோபிகைப் பெண்களின் சேலைகளைத் திருடி நிர்வாணத்தைக் கண்டு களித்தான். 5 மனைவி மூலம் நரகாசுரனை வதைத்தான். 6. ஜராசந்தன் வேடத்தில் அவன் மனைவி பிருந்தையைப் புணர்ந்தான். 7 முராசுரனையும், அவனது குமாரர்களையும் கொன்று அவர்களின் பெண்களைக் கைப்பற்றினான். 8. பகதத்தனுக்கு அபயந்தந்து, அவனது 11600 ராசகன்னிகைகளுடப் கலவிபுரிந்தான். 9 அர்ச்சுனனுக்கு துர்ப்புத்தி புகட்டி உறவினரைக் கொல்லச் செய்தான். 10 காமம் மிகுந்து பெண்ணாக மாறி சிவனுடன் கூடி ஐயனாரப்பனைப் பெற்றான். 11. சோபை, பிரபை, சாந்தி என்ற கோபியருடன் சுகித்திருப்பதைப் பார்த்த ராதை கோபித்துக்கொள்ள மன்னிப்புக் கோரினான். 12. பால் குடிப்பதிலேயே ஒரு பெண்ணைக் கொலை செய்தான். இதுபோன்ற லீலா விநோதங்கள் இன்னும் எத்தனையோ! எத்தனையோ! எத்தனையோ! அத்தனையிலும் பக்தி மணக்கிறதாம்! தத்துவார்த்தம் ததும்புகிறதாம்! பகவானின் பெருமை மிளிருகின்றதாம்! பாரதப் பண்பாடு ஒளிருகின்றதாமே!

நல்ல கொள்கை, நல்லுணர்ச்சி வளரவேண்டிய நாடக மேடையிலே, இத்தகு அறிவுக்கு ஒவ்வாத அசம்பாவிதக் கருத்துக்களும், தெய்வீக மூலாம் பூசப்பட்ட காமக் களியாடல்களும் நடைபெறலாமா? ஐயோ, நாடகமே! ஐயோ, நவாபே!

அழகுமிக்கதோர் அரண்மனை சமைத்து, அங்கே கழுதையைக் குடியேற்றினால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது; அழகான கலர் விளக்கு, காட்சிகளுக்கிடையே காம வெறி பிடித்த கடவுளின் கதை!

பக்தர் இராசமாணிக்கனார் மறைந்து கிடக்கும் கடவுளரின் காம லீலைகளை மேடையேற்றி, இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம், நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை புரிகின்றாரா, தீமை புரிகின்றாரா என்பதை நல்லவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டாமா?

—இந்திரசித்தன்.

## இரத்ன ஸ்டுடியோஸ்.

எம். ஏ. வி. பிக்சர்ஸ் அதிபர், திரு எம் ஏ வேணு, சேலம் இரத்ன ஸ்டுடியோவை விலைக்கு வாங்கியுள்ளார். படப்பிடிப்புக்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன.

இங்கு "சம்பூர்ண ராமாயணம்"மும், அதற்கு முன்னதாகவே "பாட்டி சொன்ன கதை" என்ற சமூகப் படமும் தயாராகுமென்று தெரிகிறது.

கோவையில் நன்கு நடைபெற்ற "பட்சிராஜா" "சென்ட்ரல்" ஆகிய இருபெரும் ஸ்டுடியோக்களும் மூடப்பட்டுவிட்ட நிலையில், சேலத்தில் பல முறை திறக்கப்பட்டும் மூடிக்கிடந்த ஒரு ஸ்டுடியோ உயிர்பெற்று வேலைசெய்யத் தொடங்குவது, கலையுலகத் தமிழர்களுக்குக் களிப்புத் தரும் செய்தியன்றோ?

சலகண்டபுரம் கடைத்தெரு செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு; சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.


# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 26-10-56. ★ விலை அணு ஒன்று. | இதழ் 17


# சட்டசபை யாருக்குச் சொந்தம்?

பெங்களூரில் டிக்ஸன் என்ற ஒரு சாதாரண வெள்ளைக்காரப் பெண் கொலை செய்யப்பட்டதற்கு, "கொலையாளியை நீங்கள் கண்டுபிடிக்கிறீர்களா? அல்லது ஸ்காட்லாண்டு யார்ட்ஸை அனுப்பவா" என்று இங்கிலாந்து கேட்டது. ஒரு சாதாரண கொலைக்கே இவ்வளவு முயற்சி எடுத்தது இங்கிலாந்து அரசு. வெளிநாடுகளில் ஏராளமான இந்தியர்கள் அடிக்கடி உயிரிழக்கிறார்கள். அதைப்பற்றி இந்திய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது? இங்கிலாந்தில் உள்ளவர்கள் மனிதர்கள்! மானமுள்ளவர்கள்! இங்குள்ளவர்களைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. நிலைமை இப்படியிருந்தும், நேருவின் அந்தஸ்து உயர்ந்திருக்கிறது என்கிறார்கள். நான் கேட்கிறேன். நேருவின் அந்தஸ்து உயர்வதற்காகவா திருப்பூர் குமரன், பகவத்சிங் போன்ற வீரர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தார்கள்? அப்படித்தான் நேருவின் அந்தஸ்து என்ன உயர்ந்து விட்டது? சூயஸில் தகராறு என்றவுடன், ஈடன் பதறித் அடித்து, கப்பலேறி வந்து பம்பாயில் இறங்கி, அங்கிருந்து நேரே டெல்லிக்குச் சென்று, "நேருவே! நேருவே! சூயஸ் பிரச்சினையைத் தீர்க்க ஒரு திட்டம் கொடுங்கள்!" என்று கேட்டாரா? கொரியாவில் போர்மூண்ட பொழுது ஐசன் ஹோவர் ஆகாய விமானத்திலேறி நேருவை நாடிவந்தாரா? இடையாதே! ஒரு உதாரணம் சொல்கிறேன்: சில சமயங்களில் நாம் வீட்டிலிருக்கும் பொழுது கடைக்குப் போய்வர சோம்பேறித்தனமாயிருக்கும். உடனே வீட்டிலுள்ள சிறுவனை அழைத்து, அவன் முதுகில் தட்டிக் கொடுத்து, "தம்பீ! நீ மிகவும் நல்லபையனாயிற்றே! கடைக்குப் போய் வெற்றிலைப் பாக்கு வாங்கி வா" என்று அனுப்பி வைப்போம். இது வீட்டில் நடக்கும்




"ஒரே தாய்க்குப்பிறந்த குழந்தைகள் இத்தனை சாதியாக இருந்தால், அந்தத் தாயைப்பற்றி நாம் என்ன நினைப்பது" என்று வினவுகிறார், நண்பர் தாமரைச்செல்வன். அப் பகுத்தறிவுக் கருத்தினைச் சித்திரிக்கிறது, இப்படம்.

(10-ம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய இந்தியாவாமே!

சேரலாதன்

“வளம் பல இருந்தும் வறுமையால் வாடும் தென்னாடு நலம்பெற வேண்டுமானால், திராவிடநாடு பிரிந்தே ஆகவேண்டும்” என்று நாம் கூறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இந்திய ஐக்கியத்தைக் குலைக்கிறார்களே!” என்ற கூக்குரல் ஒரு மூலையிலிருந்து கிளம்புகிறது.

இந்திய ஐக்கியமாம்! அது சிதைந்து போகக் கூடாதாம்? எது இந்தியா? அது என்று ஐக்கியமாயிருந்தது?

‘இந்தியா’ என்று சொல்லப்படும் இந்நாட்டிற்கு ஒரு நிர்ணயிக்கப்பட்ட எல்லை இருந்ததே கிடையாது. இது வரலாறு படித்தவர்களுக்குத் தெரியும்.

மௌரியர்கள், குப்தர்கள், குஷாணர்கள், முகலாயர்கள் போன்ற ஒவ்வொரு வம்சம் அரசாண்டபொழுதிலும் இந்தியாவின் எல்லை மாறுபட்டே வந்திருக்கிறது. ஒவ்வொரு பேரரசனும் தான் வென்ற பகுதியையே—தனக்குக் கீழ்ப்பட்ட நிலப்பரப்பையே ‘இந்தியா’ என்று அழைத்தான். ‘மௌரியர் காலத்து இந்தியா, முகலாயர் காலத்து இந்தியா, பிரிட்டிஷ் இந்தியா’ என்றுதான் சரிதாசிரியர்களும் எழுதுகின்றனர்.

மேலும், ஒரு வம்சத்தைச் சேர்ந்த அரசர்களே ஒரு நிர்ணயிக்கப்பட்ட நிலப்பரப்பை ஆண்டது கிடையாது. மௌரிய அரசர்களான சந்திரகுப்தன், அசோகன் ஆகியவர்களுடைய நாடும், முகலாய அரசர்களான அக்பர், ஔரங்கசீப் ஆகியவர்களுடைய நாடும் ஒன்றுக்கொன்று எல்லையில் வேறுபட்டே இருந்திருக்கின்றன.

அதாவது, ‘இந்தியா’ என்பது காலத்திற்குக் காலம் ஒவ்வொரு அரசனுடைய வெற்றிக்குத் தகுந்தவாறு மாறி மாறி அமைந்தது. அவ்வப்பொழுது அந்தந்த அரசனுடைய வலிமைக்கேற்ப, வாள்முனையைக் கொண்டு இந்தியாவின் எல்லைக்கோடு கிழிக்கப்பட்டது.

ஆங்கிலேயர் காலத்திலிருந்த இந்தியாவுக்கும், இப்பொழுதிருக்கும் சுதந்திர இந்தியாவுக்குமே வேற்றுமை உண்டு. அன்று பாகிஸ்தானும் சேர்ந்திருந்தது. இன்று அது பிரிந்து போய் விட்டது. இருந்தும், பெயர் மட்டும் ‘இந்தியா’வேதான். இதை ‘வரலாற்று அமைப்பு’ (Historical accident) என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்வர்.

வரலாறு நமக்கு இன்னொரு உண்மையையும்காட்டுகிறது. எந்த சக்திவாய்ந்த பேரரசன் காலத்திலும் திராவிடம் வடநாட்டரசர்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்தது கிடையாது.

அசோகன் கலிங்கத்திற்கு இப்பால் வரவில்லை. அசுவமேத யாகம் செய்த சந்திரகுப்த விக்கிரமாதித்தன் காஞ்சி வரை வந்து போனான் என்பதே சரிதாசிரியர்களுக்கிடையே சர்ச்சையை உண்டு பண்ணியிருக்க, அவனாலும் தென்னகத்தை அடக்கியாள முடியவில்லை என்பது தெளிவாக்கப்பட்டு விட்ட உண்மை. ஹர்ஷன் நர்மதையைக் கடந்து வரமுடியாமல் இரண்டாம் புலிகேசி என்ற மன்னனால் தோற்கடிக்கப்பட்டான். மொகலாயப்பேரரசன் ஔரங்கசீப் தக்கணத்திலேயே தங்கிவிட்டான்.

இந்த இடத்தில் சிலருக்கு ஒரு ஐயம் தோன்றலாம். “தென்னாடு தனித்தேயிருந்தது என்பது சரிதான். அதுவும் சேர, சோழ, பாண்டிய மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுத்தானே இருந்தது” என்று கேட்கலாம்.

ஆனால், நாம் இன்று சொல்லும் திராவிடக் கூட்டாட்சியைப் போலவே அப்பொழுதும் ஒரு கூட்டாட்சி இருந்திருக்கிறது.

“வடக்கிலிருந்து வரும் எதிரிகளைச் சமாளிக்க சேரனும், சோழனும், பாண்டியனும் சேர்ந்து ஒருகூட்டாட்சி அமைத்திருந்தனர்” என்று ‘ஹதிகும்பா கல்வெட்டு’ (Hathigumba Inscription) கூறுகிறது.

இடைக்காலத்தில், ஆங்கிலேயன் என்னும் பொதுவான எதிரியை விரட்டுவதற்காகவே தென்னாட்டினர் வடநாட்டினருடன் ஒத்துழைத்து, பின்பு காங்கிரஸ் இயக்கத்திலேயும் சேர்ந்து பாடுபட்டனர். அப்பொழுதுகூட கட்டபொம்மன் போன்ற வீரர்கள் தென்னாட்டை ஆங்கிலேயன் ஆட்சியிலிருந்து விடுவிக்க தனித்து நின்று போராடியிருக்கின்றனர்.

ஆங்கிலேயன் இந்நாட்டைவிட்டுப் போனபொழுது நாம் விரும்பியிருந்தால் பாகிஸ்தானைப் போலவே திராவிட நாட்டையும் பெற்றிருக்கலாம். ஆனால், வடநாட்டினருடன் சேர்ந்து வாழ்ந்தால் பல நன்மைகள் ஏற்படும் என்று எண்ணி பேசாமலிருந்தோம். இன்று நன்மைகளுக்குப் பதிலாக தீமைகளே பெருகுகின்றன, எனவே திராவிடநாடு கேட்கிறோம். அதனால் இந்தியாவின் ஐக்கியம் ஒன்றும் அழிந்துவிடாது!

ஒரு நாட்டினுடைய இறந்த கால சரித்திரத்திற்கும் நிகழ்கால அரசாங்கத்திற்கும் எப்பொழுதுமே நிறைய தொடர்பு உண்டு.

([illegible]ம் பக்கம் பார்க்க)


## புத்தகங்கள்.

திராவிட இயக்கப் புத்தகங்கள், தென்றல் வெளியீடுகள், திருமணப் பரிசுக்கேற்ற பல வகை நூல்களும் இங்கே கிடைக்கும்.

*

அண்ணா-நெடுஞ்செழியன் இணைந்த படம்.

ஒன்றின் விலை 0—6—0
டசன் விலை 3—0—0

தபாற் செலவு தனி.

பகுத்தறிவு அலுவலகம்,
குமாரசாமிப்பட்டி :: சேலம்-1.

# எதிரொலி

வருகிற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் ஒரு முகமாகக் காமராசரையே ஆதரிக்க வேண்டும்!

—பாரதிதாசன்.

ஏனோ? காங்கிரசில் சேர்த்துக் கொள்வதாகவும், புதுச்சேரியில் மது விலக்கு செய்வதில்லை யென்றும் "அவர்" வாக்களித்திருப்பாரோ?

*　*　*

ஆரியரோடு சம்பந்தம் கொண்ட மலையாளிக்கு நம்மோடு என்ன உறவு?

—பெரியார்.

கன்னடன், தெலுங்கன், மலையாளி, தமிழன் நால்வரும் உறவுகொண்டு வாழ்வதற்கே "திராவிடம்" என்று தி. க. குஞ்சுகள் இனிச்சொல்ல மாட்டா.

*　*　*

தீபாவளி கொண்டாடி அறிவற்ற தன்மையை-மானமற்ற தன்மையை காட்டிக் கொள்ளாதீர்கள்.

—"விடுதலை"

ஆனால், அந்தப்பண்டிகைக்கு அன்மைக் காமராசர் அரசாங்கம் விடுமுறை விடலாமா என்றுமட்டும் கேட்காதீர்கள். அவர் பழுதற்ற பச்சைத்தமிழர்!

*　*　*

அடுத்த ஆண்டு, முதல் நாள் பூராவும் ரேடியோ ஒலிபரப்பப்படும்.

—மந்திரி கேஸ்கர்.

புராணப் பேச்சாளர், எழுத்தாளர், நடிப்போர், கதைப்போருக்கு பூரண வேலையிருக்குமாம்!

*　*　*

ராஜாஜி 'சினிமாக்கட்சி' என்றார். காமராசர் 'நாடகக்கட்சி' என்று சொல்லிவிட்டாரே! அப்புறம் (தி.மு.க. வுக்கு) என்ன யோக்யதை இருக்கிறது?

—பெரியார்.

முன்பெல்லாம் ராஜாஜி சொந்தப் புத்தியோடு பேசுவார். இப்போது, பெரியார் நிலைக்கு இறங்கிவிட்டார் என்று காமராசரே சொல்லிவிட்டாரே. இந்த யோக்யதை எப்படி?

# கலைக்கூடம்

## சம்பூரண ராமாயணம்.

சேலத்தில் விக்டோரியா சென்டரில் நவாப் இராசமாணிக்கம், தனது இறுதி நாடகமாக "சம்பூர்ண ராமாயணம்" நடத்தி வருகிறார். சிறு பையன்களையும், பெண்களையும் வைத்துக்கொண்டு, அவர் ராமதூதனை வேஷமிட்டு,குரங்கு சேட்டைகளைக் குறைவறச் செய்து காட்டுகிறாராம்.

இராவணனை, இந்திரசித்தன், வாலி போன்ற மாவீரர்களை அரக்கரென்றும், குரங்குகள் என்றும் இழிக்கும் கூறும் இராம காதையை உண்மையென்று நம்பவைத்து, தென்னகத்தின் தன்மானத்தைப் பழுதுபடுத்தும் படுபாதகச் செயலுக்குப் பெயர்தான் "சம்பூரண ராமாயணம்"

"பூஜ்யர்" எனப்படும் வினோபா, "இராமாயணம் சம்பூரணமானதல்ல, எப்படியும் மாற்றி எழுதலாம்" என்கிறார்.

பிரதமர் ஜவகரிலால், "இராமாயணம் ஆரிய திராவிடப் போராட்டக் கதை" என்கிறார்.

வடநாட்டு ராமன், தென்னாட்டு வீரர்களை வஞ்சித்து வென்ற கதையை வைத்துக்கொண்டு, ராமலீலா உற்சவம் நடத்துகின்றனர் வடநாட்டுத் தலைநகர் டெல்லியில். இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் பெயரால் கொடும்பாவி செய்து கொளுத்திவிட்டுக் கொளுத்துகிறார் கண்டு பூரித்து பரவசமடைகிறார் பண்டித ஜவகரிலால். ராம லட்சுமண வேஷம் போட்டவர்க்கு ஆலாத்தி சுற்றி கௌரவிக்கிறார், இந்திய ஜனாதிபதி இராசேந்திரர்! "பார் எங்கள் பிரதாபத்தை!" என்பதுபோல் அந்தக் கண்றாவிக் காட்சியைப் படம் போட்டுக் காட்டுகிறது பார்ப்பன இதழ் "சுதேசமித்திரன்!"

"திராவிடனை-ஒரு இனத்தை இழிவு படுத்தும் பண்டிகை நமக்கு வேண்டாம்" என்று மறுக்கும் பெருந்தன்மை, பரந்த மனப்பான்மை பண்டித ஜவகரிலாலுக்குத்தான் இல்லையென்றால், அவருக்கு "ஜே" போட்டு, கதர்க்குல்லாயை மாட்டிக்கொண்டு குதியாட்டக்போடும் தமிழன்-இராசமாணிக்கனுக்காவது இருக்க வேண்டாமா?

"இராவணன் திராவிடன், அதோ எரிகிறான் பார்" என்கிறார் ஜவகரிலால். "என் தலைவரை நம்புகிறவன்—பின்பற்றுகிறவன் நான். அனுமார் திராவிடன்தான். இதோ தாவிக் குதிக்கிறேன் பார்" என்று பல்லிளித்து பாவலா பிடித்துக் காட்டுகிறாரே நவாப், இராசமாணிக்கம்! அந்தோ தமிழா! இப்படியா கவா இருக்கவேண்டும் உனது பக்தியும். பரந்த மனப்பான்மையும்? வெட்கமாக இல்லையா? வேதனைப் படவில்லையா நெஞ்சம்?

நம்மினத்தை இழிவுபடுத்தி, நாசமாக்கும் கதையை நாமே நாடகமாக நடத்தலாமா? கலையின் மூலம் மக்களின் மானத்தை—அறிவைப் பாழாக்கலாமா என்று துளியளவும் சிந்திக்காத சொரணைகெட்ட தமிழன் நடத்துகிறான் "சம்பூரண ராமாயணம்"

தமிழனை— திராவிடனை— ராட்சசர் என்றும், குரங்குகள் என்றும், குடியர் வெறியர் என்று கேவலப்படுத்துகின்ற இந்த நாடகம், எவர் மனதையும் புண்படுத்தவில்லையாம்! தோழர், எம். ஆர். ராதாவின் "தேவாசுரப் போராட்டம்" பக்தர்கள் மனதைப் புண்படுத்துகிறதாம்! "இழிவானது; அநாகரிகமானது; அதனை நடத்தாதே!" என்று கட்டளையிடுகிறது காமராசர்—இல்லை இல்லை; பச்சைத் தமிழர்—அரசாங்கம்!

பகுத்தறிவுக்குச் சிறிதும் ஒவ்வாத, தமிழனை இழித்தும், பழித்தும் தமிழனாலேயே நடிக்கப்பட்டு வருகின்ற "சம்பூரண ராமாயண"த்திற்கு, இந்தப் பச்சைத் தமிழராட்சி என்று தடையுத்தரவு விதிக்கப் போகிறது? குத்தூசியே! குருசாமியே! மெத்தப் படித்தவரே! பெரியார் சிபார்சில்லாமல் பட்டம் பெற்றவரே! கூறவல்லீரோ?

—இந்திரசித்தன்.

### திருச்சி விசுவநாதம்.

கொளும்பு திருக்குறள் மன்ற விழாவில் பங்குபெற, இலங்கையிலிருந்து வந்த அழைப்பை, திருச்சி. கி. ஆ. பெ. விசுவநாதம் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், அடுத்த நவம்பர் மாதம் 2-ம் தேதி காலை இலங்கைக்கு விமானம் வழியே செல்லக் கூடும் என்றும் தெரியவருகிறது. (ந. நி.)

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 26—10—56 | இதழ் 17

மொழிவழியே நாடு வேண்டும், தமிழ் நாட்டுக்குத் "தமிழ் நாடு" என்றே பெயர் வேண்டும் எனக்கோரி, 77 நாட்கள் உண்ணு நோன்பிருந்து உயிர்நீத்த தமிழ் மறவன், வீரத்தியாகி விருதை, சங்கரலிங்கனுர்க்கு 21—10—56-ல் தமிழகத்தின் சகல கட்சியும் அனுதாபம் தெரிவித்தது; அந்த மாவீரர்க்கு எமது அஞ்சலியும் உரித்தாகுக.

## தமிழ்நாட்டு சர்க்கார்.

மொழிவழி நாட்டுப் பிரிவினையின் முழுப் பலனும் தோன்றாத வகையிலே, நமக்கு சுதந்தரமற்ற தமிழ்நாட்டு சர்க்கார் அமைகிறது நவம்பர் முதல் நாளில்!

டெல்லி அரசினரின் விருப்பப்படி செய்யப்பட்ட மாநிலப் புது அமைப்பு அமுலாக்கப்படுகிறது; தமிழர்களின் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாமல் தமிழர்கள் மீது போர்த்தப்படுகிறது, "மதராஸ் ராஜ்யம்" என்ற பெயரோடு!

கன்னட—மலையாள அங்கத்தினர்கள், நமது சட்டசபையினின்றும் விடை பெற்றுக் கொண்டனர். 1956 நவம்பர் முதல், தமிழ் நாட்டிலே பிறந்த, தமிழ்மொழி பேசுகின்ற தமிழர்கள்தான் தமிழ் நாட்டை ஆளப் போகின்றார்கள். தமிழ்நாட்டு சர்க்கார் அமைந்துவிட்டது! ஓரளவுக்கு மகிழ்ச்சியடைகிறோம்; வரவேற்கவும் செய்கிறோம். எனினும்,

தான் பிறந்த தாயகத்திற்கு—செந்தமிழ் நாட்டிற்கு—"தமிழ்நாடு" என்று பெயரிடவே தகுதியும், உரிமையுமற்ற சர்க்கார்—வடவன் காட்டிய விரல் வழியே நடைபயிலும் அடிமை அரசாங்கம், எத்தகு ஆற்றலுடையதாக இருக்க முடியும்? தாழ்ந்து கிடக்கும் தமிழகத்தை எவ்வகையிலே உயர்த்திவிட முடியும்? அத்தகு அதிகாரம் என்ன இருக்கிறது, இதனிடம்? ●

## போற்றுகிறோம்.

உலக வரலாறு கண்டறியாத நிகழ்ச்சியினை—நினைக்க முடியாத அற்புதமொன்றினை நடத்திக் காட்டிவிட்டார், நாகபுரியிலே அறிஞர் அம்பேத்கார்.

"வருணாசிரம இந்துக்களின் வன்மையான சாதித் திமிரையும், கொடுங்கோன்மையினையும் ஒழித்து, தாழ்த்தப்பட்ட மக்கள் மனிதத் தன்மை பெறவேண்டின், நாம் புத்த மதத்தில் சேரவேண்டும்" என்று பல ஆண்டுகளாகக் கூறிவந்தார், இந்திய அரசினரின் முன்னாள் சட்ட மந்திரியான டாக்டர் அம்பேத்கார்.

தான் கூறிவந்ததை உலகம் வியக்கும் வகையில் சென்ற வாரம் செயற்படுத்திக் காட்டினார் அந்தச் செயல் வீரர்!

நாகபுரியில், மதமாற்ற விழாவிலே சுமார் மூன்று லட்சம் மக்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். டாக்டர் அம்பேத்காரும், அவரது மனைவியாரும் இந்து மதத்தினின்றும் விலகி, உறுதிமொழி எடுத்துக்கொண்டு புத்த மதத்தில் சேர்ந்தனர்.

"பிரம்மா, விஷ்ணு, மகேசுவரன், கௌரி, கணபதி மற்றும் இந்துமத தெய்வங்களை இனி நான் கடவுளாகக் கருதமாட்டேன். கடவுள் பிரதிஷ்டையில் எனக்கு நம்பிக்கையில்லை. எந்தவித சடங்கு—சிரார்த்தங்களிலும் நம்பிக்கையில்லை. புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்பதை நான் நம்பவில்லை. அப்படிக் கூறுவது பொய்யானது—போக்கிரித்தனமானது. சடங்குகள் செய்விக்க—மந்திரம் செபிக்க நான் பார்ப்பனர்களை அழைக்க மாட்டேன். தீண்டாமையை கடைப்பிடிக்கமாட்டேன். எல்லா மனிதர்களையும் சமமாகக் கருதுவேன். எனது தினசரி வாழ்க்கையில் பஞ்சசீலக் கொள்கையை கடைப்பிடிப்பேன். புத்தமதம் மட்டுமே உண்மையான மதம் என்று நம்புகிறேன். அதுவே அறிவு—அன்பு—கடமை ஆகிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இன்று முதல் நான், இந்துமதத்தின் எல்லா தொடர்புகளையும் அறுத்துக்கொண்டு புத்தமதத்தைத் தழுவுகிறேன்."

இந்த உறுதிமொழியினை அவர் மராத்திய மொழியில் கூற, இரண்டு லட்சம் பேர் பின்பற்றி உறுதியெடுத்துக்கொண்டு இந்து மதத்தை உதறி எறிந்துவிட்டு, புத்த மதத்தில் இணைந்தனராம்! வியக்கிறோம் நாம்; போற்றுகிறோம் அம்பேத்காரின் துணிவினை.




ப.கண்ணன்

[முன் இதழ் தொடர்ச்சி]

சக்தி:- ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி!

(இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கின்றனர். சக்திமுனையர் நிஷ்டையில் இருக்கிறார் ஒருபுறம்)

முல்லை:- ஐயோ! சக்தி முனையர்.

பச்சை:- ஐயயோ! ஓடியா! ஓடியா!

(அவளை இழுத்துக்கொண்டு ஓட, எதிரே சேனபதி விக்ரமகேசரி வருகிறார்.)

முல்லை:- (அஞ்சி) ஐயோ! சேனபதியார்!

பச்சை:- ஐயயோ! இந்தப் பக்கம், இந்தப் பக்கம் ஓடியா.

(இழுத்துக்கொண்டு வேறுபக்கம் ஓடுகிறாள் பச்சை. விக்ரமகேசரி வருகிறான். நிஷ்டை கலைந்து எழுந்திருக்கிறார் சக்தி முனையர்.)

விக்ரம:- சுவாமி! வணக்கம்.

சக்தி:- ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி! என்னப்பா செய்தி?

விக்ரம:- சுவாமி! ஒரு முக்யமான விஷயம்.

சக்தி:- என்ன?

விக்ரம:- மகாராணி சங்காதேவியார் நமது சைவத்தின் தத்துவத்தை மன்னவர் முன்னாலேயே பழித்துப் பேசினார்களாம்!

சக்தி:- (ஆத்திரமடைந்து) ஆங்! என்ன துணிச்சல்! கண்டிக்கவில்லையா மன்னவர்?

விக்ரம:- வாழ்வில் பங்கு கொண்டவராகிற்றே! கண்டிக்க வலிமையிருக்குமா? சந்திரவர்மன்தான் சரியான சூடு கொடுத்திருக்கிறார். சுவாமி! அரண்மனையிலேயே நமது மதத்திற்கு அவமதிப்பு! எத்தனை நாளைக்குத்தான் அந்த சமணப்பேயை இப்படியேவிட்டிருப்பது?

சக்தி:- (யோசித்து, கைகுவித்து) திரிபுரமெரித்த விரிசடைப் பெருமானே! மாகாள பைரவ காபாலிக மூர்த்தி! உன்னையும் உன் பக்தர்களையும் அவமதிப்பவர்கள் உயிர்மூச்சு விடலாமா இந்த நாட்டில்? கூடாது! கூடாது! விக்ரமகேசரி! மனம் தளராதே! கடமையைச் செய். தக்க சமயத்தில் மகேஸ்வரன் தண்டிப்பார் பகைவர்களை! ஜெய் ஈஸ்வரன்! ஜெய்காளி!

(கோஷமிடுகிறார்.)

## காட்சி 8.

(ஆலோசனை மண்டபம். மன்னன் நந்திவர்மன் சிந்தனையோடு உலாவ, சீலாதித்தனும் விக்ரமகேசரியும் நிற்கின்றனர்.)

நந்தி:- (நிதானமாக) "கப்பம் செலுத்த வேண்டும். இல்லையேல் கடும் போர்க்குச் சித்தமாக வேண்டும்" உம்! (உரக்க) எவ்வளவு மமதையிருக்க வேண்டும் மன்னன் தைலபனுக்கு? வரிப்புலியிடம் நிறைகேட்டதாம் வாலறுந்தநரி. சிரிக்காதா உலகம்? சீலாதித்தரே! குருக்கோட்டை மீது படையெடுத்துச் சென்று சாளுக்கிய தைலபனின் கொட்டத்தை அடக்க வேண்டும்!

சீலாதி:- ஒப்புகிறேன் மன்னவரே! பல்லவ சாம்ராஜ்யத்தைப் பகைத்தோன், அதன் பலனை உணரவேண்டும். சாளுக்கியனை வென்றடக்கி நாம் கப்பம்பெற வேண்டும், ஆனல்........

நந்தி:- என்ன?

சீலாதி:- அவன் நம்மீது படையெடுக்கிறானா இல்லையாவென்பதை, சற்றுப் பொறுத்துப் பார்த்தாலென்ன?

நந்தி:- சீலாதித்தரே! நம்மீது அவன் போர் தொடுக்க நினைத்ததே பெருங்குற்றம். அதற்குத்

தண்டனை, நாம் அவன்மீது படையெடுப்பது தான்.

விக்ரம:- எனது கருத்தும் இதுவேதான்.

சீலா:- நன்று. மன்னவரே! அரசன் தைலபனுக்கு இந்தத்துணிவு எப்படிப் பிறந்த தென்பது எனக்குப் புரியவில்லை. ஏதேனும் தூண்டுதல் இருக்குமோவென்று ஐயப்படுகி றேன்.

நந்தி:- இருக்கலாம். சொல்லுவோர் சொன்னால் கேட்போனுக்கு மதியெங்கே போயிற்று? வேற்று மன்னர்கள் அவனுக்குத் துணையாக வந்தாலும் சரி; வீழ்த்திவிட்டுத்தான் மறுவேலை. சேனபதியாரே! செருமுனைக்குச் சித்தப்படுத்தும் நமது படைகளை.

விக்ரம:- கட்டளை.

(வணங்கிச் செல்கிறான்)

## காட்சி 9.

(அந்தப்புரம். மகாராணி சங்காதேவி பாடிய வண்ணம், மகன் நிருபதுங்கனுக்கு வாட்போர் கற்பிக்கிறாள்.)

(மகாராணியின் வாள் விழுகிறது)

நிருப:- (களித்து) தோல்வி! என்னிடம் தோற்றுவிட்டீர்களம்மா; தோற்றுவிட்டீர்கள்!

சங்கா:- (வாளையெடுத்து) அவசரப்படாதே மகனே! அற்ப மகிழ்ச்சியில் அறிவை இழந்து விடாதே! வெற்றியும் தோல்வியும் இடையி லல்ல, இறுதியிலே தெரிபவை! வீசு கத்தியை.

நிருப:- ஓ! இன்னும் இருக்கிறதா? இதோ, உங்களை வெல்லாமல் விடுவதில்லை. உம்?

(மீண்டும் வாட்போர், மன்னன் நந்திவர்மன் வருகை)

நந்தி:- (மகிழ்ந்து) நன்று! நன்று! பேச்சிலே காரமும், வீச்சிலே வீரமும் மின்னலோடு கின்றன. என் மகன் வீரன்! வீரன்!

(பயிற்சி நிற்கின்றது)

நந்தி:- சங்கா! சகல கலாவல்லியே! புதல்வன் போரில் வல்லவனாவான், இல்லையில்லை, வல்லவனாக்கிடுவாய் நீ!

சங்கா:- நாதா! சிங்கத்தின் குருளை செம் மறியாடாகப் போனதில்லையே!

நந்தி:- அப்படியும் நினைக்கிறார்களே சில செப்படி வித்தைக்காரர்கள்.

சங்கா:- வித்தையிருக்கும் அவர்களிடம். விவேகமிருக்காது.

நந்தி:- அவர்களில் ஒருவன் சாளுக்கிய மன்னன். நாம் கப்பம்கட்ட வேண்டுமாம் அந் தத் தைலபனுக்கு. மறுத்தால் அவனைப் போரில் வெல்லவேண்டுமாம். ஓலைவிடுத்திருக்கி றான் உணர்வு கெட்டவன்.

சங்கா:- நமக்கா? எப்போது நாதா?

நந்தி:- இன்றுதான் யானையை வம்புக்கு இழுக்கிறது சோணி நாய்க்குட்டி!

சங்கா:- என்ன செய்யப் போகிறீர்கள்?

நந்தி:- குருக்கோட்டையை முற்றுகையிடுவ தாக ஓலையனுப்பி விட்டேன். நாளை மறுநாள் கிளம்புகிறது நமது சிங்கப்படை!

நிருப:- அப்பா! நானும் வருகிறேனே போர் முனைக்கு.

நந்தி:- எதற்கடா மகனே?

நிருப:- கப்பம் கட்டச்சொல்லி நமக்கு உத்தரவிட்டானே கபோதி. அவன் தலையை. நான் வெட்டவேண்டும். எனது நாடு, எனது தாயகம் மாற்றானுக்கு அடிபணிந்து வாழும் நிலை வரக்கூடாதப்பா!

நந்தி:- (தட்டிக்கொடுத்து) நன்று மகனே! மெச்சினேன் உனது வீரத்தை! பல்லவரின் நந்திக்கொடி என்றும் பகைவன் முன்பு தாழ்ந் தது கிடையாது. போர்முனைக்குச் செல்ல உனக்குப் பருவம் வேண்டுமே. சிறுவனடா நீ!

நிருப:- ஆடுகளின் கூட்டத்தைக்கண்டு புலிக்குட்டி அஞ்சுவதில்லையே.

சங்கா:- துங்கா! பொறு, ஆளப்பிறந்தவன் நீ. அநீதியை எதிர்த்துப் போராட எத்தனையோ சந்தர்ப்பங்கள் வரும்.

நந்தி:- ஆமடா செல்வமே! நான் இல்லாத நேரத்தில் நீதானே அன்னைக்கு துணை? நீ இரு மைந்தனே! நான் சென்று வருகிறேன்.

(தழுவி முத்தம் கொடுக்கிறான் மன்னன்.)

## காட்சி 10.

(பூங்கா. மைத்ரேயன் விக்ரமகேசரி இரகசிய சந்திப்பு.)

மைத்ரே:- பொன்னான சந்தர்ப்பம். போர்க் களத்திலே மன்னன் நந்திவர்மனை ஒழித்துவிட வேண்டும்.

விக்ரம:- முயற்சி, விபரீதமாக முடிந்துவிட் டால்?

(வளரும்)

# வேண்டாம் தீபாவளி.

கழுதையும், பாம்பும் காதல் புரிந்தது; குட்டிபோட்டது! புலியும் காக்கையும் புணர்ந்தது; குஞ்சு பொறித்தது, நந்தையும் நாயும் கலவிபுரிந்தது; குட்டிபோட்டது! இதை நீங்கள் நம்பத்தான் வேண்டும்! என்ன? நம்பமாட்டீர்களா? அப்படியானால், நிச்சயம நீங்கள் நாத்திகர் தான்! நாத்திகரேதான்!

தீபாவளிக்கும் நடக்க முடியாத விபரீதக் கற்பனைக்கும் என்ன தோழரே சம்பந்தம்? நம்பாவிடில் எப்படி நாத்திகமெ, என்று கேட்கிறீர்களா? கேளுங்கள்; கேளுங்கள் அந்தச் சேதியை! மலந்தின்னும் பன்றியும், மனிதப் பெண்ணும் காதல்கொண்டு புணர்ந்தார்களாம்; நரகன் என்று ஒரு குழந்தை பிறந்ததாம். அந்த நரகன் கூராளி, நாடாண்டு, காடாண்டு; மாதாவாலேயே மரணமடைந்த புனிதநாள் தான் தீபாவளித் திருநாளாம்! இதைக் கூறுகிறது புராணம்! புராணத்தை நம்பாதவன் நாத்திகன்தானே?

இவற்றை மனிதப் பண்புள்ள—பகுத்தறிவு படைத்த எவனும் நம்பத்தான் மாட்டான். நம்பச்சொல்லுகின்றதே பக்தி! சொல்லுகின்றதே புராணம்! நம்பி தீபாவளி கொண்டாடத் தூண்டுகின்றதே அந்தப் பரம்பரையான "ஆனந்த விகடன்" "கல்கி" "சுதேசமித்திரன்" கூவடிகள்! அழகான மலர்கள் வெளியிட்டு மக்களின் அறிவைச் சித்திரவதை புரிகின்றனவே! கேட்பது யார்? கண்டிப்பது யார்?

நரகாசூரன் பிறந்த தன்மையை நல்லவர்கள் ஒப்ப மாட்டார்கள்! மகனைக் கொன்ற மாதாவை கொலைகாரனும் மதிக்க மாட்டான்! என்றாலும், காமப் பன்றியை விட்டுனுவென்று கழறிவிட்டாள்—கொலைகாரியை மகாலட்சுமி என்று புளுகிவிட்டால் கையெடுத்துக் கும்பிடும் கருத்துக் குருடர்கள்—விபரீத நம்பிக்கையாளர்கள்—இருக்கிறார்களே, அவர்கள் திருந்துவதென்று? திராவிடம் தன்மானம் — தன்னறிவு பெறுவதென்று?

தோழனே! நாத்திகனை இருப்பதில் தவறில்லை. அறிவுக்குப் பொருந்தாத ஆபாசக் கற்பனையின்மேல் கட்டப்பட்ட தீபாவளி கொண்டாடி மடமையை—மடமையை வளர்க்க வேண்டாம்; தமிழனின் மானத்தைக் குலைக்க வேண்டாம்; திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறையளிக்க மறுத்து, இந்த ஆரியப்பண்டிகைக்கு விடுமுறையளிக்கும் அமைச்சர். பச்சைத்தமிழரோ, காய்ந்த தமிழரோ; அவர் தமிழனுக்குப் பாதகம் செய்பவர் என்பதையும மறக்கவேண்டாம்.

—"வாலி"

## காங்கிரஸ் தமிழனுக்கு.

சேலம் ஜில்லாபோர்டு கூட்டம், 19—10—56-ல், நாமக்கல்லில் தலைவர், டி. எம். காளியண்ணன் தலைமையில் நடைபெற்றது. உயிர்த்தியாகி சங்கரலிங்கனருக்கு அனுதாப—அவசரத் தீர்மானம் ஒன்று வந்தது. அனுதாபக் காட்ட அரைமணி நேரம் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று தோழர்கள், இரா. தாண்டவன், எ. ஆனைமுத்து இருவரும் வற்புறுத்தினர். காங்கிரஸ்காரர்கள் மெஜாரிட்டி பலம் கொண்டு இப்படியொரு தீர்மானமே வேண்டியதில்லை என்று தள்ளி விட்டனர்! 77-நாள் உண்ணாதிருந்து உயிர் நீத்த காந்தியவாதிக்கு—காங்கிரஸ் தமிழனுக்கு, காங்கிரஸ் காரர்கள் காட்டும் மரியாதையைப் பாருங்கள்!

அதே கூட்டத்தில் வந்த தூத்துக்குடி நகரசபை உறுப்பினர், கே. வி. கே, சாமிக்கு அனுதாபத் தீர்மானமும் எதிர்த்து ஒழிக்கப்பட்டது, மனிதாபிமான மற்ற காங்கிரஸ் வெறியரின் போக்கு சரிதானா? நியாயந்தானா? ØØ

## முன்னேற்றப் — — பாதையிலே

### சென்னை.

மகளிர் மன்றம் துவக்க விழா, 4-11-56 மாலை 5 மணிக்கு, குருசாமி முதலியார் டி. டி வி உயர்நிலைப்பள்ளியில் (அம்மன்கோயில் தெரு, கொண்டித்தோப்பில்) நடைபெறும்.

தலைமை: டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார்.

துவக்கம்: மூவலூர் இராமாமிருதத் தம்மையார்

கருத்துரைவழங்கல்: அறிஞர் அண்ணா.

இசை: ஜி கஸ்தூரி.

—சத்தியவாணிமுத்து. தலைவர்.

### இராசீபுரம்.

புதுச்சந்தைப்பேட்டையில் 1-11-56 மாலை 6 மணிக்கு, தி. மு. க. பொதுக் கூட்டம்.

பேசுவோர்: எம் கே. பேபி M P. இ ஆர். கிருஷ்ணன், கே வி கே. இராமசாமி

—செயலாளர்.

இயற்கையின் கொடிய தன்மை பற்றி சிந்திக்காதே 'விதி' 'விதி' என்று கதறுபவர்கள் கேவலமான அடிமையுள்ளம் உடையவர்களே. —எமர்சன்

திருச்சி மாவட்டம் வேலாயுதம் பாளையம் தி.மு.க. செயலாளர், தோழர், க. பெரிய சாமியும் தோழியர், முத்து லட்சுமியும் 7-9-56-ல் ஆசிரியர், ப: கண்ணன் அவர்கள் தலைமையில் திருமணம்புரிந்தனர். தோழர்கள் பலர்வாழ்த்தினர். எமது வாழ்த்தும் உரித்தாகுக!



# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● து. ப மாரியப்பன்,
ரைஸ்மில், துறையூர்,
திருச்சி DT.

**து ப. மாரியப்பன், துறையூர்.**

கே: நினைவுச் சின்னங்களாக சிலைகள் வைத்து, கட்டிடங்கள் அமைக்கிறார்களே; இதை நீங்கள் எவ்வளவு தூரம் விரும்புகிறீர்கள்?

ப: சிலைகளும், கட்டிடங்களும் மனிதவுணர்வை — அறிவைக் கெடுக்காமலிருந்தால் போதும் என்ற அளவுக்குத் தான்.

* * *

● கே: உபாத்தியாயர்கள், பத்திரிகையாளர்கள் இவர்களின் சேவையில் நாட்டுக்கு அதிக அவசியம் எது?

ப: உயிர்கள் வாழ காற்றும் மழையும் எப்படி அவசியமோ, அதுபோல் அறிவுவளர இருவர் பணியுமே அதிக அவசியம்தான்.

**அ. கா. ஜெயிலாப்தீன், நடுக்கூடலூர்.**

கே: தியாகி சங்கரலிங்கனார் போன்ற உறுதியுள்ளம் படைத்தோரை விட்டு பெரியார் காமராசரை பச்சைத் தமிழர் என்பது ஏன்?

ப: துரும்பைத் தூணாக்க வல்ல பெரியார், பொங்கிப் பெருகும் தி. மு. க வெள்ளத்திற்கு அணைகோலவே அந்தப் பருக்கைக்கல்லை, பாறையாக்குகிறார்!

**கோ. தங்கராசன், சென்னை-1.**

கே: நாடகம் ஆடுவோரை இழிவாகப் பேசுகின்ற நாடக ஆசிரியர்கள் யாரேனும் இருக்கிறார்களா?

ப: இதோ, புரட்சிகர நாடக ஆசிரியர், "தேவாசுரப் போராட்டம்" தீட்டிய பெரியார் ஈ. வெ. ரா. இருக்கிறாரே!

**கு. இரா. பரமசிவன், காரமடை.**

கே: ஆரியரின் குலச்சின்னமான சூரியனை தி. மு க. எப்படித் தன் தேர்தல் சின்னமாகக் கொள்ளலாம்?

ப: சூரியன் தனியுடைமைப் பொருளல்ல தோழரே; அது 'அவா'ளுக்குச் சொந்தமானால், திராவிட நாட்டுக் காற்றைச் சுவாசிக்கவே அந்தப் பிரம்மங்களுக்கு உரிமையில்லையே!

* * *

கே: பக்தர்கள் எதற்காகப் பிறவா வரம் வேண்டுக என்கிறார்கள்?

ப: மோட்சலோகத்திலேயே தங்கி, காமதேனு கேட்டதை யளிக்க, தேவ கன்னியர் கால் பிடிக்க, கற்பகவிருட்சத்தடியில் இன்பப் பொழுது போக்கலாம் என்ற சுயநலம்தான்!

**அ கருப்பையா, சிவகங்கை**

கே: சீர்திருத்தவாதியான அண்ணாதுரை, காமரசனையுள்ள "ரோமாபுரி ராணிகள்" என்ற புத்தகம் எழுதலாமா?

ப: நன்றாக எழுதலாம்; கோலேந்தும் கொற்றவரும், வாளேந்தும் வீரர்களும் அந்த ரசனையிலே ஆழ்ந்துபோன வரலாறு, ஆட்சி பீடத்திலிருப்போர்க்கு அறிவுரையாகிறதே.

**மா. தங்கமணி, திருவண்ணாமலை.**

கே: பெரியார், அண்ணா முதலியோர் சொல்லுகிறார்களே; ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று. அந்தத் தேவன் யார்?

ப: அவன், ஆலயத்திலே அடைபட்டுக் கிடப்பவனல்ல, எங்கும், எதனிலும் பரந்து பொதிந்து கிடக்கும் உருவமற்ற ஒரு சக்தி!

நாடகசாலை, சதாரண மக்களின் சர்வகலாசாலை.

—சரோஜினி தேவி.



தயாராகிறது!
புதியதோர் தென்றல் புத்தகம்
## இராஜ புதல்வன்
"அமரன்"
வரைந்த
அழகு தமிழ் நாடகம்.



## பகுத்தறிவு.
(வாரஇதழ்)
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 3-8-0
ஆறு மாதங்கள் 2-0-0
தனிப்படி 0-1-0
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.



டாக்டர் சோதனை விளக்கத்தின்படி ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.]




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்—1.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆஸ்ட்ரியா-ஹங்கேரியின் (Austria-Hungary) வாழும் முக்கியமான குடிகள் செர்பியர்கள் (SERBS) கோடர்கள் (GO-ADS) என்ற இருவகையினர் இந்த இரு குடியினரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரே மொழி பேசுபவர்கள்; கலை, பண்பாடு ஆகியவற்றிலும் ஒன்றுபட்டவர்கள். ஆனால், அவர்களுடைய பழம் வரலாறு சிறிது வேறுபட்டுவிட்டது.

கோடர்கள் ஆதிமுதல் ஆஸ்திரிய மக்களாகவே இருக்க, செர்பியா மட்டும் ஒரு நூற்றாண்டு காலமாக துருக்கியின் (TURKY) ஒரு பகுதியாக இருந்து விட்டதாம்.

இந்த சரித்திர வேற்றுமை அவர்களிடையே பகைமையும், பொறாமையையும் தூண்டிவிட்டு, 10 ஆண்டுகளில் 23 அரசாங்கங்கள் வீழ்ச்சியடைவதற்கு அதுவே காரணமாயிருந்திருக்கிறது.

செர்பியர்—கோடர்கள் போல் வரலாற்றில் மட்டுமின்றி, இனம், மொழி, கலை, பண்பாடு முதலியவற்றிலும் வடநாட்டினருக்கும், திராவிட மக்களுக்குமிடையில் பலத்த வேற்றுமைகளிருக்கின்றன. இதை இந்தியப் பிரதமர் நேருகூட ஒப்புக் கொள்கிறார்.

"இந்தியாவிலே, இந்திய மக்களுக்கிடையில் இருக்கும் வேற்றுமைகள் வெளிப்படையானவை. வடமேற்கு இந்தியாவிலிருக்கும் பதானியர்கள் (PATHANS) முதல், தென்கோடியிலிருக்கும் தமிழர்கள்வரை, வேற்றுமை குறிப்பிடத்தக்க முறையிலே அமைந்திருக்கிறது. இனம், மதம், மொழி, பழக்கவழக்கங்கள், நடையுடை பாவனைகள்—எல்லாவற்றிலும் வேறுபாடுகள் நிரம்பியிருக்கின்றன" என்று நேரு தான் எழுதிய "இந்தியாவைக் கண்டேன்" (India Rediscovered) என்ற புத்தகத்தில குறிப்பிடுகிறார். "இந்தியா ஒரு இனக் கண்காட்சி (Ethnological Museum) என்றே ஒரு சரித்தாசிரியர் சொல்கிறார்.

இத்தகு வேற்றுமைகளிருந்தும், "வேற்றுமையில் ஒற்றுமை (Unity in Diversity)" என்று பாரதத் தலைவர்கள் பசப்புகின்றனர். இந்தப் புரட்டுப் பேச்சு எத்தனை நாளைக்கு செல்லும்?

ØØ

## அறிவியலும் - - கலையியலும்.

மனித வாழ்வை, உலகில் "கலையியல்" "அறிவியல்" என்ற இரு கூறுகளாக்கியிருக்கிறார்கள்.

மூளையைத் தொடக்கூடியவை எல்லாம் அறிவியலிலும், உணர்ச்சியைத் தொடக் கூடியவை எல்லாம் கலையியலிலும் அடங்குபவையாகும்.

பொருள்களை உணர்ச்சியினால் அளவிடும்போது, அது கலையாகிறது. அந்தக் கலையை விஞ்ஞான விளக்கத்திற்கு உட்படுத்தக் கூடாது; உட்படுத்தினால் குழப்பமே விளையும்.

பொருள்களுக்கு விஞ்ஞான விளக்கம் தருவதுதான் அறிவியலாகும். ஆகவே அறிவியலையும், கலையியலையும் குழப்பிக்கொள்ளக் கூடாது.

—இரா. நெடுஞ்செழியன்.
8-9-56 சென்னை கோகலே மண்டபத்தில்.

வள்ளுவர் நெஞ்சம்.

## உலக வாழ்த்து-சா.

அதிகாரம்-க. பாட்டு-சா

பொறிவாயில் ஐந்தவித்தான்
-பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி யென்று சொல்லப்பட்ட ஐந்து புலன்களின் நுகர்ச்சி இன்பங்களில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டவர்களை, பேராசையும், அதன் அடிப்படையாக உண்டாகும் தொல்லைகளும் பாதிக்காது. மேலும், மற்றவர்களுடைய அன்பு புகழுக்கு உரியவராகவும் வாழ்வார்கள்.

விளக்கம்:

பொய்தீர்— பொய்யில்லாத — மெய்வழி.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.
அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண நிகழ்ச்சி! இதை அப்படியே அகில உலகத்திற்கு மாற்றிப்பாருங்கள். மற்ற நாட்டுத் தலைவர்கள் நேருவை இந்த விதத்தில்தானே மதிக்கிறார்கள்!

அழகான பெண்களைக் கொண்டு ஐந்தாண்டு திட்டப் பிரச்சாரம் நடத்தப் போகிறார்களாம்! அழகான பெண்கள் ஏன் தெரியுமா? மக்கள் படத்தைப் பார்த்து விடுவார்களே என்றுதான்! படத்தைப் பார்த்தால், பக்ராநங்கல் எங்கிருக்கிறது, தாமோதர் திட்டம் எங்கிருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்து கொண்டு விடுவார்களே! விஞ்ஞானியினுடைய மூளையும், ஒரு இரும்புத் துண்டும் சேர்ந்தால் தொழிற்சாலை உருவாகி விடுகிறது. ஆனால், விவசாயம் விண்ணையும், மண்ணையும் நம்பி வாழ்கிறது. இங்கிலாந்தும், ரஷ்யாவும், சைனாவும் ஒரு காலத்தில் வெறும் விவசாய நாடுகளாகத்தான் இருந்தன. இன்றோ அந்நாடுகளில் தொழிற்சாலைகள் பெருகிவிட்டன.

"ஆலைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் மூலதனம் எங்கே இருக்கிறது?" என்று ஒரு விசித்திரமான பிரச்சினையை எழுப்புகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். இங்கிலாந்தில் மட்டும் என்ன இருக்கிறது? இங்கிருந்து பஞ்சைக் கொண்டு போய், லங்காஸ்டர், மான்செஸ்டர் ஆலைகளில் துணிகளாக்கி, மீண்டும் இங்கேயே திருப்பி அனுப்புகிறார்கள்.

ஆலைகளின் மூலம் ஆயிரக்கணக்காக வருமானம் கிடைக்கிறது. விவசாயத்தில் வரும் வருமானம் அதில் பாதிதான் இருக்கும். எனவே, விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களில் பாதிபேர் தொழிற்சாலைகளுக்குச் சென்றால், நாட்டின் நிலை உயரும். 'பொருளாதாரத்தில்' இது ஒரு சிறிய பாடம்!

இந்தியாவின் பொருளாதாரம் ஐந்தாறு பணக்காரர்களின் கையில்தான் இருக்கிறது. வெள்ளையன் காலத்திலிருந்தே, வடநாட்டுக்காரன் வாழ ஆரம்பித்து விட்டான். 'வாணிப ஒப்பந்தம்' என்றால் வடநாட்டுடன்தான் வெளிநாட்டுக்காரர்களும் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். டாட்டா போன்றவர்கள் குடிசைத் தொழிலுக்குக் கூட உதவி செய்கிறார்கள் என்று சிலர் சொல்லுகின்றனர். சிறு பிள்ளைகள் செய்யும் பொம்மைக் கல்யாணம் விளையாட்டுத்தனமானது—பயனற்றது என்று தெரிந்தும், பெற்றோர்கள் அந்த பொம்மைக் கல்யாணத்திற்குக் காசு கொடுக்கிறார்களே, அதைப்போலத்தான் டாட்டா குடிசைத் தொழிலுக்கு உதவி செய்வதும்!

வடநாட்டு சாமான்களுக்கு எங்குமே போட்டியிருக்கிறது. தென்னாடு ஒன்றுதான் போட்டியில்லாத மார்க்கெட்! அதனால்தான் தென்னாட்டைப் பிரிந்துபோக விடவோ, தென்னாட்டில் தொழிற்சாலைகள் பெருகுவதையோ அவர்கள் விரும்பவில்லை. தென்னாடு பிரிந்து போய்விட்டால், ஒரு அருமையான மார்க்கெட் போய்விடும். தொழிற்சாலைகள் பெருகுவது என்றால், வடநாட்டுப் பொருள்களுக்குப் போட்டி அதிகமாகிவிடும். ஆகவேதான், தென்னாடு தொழிற்துறையில் முன்னேறக்கூடாது என்பதில் வடவர்கள் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறார்கள். தட்டிக் கேட்டால், ஒன்றிரண்டு அப்பளத் தொழிற்சாலைகளுக்கு உதவி புரிகிறார்கள்!

வடநாட்டிலே வளங்கள் மிஞ்சிவிட்டன. இந்தியா ஒன்று என்றால் தேய்ந்த இடத்துக்கல்லவா திட்டங்கள் தேவை? இதைத்தான் திராவிட முன்னேற்றக்கழகம் கேட்கிறது. இந்தக் குறிக்கோளுடன்தான் வருகிற பொதுத்தேர்தலிலும் பங்கு கொள்ளப்போகிறது. "தி மு க, தேர்தலில் நிற்கவேண்டும்" என்ற தீர்மானம் மக்களால் முன்மொழியப்பட்டு பொதுச் செயலாளரால் வழி மொழியப்பட்டு, திருச்சி மாநாட்டுக்கு வந்திருந்த மக்களால் நிறைவேற்றப்பட்டது. "தி.மு.க சட்டசபைக்குள் வரக்கூடாது" என்று காமராஜர் சொல்லுகிறார். காமராஜர் எல்லோருக்கும் மந்திரி! நான் வரக்கூடாதென்று அவர் எப்படிச் சொல்லலாம்? ஒரு அன்னக்காவடி சாமியார் சொன்னால், நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படப்போவதில்லை. ஆனால், காமராஜர் சொல்லலாமா? நான் மட்டும் வரிகட்டவில்லையா? வரிகட்டும்பொழுது சட்டசபைக்கு வர எனக்கு உரிமையில்லையா? சட்டசபையில் எங்களுக்குப் பிரதிநிதித்வம் இல்லையென்றால், எங்களிடம் வரிகேட்காதே! பிரதிநிதித்வம் இல்லாமல் வரியில்லை! (No Taxation Without Representation)

(தோழர், டி. கே. தாமரைச்செல்வன் அவர்களின் சேலம் பேச்சு இன்னும் வரும்.)

**வாய்வு நூரணம்.**

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தநூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது (பத்தியமில்லை)

5-பலம் டின் ரூ 3—0—0

சம்பு இண்டஸ்ட்ரீஸ்,

சேலம்–2.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 2-11-56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 18


# கிருஷ்ணன் கடவுளல்ல; கொலைகாரன்!

“சிசுபாலன், ஜராசந்தன், பீஷ்மன் முதலியவர்களைக் கொன்றவன் கிருஷ்ணன், அழகான மனைவி, மகள் ஆகியவர்களைப் பெற்றிருந்த ஆண்கள் கிருஷ்ணனைக் கண்டு பயந்து கொண்டிருந்தனர், ஏனெனில் கிருஷ்ணனுக்கு வயதாகி கிழவனாகி விட்டாலும், அழகில் மயங்கி பெண்கள் அவனோடு ஓடிவிடுவார்களேஎன்று நடுங்கி வாழ்ந்தனர்.

திரௌபதி என்ற பெண்ணுக்காக மகாபாரதப் போரை கிருஷ்ணன் தொடங்கினான். கோடிக்கணக்காக மக்களைக் கொன்று, பாண்டவர்கள் என்ற பித்தர்களுக்கு ராச்சியம் பெற்றுத் தந்தான். நண்பர்களையும், குருவையும் அஞ்சாமல் கொலை செய்தான்

கிருஷ்ணன் இறுதிக் காலத்தில் “தெய்வமே! என் வாழ்க்கை முழுதும் நான் கொலைகள் தவிர ஒரு நன்மையும் செய்யவில்லை. எனது வாழ்நாள் வீணாயிற்று. என்னை விரைவில் அழைத்துக்கொள்!” என்று அழுதுகொண்டே செத்தான்.”

உத்தரப் பிரதேச கவர்னர், திரு. கே. எம். முன்ஷியின் மனைவி லீலாவதி முன்ஷி, பம்பாய் இந்திய வித்தியாபீடம் என்ற நிறுவனத்தார் வெளியிட்டுள்ள புத்தகமொன்றில் “கிருஷ்ணனின் இறுதிக் காலம்” என்ற கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார்:

காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர்—பார்ப்பனீயச் சார்புடைய தமிழறிஞர், எஸ். வையாபுரியார் பகவான் கிருஷ்ணனுடைய வரலாற்றினை சரித்திர ரீதியாக ஆராய்ந்து, “கிருஷ்ணன் கடவுளல்ல. பிற்காலத்திலே கடவுளாக ஆக்கப்பட்டவன்” என்று ஏற்கனவே கூறியிருக்கிறார்.

தோழியர், லீலாவதி முன்ஷியும் பேராசிரியர் வையாபுரியாரும் பகுத்தறிவுவாதிகளின் தொடர்பற்றவர்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேராதவர்கள். அவர்களே சொல்லுகிறார்கள்: ‘கிருஷ்ணன் கடவுளல்ல; மனிதனே; மனிதரிலும் ஒழுக்கமற்றவன்; கொடியவன்; கொலைகாரன்; சாகும்போது கடவுளை நோக்கிக் கதறியவன்” என்று.

இந்தக் கொடியவனை, கொலைகாரனை, கோயிலில் வைத்துக் கும்பிடலாமா? இவனொரு கடவுளா? இவனுக்குத் தேர் திருவிழா நடத்தலாமா? பிரார்த்தனை, அபிஷேகம், உண்டியல் என்று பகுத்தறிவையும், பணத்தையும் பாழாக்கலாமா?

இந்தக் கொலைகாரன், அர்ச்சுனனுக்கு, உறவினரைக் கொலை செய்! என்று போதித்ததாகக் கூறப்படும் கொலை நெறியை-கொலைநூலை பகவத்கீதையென்று பாராட்டலாமா? பரப்பலாமா?

‘பித்தர்கள்’ என்று தோழியர் லீலாவதி கூறுகின்ற, ஒரு தந்தைக்குப் பிறவாத பஞ்சபாண்டவர்களுக்காகவும், அவர்களது பொதுவுடைமைக் கற்பரசி—திரௌபதைக்காகவும் கிருஷ்ணன் நடத்திய போராட்டக் கதையை மகாபாரதம்—பாரதப் பண்பாட்டின் பிறப்பிடம்—பாரத கலாசாரத்தின் கலங்கரை விளக்கம்—என்றெல்லாம் கே. எம். முன்ஷி, ராசேந்திரப்பிரசாத். ஜவகரிலால் நேரு போன்ற தலைவர்கள் போற்றுவதின் மர்மம் என்ன?

[8-ம் பக்கம் தொடர்ச்சி]

புத்தர் நெறி.

# எல்லோரும் ஓர் குலம்.

பி. வி. இராமசாமி.

**எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம் என்ற சாதி பேதமற்ற சமத்துவக் கொள்கையினை, 2000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய பேரறிஞர் புத்தர் விளக்கியுள்ளார். அஃது வருமாறு:**

“புத்தர்பிரான், இளவேனில்—மாலை, அறிவுச்சோலையிலே ஓய்வு பெற்றமர்ந்திருந்தார்.

மன்னன் பாசேனஜித்தன்; உயர் குலத்தாரென்பவர் பலர் சூழவந்து கண்டனன், புத்தர் பிரானை நோக்கி மன்னன் வினவினன்:

அறிஞர் பிரானே! ‘இது என்ன அநியாயம்’ தங்கள் தலைமைச்சீடர் ஆனந்தர், மதங்க சாதி, சண்டாளப் பெண்ணின் கையால் தண்ணீர் குடித்தார், தாங்களோ அந்த சண்டாளப் பெண்ணையே பிட்சுவாக்கிக்கொண்டு விட்டீரே! அடுக்குமா இந்த அநாசாரம்?

புத்தர்:- இதோ, நம் காலடியில் இருப்பது மண். நீர் அணிந்திருக்கிறீர் பொன், தங்கநகைகள். இரண்டுக்கும் வேற்றுமை காணப்படுகிறதல்லவா?

மன்னன்:- ஆம்.

புத்தர்:- உம்மைச் சூழ இருக்கின்றனரே, உயர்சாதிக்காரர் என்று கூறிக்கொள்பவர்கள்; இதோ எமது சூழாமில் உள்ளனரே சண்டாளர்; தாழ்ந்த சாதியார் என்று நீங்கள் குறிப்பிடுகிறவர்கள்; இவ்விருவருக்கும் உருவ—அமைப்பிலே, பிறப்பு முறையிலே வேற்றுமையுண்டா?

உயர்சாதியினர், நெருப்பிலே இருந்து பிறந்தனரா? ஆகாயத்திலிருந்தோ—காற்றிலிருந்தோ—அல்லது நிலத்தைக் கிழித்துக்கொண்டோ பிறந்தனரா? அவர்கள் எல்லாரும் பெண்ணின் கர்ப்பத்தில் உற்பத்தியாகி — இயல்பான இயற்கை முறையில் பிறந்தவர்கள் தானே?

மன்னன்:- தர்மசாஸ்திரம் அப்படி வகுத்துள்ளதே.

புத்தர்:- ஒரு விளக்கம். பிராமண—க்ஷத்ரியர்—வைசியர்—சூத்திரர் என்பது நீங்கள் கூறும் பிரிவினை. சரி, ஒரு க்ஷத்ரியர் பெரும் பணக்காரனாகி விடுகிறார். அப்போது, மற்ற மூன்று பிரிவினரில் யாரையாவது தன் பணியாளராக வைத்துக்கொள்ள முடியுமா?

மன்னன்:- முடியும்.

புத்தர்:- மூன்றாம் பிரிவினரோ, நான்காம் பிரிவினரோ, பெருஞ் சீமானாகிவிட்டால், மற்ற இரு உயர்ந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் பணிவிடை செய்வாரா?

மன்னன்:- செய்வர்.

புத்தர்:- உண்மை இப்படியானால்; இந்த நான்கு இனங்களும் ஒரே சமநிலையினர் ஆகின்றனர் என்பது புலப்படவில்லையா?

மன்னன்:- அப்படித்தான் புலப்படுகிறது.

புத்தர்:- மற்றொரு உதாரணம்!

ஒரு க்ஷத்திரியன் திருடினால்—கொலை செய்தால்—பொய் பித்தலாட்டம் செய்தால்—வசை மொழி பொழிந்தால்—கேடு நினைத்தால்; தவறான நோக்கங் கொண்டால், அவன் அல்லல்படுவானா?

மன்னன்:- ஆமாம்.

புத்தர்:- முற்றும் உண்மை. சரி, இதேபோல் மற்ற மூன்று பிரிவினர் செய்தால்?

மன்னன்:- அவர்களும் துயருறுவர்.

புத்தர்:- இதில் நான்கு பிரிவினர்களுக்குள் வேற்றுமையுளதா?

மன்னன்:- இல்லை.

புத்தர்:- மற்றொரு விளக்கம். ஒரு உயர் சாதியான் கொள்ளைக்காரனுனன்—திருடினால், அவனைக் கையும்மெய்யுமாகப் பிடித்து, உம்முன் கொண்டு வந்து நிறுத்தினன்—நீர் என்ன செய்வீர்?

மன்னன்:- தடையின்றி. தண்டிப்பேன்.

புத்தர்:- மற்ற மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரி செய்தால்?

மன்னன்:- அவர்களுக்கும் உரிய தண்டனை விதிப்பேன்,

புத்தர்:- இதிலும் அவர்களுக்குள் வேற்றுமையில்லையே?

மன்னன்:- இல்லை.

புத்தர்:- இந்த உயர் சாதியார் ஒருவர் பிட்சுவாகி— அறநெறித் தொண்டராகி, உமது அரண்மனைக்கு வந்தால் என்ன செய்வீர்?

மன்னன்:- உரிய மரியாதை உபசாரம் நடத்துவேன்.

புத்தர்:- மற்ற மூன்று பிரிவுகளைச் சேர்ந்தவர் பிட்சுவானால், தோற்றத்தில் வேற்றுமை காணுமா? அறிவிலும் சிறப்பிலும் பொதுநலப்பணியிலும் வேற்றுமை காணுமா?

மன்னன்:- மெய்யொளி பெற்றேன்; புத்தரே! மற்றொரு வினா: உயர்ந்தோர் சிறந்தோர் என்போர் யாவர்? அவர்களுடைய சிறப்பிலக்கணம் யாதோ?

புத்தர்:- யாருடைய சிந்தை நடப்புகளால் கலக்கமடையாதிருக்கிறதோ—யாருடைய மனம் குழப்பமற்றிருக்கிறதோ, யார் புண்ணிய பாபம் என்பன பற்றி சிந்திப்பதில்லையோ, அவன் துக்கம், அச்சம் என்பனவற்றைக் கடந்தவனாவான்.

மலர்களைக்கொண்டு பலவித அலங்காரமாலைகள் செய்வதுபோல், நல்லறிஞன் தமது திறமையால், வாழ்க்கையில் பலவித நற்செயல்கள் செய்யவல்லான்.

ஆசையற்றால் துக்கமில்லை. இன்ப வாழ்வுக்கு வழிசெய்யும் பண்புகள், நற்காட்சி, நற்சிந்தை, நல்வாய்மை, நற்செயல், நல்வாழ்க்கை, அன்பு, பரோபகாரம், ஊக்கம் நல்வழி, மன அமைதி பொதுநலப்பணி ஆகியவைகளாகும். இத்தகைய நற்பண்புகளைக் கொண்டவர்களே உயர்வும் சிறப்பும் பெற்றவர்களாவர்.”

★★

## எதிரொலி

ஸ்ரீ வில்லிப்புத்தூரில், குளத்தில் குளித்த இளம் பெண்களை வட்டமிட்ட வாலிபர்கள், கைது செய்யப்பட்டார்கள்.

—செய்தி.

ஐயயோ! கிருஷ்ண பரமாத்மாவின் வாரிசுகளைக் கைதுசெய்யலாமா இந்தப் போலீசார்? நாத்திகர்கள்! நாத்திகர்கள்!

*   *   *

காமராசர் போன ரெயிலை, தமிழரசுக் கழகக் காரர்கள் நிறுத்தினர்கள்.

—செய்தி.

தேர்தலில் காங்கிரசை ஆதரிப்பதை நிறுத்த வேண்டுமே!

*   *   *

சாப்பாட்டைவிட அறிவுதான் முக்கியம்.

—கிருபானந்தவாரி

ஐயாவோ! பக்தி பாழாகி விடுமே!

*   *   *

சென்னை புதிய கவர்னர் யாரென்று அறிவிக்கப்படவில்லை.

—செய்தி.

ராஜாஜியின் பெயர் இழுபடுவதாக இயம்புகிறதே ஒரு ஊர்க்குருவி.

*   *   *

சட்டசபைத் தேர்தலில் இரண்டே கட்சிகள் உள்ளன;

—பெரியார்.

கிடையாது. ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லை குடியரசு ஒருபித்தலாட்டம், தேர்தல் என்பதே மடத்தனம் என்று சொல்லுகின்ற கட்சியும் உண்டு.

*   *   *

தமிழா! தீபாவளி என்பது ஆரியனின் ஆபாசப் பண்டிகை! நினைவிருக்கட்டும். அதைக் கொண்டாடாதே!

—''விடுதலை''

காமராசர் அதைக் கொண்டாடியே தான் தீருவார், தமிழா! அதையும் மறந்து விடாதே!

# தாய் ஒருத்தி; தந்தை பலரா?

''கடவுளை நம்பாதவர்களுக்கு ஓட்டுப் போடலாமா?'' என்று கேட்கிறார் காமராசர். நாமும் இதுவரை பல மாநாடுகள் கூட்டியிருக்கிறோம். எத்தனையோ தீர்மானங்கள் போட்டிருக்கிறோம். ஆனால், ''நாங்கள் கடவுள் இல்லை என்கிறோம்'' என்று ஒரு தீர்மானம் கூட போட்டது கிடையாதே! கடவுளைப் பற்றிப் பேசுகிறோம், அது தவறு என்று சொல்ல முடியுமா? கடவுளைப் பற்றிப் பேசாதவர்கள் யார்? ''தென்னாட்டுக் கோயில்கள் விபச்சார மடங்கள்'' என்று காந்தியார் சொல்லியிருக்கிறாரே! அவருடைய சீடர் தானே இந்தக் காமராஜர்! இன்னும், சித்தர், இராமலிங்கர், பட்டினத்தார் ஆகிய இவர்களெல்லாம் கடவுளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

தி. மு. க. ஒரு விடுதலை இயக்கம்; வெறும் அரசியல் கட்சி மட்டுமல்ல! நமது இலட்சியம் சமுதாயத்தை ஒட்டி வகுக்கப்பட்டது. இந்த நாட்டிலே இருந்துவரும் சாதி அமைப்பு முறைகளினாலே, வாழ்க்கையில் சிலர்மட்டும் வளரவும், பலர் தேயவும் நேரிடுகிறது. இத்தகைய சமுதாய அமைப்பை மாற்றியமைக்க நாம் முயற்சி செய்கையில், ''இதெல்லாம் சாஸ்திரப்படி எழுதப்பட்டது'' என்று சிலர் சொல்லுகின்றனர். ''அப்படியானால் அந்த சாஸ்திரத்தைக் கொண்டுவா! அதையும் ஒழிக்க வேண்டும்'' என்று நாம் கூறுகிறோம். உடனே ''சாஸ்திரம் கடவுளால் எழுதப்பட்டது'' என்கின்றனர். பிறப்பினால் உயர்வு, தாழ்வு, கற்பிக்கும் அந்த சாஸ்திரத்தை யார் எழுதியிருந்தாலும் சரி, அவர்களும் அந்த சாஸ்திரத்துடன் சேர்ந்து வெளியேற வேண்டும் என்கிறோம்.

ராஜகோபாலாச்சாரியாரும் பாரத மாதாவின் புதல்வராம்! காமராச நாடாரும் பாரதமாதாவின் புதல்வராம்! முத்துராமலிங்கத் தேவரும் பாரதமாதாவின் புதல்வராம்! ஒரே தாய்க்குப் பிறந்த குழந்தைகளுள் ஒன்று ஆச்சாரியாராகவும், மற்றொன்று நாடாராகவும், இன்னொன்று தேவராகவும் இருந்தால், அந்தத் தாயைப் பற்றி நாம் என்ன நினைப்பது?

ஒரு மனிதன் தேகப்பயிற்சி செய்யும்பொழுது, எல்லா உறுப்புகளும் வலிவடையவே முயற்சி எடுத்துக் கொள்வான். தண்டால் மட்டும் எடுத்தால், கைகளும், மார்பும்தான் பலப்படும். கால்களைப் பலப்படுத்த அதற்கேற்ற தேகப்பயிற்சியைச் செய்ய வேண்டும். பாரத மாதா வெறும் தண்டால் எடுக்கிறாள். அதனால்தான், அவளுடைய கால்கள் (தென்னகம்) மெலிந்து போகின்றன.

(தோழர், டி. கே. தாமரைச்செல்வனின் சேலம் பேச்சு, இன்னும் வரும்)


**பகுத்தறிவு.**

(வாரஇதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 2—11—56 | இதழ் 18

## தேர்தல் முனையிலே நாம்.

நாடெங்கும் 13 நாட்கள், 1500 மைல்களுக்கு மேல் சுற்றி, 21 இடங்களிலே தங்கி, 6,500 பேர்களின் கருத்துக்களைப் பதிவுசெய்து கொண்டு திரும்பியது, பொதுச் செயலாளர் நாவலர், நெடுஞ்செழியனார் தலைமையிலே சென்ற தேர்தல் ஆய்வுக்குழு.

கிடைத்த தகவல்களையும், கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்த்து, பொதுத் தேர்தலில் நாம் 150 இடங்களுக்குப் போட்டியிட வாய்ப்பிருக்கிறது என்ற நல்ல செய்தியினை, 24-10-56-ல் சென்னை கோகலே மண்டபக் கூட்டத்தில் அறிவித்தார் அறிஞர் அண்ணா! மகிழ்ச்சிக்குரிய செய்தியே; எனினும் நம்மீது சுமரும் பொறுப்புகளை நினைக்கும்போது, மகிழ்ச்சி மறைந்து அச்சம் தலைதூக்குகின்றது.

திராவிட முன்னேற்றக கழகம் வெறும் தேர்தல் கழகமன்று. அது தாழ்த்தப்பட்ட ஒரு இனத்தின் உயிர் மூச்சாக—நாட்டின் அடிமை விலங்கொடிக்கும் விடுதலைப்பாசறையாக-விளங்குகின்ற மாபெரும் இயக்கம். விடுதலை பெற்ற திராவிடத்தில் பகுத்தறிவு பூர்வமான சமதர்மக் குடியரசு நிர்மாணிக்கும் அதன் போராட்டப் பணியிலேபலமுனைகள் அமைகின்றன. அதிலே ஒன்று தேர்தல் முனை. தேர்தல் தவறான செயலன்று. குடியரசு நாட்டிலே ஆட்சியினரை உருவாக்கும் உலைக்களம்—கொள்கை முரசொலிக்கும் போர்க்களம் அதுவே!

"தேர்தல் என்பது பித்தலாட்டம், பணம் படைத்தோரே வெல்ல முடியும், அந்தத் தகுதி காங்கிரசுக்கே உண்டு" என்ற நிலையில், பணபலமற்ற நாம்—பொய் புனைசுருட்டு கல்லாத நாம் தேர்தலில் ஈடுபடுவதென்பது எளிதான செயலன்று. எனினும் ஈடுபடுகின்றோம், அடிமைப் பட்டுழலும் திராவிடத்தின் விடுதலைக் கோரிக்கையினை முன்வைத்து! பணம் படைத்தோரே வெல்ல முடியும், சட்டசபைக்குச் செல்ல முடியும் என்ற நிலையிருப்பது நாட்டுக்கும் நல்லதன்று; குடியரசு முறைக்கும் சிறப்புத் தருவதன்று. இருக்கும் இழிநிலையினை நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் உரிய நம்மருந் தலைவர்கள் நம்மைக்காட்டிலும் இதனை நன்கறிவர். தேர்தல் முனையிலே நாம் இயங்க வேண்டிய நன் முறைகளை வகுத்தளிப்பர்; கண்ணியம், கடமை, கட்டுப்பாடுகளைத் தவறாது கைக்கொண்டு, தலைமை காட்டிய வழியே பணியாற்றி, நமது இலட்சிய வெற்றியினைப் பெறுவோமாக. வெல்க திராவிடம்! ●

## கொடிப்போர்; கழக வெற்றி.

சேலம் அம்மாப்பேட்டையில், காந்தியார் சிலை வைக்கப்பட்டுள்ள பொது மண்டபத்திலே மற்றவர்களைப்போல தி. மு. க. கொடியையும் ஏற்றினர் கழகத் தோழர்கள். அந்த வட்ட காங்கிரஸ் தேசீய வாலிபர் சங்கத்தினர் அதனைத் தடுத்தும், பிடுங்கி எறிந்தும், மண்டபம் எங்களது என்று அட்டகாசம் செய்தனர், சென்ற ஆண்டில். சேலத்திலே பரபரப்பைஉண்டாக்கிய இச் சம்பவம் நீதி மன்றத்திற்குச் சென்றது.

சேலம் முதல் வகுப்பு நீதிபதி, "மண்டபம் தேசீய வாலிபர் சங்கத்திற்கே சொந்தம்" என்று தீர்ப்பளித்தார். இதனை எதிர்த்து அம்மாப் பேட்டை தி. மு. க. தோழர்கள், சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கினை விசாரித்த நீதிபதி கனம், சோமசுந்தரம் அவர்கள் 28—10—56-ல், தமது தீர்ப்பினை வழங்கினார்:

"மண்டபம் சர்க்காரின் சொத்து, நகரசபையின் உபயோகத்திற்காத் தரப்பட்டிருக்கிறது. நகரசபையின் அனுமதியின்றி அங்கு கொடி ஏற்றிக்கொள்ள எந்த ஒரு கட்சிக்கும் தனியுரிமை கிடையாது" என்ற நல்ல தீர்ப்பு கிடைத்தது. நாம் மகிழ்கின்றோம்.

பொதுச் சொத்தை—சர்க்கார் உடைமையைத் தம்முடையதென்று கூறி, தடித்தனம் புரிந்த சேலம் காங்கிரஸ்காரர்கள் கொடி நாட்டும் உரிமைப் போரில் தோற்றனர்; நம் தோழர்கள் வென்றனர்! வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம் முன்னின்று பணிபுரிந்த தோழர்களை! ●

## தமிழக சட்டசபையில்.

வருகிற ஏப்ரலில் சென்னை ராஜ்யத்தில் நடக்கப்போகும் தேர்தல்களில் மொத்தம் 205 எம். எல். ஏக்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களில் 6பேர்கள் சென்னையுடன் இணையப் போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதிகள்; 39 பேர்கள் ஷெட்யூல்டு வகுப்பினரின் பிரதிநிதிகள்.

(இப்பொழுது சென்னை அசெம்பிளியில் 230 ஸ்தானங்கள் இருக்கின்றன.)

சென்னை ராஜ்யம், பார்லிமெண்டுக்கு 41 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும். (இவர்களில் ஒருவர் நம்முடன் சேரப்போகும் தென் திருவாங்கூர் பிரதிநிதியாக இருப்பார்)

சென்னை அசெம்பிளியின் ஒவ்வொரு தொகுதிக்கும் சராசரி 1½ லட்சம் வோட்டர்கள் இருப்பார்கள். பார்லிமெண்டரி தொகுதி ஒவ்வொன்றுக்கும் இதைப்போல ஐந்து மடங்கு வோட்டர்கள்.

சென்னை மேல் சபையில் 48 அங்கத்தினர்கள் இருப்பார்கள். இவர்களில் 16 பேர்கள் அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 16 பேர்கள் ஸ்தலஸ்தாபனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்; 4 பேர் பட்டதாரிகளின் பிரதிநிதிகள், இன்னொரு 4 பேர் உபாத்தியாயர்களின் பிரதிநிதிகள்: பாக்கி எட்டு பேர்களை; கவர்னர் நியமனம் செய்வார்.

ஆ. க.

வள்ளுவர் நெஞ்சம்.

### உலக வாழ்த்து-எ.

அதிகாரம்-க. பாட்டு-எ.

**தனக்குவமை இல்லாதான்**
**-தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

பலகாரணங்களால் பொதுவாக மனக்கவலை ஏற்படும். அந்தக் கவலையை மாற்றுவதற்கு வழி, கவலையின் காரணத்தை யறிந்து தக்க காரியத்தைச் செய்வதேயாகும். அதற்குத் தன்னைக் காட்டிலும் அறிவும், அனுபவமும் உள்ளவரின் நட்பும் அன்புங் கிடைத்தாலன்றி அரிதாகும்.

விளக்கம்:


தனக்குவமை—தன்னிலும் அறிவாற்றல் மிகுந்தவர்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி.

### இலங்கை 'பகுத்தறிவு' முகவர்.

தோழர், ப. சுப்ரமணியம், பகுத்தறிவுப் பண்ணை, 121. செட்டியார் தெரு, கொழும்பு. இலங்கையிலே நம் இதழ் விற்க விரும்புவோர் இவருக்கு எழுதுக.


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

**செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளை**

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

**வெண்சங்கு சீயக்காயத்தூள் தொழிற்சாலை,**
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.


## முன்னேற்றப்— —பாதையிலே

### சேலம்.

சென்ட்ரல் டாக்கீசுக்கு முன்பு, வெங்கடப்ப செட்டியார் ரோடில் அமைந்துள்ள, சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக அலுவலகத்தை 4–11–56 மாலை 4-மணிக்கு கவிஞர். கண்ணதாசன் திறந்து வைப்பார்.

—ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர்.

### சென்னை.

தி. மு. க. 27-வது வட்டம் (15, பிள்ளையார் கோவில் தெரு) துவக்கவிழாப் பொதுக்கூட்டம். 14–11–56 மாலை, நடைபெறும். தலைமை: ஏ. த. மாணிக்கம், பொதுச் செயலாளர், நாவலர். நெடுஞ்செழியன், எஸ். வி. நடராசன், ஆ. இராசன், வே. அன்புமணி ஆகியோர் பேசுவர்.

—W. P. B. சுந்தரன், செயலாளர்.

### இலங்கை.

மூன்றாவது திருக்குறள் மாநாடு, 3, 4–11–56 இருநாட்களிலும் பம்பலப்பிட்டி, இந்துக் கல்லூரி சரசுவதி மண்டபத்தில் நடைபெறும், பல தமிழறிஞர்கள் கலந்துகொள்வர். இசையரங்குகள் நடைபெறும். தலைமை: திரு. என். மாணிக்க இடைக்காடர், புலவர்மணி, ஏ. பெரியதம்பி(பிள்ளை) தோழர்கள்: கி. மனோகரன். திருச்சி, கி. ஆ. பெ. விசுவநாதன், டாக்டர், அ. சிதம்பரநாதனர், தோழியர். நேசமலர். மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

—சி. சேதுராமன், செயலாளர்.

### முகவரி மாற்றம்.

இதுவரை, மதுரை கட்ருபாளையம் 4-ம் எண்ணில் இயங்கி வந்த தி. மு. கழக மதுரை நகரக்கிளை, மதுரை மாவட்டக் கிளை **1-11-56 முதல் 66, மேலக்கோபுரத் தெரு, மதுரை** என்ற முகவரியில் இயங்கும், தோழர்கள் புது முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

—எஸ். முத்து, செயலாளர்,

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● அ. மு. சாமி,
க. உயர்நிலைப்பள்ளி,
பட்டுக்கோட்டை.

**இரா. குமாரசாமி, சென்னை-5:**

கே: இராமன் மகாவிஷ்ணு அவதாரம் புத்தரும் அந்த அவதாரமே என்கிறார்கள். இராமன் நெற்றியில் வைணவச் சின்னமாக நாமம் இருக்கிறது; புத்தர் நெற்றியில் அது ஏனில்லை?

ப: புத்தர் வேத—வைதிக மதத்தின் பகைவர். அவரை விஷ்ணுவின் அவதாரம் என்பது வைதிகரின் பலவீனப்பித்தலாட்டம்! இப்போதும் பௌத்தர்கள் சற்று ஏமாந்தால், புராணவாணிபர் புத்தர் சிலைக்கு நாமம் போட்டுவிடுவார்களே!

* * *

கே: அறிவின் எல்லை எது?

ப: செவ்வையான வாழ்க்கை!

**சி. சு. தேவராமன், சிறுதையூர்.**

கே: ஒருவனுக்கு எப்போது லட்சியம் ஏற்படும்?

ப: நெருக்கடியும், துயரும் நேரும்போது.

* * *

கே:- உங்கள் பெயருக்கும் பகுத்தறிவுக்கும் ஒத்து வருகிறதா?

ப: ஏன் வராது? சிறந்த வீரம் படைத்தவனை வீரன் என்பதுபோல, நல்ல கண்களைப் படைத்தவனை கண்ணன் என்பதில் தவறில்லையே!

**அ. மு, சாமி, பட்டுக்கோட்டை.**

கே: ஆளவந்த ஆணவக்காரர்கள், பகுத்தறிவுப் பாசறையிலே தென்றல் வீச, முரசொலி முழங்க தமிழ்நாடு தருவார்களா?

ப:- அவர்களாகத் தரமாட்டார்கள் தோழரே! நாம்தான் முயன்று பெறவேண்டும்.

● கே: "அந்தணர்" என்ற சொல் யாருக்குச் சொல்லப்பட்டது? அஃது பார்ப்பனருக்குப் பொருந்துமா?

ப: எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு வாழ்வோர், அந்தணர். ஆடு, மாடுகளைக் கொலைசெய்து யாகம் புரியும் பார்ப்பனர்க்கு அப்பெயர் பொருந்தாதே!

**கு. இர. பரமசிவன், காரமடை.**

கே: தி.மு.க. வின் கொள்கைப்படி சாத்தியப்பட்ட அளவுக்குக்கூட நடக்காதவன் அதிலே உறுப்பினனாக இருப்பது கட்சிக்கு துரோகமல்லவா?

ப: கட்சிக்குத் துரோகம் மட்டுமல்ல; கொள்கைக்குத் துரோகம்; இனத்துக்குத் துரோகம்; தனது முன்னேற்றத்திற்கும் துரோகம் புரிவதாகும்!

* * *

கே:- எம் ஆர். ராதா, டி. கே. எஸ். சகோதரர்கள், நவாப் ராஜமாணிக்கம் இவர்களில், நாடக சேவையில் சிறந்தோர்—பகுத்தறிவு உலகின் பாராட்டுதலைப் பெறுபவர் யார்?

ப: நடிகவேள். எம். ஆர். ராதாவைக் கூறலாம்; டி. கே. எஸ். சகோதரர்களையும் சேர்க்கலாம். நவாப் ராசமாணிக்கம் நாடகமா நடத்துகிறார்? அவர் கம்பெனியே, மதுரை ஸ்ரீதேவி பாலவிநோத சங்கீத சபைதானே!

**இல இரா. மெய்யழகன், துளசம்பட்டி.**

கே: ஆண்டவன் ஒருவனே பெரியவன், அவனுக்கே எல்லாந் தெரியும் என்கிறார்களே; உண்மையா?

ப: கிடையாது. தன்பெண்டாட்டியின் கழுத்துத்தாலியை அறுப்பவனைத் தடுக்கவோ, பிடிக்கவோ மட்டுமல்ல; இன்னாரெனத் தெரிந்து போலீசுக்குத் தகவல் கொடுக்கவும் முடியாதவனே, ஆண்டவன்.

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

இந்திய உபகண்டத்திற்கு "பாரதம்" என்று பெயரிட்டு அதனைப் பிடிவாதமாக அமலாக்க முயன்றுவரும் காங்கிரஸ்காரர்களுக்கும், கிருஷ்ணனைக் கடவுளென்று வழிபட்டு—விழாவெடுத்து— பஜனைபாடிப் பிழைப்பு நடத்தும் பஞ்சாங்கச் சுவடி — பஜகோவிந்தங்களுக்கும் தோழியர் லீலாவதியின் கருத்துரை தக்கதோர் அறிவு விளக்கமன்றோ?

"கோயிலுக்கு வரமாட்டேன், அங்கு என்ன கிடக்கிறது? மக்கள் பணியே இறை வணக்கம்" என்று கூறிடும் உத்தமர் விநோபா, அந்தக் கொடியனின் கொலை நூலாம் "கீதைக்"குப் புதிய பாஷ்யம் புனைந்து, தலையிலே சுமந்து கொண்டு ஊர்சுற்றுவது கேவலமல்லவா? கொலைகாரன் புகழ் பாடுவது அறிஞர்க்கு அழகாகுமா?

பக்தசிகாமணிகளே! வைதிக விற்பனர்களே! "கிருஷ்ணன் கடவுளல்ல, கொலைகாரன்!" என்று நாங்கள் சொன்னோம்; இப்போது நல்லவர்கள் சொல்லுகிறார்கள்; நாடும் சொல்லத் தொடங்குகிறது! இனியேனும் உண்மையுணர்ந்து திருந்துவீர்களா? மூடநம்பிக்கை—முற்றடிமை விளையாட்டினை விடுவீர்களா?

—வாலி,

**பாரிஸ் அழகிகள்.**

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது.

வீனஸ் டிரேடிங் கம்பெனி(த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1.

# தமிழ்நாட்டுக் காங்கிரஸ் இளைஞனுக்கு!

அருமை இளைஞனே! இது எனது இரண்டாவது மடல். சிறிது சினத்தோடுதான் இருப்பாய்! பாராட்டப் போகிறேன் என்று தொடங்கினேன்; அதற்குரிய காரணங்களை விளக்குவதற்காகப் பேனாவை விரட்டினேன்; இந்தப்பாழும் பேனாவோ 'ஒரு சின்ன ஐயம்' என்று கூறி எங்கோ தடம் மாறிச் சென்று விட்டது. இப்படித்தான் நீர் எண்ணியிருக்கிறீர்! 'மாளிகை' வாசிக்கு இது சிறிது கசப்பாகத்தான் இருக்கும். இருப்பினும் எனது ஐயங்களை எடுத்துரைப்பதன் மூலமாகத்தான் உம்மைப் பாராட்டுவதற்குரிய காரணங்களைத் தெளிவாக உணர்த்த முடியும். எனவே பொறுத்தருள்க!

காங்கிரசு மருத்துவக்கல்லூரி மங்கை; எனவே மணமலர் சூடமாட்டாள்—சூடக்கூடாது என்றேன். இந்த இடத்தில் எனக்கே ஒரு சந்தேகம் எழுந்து விட்டது! எந்தக் காங்கிரசு? தமிழ்நாட்டில் இருப்பது ஒரு காங்கிரசல்லவே! பாலை நிலத்தில் நீர்ச்சுனைகளும், பசும்புல் வெளிகளும் அங்கங்கே தென்படுவதுபோல காங்கிரசிலும் பாலைவனச் சோலைகள் இருக்கத்தான் செய்கின்றன! தமிழ்நாடு என்னும் பெயரை விரும்பித் தன் தலையைக் கொடுத்த பெருமகனைக் காங்கிரஸ்காரன் அல்லவென்று கூற, எதற்கும் துணிந்த காங்கிரசுள்ளும் ஆளில்லை! இதெல்லாம் கிடக்கட்டும். நீ எத்தகையவன்? நீ சார்ந்திருக்கும் காங்கிரசு எத்தகையது என்பதுதான் யாவருமறிந்தது—நாடே சிரிப்பது! மலர்மணத்தால் மருத்துவத்திற்குக் குந்தகம் நேரும் என்றெண்ணும் மங்கையைப்போலத் தமிழ்நாடு என்னும் பெயரைச் சொன்னாலே தன் ஆட்சி முழுகிவிடும் எனக் கருதும் பச்சைத்தமிழன் காங்கிரசு! ஆனால் நீ—உனது உள்ளம்—அது, 'தமிழ்நாடு' என்னும் பெயரைப் பொறுத்தமட்டிலேனும் எத்தகையது?

நீ சார்ந்துள்ள காங்கிரசைக் குறித்துச் சிறிது பார்த்தபின்னர், இதற்கு வருவோம். 'வீரமுழக்கம்' செய்யும் இளவலே! அண்மையில் ஒருவர் செத்துப் போனார் என்பது உனக்குத் தெரியுமா? 'ஒழியட்டும்—கூட்டத்தில் ஒன்று குறைந்தது' என்கிறாயா? காய்ந்த மரத்திலும் துளிரில் சிறிது பசுமையிருக்கக் கண்டிருக்கிறேன். எனவே உன்னிடத்திலும் சிறிது இரக்கத்தை எதிர்பார்க்கிறேன்!

தள்ளாத வயதில் உண்ணாநோன்பை மேற்கொண்டு இந்தத் தமிழினமும் நாடும் பீடுறுவதை நாடி உயிர்நீத்த அந்த ஆண்மையாளனை எண்ணிப்பார்! தமிழ்நாடு என்னும் இனியபண் தன் சப்பை வாயிலே தவழ வேண்டும்—தன் பேரப்பிள்ளைகளின் மழலையிலே தத்த வேண்டும் என்பதைக் குறிக்கொண்டு உயிர்நீத்த அப் புனிதனைச் சிறிதே நினை! வயது ஆக ஆக உயிர்மேல் ஆசை வளரும்! உலகியலிலே காணத் தவறியிருப்பினும் உளவியல் ஏட்டிலேனும் இதை அறிந்திருப்பாய். இளைஞன் ஒருவன் இளமை உணர்வால் உந்தப்பட்டு இத்தகு செயலில் உயிர்கொடுப்பது எளிது! வீரன் வடக்கிருத்தல் பழந்தமிழகத்தில் மிகச் சாதாரண ஒன்று. ஆனால், வயதான ஒருவர்—தொண்டு கிழவர்—கொள்கைக்காக உடலை வதைத்து மடிகிறா என்றால், அதன் பெருமைக்கு அளவுகோல் ஏது!! எனக்குத் தெரிந்த அளவில் தமிழில் 'அண்ணல்' என்ற சொல்லால் இவரை அழைக்கலாம்.

இவ்வளவுக்குப் பிறகும் அசையப் போவதில்லை உன் காங்கிரஸ்! எதற்குமே அசையாது—காரணம்? பசையற்று விட்டது! இந்த 'வறட்சி'யை மங்கையுடன் உவமித்துக் கூறுவது கூட அவ்வளவு பொருத்தமானதல்ல! அந்தச் சொல்லே கடைப்பட்டுவிடும்! அதைவிடக் காங்கிரசை, பல்விழுந்து, உடல் கூனி, நரைத்த முதுகிழவிக்கு ஒப்பிடலாம்—அவளும் விதவைக் கிழவி—வெறும் விதவைமட்டுமல்ல, நாதியற்றவள்! அவளுக்கு வாழ்வும் ஒரு கேடா? இப்படித்தான் நீ காங்கிரசைப்பற்றி கருதியிருக்கிறாய்!

'சுத்த அபாண்டம்! என் அருமைக் காங்கிரசுக்கும் எனக்கும் கலகமூட்டும் நாரதப் பேச்சு இது! அவள் வாழ்வையே நான் குறியாகக் கொண்டிருக்கிறேன் என்பதை நீயே முதலில் ஒப்புக் கொண்டுவிட்டு, நான் வேறுவிதமாக நினைப்பதாகக் கூறுகிறாயே; இது அடுக்குமா?' என்பாய்; விளக்கமாக மொழிந்து விடுகிறேன்.

தமிழ்நாடு என்ற பெயரை நீ விரும்புகிறாய்; தமிழ்நாடு காங்கிரசு மாநாடு என்ற தொடரை மட்டும் வைத்துக் கொண்டு நான் இந்த முடிவுக்கு வந்துவிடவில்லை. சென்ற ஆண்டு மாநிலத் திருத்தமைப்புக் குழுவின் அறிக்கை வெளியானபோது, சென்னை மாணவர் ஒருநாள் மறியல் நடத்தினர். மறியலுக்கான காரணங்களில், தமிழ்நாடு என்ற பெயர் சென்னை மாநிலத்திற்குச் சூடப்பட வேண்டும் என்பது சிறப்பான ஒன்று. அம் மறியலில் கலந்து கொண்டவர்களுள் நீயும் ஒருவன்! கட்சி மாறுபாட்டால் அன்று கடற்கரைக் கூட்டத்தில் நம்மிடையே சிறிது பூசல் ஏற்பட்டது. இன்னும் உன் நினைவைவிட்டு அகன்றிருக்க முடியாது. எனவே தமிழ்நாடு என்னும் சொல் எனக்கு இனிப்பதுபோல் உனக்கும் இனிக்கிறது என்றுதானே நான் கருத முடியும்?

ஆனால், சேலத்தில் நீ உன் விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை! இது எதைக் காட்டுகிறது? 'கிழவியைப் போய் மலரணியச் சொல்வதா!' என நாணியிருக்கிறாய் என்பதைத்தான் காட்டுகிறது. திக்கற்ற விதவைக் கிழவியிடம் அவ்வாறு பேசுவது கேலிப்பேச்சாகுமே என்று கருதி, நாக்குக் கூசி ஊமையாகி விட்டாய்! மணம் நின் மூக்கைத் துளைக்கிறது; காங்கிரசின் பரிதாப நிலையோ அவள்மீது கழிவிரக்கம் கொள்ளச் செய்கிறது!

இந்த இக்கட்டான நிலையில், சிந்தனைக் கதவுகளுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, மாநாட்டைக் கூட்டினாயே அந்தத் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். ஐம்புலனையும் அவித்துச் செயலாற்றிய நின் மாவீரத்தை நெஞ்சால் நினைந்து எழுத்தால் வழுத்துகிறேன். பிறகு சந்திப்போம். வணக்கம்.

"இளந்தமிழன்"

1-11-56

முதல்

தென்னடெங்கும்

★


மாடர்ன் தியேட்டர்ஸின்

மகத்தான திரைச்சித்திரம்

★




★ பாசவலை ★




M. K. ராதா, G. வரலட்சுமி,

M. N. ராஜம், E. V. சரோஜா,

கருணாநிதி, V. K. ராமசாமி

முதலியோர் நடித்தது.

★

டைரெக்ஷன்:

A. S. நாகராஜன்.


சங்கீத அமைப்பு:

விஸ்வநாதன் &

ராமமூர்த்தி.

வசனம்: ப. கண்ணன்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.




[முன் இதழ் தொடர்ச்சி]

மைத்:- கவலை வேண்டாம். கர்த்தர் இருக்கிறார் காப்பாற்ற. படைத் தலைவர்க்கெல்லாம் தலைவன் நீர்! வாய்ப்பு இருக்கிறது, விவேகத்தோடு நடந்துகொண்டால். பரிசு ஆயிரம் கழஞ்சு பொன்; பிறகு பல்லவநாட்டு அமைச்சர்!

விக்ர:- எப்படிச் செய்வதென்று.......

மைத்:- மலைக்காதீர்!

'மன்னர் போர்முனையில் பகைவரோடு போராடிக் கொண்டிருக்கும்போது, பின்புறமிருந்து முதுகிலே ஒரு குத்து. ஒரு வீச்சு. உடனே மறைவு. அவ்வளவுதான் கூட்டத்திலே யாரோ, எவரோ என்று போய்விடும். அடிக்கடி வராது இதுபோல் அரிய சந்தர்ப்பம்.'' சேனபதியின் காதருகே ரகசியமாகச் சொல்கிறான் மைத்ரேயன்)

மைத்:- (வெளிப்படையாக) என்ன சொல்லுகிறீர்?

விக்ர:- அப்படியே செய்து முடிக்கிறேன் சுவாமி!

(முரசு, தாரை, எக்காள ஒலி கேட்கிறது)

விக்ர:- அதோ, முரசொலி கேட்கிறது! படை புறப்பட ஆயத்தமாகிவிட்டது. நான் வருகிறேன், வணக்கம்.

(வணங்கிச் செல்கிறான்)

## காட்சி 11.

(முல்லையின் வீடு. பச்சையும், அவளும் இருக்கின்றனர்)

முல்லை:- எங்கே; நாஞ் சொல்ற மாதிரி மட மடன்னு சொல்லு பாக்கலாம்.

பச்சை:- முல்லை! இதிலே நான் ஜெயிச்சேன், ஏங்கையாலே நாலு அறை நீ வாங்கிக்கணும்.

முல்லை:- சரி. "அடடா நரி கரடேறுதடா ஒன்பது நரியினில் ஒரு நரி சின்ன நரியடா சின்ன நரி முதுகினில் ஒருபிடி நரை மயிரடா நரைமயிர் நுனியினில் புதுமலர் மணமடா புது மலர் மணமதில் குமரியின் நினைவடா!"

பச்சை:- (நிதானமாக) அடடா, நரி கரடேறுதடா. ஒன்பது நரியினில் ஒருநரி.... சின்ன, நரியடா! சின்னநரி முதுகினிலே!....

முல்லை:- (வெடுப்பாக) பனங்காயி! சே! சே! இப்படி ஆமை வேகத்திலே ஆருந்தான் சொல்லுவாங்க! நீயென்ன!

பச்சை:- முல்லை! வேகம் பெரிசா? பாவம் பெரிசா? நான் புலவர் மகன். பாவத்தோட பக்குவமா, புரியராப்லேதாஞ் சொல்வேன். அடடா தடடா தடாதடா வெல்லாம் ஒத்தவாது.

முல்லை:- அப்படின்னு தோல்வி! தோல்வி! வேகம் ஒனக்கு வராது!

பச்சை:- நெனச்சுகிட்டே! வச்சுப்பாரேன் ஒரு ஓட்டப் பந்தயம் நாந்தான் ஜெயிப்பேன்.

முல்லை:- ஓட்டப் பந்தயமா? அதிலே ஒளறுவாயனும் ஜெயிக்கலாம்! அதெல்லாம் உதவுக்கு வெளியே. இன்னொரு பந்தயம், அதிலே தோத்தவங்க ஜெயிச்சவங்களுக்கு மூணுமாசம் அடிமையா இருக்கணும். என்ன சொல்றே?

பச்சை:- அடிமையா? அப்படின்னு, சொல்ற வேலையெல்லாஞ் செய்யணுமோ?

முல்லை:- ஆமாம். நான் ஜெயிச்சேன்னு வச்சுக்க. ஒனக்கு உத்தரவு போடுவேன்: சோறுக்கு—ஆக்கணும். சேலை துவை—துவைக்கணும். வீட்டைப் பெருக்கு—பெருக்கணும். வெந்நீர் போடு—போடணும். படுக்கையை விரி—விரிக்கணும்.

பச்சை:- நான் ஜெயிச்சா உத்தரவு போடுவேன்: சோறு போடு—போடணும். கைகழுவு—கழுவணும். அப்பறம் படுக்கையிலே ஃகாயா

படுப்பேன்! காலைப்புடி—புடிக்கணும். வெத்திலை மடி—மடிக்கணும் வாயிலே வையி—வைக்கணும். அப்புறம்....அப்புறம்....வந்து....

முல்லை:- கன்னத்திலே குடுன்னு சொல்லுவே. ஓங்கிக் குடுப்பேன் இப்படி.

(அவன் கன்னத்தில் அறைகிறாள்)

பச்சை:- முல்லை! ஏது, ஏமாந்தா அறைஞ்சிடுவே போலே இருக்குதே!

முல்லை:- பந்தயத்திலே நான் ஜெயிச்சவ; ஒங்கணக்குப்படி நாலுக்கு இன்னும மூணு பாக்கி. இந்தா வாங்கிக்கோ!

(அவள் அறைய, அடிக்குத் தப்பி லாவகமாகப் பின்னால் நகருகிறான். தள்ளாடி உள்ளே நுழைந்த ஒரு வீரன் பச்சைமேல் மோதிவிழுகிறான்)

பச்சை:- (அஞ்சி) ஐயையோ? இதென்ன பேயா? பிசாசா?

முல்லை:- ஏதுவுமில்லை. ஒரு ஆளு. (பார்த்து) அடடே! பாவம்! பசி மயக்கம் போலேருக்குது.

வீரன்:- (குழறி) அம்மா! தாகம்....கொஞ்சம் தண்ணி.

(முல்லை ஓடிச்சென்று தண்ணீர் கொண்டுவருகிறாள். அதை வாங்கி வாயில் ஊற்றுகிறான் பச்சை. தெளிந்து எழுந்திருக்கிறான்)

பச்சை:- யாருப்பா நீ? என்ன ஒடம்புக்கு?

வீரன்:- (நடுங்கிக்கொண்டு) குருக்கோட்டையிலேருந்து வர்றேன். குருதை வெளியே நிற்குது. ஒலியர் மைத்ரேயரை அவசரமா பார்க்கணும். வழியிலேயே ஜொரம் வந்துடிச்சு. குளிரு தாங்க முடியலே. நாக்கெல்லாம் வரண்டு போச்சு. ஐயா! மைத்ரேயர் வீடு எங்கேருக்குது?

முல்லை:- (சந்தேகித்து) அவசரமா பாக்கணுமா? அப்படி என்ன சேதிங்க? சொல்லுங்க.

வீரன்:- (நடுங்கியவண்ணம்) ராஜாங்க சேதி-ஓலை கொண்டாந்தேன். அவசரமா அவுரு கிட்டே சேக்கணும். சேத்தப்புறம் நான் செத்தாலும் பாதகமில்லே. ஐயா! ஐயா! எடத்தைச் சொல்லுங்க ஐயா!

பச்சை:- இந்தாய்யா! கெழக்காலே போனா மண்டபத் தெரு; அதுலே வலது பக்கம் மூணாவது வூடு வித்யாவதிக்குச் சொந்தம். அங்கேதான் இருக்காரு மைத்ரேயர். பொறப்படு.

(வீரன் வணங்கிவிட்டு போகிறான் தள்ளாடிய வண்ணம்)

முல்லை:- (கடுப்பாக) நீயொரு மனுஷன்! நீ எங்கேருந்து வர்றான்னு அவனைக் கேட்டியா?

பச்சை:- குருக்கோட்டையிலேருந்து.

முல்லை:- நம்மவனா? அன்னியனா?

பச்சை:- அன்னியன்!

முல்லை:- (வியந்து) அடஐயா! குருக்கோட்டை மேலெதானே நம்ம மகாராஜா படையெடுத்திருக்காரு. இவன் அங்கேருந்துதானே சேதி கொண்டாந்திருக்கான். ராஜாங்க சேதின்னானே! நேர்மையா மகாராணிகிட்டே, மந்திரி கிட்டேல்ல போகணும்? மைத்ரேயருகிட்டே போவானேன்? ஏதோ மர்மம் இருக்குது ஐயா இருக்குது!

பச்சை:- (யோசித்து) முல்லை! மைத்ரேயர் கூட நம்ம நாட்டாரல்ல. தெரியுமா ஒனக்கு?

முல்லை:- (வியந்து) அப்படியா? மண்டுவே! பொறப்படு வித்யாவதி வீட்டுக்கு. இளைய மன்னர் சந்திரவர்மரை இப்பவே பார்க்கணும். விபரத்தைச் சொல்லணும்.

பச்சை:- அவுரு சக்திமுனிவரைப் பார்க்க கோயிலுக்கல்ல போயிருப்பாரு.

முல்லை:- வா, நாம்பளும் கோயிலுக்கே போகலாம்.

பச்சை:- கோயிலுக்கா?...கோயிலுக்கேவா?

முல்லை:- (பழித்து) ஆமா; ஆமா! கோயிலுக்கேதான்!

(அவனை இழுத்துக்கொண்டு போகிறாள்)

## காட்சி 12.

(வித்யாவதி வீடு. கையிலே உள்ள ஓலையை பரபரப்போடு படித்துக் கொண்டிருக்கிறாள் வித்தியாவதி.)

"பாண்டியன் ஸ்ரீ வல்லவன் படையெடுக்கு முன், காஞ்சியிலே நமது பன்றிக்கொடி பறக்க வேண்டும். பாண்டியன் நமது நேச மன்னன் எனவே நம்மை எதிர்க்க மாட்டான்! பல்லவத்தை கைப்பற்ற சாதகமான சூழ்நிலை. தாமதம் கூடாது. உடனே சந்திரவர்மனைக் கொன்று விடவும். மிக அவசரம்."

—தைலபன்,
சாளுக்கிய மன்னன்.

மைத்ரே:- (வந்து) வித்யாவதி! என்ன ஓலை!

(வளரும்)

# பகுத்தறிவு

கழக வார இதழ்

ஆசிரியர்: ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 9-11-56. ★ விலை அணா ஒன்று. | இதழ் 19


# கல்யாணம் செய்வோர் காமாந்தகர்களா?

“தி.மு.க. வினர்க்குஎன்ன திறமை இருக்கிறது, சட்ட சபைக்குப் போக” என்று கேட்கிறார்கள். திறமை இருப்பதும் இல்லாததும் அங்குபோன பிறகல்லவா தெரியும்? காங்கிரஸ்காரர்களுடைய திறமையைத்தான் பார்க்கிறீர்களே! பந்த் உள்நாட்டு மந்திரியாக இருக்கிற காலத்தில் நாக நாட்டில் தொடங்கி, தமிழ்நாடுவரை துப்பாக்கி வெடித்துக் கொண்டேயிருந்தது! இரத்த வெறியன் என்று தூற்றப்பட்ட டயர் கூட 1700 ரவுண்டுகள்தான் சுட்டான். பம்பாயிலோ 2500 ரவுண்டுகள் சுடப்பட்டன. ரேடியோவுக்கு ஒரு மந்திரி! ஆனால், யாருமே உள்நாட்டு ரேடியோவைக் கேட்பதில்லை. சிலோன் ரேடியோவைத்தான் கேட்கிறார்கள். கலயாணமான பெண் பக்கத்து வீட்டைப் பார்க்கிறாளென்றால், அது கணவனுடைய திறமையின்மையைத்தானே காட்டுகிறது? சுதந்திரம் வந்ததற்குப் பின் வருடத்திற்கு இரண்டு இரயில்கள் கவிழ்ந்து கொண்டே இருக்கின்றன. யார் யாரைப் பார்த்து திறமையற்றவர்களென்று சொல்வது?

“பதவிப் பித்தர்கள்! அதனால்தான் தேர்தலில் நிற்கிறார்கள்”—இப்படி ஒரு கூக்குரல். சட்டசபைக்குப் போவாதாலேயே பதவி கிடைத்துவிடாது. சட்ட சபையில் பதவி ஒரு பகுதி! கல்யாணம் செய்து கொள்பவர்களெல்லாம் காமாந்தகாரர்களா? ‘அது’ கல்யாணத்தில் ஒரு பகுதி. இவனுக்கு அது புரியாது. எப்படியாவது காமராஜர் மந்திரியாக வர வேண்டும். இவர்கள் அவரை மந்திரியாக்க முடியுமா? காமராஜர் காங்கிரஸ் கட்சிக்குக் கட்டுப்பட்டவர். காங்கிரஸ் கட்சி தீர்மானித்தால் அவர் தேர்தலிலேயே நிற்கமுடியாது. அவர் மந்திரியாக வர நாம் அங்கு போகக்கூடாதாம்! ஏன்? அவர்களுடைய அரசியலறிவு அவ்வளவுதான்!

“தேவிகுளம், பீர்மேடு” என்ன ஆயிற்று” என்று கேட்டால், “மேடாவது, குளமாவது! அது இங்கிருந்தாலென்ன, அங்கிருந்தாலென்ன?” என்கிறார் காமராஜர். தேர்தலில் நின்று ஓட்டு கேட்க வரும்போது அப்படிச் சொல்லிப் பார்க்கட்டும். “ஓட்டாவது, சீட்டாவது! நீங்கள் சட்ட சபைக்குள்ளிருந்தாலென்ன, வெளியிலிருந்தாலென்ன?” என்றல்லவா மக்கள் சொல்லுவார்கள்!

திராவிடக் கழகத் தோழர்கள் ‘மேலே’யிருப்பவர்களைப் பார்த்து ஏமாந்துவிட வேண்டாம். அரசியலில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தித்தான் ஆகவேண்டும்.

நள்ளிரவில் ஒரு தெருவில் திருடன் நுழைந்து விடுகிறான் “திருடன், திருடன்” என்று கூக்குரல் கிளம்புகிறது. எல்லோரும் தத்தமது வீட்டிலிருந்து கதவைத் திறந்துகொண்டு ஓடிவருகிறார்கள். திருடனையும் அடித்து விரட்டி விடுகிறார்கள். பிறகு அவனவன் தத்தமது வீட்டிற்குப் போவதுதானே நியாயம்? அப்படியில்லாமல் ஒருவன் வேறொருவனுடைய வீட்டிற்குள் புகுந்தால் இவனல்லவா திருடன்! அதைப்போலத்தான் வெள்ளையனை விரட்டிய பின்பு, வடநாட்டுக்காரன் இங்கு வந்து உட்கார்ந்து கொண்டான்.

‘சோறு பெரிதா, மானம் பெரிதா’ என்று கம்யூனிஸ்ட் தோழர்கள் கேட்கிறார்கள். சோறு உருவமுள்ளது; மானம்

(10-ம் பக்கம் பார்க்க)

# சிவாஜியும், சிவஞானமும்.

சேரலாதன்.

## கி. பி. 1665.

"என்னைப் பெற்றெடுத்த இத் தாய்த் திருநாடு, பேயர்களின் பிடியிலிருப்பதா? நான் உரிமையோடு தவழ்ந்து விளையாடிய மண்ணிலே அடிமையாக வாழ்வதா? அவமானம், அவமானம்! முகலாயர்கள் நம்மை ஆளுவது நமக்கெல்லாம் பெருத்த அவமானம்! நாமென்ன சாவுக்கஞ்சும் சமுதாயமா, சமருக்கஞ்சி? சோலையிலே தென்றலிலே சொகுசு! பின்னர் சொந்த நாட்டைக் காப்பாற்ற சுழற்றுங்கள் வாளை! வாழ்ந்தால் விடுதலைபெற்று வாழ்வோம். இல்லையேல், விடுதலை பெறுவதற்காகச் சாவோம். மராத்திய இனத்தை மாற்றான் ஆளுவதா? நாமெல்லாம் மாளுவதா? வெட்கமில்லையா? கட்கமேந்தி புறப்படுங்கள்! கபோதிகளை ஒழிப்போம்!" என்று சீறியெழுந்தான் சிவாஜியெனும் மாவீரன்—மராத்திய வீரன்! ஆயிரக்கணக்கான அடலேறுகள் அவன் அடியைப் பின்பற்றினர். நூற்றுக்கணக்கான கோட்டைகளைக் கைப்பற்றினர்.

அவற்றில் ஒன்று பூனா மாவட்டத்திலிருந்த புரந்தர் கோட்டை!

புரந்தர்கோட்டை சிவாஜியின் கைக்குவந்த சின்னாட்களுக்குப் பிறகு—

திடீரென்று ஒருநாள் அந்தக் கோட்டையைக் கைப்பற்ற முகலாயப் படை திரண்டு வந்தது. படையை நடத்தி வந்தான் ஜெய்சிங் என்ற ராஜபுத்திர வீரன். மராத்திய வீரர்களும் சினந்தெழுந்தனர்.

படையோடு படை கலந்தன. ஆட்களோடு ஆட்கள் மோதினர்; வாட்களோடு வாட்கள் மோதின! தலைகள் தெறித்து விழுந்தன இரத்தச்சேற்றில். பலம்பொருந்திய முகலாயப் படையுடன் அதிக நேரம் போரிட மராத்திய வீரர்களால் இயலவில்லை. விரைவிலே, புரந்தர் நகரின் இரட்டைக் கோட்டைகளுள் கீழ்க்கோட்டை ஜெய்சிங்கிற்குப் பணிந்தது.

அடுத்து, சுற்றுப்புறத்தைக் கொள்ளையடிக்க ஆர்த்தனர் முகலாய வீரர்கள். முரார் பாஜி பிரபு உட்பட பெயர்பெற்ற பெரும் வீரர்கள் பலரை மராத்தியப் படை இழந்து விட்டது. மராத்திய மங்கையர் பலர் கோட்டைக்குள்ளிருந்தனர். அவர்களெல்லாம் மாற்றார் கையில் சிக்கினால்...... மானமிழந்து, உயிரிழந்து......அப்பப்பா! எவ்வளவு கொடுமைக்கு ஆளாவர்!

சிந்தித்தான் சிவாஜி! அந்த சிந்தனையின் முடிவு புரந்தர் உடன்படிக்கை! அந்த உடன்படிக்கையின் விளைவு, புரந்தர் கோட்டை உட்பட சிவாஜிக்குக் கீழ்ப்படிந்திருந்த பல கோட்டைகள் ஜெய்சிங்கிற்குக் கிடைத்தன. அன்றிருந்த முகலாயப் பேரரசன் ஔரங்கசீப்பினிடம், சொல்லி சிவாஜியைத் தக்கணத்திற்குத் தலைவனாக்குவதாகவும் வாக்களித்தான் ஜெய்சிங். மன்னனைச் சந்திக்க வழி செய்வதாகவும் கூறினான். இது நடந்தது 1665-ல்!

அடுத்த ஆண்டு—1666-ல், ஜெய்சிங்கின் அழைப்பின் பேரில், சிவாஜி தனது மகன் சாம்பாஜியுடன் ஔரங்சிப்பை சந்திக்க ஆக்ரா நகருக்குச் சென்றான். அங்கு அவனை எதிர்நோக்கி வரவேற்பும், தக்கணத்தின் தலைமைப் பதவியும் காத்திருக்கவில்லை; அவமதிப்பும், சிறைக்காவலும் இருந்தன.


**வாய்வு சூரணம்.**

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தநூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம், மூலிகைகளினால் தயாரிக்கப்பெற்றது (பத்தியமில்லை)

**5-பலம் டின் ரூ 3—0—0**

**சம்பு இண்டஸ்ட்ரீஸ்,**
**சேலம்-2.**


ஜெய்சிங்கின் அரசியல் தந்திரம் சிவாஜியை சிறைப்படுத்தி விட்டது! பிறகு, சிவாஜி தப்பிவிட்டபோதிலும், அரசியல் உலகத்தில் அன்று முதல் நடைபெற்றுவரும் தந்திரங்களும், மோசடிகளும் இன்றுவரை குறைந்தபாடில்லையே!

## கி. பி. 1956.

"தமிழ்நாடு தமிழருக்கே!
தமிழ்ப் பகுதிகளை தமிழகத்
துடனே சேர்!
சித்தூர், திருத்தணி தமிழ்நாட்டுக்கே!"

இப்படிப்பட்ட முழக்கங்கள் சில நாட்களுக்கு முன்பு தமிழ் நாட்டிலே கேட்டன. திரு. ம. பொ. சிவஞானத்தின் தலைமையிலே நூற்றுக்கணக்கான தமிழரசுக் கழகத் தோழர்கள் வடஎல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை புகுந்தனர். சட்டசபைக்கு முன்பும், அஞ்சல் நிலையங்களுக்கு முன்பும் மறியல்! இரயில்கள் நிறுத்தப்பட்டன! மானங்கெட்ட மந்திகள் போன இடங்களிலெல்லாம் கருப்புக் கொடிகள்! பலன்? "மண்டல சபை வந்துதான் எல்லைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும். அதற்காக எல்லைக் கமிஷன் அமைக்கமுடியாது" என்று அதிகார போதையில் டெல்லி சொன்ன ஆணவமான பதில்தான்!

ஆனாலும், போராட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. ஏன்? ஏன்? ஏன்?

"எல்லைப் பிரச்சினை பற்றிப் பண்டித பந்துடன் சிவஞானம் பேசி, ஒரு முடிவுக்குவர வழி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டாராம் அமைச்சர் சுப்ரமணியனார்!

"இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு அதிக தொகை ஒதுக்க வேண்டுமென்று டெல்லியிடம் வாதாடப் போகிறேன்; சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதற்கு டெல்லியிடம் சண்டையிடப் போகிறேன்; தேவிகுளம்—பீருமேடு தமிழ்நாட்டுடன் சேராவிட்டால் நேருவையே ஒருகை பார்க்கிறேன்" என்ற அளவுக்குப் பேசிக் குதித்த வாய்வீச்சுக்காரரல்லவா இந்த நிதி அமைச்சர்? இவர் சொன்னார் என்பதற்காகவா

[9-ம் பக்கம் பார்க்க]

# எதிரொலி



என்னுடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லி, கதா காலட்சேபம் செய்வேன்.

—மந்திரி, சுப்ரமணியம்.

*ஆச்சாரியாரின் சீடரென்றால், அந்த வழியில்தானே போகவேண்டும்?*

* * *

சேலத்தில், கிருஷ்ணலீலா நாடகம் பார்த்தவருக்கு மயக்க மருந்து

—செய்தி

*மயக்க மருந்தால் பணமும், மோதிரமும் பறிகொடுத்தார்; நாடக மருந்தால் நல்லறிவைப் பறிகொடுத்தாரோ?*

* * *

கர்நாடக இசையைக் கலப்படமாக்க டெல்லியார் முயற்சி.

—செய்தி

*கோதுமையும், நெல்லும் சேர்த்து பயிரிட்டால், கோதுமையும் இருக்காது, நெல்லும் கிடைக்காதே!*

* * *

கடப்பை மாவட்டத்தில் பொதுத் தேர்தலில் நாத்திக முன்னணியினர் போட்டியிடுவர்.

—செய்தி.

*எதிர்ப் பிரசாரத்திற்கு ஆண்டவர்களே பிரசன்னமாகக் கோரி பக்தர்கள் யாகம் செய்யலாமே!*

* * *

திராவிடக் கழகம் தேர்தலில் போட்டியிடாததற்குக் காரணம் என்மேலுள்ள பிரியமல்ல; தோற்பது நிச்சயம் என்ற பயந்தான்!

—முதல்மந்திரி காமராஜர்

*இந்தத் தாக்குதலையுங்கூட "பச்சைத் தமிழரின் ராஜ தந்திரம்" என்று பாராட்ட முடியுமே "குத்தூசி"யால்! சீடர்கள்தான் சிந்திக்கக்கூடாதே!*

* * *

குழந்தைகளே! வால்மீகி ராமாயணத்தைப் படியுங்கள்; ராமனாகவும், சீதையாகவும் ஆக முயலுங்கள்.

—சுவாமி சிவானந்தர்.

*குசன்தான் ராவணன் மகன், லவன் யாருடைய பிள்ளையென்று கேட்காதீர்கள்! அது ராமனுக்கே புரியாமல்தான் விபசாரி யென்று நெருப்பில் தள்ளினான் சீதையை!*

# தேர்தல் நிதி தாரீர்!

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்! அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விபரம் அறிந்துள்ள தேர்தல் ஆய்வுக் குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே வீறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானால், தொகுதி தோறும் செய்யப்படவேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

**எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து லட்சம் தேவையென்று மதிப்பிட்டது.**

*சிறுதுளி பெருவெள்ளம்!*

*கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானால், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.*

*கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்து நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்,*

*மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.*

*தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.*

**தேர்தல் நெருங்குகிறது!**
**பொறுப்பு மிகுகிறது!**
**கடமை விரைந்து செய்ய வாரீர்! வாரீர்!**

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
31-10-56

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்.

குறிப்பு:— நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 9—11—56 | இதழ் 19

# தேர்தல்; விபசாரமா?

மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் ஆளுவதற்குத்தான் மக்களாட்சி என்று பெயர். அத்தகு மக்களாட்சி நடைபெற வாய்ப்பளிப்பதே குடியரசு—சனநாயக—முற்போக்கு அரசியல் முறையாகும்.

முடியரசு, சர்வாதிகாரம் போன்ற தனி மனித பலத்தால் மக்களை ஆட்டுமந்தைகளாக்கிக் கோலோச்சிய கொடுமையாளர்களை வீழ்த்தி, சனநாயக முறையினை மேற்கொள்ள பல நாடுகளிலே செய்யப்பட்ட கிளர்ச்சிகள், புரட்சிகள் கொஞ்சமல்ல; சிந்தின குருதி, செத்து விழுந்த பிணங்கள் குறைவல்ல!

அளவிடற்கரிய தியாகத்தின்மீது அரும்பிய சனநாயக முறையினை மேற்கொள்ளும்வாய்ப்பு இந்திய துணைக்கண்டத்திற்கு மிக எளிதாகக் கிட்டியது, சாதகமான சூழ்நிலையின் பயனாக!

ஒரு கருத்தினரை—கட்சியினரை ஆட்சி பீடத்தில் ஏற்றி வைக்கவும், இறக்கிவிடவுமான சக்தியை மக்கள் பெற்றிருப்பதும், அந்த சக்தியின் சின்னமாக வாக்குரிமை விளங்குவதும் உய்த்துணர்ந்த எவரும், அந்த வாக்குரிமையைப் பயன்படுத்தி நம்மை ஆளுவோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலைத் தவறானதென்றோ, தீதானதென்றோ கருதமாட்டார்கள்; பேசமாட்டார்கள், எழுதமாட்டார்கள்.

இந்நாட்டு மக்கள் மக்களாக, வாழவேண்டும் அத்தகைய வாழ்வுபெற முடியரசு ஒழிந்து குடியரசு தோன்றவேண்டும் என்ற லட்சியத்தோடு "குடி அரசு" பத்திரிகை நடத்தி, புதியதோர் விழிப்புணர்ச்சியினைத் தோற்றுவித்தவர் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பெரியார் இராமசாமி அவர்களேயாவர்.

இழிநிலை போக்க சமுதாயப் புரட்சியும், புரட்சியின் பலனை அமலாக்க முற்போக்கான அரசாங்கமும் தேவையென்பதுதான் நியாயமும் கூட! ஆனால்,

7—11—56 "விடுதலை" எழுதுகிறது: "திராவிடக் கழகமோ, தேர்தலில் கலந்துகொள்ளாத, சமுதாயப் புரட்சித் தொண்டு செய்துவருகின்ற கழகம். இதைக்காணும் மற்ற அரசியல் கட்சிகளுக்குப் பொறாமை பொங்கி வழிகிறது. "நீங்களும தேர்தலில் ஈடுபட்டுப் பாருங்கள். நிச்சயம் தோற்றுவிடுவீர்கள்" என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. மரியாதையான குடும்பப் பெண்ணை நோக்கி "நீயும் என் தொழிலில் இறங்கிப் பார்த்தால் தெரியும்" என்று வழுக்கி விழுந்த பெண் அறைகூவி அழைப்பது போலிருக்கிறது இந்தப் பேச்சு."


இவற்றிலிருந்து தேர்தல் என்பது கேவலமானவொன்று; தோல்விக்குரியது; விபசாரம் போன்ற ஈனத்தன்மை வாய்ந்தது என்ற கருத்தினைப் பெறமுடிகின்றது. முற்போக்கு நாடுகள் அறிவின் விளைவாக—தியாகத்தின் விலையாகப் பெற்றெடுத்த தேர்தல் முறையினை, இருபதாண்டுகளாக "குடி அரசு" மூலம் பெரியார் பரப்பிய முன்னேற்றக் கருத்தினை, அரசியல் விடுதலை எண்ணங்களை இவ்வளவு கீழ்த்தரமாகவா—அயோக்கியத்தனமாகவா "விடுதலை" தாக்கிக் கிழித்து எறியவேண்டும்? திராவிடக் கழகத் தொண்டர்கள் சிந்திக்க வேண்டாமா?

'நம்மை ஆளுவோர் யார்; எக்கொள்கையுடையவர்; எத் தகுதிபடைத்தவர் நமக்குவேண்டும்; எவரால் நமக்குற்ற இழிவு நீங்கும்' என்பனவற்றை ஆராய்ந்து பார்த்து, வாக்குரிமையைப் பயன்படுத்தி ஆளுவோரை நிர்ணயிக்கும் அரியதோர் பணியினை விபசாரத்திற்கு ஒப்பிடுகிறது 'விடுதலை'! இது சரிதானா? நியாயம்தானா?

தேர்தல் தீதானது என்று கருதினால் தேர்தலை எதிர்க்கலாம்; தேர்தலே தேவையில்லையெனலாம்; முறைகளைக் கண்டிக்கலாம் அதிலே நாணயமுண்டு. மலம் கேவலமானது என்று சொல்லிவிட்டு, அதை என் இலையிலே வை என்றல்லவா சொல்லுகிறது 'விடுதலை!'

"தேர்தல் ஒரு தீமை. ஆனால், நான் காட்டுகிற காமராசருக்கு ஓட்டுப்போடு" என்பதற்கு வேறு என்னதான் பொருள்? "தேர்தல் விபசாரம். நமக்கு வேண்டாம். என்றாலும் தொண்டர்களே! காமராசருக்காகச் செய்யுங்கள்!" என்று கட்டளையிடுகிறது 'விடுதலை'! தி. க. தொண்டர்களே! பக்தர்களே! உங்கள் பரிதாப நிலைக்கு வருந்துகிறேன்.

—ப. கண்ணன்.




[முன் இதழ் தொடர்ச்சி]

வித்யா:- (பதைத்து) ஆ! சண்டாளா! ஓவியனா நீ? சாளுக்கிய நாட்டின் ஒற்றன்! பல்லவர் ஆட்சியைக் கவிழ்க்கவந்த அரசியல் கொலைகாரன்.

மைத்:- யார் சொன்னது?

வித்யா:- இதோ, இந்த ஓலை.

(விட்டெறிகிறாள். பரபரப்போடு எடுத்துப் பார்த்து)

மைத்:- இதைக் கொண்டுவந்தது யார்?

வித்யா:- ஒரு சாளுக்கியன். சாகக் கிடைக்கிறான் கொல்லைப்புறத்தில். வஞ்சகப்பேயே! இந்தப் பழிபாவத்திற்காகவா நீ, என் வீட்டில் குடியேறினாய்?

மைத்:- (சிரித்து) பைத்தியக்காரி! தோட்டிக்கு கண் பிணத்தில்! தாசிக்குக் கண் தனத்தில்! தேடிவரும் வாழ்வைத் தீதென ஒதுக்கிடும் வேசியுமுண்டோ?

வித்யா:- வாழ்வு! வஞ்சகத்தின் அணைப்பிலே வாழ்வா கிடைக்கும்? நரகம் கிடைக்குமென்று சொல்! நான் தாசியாக இருக்கலாம்; உன்போல் செய்நன்றி மறக்கும் துரோகியல்ல!

மைத்:- குருவையே மிஞ்சுகிறாயே! (சிரித்து) பேதையே! எலியைக் கொல்வது பூனையின் துரோகமல்ல; அதன் இயற்கை!

வித்யா:- ருத்ராட்சப் பூனையே! உன் இயற்கையறியாமல் இத்தனை நாள் ஏமாந்துவிட்டேன். மன்னன் நந்திவர்மன், இளையவர் சந்திரவர்மன்; இருவரையும் வஞ்சகமாய் மாய்த்துவிட்டு, காஞ்சியிலே சாளுக்கிய ராஜ்யம் திருவவந்த சதிகாரா! உன் எண்ணம் ஈடேற நான் விடப் போவதில்லை.

மைத்:- முடியாது பெண்ணே; முடியாது! ஈசனே வந்தாலும் அது முடியாது! காரியம் மிஞ்சி விட்டது. குருக்கோட்டைப் போர்முனையில் நந்திவர்மன் கொல்லப்பட்டிருப்பான். சந்திரவர்மன் இங்கு புதைக்கப்பட வேண்டியவன்! அதற்கு நீ உடன்பட்டே யாகவேண்டும்.

வித்யா:- ஒருக்காலும் முடியாது.

மைத்:- வெண்ணெ திரளும் போது தாழியை உடைக்காதே! என் விருப்பம்போல் நடந்தால், நீ அரண்மனை நாட்டியக்காரி! அந்தஸ்தில் உயர்வு! பரிசு கொஞ்சமல்ல! ஆயிரம் பொற்காசுகள்!

வித்யா:- தூ! உன் பொற்காசு, என் கால் தூசு! என் காதலருக்குத் துளியளவும் துரோகம் செய்யமாட்டேன்.

மைத்:- காதலர்! நானில்லாமல் எங்கேயடி வந்துவிட்டார் காதலர்? உங்களைச் சேர்த்து வைத்தவன், பஞ்சு மெத்தையிலே கொஞ்சிக் குலாவிட வாய்ப்பளித்தவன் நான், என் சொல்லையா மறுக்கிறாய்?

வித்யா:- மறுப்பது மட்டுமல்ல. உம்மை அடியோடு வெறுக்கிறேன்.

மைத்:- பல்லாண்டு முயற்சியிலே கட்டி முடித்த கோட்டையடி. பாவி! தகர்த்து விடாதே! தவிடுபொடியாகி விடுவாய்!

வித்யா:- நான் கொலையுண்டாலும் சரி; கொலைகாரியாக மாட்டேன்.

மைத்:- (தணிந்து) முல்லை! நல்ல சந்தர்ப்பம். சந்திரவர்மனைக் கொலை செய்ய வேண்டாம். சிறிதுநாள் உன் வீட்டிலே சிறைப்படுத்தவாவது உதவு. மன்றாடிக் கேட்கிறேன்.

வித்யா:- அற்பனே! யார் யாரைச் சிறைப்படுத்துவது? சற்று பொறு; வருகிறேன்.

(வெளியே போக முயல, வழிமறித்து)

மைத்:- (கடுமையாக) நில்! எங்கே போகிறாய்? (அங்கிருந்த வாளெடுத்து) கள்ளி! ஒரு அடி எடுத்து வைத்தாய், உயிரைக் குடித்து விடும் இந்த வாள்! இரண்டில் ஒன்று; என்

சொற்படி நடக்கப் போகின்றாயா? இல்லை, மடியப் போகின்றாயா?

வித்யா:- காதலனுக்குச் சிறை; தாயகத்திற்குத் துரோகம்; என்னைச் சித்ரவதைபே புரிந்தாலும் இதற்கு ஒப்பமாட்டேன்.

மைத்:- பீடையே, ஒழிந்துபோ!

(வாளை வீச, அவள் லாகவமாகக் குனிந்து தப்புகிறள். மீண்டும் வீச வாசற்படியின் வெளியிலிருந்து வாளொன்று மோதித் தடுக்கிறது. வாளால் மைத்ரேயனைத் தள்ளியவண்ணம் சந்திரவர்மன் உள்ளே வருகிறன்)

சந்தி:- (சினந்து) பெண் கொலை புரியத் துணிந்த பேயனே! என்ன, விபரீதத்தோடு விளையாடுகின்றாய்?

மைத்:- நல்ல சமயத்திலே வந்தாய்! நடந்ததென்ன தெரியுமா?

(வித்யாவதி, சாமர்த்தியமாக மைத்ரேயன் கையிலிருந்த ஓலையைப் பிடுங்குகிறள்)

வித்யா:- (படபடத்து) ஐயோ! ஒவியனாக நடித்த ஒற்றன் இவன்! தங்களைச் சாய்க்கவந்த சதிகாரன்! ஐயயோ! கொல்லுங்கள் இந்த நல்ல பாம்பை! கொல்லுங்கள்!

சந்தி:- வித்யாவதி எல்லாம் தெரியும் எனக்கு. ஒற்றனைத் தப்பவிடாது என் வாள்!

மைத்:- உங்களை வாழவிட்டு, நான் வாழ உத்தேசமில்லை. எனது கடைசி முயற்சி, கடைசி மூச்சாக முடிந்தாலும் சரி. இசைப் புலவரே!....

சந்தி:- சதிகார சைத்ரிகரே! உம்.... வாய் வீச்சு வேண்டாம். காட்டு உன் வாள் வீச்சை!

(இருவர்க்கும் வாட்போர் நடக்கிறது. மார்பில் குத்துண்டு சாய்கிறன் மைத்ரேயன்)

மைத்:- ஆ!.... ஐயோ!.... தைலபா....(மடிதல்)

வித்யா:- சுவாமி! கலைவளர்க்க வந்தவனல்ல மைத்ரேயன். கலகம் வளர்த்து, பல்லவ அரசபரம்பரையை அழிக்கவந்தவன். சாளுக்கிய மன்னனின் சதிக் கருவி. பாருங்கள் இந்த ரகசிய ஓலையை!

சந்தி:- (வாங்கிப் பார்த்து) ஆங்! எவ்வளவு மடத்தனமாக ஏமாந்திருக்கிறேன்! வித்யாவதி! எப்படியோ நயவஞ்சனிடமிருந்து நான் தப்பினேன்.

வித்யா:- மன்னவர் நிலை? ஐயோ! போர் முனையில் என்ன பொல்லாங்கு நேர்ந்ததோ தெரியவில்லையே!

சந்தி:- (சிந்தனையோடு) போர்முனையில்.......! போர்முனையில்.......! மைத்ரேயன் ஏற்பாட்டின் படி, மன்னவர் அங்கே மடிந்திருந்தால்... இங்கு ஆட்சியில் அமரவேண்டியவன் நான்தானே?.... ஆம்!.... நல்லதொரு சந்தர்ப்பம் வாய்த்தது நான் மன்னனாக! இப்பொழுதே மகாராணியிடம் செல்வேன்; இந்த ஓலையைக் காட்டி, மைத்ரேயன் மரணத்தைக் காட்டி, எனது ராஜ பக்தியை உறுதிப்படுத்திக் கொள்வேன்.

வித்யா:- (மகிழ்ந்து) அம்மாடி!.... உள்ளம் திருந்தினீர்களா என் சுவாமி? துரோகம் என்றைக்கிருந்தாலும்....

சந்தி:- வெல்லாது என்கிறாய்! பொறு வித்யாவதி; பிறகு வந்து சொல்லுகிறேன்.

(வேகமாக செல்கிறன்)

## காட்சி 13.

(அரண்மனை, ஆலோசனை மண்டபம். இராணி சங்காதேவியும், அமைச்சர் சீலாதித்தரும் இருக்கின்றனர்)

சங்கா:- மன்னரில்லாத வேளையிலே மாபெரும் தீங்கு! அமைச்சரே! பாண்டியன் சீவல்லபன், நம்மீது போர்தொடுக்கவேண்டிய காரணம்?

சீலாதி:- ஏதுமே கிடையாது. இது சந்திரவர்மரின் சதித்திட்டம்.

சங்கா:- ஆதாரம்?

சீலாதி:- இதோ, நமது ஒற்றர்கள் பாண்டிய வீரனிடமிருந்து கைப்பற்றிய மூடங்கல். (கொடுக்க)

சங்கா:- (வாங்கிப்படித்தல்) காஞ்சி இளவல் சந்திரவர்ம பல்லவர்க்கு வணக்கம். யாவுமறிந்தோம். உமது சகோதரன் நந்திவர்மனை வீழ்த்தவும், உம்மை அரியாசனத்து ஏற்றவும் நமது படை புறப்பட்டு விட்டது. வரும் மதியத்தன்று பெண்ணையாற்றங்கரையிலே தங்கும். மற்ற காரியங்கட்கு படைத்தலைவன் எல்லப்ப நம்பியோடு தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம், பாண்டிய மன்னன்,

சீவல்லப தேவன்.

(பதறி) துரோகம் அமைச்சரே! மாபெரும் துரோகம்! அண்ணனைக் கொல்வது; ஆட்சியைக்கைப்பற்றுவதாம், எண்ணக் குலைநடுங்கும் ஈனத்தனம்! எப்படித்தான் துணிந்தார்? அன்பு பெரிதென்றேன் அன்றொருநாள்; பரம்பரைக்குப் பங்கமென்றாரே சந்திரவர்மன்; பல்லவ பரம்பரைக்குப் புகழ் சேர்க்கும் காரியமா இது? அடுக்குமா இந்த அநியாயம்? சந்திரவர்மன், பல்லவர்குடியிலே ஒரு பாபி! (வளரும்)

# நவம்பர் 11:

## தமிழக அமைப்பு நாள் விழா.

அகஸ்தீசுவரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகிய நாஞ்சில் பகுதியைச் சார்ந்த நான்கு வட்டங்களும், செங்கோட்டை வட்டத்தில் ஒரு பகுதியும், நவம்பர் முதல் நாளிலிருந்து தமிழ் மாநிலத்துடன் இணைந்துள்ளதை வரவேற்று மகிழவும், செங்கோட்டை வட்டத்தின் பிற பகுதியையும், தேவிகுளம், பீருமேடு, நெய்யாற்றின் கரை, கொச்சி–சித்தூர், பாலக்காடு ஆகிய வட்டங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், தமிழ் மாநிலத்தோடு இணைக்கும்படி மத்திய மாநில அரசியலாரை வற்புறுத்தவும், நவம்பர் திங்கள் 11-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையை தமிழக அமைப்பு நாள், விழாவாகக் கொண்டாடும்படி நாடெங்கிலுமுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நவம்பர் 2-ம் நாளன்று நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நாகர்கோவிலில் நடைபெற்ற இணைப்பு விழாவில் நான் கலந்துகொண்டு நம் கழகச் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துவிட்டு வந்துள்ளேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.
'அறிவகம்' சென்னை-13; 5-11-56.

## முன்னேற்றப்— —பாதையிலே

### கிருட்டினபுரம்.

10–11–56 மாலை 2.30 மணிக்கு, சேலம் மாவட்டம் கிருட்டினபுரத்தில் (ஏ புதூர்) தி மு க. துவக்கவிழா.

தலைமை: ஜி பி சோமசுந்தரம். கொடியேற்றுபவர்: இரா. தாண்டவன். துவக்குபவர்: கலைஞர், மு. கருணாநிதி மற்றும் எம் பி சுப்ரமணியம், முல்லை–சக்தி, ப இராமலிங்கம், சிற்றுளி–சுப்ரமணியம் கலந்துகொள்வர்.

### கோனேரிப்பட்டி.

10–11–56 மாலை 4.30 மணிக்கு. சேலம் மாவட்டம் கோனேரிப்பட்டி தி மு க துவக்கவிழா.

தலைமை: ப. இராமலிங்கம். கொடியேற்றுபவர்: எம். பி. சுப்ரமணியம். துவக்குபவர்: கலைஞர், மு. கருணாநிதி நூலகம் துவக்குபவர்: முல்லை–சக்தி மற்றும் ஜி. பி. சோமசுந்தரம், ஏ. ஆனைமுத்து, சிற்றுளி–சுப்ரமணியம், இரா. தாண்டவன் கலந்துகொள்வர்.

### தம்மம்பட்டி.


10—11—56 மாலை 6.30 மணிக்கு. தலைமை: எம். பி. சுப்ரமணியம். கொடியேற்றுபவர்: ஜி. பி. சோமசுந்தரம், துவக்குபவர்: கலைஞர், மு. கருணாநிதி மற்றும் முல்லை–சக்தி, சிற்றுளி–சுப்ரமணியம், ஏ. ஆனைமுத்து கலந்துகொள்வர்.

### ஏற்றதாக!

நீங்கள் இறந்தபிறகும் உங்கள் பெயர் நிலைக்க வேண்டுமா? பிறரால் படிக்கப்படுவதற்கு ஏற்ற பொருள்களைப் பற்றி எழுதுங்கள். அல்லது பிறரால் எழுதப்படுவதற்கு ஏற்ற தன்மையுள்ள செயல்களைச் செய்யுங்கள்.

—பெஞ்சமின் ஃபிராங்கலின்.


டாக்டர் சோதனை விளக்கத்தின்படி ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,
முதல் அக்ரகாரம், சேலம்–1.

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்
ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை
அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● ச. சு. மணி,
செந்தோம் உயர்நிலைப்பள்ளி,
மயிலாப்பூர், சென்னை-4.

ப. பெரியசாமி, புதுப்பேட்டை.

கே: பனித இனத்தில் மதம் என்ற அமைப்பையே எதிர்க்கும் நம்மைச் சார்ந்தோர், அம்பேத்கார் புத்தமதத்தில் சேர்ந்ததற்கு ஆதரவு அளிப்பதேன்?

ப: பௌத்தம் ஒரு நெறி. புத்தரின் கருத்துக்கள் தெய்வீகமற்ற—சாதிபேதமற்ற—மூடநம்பிக்கையற்றவை. பார்ப்பனீயத்திற்குப் பணியாதவை என்பனவே காரணங்கள்.

* * *

கே: சென்னை மாநில அரசியலில் கருப்புச் சீட்டாக மதிக்கப்படுபவர் யார்? ஏன்?

ப: வெட்கப்படுகிறேன் தோழரே! கேள்வியே புரியவில்லை. காரணம்: சீட்டாட்டம் நானறியேன்!

ச. சு. மணி, சென்னை-4

● கே: கேள்வியை தாங்கள் கணை என்று ஏன் கூறவேண்டுக?

ப: கூர்மையாக இருக்க வேண்டியது கருதியே!

மா. அரங்கசாமி, கோயமுத்தூர்.

கே: மனிதராய்ப் பிறந்தவர்களின் கடமையென்ன?

ப: மனிதப்பண்போடு தானும் வாழ்ந்து, பிறரையும் வாழவிடுவது.

* * *

கே: உலகத்தில் யுத்தங்கள் யாரால் நடைபெறுகின்றன?

ப: இனவெறி, பணவெறி, ஆதிக்கவெறி பிடித்தவர்களாலேயே அதிகம் நடக்கின்றன.

எஸ் முகமதுமீரான், பம்பாய்-3.

கே: பத்தினி என்பவள் பலரைக் காதலிப்பவளா? ஒருவரைக் காதலிப்பவளா?

ப: பலரைக் காதலித்து வாழ்பவள் புராணப்பத்தினி. ஒருவனைக் காதலித்து வாழ்பவள் ஒழுக்கமுடையாள்.

நயா. ஜெயபால், காரமடை.

கே: தமிழ்நாடு இந்தியாவின் "ஹங்கேரி"யாக மாறுமா?

ப: தமிழ்நாடு, தமிழ்நாடாகவே இன்னும் மாறவில்லையே!

* * *

கே: சண்டைக்கும் சமாதானத்திற்கும் ஆண்டவனே காரணம் என்கிறார்களே; அவர் இப்போது என்ன செய்கிறார்?

ப: எகிப்துக்குப் போகத் தடியாகத் தடித்தாராம்; வாகன அறையின் சாவியைத் தேடித்தேடியும் கிடைக்காமையால் திகைத்துக் கல்லாகி விட்டாராம்!

ஆர். கே. சிங்காரம், சேலம்-2.

கே: "தேவாசுரப் போராட்டம்" நாடகத்திற்குத் தடையுத்தரவு போட்டதால், நஷ்டம் யாருக்கு?

ப: திராவிட கழகத்திற்குத் தான் என்கிறாராம் ராதா? ராதாவுக்குத்தான் என்கிறாராம் பெரியார். காமராஜருக்குத்தான் என்கிறார்களாம் தி. க. தொண்டர்கள்!

## வள்ளுவர் நெஞ்சம்

### உலக வாழ்த்து-அ.

அதிகாரம்-க. பாட்டு-அ.

அறவாழி அந்தணன்-
-தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

அறம் என்பது ஒரு கடலென்றால், ஆசை, பொய், நெறிதவறல் போன்றவை பல கடல்களாகும். அதிலும், செந்தண்மை நிறைந்த,தீமையற்ற செயல் எனும் தெப்பம் அறக் கடலிலே தானுண்டு. அந்தத் தெப்பத்தை உருவாக்கிக்கொண்டால் இந்தக் கடலைக் கடந்துவிட முடியும். மற்ற கடல்களுக்கு தெப்பமில்லை என்பதாம். வாழ்க்கையைக் கடல்போன்றது என்று உவமை நயத்தால் கூறியதாகும்.

விளக்கம்:

அந்தணன்—செந்தண்மையுடையவன். அறம் செந்தண்மைநிறைந்தது. செயலை உருவகமாக்கிய கலைநயம்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி


## நீங்கள் படித்தீர்களா?

எழுத்துக்கு எழுத்து தித்திக்கும் அழகு தமிழ் நடையில்,
தோழர், க. அண்ணாமலை தீட்டிய சித்திரங்கள்.

| | | |
|---|---|---|
| தமிழச்சி | (நாடகம்) | 0—3—0 |
| குற்றவாளி | ஷை | 0—8—0 |
| வெடிகுண்டு | (கட்டுரை) | 0—2—0 |

விபரங்களுக்கு:

மதிமன்றம். கொண்டலாம்பட்டி, சேலம்.

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் போராட்டத்தை நிறுத்தி விட்டார்?

அந்த 'சத்தியவானின்' பேச்சை நம்பிக்கொண்டு, உள்நாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசப் போகிறோம் என்ற அதிர்ச்சியினாலோ, மகிழ்ச்சியினாலோ அல்லது வேறெந்த காரணத்தினாலோ "போராட்டத்தை நிறுத்து!" என்று சொல்லிவிட்டார் சிவஞானம்!

ஜெய்சிங்கின் பேச்சை நம்பி ஆக்ராவுக்குச் சென்றான் சிவாஜி, ஔரங்சீப்பை சந்தித்துப் பேசலாம் என்ற நல்லெண்ணத்துடன்! என்ன நடந்தது? ஏமாற்றப்பட்டான்! சிறைவைக்கப் பட்டான்!

சுப்ரமணியத்தின் பேச்சை நம்பிக் கொண்டு, சிவஞானம் டெல்லி செல்வாரா? பண்டித நேருவைச் சந்திப்பாரா? எல்லைப் பிரச்சினை தீர்க்கப் படுமா? அல்லது...... (சிவாஜியைப் போலவும், ஷேக் அப்துல்லாவைப்போலவும் சிறைவைக்கப்படாது போனாலும்) ஏமாற்றத்துடன்தான் திரும்புவாரா?

ஜெய்சிங்கை சிவாஜிக்குத் தெரியாது. அதனால் அவன் பேச்சை நம்பினான்!

சுப்பரமணியனாரை சிவஞானத்திற்குத் தெரியாதா? நாடே அறியுமே அவரது நற்குணத்தையும், வாக்குத் தூய்மையையும்!

சிவஞானம், சிவஞானமாகவே இருப்பாரா? சிவாஜியாகி விடுவாரா? 1957 விடையளிக்குமா? ★


பகுத்தறிவு.

(வார இதழ்)

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 3-8-0

ஆறு மாதங்கள் 2-0-0

தனிப்படி 0-1-0

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை,

பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.


*** திறனாய்வுக் கட்டுரை ***

# இன்றைய இலக்கியம்.

"தமிழ்த் தும்பி"

III

இன்றைய இலக்கியத்தில் புதுப்பாதை வகுக்க முயலும் சஞ்சிகைகளும் இல்லாமல் போகவில்லை. அறிவியக்கத்தின் சார்பாகத் தூதுவரும் வார-மாத ஏடுகள் அரசியல் பணியோடு நின்று விடாமல், திருந்திய இலக்கியப் பணியும் புரிந்து வருவது சிறுகதை இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கு நம்பிக்கை யூட்டுவதாயிருக்கின்றது. இவை தவிர நடுநிலையிலிருந்து ஆராயும்போது அறிவியக்கத்திலில்லாத வேறு சில ஏடுகளையும், அவற்றின் புதுமைமிகு தொண்டிற்காகப் போற்ற வேண்டிய கடப்பாடு நமக்குண்டு. இந்த வகையில் ஆரியபுரியினரின் ஏடுகளுக்குள்ள செல்வாக்கிற்கு எதிர்ப்பணி அமைத்து, வளர்ந்து வரும் 'குமுத'த்தைக் குறிப்பிட வேண்டும்.

பெரும்பான்மையான ஆரியர்களின் வீடுகளில் 'விகடன்' காணப்படுவதைப்போல இன்று பெரும்பாலான தமிழர் இல்லங்களில் குமுதம் காணப் படுகின்றது. இவ்வேடு 'அவாளின்' இலக்கியப் பாதையிலிருந்து நேர் எதிரான பாதையை வகுக்காவிடினும், அந்த இழிவான சாதித் தமிழ் நடையிலிருந்து சிறுகதை உலகினை விடுவித்த பெருமை இதற்கு உண்டு.

தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளை ஆதரிக்கும் போக்குடைய 'உமா' சில புதுமைகளை நுழைத்து வருகிறது. இருப்பினும் அதில் இடம் பெறும் சிறுகதைகள் இன்னும் தமிழ்க்கண் கொண்டு பார்க்கப்பட வேண்டும்.

கி. வா. ஜகந்நாதனை ஆசிரியராகக் கொண்ட 'கலை மகள்' என்ற மாத இதழ் நீண்ட நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் அதில் இடம்பெறும் சிறுகதைகளும் 50 சதவிகிதம் 'அவாள்' இலக்கியத்தைப் பரப்பும் நோக்கத்துடனேயே காணப்படுகின்றன.

அரு. இராமநாதனை ஆசிரியராகக் கொண்ட 'காதல்' இலக்கிய வளர்ச்சிக்கு இன்னும் திருந்தியபணி ஆற்றவேண்டிய நிலையிலேயே உள்ளது.

இறுதியாகப் பொதுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது, இன்றைய சிறுகதை இலக்கியம் சிறிது சிறிதாக மாறி வருவது நமது அகக் கண்ணுக்குப் புலப்படுகின்றது. அந்த மாற்றமும், சிறுகதையுலகில் இனி 'அக்ரகார நடை'க்கு இடமில்லையென்பதை உணர்த்தும் பாடமாகத்தான் இருக்கப் போகின்றது. ★


அனைவரும் விரும்பி அருந்துவது

சங்கர்ஸ் காபி.

சங்கர்ஸ் காபி ஒர்க்ஸ், தேவேந்திரபுரம்—சேலம்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

உருவமற்றது. இரண்டையும் ஒப்பிடுவதே தவறு. இருந்தாலும், உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். 'பராசக்தி' படம் பார்த்திருப்பீர்கள். அதில் ஒரு பெண் இட்லி வியாபாரம் செய்கிறாள். அவளிடம் ஒரு ரௌடி வந்து தன் இச்சைக்கு இணங்கும்படி கேட்கிறான். அவள் மறுக்கிறாள். அப்பொழுது அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து, "உனக்கு சோறு பெரிதா? மானம் பெரிதா?" என்று கேட்பானேயானால், அவனை நீங்கள் என்னவென்று சொல்வீர்கள்? (கூட்டத்தில் சிலர்: அயோக்கியன், அயோக்கியன்) ஆமாம்! அரசியலில் அவர்களுக்குப் பெயர் கம்யூனிஸ்ட்டுகள்!

இந்தியப் பிரதமர் நேரு மிக உயர்ந்து விட்டார். அவ்வளவு உயரத்திலிருந்து அவரால் வெளிநாடுகளைத்தான் பார்க்க முடிகிறது; உள்நாட்டைப் பார்க்க முடியவில்லை.

"கண்ணீர்த்துளிகள் சட்டசபைக்குப் போகக்கூடாது" என்று குருசாமி கூறுகிறார். நாங்கள் போகவில்லையென்றால், அவராவது போகிறாரா? அதுவுமில்லை! நாங்கள் கண்ணீர்த்துளிகள்தான்! கண்ணீரில் பிறந்து கண்ணீரிலேயே வளர்ப்பவர்கள்தான் என்பதைப் பெருமையுடன் ஒப்புக்கொண்டு, வருகிற பொதுத் தேர்தலில் இந்தக் கண்ணீர்த்துளிகளின் சார்பில் யாராவது இந்தத் தொகுதியில் நிறுத்தப்பட்டால், அவரை நீங்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

**தோழர், டி.கே. தாமரைச்செல்வன் அவர்களின் சேலம் பேச்சு. தொகுத்தவர், சேலம் ஏ. பெரியசாமி**




## ரங்கோன் ராதா.

சமூகப் படங்களின் வரிசையிலே, "ரங்கோன் ராதா" ஒரு சிறந்த படம் என்று தாராளமாகச் சொல்லலாம்.

பணத்திமிர் பிடித்து, பக்திமான் என்று சொல்லிக்கொண்டு மனைவியிருக்கும்பொழுது, வேறு ஒருத்தியை விரும்புவதால் ஒரு குடும்பத்தில் ஏற்படும் சிக்கலை எடுத்து விளக்குகிறது கதை. தர்மலிங்க முதலியாராக நடிக்கும் சிவாஜி கணேசனின் நடிப்பும், ரங்கம்—பானுமதியின் நடிப்பும் இப்படத்தில் "கள்வனின் காதலி"க்குப்பிறகு சிறிது மாற்றம் அடைந்திருக்கின்றன.

வாழ்க்கையில் ஏற்படும் பூகம்பம், எரிமலை, காட்டாறு ஆகியவைகளை சகித்து நடிப்பது அவரது வாழ்க்கையில் இதுதான் முதல்தடவை என்று தெரிகிறது. தந்தையின் அக்கிரமத்திற்கு அடிபணியாது, பகுத்தறிவுப் பாதையில் பொதுவுடமை தத்துவத்தை மேற்கொண்டு பணிபுரியும் நாகசுந்தரம்—எஸ். எஸ். இராசேந்திரன் நடிப்பு இப்படத்தில் "குலதெய்வ"த்தைக் காட்டிலும், சிறப்பாக அமைந்திருக்கிறது. அவரது காதலியாக வரும், ரங்கோன் ராதா—ராஜசுலோசனா 'ராஜா தேசிங்கு' நாடகத்தின் மூலம் நல்லதொரு புகழைத் தேடிக்கொண்டார். கலைவாணர்—செந்தமிழ்ச்சிறலி மதுரத்தின் நகைச்சுவைக் காட்சிகள் "கொக்கும்—கூந்தலும்" பாராட்டும் படியாகவுள்ளது. பழைய நடிகை பி எஸ் ஞானத்தின் நடிப்பும், மற்றவர்களின் நடிப்பும் மோசமில்லை. கலைஞர் கருணாநிதி சிறந்த வசனங்களோடு சில பாடல்களும் இயற்றியுள்ளார். அவரின் 'பொதுநலம்,' 'வான்மலர்' 'ஓடையிலே ஒரு நாள்' என்ற பாடல்கள் இனிமையாக—பொருளோடு இருக்கின்றன. மற்றபடி உடுமலையாரின் 'என்றுதான் திருந்துவதோ' பாடலும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் 'நாட்டுக்கொரு வீரன்' என்ற பாடலும் "ராஜாராணி"யில் சேரன் செங்குட்டுவனின் நாடகத்தை நினைவுறுத்துகிறது. காசிலிங்கம் டைரெக்ஷனில் புதுமையில்லை. ஓட்டம் மந்தகதிதான்! படநீளம் அதிகம்.

மேக்கப், இசையமைப்பு, ஒளி, ஒலிப்பதிவு, நடனங்களும் நன்கு சோபிக்கின்றன. அறிஞரின் 'ரங்கோன் ராதா' கலைஞரின் கைவண்ணத்தால் ஒரு சிறந்த சமூகப் படமாக அமைந்துவிட்டது. அனைவரும் பார்க்கவேண்டிய படம்.

—மா. அரங்கசாமி.

## சங்கரதாஸ்.

தெருவிலே புழுதிகிளம்பக் குதித்தாடும், இசைக்கூத்துக்களே தமிழ்நாட்டின் பரம்பரையாக வந்த நாடகங்கள். 19-ம் நூற்றாண்டின் இறுதியிலேதான் மேநாட்டு நாடகங்களைப் பின்பற்றி மேடை நாடகங்கள் தோன்றின.

தமிழகத்து மேடை நாடகங்களை வளர்த்த பெரும்பணியில் குறிப்பிடத்தக்கவர்கள்: பம்மல் சம்பந்த முதலியாரும், சங்கரதாஸ் சுவாமிகளும் ஆவர்.

தூத்துக்குடியிலே 1867-ம் ஆண்டில் தோன்றி, சிறந்த நாடக ஆசிரியராகவும், நடிகராகவும் நாடகக்கலை வளர்த்து 1922 நவம்பர் 13-ம் நாள் புதுவையிலே இயற்கை எய்தினார் சங்கரதாஸ்.

பல புதிய, பழையகதைகளை நாடகங்களாக்கி மேடையேற்றியும், பல நடிகர்களைத் தட்டிக்கொட்டி தயாரித்தும், முப்பதாண்டுகளாக அப் பெரியார் ஆற்றிய நாடகப் பணியிலே பூத்த மணமலர்கள்—நடிக நட்சத்திரங்கள்—இன்றும் மேடையிலும்—திரையிலும் ஒளி வீசுகின்றன.

நற்றமிழர்—நாடகப் பெரியார் சங்கரதாசுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் பணியினை, கலைஞர்கள், டி. கே. எஸ். சகோதரர்கள் மேற்கொண்டுள்ளனர். நவம்பர் 13-ம் நாள், புதுவையிலே விழாவாம், கலைஞர்களுக்குக் காட்டும் கௌரவம் கலைகளை உயர்த்துமாக!

—இந்திரசித்தன்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# புத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்: ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 16-11-56 ★ விலை அணா ஒன்று. | இதழ் 19


## கலகமும் குழப்பமும் செய்தவர்கள் யார்?

“தமிழ்நாடு” என்று கூறிட வெட்கப்படும் “மதராஸ் நாட்”டின் அமைச்சர் பெருமக்கள் கனம் காமராசர், சுப்ரமணியம், பக்தவத்சலம் மூவரும் தேர்தல் பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு விட்டனர். திராவிட முன்னேற்றக் கழகத்தை நரம்பற்ற நாக்கினர்போல்பேசத்தொடங்கிவிட்டனர். இந்த உண்மையற்ற—உரமற்ற நெஞ்சினர்!

அரசாங்கச் செலவிலே—பொதுமக்களின் வரிப்பணத்திலே—தம் கட்சியின் தேர்தல் பிரசார வேலை நடத்துகின்ற இந்த தியாகமூர்த்திகள், பேச்சிலாவது தரம் காட்ட வேண்டாமா? பதவியின் பொறுப்பினை—கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டாமா?

“தேர்தல் என்பதே பித்தலாட்டம், பணம் படைத்தோரின் சூதாட்டம், பொய் புனை சுருட்டு பேசி பொதுமக்களை ஏமாற்றத் தெரிந்தனே கெலிப்பான். அரசியல் என்பதே அயோக்கியர்கள் வேலை” என்ற பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக செயற்படுகின்றனர் போலும் ஆளுகின்ற அமைச்சர்கள்! இல்லையெனில், மட்டரகமாகப் பேசுவானேன்? மக்களிடையே வெறுப்பையும், கொதிப்பையும் விளைவிப்பானேன்?

திருச்சியில் இவர்கள் பேசிய கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டதாகவும், கூட்டம் இடையிலே கலைந்து, போலீஸ் உதவியோடு காரில் ஏறும்படி நேர்ந்ததென்றும் பத்திரிகைச் செய்திகள் வந்தன. இதனை வெளியிட்ட காங்கிரஸ் ஏடுகளே, மந்திரிகள் தி. மு. க. வை கடுமையாகத் தாக்கிப் பேசினர் என்றும் கூறின. ஆனால், கேள்விகேட்டவர்கள், கலவரம் செய்தவர்கள் தி. மு. கழகத்தாரல்ல.

இதுகுறித்து விசாரித்தறிந்த தி. மு. க. தலைமை நிலையம் ஒரு அறிக்கையில் கூறுகின்றது:

அண்மையில் திருச்சியில், முதலமைச்சர் காமராசரும், பிறரும்பேசிய காங்கிரஸ் கூட்டம் ஒன்றில் குழப்பம் ஏற்பட்டதாகவும், அக் குழப்பத்திற்குக் காரணம் திராவிடமுன்னேற்றக் கழகத்தினர் என்றும் சில செய்தித் தாள்கள் வெளியிட்டுள்ளன.

திருச்சியிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தை விவரம் கேட்டதில், அக்குழப்பத்திற்கும், கழகத்திற்கும் சிறிதும் சம்பந்தமில்லையென்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி இழித்தும் பழித்தும் பேசுவதைப்பற்றி நம் கழகத்தோழர்கள் பொருட்படுத்தவில்லையென்பதை அனைவரும் அறிவர். கழகத் தோழர்கள் அந்தக் கண்ணியத்தைக் கடைப்பிடித்து வரும்போது அதற்கு மாறான செய்திகளை வெளியிடும் செய்தித் தாள்களின் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தேர்தலுக்கு முன்பே இல்லாதனவும், பொல்லாதனவும் கூறிப் பழிசுமத்துகின்ற காங் காங்கிரஸ் ஏடுகள், தேர்தல் நடக்கின்ற நேரத்திலே எப்படி நடந்துகொள்ளும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் நமது தோழர்கள். எச்சரிக்கை வேண்டும்; ஏற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

திராவிடத் தந்தை பெரியார் இந்தத் தேர்தலில், சனநாயக முறையிலேஒரு விசித்திர நிலையை உண்டாக்க விரும்புகிறார். “தேர்தலில் இரண்டே கட்சிகள் தான். ஒன்று காமராசர் கட்சி; மற்றொன்று ராஜாஜி

(8-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டு வானொலி நிலையங்களிலே...

ஆந்திரர்களுக்கென்று விசயவாடா நிலையமும், மலையாளிகளுக்கென்று திருவனந்தபுரமும், கோழிக்கோடு நிலையங்களும், கன்னடியர்களுக்கென்று பெங்களூரும் இருப்பதால் தமிழர்களுக்கென்று திருச்சி நிலைய நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டும். அந்தப்பகுதியில் அமைந்துள்ள வானொலி நிலையங்கள், அந்தந்தப் பகுதி மொழியிலேயே மக்களுக்கு நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலி பரப்ப வேண்டுமென்ற மக்கள் விருப்பத்தைப் புறக்கணிக்க முடியாது. இந்த வகையில் மேற்கூறிய மற்றப் பகுதி நிலையங்கள் எல்லாம் அந்தந்தப் பகுதி மொழிகளிலேயே எல்லா நிகழ்ச்சிகளையும் தயாரித்து வருகையில், நம் திருச்சி நிலையம் மட்டும் ஏன் தமிழுக்கு முழு இடம் அளிக்காமல், கதம்பமாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்பவேண்டும்? மற்றவர்களைப் பார்த்தாவது திருச்சி நிலையம் தனது தற்போதைய கொள்கையை மாற்றிக்கொண்டு, தமிழுக்கே முழு இடம் அளிக்க முன்வந்தாலன்றி தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பையும், ஆதரவையும் பெற முடியாது. ஆகவே, திருச்சி நிலைய அதிகாரிகள் உடனடியாக இதைக் கவனித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கையை வற்புறுத்தும்போது, பிறமொழி வெறுப்புக் கூடாதென்று அதிகாரிகளால் ஒரு சமாதானம் கூறப்படுகிறது. பெரும்பாலான அளவுக்கு தமிழ்ப் பாடல்கள் ஒலிபரப்பப் படுகிறதென்கிறார்கள். வானொலிப் புத்தகத்தைக்கொண்டு பார்த்தால், 100-க்கு 50 அல்லது 60 பாடல்கள் தமிழாக இருப்பதையுக் காண்கின்றோம். என்றாலும், மற்ற பகுதி நிலையங்களில் 100-க்கு ஒரு பாடலாவது தமிழ் இருப்பதாகத் தெரியவில்லை. இந் நிலையில், நமது திருச்சி நிலையம் மட்டும் மற்ற பகுதி மொழிப் பாடல்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிப்பது பொருந்தாது. தமிழ்நாட்டு மக்களுக்கும் மற்ற பகுதி மக்களைப் போலவே மொழிப் பற்றும் உணர்ச்சியும் உண்டு. ஆகையால் திருச்சி நிலையம் தமிழுக்கு முக்கிய இடம் கொடுத்துவிடுவதால் மட்டும் மன நிறைவு அடையமுடியாது. மற்ற நிலையங்களைப்போல் இங்கும் தமிழுக்கு முழு இடம் அளித்தால்தான் மனநிறைவு அடையமுடியும்.

## கண்ணைத் துடைக்கக் கையாளப்படும் வழி

மேலும் தற்போது 100-க்கு 60 பாடல்கள் தமிழாகவே திருச்சி நிலையத்தில் ஒலி பரப்புவதாகக் கூறுவதிலும், சில முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது. முழுநேரக் கச்சேரிகளில் எல்லாம் தெலுங்குதான் அதிகம் இடம் பெறுகிறது, வாய்ப்பாட்டுக் கச்சேரிகளில்எல்லாம் தெலுங்குப் பாடல்களை அதிகமாகவும், பெயருக்கு இரண்டொரு தமிழ்ப் பாடல்களை மட்டும் போட்டுவிட்டு, வாத்தியக் கச்சேரிகளிலேயே தமிழ்ப் பாடல்களை அதிகம் சேர்த்து வருகிறார்கள். இது தமிழ் மக்களின் கண்ணைத் துடைப்பதற்குக் கையாளப்படும் ஒரு சூழ்ச்சியே தவிர, உண்மையில் தமிழுக்கும் தமிழ்ப் பாடல்களுக்கும் உரிய முறையான மதிப்புக்கொடுப்பதாகாது என்பது ஊன்றிப் பார்க்கும் யாருக்கும் எளிதில் புலனாகாமற் போகாது. எனவே, மேற்கூறியபடி தமிழ்நாட்டு நிலையத்தில் தமிழுக்குத்தான் முழு இடம் இருக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால்தான். நிகழ்ச்சி அமைப்பாளர்கள் செய்யும் இத்தகைய சூழ்ச்சிகளுக்கு இடமில்லாது போகும். தமிழுக்கு உண்மையான மதிப்பு ஏற்படும். தமிழ் மக்களுக்கும் பூரண மனநிறைவு ஏற்படும்.


மற்றும் ஒன்று. திருச்சி நிலையத்தில் ஒலிபரப்பாகும் தமிழ்ப்பாடல்களில் என்றைய ஒரு குறிப்பிட்டநாள் நிகழ்ச்சியை எடுத்துப்பார்த்தாலும், அதில் வரும் பாடல்கள் திருப்பத் திரும்ப சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன், நீலகண்ட சிவன், கோபால கிருஷ்ண பாரதி இவர்களுடையதாகவே இருக்கின்றன. பாடகர்களும் தமிழர்களைவிட ஒருசாராரே அதிகமாக இடம்பெற்று வருகின்றனர். முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, வேதநாயகம்பிள்ளை, பாரதிதாசன், கே. எம். பாலசுப்பிரமணியம், இலட்சுமணபிள்ளை, தஞ்சை பொன்னையா பிள்ளை மற்றும் தற்கால இளம் கவிஞர்கள் என். எஸ். சிதம்பரம், திருச்சி ஜி. தியாகராசன், கு. ச. கிருஷ்ணமூர்த்தி போன்ற பலர் எத்தனையோ பாடல்கள் இயற்றியிருக்கிறார்களே. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் தமிழ்ப்பாடல்தொகுதிகள் சுரதானக் குறிப்புகளுடன் 15-க்கு மேல் வெளியிடப் பட்டிருக்கிறதே; இவற்றையெல்லாம் நிகழ்ச்சிகளில் மிக அரிதாக ஒன்றிரண்டுமட்டும், சேர்த்து சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன் பாடல்களையே ஏன் அதிகமாகத் திரும்பத் திரும்பச் சேர்க்க வேண்டும்? இந்நிலையும் உடனடியாக மாறி எல்லோரது பாடல்களுக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். தமிழ்ப்பாடகர்களுக்கும் நிலைய நிகழ்ச்சிகளில் அதிக வாய்ப்பு அளிக்கவேண்டும்.

திருச்சி நிலையத்திலிருந்து கலைஞர்களுக்கு அனுப்பப்படும் ஒப்பந்தச் சீட்டுகளில் முன்பு "முக்கியமாகத் தமிழ்ப் பாடல்கள்" என்று ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. தற்சமயம் அந்த நிபந்தனை நீக்கப்படக் காரணம் தெரியவில்லை. மீண்டும் அந்த பழைய நிபந்தனை ஏற்பட்டு, அதுவும் சரியானபடி அமுல் நடத்தப்பட்டாலன்றி இப்போதைய சூழ்நிலை மாறுவதற்கே இடமில்லாது போய்விடும்.

## சென்னை நிலையமும் கவனிக்க வேண்டும்.

சென்னை வானொலி நிலையமும் தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் காரணத்தால், அங்கு ஒலிபரப்பாகும் பாடல்களிலும் 100-க்கு 80 சதவிகிதமாவது தமிழாகவே இருக்கவேண்டும். சென்னை நிலையத்தில் இரண்டு ஒலிபரப்பிகள் இருப்பதால் ஒன்றைப்பூரணமாக தெலுங்குக்குப் பயன் படுத்திக்

(9-ம் பக்கம் பார்க்க)




நேருவை யாராலும் அசைக்க முடியாது.

—பெரியார்.

முதலில் காமராசர், இப்போது நேரு; பிறகு காங்கிரசை அசைக்க முடியாது என்பாரோ?

* * *

நமக்குள்ளிருக்கும் வேற்றுமைகள் மறைய, புத்தரது உபதேசம் நமக்கு பெரும்வழிகாட்டியாக இருக்கவேண்டும்,

—சர். ராதாகிருஷ்ணன்.

புத்தர் விஷ்ணுவின் அவதாரம் என்பதை அகாரமாக விட்டால்தானே அது நடக்கும்!

* * *

ஐந்தாண்டுத் திட்டம் பற்றி சிறந்த நாடகம் எழுதுவோர்க்கு அரசாங்கம் 1000 ரூபா பரிசு கொடுக்கும்.

—செய்தி.

அதிலே "மாட்டுக்கு ஓட்டுப் போடுங்கள்" என்று சிறந்த பாட்டும் இருக்க வேண்டுமே!

* * *

குடந்தை கோயில்களிலே அதிசயத் திருட்டு.

—செய்தி.

பாவம், அந்தத் திருடன் என்ன பிரார்த்தனை வைத்துக்கொண்டானோ!

* * *

மூக்குக் கண்ணாடி, காமிரா தயாரிக்கும் தொழிற்சாலைகள் தென்னாட்டில் ஏற்படுத்தப் படும்.

—செய்தி

அந்தக் கண்ணாடி மூலம் வடநாட்டு வஞ்சனையைப் பார்க்கவோ, காமிரா மூலம் படம் பிடிக்கவோ முடியுமா?

* * *

மலையாளி பிரின்சுபாலை எதிர்த்து சேலம் கல்லூரி மாணவர் கிளர்ச்சி,

—செய்தி

பிறகென்ன? அக்ரமம் செய்பவரைக் கண்டிக்க ஆண்டவன் அவதாரம் எடுக்கப் போகிறான்?

புத்தர் நெறி

# மெய்யின்பம்!

பி. வி. இராமசாமி

மாரிக்காலம், புத்தர்பிரான், நாருகா வனத்திலே தங்கியிருந்தார். அப்போது அடியார்கள் வந்து வணக்கம் தெரிவித்தனர். வினவினர், மத வாழ்க்கை என்பது என்ன என்பதாக.

அன்புநெறிப் பிரான் சொன்னார். அப்போது:—

உலகம் நித்தியமா? அநித்தியமா?— ஆத்மாவும் மதமும் ஒன்று? வெவ்வேறு? செத்தபின் பிழைத்திருக்கின்றனரா என்று ஆராய்ந்து கொண்டிருப்பதல்ல உண்மை மதம். இவற்றை ஆராய்ந்து கொண்டிருப்பதால் கிடைக்கும் பலன் யாதொன்றுமில்லை. அறநெறி (தர்மம்) என்பதற்கும் இவற்றிற்கும் தொடர்பே கிடையாது.

மனிதர்களுடைய, துக்கம், துயரம், ஆசை ஆகியவற்றை இவைகள் நீக்கா. நல்லறிவும், நல்வாழ்வும், செயலறிவும், நற்பண்பும், மெய்யின்பமும் இவற்றால் பெற முடியாது.

அறிவுக் கண்ணில்லாதவர்கள் உண்மையில் குருடர்களே. சுகபோகங்கள் என்பனவற்றிற்கு இடையில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டால் அந்த சுகபோகங்கள் முடிவெய்திவிடும், இளமைக்கு முதுமை முடிவு; அன்புக்கு இழப்பிலே முடிவு.

உலகம் நித்தியமா, அநித்தியமா என்று ஆராய்ந்து கொண்டிருப்பது, கடுங்கானகத்திலே வழிதேடித் திரிந்துகொண்டிருப்பது போன்றதாகும்.

ஒரு விளக்கம்:—

விஷ அம்பு பாய்ந்து விட்டது ஒரு மனிதனுடைய உடலில். கேயரும் உறவினரும் விஷ வைத்தியனை அழைத்து வந்துள்ளனர். அம்பு பாய்ந்து கிடைக்கும் அந்த மனிதன், அவர்களைப் பார்த்து "என்னைக் காயப்படுத்திய அந்த மனிதன் யார்? அவன் எந்த குலத்தைச் சேர்ந்தவன்? அவன் நெட்டையா, குட்டையா, கட்டையா? என்று நான் அறிந்து கொள்வதன் முன்னர், எனக்கு சிகிச்சை செய்ய விடமாட்டேன்" என்று கூறினால்; அவன் சாகத்தானே வேண்டும்?

செயலின் ரகசியங்களை—நடப்பின் காரணங்களை யாரும் முன்னதாக அறிந்துகொள்ள முடியாது. ஆசை, வெறுப்பு முதலியன விடுத்து, தூய அன்பு வாழ்க்கை நடத்துபவனே, மெய்யான இன்பமும், நல்வாழ்வும் பெறுவான்.

அறியாமையால்தான் குழப்பமும் கலக்கமும் ஏற்படுகின்றன. அறியாமை ஒழிந்தால் துக்கத் தொடக்கமும் ஒழியும்.

மனத்தூய்மை, செயல் தூய்மை பெற்று நல்லவனாக வாழ்ந்திடு. கேடானவற்றை நீக்கு. நல்லன செய் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்பவரும், அசுத்தப்படுத்திக் கொள்பவர்களும் அவரவர்களே. பிறர் நம்மைத் தூய்மைபடுத்த முடியாது.

நாம் பிறரையும் தூய்மைப்படுத்த முடியாது. விஷத்தைக் கண்டு அஞ்சுவதுபோல், தீமையானவற்றைக் கண்டு அஞ்சி, அவற்றை ஒதுக்கு. பொன்னைத் தீயிலிட்டுக் காய்ச்சித் தூய்மையாக்குவதுபோல், மனிதர்களும் தத்தமது முயற்சியாலும் நடவடிக்கைகளாலும் தங்களைத் தாமே தூய்மைபடுத்திக் கொள்ள வேண்டும்.

நன்னம்பிக்கை கொள்; துக்கமும் துயரமும் உன்னை அணுகாது. நேர்மையாக நட; அண்டாது.

நல்லெண்ணமற்ற இனிப்புப்பேச்சு, மணமற்ற மலரைப் போன்றது.

கவரப்படுபவன் வீரனல்ல. உன் குறைகளை எடுத்துக் காட்டுபவனே உனக்கு நற்புதையலை காட்டிக் காட்டுபவனாவான். வைரம் வைரத்தை அறுப்பது போல; கேடு செய்வதால் அக்கேடு செய்தவருக்கும் கேடுதான் விளையும்.

நல்ல உடல்வளமே சிறந்த "வரப்பிரசாதம்" மனத்திருப்தியே சிறந்த சொத்து. அன்பே தோழன். அவரவர் செயலே அவரவரை உயர்த்துவதும் தாழ்த்துவதும். அமைதியான, அன்பான, தோழமையான வாழ்க்கை நடத்து. உழைத்துப் பிழை. தேவையான அளவுக்குத் தேடிக்கொள். தேவையானவர்களுக்குத் தேடித்தா. இத்தகைய நல்வாழ்க்கையே மெய்யின்பமாகும்.

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 16—11—56 | இதழ் 20

## நல்லுணர்விலே நஞ்சு!

பக்தி முக்கியமா?—பகுத்தறிவு முக்கியமா? பக்தி பெரிதா?—பகுத்தறிவு பெரிதா?

பக்தியே முக்கியம்—அதுவே பெரிது என்பர், பக்தியாலே நாடு நலம் பெறும் என்று சொல்லுகின்ற பழமை விரும்பிகள்.

பகுத்தறிவு முக்கியம்—அதுவே பெரிது, நல்வாழ்வுக்கு ஏற்றது என்போம் பகுத்தறிவு வாதிகளாகிய நாம். கருத்துக்கள் மோதுகின்றன!

பக்திக்கும், பகுத்தறிவுக்கும் நடைபெறுகின்ற இந்தப்போட்டியிலே,காலத்திற்கும்,வாழ்வுக்கும் தேவையான பகுத்தறிவு வெல்லுகின்றது. தேவையற்றதான—மடமையின்பாற்பட்டதான பக்தி படுதோல்வியடைகின்றது. இதனைப் பார்த்துப் பதைக்கின்றனர், புண்ணிய காதை புகன்று பக்தி வளர்க்கும் புத்திசாலிகள்!

அவர்களிலே ஒருவரான ராஜாஜி, "நவம்பர் 11-ம்நாள் 'கல்கி' இதழில் என்னுடையகருத்து" என்ற தலைப்பிலே, பகுத்தறிவு தேவையற்ற பக்தர்களுக்கு அபயஸ்தம் அளிக்கிறார்!

"பக்திக்கும் சமயங்களுக்கும் அடிப்படை ஆதாரமான புண்ணிய கதைகளும், திருவிழாக்களும் எல்லாம் கதை. உருவகம், நீதி போதிக்கும் கற்பனைகள், அவ்வளவே என்று ஒரு சாரார் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். பகுத்தறிவுக்கும் பக்திக்கும் நடக்கும் போட்டிச் சண்டையில் தோல்விக்கு பயந்து அந்தமாதிரி பேச வந்திருக்கிறார்கள். இதை நான் ஒப்புக்கொள்ள இயலாது இது தோல்வியை ஒப்புக்கொள்வதாகவே முடியும்."

தோல்வியை நாணயமாக ஒப்புக்கொள்ளுகின்ற நல்லவர்களை நோக்கி "ஐயயோ! ஆபத்து, தோல்வியை ஒப்புக்கொள்ளாதே, சண்டித்தனம் செய் மூக்கறையான் வேஷம்போடு" என்கிறார் பக்திவளர்த்து நாட்டைப் பாழாக்கும் பரம்பரையின் தலைவர்! மேலும் அவர் சொல்லுகின்றார்: ராமாயணமும், பாரதமும் வெறும் நீதிக் கதைகள் அல்லவாம். பாரத மக்களுடைய உள்ளங்களை, குயவன் மண்ணிலிருந்து பாண்டம் செய்வதுபோல் பண்பட்ட உயிர்களாக ஆக்கியிருக்கின்றனவாம். சீதையும் ராமனும் லட்சுமணனும் பரதனும் இந்தநாட்டு மண்ணிலிருந்து உண்டாகி உயிர்கொண்டு வாழ்ந்தவர்களாம்!

"ராமாயணமும், பாரதமும் நீதிகளை போதிக்க எழுந்தவை" என்று கூறிடும் வினோபாஜி, குன்றக்குடியார் போன்றவர்களின் கருத்துக்கள், அவற்றின் தெய்விகத்தை—புண்ணியத்தைப் பாழ்படுத்தி விடுகின்றதாம். பாதுகாக்கப் புறப்படுகின்றார் இந்தப் பஜகோவிந்தம்!

ராமாயணம் பாரதம், பாகவதம் போன்றவை புண்ணிய கதைகள் உண்மையானவை; உயர்ந்தவை. பக்தியென்ற அடிமைமயக்கம் கலந்து அவைகள் பரப்புகின்ற வருணாசிரம தர்மப் பித்தலாட்டங்கள், சமுதாய பேதாபேதங்கள், ஆண்டான் அடிமை முறைகள், மனிதப் பண்பழிக்கும் சோம்பேறித் தத்துவங்கள், சுயமரியாதையற்ற சுரண்டல் சம்பிரதாயங்கள் புனிதமானவை என்று பஞ்சாங்கமும், தர்ப்பையும் ஏந்திப் பிழைக்கும் சவுண்டிப்பார்ப்பனர் சொல்லலாம்; சங்கரரும் சொல்லலாம். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரா சொல்லுவது?

நாட்டின் பிற்போக்கு சக்திகளை யழித்து, பகுத்தறிவு பூர்வமான சமதர்ம சமுதாயத்தை நிர்மாணிக்க வேண்டும்என்ற எழுச்சியும், ஆர்வமும் மக்களிடையே காட்டுத்தீப்போல் பரவிவருகின்றபோது, ராஜாஜியைப் போன்ற தொண்டுகிழவர்கள், அந்த நல்லுணர்விலே நஞ்சினைக் கலப்பது நாட்டுக்கு நல்லதல்ல; அவர்களுக்கும் நல்லதல்ல என்பதே எம்முடைய கருத்து.

—ப. கண்ணன்.




சந்தி:- கண்பனைக் கோலமிட்ட நரிக்குட்டி. தேவி! இதோ பாருங்கள், சாளுக்கிய மன்னனின் சதிவோலை! (கொடுத்து) இதைக் கண்டதும், துண்டம் துண்டமாக வெட்டி வீழ்த்தினேன் அந்தவீணனின் உடலை!

சீலா:- கொன்றே விட்டீரோ? நன்று செய்தீர்!

சங்கா:- (படித்து) ஆ! மைத்ரேயன் திட்டப்படி, குருக்கோட்டைப் போர்முனையிலே மன்னவர் வஞ்சகமாய்த் தாக்கப் பட்டிருந்தால்........

சீலா:- அப்படியொரு திட்டமா? ஆனால், நானறிவேன் நேற்றுவரை மன்னவர் போர் முனைக்கே போகவில்லை.

சந்தி:- போகவில்லையா? ஏன்?

[முன் இதழ் தொடர்ச்சி]

சீலா:- பேசிப் பயனில்லை மகாராணி! வெல்லவேண்டும் பகையை! வேரறுக்க வேண்டும் சதியை!

சங்கா:- அதற்கு என்ன செய்ய வேண்டுமென்கிறீர்?

சீலா:- தக்க நடவடிக்கைகளை இப்பொழுதே எடுக்கவேண்டும். வஞ்சகத்தை வாழ விடக் கூடாது. காட்டிக் கொடுக்கும் கயவர்களைப் பூட்டிவைக்க வேண்டும் சிறைச்சாலையில்.

(ஒரு வீரன் வருகிறன்)

வீரன்:- வணக்கம், மகாராணி!

சங்கா:- என்ன செய்தி?

வீரன்:- இளைய மகாராஜா, தங்களைப் பார்க்க விரும்புகிறார்.

(அமைச்சரும், மகாராணியும் பார்த்துக் கொள்கின்றனர்)

சங்கா:- திருடன் தலையாரியிடமே வருகிறான். நல்லது; வரட்டும்.

(வீரன் செல்ல, சந்திரவர்மன் வருகிறன்)

சந்தி:- வணக்கம் தேவி! விபரீதச் செய்தியொன்று! ஓவியனை கடித்தான்; நமது ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்தான் ஒற்றன் மைத்ரேயன்!

சங்கா:- அப்படியா? உண்மையாகவா?

சீலா:- அவர், உமது நண்பராயிற்றே?

சீலா:- எலியைக் கொல்லுவதற்குப் புலி தேவையில்லை. மன்னவர் களம் புகுமுன்பே பகைவரின் பலம் சரிந்துவிட்டதே!

சங்கா:- என்றாலும், அவர் உடனே அறிய வேண்டும் இந்த சதித் திட்டத்தை.

சீலா:- பாண்டியன் படையெடுப்புச் செய்தியோடு, இதையும் சேர்த்து இப்பொழுதே அனுப்புகிறேன், மகாராணி!

சந்தி:- (வியந்து) பாண்டியன் படையெடுப்பா? ஏன்? எதற்கு? எப்போது?

சங்கா:- மன்னவரை வீழ்த்தி, உம்மைச் சிங்காதனத்தில் ஏற்ற திட்டப்படி புறப்பட்டு விட்டது பாண்டியன் படை.

சந்தி:- (அஞ்சி) ஆங்! ... அபாண்டம்!

சங்கா:- இல்லை. உமது சதித் திட்டத்தின் அற்புதம்!

சந்தி:- இது, ஆதாரமில்லாத குற்றச் சாட்டு.

சங்கா:- பாவம்! உமக்கு வந்த ஓலை உமக்கே கிடைத்திருந்தால், இங்கு வந்தே இருக்கமாட்டீர்! மதிவளம் மிக்க மைத்துனரே! ஓவியன் மைத்ரேயன் சதிக்கு ஆதாரம், சாளுக்கிய மன்னனின் மூடங்கள். உமது சதிக்கு ஆதாரம், இதோ பாண்டிய வேந்தனின் மூடங்கள். (காட்டுகிருன்)

சந்தி:- (அஞ்சி) ஆ! ... என்ன!.... என்ன! ... எனக்கொன்றுமே தெரியாதே!

சீலா:- கள்ளனுக்குள் குள்ளன் பாய்ந்தான்; குள்ளன் ஒழிந்து விட்டான்! கள்ளன் கலங்குகின்றான் அகப்பட்டுக்கொண்டு!

சந்தி:- அமைச்சரே! எனக்கும் பேசத் தெரியும்.

சங்கா:- அது எனக்கு நன்றாகத் தெரியுமே! ஆனால், விவாதம் புரிய நேரமில்லை. மைத்துனரே! மைத்ரேயன் சதிக்கு மரண தண்டனை பெற்று விட்டான். உமது சதிக்கு நான் சிறைத் தண்டனை யளிக்கிறேன். மன்னவர் வந்தபிறகு என்னவோ செய்யட்டும். யாரங்கே?

வீரர் இருவர்:- (வந்து வணங்கி) மகாராணி!

சங்கா:- இவரைச் சிறையிலே வையுங்கள்.

வீரர்கள்:- உத்தரவு.

(தலைகவிழ்ந்து நிற்கும் சந்திரவர்மனை இழுத்துச் செல்லுகின்றனர்)

சங்கா:- அமைச்சரே! இந்த இரு சதி ஓலைகளோடு ......

சீலா:- இப்பொழுதே மன்னருக்குச் செய்தி யனுப்புகிறேன் மகாராணி!

(ஓலையைத் தர, அவர் வாங்குகிறார்)

## காட்சி 14.

(தைலபனை வென்றடக்கி, வீர முழக்கத்தோடு காஞ்சி நோக்கி வந்து கொண்டிருக்கிறது, நந்தி வர்மனின் படை—நிழற் காட்சி)

(மலைக் காடு. அந்திவேளை. மரங்கள் சூழ்ந்த பகுதியில் தங்கல். மன்னவரும், சேனாபதியும் தனித்திருக்கின்றனர்)

நந்தி:- சேனாபதி! படைவீரர்கள் தங்குவதற்குரிய வசதிகள் யாவும் செய்து முடித்தீரா?

விக்ர:- செய்துவிட்டேன் மகாராஜா!

நந்தி:- சேனாபதி! தோல்வியடைந்த தைலபன், நமது நிபந்தனைகள் யாவும் அப்படியே ஒப்புக் கொண்டானே; அதன்படி நடப்பானா? நீர் என்ன நினைக்கிறீர்?

விக்ர:- நிச்சயம் நடப்பான் மகாராஜா! போரில் பெருத்த சேதம். நமது பலத்தை நன்றாக உணர்ந்துவிட்டான்.

(ஒரு வீரன் வந்து வணங்குகிறான்)

நந்தி:- காஞ்சியினின்றும் வருகிறாயா? என்ன செய்தி?

வீரன்:- மகாராணியாரின் மடங்கல். (கொடுக்க)

நந்தி:- (வாங்கிப் பார்த்து) ஆ! இவ்வளவு பெரிய சதியா? எனது ஆட்சியைக் கவிழ்க்கவும் என்னைத் தொலைக்கவுமா? இவ்வளவு துணிவா?

விக்ர:- மகாராஜா! விளங்கவில்லையே!

நந்தி:- குருக்கோட்டைப் போர்முனையிலேயே என்னைக் கொல்ல ஒரு திட்டமாமே! உமக்கேதேனும் தெரியுமா?

விக்ர:- தாங்கள்தான் போர்க்களத்திற்கே வரவில்லையே!

நந்தி: வந்திருந்தால் சதி நடந்திருக்குமோ?

விக்ர:- ஒருக்காலும் நடந்திருக்க முடியாது. நானல்லவோ அருகில். தங்களுக்காக எனது உயிரையே கொடுத்திருப்பேனே!

நந்தி:- இது, சாளுக்கிய மைத்ரேயனின் சதி. ஒழிந்தது; ஒழிந்தான். மற்றொன்று: சந்திரவர்மனை மன்னனாக்க காஞ்சியின்மீது படையெடுத்துள்ளானாம் பாண்டியன் சீவல்லபன். சதிகாரப் பயல்கள்! என்ன வேலை செய்கின்றார்கள்!

விக்ர:- விபரீதமாக இருக்கிறதே!

நந்தி:- வினையமாகவும் இருக்கிறது, என் தம்பியின் வஞ்சகம்! சேனாபதி! பாண்டியன் படை, சந்திரவர்மனின் செய்தியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது, பெண்ணையாற்றங்கரையில்! சிறையிலே கிடக்கிறான் அந்த சகோதரத் துரோகி!

விக்ர:- (வியந்து) சிறையிலா? சந்திரவர்மரா?

நந்தி:- ஆம்! கிடக்கட்டும் அவன். நாம் விடக்கூடாது பகைவரை. இப்படியே பெண்ணையாற்றங்கரை சென்று, பழிபாவத்திற்குப் பரிந்து வந்திருக்கும் பாண்டியன் படையை அழித்து நிர்மூலமாக்கி விட்டுத்தான் காஞ்சி நகர் திரும்ப வேண்டும். நாடறிய வேண்டும்—நயவஞ்சகர் உணரவேண்டும் கழற்சிங்கனின் வல்லமையை! சேனாபதி! நாளை அருணோதயத்திற்கு முன் புறப்படச் சித்தமாகட்டும் நமது படை!

விக்ர:- கட்டளை மகாராஜா!

(வணங்கிச் செல்கிறான்)

நந்தி:- வீரனே! வா, மகாராணிக்கு ஓலையொன்று தருகிறேன்.

வீரன்:- உத்தரவு.

(மன்னவர் செல்ல, தொடருகிறான் வீரன்)

(வளரும்)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ப. கண்ணனின் வசனங்களுக்காகவும், கல்யாணசுந்தரம், மருதகாசி பாடல்களுக்காகவும், விஸ்வநாதன்—ராமமூர்த்தி இசையமைப்புக்காகவும், சிதம்பரம் ஜெயராமன் கானத்திற்காகவும் பார்த்து மகிழவேண்டிய படம் "பாசவலை"

—க. அண்ணாமலை, சேலம்.

☆ ☆

ஏழைமைக்கு வக்காலத்து வாங்கிடும் சில நிகழ்ச்சிகள். கருத்துக்கு இனிப்பூட்டும் அழகான பாடல்கள். அறிவுக்கு விருந்தளிக்கும் அருமையான உரையாடல்கள் இவைகள் அத்தனையும் அமையப் பெற்ற சோகச் சாரங்கதான் மாடர்ன் தியேட்டர்ஸார் தயாரித்து வெளியிட்டுள்ள "பாசவலை" என்ற திரைக்காவியம்!

காமவெறி பிடித்த புரந்தரன் கன்னிப் பெண் ஒருத்தியைக் கெடுக்க முயல்கிறான். சமயத்தில் காப்பாற்றப்பட்ட அவள், அவன் அண்ணனும், அரசனுமாகிய மகேந்திரனிடம் நீதி வேண்டி வழக்கு தொடுக்கிறாள். அதன் பலனாக மக்களால் மன்னன் புறக்கணிக்கப்படுகிறான். தன் கோல் முறையில் கறை படிந்ததைக் கண்ட மகேந்திரன் மனந்தாளாது அதைக் கழுவிக்கொள்ள முடிதுறந்து, மனைவி அமுதவல்லியையும் குழந்தைகள் விக்ரமன் பிரதாபன் இருவர்களையும் அழைத்துக்கொண்டு நாட்டைவிட்டகல்கிறான்.

காட்டை அடைந்தபோது, குழந்தைகளின் பசியை தணிக்க மகேந்திரன் கனிபறித்து வர மனைவிமக்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றவன், நச்சுப் பொய்கையில் விஷநீர் அருந்தி மயங்கி விழுகிறான். மணாளன் வரவிற்காகக் காத்துநின்ற அமுதவல்லி காட்டு மிருகங்களுக்குப் பயந்து, ஆற்றைக் கடக்க முயல்கிறாள். அந்தோ, குழந்தைகள் இக்கரையில் ஒன்றும் அக்கரையில் ஒன்றுமாக ஏங்கிக் கதறி அழ, அமுதம் ஆற்றோடு அடித்துச் செல்லப்படுகிறாள்.

அழகான அன்புக் குடும்பம் அச்சுவேறு ஆணி வேறாகப் பிரிக்கப்பட்டு, பல துன்பங்களைப் பரிசாக அடைந்து இறுதியில் ஒன்று சேருகிறது.

கதை பழமையானது. என்றாலும் அதில் காலத்திற்கேற்ற கருத்துரைகளை அங்கங்கே பட்டைதீட்டிப் பளிச்சிடவைக்கிறது "பகுத்தறிவு" சாணைக்கல்! திரு. ப. கண்ணன் அவர்களின் அழகு வசனங்கள் சுவையாக இருக்கின்றன.

திரு. ப. க. அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைக்கு எதிராக பட அதிபர்களாலோ—மற்றவர்களாலோ சோதனை ஏற்படும்போது, லாகவமாக தட்டிக்கொண்டு "என் லட்சியம் அறியாமை இருளை அகற்றுவதுதான்!" என்று நயப்பட கூறாமல் கூறிவிடுகிறார், சில வசனங்களில்!

மகேந்திரன் தன் தம்பியின் திருந்திய மனதையும் தியாக புத்தியையும், அவன் இன்னும் சிலவிநாடிகளில் இறக்கப் போவதையும் கேட்டுக் கதறிடும் கட்டத்திலும், கீதாஞ்சலியிடம் தன் மனைவி அமுதவல்லியின் அன்பையும் பண்பையும் எடுத்துக்கூறி அழுதிடும் போதும், தன் செங்கோல் கறைபடிந்தது என்று கேட்டு குமுறும் கட்டத்திலும் திரு. ப. க. அவர்களின் பண்பட்ட எழுத்துவன்மை நம் இதயங்களை நெருப்பில் காட்டிய மெழுகாக்கி விடுகிறது.

மகேந்திரனாக வரும் எம். கே. ராதா அவர்களின் நடிப்பு மேற்குறிப்பிட்ட இடங்களிலும், பைத்தியமாகமாறி உலகத்தை எள்ளி நகையாடும் கட்டத்திலும், நெருப்பால் வெந்து மடியப் போகும் தன் மனைவி அமுதாவைக் காப்பாற்ற ஓடிவரும் கட்டத்திலும் அபாரமாய் இருக்கிறது.

அமுதாவாக வரும் ஜி. வரலட்சுமியும், கீதாஞ்சலியாக வரும் எம். என். ராஜமும் தன் பாத்திரங்களை நன்கு உணர்ந்து நடித்திருக்கின்றனர். குமாரி ராஜாமணி கொல்லிப்பாவையாக வருகிறார். சோடை இல்லை.

புரந்தரனாகவரும் வி. கோபாலகிருஷ்ணன் நன்றாக நடித்திருந்தாலும் சில சமயம் நாடகபாணியில் பேசுகிறார்.

மாஸ்டர் பாஜி, வெங்கடேசன் குறை சொல்லமுடியாதபடி நடித்திருக்கின்றனர். நகைச்சுவையளிக்க கருணாநிதியும் முத்துலட்சுமியும் வருகின்றனர். தங்கள் வேலையைச் செவ்வனே செய்துள்ளனர். டைகர் நாயின் நடிப்புமிக அபாரம். காட்சி அமைப்புகள் ஒலி, ஒளி மிக நன்று.

## முன்னேற்றப்— —பாதையிலே

**சேலம்.**

சென்ட்ரல் டாக்கீசுக்கு எதிரே, தி. மு. க. மாவட்ட அலுவலகக் கட்டிடத்தில், 18-11-56 ஞாயிறு காலை, தேர்தல் நிதி சேர்ப்பதுபற்றி ஆலோசிக்க, சேலம் நகர தி. மு. க. மாணவர் கிளையின் கூட்டம் நடைபெறும். தோழர். வி. சிவப்பிரகாசம் B. A; B. L. தலைமை வகிப்பார். திராவிட மாணவர்கள் திரண்டு வருக.

—சுடர்மணி, செயலாளர்.

---

பாடல்கள் உயிருள்ளவை. இயற்றியவர்கள்: பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், அ. மருதகாசி. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் உயர்ந்து காணப்படுகிறது.

சங்கீதம் அமைத்தவர்கள் விஸ்வநாதன்—ராமமூர்த்தி. இனிமைக்கு கேட்கவேண்டுமா?

"பாசவலை" ஒரு அழகு நிலா. ஆனால், சிறு கறையும் இருக்கிறது, நம்ப முடியாத சம்பவங்கள் இருப்பதால்.

—இரா. அருணாசலம்.
பள்ளவெளி.

தாயகத்திற்கு வெற்றி!
இரண்டேநாட்களில் இருநூறு புத்தகங்கள் விற்பனையாயின!!
முகவுரை — முன்னுரை கிடையாது — அட்டைப்படமில்லை — போர்வையும் போர்த்தப்படவில்லை! ஆனாலும் வெற்றிமுரசு கொட்டுகிறது!
பி. எஸ். பி. ரங்கன் தீட்டிய கருத்தோவியம்.
தாயகம் (நாடகம்)
விலை ரூபாய் 1-4-0
கிடைக்குமிடம்:
பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● செ. இலக்குவன்,
ஓவியர், போத்தனூர்,
வேலூர்-சேலம்.

டி. பி. பழனிசாமி, தோளசம்பட்டி.

*கே: எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பற்றற்ற கடவுள், ஏன் பலைவி மக்களோடு இன்பமாக வாழவேண்டும்?*

*ப: கடந்து நிற்கவும், உடைந்து போகவும் அவர் விரும்பினாலும், கல்யாணவிழா நடத்தி, படுக்கையறையில் பாலும் பழமும் வைத்து, இன்பமாக வாழுங்கள் என்று இந்த பக்தர்கள்தானே தொல்லை கொடுக்கிறார்கள்!*

* * *

*கே: பக்திப் பாதையும் அறிவுப் பாதையும் சந்திக்கும்போது உறவு கொள்ளுமா?*

*ப: அறிவு, மக்களின் கூட்டுறவை விரும்பும். பக்தியோ, பகவானின் பாதார விந்தத்தையே விரும்பும்; உறவு எப்படி மலரும்?*

து ப மாரியப்பன், துறையூர்.

*கே: பெண்ணின் அறிவை எதைக் கொண்டு அளப்பது?*

*ப: ஆணின் அறிவை அளந்திடும் கோலே பெண்ணுக்கும் பொருந்தும்.*

* * *

*கே: படத்தொழிலை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கினால் என்னவாகும்?*

*ப: படாதிபதிகள் செய்கின்ற தவறுகளை, அரசாங்கமே செய்யவேண்டிய நிலைமை ஏற்படும்.*

அறிவழகன், கொழும்பு-11.

*கே: பாரத அரசாங்கத்தில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றனவே: அவர்களை என்ன செய்வது?*

*ப: பாரதத்தார்களே! உங்கள் எசமானத்துவம் எங்களுக்குத் தேவையில்லை யென்ற முடிவினை, பொதுத் தேர்தலில் காட்ட வேண்டியதுதான்.*

முரசுமணி, திருவண்ணாமலை

*கே: விதி என்பது என்ன? விதியை வென்றவர் யார்?*

*"விதி"யைச் சட்டமென்று கூறுவோம்; அதற்குக் கட்டுப்பட வேண்டும். 'தலையெழுத்து' என்பர் வைதிகர்கள். அந்த மடமையை வென்றவர்களிலே ஒருவர் இளங்கோ அடிகள்!*

● செ. இலக்குவன், போத்தனூர்,

*கே: கலை, கட்சி, காதல் இவை மூன்றும் எத்தன்மைத்து?*

*ப: கலை, அழகும் சுவையும் நிரம்பியது; கட்சி, கொள்கையும் பணியும் கொண்டது; காதல், இன்பமும் அன்பமும் இணைந்தது.*

* * *

*கே: உலகில் யாரை நம்பலாம்? ஏன்?*

*ப: நல்ல மனிதரை நம்பலாம்; அவர் நல்ல மனிதராக இருப்பதால்.*

க. குருந்தாசலம், காரமடை.

*கே: திருமால் மண்ணையும் விண்ணையும் இரண்டடிகளால் அளந்து, மூன்றாவது அடியால் மாபலிச் சக்கரவர்த்தியைக் கொன்றது உண்மையா?*

*ப: வெறும் கற்பனைக் கதையென்றாலும் விட்டு விடலாமே. தெய்வீகம் கலந்த புராணப் புளுகுதப்பி! நம்பாதே!*


**பாரிஸ் அழகிகள்.**

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபாற் செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது

வீனஸ் டிரேடிங் கம்பெனி(த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1


(1-ம் பக்கம் தொடர்ச்சி)

*கட்சி; ராஜாஜியும், அவரது ஆட்களும் செலித்தால் தமிழனுக்குத் தீங்குநேரும் காமராஜரும் அவரது ஆட்களும் செலித்தால் தமிழனுக்கு நன்மை கிடைக்கும்" என்று புதுமையான பிரசாரம் துவக்கியுள்ளார். எனவே இவரைப் பின்பற்றுவோர் காங்கிரசுக்குள்ளேயே காமராஜர் ஆட்களை ஆதரிக்கவும், ராஜாஜியின் ஆட்களை எதிர்க்கவும் கடமைப் பட்டவர்களாகின்றனர். இப்படியாக கருப்புச் சட்டை, கதர்ச்சட்டைக்குள் நுழைகின்றது!*

*காமராஜர் பேசுகின்ற காங்கிரஸ் கூட்டத்திலேயே, ராஜாஜீயின் கையாள் சுப்ரமணியமும் பேசுகிறார். கலவரமும் நடக்கிறது! காரணம் ஏதாக இருக்க முடியும்?*

*காமராஜர் வென்றாலும், சுப்ரமணியம் வென்றாலும் அது காங்கிரஸ் வெற்றிதான்; வடநாட்டு அடிமைகளின் வெற்றிதான்; தமிழ்நாடு என்று பெயரிடவும், தமிழனுக்குரிய நிலங்களைப் பெறவும், தமிழ்நாட்டை வளப்படுத்தவும் தகுதியற்றவர்களின் வெற்றிதான் என்பதாகவே தி. மு. க. கருதுகின்றது. கருத்திலே தெளிவு இருக்கின்றது; எனவே கலவரம் தேவையில்லை. எதிர்ப்பினைச் சமாளிப்போம்; பழிகளை, அபாண்டங்களைத் துச்சமென மதிப்போம். தூய்மையோடு தாயகவிடுதலைக்குப் பணியாற்றுவோம் வாருங்கள் தோழர்களே!*

—வாலி.

---

உலகிலேயே இன்று நாம் இழிந்த நிலையில் வறுமை வாய்ப்பட்டு உழலுவதற்கும், எடுப்பார் கைப்பிள்ளையாக ஏமாந்து விழிப்பதற்கும் நமது பழைய நாகரிகத்திலுள்ள தீய அம்சமே காரணமாகும்.

—ஜவகர்லால்நேரு.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு, மற்றென்றிலும் 100-க்கு 20 சத விகிதம் தெலுங்குக்குப் போனாலும் மீதி 80 சதவிகிதமாவது தமிழுக்குப் பயன்பட வேண்டுமென்று கோருவது நியாயமான கோரிக்கையென்பதை மறுக்கமுடியாது.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள சென்னை, திருச்சி இரண்டு நிலையங்களிலும் நிருவாகிகள், நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் நியமனத்தில், சென்னை முதல் அமைச்சர் திரு. காமராசரும் கவனம் செலுத்தி, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவாரென்று நம்புகிறோம்.

குறிப்பு:—

திராவிட கழகத்தலைவர் எனப்படுபவரும் திருச்சி வழக்கறிஞருமான தோழர், தி. பொ. வேதாசலம் அவர்கள் அண்மையில் வெளியிட்ட ஒரு அறிக்கையின் முக்கியப் பகுதி, இது! தமிழை மறந்த வானொலி நிருவாகிகளும், ''தமிழ்நாடு'' மறந்த ஆளவந்தார்களும் கவனிப்பார்களா?


தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

ப. கண்ணனின்

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1—8—0 |
| வீரவாலி | 1—4—0 |
| கன்னியின் சபதம் | 0—8—0 |
| மின்னொளி | 0—6—0 |

மு. கருணாநிதியின்

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1—4—0 |

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

*

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
குமாரசாமிப்பட்டி, :: சேலம்-1.


# மொழித்தூய்மை கெடுகிறதே!

பாவலர்—வேலாயுதசாமி

அழகான மொழி, தனித்தியங்குந் தகுதி பெற்ற மொழி, ஏனைய மொழிகட்கெல்லாம் தொன்மை வாய்ந்த தாயமொழி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய நான்மொழிகளை யீன்றெடுத்தும் இளமை நலங் குன்றாத இனியமொழி. சொற்கள் மலிந்தது, எடுக்க எடுக்கக் குறையாத எதுகை மோனை வளங் கொண்டது. கற்பனை யூற்றும், காவியத் திறமையுங் கருத்தினிக்கத் தரவல்ல கற்கண்டு போன்றது, நமது கன்னித் தமிழ்மொழி. மறுப்பாரில்லை; மாற்றியுரைப்பாருமில்லை எனினும்.

முற்காலத்து முதுபெரும் புலவர்கள், நாவலர்கள், பாவலர்கள், தமிழறிஞர்கள் அத்தகு தமிழ்மொழியைக் கற்றுக் கொண்ட எண்ணமும் முறையும் வேறு இக்காலத்திற் கற்றுக் கொண்டதாக நினைத்துக் கொண்டிருக்கும் இளந் தமிழர்களின் எண்ணமும் முறையும் வேறு. அக்காலத்தில் தேனெனத் தித்திக்கும் செந்தமிழ் மொழியின்பால் எழுந்த அளவுகடந்த ஆர்வத்தினால் குற்றங் குறையின்றித் தெள்ளத் தெளியக் கற்க வேண்டுமென்று தக்க ஆசிரியரை யணுகி, அன்பு செலுத்தி ஊக்கத்துடனும், முயற்சியுடனுங் கற்றுத் தேர்ந்தார்கள்; கவின்பெறும் பல நூல்கள் எழுதினார்கள்; தமிழன்னையைப் பிழையறப் பேணிவளர்த்துப் பெருமையடைந்தார்கள்.

இக்காலத்திலோ நாவற்றமிழும், பத்திரிகைத் தமிழுமே தமிழ்க் கடலின் இரு கரைகளென எண்ணி ஏமாந்து, புகழும், பெருமையும், பொருளும் விரைவில் அடைய வேண்டுமென்று அவாக்கொண்டு பிழைமலிந்த உரைநடைகளும், கவிதைகளும், பாடல்களும் எழுதத் துணிந்து விட்டார்கள். மொழிக்காகவும், கலைக்காகவும் கற்பதை விடுத்துப் பொருளுக்காகவும், புகழுக்காகவும் கற்கத் தொடங்கியதன் விளைவாக தமிழ்மொழி பல வகையில் சீர்கெட்டுத் திரிந்தும், தனக்குரிய எழிலுருவம் மாறுபட்டும், விகாரத் தோற்றத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த நிலை மாறாமல் இப்படியே இருக்குமானால், உலகம் புகழும் உன்னதத் தமிழ்மொழி, எவரும் வெறுக்கும் அளவுக்கு இழிநிலையடைந்து விடுமென அஞ்சவேண்டியிருக்கிறது. சான்றுக்கு சில:— சுவரில், தவற்றை, வெண்ணெய், நிலைமை, அடிமை. இவற்றிற்குப் பதில் சுவற்றில், தவறை, வெண்ணை, நிலமை, அடுமை, இப்படிச் சொற்பிழைகள்.

அவ்வழகிய, நற்றேன், அந்நாள், இவற்றிற்குப் பதில், அவ் அழகிய, நற்தேன், அன்னாள், இப்படிச் சொற்றொடர்ப் பிழைகள்! பலப்பல!

மற்றும், பொருட் பிழைகள்: ர—ற ல—ழ—ள, ன—ண மாறுபாடுகள். வடசொற்கள், ஆங்கிலச் சொற்கள் பெருமளவிற் கலந்து எழுதல் முதலியவைகளால் தமிழுக்குப் பெருந் தீங்கிழைக்கின்றனர். உரைநடையிலேயே இக்கேடென்றால், கவிதையிற் சொல்ல வேண்டுமா? செழித்துப் படர்ந்த பசுங்கொடியில் மலர்ந்து மணம் வீசி அசைந்தாடி அழகு தரும் வண்ணமல்லைப் பறித்துப் பிய்த்துக் கசக்கிக் குப்பை மேட்டில் எறிந்துள்ளதைப் போன்று காணப்படுகின்றது! இப்படி மனம் போன போக்கில் எழுதிப் பத்திரிகையாகவும், புத்தகமாகவும் வெளியிடுகின்றனர். இவைகளன்றித் திரைப்படத்தின் பாடல்களோவெனில் பார்க்கக் கண் இடறுகின்றது; சொல்ல வாய் கூசுகின்றது; தமிழ்மொழிதானோவென ஐயமெழுகின்றது. அப்படி அலங்கோலமான நிலைமை. இவைகள், தமிழ் மொழியின் தூய்மையிலும், வளர்ச்சியிலும் அக்கறையுள்ளவர்களுக்குப் பெரிய மனவேதனை தரக்கூடிய செயலாகும். மொழிப்பற்று மிக்க தமிழ்ப் பேரறிஞர்கள் தக்க கவனஞ் செலுத்துவார்களானால் இப்போக்கை மாற்ற முடியாதா?

Regd No. M. 5721. 16—11—56

## பாசவலை.

துறந்த பதவி—பிரிந்த குடும்பம் இழந்த கண்கள் இவைகளை திரும்பப்பெற்ற மன்னனின் வாழ்க்கை ஓவியம். 'அலிபாதுஷா' என்னும் முகலாயக் கதையின் அடிச்சுவட்டை பின்னணியாகக் கொண்டு, தமிழர் பண்பாட்டிற்கேற்ற வாறு 'பாசவலை'யைப் படமாக்கியிருக்கின்றனர், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸார்.

"பகுத்தறிவு" ஆசிரியர் ப.கண்ணன் திரைக்கதை, வசனங்களை எழுதியிருக்கிறார்.

கொல்லியமலை மூலிகைக்குச் சொந்தக்காரியாக சூனியக்காரியை சிருஷ்டித்திருப்பது நன்றாக இல்லை.

"பாலநாகம்மா" (தெலுங்கு) படத்தில் வரும் 'நாய்' காட்சிகள் வெகுவாக மக்கள் மனதைக் கவர்ந்துவிட்டதாகக்கருதி—நாயின் நன்றியை வெளிப்படுத்தும் விதத்தில்,படமாக்கினால் பாராட்டுதலைப்பெறமுடியும் என்று புரந்தரன் நாயாக்கப்படுகிறான், அந்தக் கட்டம் அறிவுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. காலத்திற்கேற்றதல்ல.

நல்லப்பன்—செல்லம்மா நகைச்சுவை கதையை ஒட்டி வருவது சுவையாக இருக்கிறது. அவர்களிடம் குழந்தை பிரதாபனை வளரவிட்டது மிகப் பொருத்தம்.

வசனம் தெள்ளுதமிழ் நடையில், எடுப்பான வார்த்தைகளால் மிடுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது. குற்றம் குறை கூறமுடியாதபடி வசனங்கள் அளவோடு இருக்கின்றன.

ஆரம்பக் காட்சியிலே உணர்ச்சியை தூண்டும் பேச்சுகள் வருகின்றன—மக்கள் சக்திக்காக மகேந்திரன் முடிதுறக்கும் கட்டத்தில், கருத்து மாரி பொழிகின்றது!

"எம்பெருமான் கிருபை" நவகோடி நாராயண செட்டியார் பாகத்தில் சுயமரியாதைத்துவங்கள் செறிந்திருக்கின்றன.

சகோதர பாசம்—தாய்ப்பாசம்—மகப்பாசம்—சட்டப் பாசம் போன்ற விளக்கங்கள் முதல்தரம். கலைப்பாசத்தால் அழியும் கிதாஞ்சலியின் பாத்திரம் ஒரு புதுமை!

பாடல்களை எ. மருதகாசியும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் இயற்றியுள்ளனர், உயர்ந்த பொருள் நயத்தோடு சிறப்பாக அமைந்திருக்கின்றன.

'இந்த ஆட்டுக்கும் நம்ம நாட்டுக்கும்' என்ற பாட்டு, நாட்டு நிலைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு: 'குட்டி ஆடு தப்பி வந்தால் குள்ளநரிக்குச் சொந்தம்' சிறந்த படிப்பினை. 'ஆகாசவீதியிலே அமைதி கொஞ்சும் நிலவினிலே' நாட்டியக் கலைக்கு உயர்வு. சூனியக்காரிக்கென கொடுக்கப்பட்டிருக்கும் பாடல்களில் விரசம் தட்டுகிறது.

விஸ்வநாதன்—ராமமூர்த்தி இவர்களின் இசையமைப்பின் திறமைபுகழத்தக்கதே தென்னகத்துப்பண்டைஇசைமுறைக்கு பங்கம் வாராவண்ணம் செய்திருப்பது வரவேற்கத்தக்கது

சிதம்பரம். சி.எஸ். செயராமன், திருச்சி லோகநாதன், ஜிக்கி, லீலா, கோமளா, ஜமுனாராணி மற்றும் பலர் பின்னணி பாடியிருக்கின்றனர். முன்னணியில் நிற்கின்றனர்.


மகேந்திரன்—எம்.கே. ராதா தனக்கு கொடுக்கப்பட்ட பாகத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். வி. கே. ராமசாமி 'நந்தகோபன்' பாத்திரம் சிறிது; போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று நடிக்கிறார். எ.கருணாநிதி இளைத்தவரல்ல. எஸ் எம். திருப்பதிசாமி திருப்திகரமாக நடிக்கிறார். எம். என் கிருஷ்ணன், சுந்தரராசன், சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன், ராஜசேகரன் (கணக்குப்பிள்ளை) பரவாயில்லை, புரந்தரன் கோபாலகிருஷ்ணன் எதிர்கால நடிகர். ஜி. வரலட்சுமி அமுதவல்லி பாகத்திற்கு மிக ஏற்றவர். எம். என். ராஜம் ஏ—ஏன்! புதுமுகக் குமாரி ராஜாமணியும் தேவலாம! டி. பி. முத்துலட்சுமி தனக்கே உரித்தான பாணியில் வருகிறார். நகைச்சுவை தருகிறார்.

டைரக்ஷன் ஏ. எஸ். நாகராஜன் கலைநுட்பங்களை தெளிவுறக் காட்டவும், புதுமைகளைப் புகுத்தவும், ஏனோ தவறிவிட்டார்.

ஒலி, ஒளிப்பதிவு தரமாக உள்ளன.

(7-ம் பக்கம் பார்க்க)

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037–38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 23-11-56 ★ விலை அணா ஒன்று. | இதழ் 21

# சூனிய வெளியிலே சுழலுகின்ற சாட்டை!

கையெழுத்துப் போடும் போது தன் பெயருக்கு முன்னால் "திரு" என்று போட்டுக் கொள்வதைப் போல், தன்னுடைய பத்திரிகையிலேயே தன் பெயருக்கு முன் "கலைஞர்" என்று அடைமொழி சேர்த்துக் கொள்பவர் ஒருவரின் பத்திரிக்கை, 9—11—56 'பகுத்தறி'வில் வெளியான 'சிவாஜியும் சிவஞானமும்" என்ற கட்டுரையை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறது. கட்டுரையின் உட்கருத்தைப் புரிந்துகொள்ளாமல், முன்னுக்குப்பின் முரணாக ஏதேதோ எழுதித் தள்ளியிருக்கிறது. தமிழரசுக் கழகம் ஆளுவோர் வாக்கைநம்பி போராட்டத்தை நிறுத்தியது தவறு என்பதே கட்டுரை வலியுறுத்திக் கூறும் கருத்து என்பதையும் தெளிவாகக் கூறிவிட்டு, நாங்கள் செய்தது தவறு என்றால் நீங்களாவது போராட்டத்தை ஆரம்பிக்கக் கூடாதா என்று கேட்கிறது 18—11—56 "சாட்டை" இதழ்.

அதோடு விட்டிருந்தாலும் நாம் அதைப் பற்றிக் கவலைப் படப் போவதில்லை. ஆனால், தி.மு. கழகத்தினர் கட்டுப் பாடற்றவர்களா?" என்று குற்றச்சாட்டை கேள்விக் கணையாக மாற்றி நம்மீது வீசுகிறது. ஜனநாயக முறையை அப்படியே பின்பற்றும் அரசியல் கட்சி தி.மு.க. அதிலிருக்கும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல உரிமையுண்டு. தனிப்பட்ட மனிதனின் கருத்துக்கு தடைபோடும் அரசியல் கண்ணியமற்றவர்களைத் தலைமையாகக் கொண்டிருக்கவில்லை தி.மு.க. தமிழரசுக் கழகம் போராட்டத்தை நிறுத்திவிட்டதென்றால், அதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கண்ணோட்டத்துடன் பார்க்கத்தான் செய்வார்கள். போராட்ட நிறுத்தம் வட எல்லைப் பறிபோவதற்குக் காரணமாக அமைந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன் தான் கட்டுரை தீட்டப்பட்டது. கட்டுரை குறைகூறும் நோக்கோடும், கையாண்டி செய்யும் குறிக்கோளுடனும்தான் எழுதப்பட்டது என்று யாராவது சொன்னால், "காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்நிறம்" என்ற பழமொழிக்கு அவர்களையே எடுத்துக் காட்டாக வைத்துக் கொள்ளலாம்.

தி.மு.க. போராட்டத்தை ஆதரித்ததானாலும், நேரிடையாகப் போராட்டத்தில் குதிக்கவில்லை என்று மற்றொரு குற்றச்சாட்டு! ஒரு கட்சி மற்றொரு கட்சி நடத்தும் போராட்டத்தில்—அந்தப் போராட்டத்தின் நோக்கம் எவ்வளவு உயர்ந்ததாயிருந்தாலும்—கலந்து கொள்ளாததற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கலாம். போராட்டத்தில் கலந்து கொள்ளாது போனாலும், மக்களின் ஆதரவைத் திரட்டித்தரும் வகையில் பத்திரிக்கை பிரசாரம் செய்ததே தி.மு.க. கடைப் பிடிக்கும் அரசியல் நாகரிகத்திற்குப் போதுமான சான்றாகும்! "தமிழ் வாழ்க" என்று முழங்கும் தமிழரசுக் கழகத்தினர்—இந்தியை எதிர்க்கும் தமிழரசுக் கழகத்தினர்—அன்று புகைவண்டி நிலையங்களில் திராவிடர்கள் "இந்தி அழிப்புப் போராட்டம்" நடத்தியபோது, அதை எதிர்த்து மறியல் செய்தனரே, அது இந்தக் "கலைஞ"ருக்குத் தெரியுமா?

"பகுத்தறி"வின் கருத்து தி.மு. கழகத்தின் கருத்தாக இருக்க நியாயமில்லை என்று ஒப்புக் கொள்கிறார் கட்டுரை ஆசிரியர். ஆனால், தலைமைக் கழகத்தின் உத்தரவின் மூலம் தமிழரசுக் கழகத்தார் எப்படி

[8-ம் பக்கம் பார்க்க]

கற்பனாலோகத்திலே

ஏ. பி. சாமி.

# கனாக் கண்டேன் தோழீ!

"பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு" என்ற குறளை இசையோடு பாடிய வண்ணம் காமராஜர் அவர்களது பங்களாவிற்குள் நுழைந்தேன். 'விடுதலை'யுங் கையுமாக எதிரே வந்த காமராஜர், "வாப்பா" ஏது, பாட்டு கிட்டெல்லாம் பலமா இருக்கே! சினிமாவுக்குப் போயிட்டு வர்றியா?" என்று கேட்டுக் கொண்டே தன் கதர்ச் சட்டையில் பட்டிருந்த கருப்புப் புள்ளியைத் துடைப்பதில் ஈடுபட்டார்.

"இது சினிமாப் பாட்டு இல்லீங்க! குறள்! அதாவது திருக்குறள்! அதைத் தான் ராகம் போட்டு பாடிக்கிட்டு வந்தேன். அதிலே பாருங்க, உங்க பங்களாவைப் பார்த்தவுடன் இந்தக் குறள் நினைவுக்கு வந்தது. உங்க திறமையும் புரிந்தது. உடனே உங்களைச் சந்தித்துப் பேசிட்டு......"

"ரொம்ப சந்தோஷம்! இப்படி உட்கார். டேய் பையா, ரெண்டு ஓவல் கொண்டு வா"

இருவரும் உட்கார்ந்தோம்.

"அப்பப்பா, ஏகப்பட்ட உஷ்ணமாயிருக்கே,' என்றவர் 'விடுதலை'யை மடித்து விசிறிக் கொண்டே என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையிலேயே, தமிழ் நாட்டு அரசியலில் வீசும் வெப்பத்தையும், அவர் அதைத் தணித்துக் கொள்ளும் 'முறை'யையும் புரிந்து கொண்டேன்.

"ஏதோ குறளைப் பத்திப் பேசினியே, என்ன அது?"

"ஓ. அதுவா? அதாவது, வள்ளுவர் என்ன சொல்றாருன்னா, பகைவர்க்குத் துணையாயிருப்பவரை அவரிடமிருந்து பிரித்து, தம்மைச் சேர்ந்தோரை பகைவர் பிரித்து விடாமல் பாதுகாத்து, தம்மை விட்டுப் பிரிந்தோரை மீண்டும் தம்மோடு சேர்த்துக் கொள்ளுகிறவர்கள்தான் சரியான அமைச்சர்கள்—அப்டீன்னு சொல்றார். இதை அப்படியே நடைமுறையில் செய்து காட்டறவர் நீங்க ஒருத்தர்தான். தி. க. விற்கும், தி. மு. க. விற்கு மிடையில் பகையை வளர்த்து, தி. க. வைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, காங்கிரஸ் காரர்களையும் விடாது இழுத்துப் பிடித்துக் கொண்டு......"

"ஊம்...என்னோட திறமை உனக்குத் தெரியுது. ஜனங்களுக்குத் தெரியுதா? அன்னிக்கு பாரு, திருச்சியிலே நான் பேசின கூட்டத்திலே ஒரே கலாட்டா...பத்திரிக்கைக் காரனுங்க இதை சாக்காவச்சிகிட்டு என் மானத்தையே வாங்கிட்டானுங்க"

"என்ன இருந்தாலும், நீங்க இடம் பொருள்பார்த்துப் பேசணும். "அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக" என்று கூட திருவள்ளுவர் சொல்லியிருக்கார். தி. மு கழகத்தாருங்க மாநாடு நடத்தினதிலேயிருந்து திருச்சியே மாறிப் போயிருக்குது...இந்தச் சமயத்திலே... ஆமா, தமிழ்நாடுன்னு ஏன் பெயர் வைக்க வில்லைன்னுதானே கூட்டத்திலே கேட்டாங்களாம். அதுவும் ஒரு விதத்திலே நியாயமாத்தான் படுது..."

"ஏய்! என்ன சொன்னே? என்னைப் 'பச்சைத் தமிழன்னு' சொல்லிப் பாராட்டுற பெரியாரே இதைப் பத்தியெல்லாம் என்கிட்டே பேசறதில்லே!"

"மன்னிக்கணும்! இன்னொரு விஷயம். தேர்தலில் பெரியார் உங்களை ஆதரிக்கப் போறது நிச்சயந்தானா?"

'அதிலென்ன சந்தேகம்?'

"இல்லே...நீங்க நிக்கிற தொகுதியில், பெரியாருக்கு ரொம்ப சொந்தக்காரரா ஒருத்தரைப் பார்த்து தி. மு. க. சார்பில் உங்களுக்கு எதிரா நிறுத்தி வைக்கப் போறாங்களாம்...அப்போ, பெரியார் ஆதரவு...?"

"ஏது, நீயே அவுங்களுக்கு 'பிளான்' போட்டுத்தருவே போலிருக்குதே! போ, வெளியே!" என்று கத்திக் கொண்டே கையிலிருந்த 'விடுதலை'யைக் கொண்டு என்னைத் தாக்க வந்தார். அங்கு பிடித்த ஓட்டம் பெரியார் முன்னிலையில் வந்து தான் நின்றேன்.

'வணக்கம் ஐயா!'

'தேவாசுரப் போராட்டத்தில்' மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தவர் என் குரலைக் கேட்டு தலை நிமிர்ந்தார்.

'ஏனய்யா, விபீஷணன் அயோக்கியன்தானே?'

'ஆமா, அதிலென்ன சந்தேகம்? நாந்தான் ராமாயணத்தை ஆராய்ச்சி செஞ்சு அழுத்தந் திருத்தமா என் புத்தகத்திலே எழுதியிருக்கேனே! வேணுமின்னா அதை வாங்கிக் கிட்டுப் போய்ப் படிச்சுப் பாரு. புத்தகத்து விலை ஒண்ணரை ரூவாண்ணு அச்சுலே போட்டிருக்குது. நீ பன்னெண்டணா கொடுத்துட்டு எடுத்துக்கோ!'

'என்ன இருந்தாலும்...விபீஷணன் இராவணனுடைய தம்பி! அவனும் தமிழன்தானே?'

'தமிழன்தான். ஆனா, வடநாட்டு ராமன் காலிலே போய் விழுந்த சகோதரத் துரோகியாச்சே! அவனை எப்படி நல்லவன்னு சொல்ல முடியும்?'

'அதனாலே என்னங்க ஐயா? இப்ப வடநாட்டு நேரு சொல்றபடி ஆடறங்கப காமராஜரை நீங்க 'பச்சைத்தமிழன்'னு பாராட்டிலியா? அதுபோல...உம்...

(9-ம் பக்கம் பார்க்க)

## வாய்வு சூரணம்.

உஷ்ண வாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, பித்த வாய்வு, மலக் கட்டு, மலபந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி, பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்த மயக்கம், பித்தசூலை, சோம்பல் முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும், தேகாரோக்கியத்துக்கும் மிகச் சிறந்த சூரணம். மூலிகைகளினல் தயாரிக்கப் பெற்றது (பத்தியமில்லை)

5-பலம் டின் ரூ 3—0—0

சம்பு இண்டஸ்ட்ரீஸ்,

சேலம்—2.

## எதிரொலி

எதிர்க் கட்சிகள் என்பது வெறும் ஆடம்பரம்.

—ஸ்ரீ மன் நாராயணன்.

ஆளும் கட்சி என்பது ஊதியம் பெறும் ஆடம்பரமோ?

* * *

டெல்லியில் நேருவின் எதிரே தமிழ் நாட்டு காவடி ஆட்டம்.

—செய்தி

ஆடியவர்கள் காமராசர், சுப்ரமணியம், பக்தவச்சலங்களோ?

* * *

கலைகளைச் சுவைக்க எல்லோருக்கும் சமவாய்ப்பு வேண்டும்.

—மந்திரி, சுப்ரமணியம்

அதற்காகவே ஐந்தாண்டுத் திட்டப் பிரசார நாடகம், நாட்டியம் எல்லாம் என்கிறதாம் ஒரு ஓட்டுச் சாவடி கதர்க் குல்லா!

* * *

எனக்குக் கொடும்பாவிகட்டி எரித்தால் அதுபற்றி எனக்கு அக்கரை இல்லை:

—ஜவகர்லால்நேரு.

மாவீரன் இராவணனையும், இந்திரசித்தையும் எரித்து மகிழ்ந்ததன் விளைவு போலும்!

* * *

எட்டயபுரத்துக்கு அருகே மஞ்சள் மழை பெய்தது, கூரையெல்லாம் மஞ்சள் கறை.

—செய்தி

சிவபெருமான் தலையிலிருக்கும் கங்காதேவி பஞ்சள் பூசிக்குளித்த இந்த மகத்துவச் செய்தியை நம்பாதவர், கடவுளை நம்பாதாரே!

* * *

பட்டினியால் குழந்தை துடிப்பதைக் சகியாமல், வாலிபரிடம் மானத்தை விலை பேசினேன்.

—பொன்னம்மாள்

மக்களுக்காக நடைபெறும், மக்கள் சர்க்காரிலே கற்பொழுக்கம் படும்பாடு காணீர்!

# வேண்டாம் மலையாளி கவர்னர்.

தமிழ்நாட்டுக்கு "தமிழ்நாடு" என்று கூடப் பெயரில்லை. தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாக வில்லை. அதற்காக உண்ணாவிரதம் இருந்த ஒருவர் இறந்து விட்டார். அவருடைய கோரிக்கைகளை கவனிப்பாரில்லை. அவரது கோரிக்கைகளுக்குத் தடையாக இருப்பவர்கள் யார்? அந்தத் தடையைத் தகர்த்து தூள் தூளாக்கத் தமிழர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது மற்றொரு மாற்றம்; திரு. ஏ. ஜே. ஜான் என்ற மலையாளி தமிழ் நாட்டு கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு மலையாளியை தமிழ் நாட்டு கவர்னராக்குவதை தமிழர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இதைத் தமிழ் நாட்டு அரசாங்கம் டெல்லி அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லவேண்டும். தடுத்து நிறுத்த வேண்டும்.

தமிழர்கள் தலையில் ஒரு மலையாளி கவர்னரை சுமத்தியிருப்பதை எதிர்த்து திரு. காமராஜர் ராஜிநாமா செய்ய வேண்டும். மலையாளி கவர்னராக வந்த பிறகும், காமராஜர் முதன் மந்திரியாக இருக்கலாமா?

தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் இடையிலே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த சமயத்தில் ஒரு மலையாளியை தமிழ்நாட்டு கவர்னராக நியமிப்பதைத் தமிழர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

—கி. ஆ. பெ விசுவநாதம்.

இன்றுள்ள சூழ்நிலையில் திரு. ஜான் சென்னைக் கவர்னராக நியமனம் பெறுவது ஏற்றதாகத் தெரியவில்லை, இந்து சகோதரர்கள் கிறித்துவ மக்களிடம் கொண்டுள்ள நல்ல உறவு நிலைமைக்கு இது மாற்றுணர்ச்சியை உண்டாக்கி விடுமோ என்றுகூட நான் அச்சப்படுகிறேன். ஆகவே, இந்தியக் கிறித்துவப் பிரிவினர்களுக்கு இந்திய அரசாங்கம் ஏதேனும் உள்ளவாறு நல்லெண்ணம் காட்டவிரும்பினால் திரு ஜானை சென்னையின் கவர்னராக நியமிக்கக் கூடாது.

—டாக்டர். இ. பி. மதுரம் M. P.

தமிழ் தெரிந்த ஒருவரையே தமிழ் நாட்டின் கவர்னராக நியமிக்கவேண்டும். தமிழறியாத திரு. ஜான் தமிழ் நாட்டின் கவர்னராக்கப் பட்டது வருந்தத் தக்கது.

இந்த நியமனம் தமிழ்மக்களின் ஒன்றுபட்ட கருத்துக்கு எதிரானதாகும். தமிழ்நாட்டின் நலன்களைக் காப்பாற்றும் திறமை சென்னை அரசாங்கத்திற்கு இல்லை என்பதை திரு. ஜான் நியமனம் எடுத்துக்காட்டி விட்டது.

—ம. பொ. சிவஞானம்.

## புதிய குழந்தை.

திருப்பத்தூர், பள்ளவேலி தோழர், இரா. அருணாசலம் அவர்களின் துணைவியார் தோழியர், பார்வதி, 18—11—56 ஞாயிறு காலை ஓர் ஆண் மகவை ஈன்றார்கள். அதன் மகிழ்வுக்குறியாக, "பகுத்தறிவு" வளர்ச்சிக்கென ரூபா 5. அன்பளிப்பாகவரப்பெற்றோம். மகிழ்வு; மிக்க நன்றி. புதிய குழந்தைக்கு எமது வாழ்த்து.

—ஆசிரியர்.


டாக்டர் சோதனை விளக்கத்தின்படி ஏற்ற கண்ணாடி எம்மிடம் கிடைக்கும்.




ராதா ஆப்டிகல் கம்பெனி,

முதல் அக்ரகாரம், சேலம்—1.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 23—11—56 | இதழ் 21

## காமன்வெல்த் உறவு ஏன்?

பிரிட்டன் தன்னுடையவும், தன்னைச் சார்ந்தோருடையவும் நலனுக்கென்று அமைத்துக் கொண்டிருப்பதே 'காமன் வெல்த்' நிறுவனம், பிரிட்டிஷ் மகாராணியின் தலைமையில் இயங்குகின்ற அந்தக் காமன் வெல்த்திலே, மன்னராட்சியை விரும்பாத பண்டித ஜவகர்லால் நேருவைப் பிரதமராகக் கொண்ட இந்திய அரசாங்கம் ஒரு உறுப்பாக அமைந்துள்ளது.

காமன் வெல்த் உறவால் இந்தியா பெற்றுள்ள இலாபம் என்ன? குறிப்பிட்டுக் கூறத்தக்கன ஏதும் கிடையாது. ஆனால், அந்த ஒட்டுறவால் இந்தியா பெற்றுள்ள இழிவுகள்—இடர்ப்பாடுகள் எத்தனை எத்தனையோ!

ஆப்பிரிக்காவும், இலங்கையும் காமன்வெல்தின் அங்கங்களாக உள்ளவைதாம். அந்தக் கூட்டிலே இணைந்தவைதாம். என்றாலும் இந்தியர்களையும், தமிழர்களையும் அந்த நாடுகள் எத்தகு கேவலமாக நடத்தின—நடத்துகின்றன? ஏனென்று கேட்கமுடியவில்லையே, இந்தியாவால். எதற்கு காமன் வெல்த் உறவு?

சூயஸ் கால்வாயில் உரிமை வேண்டி, ஐக்கிய நாடுகள் சபையையும் பகைத்துக்கொண்டு எகிப்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது தன்னல வெறிபிடித்த பிரிட்டன்! அந்த பிரிட்டனின் தலைமையிலே இயங்குகின்ற காமன் வெல்த்தில் இந்தியா இணைந்திருப்பது அக்ரமத்திற்குத் துணைபுரிவதன்றோ? போரினைத் தடுத்து உலகின் அமைதி நாடிப் பணியாற்றுகின்ற ஐ. நா. வுக்கு எதிரான முறையில், காமன் வெல்தோடு இணைந்திருப்பது இந்தியாவுக்கு இழிவு மட்டுமல்ல, அழிவுதேடும் அறிவற்ற செயலாகும். எனவேதான் நாம் இந்தியா காமன் வெல்த்தினின்றும் வெளியேறவேண்டும் என்கிறோம் ●

## வளரும் "பகுத்தறிவு"

திங்கள் இதழான "பகுத்தறிவு" கிழமை இதழாக மாறிய பிறகு, மக்கள் மன்றத்திலே நல்லிடம் பெற்று நாள்தோறும் வளர்ந்து வருகிறது. 'நந்திவர்மன்' நாடகம் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகின்றது என்பதை துவக்க முதல் இதழ் கேட்டு நமக்கு வரும் கடிதங்களே மெய்ப்பிக்கின்றன.

எனினும் "நந்திவர்மன்" இதழ்தோறும் இன்னும் சற்று அதிகமாக இடம்பெற வேண்டும் என்பதும் ஒப்பவேண்டிய ஒன்றுதான். அதற்குப் பக்கங்களை அதிகப்படுத்தல் வேண்டும். காகித விலையோ கனவேகத்தில் பறந்து ஏறுகின்றது! ஓரணா விலையில் பத்திரிகை வெளியிட முடியாத நிலை நெருங்கி விட்டது.

எனவே வாசகர்கள் திருப்திக்காக பக்கங்களைக் கூட்டவும், நமக்கு நட்டம் வராமலிருக்க விலையில் சிறிது ஏற்றவும் முடிவு செய்துவிட்டோம்.

நாளது 7—12—56 முதல் "பகுத்தறிவு" முகப்பில் கார்ட்டூன் அல்லது சித்திரத்தோடும், புதிய அச்செழுத்தின் பொலிவோடும், 12-பக்கங்களாக 1½ அணா விலையில் வருகின்றது.

"நந்திவர்மன்" 3 அல்லது 4 பக்கங்களில் இடம் பெறுவதோடு, தி. மு. க. முன்னணி வீரர்களில் ஒருவரும், பண்பட்ட சிறந்த எழுத்தாளருமான நண்பர், ப. உ. சண்முகம் அவர்களின் தொடரோவியம் ஒன்றும் இடம் பெறுகின்றது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்களின் ஆதரவு பெருகவேண்டும்.

இதழ் தொடர்ந்து பெறுவதற்கு விற்பனையாளர்களும், வாசகர்களும் தக்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ளல் நலமாகும். மேலும், இவ்வாண்டு "பகுத்தறிவு பொங்கல் மலர்" உண்டு என்பதையும் இப்பொழுதே தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பன்,
ப. கண்ணன்,




[முன் இதழ் தொடர்ச்சி]

## காட்சி 15.

(வித்யாவதி வீடு சந்திரவர்மனை நினைந்து அவள் சோகத்தோடு பாடிக்கொண்டிருக்கிறள்)

ஒளியிலா நிலவாகினேன்
உணர்விலா உடலாகினேன்
தெளிவிலா உரையாகவோ?
தீந்தமிழ் சுவைமாளவோ?

தென்றலும் புயலாச்சுதே
தெய்வம்கை விடலாச்சுதே
என்னருங் கலைவாழ்விலே
இன்னலும் புகலானதோ? (ப.க.)

முல்லை:- வித்யாவதி! நீ இப்படி அழுதுகிட்டே இருக்கிறது நல்லதில்லே!

வித்யா:- (வருந்தி) அவரது அன்புக் கடலிலே மீனாகத் துள்ளினேன். காதல் வானிலே வானம்பாடியாகப் பறந்தேன்! இப்பொழுது தணலில் புழுவாகத் துடிக்கின்றேனடி முல்லை! இனி எப்படியடி நான் வாழ்வேன்?

முல்லை:- என்ன செய்யறது? நம்ம கொலத்திலே நீ ஒருத்தி கொடுத்து வச்சவன்னு இருந்தோம். ஒன் விதியும் இப்படியாச்சு. நம்ம சிவன் கோயில் பரிபாலகர், சக்திமுனையர்கூட உனக்காக வருந்தினாடி.

வித்யா:- கழுத்தறுக்கும் காபாலிகருக்கும் என்மேல் கருணை பிறக்கிறது மகாராணியின் மனமிரங்கவில்லையே!

முல்லை:- இவ்வளவுக்கும் காரணமே அந்தச் சமணராணிதான்னு சொல்றார் சக்திமுனையர்.

வித்யா:- இல்லவேயில்லை. மகாராணி மாசற்ற செம்பொன். இது மைத்ரேயன் மூட்டிவிட்ட பெருநெருப்பு.

(பச்சை வேகமாக வருகிறள்.)

பச்சை:- வித்யாவதி! வித்யாவதி! சேதி தெரியுமா ஒனக்கு?

வித்யா:- என்ன சேதி?

பச்சை:- குருக்கோட்டையில் கைலபனைத் தோற்கடிச்ச மகாராஜா, பாண்டியன் படையெடுப்பு தெரிஞ்சு, அப்படியே பெண்ணையாற்றுப் பக்கமா வந்து, தெள்ளாறுங்கிற எடத்திலே, பாண்டியன் படையை அடிச்சு தொறுக்கி படுசூரணமாக்கிட்டாராம்.

வித்யா:- (மகிழ்ந்து) ஆஃகா! பகைவரை வென்றாரா நமது பார்த்திபர்? முல்லை! நமது மன்னரின் வீரம் குன்றின்மேல் நந்தா விளக்கடி!

பச்சை:- ஆந்த வெளக்கு, நாளை மறுநாள் நகரத்துக்கு வரப்போவுது. வரவேற்புக்கு பிரமாத ஏற்பாடுகள்ளாம் நடக்குது.

வித்யா:- அப்படியா?

பச்சை:- வித்யாவதி! இன்னொரு பிரமாதமான சங்கதி! ஆனா இப்ப இங்கே சொல்லமாட்டேன்.

வித்யா:- ஏன்?

பச்சை:- அது ரகசியம், முல்லை இருக்காளே!

வித்யா:- முல்லைதான் உனக்கு வெல்லமாயிற்றே?

பச்சை:- இல்லே. இப்ப கசப்பு மருந்தாயிட்டா.

முல்லை:- (சாகசமாக) போ பச்சை! நான் உசுரையே வச்சிருக்கேன் ஒமேலே. நீ என்னடான்னா............

பச்சை:- அப்படீன்னா இனிமே என்னை அடிக்கமாட்டியே?

முல்லை:- சத்தியமா அடிக்கமாட்டேன். (தலைமேல் அடிக்கிறாள்)

பச்சை:- அம்மாடி! எவ்வளவு பலமான சத்தியம்! வித்யாவதி அந்த ரகசியம் என்ன தெரியுமா?

வித்யா:- சொன்னால்தானே தெரியும்?

பச்சை:- நம்ம சந்திரவர்மன் சிறையிலே ருந்து தப்பிட்டாரு. ராத்திரிக்கு ரகசியமா இங்கே வரப்போறாரு.

வித்யா:- (மகிழ்ந்து) ஆ! தப்பிவிட்டாரா என் சுவாமி? ஒப்பிவிட்டாரா எனக்கு வாழ்வு தர? முல்லை! என்னடி முழிக்கிறாய்? போன இன்பம் வந்ததடி பொன்னான முல்லை! என் கண்ணான முல்லை!

(ஆர்வம் பொங்க அவளைக் கட்டிக் கொள்கிறாள்.)

## காட்சி 16.

(பாதை. வெற்றிமுழக்கம். நந்திவர்மன், படை வீரர்களோடு வந்து கொண்டிருத்தல். (நிழல் காட்சி) எக்காளம். சங்கநாதம் முதலியன ஒலித்தல்,

## காட்சி 17.

(அரச சபை. மன்னர் வருகை எதிர்நோக்கி, அனைவரும் குழுமியிருக்கின்றனர்.)

கட்டியக்காரன்:- ராஜாதிராஜ, ராஜவிக்ரம, அவனி நாரண, பல்லவர் கோளரி, பரதுர்க்க மர்த்தன, கம்பீர கழற்சிங்க தளிச்செங்கோல் மாய, வீரபுரந்தர நந்திவர்ம மகாராஜா பராக், பராக்........

(மன்னன் சிங்காதனத்தில் வந்தமர்கின்றான் அனைவரும் வணங்குகின்றனர் )

பெருந்தேவனார்:- (எழுந்து) மன்னன் வாழ்க! வீரத்தமிழ் மறவன் வாழ்க! பகைவென்ற பார்த்திபன் வாழ்க,

(பாடுகிறார்)

வன்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள் வினையால்
உண்மையால் பாராள் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோடு
ஆர்வேந்தர் ஏற்பார் எதிர்!

எல்லோரும்:- ஆஃகா! அஃகா!

பெருந்:- கொற்றவன் வாழ்க!

எல்லோர்:- வாழ்க! வாழ்க!

நந்தி:- புலவரேறு பெருந்தேவனார்க்கு மிக்க நன்றி. என்னைக் குதூகலத்தோடு வரவேற்ற குடிப் பெருமக்களே! மிக்க நன்றி. ஆணவத்தால் கப்பம் கட்டுமாறு ஆணையிட்டான் சாளுக்கிய தலைவன். அடிமைப்பட்டான்! வஞ்சகத்தால் நம்மீது போர் தொடுத்தான் பாண்டியன்! தோல்வியுற்றான்! இந்த இரு பெரும் போர்களின் வெற்றிகளுக்கும் காரணமாயிருந்த வீரர்கள் அனைவரையும் நெஞ்சுகந்து பாராட்டுகின்றேன். மகிழ்வு பொங்கும் இந்த நேரத்தில் மனம் நோகும் சேதியொன்று, சொல்லாது விடமுடியவில்லை. சந்திரவர்மன் சதிகாரனாக—அரசத் துரோகியாக—மாறிவிட்டானே வருந்துகிறேன். மிக மிக வருந்துகிறேன்.

சீலாதி:- (எழுந்து) மன்னர் பெரும! அவர் சிறையினின்றும் தப்பிவிட்டார்.

நந்தி:- (வியந்து) ஆங்! தப்பிவிட்டானா தார் தோன்றி? எங்கு சென்றாலும் சரி. பிடித்து வந்து தண்டிக்க வேண்டும். அந்தக் கயவனைக் கண்டுபிடித்துக் காவற் கூடத்திலே ஒப்படைக்கிறவர்க்கு கணிசமான பரிசு வழங்கப்பட வேண்டும் பறையறைவித்து நாடெங்கும் பரவச் செய்யும் இச் செய்தியை.

சீலாதி:- கட்டளை.

(தலை தாழ்ந்து ஒப்புகிறார்)

## காட்சி 18.

(அந்தப்புரம். மகாராணி சங்காதேவி மன்னரை வரவேற்க ஆயத்தமாயிருக்கிறாள். மன்னரின் வருகையின் சின்னமாக எக்காள ஒலி கேட்கிறது.)

சங்கா:- (ஆர்வம் பொங்க) அடியே! வந்து விட்டாரடி மன்னவர். எடுத்து வாருங்கள் ஆரத்தியை. எடுத்துவாருங்கள்.

நந்தி:- (வந்து) கண்மணி சங்கா!....

சங்கா:- காதல் மன்னவரே!....

(அரசி, மாலை சூட்டுகிறாள் இரு பெண்கள் ஆரத்தி கொண்டுவர, பாடியவண்ணம் ஆரத்தி சுற்றுகிறார்.)

(வளரும்)

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● மு. கலைமன்னன்,
C/o. ஏ. சாமி,
குருப் ஆஸ்பத்திரி முடீசு அஞ்சல்

**இரா. வெங்கடாசலம், சகண்டபுரம்**

கே: ராஜாஜியும், சுப்ரமணியமும் பிரசாரம் செய்துவரும் தட்சிணப் பிரதேசத்திற்கும், தி. மு. க. கேட்கும் திராவிட நாட்டிற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன?

ப: முன்னது; வடநாட்டுத் தலைமையை ஏற்கும் அடிமை முறை. பின்னது; நம்மை நாமே ஆண்டுகொள்ளும் உரிமைநெறி. ஒன்று வாடகை வீடு; மற்றது சொந்த வீடு!

* * *

கே: தி. மு. க. வின் தேர்தல் சின்னமாகிய "உதய சூரியன்" காலையில் மலர்ந்து மாலையில் மறைந்து விடுவதே போல், சட்டசபைக்குச் சென்றதும் தேர்தல் வாக்குறுதியும் மறைந்துவிடும் என்கிறார்களே; இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?

ப: திராவிட வாழ்வின் புத்தொளியாக, விடுதலைச் சின்னமாக உதய சூரியனைக் கருதுகிறோம். சொல்லுகிறோம்; சொல்லின் வழி செயலாற்றுவோம். மாலை, சூரியன் மறைந்தாலும், மீண்டும் காலை மலர்ந்துவிடும். ஆனால், மாட்டுக்கு அந்த நிலை வந்தால் சுடுகாட்டுக்குத் தானே போகவேண்டும்?

**கே. சிங்காரம், சென்னை-1**

ஆசிரியர், ப. கண்ணன் "சூனியக்காரி"யைப் புகுத்தி கதை, வசனம் எழுதலாமா? அது மடமையை வளர்ப்பதல்லவா?

ப: "பாசவலை"யில் அவர் சித்திரித்தது மூலிகைக்காரியை; "அவாள்" சூனியக்காரியாக்கி விட்டனர்! எனினும், அந்தக் கதை புராணக் கலப்பற்ற, தெய்வீகம் கலவாத கற்பனையானதால், நம்பிக்கை விளைக்காது; மடமை வளர்க்காது!

**பா. இராசாமணி, கோயம்புத்தூர்**

கே: "பாசவலை" பார்த்த பிறகு மந்திரக்கோல் நினைந்து நான் மனம் கலங்குகிறேன். தாங்கள் இப்படிச் செய்யலாமா?

ப: நடவாத நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் அற்புத ஆங்கிலப் படங்களைப் போன்றதோர் கற்பிதமே பாசவலை! கலங்காதீர்! கலையுரைக்கும் கற்பனையை நிலையெனக் கொண்டாட வேண்டாம்!

**● மு. கலைமன்னன், முடீஸ்**

கே: காதல் எங்கிருந்து பிறக்கிறது?

ப: ஆண் பெண் உடம்பிலிருந்து, கண்களின் வழியே பிறக்கிறது!

* * *

கே: உங்கள் வாழ்க்கையின் லட்சியம் என்ன?

ப: எல்லோரும் இன்புற்று வாழ, என்னால் இயன்றதைச் செய்வது.


விரைவில் எதிர்பாருங்கள்!
சென்னை அழகிரி நாடகமன்றத்தினர் நடிக்கும்

**புரட்சிப் பாடகன்**

(தமிழ் நாடகம்)

கதை வசனம்: ப. கண்ணன்
பயிற்சி: ஏ. தன்ராஜ்
அமைப்பாளர்: வே. கன்னியப்பன்


## முன்னேற்றப்— —பாதையிலே

**சென்னை.**

அண்மையில் மலேயா, சிங்கப்பூர் பகுதிகளுக்குச் சென்று நாடகங்கள் நடத்தி, பேரோடும் புகழோடும் திரும்பி வந்துள்ள நண்பர், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களைத் தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் வரவேற்றுப் பாராட்டும் வகையில், இராயபுரம் 'அறிவக'த்தில் 25-11-56 ஞாயிறன்று மாலை 5-மணிக்குத் தேநீர் விருந்தொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

—தி. மு. கழக தலைமை நிலையம்.

முதியோர் கல்வி இலவச இரவு பாடசாலை நிதிக்காக, 25—11—56 மாலை 6-மணிக்கு சென்னை சௌந்தரிய மகாலில், எம். ஈசுவர் எழுதிய வேடதாரி என்ற சமூக நாடகம் அறிஞர் அண்ணா தலைமையிலும், தோழர், என். வி. நடராசன் முன்னிலையிலும் நடைபெறும்.

—டி. எம். பி. கிருஷ்ணராஜ், அமைப்பாளர்.

## தி. மு. க. மாணவர் கிளை.

18—11—56 ஞாயிறு காலை சேலம் வெங்கடப்ப செட்டியார் ரோட்டிலிருக்கும் மாவட்ட தி. மு. க. அலுவலகக் கட்டடத்தில் வழக்கறிஞர் திரு. வி. சிவப்பிரகாசம் B. A. B. L. அவர்கள் தலைமையில் தி. மு. க. மாணவர் கிளையின் கூட்டம் நடைபெற்றது

மறைந்த மாவீரர் கே. வி. கே. சாமி, திரு சங்கரலிங்கனார் முதலானோர்க்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் நிதிக்காக மாணவர் கிளையின் சார்பாக சிறப்புக் கூட்டமொன்று 16—12—55-ல் நடத்துவதென்றும் HOME LAND இதழுக்குச் சேலத்தில் குறைந்தது 100 சந்தாதாரர்களை சேர்க்கும் பணியினை மாணவர் கிளை மேற்கொள்வது என்றும், சேலம் நகர தி. மு. க. மாணவர் கிளையின் அலுவலகத்தை சேலம் மாவட்ட தி. மு. க. அலுவலகக் கட்டடத்திலேயே இலவசமாக வைத்துக்கொள்ள அனுமதிக்குமாறு சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளரை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

திரு. அ. முத்து அவர்கள் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இருக்கிறார்களென்று ஆழம் பார்க்கிறார்களா என்று உடனேயே ஐயத்துடன் நோக்குகிறார். கடைசியில், தேர்தலில் காங்கிரசின் செல்வாக்கை இழக்கவைக்க போராட்டம் தொடர்ந்து நடப்பட வேண்டும் என்ற விருப்பத்தை தலைமை வெளியிட அஞ்சி, "பகுத்தறி"வைக் கொண்டு சொல்ல வைத்தது போலும் என்று அச்சத்துடனேயே தனது கற்பனைத் திறனை விளக்கிக் காட்டுகிறார்.

"சிவாஜியும், சிவஞானமும்" என்ற கட்டுரைக்கும், தேர்தலுக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமேயில்லை! என்றாலும் இரண்டிற்கும் சம்பந்தம் கற்பிக்க முயலுகிறார் இந்தப் "பகுத்துணர்ந்த பண்பாளர்!" காரணம்? காங்கிரசின் மேல் இன்னுமிருக்கும் ஒருதலைக் காதலா? அல்லது, தி.மு.க. தன் தொண்டர்களைப் போராட்டத்திற்கு அனுப்பி வைக்கும் என்ற எண்ணத்தில், "ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சிறை புகுவார்கள்" என்று ம.பொ.சி. சொல்லியதற்கு மாறாக தி.மு.க கலந்து கொள்ளாததால் தொண்டர் பட்டியல் நூற்றுக் கணக்கிற்குக் குறைந்துவிட்டதே என்று கோபமா?

ம.பொ.சி. அவர்கள் உள்நாட்டு மந்திரி பந்த் அவர்களைச் சந்திக்க விரும்புவதாக யாரிடமும் கூறவில்லை. உண்மை தான்! அவர் அப்படிக் கூறியதாக யார் சொன்னார்கள்? ஆனால்...."பண்டித பந்தை சந்தித்து எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வழி செய்கிறேன்" என்று சுப்ரமணியனார் சொல்லவில்லை என்பது முழுப் பூசனிக் காயை இலைச் சோற்றில் மறைக்கும் முயற்சி! பரிதாபம்! இந்த செய்தி 'தினமணி' போன்ற பத்திரிக்கைகளில் கொட்டை எழுத்தில் வெளியிடப் பட்டதை இந்தப் "பண்பாளர்" பார்க்கவில்லை போலும்!

"தமிழின மக்களுக்குப் பாடுபடுபவர் ம.பொ.சி. ஒருவரே என்பதை சிவாஜியும் சிவஞானமும் கட்டுரை நிரூபித்து விட்டது" என்று தனக்குத்தானே ஆறுதல் கூறிக் கொள்பவர், மேலும் சிறிது எழுதுவதற்குள் "ம.பொ.சி.யை திட்டுவது தான் "பகுத்தறி"வின் தொண்டு என்றால்...." என்று ஏன் இழுத்துப்பேசவேண்டும்?

தமிழகத்தின் எல்லைகள் மீட்கப்பட வேண்டும் என்ற அக்கறை எங்களுக்கும் இருக்கிறது. அதைத் தலைமை நிலையத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு இடமும், காலமும் இருக்கின்றன. பத்திரிகையில எழுதி குழப்பம் விளைவிப்பதற்கு நாங்கள் கட்டுப்பாடற்றவர்களல்ல! "இப்படியும் இருக்கலாம்" என்ற கற்பனைப் போக்கில் கட்டுரை எழுதுவது அழகல்ல. கட்டின வீட்டிற்குக் குறை சொல்வது தவறு! ஆனால், பாதியில் நிற்கும் வீட்டை ஏன் கட்டி முடிக்கவில்லை என்று கேட்பதில் என்ன தவறு? அப்படிக் கேட்டால், "நீதான் வீட்டைக் கட்டி முடியேன்" என்று சொல்வது?

"சஞ்சல புத்திக்காரர்—சாதிக்க முடியாதவர் பேச்சை நம்பி சிவஞானம் போராட்டத்தை நிறுத்தியது தவறு" என்று சொல்லுவதே தவறு என்றால், "போராட்டம் நிறுத்தப் படவில்லை; தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது" என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டுப் போய்விடலாமே! அதற்காக, எழுதுவதற்குரிய செய்திகள் எவ்வளவோ இருக்க, அவற்றையெல்லாம் விட்டுவிட்டு இப்படி ஏன் பொழுதையும், பத்திரிகையின் பக்கங்களையும் வீணாக்க வேண்டும்? நண்பரே! சூனிய வெளியிலே நின்றுகொண்டு சாட்டையைச் சுழற்ற வேண்டாம்! அடி உமது உடலில்தான் படும்!

—சேரலாதன்.

---

காங்கிரசுக்குத்தான் ஆட்சி என்ற நிலையை ஒழித்தால்தான் இந்தியாவில் சனநாயக முறையைக் காப்பாற்ற முடியும்.

—ஜெயப்பிரகாஷ் நாராயண்.

---

வள்ளுவர் நெஞ்சம்

## உலக வாழ்த்து-௯.

அதிகாரம்-௧. பாட்டு-௯.

**கோளில் பொறியில் குண-**
**-மிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.**

தங்கள் தங்களுக்கு உரிய உணர்ச்சியைக் கொள்ளாத மெய், வாய், கண், மூக்கு, செவி பயன்பட மாட்டாது. அதுபோல அன்பு, உண்மை, எண்ணம், நம்பிக்கை, சொல், செயல், உழைப்பு, அமைதி ஆகிய வாழ்க்கைக்குரிய எண்வகை குணங்களுக்குத் தலைவணங்காதவர் வாழ்க்கை வளம் பெறாது.

விளக்கம்:

எண்குணத்தான் — உண்மை, அன்பு, எண்ணம், நம்பிக்கை, சொல், செயல், உழைப்பு, அமைதி இக்குணங்களையுடையவன். புத்தர்கூட எண்வகைக் கொள்கைகளையே பரப்பினார் என்பது உணர்வதற்குரியது

—மீ. சு. இளமுருகு சொற்செல்வி

# மும்முனைப் போர்!

——[—]——

(குன்று தோறுடிவரும்: என்ற இசை)

செந்தமிழ் நாட்டினிலே திரண்டதுபார் கூட்டம்
நல்ல செய்கையிலே நாட்டம்
வளர் தி. மு. க. வீரர்களின்
மும்முனைப்போ ராட்டம்.
மானமதைக் காப்பதுவே மறத்தமிழர் பழக்கம்
இது மறந்திடாத வழக்கம்
உயர் வானதிர முழங்கியதே
உரிமைக் குரல் முழக்கம்!

கண்ணியம் கடமை கட்டுப்பாடு மாறாமல் வழி
காட்டும்நம் அண்ணாவின் சொல் மீறாமல்
எண்ணமும் செய்கை ஒருமையினாலே
எங்கும் பெரிய ஆதரவே
என்றும் காணாக் காட்சி யென்றே
எல்லா வாயும் கூறிடவே
மண்ணில் உரிமைப் போரில் நின்று
மாண்டாரே நம் தோழர்களே!

தொகையறா.

ஆயிரத்துத் தொளாயிரத்து
ஐம்பத்து மூன்றில்
ஜூலைபதி னான்கில் அமைச்சர்
ஆச்சாரி ஆட்சியில்
புதுக்கல்வித் திட்டமதை
எதிர்த்துச் செய்தார் மறியல்!

பாட்டு.

வீர லட்சியத்தை நெஞ்சிலேந்தி உண்டு
வெற்றியென ஆடும்கொடி கையிலேந்தி
ஆட்சியிட்ட சட்டம்
அரைப்படிப்புத் திட்டம்
ஒட்டை உதவாது
ஒழிகவென்று கோஷம்
போட்டாரே இஷ்டப்படி வீசுதையோ
போலீசு குண்டாந்தடி!

மண்டையடியாலே மயங்கிமண்ணைக் கவ்வினரே
மயங்கி மண்ணைக் கவ்வினரே
வந்துள்ள சுதந்திரத்தால்
வாழ்வதற்கு மார்க்கமில்லை!
கண்ணீர்ப்புகை யாலே
கலங்கி மக்கள் நொந்தனரே
கலங்கி மக்கள் நொந்தனரே
காங்கிரசு ஆட்சியிலே
கண்டசுகம் இப்படியோ!

—பாவலர்-வேலாயுதசாமி

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அது கிடக்குது! ஒரு மலையாளியைய அல்லவா நம்ம ராஜ்யத்திற்குக் கவர்னரா போட்டுட்டாங்க... அதை எதிர்த்து ஐயா ஒரு போராட்டம் நடத்தினா...'

''நடத்தலாம். ஆனா, தேர்தல் சமயமாச்சேன்னு பார்க்கறேன்...''

''இன்னொரு யோசனை... வந்து... நீங்கதான் திராவிட நாடு கிடைக்கறது கஷ்டம். தமிழ்நாடு கிடைச்சா போதும்னு சொல்லிட்டீங்களே! இனிமேல் 'விடுதலை'யில் ''திராவிட நாடு திராவிடருக்கே!'' என்று போடுவதை நிறுத்திவிட்டு 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று போடச்சொல்லுங்கள். அதோடு கழகத்தின் பெயரைக் கூட......''

பெரியார் தலை குனிந்தார்—கையிலிருந்த புத்தகத்தைப் படிப்பதற்காகத்தான்!

''ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீதாராம்''

என்று வெளியிலிருந்து பாட்டுச் சப்தம் கேட்டது. காங்கிரஸ்காரர்கள் இப்பொழுதே ஓட்டுக் கேட்கப் புறப்பட்டுவிட்டார்கள் போலிருக்கிறதே என்று எண்ணிக்கொண்டே, பெரியார் மாளிகையிலிருந்து வெளியே வந்து பார்த்தேன்.

ஒரு பிச்சைக்காரன் தெருவில் பாடிக் கொண்டிருந்தான்!

சட்டென்று என் தூக்கம் கலைந்தது. விழித்தெழுந்து பார்த்தேன்...... இதையெல்லாங்கூட சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா? ★★

பகுத்தறிவு.
7-12-56 முதல்
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 5-0-0
ஆறு மாதங்கள் 2-8-0
தனிப்படி 0-1-6
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

## கலைக்கூடம்

# மறுமலர்ச்சி.

குடும்பக் குமுறலின் அடித்தளத்தில் பிறந்திருக்கிறது ஆனந்தாவின் "மறுமலர்ச்சி' ராஜா என்னும் பெண்மணி வாழ்விலே புயலடிக்கிறது; அநாதையாகிறாள். மேனேஜர் போர்வையிலே வாழும் காமத்திமிங்கலம் வாய் பிளந்தது. சேகர் உருவில் காதல் தென்றலும் நிலவியது! வரட்டு கௌரவம் எதிர்த்தது; வரதட்சிணை என்ற சனாதன சர்ப்பம் படமெடுத்தாடியது! எல்லாவற்றையும் சகித்து—சங்கடத்தோடுதான் வாழ்ந்தாள் பணத்திற்காக ஜோணுவை கொலையடித்து சிறை சென்றான் காதலன் சேகர் காலம் வருமென்று காத்திருந்தாள். உடல் உழைப்பையே ஊதியமாக கொண்டாள். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் பிரசாத்துடன் கள்ளநட்புக் கொண்டிருக்கிறாள் என்ற கற்பனைக் கயிறை திரித்தன! விடுதலையான சேகர் வெகுண்டான்! விரட்டினான்! போலீஸாரின் சந்தேகக் கண்கள் 'ராஜா'வின் மேல் விழுந்தன. அப்பப்பா... எத்தனை கஷ்டங்கள் இவைகளையெல்லாம் கடந்து மறுமலர்ச்சியைக் காண்கிறாள். கதையின் வேகம் வெகுவாகக் கவருகிறது. ஆனால் பல படங்களிலிருந்து சிற்சில சம்பவங்களை எடுத்து 'மறுமலர்ச்சியாகத் தொடுத்திருக்கிறார்கள். 'கண்டுபிடியுங்கள் எந்தப் படத்தில் வந்த காட்சி?' என்ற திரைப்பட நினைவுப் போட்டி ஆரம்பிக்க பத்திரமாக வைத்துக்கொள்ள உதவும். இதை எவ்வளவோ சிரமத்தோடு தாமியும், எஸ். ஏ சுப்பராமும் பின்னி இருக்கிறார்கள். பின்னல் வேலை சரி. ஆனால் பின்னப்பட்டமுறை தவறு. வசனம் எஸ் ஏ. சுப்பராமனால் வரையப்பட்டிருக்கிறது நடுத்தரம். திறமையை வெளிப்படுத்தும் கட்டங்களில் சுமாரான வார்த்தையாடல்கள் ஏனோ தானோவென்று இருக்கின்றன.

[illegible]. எஸ். சுப்பரமணியம், பாடல்களை [illegible]யிருக்கிறார். கருத்துகள் இல்லாவிட்டாலும் பெண்டியாலா நாகேஸ்வரராவின் சங்கீதத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளன, 'வானவீதி தன்னில் ஆதவன் உதிக்கிறான்' என்ற பாட்டிற்கு டி. எம். சௌந்தரராசன் குரலோசை உயிர் ஊட்டுகிறது. ஏ. பி. கோமளா, ஜிக்கி பாடும் 'மனமறியாத போனதேனோ' என்ற பாட்டின் நடனநாடகம் நன்றாக இருக்கிறது. இதுகாறும் பாரின் ரீதியும் என்று தொகையறுவில் தொடங்கிய 'பொல்லாத விதியும் வேலையும் கூட' என்ற பாட்டை கண்டசாலா பாடுகிறார். தமிழ் எழுத்துக்கள் வதைபடுகின்றன. லீலா, ராணி, ஏ. எம். ராஜாவும் பாடுகின்றனர்.

'ராஜா'வாக வரும் ஜி. வரலட்சுமி நடிக்கிறார் என்று சொல்லுவதைவிட பாத்திரத்தோடு இரண்டறக் கலந்துவிட்டார் என்னலாம். ஆனால் அவருடைய காதலர் சேகராக வரும் ஸ்ரீராம் சரியில்லை; வந்துபோகிறார். ரஜினியாக வரும் ஈ. வி. சரோஜா ஏறத்தாழ நடித்தாலும் அவர் காதலராகவரும் பிரசாத் எஸ், என். நம்பியார் தெம்பூட்டும்படியாக இல்லை. காதல் ஜோடிகள் பொருத்தமாக இல்லை. படத்தின் டைரக்டர்களில் ஒருவரான லங்காசத்தியம் பியூன் கந்தப்பனாக வருகிறார். பி. நாகேஸ்வரராவ் பின்னணிப் பாடலுக்கு நடிக்கும் வாய்ப்பும் இருக்கிறது. பரவாயில்லை, ஈ. ஆர் சகாதேவன், சி எஸ் ஆர், டி. என். மீனாட்சி போன்றவர்களும் நடிக்கின்றனர். ரசிக்கும்படியாக இல்லை.

கே. எஸ் பிரகாஷ்ராவ், லங்காசத்யம் இருவரும் டைரக்ஷன் செய்திருக்கின்றனர். நல்ல நடிகர்களிடம் வேலை வாங்கவில்லை. உவமான உவமேயங்களை விளக்கிக் காட்டவேண்டிய இடத்தைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. குறைபாடுகள் நிறைய இருக்கின்றன.

நேரத்தைச் செலவிட்டுப் பார்த்தறிந்து கொள்ள ஒன்றுமில்லை. பொழுது போகவில்லையென்றால் போய்ப் பார்க்கலாம்.

டப்பிக் "மறுமலர்ச்சி"யில் தக்க "புதுமலர்ச்சி" இல்லை.

—க. அண்ணாமலை, சேலம்.

TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை
அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

சலகண்டபாம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 30-11-56 ★ விலை அணா ஒன்று. | இதழ் 22

# அரியலூர் விபத்து; ஓர் அறைகூவல்!

அரியலூர் இரயில் விபத்துச் செய்தி, தென்னாட்டு மக்களை பெருங் கலக்கத்தில் ஆழ்த்திருக்கிறது. இரயிலில் பிரயாணம் செய்வது ஆபத்துக்குரியவொன்று என்ற பீதியினை எங்கும் வாரியிறைத்துவிட்டன, அங்கு நிகழ்ந்த கோர நிகழ்ச்சிகள்!

காட்டாற்றுப் பெருவெள்ளம் பாலத்தைச் சிதைத்தது; தூத்துக்குடி செல்லும் துரிதவண்டி பன்னூற்றுவர் வாழ்வினைச் சிதைத்து விட்டது!

மழலைக் குழந்தைகள், மாண்புறு பெண்டிர், சிரித்து விளையாடும் சிறுவர் சிறுமியர், எழில் பூத்த இளம் மங்கையர்—இளைஞரேறுகள், குடும்பம் புரக்கும் தலைவர்கள், நண்பர்கள், நல்வாண்மையாளர் நூற்றுக்கணக்கிலே கையொடிந்தும், காலறுந்தும், உடற்சிதைவுண்டும், நீரில் மூழ்கியும் படு கோரமான சாவுக்கு இரையாகியுள்ளனர். எண்ணமுடியாத பெருவிபத்து! என்றும் நடவாத பயங்கர சம்பவம்!

இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ள பிணங்கள் சுமார் 150. இனியும் கிடைப்பன எத்தனையோ; கிடைத்தும் அழுகி உருத்தெரியாமல் போகிறவை எத்தனையோ; அந்தோ! நினைக்கவே இதயம் குலுங்குகின்றது.

இத்தகைய கோர இரயில் விபத்தினை தென்னகம் இன்னாள்வரை கண்டதில்லை. கண்டிருக்கிறது காங்கிரஸ்-டெல்லியாரின் ஆட்சியிலே!

அரியலூர் சோகக் காட்சி குறித்து, திருச்சி மாட்ட தி. மு. க. செயலாளர் தோழர், அன்பில் தருமலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே கூறுகின்றார்: "பிழைத்தவர்கள் எண்ணிக்கையைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, இறந்தவர்கள் எண்ணிக்கையை யாராலும், எப்படியும் சொல்ல முடியாது" என்று. எவ்வளவு உயிர் நாசம்; எவ்வளவு சொத்துச் சேதம்; எவ்வளவு நகை நட்டு—பணம் பத்திரம் போன்ற உடைமைகள் பாழ்; இனித்தான் தெரிய வேண்டும்.

இப்பெரு விபத்து இயற்கையின் கோளாறால் நேர்ந்தது; கடவுளின் செயலால் ஏற்பட்டது என்று கூறி, கடமைப் பட்ட எவரும் தப்பிவிட முடியாது. எனவேதான் பொறுப்புணர்ந்த டெல்லி போக்குவரத்து அமைச்சர், சாஸ்திரியல்லாத—லால்பகதூர் சாஸ்திரி தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார். அண்மையிலே ஐதராபாத்தருகே மகபூப் நகரில் பாலத்தின் மீது சென்ற புகைவண்டிக்கு இதுபோல் விபத்து நேர்ந்தது. அப்பொழுதே அவர் பதவி விலக விரும்பினர்; அதே போன்ற அரியலூர் பெரு விபத்து, அவர் எண்ணத்தை முடித்துவிட்டது. அவரது செயலினைப் பாராட்டுகிறோம். தன் பொறுப்பினைச் சரிவர நிறைவேற்ற முடியாமையே விபத்துக்குக் காரணம் என்ற உண்மையை ஒப்புகின்ற அந்த நியாயவுள்ளம், எத்தனை அமைச்சர்களுக்கு இருக்கின்றது?

செத்து மடிந்தோரின் குடும்பங்களுக்கு அரசாங்கம் சரியான நீதி வழங்க வேண்டும். விபத்தின் விளைவால் கதியற்றுப் போனவர்க்கு வாழ்வளிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட நிர்வாகிகளை விசாரித்து தண்டிக்க வேண்டும். இதே போன்று இந்தியப் பேரரசு

(10-ம் பக்கம் பார்க்க)

புத்தநெறி

# பகுத்தறிய வழிகூறினர்.

பி. வி. இராமசாமி.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும்
அப்பொருள் மெய்ப் பொருள்
காண்பதறிவு

அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ்சிறப்பு.

பவுத்த நெறிக் கொள்கையின் குறள் சுருக்கக் கருத்து இவையேயாகும். அன்பர் பணிசெய்தலே இன்ப நிலை எய்தவழி எனவும் வழியுறுத்துகிறது. இத்தகைய இன்ப நிலையை எய்த பிறர் உதவியோ பிற அருளோ தேவையில்லை என்றும் அறிவுறுத்துகிறது.

இந்த அன்புநெறியை — பகுத்தறிவு இயலைத்தோற்றுவித்த புத்தர் பிரான் தம்மை அவதார புருஷராகவோ—கடவுள் தூதனாகவோ கூறிக்கொள்ளவில்லை.

"உலகிலுள்ள எல்லா மனிதப்பிறவிகளைப் போலவே நானும் ஒரு மனிதன் தான்" என்று விளக்கமாகத் தமமைப் பற்றித் தெரிவித்துக்கொண்டார்.

உலகம் காண்பதும், உலகுக்குப் பயன்படுவதுமான மெய்மைகளையே திரட்டிக் கூறினர். மனிதர்களுக்குள் மனிதராக வாழ்ந்தார். தமது முயற்சியால் மெய்யறிவு பெற்ருர். தாம் கண்ட மெய்மைகளைப் பிறருக்கும் கூறினர்.

மூடநம்பிக்கைகளால் அறியாமையால் துயர்படும்மக்களின் பகுத்தறிவை துலக்கஞ்செய்து, அவர்களைத் தமது தெளிந்த அறிவு கொண்டு நன்னெறி கண்டு நடக்கச் செய்ய வழிகூறினர்.

"உனக்கும் உன் செயல்களுக்கும் அவற்றின் பல பலன்களுக்கும் நீயே கர்த்தா. வேறு கர்த்தா கிடையாது" என்று 'தர்ம பாதா' என்ற நூலில் சாக்கிய முனிவரே குறிப்பிட்டுள்ளார். நாம் உள்ளதும் அவையுடமான நிலைமை, நமது எண்ணத்தின் செயலின் விளைவு என்பதும் இவர்கூறும் விளக்கம்.

'மகாபரிநிர்வாண சூத்ரா' என்பதில் புத்தர்பிரான் தமது சீடனை ஆனந்தரிடம், "ஆனந்தா உனக்கு நீயே ஒளியாக இரு உனக்கு நீயே அடைக்கலமளித்துக்கொள், தர்மத்தைக் கைப்பிடித்துநட, உன்னைத் தவிர்த்து வேறு யாரையும் உனது ரட்சகராக எதிர்பாராதே, அறிவுச் சிகரத்தை அடைய விரும்புவோரும் நல்வாழ்க்கையை அடைய விரும்புவோரும், தன்னம்பிக்கைகொள்ள வேண்டும் சுயமுயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கூறியுள்ளார்."

"பாபத்தை நீக்குபவரும்—நீக்கக் கூடியவரும் இல்லை — உருவத்துக்கு மதிப்பு தராதே! நேர்மையை கவனித்து நடந்துகொள் என்று கூறி உருவ வணக்கத்தை வெறுக்கச்செய்கிருர். தெய்வீகத் தாகர்களையும் இவர் கண்டிக்கிருர்.

—(வஜ்ரசேதிக)

இவர் கல் ஆல் நிழலில் அமர்ந்திருந்தபோது ஒரு பார்ப்பனன் இவரை அணுகி, "நீர் தேவனு? கந்தர்வனு? யக்ஷனு?" என்று வினவினுன். அதற்கு சித்தார்த்தர் "உன் மனதில் உள்ள ஆசைகளால்தான், நான் தேவனு—கந்தர்வனு—என்று சந்தேகிக்கச் செய்தது. இவ்விதமு சந்தேகத்தைத் தூண்டுவது ஆசை. அவ்வகை ஆசைகளை ஒழித்தவன்தான்—புத்தன்"

என்று பதிலளித்தார். புத்தன் என்றால் மெய்யறிவொளி பெற்றவன் என்று பொருள்.

இவரது இயற்பெயர் கவுதம சாக்கியர்.

கி. மு. 563-ஆண்டில், வட இந்தியாவில் கபிலவஸ்துநகர்—அண்மையிலிருந்த லும்பினி பூங்காவனத்தில் பிறந்தார்.

'சித்தார்த்தர்'—'கவுதமர்' இடப்பட்ட பெயர்.

கோரக்பூர் ஜில்லாவிலுள்ள புத்தர் பிறப்பிடத்தில் அசோக மன்னர் 239-ல் ஒரு நினைவுக்கல் நட்டு புத்தர் பிறந்த இடம் என்று எழுதிவைத்துள்ளார். தந்தை சுத்தோதனர்; தாயார் மாயா தேவி—பிரசவ மரணமுற்றதால் வளர்ப்புத்தாய் பிரஜாபதி கவுதமி (அத்தை) வளர்த்தார், இவரது மனைவி யசோதரா மகன் ராகுலன்.

சித்தார்த்தர் தமது 29-ம் வயதில், உலகமக்கள் படும் அல்லல்களைக்கண்டு அவர்களுக்கு நல்வாழ்வு தர வழிதேடி, வீட்டைவிட்டு ஏகினர்.

வேதமதத்தினர்கூறியகோட்பாடுகள் அறிவுக்குப் பிடித்தமாக இல்லை என்று கண்டார்.

தனித்து ஆலோசித்தார். மக்களின் அல்லல் அவதிகளுக்குக் காரணம் 'ஆசை' என்று கண்டார்,

இந்த ஆசையைக் கட்டுப்படுத்தி, நல்வழி நடத்தலே நல்வாழ்வுக்கு வழியெனக் கண்டார்,

இவருக்கு எதிராக இவரது தாயாதி தேவதத்தன் கிளம்பி புதுமதம் கண்டான்—இவன் வேத மதச்சார்பினன் அஜா தசத்ருமன்னன் உதவிகொண்டு புத்தருக்கு பலவித இன்னல்களும் ஆபத்துகளும் விளைத்தான். இவர் மலை அடிவாரத்தில் அமர்ந்திருக்கும்போது இவர் மீது பெரும் பாறையுருட்டித் தள்ளப்பட்டது. மற்ளொரு சமயம் மதவூட்டிய யானை ஏவப்பட்டது. இவ்விரண்டு ஆபத்துக்களிலும் இவர் தப்பினர்.

ஒரு பெண்ணை ஏவி, இவர்மீது விபசாரக்குற்றஞ் சுமத்த சதி செய்யப்பட்டது. ஆனல் சதி வெட்ட வெளிச்சமாகி இவர் தூய்மையாளர் என்பது நிரூபிக்கப்பட்டது. மற்ளொரு பெண்ணை கொன்று இவர் இருப்பிடத்தின் முன் போட்டு இவர்மீது பெண் கொலைக்குற்றஞ் சுமத்தினர். ஆனல் உண்மை குற்றவாளிகளான அந்த காட்டுமிராண்டி மதவெறியர்கள் கண்டுபிடிக்கப்பட்டு—மரண தண்டனை விதிக்கப்பட்டனர். இத்தகைய எதிர்ப்பு அலைகள் இப்போதும் இக்மாதிரி கொள்கையாளர்களுக்கும் ஏற்பட்டு வருவது அறிந்ததே.

புத்தர் தமது கோட்பாடுகளைப்பரப்ப கைக்கொண்டது பார்ப்பன மத முறையல்ல—அதாவது பூசை யாகங்கள்—மந்திரங்கள் முறையல்ல.

கால்நடையாக ஊர்தோறும் நாடு தோறும் சென்று பாமர மக்களும் உணர்ந்துகொள்ளும் முறையிலும்,

(9-ம் பக்கம் பார்க்க)

# எதிரொலி



கவர்னர் ஸ்ரீ பிரகாசா வடக்கு-தெற்கு பிரிவினைக்கூற்றை ஒழித்தவர்.

—ராஜாஜி.

*இல்லையாது! மல்லையாள மணம் கமழ்ந்தாலும், மனம் வடக்கைத்தானே நாடுகிறது?*

*　　*　　*

இளம்பிள்ளையில் திரு. வி. க. நூல் நிலையம் கல்வி மந்திரி திறந்து வைத்தார்,

—செய்தி

*திரு. வி. க. எழுதிய நூல்களைப் படித்தால் தமிழன், தமிழ்நாடு, தன்மானம் என்று வருவதைக் காணச் சகியாமல் கண்களை மூடி வைப்பாரோ?*

*　　*　　*

நூலுக்கும் நெசவுக்கும் அதிகத் தொடர்பு அவசியம்.

—பக்தவச்சலம்.

*ஆமாம்; அமைச்சருக்கும், அறிவுக்கும் போல் இருந்துவிடக் கூடாதே!*

*　　*　　*

சிவாஜி கணேசன் தாயார் செல்லம்மாள் அரியலூர் விபத்தில் சிக்கி மடிந்தார்

—செய்தி.

*அவருக்கு அனுதாபம்; ஆனால், திருப்பதி வெங்கடாசலபதி... அட ஏழுமலையானே! நீ இருக்கிறாயா? செத்துவிட்டாயா?*

*　　*　　*

'தமிழ்நாடு' எனப் பெயரிடக்கோரி திருப்புத்தூரில் 22 வயது இளைஞர் உண்ணுவிரதம்,

—செய்தி.

*விருதை சங்கரலிங்கனாரைத் தொடர வீரர் காமராசர் வழிகாட்டுவாரோ?*

*　　*　　*

அரிசனங்கள் மதம் மாறுவதால் நிலைமை உயர்ந்துவிடாது!

—ஜகஜீவன்ராம்

*மாறாமலிருந்தும் உயரவில்லையே!*

---

# 7-12-56

## "பகுத்தறிவு" பக்கங்கள் உயருகின்றன; தரமும் உயருகின்றது; விலையும் சற்று உயருகின்றது.

## இலக்கியச் சோலையில்

ஒரு புதுப்பகுதி. செந்தமிழும் பகுத்தறிவும் செழிக்கும் வகை, நந்தமிழ் இலக்கிய நயங்களை எடுத்தியம்பும் எழிலோவியமாகத் தொடருகின்றது.

தோழர், ப. உ. சண்முகம் அவர்களின்

பண்புத் தமிழோவியம்

## தேசிங்குராஜன்

விரைவில் தொடங்குகிறது.

**பக்கங்கள் 12.** **விலை 0-1-6.**

---

# பகுத்தறிவு பொங்கல் மலர்.

சிந்தைக்கு விருந்தளிக்கும் பைந்தமிழ் முழக்கம்!

★

இன்பத்தேன் பிலிற்றும் இலக்கியச் செல்வம்!

★

குறைந்த விலையில் நிறைந்த மண மலராகத் தயாராகிறது.

**விலை 0—8—0 தான்!**

**விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு இப்போதே சொல்லி விடுங்கள்.**

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்.


# இதயம்

மலர் 6 | சேலம் 30—11—56 | இதழ் 22


# தேர்தல் நிதி தாரீர்.

தென்னகத்து விடுதலை இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடப் போகின்ற செய்தி நாட்டு மக்களிடையே ஒரு பரபரப்பினை உண்டாக்கியிருக்கிறது.

ஆளும் கட்சினர் கண்மூடித்தனமாக நம்மைத் தூற்றுவதையும், தாக்குவதையும்; நமது கோரிக்கைகள், குற்றச்சாட்டுகளுக்கு விடையிறுக்க வக்கு வகையின்றி திக்குமுக்காடுவதையும், நாட்டுமக்கள் நன்கு உணரத் தொடங்கி விட்டனர்.

அதே நேரத்தில் நமது கொள்கை—குறிக்கோளினையும், கழகத்தின் நடைமுறையிலே பொலிகின்ற கடமையுணர்ச்சி, கண்ணியம்—கட்டுப்பாட்டு வலிமைகளையும் காணுகின்றனர். விமோசனம் கிட்டிடுமென்று நன்னம்பிக்கை கொள்கின்றனர்.

திராவிடத்தின் உரிமையற்ற இருண்ட வாழ்விலே செவ்வொளி பரப்பிடும் உதய சூரியனை, சுதந்திரவுணர்வு பெற்ற தமிழ் மாந்தர் ஒவ்வொருவரும் கைகூப்பி வரவேற்கக் காத்திருக்கின்றனர். அவர்களது நம்பிக்கை—நல்லுணர்வை மெய்யாக்க நம்மிடம் லட்சிய உரமிருக்கிறது. அந்த அளவுக்கு பணபலம் இல்லை. இதனை மறைப்பதிலே பயனில்லை.

ஜனநாயக வளர்ச்சிக்குத் தேர்தல் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்குத் தேர்தலில் ஈடுபட பணமும் முக்கியத்துவம் பெறுகிறது. ஆட்சிக்குத் தேர்தல் தேவை; தேர்தலுக்குப் பணம் தேவை; சாட்டையின்றி பம்பரம் ஆட்டுவது வெறும் பேச்சிலே முடியலாம். செயலாக்கத்திலே நிச்சயம் முடியாது.

24—11—56 சென்னை கூட்டமொன்றில் அறிஞர் அண்ணா பேசுகையில்: "தேர்தலில் நாம் 150 இடங்களுக்குப் போட்டியிடுகிறோம் என்றால், 'டிபாசிட்' தொகைக்காக நாம் கட்ட வேண்டிவருவது மட்டும் சுமார் ரூ. 49,000 ஆகும். ஒரு தொகுதிக்கு தலைமைக் கழகம் ரூ. 1000 தருவதானாலும், ரூ. 1,50,000 வேண்டியிருக்கும். போஸ்டர்கள் வெளியிடுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் தேவைப்படலாம். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நமது பொதுச் செயலாளர் 5 இலட்சம் ரூபாய் வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்" என்று கூறியுள்ளார்கள். கழகத் தோழர்களும், அனுதாபிகள், ஆதரவாளரும் இதனை ஊன்றி நோக்கல்வேண்டும்.

மேலும், டிசம்பர் 10-ம் நாள்முதல் தேர்தல் நிதி திரட்டும் வாரமாகக் கொண்டாடி நிதி வசூலிக்குமாறு பொதுச் செயலாளர் நாவலர், நெடுஞ்செழியன் அவர்கள் வற்புறுத்தி வேண்டியுள்ளார்கள். பெரியதோர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு விட்டோம். கடமையைச் செய்யப் பின்தங்குவதோ, காலங்கடத்துவதோ அழகன்று. எனவே நாம் பணிவன்போடு வேண்டுகிறோம்; தேர்தல் நிதி தாருங்கள்! இலட்சிய வெற்றிக்கு பலம் தேடுங்கள்! தேச விடுதலைப் பணிக்கு வீசுங்கள் வெள்ளித் தோட்டாக்களை! அருமைத் தோழர்களே! தாய்மார்களே! உங்கள் நிதி எவ்வளவு? எப்போது? எங்கே? யாரிடம்? பதில் பேச்சாகவோ, எழுத்தாகவோ வேண்டாம். பணமாகவோ, 'கரன்சி'யாகவோ இருக்கட்டும்.

—ப கண்ணன்.

தலைமைக் கழக அறிக்கை எண் 11/59:

## தேர்தல் நிதி திரட்டும் வாரம்

[டிசம்பர் 10-ம் நாளிலிருந்து 16-ம் நாள்வரை]

### கடமையைச் செய்ய கிளைக் கழகங்களுக்கு வேண்டுகோள்.

நாடெங்கணும் அமைந்துள்ள தி மு. கழகக் கிளைகள் அனைத்தும், 1956 டிசம்பர் 10-ம் நாளிலிருந்து 16-ம் நாள்வரையிலும் உள்ள ஒரு வார காலத்தைத் 'தேர்தல் நிதி திரட்டும் வாரமாக'க் கருதித் தேர்தல் நிதி திரட்டும் பணிகளில் தீவிரமாக ஈடுபடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

அந்த ஒருவார காலத்தில் திரட்டிடும் நிதியை நேரிடையாக தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

நிதி அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:-

பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்' இராயபுரம் சென்னை 13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு கழகம், 28-11-56




[முன் இதழ் தொடர்ச்சி]

எங்கள் பெருமன்னவரே வாழி
ஏதிலரை வென்றவரே வாழி
திங்கள் நிகர் தண்ணமுதே வாழி
சிந்தையினில் நல்லவரே வாழி-வாழி.

கழற்சிங்க நாயகரே வாழி
கருணை வடிவானவரே வாழி
சுழல் கின்ற வேல் மறவ வாழி
சூரர்குல காவலனே வாழி-வாழி

(தட்டத்தினின்றும் நீராஞ்சனம் எடுத்து, மன்னரின் நெற்றியில் இடுகிறள் பன்னீர் தெளிக்கிறள்)

நந்தி:- (மகிழ்ந்து கரம்பற்றி) கண்மணி சங்கா! களிப்பால் துள்ளுகின்றது நெஞ்சம். நான் துய்க்கின்ற மகிழ்வும் பெருமையும் உனது நல்லெண்ணத்தின் பிரதிபலிப்புகள்!

சங்கா:- நாதா! மிகைபடக் கூறுகின்றீர்கள். தங்கள் வெற்றிக் காவியத்தின் பொன்னேட்டிலே நான் ஓர் எழுத்து! வீரக்களஞ்சியத்தின் செம்பொருளில் ஓர் துரும்பு.

நந்தி:- சிறு துரும்பு கலன் நீர் தேக்கிற்றும்! என் செங்கரும்பு நாட்டிற்கு வந்த பேராபத்தையே நீக்கிற்றே! சங்கா! நீ மகாராணி என்ற சொல்லின் மகத்தான இலக்கியம்!

சங்கா:- (நாணி) தங்கள் அன்பின் பெருக்கு, என்னை நாண வைக்கின்றது. ஆனாலும், இவ்வளவு அதிகமாகப் புகழக் கூடாது நாதா!

நந்தி:- மேலும் சுவைபடப் புகழ்வதற்குப் புலமையில்லையே என்று வருந்துகிறேன் நான்.

(சிறுவன் நிருபதுங்கன் ஓடிவருகிறன்)

நிருப:- அப்பா! அப்பா!

நந்தி:- வாடா கண்ணே! (வாரியணைத்து) நிருபதுங்கா! நீ விரும்பியபடியே பகைவரை வென்றேனடா. நமது தாயகம் மாற்றானுக்கு அடிபணியவில்லை; மாற்றாரையே நம் முன் பணியவைத்து.

நிருப:- சிங்கத்தின் முன்பு சிறுநரிகள் என்னப்பா செய்ய முடியும்? ஆனாலும் சித்தப்பா செய்தது ...?

நந்தி:- பெரிய துரோகம். அன்றொருநாள் துடுக்குத்தனமாக அவனைப் பேசினாய். அடுக்காதென்று கோபித்தேன். இப்பொழுது தெரிகிறது அவனது வக்ரபுத்தி! சங்கா! உன் கருத்துக்கள் எதுவும் பலிக்காமல் போவதேயில்லை.

சங்கா:- மீண்டும் புகழ்ச்சிப் படலம் ஆரம்பமாகின்றதோ?

நந்தி:- நானுகின்றாயா? அப்படியானால் சொல்லவில்லை. சங்கா! நமது வெற்றிக்காக நாளை சிவாலயத்தில் வழிபாடு. வருவாயோ?

சங்கா:- என் பாக்யமாயிற்றே நாதா!

நந்தி:- மதபேதமற்ற உன் பரந்த நோக்கம், மக்களுக்குத் தெரியவில்லையே!

சங்கா:- என்னுள்ளம் தாங்களறிந்தால் போதாதா?

நந்தி:- நானறிந்துதானே உன்னை விரும்பினேன். மணந்தவனுக்கல்லவோ தெரியும் இந்த மல்லிகையின் நறுமணம்!

(அன்போடு முகவாய்க்கட்டையைப் பிடிக்கிறன்)

## காட்சி 19.

(தெரு. சேனாபதி விக்ரமகேசரி வந்துகொண்டிருக்க, பின்னால வந்த பரதேசியொருவன் உடையைப்பற்றி இழுக்கிறன்)

விக்ரம:- (சினந்து) யாரடாவன் பரதேசிப் பயல்? என்ன குறும்படா உனக்கு?

பரதேசி:- சிவோகம் ... சச்சிதானந்தம் .... அடியேன் சக்திமுனையரின் சிஷ்யன்.

விக்ரம:- பொய் அவரது சிஷ்யர்கள் எல்லோரையும் எனக்குத் தெரியும். நீ யார்?

பரதேசி:- சிவோகம்... சச்சிதானந்தம்!

விக்ரம:- (சினந்து) சிவோகமாவது, சச்சிதானந்தமாவது; பிச்சைக்காரப் பயலே!

(கையால் தாடியைப் பற்ற, தாடியும், மீசையும் கையோடு வந்துவிடுகின்றன. எதிரே சந்திரவர்மன் நிற்கிறான்)

விக்ரம:- (வியந்து) அடடே! சந்திரவர்மரா? மன்னிக்கவேண்டும் மன்னிக்க வேண்டும். தாங்கள்........

சந்திர:- முதலில் அந்தக் கோலத்தைக் கொடும். பிறகு பேசுவோம்.

(மீசையும், தாடியும் வாங்கியணிந்து கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்து கவலையோடு)

சேனாபதியாரே! நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்து விட்டது, திட்டம் நிறைவேற வேறு மார்க்கமில்லையா?

விக்ரம:- என் விஷயம், தலை தப்பினதே தம்பிரான் புண்ணியமாய் விட்டதே! ஓலையில் என் பெயர் இருந்திருந்தால், ஒழிந்திருக்குமே என் வாழ்வு!

சந்திர:- சேனாபதியாரே! நடந்ததை மறந்து விடும். ஏதேனும் புதுவழி காண்போம். இனி, நீர்தான் எனக்குத் துணை. (கைப்பற்றி) எப்படியாவது நான் மன்னனாக வேண்டும். உமது விருப்பம்போல் நடந்து கொள்வேன்; என்ன சொல்லுகிறீர்? என்ன சொல்லுகிறீர்?

விக்ரம:- (யோசித்து) நான் கேட்பதைத் தருவீரா?

சந்திர:- நிச்சயமாக.

விக்ரம:- (தயங்கி) வடிவழகி வித்யாவதி எனக்கு வேண்டும்.

சந்திர:- இவ்வளவுதானே! எடுத்துக்கொள்ளும். அந்தப் பச்சைக்கிளியைக் காட்டிலும் பல்லவ சாம்ராஜ்யம் எனக்குப் பெரிதாயிற்றே!

விக்ரம:- (தட்டிக்கொடுத்து) சபாஷ்! சபாஷ்! சந்திரவர்மரே! நாம் அடிக்கடி சந்திப்போம். வித்யாவதியை .......

சந்தி:- தக்க சமயத்தில் உம்மிடம் ஒப்படைப்பேன். கவலைவேண்டாம்.

(பச்சையும் முல்லையும் வாக்குவாதம் புரிந்தவண்ணம் வருகின்றனர். இவர்கள் பதுங்குகின்றனர்)

பச்சை:- முடியாது! முடியாது!! முடியாது!!!

(யாரோ என்றஞ்சி, சந்திரவர்மனும் சேனாபதியும் மறைவில் பதுங்குகின்றனர்.)

முல்லை:- எம்ப்பா முடியாது? ஏன் முடியாதுன்னேன்?

பச்சை:- உச்சாணிக் கொம்பிலேருக்கிற இச்சிலிப்பழத்தை ஒன்னாலேமட்டுமல்ல, என்னாலேகூடப் பறிக்க முடியாது.

முல்லை:- எப்படியும் எனக்குப் பழம்வேணும். யாராலும் பறிக்க முடியாதுன்னு சொல்றே? நீ ஆம்பிளே; நான் பொம்பளே; வா என்னோட; நான் பறிச்சுத் தர்றேன் ஒனக்கு.

(அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறாள் சந்திரவர்மனும் விக்ரமகேசரியும் வருகின்றனர்)

விக்:- (அலட்சியமாக) ஃபூ! இதுகள்தானா?

சந்தி: சேனாபதியாரே! பச்சை என் கையாள். பித்தன் போலிருந்தாலும், எனக்காக எதையும் செய்வான். நம்பிக்கையோடு நமக்குப் பயன் படுவான்.

விக்:- நல்லது. நான் வரட்டுமா?

சந்தி:- (வருந்தி) சேனாபதியாரே! மறைந்து வாழும் இந்த மானக்கேடு என்று தீரும்?

விக்:- கலங்காதீர். காலம்வரும். நான் வருகிறேன்.

(வேகமாகப் போகிறான்)

## காட்சி 20.

(சிவன் கோயில். சன்னிதியில் ஒரு பெண் பரதநாட்டியமாடுகிறாள். பக்தர்கள் சிலர் ரசிக்கின்றனர். மன்னர்—மகாராணி—நிருபதுங்கன் மூவரும் வந்து நின்று பார்க்கின்றனர். நாட்டியம் முடிந்து, பெண்ணும் பக்தர்களும் செல்லுகின்றனர்)

சங்கா:- நாதா! இது சிவன்கோயில் மட்டுமல்ல; ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம் முதலிய நற்கலை வளர்க்கும் சிறந்த கலைக்கோயில்!

நந்தி:- சங்கா! இங்கு இருப்பவை, நடப்பவை எல்லாம் ஆகம விதிப்படிதான். இவையாவும் மகத்தானவை. பல்லவர் பெருமையையூழிக் காலம்வரை நிலைக்க வைப்பவை.

சங்கா:- சிறந்த நற்கலைகள் சிரஞ்சீவித்துவம் பெற்றவை. சந்தேகமில்லை.

அங்கு கிடந்த மலரொன்றை குனிந்தெடுத்து முகருகின்றாள்)

(வளரும்)

தலைமைக் கழகம்: அறிக்கை—9/56

# ஒழுங்கு நடவடிக்கை.

கழகத்தின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் புறக்கணிக்கும் வகையிலும், தலைமைக் கழகத்தை அவமதிக்கும் வகையிலும், தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ள சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர், இளம்பரிதி, சென்னை 43-வது வட்ட கிளைச் செயலாளர், தோழர், மு. புரட்சிமணி ஆகிய இருவர் மீதும், 34-வது வட்ட தி. மு. க. கிளையின் மீதும் கீழ்க்கண்டவாறு ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்கான காரண விளக்கங்கள் முறைப்படி சென்னை மாவட்டக் கழகக் கூட்டத்திலும் பொதுக்குழுக் கூட்டத்திலும் அறிவிக்கப்படும்.

தோழர், இளம்பரிதி அவர்கள் 23-11-56 முதல் 22-11-59 வரையில், மூன்றாண்டு காலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர, தி. மு. கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ அல்லது துணை அமைப்புகளிலோ நிர்வாகியாகவோ அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ, அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தோழர், மு. புரட்சிமணி அவர்கள் 23-11-56 முதல் 22-11-58 வரை இரண்டாண்டு காலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர, தி. மு. கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ துணை அமைப்புகளிலோ, நிர்வாகியாகவோ, அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லையென்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ அறவே உரிமை இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சென்னை 43-வது வட்டத் தி. மு. கழகக் கிளை 23-11-56 முதல் தலைமைக் கழகத்தின் மறு அறிக்கை வெளிவரும் வரையில் கலைக்கப்படுகிறதென்று முடிவு செய்யப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (தலைமைக் கழகத்தின் உத்தரவுப்படி) மறுதேர்தல் நடைபெறும் வரையில் 43-வது வட்டத்திலுள்ள கழக உறுப்பினர்கள் அனைவரும் சாதாரண பொது உறுப்பினர்களாகவே இருந்து வருவார்கள்.

குறிப்பு:- சென்னை மாவட்டத்தின் புதிய செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகியோர் தேர்வு நடைபெறுவதற்கான நாள் விரைவில் அறிவிக்கப்படும்.

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்,
'அறிவகம்' சென்னை-13
23—11—56

---

மக்கள் முட்டாள்களாக இருந்தபொழுது கடவுள் அறிஞராகக் காட்சியளித்தார். மக்கள் அறிஞர்களாக மாறுகிற பொழுது கடவுள் முட்டாளாகக் காட்சியளிக்கிறார்!

—ஞானி.

---

## முன்னேற்றப்— —பாதையிலே

### கும்பகோணம்.

துவரங்குறிச்சியில், 2-12-56 ஞாயிறு மாலை தோழர், ஏ. கே. வெங்கடாச்சாரி தலைமையில், எஸ். ஆர்: ராதா, கே.கே. நீலமேகம், இரெ. இளம்வழுதி M.A;B.L. டி. கே. சீனிவாசன் பேசுவார்கள்.

---

வள்ளுவர் நெஞ்சம்.

### உலக வாழ்த்து-௰.

அதிகாரம்-௧. பாட்டு-௰

பிறவிப் பெருங்கடல்-
-நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

எல்லாந் தெரிந்துணர்ந்த அறிவாளியின் துணையைக் கைகொண்டவர் காரண காரிய தொடர்ச்சியால் வாழ்க்கையெனுங் கடலை, அறிவின் துணையெனும் கப்பலால் எளிதில் கடப்பர். அதாவது, இன்ப வாழ்வு வாழ்வார் அறிவாளியின் அன்பைப் பெறுதவர் அல்லலனுபவிப்பார் தெளிவில்லாத காரணத்தால், என்பதாம்.

—மீ. சு. இளமுருகு பொற்செல்வி

---

**பகுத்தறிவு.**
7–12–56 முதல்
கையொப்பத்தொகை:
ஆண்டு 1-க்கு 5-0-0
ஆறு மாதங்கள் 2-8-0
தனிப்படி 0-1-6
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
**பகுத்தறிவு அலுவலகம்.**
சேலம்-1.

# கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● கு. இரா. பரமசிவன்,
தெற்குரத வீதி,
காரமடை, கோவை மாவட்டம்.

எம். பழனிசாமி, தொளசம்பட்டி.

கே: பங்களாவாசியின் பணபலமும், தி. மு. க. வின் கொள்கை பலமும் ஒன்று சேருமா?

ப: தேவையில்லையே. தி. மு. க. வின் கொள்கைபலமும், பொது மக்களின் ஓட்டு பலமும் இணைந்தால் போதும்.

* * *

கே: எடுத்ததற்கெல்லாம் அவன் செயல் என்போரின் நோக்கம் என்ன?

ப: நோக்கம் எதுவுமேயின்றி, நொடித்துப்போன பஞ்சை உள்ளத்தில்தானே இந்த ஏக்கம் பிறக்கிறது!

கு. இரா. பரமசிவன், காரமடை.

கே: பாம்பும் கீரியும் சண்டை பிடிக்க விடுவது குற்றமாம். "கணவனே கண்கண்ட தெய்வ"த்தில் செய்கிறார்களே; ஏன் தண்டிக்கவில்லை?

ப: இருமனைவியரை மணப்பதும் குற்றம்தான். முருகனுக்கு, வள்ளி தெய்வானைகளை மணம் முடிக்கும் திருவிழாப்பக்தர்களை தண்டிப்பதில்லையே! அதுபோல்தான் இது.

* * *

கே: பெரியார் காமராஜரை ஆதரிப்பது, பூனை எலிக்கு மனைவியாவது போல் இல்லையா?

ப: மனைவியாவது மட்டுமல்ல, சுதந்தரமற்ற, பகுத்தறிவற்ற அடிமை மனைவியாக எலியின் ஏசலையும், தூற்றலையும் என் பாக்யம் என்று போற்றி வாழவும் முனைந்துவிட்டது முதுபெரும்பூனை!

மா. அரங்கசாமி, கோவை

கே: உண்மைக் காதல் தோன்றிய உள்ளங்களின் வாழ்விலே, அது எத்தகைய விந்தைகளைப் புரியும்?

ப: மலையைக் கடுகாக்கும், இரவைப் பகலாக்கும், துன்பத்தை இன்பமாக்கும், இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்கள் செய்திடும்!

* * *

கே: இன்றைய சென்னை மந்திரிகளில் யாருக்குப் பார்வை மங்கல்?

ப: வடநாடு வளர்வதையும், தென்னாடு தேய்வதையும் காணமுடியாதவர்கள்தானே மந்திரிகளாகத் தகுதி பெற்றவர்கள்! அனைவருமே அரைக் குருடர்கள் தாம்.

தாரை-கரன், தாரமங்கலம்

கே: திருவிடம் தேய்ந்ததற்கு, முக்கிய காரணம் ஆரியர்களா? வடநாட்டார்களா?

ப: வடநாட்டு ஆரியரும், அவர் வழிவந்த வடநாட்டு வாணிபரும் முக்கிய காரணமானவர்கள்தான்!

"பகுத்தறிவு"ப் பிரியன், சாத்தூர்.

கே: தி. மு. க. வில் எந்த மேடையில் யார் பேசினாலும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முப்பொருள்களையும் கூறுவது ஏன்?

ப: அவைகள், ஒரு கட்சிக்கும், நாட்டுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் என்பதால்தான்.


## பாரிஸ் அழகிகள்.

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கை யறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10 முன்பணம் அனுப்பினால் தபால் செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது.

வீனஸ் டிரேடிங் கம்பெனி(த ப)
தபால் பெட்டி 1693,
சென்னை-1


விநோபா ராமாயணம்.

## நான் அறிந்த வரையில்.

ராமனை எதிர்த்து மக்கள் இங்கே பேசுவதில் நான் அறிந்தவரையில் இரண்டு கருத்துக்கள் வருகின்றன. ஒரு ஆட்சேபணை என்னவென்றால்; அவன் வட இந்தியன் என்பதும், ராமாயணம் வட இந்தியா தென் இந்தியாவை எப்படி அடக்குவது என்ற சரித்திரம் என்பதுமாகும். இரண்டாவது ஆட்சேபணை; ராமனது வாழ்க்கையை மக்கள் எவ்வளவு ஆதர்சமாகக் கருதுகிறார்களோ அவ்வளவு ஆதர்சமாக இல்லையென்பதும், அதிலே மிகுதியான குறைகளும் இருந்தன என்பனவுமாகும்.

—விநோபா பாவே.
1-8-56 கோரப்பூரில்.

திராவிட நாட்டில் ராமாயணத்திற்குப் பெருத்த எதிர்ப்பு இருப்பதை இங்குள்ள வைதிகர்கள்—ஆரியர்கள் நன்கறிவர். எனினும், எதிர்ப்பினை அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவோ, எதிர்ப்புக்கு மதிப்பளித்து, சமாதானம் கூறுகின்றவகையில் வெளிப்படையாகப் பேசவோ, எழுதவோ இங்குள்ள ஆரியர்கள் துணிவு கொண்டதில்லை. வடநாட்டு விநோபா துணிவோடு, தான் கொண்ட கருத்தினை வெளியிடுகின்றார், இவ்வாறு!

ஒரு பிரச்சினை எழுந்த பிறகு; அஃது கொழுந்துவிட்டு எரியும்பொழுது, அப்படியொரு பிரச்சினை நாட்டில் இல்லாததுபோல் காட்டிக் கொள்வது நரித்தனம்; அதனைப் பிறர் அறியாமற் செய்ய முயலுவது பேடித்தனம்; பிரச்சினையை திரித்துக் கூறி, உண்மைக்கு எதிராகப் போரிட மக்களையும், அரசினரையும் தூண்டிவிடுவது ஈனத்தனம்! இவ்வகைத் "தனங்கள்" எதுவுமில்லாமல் இராமாயண எதிர்ப்புப் பிரச்சினையை அணுகி, ஆராய்ந்து, சரியோ தவறோ தன் மனதிற்பட்ட கருத்தினைக் கூறியுள்ளார் பெரியார் விநோபா. பாராட்டுகிறோம்.

-பகணன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எளிய பேச்சிலும் சீர்திருத்தங்களை எடுத்துரைத்து வந்தார் ஊரூராகச் சென்றார். வீடுவீடாகச் சென்றார். மக்களுடன் சமத்துவமாகப் பழகினார். அறிவுவிளக்கம் செய்தார்.

இவ்வுலகில் இவ்வாழ்வில் இவ்வுடலில், தமது சொந்த நடவடிக்கைகளினால் இன்பம் எய்தும் வழிகளைக் கூறினார்.

புராணக் கோட்பாடுகளின் பித்தலாட்டங்களை வெட்ட வெளிச்சமாக்கினார். எதிர் மதத்தினருடன் அமைதியாக வாதம் செய்து அவர்கள் கோட்பாடுகள் பொய்யென்பதை நிரூபிப்பார். இவருடைய சொற்பொழிவுகளில் குட்டிக் கதைகள் பழங்கதைகள், புதுக் கதைகள் உவமானமாகக்கூறப்படும்.

கடவுள் கொள்கையில் கவலைகொள்ளாதே என்பது புத்தரின் அறிவுரை. நல்லறிவு கொள்; நல்லதை அறி; நல்நெறி நட; நல்வாழ்வுபெறு; அன்புசெலுத்து; எல்லாருக்கும் அன்பனாக இரு. என்பதே இவரது நல்லுரைகளின் ரத்தினச்சுருக்கம்.

தெய்வீகக் கோட்பாடு கொண்டது தான் மதம் என்றால் அந்தவகையில் பவுத்தம் ஒரு மதமல்ல. பவுத்தம் ஒரு நன்னெறி இயக்கம்.

ஒரு பிராமணனிடம் புத்தர் பிரான்,

"சாஸ்திரங்கள் பிரமாணங்கள் முதலியன பகலை இரவென்றும், இரவைப் பகலென்றும் சாதிக்கின்றன. நானோ பகலை பகலென்றும் இரவை இரவென்றும் கூறுகிறேன்" என்றார்.

பல மதத்தினரும் பலவிதக் கோட்பாடுகளைக் கூறுகின்றனரே எதை நம்புவது என்று சிலர் கேட்டபோது புத்தர் பிரான்,

"சந்தேகம் எழுவது இயற்கையே. பல தலைமுறைத்துவமாக பலவிடங்களில் பலரும் கைக்கொண்டு நடந்திருக்கின்றனரே என்பதற்காக பரம்பரை பழக்கவழக்கங்களில் நம்பிக்கை கொள்ள வேண்டாம். பழைய முனிவர் ஒருவர் எழுதி வைத்திருப்பதை ஆதாரமாகக் காட்டுவதை ஏற்று எதையும் நம்பவேண்டாம் மனதிலே கற்பனை செய்துகொண்டதை உண்மையென்றோ ஆசிரியென்றோ தேவவாக்கென்றோ கருதாதே எதையும் ஆராய்ந்து பார்—பகுத்தறிவுக்கு ஏற்றதாயின் மக்கள் பலருக்கும் பயன்படுவதாயின் அதையே ஏற்றுக்கொள்—கைக் கொண்டு நட"

என்று அறிவுரைகள் கூறினார்.

விசாரணையின்றி எதையும் ஏற்றுக் கொள்ளாதே என்பதே பவுத்தத்தின் முக்கிய புத்திமதி. மற்றும் அறிந்து கொள்ளவேண்டியதற்காகவும் கண்மூடித்தனமாக எதிலும் நம்பிக்கை கொள்ளலாகாதென்றும் எச்சரிக்கிறது.

மூடநம்பிக்கைத் திணிப்பு வேதமதத்தின் உயிர்த்தாது இந்த உயிர்த்தாதுவை சுட்டெரிக்கிறது பகுத்தறிவு நெறியான பவுத்தம்.

அர்த்தம் புலனாகாதது—புரியமுடியாதது என்பதற்காக அவற்றை கண்மூடித்தனமாக நம்புவதுதானே இந்து மதத்தின்படி தெய்வீகம். இந்த கண்மூடி நம்பிக்கையை புத்தர் கண்டிக்கிறார். அறிவியக்கத்துக்கு அதிக ஊக்கமளிப்பது பவுத்தம்.

"சந்தேகம் கொள்—விசாரணைசெய்—மெய்மையில் மனத் திருப்திகொள்—அதன்பின் அதனைக் கைக்கொண்டு நட" என்பது இவரது நன்மொழி.

"எனக்கு மதிப்புத்தர வேண்டுமே என்பதற்காக என் தர்மத்தை ஏற்றுக் கொள்ள வேண்டாம். தங்கத்தின் மாற்றை உரைத்து அறிவதுபோல், நான் கூறுவனவற்றின் மாற்றையும் கவனித்தறிந்துகொள்" என்று வெளிப்படையாகக் கூறினார்.


புனிதம், புண்ணியம், தெய்வீகம் என்பது பித்தலாட்டப் பேச்சென்கிறார். இவ்விதம் கூறுவது குருடருக்கு குருடர் வழிகாட்ட முற்பட்டதை என்கிறார். கண்மூடித்தனமாக ஒரு கருத்தை ஏற்றுக் கொள்பவன் தேனின் சுவையறியாத கரண்டிக்கு ஒப்பாவான் என்கிறார்.

"மன்னனுடைய சொற்களை ஒப்புவிப்பதால் மன்னனாகிவிட முடியாது. அதே போல், வேதமொழிகள் என்பனவற்றை குருட்டுப்பாடம் செய்து ஒப்புவிப்பதால் அறிவொளி ஏற்பட்டுவிட்டது. பரம்பரை பழக்க வழக்கத்துக்கும் அதிகாரத்துக்கும் தலைகுனிந்து நடப்பது மதிப்பும் பயனும் தந்துவிடாது. விசாரணையும் அனுபவமுமே அறிவு வளர்தரும். மதத்துறைத் கருத்துக்களை மறைத்துவைப்பவர்கள் இருட்டுக் கர்ப்பத்தை மறைக்கும் மாதைப் போன்றவர்" என்கிறார்.

"காயமடைந்தவர்களே, உங்கள் காயத்தை நீங்களே மருந்திட்டு ஆற்றிக் கொள்ளுங்கள்—பசித்தவர்களே, பசியாற உணவைத் தேடியுண்ணுங்கள். தாகவிடாய் கொண்டவர்களே, தண்ணீரிருக்கும் இடம் தேடிச்சென்று அந்நீரையுண்டுவிடாய் தணியுங்கள். இருட்

(பின்பக்கம் பார்க்க)


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி & சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

டிலே அமர்ந்திருப்பவர்களே! வெளிச்சத்தைக் காணுங்கள். கவலையில் மூழ்கியிருப்பவர்களே! கவலைவிட்டுக் களிப்புக் கொள்ளுங்கள்."

இவையே புத்தநெறிச்சாரம்.

ஈசுவரன் மனிதனை உண்டாக்கவில்லை. மனிதன்தான் கடவுள் இலட்சணங்களை கற்பித்துக் கொண்டான். பலர் நம்புகின்றனர் என்பதற்காக கடவுள் இருப்பதாகத் தீர்மானிப்பதா என்பதே இந்த அறிவு மதத் தரும் விளக்கம். மெய்யல்லவற்றைக் கூறி மெய்யெனச் சாதிக்க முற்பட்டனர் வேத மதத்தினர். இவ்வவை மதநம்பிக்கைகள் வெறுங் கற்பனைக் கனவே.

நடைமுறையில் காட்சிப் பொருளாகக் கடவுளைக் காண்பதற்கில்லை; எந்த மதமும் கடவுள் தன்மையைத் திட்டவட்டமாகக் கூறவில்லை. அந்தந்த வட்டார மக்கள் தத்தமது குழுநிலை பழக்க வழக்க வாய்ப்பு வசதிகளுக்கேற்றபடி கடவுள் தன்மையைக் கற்பனை செய்து கொண்டனர்.

மனிதத்தன்மையை திட்டவட்டமாக நிர்ணயிக்கப்படாதபோது, மனிதர்கள் அறியாத அந்தக் கடவுளின் தன்மையை எப்படி நிர்ணயிக்க முடியும்? நரகம், மோட்சம் ஆகியவை பகுத்தறிவு ஒப்புமுடியாத கற்பனை.

பவுத்த மதத்தில் 'கர்மம்' என்றும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இந்துமதம் குறிப்பிடும் குறுகிய அர்த்தத்திலல்ல. கர்மம் என்பது மனிதருக்கு மாத்திரமல்ல, உலகம் முழுமைக்கும் உரியதென்கிறது பவுத்தம்.

திரு. குருதத்தர் என்பவர் எழுதியுள்ள பவுத்த நூலில் "கர்மா" என்பது பற்றி குறிப்பிட்டிருப்பதாவது:—

சிருட்டிப்பவர்களுமில்லை; சிருட்டிக்கப்படுபவர்களுமில்லை. மனிதர்களும் உண்மை உயிரினமல்ல நடப்புக், காரணங்களும் சாதாரண நிலைமையில் அவற்றைப் பிறப்பிக்கின்றன மனிதவுடல் ஸ்கந்தங்களின் தற்காலிகக் கூட்டு அமைப்பு. இந்தக்கூட்டமைப்பின் துவக்கமே பிறப்பு. இந்தக் கூட்டமைப்புச் சிதைவே சாவு.

இந்தக் கூட்டமைப்பு நிலைமை நீடித்திருக்கையில் நல்லது கெட்டது செய்யப்படுகின்றன. இவையே மக்களின் பிற்கால மகிழ்ச்சிக்கும், தொல்லைகளுக்கும் வித்தாகின்றன. இவ்வாறாக பிறப்பும், சாவும் முடிவின்றித் தொடர்கின்றன. மனிதர்கள் பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் தாங்களாகவே நடமாடுகின்றனர், அவர்களுடைய நடவடிக்கைகளே இவற்றை விளக்குகின்றன.

இயற்கைப் பொருள்களின் நடவடிக்கைகளே—இயக்கமே பல்வேறு மலைகள், ஆறுகள், காடுகள், நாடுகள் முதலியனவற்றை உண்டாக்குகின்றன.

இந்தக் கடவுள்கள் உருவம் கோரமாகவுள்ளனவே!

உள்ளத்தூய்மை கொண்டோர் முகத்திலே கொடுமைச்சாயல் கொண்டிரார். நல்ல பழக்க வழக்கம் முறைகள் கொண்ட நாட்டில், நல்ல நிலைமையும், கெட்ட பழக்கவழக்கங்கள் கொண்ட நாட்டில் கேடுகளும் நிலவும். அவரவர்களின் செய்கைகளுக்கேற்ப முகமும் உடலும் தோற்றமும் ஏற்படுகின்றன. அதற்கேற்றபடி பலனுமடைகின்றனர்.

இயற்கை விதிகளை வகுத்துத் தருவாருமில்லை. எனவே, இயற்கை விதிகளை மீறுவதென்பதுமில்லை. அவ்விதம் மீறுவதைக் காட்டித் தண்டிப்பாருமில்லை. ஆகவே, கடவுள் தண்டனை என்பது ஆதாரமற்றதாகிறது. மோட்சமும் நரகமும் அறியாமையின் கற்பனை. கர்மம் என்றால் செயல். இச்செயலின் விளைவு தத்தமக்குரியது. வேதம் கூறுவதுபோல் "கர்மா" என்பது கடவுள் தொடர்பு கொண்டதல்ல. ஆத்மா என்பது ஐம்புலன்களின் உணர்ச்சிப் பீடமே!

> தவறு செய்தால் வெட்கப்படுதல் நல்லதே. ஆனால் அதை ஒப்புக்கொள்ள ஒருநாளும் வெட்கப்படாதே
>
> —ஆவ்பரி

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

இன்னொன்றையும் சிந்திக்க வேண்டும். அனைத்திந்திய ரீதியில் பரந்த நிலப்பரப்பிலே, பல்லாயிரக்கணக்கான மயில்களிலே ஓடுகின்ற புகைவண்டித் தொடர்கள் அத்தனையின் நிருவாகத்தையும் டெல்லியிலே பிடித்து வைத்துக் கொண்டிருப்பது நியாயம்தானா? அஃது திறமையோடு பணியாற்ற முடிந்த செயல்தானா? அரியலூர், மகபூப் நகர் விபத்துக்களும், அமைச்சர், சாஸ்திரியாரின் ராஜிநாமாவும் இயலாமையை அங்கை நெல்லிக்கனி போல் காட்டிடவில்லையா? ஏன் இன்னும் அகில இந்தியா? எண்ணிப் பார்க்க வேண்டும், தென்னாட்டுக் கதர்ச்சட்டைகளேனும். அரியலூர் விபத்து, அரசியலாரின் சிந்தனைக்கு ஓர் அறை கூவல்!

பத்து ஏக்கர் உழுபவனிடம் பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை ஒப்படைத்தால், வேளாண்மையின் தரம் குறையுமா? உயருமா? அறுபதினாயிரம் மனைவியரைக் கட்டிக் காத்து மலடிகளாக்கிய தசரதச் சக்கரவர்த்தியின் கதையை, ராமராச்சியம் விரும்பும் புண்ணிய சீலர்கள் அரசியலில் புகுத்தி, அகில இந்திய ரீதியாக்கிய அநீதியை ஒழிக்க வேண்டும். தரம் வளர, திறமை உயர, நிருவாகம் வலுப்பெற, நாட்டு மக்கள் நலம்பெற வேறு வழியில்லை!

அரியலூர் இரயில் விபத்தில் அநியாயமாக பலியான மக்களுக்கும், அவர்தம் குடும்பத்தினர்க்கும் ஆறாத்துயரம் பொங்கிட ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவிக்கின்றோம்.

—வாலி.

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்–1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 7-12-56 ★ விலை 0-1-6 | இதழ் 23


## ஐயயோ ராசாவே! அருமைத் தமிழாவே!




உரிமை முழக்கமொன்று, அடிமைக் குரலொன்று; பகுத்தறிவுச் சுடரொன்று, பாழும் இருளொன்று;
மாறுபட்ட இருபடகில் கால்வைத்து தேர்தல் மாக்கடலைக் கடந்திடலும் சாத்தியமோ?
பெரியார் தம் வழியினைத் தொடர்ந்திடலும் நிசந்தானோ?

இலக்கியச் சோலையிலே

# இராமாயணம்.

ஏ. பெரியசாமி

பழந் தமிழ் நாட்டிலே வாழ்ந்த பல புலவர்களில் காவற்பெண்டு என்னும் பெண்பாற் புலவரும் ஒருவர். ஒருநாள் இவருடைய வீட்டிற்கு தோழி ஒருத்தி வந்தாள். வந்தவள் நமது புலவரை நோக்கி, "உன்னுடைய மகன் எங்கே?" என வினவினாள். புலவர் உடனே "என் மகன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியாது. புலியின் இருப்பிடம் மலைக்குகையே யானாலும், புலி எங்கேயுள்ளது என்பது குகைக்குத் தெரியுமா? அதுபோல், அவனை ஈன்ற வயிறு இது! ஆனால், அடுபொருவேல் பொழியும் போர்க்களத்திலே அவனைக் காணலாம்" என்று விடையிறுத்தார். இந்தக் காட்சி புறநானூற்றிலே உள்ளது.

"சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
யாண்டுளனோ என வினவுதி; என்மகன்
யாண்டுளனாயினும் அறியேன்; ஓரும்
புலி சேர்ந்து போகிய கல் அளைபோல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே"
(புறம் 86)

மேற்கண்டது, பண்டைத் தமிழ் மகள் நமக்கு ஈந்த வீரக் காட்சி.

இன்றைய நிலையிலே வீரம் இல்லை; விவேகம் இல்லை. வேதம் வாழ்கிறது. வேதம் வாழ்வதோடு மட்டுமல்ல, வீரத்தின் இடத்தையும் கைப்பற்றிக் கொண்டது.

"வெற்றி யெட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே" என்று பாடிய பாரதியார், அடுத்த வரியிலேயே, 'வேதமென்றும் வாழ்கவென்று கொட்டு முரசே!" என்று பாடினாரென்றால், அந்த இடத்தில் ஒரு ஐயம் தோன்றுகிறது. கவிஞர் வேதத்தை வாழ்த்திப் பாடவில்லை; வீரத்தை வாழ்த்தினார்.

"வீரமென்றும் வாழ்கவென்று கொட்டு முரசே!" என்றுதான் பாடியிருக்கிறார். வெற்றிக்கும் வேதத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஆயின், வெற்றிக்கும் வீரத்திற்கும் நிறைய தொடர்பு உளது. வீரத்தின் விளைவுதான் வெற்றி; வெற்றி வாழ வேண்டுமானால், வீரம் கட்டாயம் இருந்தாக வேண்டும். வீரத்தை வேதமென்று திரித்துக் கூறுபவர்கள் யாரென்று கூறத் தேவையில்லை சாட்சாத் வேதத்தின் உறவினர்கள் தான்!

இங்ஙனம், வேதம் கவிதையில் மட்டும் வீரத்தின் இடத்தைக் கைப்பற்றிக் கொள்ளவில்லை. கலைகளில்—காவியங்களில் மட்டுமல்ல; வாழ்விலும் அதே நிலைதான் என்பதற்கு இன்றைய சமூக நிலைகளே சான்றுகின்றன.

இவ்வாறு ஒன்றை மற்றொன்றாகத் திரித்துக் கூறி, பொய்யைப் புகுத்தி, மெய்யை அழித்தவர்கள் 'ஆரியர்களே' என்பதைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் நன்கு விளக்கலாம். இவ்வாறு சொல்வது நம் மட்டுமல்ல வேதத்தைக் கரைகண்ட தமிழ்ப் பெரியாரான மறைமலையடிகள் அவர்கள் தமது "முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்" என்ற ஆராய்ச்சி நூலில் கீழ்க்கண்டவாறு வரைகிறார்:—

"தமிழ்ப் புலவர் சிலர் ஆரியர் கொணர்ந்த பொய் வழக்கினைப் பருகி, அறிவு மயங்கி அப்பொய்யினை மெய்யாகப் பிறழக் கொண்டு, பாரதம், சூளாமணி, கொங்குவேள் மாக்கதை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி, இராமாயணம் முதலான பொய்ந் நூல்களை ஆக்கினர்"

இவ்வுரையை மெய்ப்பிக்க சிறந்ததோர் எடுத்துக் காட்டுத் தரப்படுகிறது.

கி. பி. 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர் இயற்றியது வடமொழி நூலொன்றின் வழி நூலான கம்பராமாயணம் என்னும் நூல் இந்நூலைப் பற்றி மறைமலையடிகளின் கருத்தாவது:—

"கம்பரென்னும் புலவரால் பாடப்பட்ட இராமாயணம் வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணத்தைப் பார்த்துச் செய்யப் பட்டதாயினும், அதனினும் பார்க்கப் பொய்மை நிறைந்ததாய், பழைய தமிழாசிரியர் கைக்கொண்ட இயற்கை வழக்கொடு மாறுபட்டதாய்த் தோன்றினமையின், அக்கம்பர்க்குப் பிற்பட்டிருந்த சிறந்த உரையாசிரியர்களாலும் அஃது ஏற்றுக்கொள்ளப் படாதது ஆயிற்று"

அப்படியானால், பழைய தமிழாசிரியர் கைக்கொண்ட இயற்கை வழக்கு யாது? கம்பன் கூறும் பொய்க் கூற்று என்ன?

கடையெழு வள்ளல்களில் ஒருவனை ஓரி என்பான் கொல்லிமலையை ஆண்டு வந்தான். கொடை வீரத்தில் சிறந்து விளங்கிய இக்கொற்றவன், படை வீரத்திலும் உயர்வு பெற்றவன். தனிப்பட்ட முறையிலும் ஓரி வலிமை மிகுந்தவனாக விளங்கினான். வில்லெறிவதில் அவனுக்கு இணை அவனேதான்! அவனுடைய வில்வித்தையின் திறத்தை வல்வில் ஓரி என்று அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த அடைமொழியிலிருந்தே அறியலாம். ஓரியின் வில் தொழில் ஆண்மையினைப் புகழ்ந்து பாடத் துணிகின்றார் வன்பரணர் என்ற புலவர் ஒருவர்.

"ஓரியின் பெரிய வில்லினுடைய சிறந்த நாணிலிருந்து விடுக்கப்பட்ட அம்பானது, ஒரு யானையைக் கொன்று அப்பால் செல்கிறது. அம்பினுடைய வேகம் இன்னும் குறையாததால் அப்புறம் வந்த பெரிய வாயினையுடைய ஒரு புலியையும் ஊடுருவிச் செல்கிறது. பின்னர், சுழியுள்ள கொம்புகளைத் தலையில் உடைய ஒரு புள்ளிமானின் தலையைக் கீழே உருளச் செய்கிறது. அப்படியும் வேகந் தணியாத அம்பு, உரல் போலும் தலையையுடைய காட்டுப் பன்றியொன்றை நிலத்திலே வீழச் செய்கிறது. இறுதியில், பக்கத்தே உளதாகிய ஆழ்ந்த புற்றின்கண் கிடக்கும் உடும்பின் உறுதியுடைய உடலிலே பட்டு நிற்கிறது. அத்துணை வலிய, வில்லாண்மை வேட்டத்தில் வெற்றியை உண்டாக்கியவனாவான் ஓரி!"

(11-ம் பக்கம் பார்க்க)

# எதிரொலி

ஆளும் கட்சியின் லட்சணமே இது என்றால், எதிர்கட்சிகளைப் பற்றி எழுதினாலே சாக்கடைக்குப்பி நாற்றம் அடிக்கும்:

—"விடுதலை"

*சரியான எதிர்க்கட்சி திராவிடகழகந்தான் என்று "விடுதலை"யே விளம்புகிறது! அதன் அறிவு நாற்றம் எப்படி?*

* * *

தீண்டாதார் என்று கூறி, புத்தபிட்சுக்கள் சிவாலயத்தில் நுழைவதைத் தடுத்தனர்;

—செய்தி

*நந்தனுக்கு மோட்சம் கொடுத்த சிவனுடையவும், அவன் பக்தருடையவும் பரந்த மனப்பான்மை பளிச்செனப் புரிகிறதே!*

* * *

இலங்கைக்குப் புதிய தூதர், வடநாட்டுக் காரர்-தின்ஷா நியமனம்.

—செய்தி.

*தமிழர்களை ஆள்பவர் வடநாட்டுக்காரர்கள்தான் என்பதை இதன் மூலமும் உறுதிப்படுத்துகிறார்களோ?*

* * *

தீண்டாமையை ஒழிக்க ஒரே வழி, கலப்புமணந்தான்!

—ஜகஜீவன்ராம்.

*இதைத்தானே முருக பெருமானும் கையாண்டார்! பக்தர்கள் இன்றும் வள்ளித் திருமண விழா மட்டும் நடத்துகிறார்கள். வாழ்க்கையிலோ...?*

* * *

ஜாதி இந்து-ஆதிதிராவிடப் பெண்ணை கலப்புமணம் செய்துவைக்க ஏற்பாடு செய்வோர்க்கு சென்னை சர்க்கார் தங்கப் பதக்கம் பரிசு கொடுக்கும்.

—செய்தி.

*அக்ராகாரம் எதிர்த்தால் கொடுத்த பரிசைப் பிடுங்காது என்பதற்கு என்ன உத்தரவாதம்?*

* * *

ஏற்பது இகழ்ச்சிதான்; அதுவும் எலக்ஷனுக்கு ஏற்பது இகழ்ச்சியிலும் இகழ்ச்சி.

—"குத்தூசி"

*பெரியார் திரட்டும் நிதிகளைத் தடுத்த, இகழ்வு மாசைப் போக்க இனி பேனா முயலுமா இந்தத் "தூசி?"*

# நிதியமைச்சரே!
# திரு. வி. க. வின் அறிவுரை கேளும்.

"இளந்தமிழன்"

வாய்மைக்குப் பேர்போனது கொங்குநாடு. புராணம் படிக்கிறேன் என்று எண்ணாதீர். வரலாற்றிலேயே அதற்குச் சான்று உண்டு. கோசர் என்னும் குடியினரைப் பற்றி இன்னும் கேள்விப் படாதார் சங்க இலக்கியத்தைப் படியுங்கள். அமைச்சர் சுப்பிரமணியனாருக்கும் அதனைச் சுட்டிக் காட்டுங்கள். எத்தகைய இடர்வரினும் உண்மை பிறழமாட்டார்களாம் அவர்கள்: 'வாய்மொழிக் கோசர்' என்றும் 'ஒருமொழிக் கோசர்' என்றும் இலக்கியம் அவர்களைப் புகழ்ந்து போற்றுகிறது.

மெய்ம்மைக்கு உறைவிடமாம் கொங்கு மண்ணிலே, கோழை நெஞ்சம் படைத்த அமைச்சர் போன்றவர்களும் தோன்றியுள்ளாரே! வயலிலே ஏன் கோரை முளைக்கிறது? பசும் பட்டு விரித்ததுபோல் பரவிக் கிடக்கும் அழகு ஒழுகும் புல்வெளியிலே காளான்களும் தலைகாட்டுகின்றனவே, அதற்கென்ன காரணம்? யாருக்குத் தெரியும்! ஆனால் ஒன்று மட்டும் எனக்கு விளங்குகிறது.

வள்ளுவர் பொறுமைக்குப் பூமியை எடுத்துக் காட்டியது ஏன் தெரியுமா? கொங்கிளங் கோசரைத் தாங்கிய அதே முதுகிலே, நிதியமைச்சர் போன்றவர்களையும் முகங்கோணாது சுமக்கிறதே என்பதனால்தான்!

முதிர்ந்த அனுபவம் பெற்றதாகத் தம்மை கருதிக்கொண்டிருக்கும் இந்த 'இளம்பிள்ளை', 22-ஆம் தேதியன்று இளம்பிள்ளையிலே கீழ்க்கண்டவாறு பேசியிருக்கின்றது: 'இந்தியாவை விட்டு மவுண்ட் பாட்டன் பிரபு கப்பலேறும் போது அவருக்கு ஏராளமான தந்திகள் வந்து குவிந்தன; 'எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்து போகிறீர்களே, நாங்கள் என்ன செய்வோம்' என்று அவற்றில் பல கூறின. இப்படிப்பட்ட தந்திகளை அனுப்பியவர்கள் யார் என்று பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகக் காரர்கள்தான் என்று தெரியவந்தது.' எத்தகு பொய்! எத்தகு சுளை மாற்றுவேலை!

மவுண்ட்பாட்டன் கப்பலேறும்போது கூட இருந்த மகானுபாவா உதிர்த்

(9-ம் பக்கம் பார்க்க)


# பகுத்தறிவு பொங்கல் மலர்.

சிந்தைக்கு விருந்தளிக்கும் பைந்தமிழ் முழக்கம்!

இன்பத்தேன் பிலிற்றும் இலக்கியச் செல்வம்!

குறைந்த விலையில் நிறைந்த மண மலராகத் தயாராகிறது.

**விலை 0—8—0 தான்!**

**விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு இப்போதே சொல்லி விடுங்கள்.**

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 7—12—56 | இதழ் 23

## சித்த மருத்துவம் வாழுமா?

"மாகாணத்தின் மத்திய இடமாகவுள்ள மதுரையிலே ஒரு சித்த வைத்தியப் பள்ளிக்கூடம் திறக்க வேண்டும். இதற்காக சித்தவைத்தியர்கள் அனைவரும் முயற்சிக்க வேண்டும்" மதுரை சித்த வைத்திய சங்கத்தின் கூட்டத்திலே சென்னை பண்டிட் எஸ். எஸ் ஆனந்தம் இவ்வாறு கூறியுள்ளார். வரவேற்கிறோம்.

இதே கருத்துள்ள மருத்துவர்கள் தமிழ் நாட்டிலே ஏராளமானபேர் உண்டு; சித்த மருத்துவ வளர்ச்சிக்கென்று சென்னையடுத்த தாசர்புரத்தில், 'மத்திய சித்த மருத்துவக் கழகம்' ஒன்று நீண்ட நாட்களாகப் பணியாற்றி வருகிறது.

அண்மையிலே ஈரோட்டில் சித்தவைத்தியர் மாநாடொன்று நடைபெற்றது. பழனியிலே ஒரு நிறுவனம் பணியாற்றுகிறது. என்னசெய்தும், தமிழ்நாட்டின் சொந்த மருத்துவ முறையான சித்தம், தமிழ்நாட்டில் அதற்குரிய தனி மதிப்பைப்பெறவில்லை; தழைத்து வளரவில்லை. போதிய பயனும் நல்கவில்லை.

தமிழகத்திலே ஆயுர்வேதம்,யூனானி,அலோபதிக், ஹோமியோபதிக் போன்ற அன்னிய மருத்துவ முறைகள் பெற்றுள்ளசெல்வாக்கினை தமிழ் மருத்துவமான சித்தமுறை பெறவில்லை. காரணம்; மருத்துவ முறையிலுள்ள குறையன்று. சிதறுண்டு கிடக்கும் சித்த மருத்துவர்கள் ஒன்றுபட்டு முயலவில்லை எனவே தமிழ்நாட்டு அரசாங்கமும் தன்னைத் தாலுணராத, தன்மதிப்பற்ற குருட்டுப் போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறது

மதுரையிலே சித்த வைத்தியத்திற்கு பள்ளிக்கூடம் திறக்கலாம்; கல்லூரியே அமைக்கலாம் காலத்தினை ஒட்டி சித்தமுறைகளை ஆய்ந்து வளர்க்கலாம். சிறந்த சித்த மருத்துவர்களைத் தோற்றுவித்து, எளிய முறையில் ஏற்ற மருந்துகளை — சிகிச்சைகளை பொதுமக்கள் பெறுதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

தமிழ் மண்ணிலே முளைத்தெழும் பச்சிலை—மூலிகைகள் தமிழ் சித்தமுறையிலே இங்கு நமக்குப் பயன் படாமல், வெளிநாடுகள் சென்று, அலோபதிக்—ஆங்கில மருந்துகளாக மாற்றப்பட்டு,நமது இல்லங்களிலே வந்து புகுந்து நல்லிடம் பெறுகின்றனவே! வெட்கமும், வேதனையும் ஏற்பட வில்லையா இதை நினைந்தால்?

இதைக் காட்டிலும் இன்னொன்று: வைத்திய முறைகளிலே சித்த வைத்தியம் ஒன்று இருப்பதாகவே இன்று நம்மையாளும் இந்தியப் பேரரசினர்க்குத்தெரியவில்லை தெரியப்படுத்தி சித்தமுறை வளர்ப்பதற்கு இங்குள்ள தமிழை—தமிழரை—தமிழ்நாட்டை மறந்துவிட்ட தமிழ் மந்திரிகளுக்கு நேரமில்லை; நேரமிருந்தாலும் எண்ணமில்லை; எண்ணமிருந்தாலும் தட்டிக் கேட்கும் துணிவில்லையே!

இந்திய வைத்தியமுறைகளைப் பரிசீலனை செய்து, தர நிர்ணயம் செய்வதற்காக டெல்லி சர்க்கார் சென்ற ஆண்டிலே "தாவேகுழு" வை நியமித்தனர். பணியினை முடித்த குழுவினர், 4—12—56-ல் தமது கருத்தினை வெளியிட்டுள்ளனர். அவர்கள் கூறுகின்றனர்; "இந்திய வைத்திய குழுவைப்போல், ஆயுர்வேதம், யூனானி வைத்திய முறைக்கு ஒரு மத்தியக் குழுவும், ஹோமியோபதி வைத்திய முறைக்கு மற்றொரு மத்தியக் குழுவும் ஏற்படுத்த வேண்டும். மத்திய சர்க்காரிலும சரி, ராஜ்ய சர்க்காரிலும் சரி ஆயுர்வேதம், யூனானி, ஹோமியோபதிக் வைத்திய முறைகளுக்கென தனித்தனி டைரெக்டர்களை நியமிக்க வேண்டும்." என்று

இவற்றில் ஒன்றாக இடம்பெறவில்லை,நமது சித்த மருத்துவம்! இதை யார்கேட்பது?

டெல்லி அரசாங்கம் மருத்துவ முறைச் சீரமைப்புக்கு ஏற்பாடு செய்கிறது ஆனால், தமிழ்நாட்டு மருத்துவ முறை அதிலே சேர்க்கப்படவில்லை. எனவே வளர்வதற்கும் வழியில்லை! வடவரின் கட்டளைப்படி ஆடுவோரே இங்குள்ள அமைச்சர் பெருமான்கள்! எப்படி சித்த மருத்துவம் வாழும்? எப்படி வளரும்? எப்படிப் பெருமைபெற முடியும்? தன்னுரிமையற்ற தமிழா! மருத்துவத் துறையிலும் உனக்கு இழிவுதானா? இந்தப் புறக்கணிப்புத்தானா?

—ப கண்ணன்.

கனாக்கண்டேன் தோழீ.

சுசீலா.

# அஜாய்கோஷும்-ஜீவானந்தமும்

என்ன அதிசயம், போங்கள்! இந்த நாட்டின் அரசியலில்கூட நாகரீகம் புகுந்து கொள்ளும் என்று யாருமே கற்பனை செய்திருக்க மாட்டார்கள். திடீர் திடீரென்று பெரும் பெரும் கட்சிகளெல்லாம் தத்தமது குறைகளை ஒப்புக் கொண்டு திருந்த முற்படுகின்றன! மந்திரிகள் தங்கள் ஆட்சியிலேற்படும் குறைகளைக் காணப் பொறுக்காது பதவியை விட்டு விலகுகின்றனர்! அஜாய் கோஷின் அறிக்கை'லால்பகதூர் சாஸ்திரியின் ராஜினாமா! அரசியல் வட்டாரத்தில் மட்டுமின்றி, பொதுமக்கள்—கல்லூரி மாணவரிடையிலும் இவை ஏற்படுத்தியிருக்கும் பரபரப்பு கொஞ்ச நஞ்சமன்று எனக்கென்னவோ ஒரே குழப்பமாயிருக்கிறது! அஜாய் கோஷையும், சாஸ்திரியாரையும் ஒருக்கால் நேரில் சந்தித்தால்...பெண்ணால் முடியுமா?... திராவிட மகளிர் மன்றம் தோன்றிய பிறகும் பின்னடைவா?... இப்படி எண்ணிக்கொண்டிருந்தவள் என்னையறியாது உறங்கிவிட்டேன்.

* * *

அஜாய் கோஷைச் சந்திக்க வேண்டும் என்று அவர் மாளிகைக்குள் நுழைந்த நான் பெருத்த ஏமாற்றத்திற்குள்ளானேன் எனக்கு முன்பே அவருடன் தோழர், ஜீவானந்தம் பேசிக்கொண்டிருந்தார் நானும் சற்று விலகி நின்று அவர்களது பேச்சை அக்கரையுடன் கவனிக்க ஆரம்பித்தேன்.

"நீங்கள் ஜெயப்பிரகாசிக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டேன்" என்றார் தோழர் ஜீவானந்தம்.

"நீர்மட்டு மென்ன? நமது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருக்கும் அத்தனை காமரேட்ஸ்களுமே திடுக்கிட்டிருப்பார்கள். மற்ற ஜனங்களெல்லாங்கூட திகைத்திருப்பார்கள்."

"நம்முடைய குறைகளைநாமே ஒப்புக் கொண்டால் எதிர்க் கட்சிக்காரர்கள் கிண்டல் செய்யமாட்டார்களா?"

அஜாய் கோஷின் கண்கள் சிவந்தன.

"இந்தத் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்கு மட்டும் ஏனோ இப்படி மூளை கெட்டிருக்கிறது. செம்மறியாட்டுக் கூட்டம்போல் இத்தனை நாளாய் சொன்னதைச் செய்து கொண்டிருப்பீர்களே, இப்பொழுது உங்களுக்கு என்னய்யா வந்து விட்டது?"

"அதேதாங்க வந்துவிட்டது இத்தனை நாளாய் நமது ரஷ்யத் தலைவர்கள் சொன்னதை செய்து கொண்டிருந்தோமே......இப்பொழுது அந்தப் 'பண்பை' விட்டுவிடுவதா?"

"ஒரு வடநாட்டுத் தலைவனை நீ அவமதிக்கிறாய்... ஊம்... ஏனய்யா, 'பரந்த நோக்கம், 'பரந்த நோக்கம'னு கூட்டத்தில் கத்துவதற்குத்தான் உங்களுக்குத் தெரிகிறதேயொழிய,உலக அரசியலைப் பற்றிய அறிவு கொஞ்சங்கூட இல்லையே! ஹங்கேரியில் வீசும் புயலில் ரஷ்யாவின் மானம் எச்சிலைபோல் பறந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலும் நாம் அவர்கள் சொன்னபடி ஆடிக் கொண்டிருந்தால், நாலு பேர் என்ன சொல்வார்கள்? நல்ல வேளை! ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்த சமயத்தில் கடிதம் எழுதினார். நானும் அவர் சொல்வதை ஏற்றுக் கொள்வதுபோல் காட்டிக் கொண்டு விட்டேன். ரஷ்யாவைவிட நமக்கு முக்கியமானது கட்சிதான். கட்சியின் பலத்தைப் பெருக்கிக் கொள்ள என்ன வேண்டுமானாலும் பேசலாம்; எப்படி வேண்டுமானாலும் எழுதலாம்; எதை வேண்டுமானாலும் செய்யலாம்..."

"பச்சோந்தி!" என்று என்னை மறந்து கத்தினேன்.

"யார் பச்சோந்தி?" என்று கோபத்துடன் என் பக்கம் திரும்பினார், அஜாய் கோஷ்

"உங்களையல்ல, அதோ, அங்கே!" என்று சுவரின் மேல் உட்கார்ந்திருந்த பச்சோந்தியை சுட்டிக் காட்டினேன்.

"ஓஹோ..." என்று உறுமிக் கொண்டே மேலும் தொடர்ந்தார்.

"தேர்தல் நெருங்கிவிட்டது. இந்த வேளையில் நாம் சும்மா உட்கார்ந்திருக்கலாமா? காங்கிரசின் ஐந்தாண்டு திட்டத்தை ஆதரித்தோமே! அதனால் எவ்வளவு இலாபம் தெரியுமா? மாநிலச் சீரமைப்புக்குழு இழைத்த அநீதியில் மனம் நொந்துபோன மகாராஷ்டிர காங்கிரஸ்காரர்கள், குஜராத் கதர்க் குல்லாய்கள்,பஞ்சாப் தேசியத் தோழர்கள்—ஆகிய எல்லோருமே தேர்தலில் ஓரளவுக்கு நம்மை ஆதரிப்பார்கள். இந்த அரசியல் தந்திரத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான், இப்பொழுதும் அந்தக் கடிதத்தை எழுதினேன். ஜெயப்பிரகாஷுக்கு நல்லவர்களாக நடந்து கொள்வதால், சோஷலிஸ்ட்களிடையேயும், பூமிதான இயக்கத் தொண்டர்களிடையேயும் நம் மதிப்பு உயரும். சோஷலிஸ்ட் போட்டியிடாத தொகுதியிலாவது அவர்களுடைய ஆதரவு நமக்குக் கிடைக்காதா? இதுபோல் இன்னும் எவ்வளவோ திட்டங்கள் அந்தக் கடிதத்தில் பொதிந்து கிடக்கின்றன. கடிதத்திலுள்ள 4000 வார்த்தைகளில், ஒவ்வொரு வார்த்தையிலுள்ள ஒவ்வொரு எழுத்தும் நம் கட்சியின் நன்மையைக் கருத்திலே வைத்துக் கொண்டு எழுதப்பட்டது அதாவது, எல்லாம் எலெக்ஷன் பிஸினஸ்!"

"பார்த்தீர்களா? பச்சோந்தி இப்பொழுது ஓட்டுக்கு ஏறுகிறது. அதற்குத் தகுந்தபடி நிறத்தையும் மாற்றிக் கொள்ளுமல்லவா?" என்றேன்.

"ஆமாம்" என்றார் அஜாய் கோஷ் புருவங்களை நெரித்தபடி.

வெகு நேரமாக மௌனம் சாதித்த தோழர், ஜீவானந்தம் வாயைத் திறந்தார்:

"இன்னொரு விஷயம். தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் என்று பலம் பெருந்திய கட்சி ஒன்றிருக்கிறது. வருகிற தேர்தலில் அவர்களும் போட்டியிடுகிறார்களாம்."

"நானும் கேள்விப்பட்டேன். உங்களைப் பற்றி எனக்கு நம்பிக்கையில்லை" என்று சொல்லிவிட்டு எழுந்தார் அஜாய் கோஷ், வெடுக்கென்று உள்ளே போய்விட்டார். பரிதாபகரமாக என்னை நோக்கினார் தோழர், ஜீவானந்தம்; பறந்து வந்து படுக்கையில் விழுந்தேன்.

○○




[முன் இதழ் தொடர்ச்சி]

சங்கா:- அழகான புதுமலர்; அருமையான நறுமணம்.

(சக்திமுனையர் ஆத்திரத்தோடு வருகிறார்)

சக்தி:- ஜெய் ஈஸ்வரன்! ஜெய்காளி! அபசாரம்; அபசாரம செய்துவிட்டாள மகாராணி.

சங்கா:- (அஞ்சி) அபசாரமா? நான் செய்தேனா?

சக்தி:- ஆம்! ஈசன் பூசைக்குரிய புனித மலரில் அன்னியர் கைப்படுவது அபசாரம். கையால் எடுத்தது மட்டுமல்ல, மூக்காலும் முகர்ந்தும் விட்டாயே! மாபெரும் அபசாரம்! கர்த்தனின் புனிதமான ஆராதனையைக் களங்கப் படுத்திவிட்டாயே சண்டாளி!

நந்தி:- (அஞ்சி) பூசைக்குரிய புனித மலரா? பொல்லாங்கு நேர்ந்ததா, சக்திமுனையரே!....

சக்தி:- மூண்ட சினத்தால் முப்புரமெரித்த விரிசடைப் பெருமான்; மருகனென்றும் பாராமல் மன்மதனைச் சுட்டெரித்த மகேஸ்வரன்; அவனிடம் பக்தி இருந்திருந்தால் நடந்திருக்குமா இந்த இழிசெயல்? ஆகமப் பெருமை—ஆலய விதிகள்—ஆஸ்திக நெறி எல்லாம் பழுதுண்டன இந்த பாபச் செயலால்! இந்த அராத்மாவை தண்டிக்காது விட்டால், தர்மம் தலை சாய்ந்துவிடும்! ஐயகோ! பக்தர்கள் வழிபடும் தகுதியை இழந்து விடும் இந்த ஆலயம்!

நந்தி:- தண்டனையா? என்ன தண்டனை?

சக்தி:- மன்னவா! இஞ்சிற்றேனும் பின்னடையக் கூடாது! மலரையெடுத்த மங்கையின் கை வெட்டப்பட வேண்டும். அதனைச் செய்யும் துணிவு இல்லாவிட்டால் அழியத்தான் வேண்டும் இந்த ஆலயம்! ஒழியத்தான் வேண்டும் பல்லவ குலத்தின் பழம் பெருமை!

நந்தி:- சுவாமி! பயங்கரமான கட்டளை!

சக்தி:- நிறைவேற்றாவிடில் பயங்கரமான சாபம்! பயங்கரமான நரகம்!

சங்கா:- (நடுங்கி) சுவாமி! நான் வேண்டுமென்றே செய்யவில்லை. ஆலய விதிகளை அறியாதவள். மன்னித்து விடுங்கள்!

சக்தி: ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி! மாபெரும் குற்றம்! மாற்றமுடியாத ஆச்சார பங்கம்! மகேஸ்வரனுக்குச் செய்த இந்தக் குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது! கடமையை நிறைவேற்றக் கலங்கும் காவலனே! ஆலவாயப்பன் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்: குற்றம் புரிந்த கை வெட்டப்பட வேண்டும்! இல்லை! என் சிரத்தைக்கொய்து, ஆண்டவன் காலடியிலே காணிக்கையாக வைத்தே நான் இக் களங்கத்தைப் போக்கவேண்டும்! என்ன சொல்லுகின்றாய்?

நந்தி:- வேண்டாம் வேண்டாம்! அந்தப் பழி! கையாலாகாத கடவுள் பக்தனல்ல; கடமையைச் செய்து முடிப்பேன்.

(வாளையுருவி, சட்டென்று சங்காதேவியின் கையை வெட்டுகிறான்)

சங்கா:- (பதைத்து) ஆ!....நாதா!....ஐயோ! ஆ!....

(விழுந்து புரளுகின்றாள்)

சக்தி:- (உரக்க) ஜெய் ஈஸ்வரன்! ஜெய் காளி! மாகாள பைரவர் மனம் குளிர்ந்தார்! மன்னிப்பு தந்துவிட்டார்! மன்னா! நின் அருஞ் செயலால் பக்திமார்க்கத்தைப்புனிதமாக்கினாய்! ஆண்டவனின் அருளைப் பெற்றாய்! நீ வாழ்க! நின் பக்தி வாழ்க! ஜெய்ஈஸ்வரன்! ஜெய்காளி!

(அவர் போகிறார்)

நிருப:- (பதைத்து) அநியாயம்! அக்ரமம் இது! மனிதத் தன்மையற்ற காரியம்! மலரெடுத்து முகர்ந்ததற்காக என் மாதாவின் கை துண்

டிக்கப் படுவதா? ஆராய்ந்து பாராத மன்னரின் அதர்மச்செயல்! பொறுக்கமுடியாது இதனை!

நந்தி:- நிறுத்தடா! தீராத தெய்வகுற்றம் புரிந்தாள், உன் தாய்!

நிருப:- நான் முன்னறிந்த முதல் தெய்வத்தையே முடமாக்கி விட்டாயே மூர்க்கா! எத்தகைய குற்றமிது?

நந்தி:- என் மனைவியின் கையைத்தானடா நான் வெட்டினேன், பொடிப்பயலே!

நிருப:- நான் குடியிருந்த கலைக்கோயிலை, என்னை உருவாக்கி உயிரளித்த வீர அன்னையை, கண்கண்ட அன்புத் தெய்வத்தைச் சிதைத்து விட்டாயே பாவி! மாதாவின் கையை வெட்டிய கையை நான் துண்டிக்காமல் விடமாட்டேன்.

(வாளையுருவிக் கொண்டு தந்தையின்மேல் பாய்கிறான் சிறுவன் நிருபதுங்கன். இருவர்க்கும் வாட்போர் நடக்கிறது.)

சங்கா:- (பதறி) நிருபதுங்கா! நில்! ஐயோ! வேண்டாமடா! வேண்டாம் இந்தப் பாதகம்! பாவி! என்ன கேவலம் செய்யத் துணிந்தாய்! நிறுத்தடா நிறுத்து!

நிருப:- (நிறுத்தி மனம்பொங்கி) தாயே! எது பாதகம்? சோறூட்டித் தாலாட்டி என்னை ஆளாக்கிய அன்புக் கரத்தைவெட்டியெறிந்ததல்லவோ பாதகம்? பட்டத்தரசியின் கரத்தை ரத்தச் சேற்றிலே புரளவிட்டதல்லவோ பாதகம்? பொறுக்கவும் வேண்டுமா அம்மா, இந்தக் கொலைபாதகத்தை?

சங்கா:- ஆம்! ஆயிரம் செய்தாலும் அவர் உன் தந்தை! தந்தையடா! அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற அறிவுரை தெரிந்தவன், நீயா தாய்க்குப் பரிந்து தந்தையிடம் போரிடுவது?

நிருப:- அக்ரமம், யார் செய்தாலும் அக்ரமம்தானே அம்மா?

சங்கா:- தோட்டக்காரன் மரத்தை வெட்டலாம், கொடியை அறுக்கலாம். செடியை நசுக்கலாம், தடுக்க யாருக்கடா உரிமை? மகனே! தந்தையை அவமதித்தால் தாய் மனம் தாளாது. வெட்டுண்ட கையோடு வேதனைப்படும் என்னை மேலும் சோதனைக்கு ஆளாக்காதே! பொறுத்துக் கொள்ளடா, பொறுத்துக் கொள், என்ன பொல்லாங்குநேர்ந்தாலும் பொறுத்துக்கொள்.

நிருப:- (பொங்கி) அம்மா! மனித தெய்வம் நீ! என்னை மன்னித்து விடு ...

(மண்டியிட்டு தலைகுனிந்து தாயை வணங்கிறான்)

நந்தி:- (வாளை உறையிலிட்டு) சிவபெருமான் வழிபாட்டுச் சிறப்பறியாத சண்டாளி; தாய்க்குப் பரிந்து தந்தையிடம் போரிடத் துணிந்த தறுதலை; இவர்கள் இருவருமே என் கண் முன்பு இனி வாழக்கூடாது. யாரங்கே?

வீரன்: (வந்து) மகாராஜா!

நந்தி: இவர்கள் இருவரையும் கொண்டு போய் பாதாளச் சிறையில் அடைக்க வேண்டும். இப்போதே!

வீரன்:- உத்தரவு!

(வேகமாகப் போகிறான் மன்னன்)

## காட்சி 21.

(வித்யாவதி வீடு. அவள் மாலை தொடுத்துக் கொண்டிருக்கிறாள். மலரெடுத்துக் கொடுக்கிறான் பச்சை. உற்சாகத்தோடு வருகிறான் சந்திரவர்மன்.)

சந்திர:- நல்லகாலம்! நல்லகாலம் பிறந்துவிட்டது நமக்கு! வித்யாவதி! ஒழிந்தாள் மகாராணி. ஒழிந்தது என் மனோரதத்தின் முட்டுக்கட்டை; தெரியுமா செய்தி?

வித்யா:- பச்சை எல்லாம் கூறினான். பதறிற்று மனம்! அந்த கோர நிகழ்ச்சிக்கா இவ்வளவு குதூகலம்?

சந்திர:- வெற்றி! இனிமேல் வெற்றி எனக்குத்தான்!

வித்யா:- திட்டமெல்லாம் குலைந்து தலைமறைந்து வாழ்கின்றீர்கள். இன்னுமா மனம் மாறவில்லை? விட்டுவிடுங்கள் சுவாமி, அந்தப் பேராசையை.

சந்தி:- நினைத்ததை நிறைவேற்றியே தீருவேன். வித்யாவதி! நான் புதுப்பாட்டு ஒன்று எழுதுகிறேன். எதற்குத் தெரியுமா?

வித்யா:- (ஆசைகாட்டி) என் நாட்டியத்திற்காக இருக்கும்.

சந்திர:- இல்லை. நந்திவர்மனின் பரலோகப் பயணத்திற்கு.

வித்யா:- பாட்டு என்ன, கத்தியா, சூலமா கொல்வதற்கு? இல்லை, பாட்டிலே விஷத்தைத் தான் கலக்க முடியுமா?

சந்திர:- விஷத்தைவிட உரமானது அரம். அரம் பாடுகிறேனடி, அரம்பாடுகிறேன்; அரசனை மாய்ப்பதற்கு!

வித்யா:- அப்படியா? அதை, அவர் முன்பு பாடவேண்டுமே, யார் சென்று பாடுவதாம்?

சந்திர:- மதிப்புக்குரிய எனது நண்பன். முத்துப்புலவரின் அருந்தவச் செல்வன் பச்சைப் புலவன்!

பச்சை:- (நிமிர்ந்து) நன்று நன்று. யாம் சென்றுபாடுவோம். செயல் முடிப்போம்!

சந்திர:- பச்சை! மன்னர் துயிலுகின்ற நேரத்திலே; மறைந்து செல்ல வேண்டுமே, முடியுமா உன்னால்?

பச்சை:- கவலைவிடுமின்! கவலைவிடுமின்! உமது இச்சையை குறைவிலாது நிறைவேற்று வான் இந்தப் பச்சை! ஆனால், எடுப்பதென்னவோ பிச்சை! அணிமணிகள் வாங்க ஒரு இரண்டு பொற்காசுகள்...

சந்திர:- இரண்டென்ன; இருபது பொன் கொடுக்கிறேன். ஆடம்பரமாகவே சென்றுவா அருந்தமிழ்ப் புலவோனே!

(தட்டிக்கொடுக்கிறான்)

## காட்சி 22.

(அரண்மனை வசந்த மண்டபத்தில் களைப் புற்று மன்னன் துயில்கின்றான். கள்ளத்தனமாகச் சென்று, எதிரே அமர்ந்து பாடுகிறான் பச்சை)

(விருத்தம்)

ஒன்னலரைப் போரில் ஒடுக்கிடும் வல்லோனே
கன்னித் தமிழின்பம் கண்டோனே—இன்னல்
வகையுண்டு நின்சமுகம் வந்தோர் துயரம்
புதையுண்டு புல்முளைத்துப் போம்!

(கேட்டு மகிழ்ந்த மன்னன் எழுந்திருக்கிறான்)

நந்தி:- ஆஹா! என்னே தமிழ்ச்சுவை! என்னே தமிழின்பம்! என்னே கவிதை நயம்! ஐயா! நீர் யார்?

பச்சை:- யாம் ஒரு தமிழ்ப்புலவர்!

நந்தி:- கந்தருவன் வீணை மிழற்றிப் பண்ணிசைப்பதுபோல் கனவு கண்டேன். இன்பம் கண்டேன். விழித்தேன். பைந்தமிழின் பாட்டுச் சுவை நுகர்ந்தேன். மகிழ்ச்சி! புலவரே! பெரு மகிழ்ச்சியடைந்தேன் (முத்துமாலைகழற்றி) இதோ பெற்றுக்கொள்ளும் பரிசினை.

பச்சை:- வாழ்க மன்னவர்! (பெற்றுக் கொள்ளல்)

நந்தி:- புலவரே உமது பெயர்?

பச்சை:- யாம் முத்துப் புலவரின் அருந்தவச் செல்வன் பச்சைப் புலவர்.

நந்தி:- (யோசித்து) காலஞ்சென்ற நாவலர் முத்துப்புலவரின் மகனா? அடையாளமே தெரியவில்லையே. எங்கிருந்தீர் இத்தனைநாள்? என்ன செய்தீர்? இதனைப் பாடியது நீர்தானோ?

பச்சை:- (யோசித்து) இல்லை. சந்திரவர்மன்.

நந்தி:- (வியந்து) சந்திரவர்மனா? என் தம்பியா? எங்கே இருக்கிறான்?

பச்சை:- யாம் அறியோம்.

நந்தி:- சந்திரவர்மனா இத்தகைய இன்சுவைக்கவிதை இயற்றினான்? தமிழ் கொஞ்சுகிறதே தம்பியின் வாக்கில் புலவனாய் விட்டானா?

பச்சை:- வெறும் புலவரன்று மன்னவா! பெரும் புலவர். காவியம் செய்ய வல்லவர். தமிழ்த்தாயின் பேரருள் பெற்றுவிட்டவர்!

நந்தி:- மகிழ்ச்சி! புலமையும் திறமையும் இருக்கிறது. புத்தி நிலைமை சரியில்லையே. நற்புலமை வித்தகன். அரியாடனத்தருகே சரியாசனத்தில் இருக்க வேண்டிய தம்பி, துரோகம் புரிந்து தலை மறைந்து திரிகின்றானே பாவி!

பச்சை:- மன்னா! புலவர் சந்திரவர்மனின் பாடலை யாம் பாடியது குற்றமாயின் மன்னிக்க வேண்டும்.

நந்தி:- செந்தமிழில் வைவாரும் வாழவேண்டும். வளர வேண்டும் தமிழ்! புலவரே! அவன் அனுப்பினானா? நீராக வந்தீரா?

பச்சை:- (யோசித்து) தங்கள் மனதை மகிழ்விக்க, அவரே எம்மை அனுப்பினார்.

நந்தி:- நன்று இதன்மூலம், தனது தமிழ்ப் புலமையை எனக்கு உணர்த்தினான் தம்பி. புண்பட்ட நெஞ்சத்தைப் புதுக்கினான். இது, அவனது எண்ண மாற்றத்தின் எதிரொலியோவென்று நினைக்கிறேன்.

பச்சை:- இருக்கலாம், இருக்கலாம் மன்னவ! ஆசையோடுதான் பேசினார்!

நந்தி:- தம்பி திருந்தினான் என்ற சேதி, எனக்குத் தேன்போல் இனிப்பது. துரோகம் மறந்து கவிகள் செய்யட்டும், காவியம் புனையட்டும், தகுதியிருக்கிறது. தாய்மொழி தமிழுக்குப் பணிசெய்து பெருமையோடு வாழட்டும். புலவரே! தம்பிக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவியும். மறவாது தெரிவியும்.

பச்சை:- நன்று. வணக்கம்.

(செல்கிறான்)

(வளரும்)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள முத்துக்களைக் காணக் கண் கூசுகிறதே! கூட இருந்தோர் அழுவதன்றோ இயல்பு! அதுவும் இவர் காங்கிரஸ் மாளிகைவாசி! மாளிகையிலேயே பிறந்து வளர்ந்தவர். எனவே கண்டிப்பாக ஒப்பாரி வைத்திருப்பார் அந்த வெள்ளையரும் அன்று விட்டால் அன்றிருந்த குடிசைக் காங்கிரசு தனக்குத் தொல்லை கொடுக்கும் என்று மாளிகைக் காங்கிரசு அஞ்சியது அதன் விளைவாக முக்காடிட்டு அழுதது அழுதாலும் மாளிகைவாசி மாளிகைவாசி தானே? எனவே ரத்தினச் சுருக்கமாக, 'எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்து போகிறீர்களே, நாங்கள் என்ன செய்வோம்?' என்று புலம்பியிருக்கிறார்கள், ஊன்றிப் பாருங்கள். இது சென்னை மாநில அமைச்சர் உயர்திரு. சுப்பிரமணியனாருடைய வாய்ச் சொற்கள். தாமும் தமது குருநாதர் ராஜாஜி போன்றவர்களும் என்றோ மறைமுகமாகச் செய்த தவற்றைத் தம்மையுமறியாமல் கொங்கு மண்ணிலே கொட்டியிருக்கிறார்! ஆனால் தமது வக்கீல் திறமையை மக்களும் நம்புவார்கள் என மயங்கி தி மு க. வே குற்றவாளி என்கிறார். வக்கீலின் வறட்டுக் கூச்சலைக் கேட்டு நீதி வழங்குமளவுக்கு இந்த நாட்டிலே நேர்மை செத்து விடவில்லை. சான்றுகளோடு மெய்ப்பித்துக் காட்டுவாரா நமது மதியமைச்சர்?

அமைச்சரின் தற்போதைய நிலை எனக்குச் சிலந்தியை நினைவூட்டுகிறது. தானாக தன்னைச் சுற்றி வலையைப் பின்னிக் கொண்டு அதற்குள் சிக்கிக் கிடக்கும் சிலந்திக்கும் இவருக்கும் என்ன வேறுபாடு? ஒரே ஒரு வேறுபாடுதான். சிலந்தி அறிந்தே செய்கிறது. இவரோ பாவம் அறியாமலே செய்கிறார். கூட இருந்து தந்திகளைப் பிரித்துப் பார்த்தாராம்! அவற்றில் பல, தி மு. க. ஆட்கள் அனுப்பிய தந்திகளாம்! அந்தோ பரிதாபம்! கேழ்வரகிலே நெய் ஒழுகிறதாமே!

இந்தப் பேச்சு திரு. வி க நூல் நிலையத்தைத் திறந்து வைக்கும்பொழுது நிகழ்ந்துள்ள பேச்சு என்பதை நினைக்கும்பொழுது, எனக்குச் சிரிப்பு வருகிறது. தி மு. க வினரை, அமைச்சர் சொல்லையே வேதமாகக் கொண்டு, நம்பாமல் ஒதுக்குவதானாலும் திராவிட இயக்கம்பற்றிய திரு. வி. க. வின் சொற்களையேனும் நம்பலாமல்லவா? தமிழ்த் தென்றல் திரு. வி. க. வின் பெயரை உச்சரிக்கத் தகுதியற்ற இந்த சென்னை மாநில அமைச்சருக்கு, அப்பெருமகனின் இறுதிக்காலச் சிந்தனை அலைகள் என்ன என்பது தெரியுமா? தமிழுக்குச் சவப்பெட்டி செய்யும் இந்தத் தச்சருக்கு அது எங்கே புரியப் போகிறது?

தென்னாட்டிலே காங்கிரஸ் தொண்டர் என்ற சொல்லுக்கே புனிதத் தன்மை வழங்கிய சான்றோர் திரு. வி. க. அவர் கூறும் அறிவுரையை அமைச்சருக்குத் திரு. வி க. நூல் நிலையத்தினரேனும் முயற்சியெடுத்து அறிவிப்பாராயின், திரு. வி க வின் பெயரைக் காப்பாற்றிய பெருமை அவர்களைச் சாரும்; திரு வி க வின் பெயராலே நூல்நிலையம் அமைத்ததற் கேற்ப நடந்த அவர்தம் செய்கையையும் உலகம் வியக்கும்.

"நான் காங்கிரசில் மிகத் தொண்டு செய்தவன். நாட்டில் காங்கிரஸ் வீழ்ந்து பட்ட காலத்திலெல்லாம் தொண்டு செய்தவன். பின் ஏன் காங்கிரசை விட்டு விலகினேன்? கொள்கையில் வேறுபாடா? முரண்பாடா? அல்ல, அல்ல, அல்ல! காங்கிரசின் பாசிசக் கொள்கைகளையும், பிற்போக்கான சுயநலப் போக்கையும் கண்டித்தே வெளியேறினேன்.

(அடுத்த இதழில் முடிவுறும்)


## பகுத்தறிவு.

வார இதழ்.

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 5-0-0

ஆறு மாதங்கள் 2-8-0

தனிப்படி 0-1-6

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.



தி. மு. க தேர்தல் நிதிக்காக.

திருப்பத்தூர், தமிழிசைக் கழக மைதானத்தில் 16-12-56 ஞாயிறு இரவு 10 மணிக்கு

அறிஞர் அண்ணா மற்றும் கழகத்தோழர்கள் நடிக்கும்

## சந்திரோதயம்

நாடகம் நடைபெறும்.
கட்டணம்: ரூ 5, 3, 2, 1.
பெண்கள் அணா 8.



## சம்போக மாத்திரை.

வலிமை இழந்த வயோதிகர்களும், தேகக்கட்டு, உற்சாகம், போக சக்தி குறைந்த வாலிபர்களும், தாது விருத்தியையும், தகுந்த ஆண் தன்மையையும் தேவையான அளவு பெற்று இன்ப எல்லையை எய்தவைக்கும்! அற்புத மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது

24 மாத்திரை புட்டி ரூ. 6-0-0

சப்பு இண்டஸ்ட்ரீஸ்
சேலம்-2.


## குழந்தை பிறப்பு.

திண்டிவனம் "பகுத்தறிவு" விற்பனையாளர் தோழர், மு மாரிசாமி, அவர்களின் துணைவியார் தோழியர், மாரியம்மையார், நகர சக்கார் மருத்துவ நிலையத்தில் (30-11-56) வெள்ளிக்கிழமை காலை 5-மணிக்கு ஓர் பெண் மகவுக்குத் தாயானார்கள்.


வெளிவந்துவிட்டது!
அனைவரும் எளிதாகப்பாடிடும் படக்காட்சி மெட்டுக்களிலே

**திருக்குறள் வில்லுப்பாட்டு**

இயற்றியவர்:
கவிஞர், நா ஆ. சு. மணி.

விலை 0-2-0

கிடைக்குமிடம்: "மேகலை"
இளங்கோ நிலையம்,
கண்டர் நகர், வேலூர் (சேலம்)

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● துரை-முருகேசன்,
பசுபதியப்பா நடுத்தர ஆரம்பபாடசாலை
காரமடை, கோவை மாவட்டம்.

● துரை-முருகேசன், காரமடை.

கே: நினைத்தால் நினைத்த இடத்திற்குச் செல்லும் சக்தியுடைய ஆண்டவனுக்கு வாகனங்கள் அசியமா?

ப: அவசியமில்லைதான். ஆண்டவன் சக்தியிலே பக்தர்களுக்கு நம்பிக்கையிருந்தாலல்லவோ சும்மா விடுவார்கள்!

* * *

கே: ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனப்படுகிறதே, அந்த தேவன் யார்? எங்கே இருக்கிறன்? அவனைக் காட்ட முடியுமா?

எங்கும் நிறைந்து, கண்ணால் காண முடியாது, அணுவுக்குள் அணுவாக விளங்கும் இயற்கை சக்தியை இறைவன் எனக் கூறுவதால் ஆபத்தில்லையே! அதற்குப் புராண மெழுதி, தெய்விகம் கூறி, ஆலயம் சமைக்கும் போதுதானே, அது உண்டாகிறது!

வீ. நவகோடி, பூசாரிப்பட்டி.

கே: தி மு க. தேர்தலில் தோல்வியடைந்தால்?......

ப: சுருண்டுவிடாது தோழனே! அரசியல், பொருளாதார, சமுதாய இயல்களில் கொள்கைப் பிரசாரம் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து செய்துவரும்.

* * *

கே: இன்பத்தின் கடைசி எல்லை எது? துன்பத்தின் கடைசி எல்லை எது?

ப: இன்பத்தின் கடைசி எல்லை துன்பம்; துன்பத்தின் கடைசி எல்லை இன்பம்!

கே. கே. பி. சிவம், கோனேரிப்பட்டி.

கே: படிக்கத் தெரியாதவர்க்கு பகுத்தறிவு இல்லையென்கிறார்கள்; படிக்கத் தெரிந்தோரும் பகுத்தறிவற்றவர்களாக இருப்பானேன்?

ப: பகுத்தறிவு மனித குலத்தின் பொதுச் சொத்து. கத்தி பதமானதென்றாலும் பயன்படுத்துகிற பண்பில் தானே வீரம் விளங்க வேண்டும்!

கே. சுப்ரமணியம், காரமடை.

கே: திராவிடநாடு தனியாய்ப் பிரிந்தால், வடநாடு?

ப: சிலபல வசதிகளையும், வாய்ப்புகளையும் இழந்துவிடும்!

கா. விசுவநாதன், வேலூர்-சேலம்.

கே:- காங்கிரஸ் சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பிரசாரம் செய்வதன் நோக்கமென்ன?

ப: தேர்தலில் வோட்டு வாங்கப் பயன்படும் என்பது தவிர, நாணயமான நோக்கம் ஏதுமில்லை.

* * *

கே:- தேர்தலில் ''ஐயா'' எதிர்பார்ப்பது ஈடேறுமா?

ப: சே! சே! அவர் கருத்துப்படி தேர்தல் என்பதே ஒரு பித்தலாட்டமாயிற்றே! கண்ணெடுத்துப்பார்ப்பாரோ? காதால்தான் கேட்பாரோ?

'பகுத்தறிவு' ப் பிரியன், சாத்தூர்.

கே: ''நந்திவர்மன்'' நாடகத்தில் ''வரைபெரிய மத்தாக, வாளரவம் கயிறாக, திரையிரியக் கடல் கடைந்து திருமகளைப் படைத்தனையே'' அர்த்தமென்ன?

ப: மலையை மத்தாகவும், பாம்பைக் கயிறாகவும் கொண்டு அமுதம் பெறக் கடலைக் கடைந்தார்களாம். அப்போது தோன்றினளாம் மகாலட்சுமி. அந்தக் கதையினைக் கூறி, வீரலட்சுமியைப் பெற்றதாகக் காவலனைப் பாராட்டுகிறார் பெருந்தேவனார்.

## முன்னேற்றப்— —பாதையிலே

### தொளசம்பட்டி.

ஓமலூர் தாலூக்கா தொளசம்பட்டியில் தோழர், எம். பழனியப்பன் தேநீர்க் கடையில், 3-12-56 மாலை 6-மணிக்கு புதிய தி மு க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் உற்சாகத்தோடு திரண்டிருந்தனர்.

ஆசிரியர், ப கண்ணன் தலைமை தாங்கி கழகக் கொள்கை, அமைப்பு முறை, நடப்புகளைக் குறித்து விளக்கிப் பேசி, புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்குமாறு வேண்டிக்கொண்டார்.

எம். பழனியப்பன் செயலாளராகவும், டி. வி. வெங்கட்ராமன் துணைச் செயலாளராகவும், மு. இராசதுரை மாவட்டப் பிரதிநிதியாகவும், கு கந்தசாமி பொருளாளராகவும தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இவர்களோடு நிர்வாகக் குழு உறுப்பினர்களாக சி மாரிமுத்து, த நாராயணன், எம். மாணிக்கம், ந. பொன்னுசாமி, வை. நெடுமாறன், சு இருசப்பன், த. பழனிமலை, க. குப்புசாமி, ஏ. மாணிக்கம் ஆகிய 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சில தீர்மானங்கள் நிறைவேற்றிய பிறகு, தலைவர் முடிவுரை கூற, கூட்டம் இனிது முடிந்தது.

### திருச்சி விசுநாதம்

#### சிங்கப்பூரில் தமிழர் விழா.

சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், சேரம்பான், ஈப்போ, பிநாங்கு முதலியநகரங்களில் இந்த ஆண்டு தை முதல்நாள் தொடங்கி நடைபெறவிருக்கும் தமிழர் திருநாள்களில் கலந்து கொள்வதற்காக வந்த அழைப்பை திருச்சி, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஏற்றுக்கொண்டு இருப்பதாகவும், டிசம்பர்மாத இறுதியில் சென்னையிலிருந்து விமானம்மூலம் சிங்கப்பூருக்குச் செல்லக்கூடும் என்றும் தெரிய வருகிறது.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இப்புகழ்ச்சி புலவரது சொன்வாயி லிருந்து கவிதை மழையாகப் பொழிகிறது:-

"வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ்வாய் உழுவைப் பெரும் பிறிது உறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை உருட்டி, உரற்றலைக்
கேழற் பன்றி வீழ அயலது
ஆழற் புற்றடுத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத்திருந்தோன்."
(புறம் 152)

ஓரியினது வில் தொழில் திறத்தை "உயர்வு நவிற்சி அணி"யில் வைத்துக் கூறுகிறார். ஒரு அம்பு யானையைக் கொல்லும்; புலியை ஊடுருவும்; மானின் தலையை உருளச் செய்யும்; காட்டுப் பன்றியை இறக்கச் செய்யும்; உடும்பின் மேலும் பாயும். இவற்றுள் எச் செயலையும் செய்யும் ஒரு வலிய வீர அம்பு ஆனால் ஒரே பொழுதில். ஓர் அம்பு தனித்து நின்று இவ்வளவு காரியங்களையும் மொத்தமாக செய்ய முடியுமா? இவ்விடத்தில்தான் புலவரது உயர்வு நவிற்சி அணிவேலை செய்யத் துவங்குகிறது. இது பண்டைக் காலப் புலவர் ஒருவரின் பாடல்!

இனி, இடைக்காலப் புலவரான கம்பர் தனது இராமாயணத்தில் எழுதியுள்ள வீரக் காட்சி ஒன்றைக் காண்போம்.

வனத்தில் வேள்வி செய்து கொண்டிருந்த விசுவாமித்திர முனிவர், அரக்கர்களது எதிர்ப்பைத் தாங்கமுடியாமல் அயோத்தி வந்து, சனக மன்னனைக் கண்டு இராமனைத் தனக்குத் துணையாக அனுப்புமாறு கேட்க, சனகன் தயங்குகிறான். அந்த நிலையில் முனிவர் இராமனது விற்பெருமையைப் புகழ்ந்து கூறுவதாக, கம்பர் பாடுகிறார்:—

"அலையுருவக் கடலுருவத்து
ஆண்டகைதன் நீண்டுயர்ந்து
நிலையுருவப் புயவலியை
நீயுருவ நோக்கு ஐயா!
உலையுருவக் கனல் உமிழ்கண்
தாடகைதன் உரம் உருவி
மலையுருவி மரம் உருவி
மண் உருவிற்று ஒரு வாளி"

"சனக மன்னா! கடல் அலையைப் போன்ற நீல நிறத்தைப் பெற்றுள்ள இராமனது நீண்ட கைகளின் வலிமையை நன்கு நோக்குவாயாக!" என்று விசுவாமித்திர முனிவர் கூறிவிட்டு, இராமனது புயவலிமைக்கு ஒரு எடுத்துக் காட்டும் தருகின்றார்.

"இராமனால் எய்யப்பட்ட அம்பு ஒன்று, உலைபோன்ற கனல் கக்கும் கண்களையுடைய தாடகையின் புயத்திலே பாய்ந்து ஊடுருவி, பின் ஒரு மலையைப் பிளந்து சென்று, ஒரு மரத்தை ஊடுருவி, இறுதியில் மண்ணை ஊடுருவிற்று!"

அவ்வளவுதானா இராமனது வலிமை? இல்லை, இல்லை! இன்னும் இருக்கிறது. கேளுங்கள்! முனிவர் மேலும் மொழிகிறார்:—

"ஏழுமாமரம் உருவிக்
கீழ் உலகமென்ற இசைக்கு
ஏழும் ஊடுபுக்கு உருவிப்
பின் உடன் அடுத்து இயன்ற
ஏழும் இன்மையின் மீண்டது
அவ்விராகவன் வாளி!"

"இராமனுடைய அம்பு ஏழு பெரிய மரங்களைத் தைத்து, கீழ் உலகமென்று சொல்லப்படுகின்ற ஏழு உலகங்களையும் ஊடுருவி, அதற்குமேல் இன்னும் ஏழுஉலகங்கள் இல்லாமல் போனதால் திரும்பி இராமனிடமே வந்துவிட்டது"

"ஆகா! என்ன சக்தி! என்ன மகிமை!" என்று பக்தி மயக்கத்தில் ஆழ்ந்து விடுவர், இதைப் படிக்கும் பாமரமக்கள். பகுத்தறிவு வாதிகளோ, 'அடேயப்பா! என்ன அண்டப்புளுகு!' என்று கூறிடுவர்.

கம்பனது வாக்கிலே உள்ள வாய்மை 'பண்டைய மெய்'யுக்கும், கம்பனது கற்பனைத் திறம் 'இன்றைய பொய்'யுக்கும் சான்றுகளென்று நாம் மட்டும் சொல்லவில்லை; தமிழ்ப்பெரியார் மறைமலையடிகளே கூறுகிறார்.

கம்பன் கற்பனையில் சிறந்தவனாயிருக்கலாம்; கவிதை இயற்றுவதில் வல்லவனாயிருக்கலாம்; தேனொடு பால் கலந்து அதில் இந்தமிழைக் குழைத்துத் தெவிட்டாமல் கொடுப்பவனுமிருக்கலாம். ஆனால், அந்தச் சுவையான கலப்பில் ஆபாசம், பொய், மடமை போன்ற நஞ்சுகள் இருக்குமாயின், அறிவுடையோர் அதைத் தீண்டவும் மாட்டார்கள்.

"பொய்யுடைய ஒருவன்
சொல்வன்மையினால்
மெய் போலுமே, மெய் போலுமே"

என்றபடி கம்பனது சொல்வன்மையினால், பொய்யை மெய்யாக்க முயன்றால், நாட்டிலே மறுமலர்ச்சி பரவிவரும் இந்தநாளிலே அந்தமுயற்சி பலிக்காது; மாறாக முறியடிக்கப்படும்! ★


TEL: Gurucures.

PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.

அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,

குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

விநோபா ராமாயணம்.

# வரலாறு ஒட்டிப் பேசாத வெட்டிப் பேச்சு!

"இராமாயணம், வட இந்தியன் தென் இந்தியனை அடக்கியாண்ட வரலாறு" என்பது இராமாயண எதிர்ப்புக்கு முதல் ஆட்சேபணையாகும் என்று கூறிய திரு. விநோபாபாவே அதுபற்றிய தனது கருத்தினைக் கூறுகின்றார்:

"முதல் ஆட்சேபணை அதிக மகத்துவம் உள்ளது. இதை மேற்கத்திய சரித்திர ஆசிரியர்கள் ஏற்படுத்தினார்கள். அவர்கள் இந்த நோக்கத்துடன் சரித்திரத்தை நமக்களிக்காத வரையில், பாரத மக்களுக்கு இவ்வித கற்பனையே இல்லை. ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் வேண்டுமென்றோ, அல்லது தெரியாத் தனத்தாலோ இந்திய வரலாற்றில் பலவித வேறுபாடுகளை ஏற்படுத்தினார்கள், ஆனால், நான் அதை ஒட்டிப்பேசவோ, வெட்டிப் பேசவோ விரும்பவில்லை. நான் இராமாயணத்தைப்பற்றி என் அனுபவத்தையே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

விநோபா பன்மொழி கற்றவர்; வரலாற்று நூலறிவும் பெற்றவர், எனவே தான் இராமாயணம் வடநாடு தென்னாடு போராட்டம் குறிக்கும் கதையென்பதை மறுக்க விரும்பியும், அதனை ஒட்டிப் பேசவோ வெட்டிப் பேசவோ விரும்பவில்லை என்று கூறி, அந்த சர்ச்சையிலே தலையிடாது பின்னடைகிறார்.

"இராமாயணத்தில் குடிகாரர்களைச் 'சுரா''கள் என்றும், குடியை வெறுத்தவர்களை 'அசுரா'கள் என்றும் வேறுபடுத்திக்கூறப்பட்டுள்ளது" என்று ஆய்ந்து கூறினார் ஃகென்றி ஸ்மித் வில்லியம்ஸ் தமது "வரலாற்றுக்காரர்களின் உலக வரலாறு" என்ற நூலில்.

"இந்தியாவின் தென்னாட்டிலுள்ள ராஜ்யங்களை நோக்கி வருவதில் பிராமணர்கள் வெற்றியடைந்ததும் இங்குள்ள ஆந்திரர், சேரர், சோழர், பாண்டியர் ஆகிய எல்லோருடைய ராஜ்யங்களும் மிக்க நாகரிகமான நிலையில் இருப்பதைக் கண்டார்கள்" என்கிறார், வின்செண்ட் ஏ. ஸ்மித் தனது "ஆக்ஸ்ஃபோர்டு இந்திய வரலாறு" என்ற நூலில். இதுபோல் மற்றும்பல வரலாற்று ஆய்வாளர்களும் கூறியுள்ளனர்.

இவர்கள் போன்றோரின் கருத்தினை மறுத்து, இது தவறானது என்று எந்த வரலாற்று வல்லுனரும் இன்றுவரையில் உறுதிப்படுத்தினார்களில்லை.

இக்கருத்து, மேற்கத்திய சரித்திர ஆசிரியர்கள் ஏற்படுத்தியது. அவர்கள் வேண்டுமென்றோ, தெரியாததாலோ செய்ததுஎன்று கூறுகின்றார் விநோபா. அவர்கள்தான் மேனாட்டுக்காரர்கள்; பாரதப் பண்பாடும், பெருமையும், புனிதமும் உணராத கயவர்கள்!

ரொமேஷ்சந்திரதத் யார்? இந்திய நாட்டிலே பிறந்த இந்தியர்—அதுவும் வட இந்தியராயிற்றே; அவர் தனது "புராதன இந்தியா" என்ற நூலில் "இராமாயணக் கதைக் காலத்தில் தென் இந்தியா முழுதும் ஆரியரல்லாதார்வசித்து வந்தார்கள் இவர்களைத்தான் இராமாயணத்தில் ஆசிரியர் (வால்மீகி) குரங்குகள் என்றும், கரடிகள் என்றும்; இலங்கையிலுள்ள ஆரியரல்லாத மக்களை அசுரர்கள் என்றும் வருணித்து எழுதிவைத்தார்" என்று கூறுகின்றாரே! இவர் தெரியாதவரா? மற்றும் ரொமேஷ்சந்திர மஜூம்தார், ஏ. சி. தாஸ், சுவாமி விவேகானந்தர் போன்ற வடநாட்டறிஞர்கள் இதே கருத்தினை பல்வகையானும் வலியுறுத்திக் கூறுகின்றார்களே; அவர்கள் விவேகமற்றவர்களா? வேறுபாடுகளை விரும்புகின்றவர்களா?

"ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன்பே இங்கே பரவியிருந்த, மிகப் பழைய நாகரிகமான திராவிட நாகரிகம். இந்திய ஆரியர்களை வெகுவாக ஆட்கொண்டது... அவர்கள் வரும் வழியில் இருந்த நாகரிகத்திற் சிறந்த சுக வாழ்வு நடத்திய மக்களை அழித்து விடுவார்கள்; இல்லையேல் அவர்களோடு கலந்து விடுவார்கள்" என்கிறார் இன்றைய இந்தியப் பிரதமர், கனம். ஜவகர்லால் நேரு, தனது "உலக சரித்திரம்" என்ற ஆய்வு நூலில். இது ஆராய்ச்சியின் பயனா? அறியாமையின் விளைவுதானா? வேறுபடுத்தும் விருப்பமோ?

திரு. பி டி சீனிவாசய்யங்கார் மேனாட்டவருமல்ல; வடநாட்டவருமல்ல; தென்னாட்டுத் திராவிடருமல்ல; ஆரியப் பரம்பரையைச் சேர்ந்த பார்ப்பனர். தனது "இந்திய சரித்திரம்" என்ற நூலிலே அவர் கூறுகின்றார்: "இராமன் காலத்தில் தென் இந்தியா, "தஸ்யூக்கள்" என்ற ராக்ஷசர்களுக்குச் சொந்தமாயிருந்தது. இவர்கள் ஆரிய முனிவர்கள் செய்துவந்த யாகத்தை எதிர்த்தார்கள்" என்று. இதற்கென்ன சொல்லுவது?

இவர்கள் எல்லோரும் மனிதர்கள், மனித அறிவால் ஆராய்ந்து முடிவு செய்தவர்கள் என்று பக்தர்களாலோ, அவர் தம் தலைவர் விநோபாவாலோ சொல்லப் படுமானால், தெய்விகம் முனைந்தெழுந்த வேதங்களிலே இக்கருத்துக்குச் சான்றுகள் உள்ளனவே!

ரிக்வேதம், 10-ம் அதிகாரப் பாட்டொன்றில் கூறுகிறது: 'நம்மைச்சுற்றி நான்கு திசைகளிலும் தஸ்யூக் கூட்டத்தார் இருக்கிறார்களே; அவர்கள் யாகம் செய்வதில்லை. அவர்கள் ஒன்றையுமே நம்புவதில்லை அவர்களது பழக்கவழக்கங்களே வேறாக இருக்கின்றன. அவர்கள் மனிதர்களே அல்ல, ஓ! இந்திரனே! எதிரிகளை அழிப்பவனே! அவர்களைக் கொன்று. தாசா வம்சத்தை அழித்துவிடு!"

இவற்றோடு, எங்கள் பா வே மாணிக்கனார், பி சிதம்பரனார், மறைமலையடிகளார், பூரணலிங்கனார் போன்றோர்களின் கருத்து விளக்கங்களையும்படித்திருந்தால், விநோபாவின் வரலாற்றறிவு "வெட்டிப் பேசவா, ஒட்டிப் பேசவா" என்ற குழப்பம் விட்டு, துணிச்சலோடு ஒட்டிப் பேசவே முனைந்திருக்கும், ஆனால் அவர்தான் இராமாயணத்தை வரலாற்றுக்கு அருகே கொண்டுவரவே அஞ்சுகிறாரே, போகட்டும் அவரது ராமாயண அனுபவத்தையாவது பார்ப்போம்!

—பகணன்.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்—1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 14-12-56 ★ விலை 0-1-6 | இதழ் 23

# கைக்குடையால் கதிரவனை மறைப்போர்!




தேர்தல் பிரசாரத்திற்கென காங்கிரஸ், பெரியாருக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கப் போவதாக வதந்
நாடகத்தை வெறுப்போர் ஆடுகின்ற அரசியல் நாடகம் காணீர்! அற்புத நாடகம் காணீர்!

# மந்திரிகளின் மட்டரகப் பித்தலாட்டம்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர், சேலத்திற்குப் பேச வந்திருப்பதுகுறித்து மகிழ்ச்சியடைகிறேன். இது நமக்கெல்லாம் பரபரப்பான நேரம், குறிப்பாக, அம்மாப்பேட்டைத் தோழர்கள் கழகத்தை வளர்ப்பதிலே பரபரப்பு கொண்டவர்கள். அதற்கு என் நன்றி. அம்மாப்பேட்டைத் தோழர்களின் பரபரப்புக்கு, அடிக்கடி இங்கு காங்கிரஸ் நண்பர்கள் செய்யும் அநாவசியக் கிளர்ச்சிகளும், ஒரு விதத்தில் உதவுகின்றன. எனவே, அந்தக் காங்கிரஸ் நண்பர்களுக்கும் என் நன்றி.

இன்று, தமிழ் நாடெங்கிலும் நமக்கு எதிர்ப்புகள் நிறைந்திருக்கின்றன. எந்தக் கட்சி கூட்டுகின்ற பொதுமேடையிலும் நமக்கு ஏராளமான தாக்குதல்களைக் காண்கிறோம். திருச்சியில் நடந்த தி. மு. க. மாநில மாநாட்டிற்கு முன்பு, நம்மை "பேசத் தகுதியற்றோர்" என எண்ணிவந்த எதிர்க்கட்சிகள், மாநில மாநாட்டிற்குவந்திருந்த மக்கள் திரள் மூலம், நம் செல்வாக்கைத் தெரிந்து கொண்டார்கள். அஞ்சிய சில கட்சிகள், காங்கிரசோடு சேர்ந்துகொண்டு, நம்மை ஒடுக்க வேண்டுமென்று முரசு கொட்டுகிறார்கள்! வளரும் கழகம்தனைக் கண்டு, அச்சம் கொண்டு,ஆச்சாரியாரில்இருந்து காமராசர்வரை; பள்ளிகளோ, நர்சுகளின் கூட்டமோ, கம்பவுண்டர்களின் மாநாடோ, எதுவோ, சென்ற இடமெல்லாம், சொல்லக்கூடாத ஆபாசச் சொற்களால், நம் கழகத்தைத் தூற்றி வருகிறார்கள். காங்கிரஸ் உள்பட, எல்லாக் கட்சிகளுமே, இன்று தி.மு.க. வின் எதிர்ப்பு முன்னணியிலே நின்றிருக்கிறார்கள். கடந்த இரண்டு மாதமாக, நம் மந்திரிகளின் நடமாட்டம் மட்டுமல்லாமல், நாக்குத் துடிப்பும் அதிகமாகி வருகிறது.

நமது மதிப்பிற்குரிய நிதியமைச்சர் சுப்பிரமணியமோசென்றவிடமெல்லாம்,தி.மு.க. மவுண்ட்பாட்டனுக்குத் தந்தியடித்த கட்சி, என்று ஓயாமல்உளறிவருகிறார். மவுண்ட்பாட்டன் இந்தியாவைவிட்டு வெளியேறிய நாள், 1947-ம் ஆண்டு ஆகஸ்ட்-15. ஆனால், தி.மு.க. தோன்றியது 1949-ம் ஆண்டு செப்டம்பர்-17.நாட்டில் மிக அதிகமாக வளர்ந்துவிட்ட தி.மு.க. எப்படியும், தோன்றி இருபதாண்டுகள் ஆகியிருக்கும் என்ற நம்பிக்கையில், அப்படி உளறிவிட்டார் மந்திரி! அருமை அண்ணாவை, நெடுஞ்செழியனை,

## ஈ. வே. கி. சம்பத்து.

கருணாநிதியைப் பார்த்து,ஜரிகைத் தலைப்பாக்களென்றும், ஜஸ்டிஸ் கட்சியினர் என்றும் கூறி வருகிறார்! ஆனால், இன்று ஜரிகைத் தலைப்பாக்கள் எல்லாம் எங்கேயிருக்கின்றன? மூன்று வருடத்திற்கு முன் காங்கிரசிற்கு எதிரியாக விருந்த ராமநாதபுரம் ராஜா; முன்னாள் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்த ஏ. பி. ஷெட்டி; வெள்ளைக்காரனுக்கு யுத்தப் பிரச்சாரகராய் இருந்த பரமேஸ்வரன்: வெள்ளைக்காரனின் சலுகை பெற்று வியாபாரியாய் இருந்த கிருஷ்ணமாச்சாரி; இவர்களையெல்லாம் கொண்டுள்ள காங்கிரசார் நம்மைப்பார்த்து ஏகாதிபத்திய வெறியர்கள் எனக் கூறுகின்றனர்! 1947, 48-ம் ஆண்டு, அண்ணா தன்இதழான "திராவிட நாட்டில்," முழக்கிய, விடுதலை முழக்கத்தை படித்திருந்தால்தெரியும், இவர்களுக்கு!

மக்கள் அனைவரும், நம்மை-நம் கொள்கைகளை — சரிசரியென முழக்கும் நேரத்தில்; காங்கிரசார்; நம் கொள்கைகளைக் குற்றம் சாட்டிக் கூறத் துணிவில்லாமல். தூற்றத் தொடங்கியிருக்கிறார்கள். மாற்றுக் கட்சிகளைப்போல, கொள்கையை விட்டு, மானமிழந்து மன்னிப்புக் கேட்காமல், கொள்கைக்காகப் பாடுபடும் கட்சி தி. மு. க. ஒன்றுதான். காங்கிரசோ, இன்று கவனிப்பாரற்று காட்சி தருகிறது. காமன்வெல்த் வேண்டுமென்று நேரு சொல்ல, வேண்டாமென்று ராஜாஜி சொல்கிறார். இங்கும், காமராசர் கூட்டத்தில் ஒன்று சொன்னால், அதை எதிர்த்து, அடுத்தநாள் காங்கிரஸ் கூட்டத்தில் மாற்றிச் சொல்கிறார்கள் மற்றவர்கள். இப்படியாக, உள்ளுக்குள்ளேயே முரண்பாடு!கொள்கை, லட்சியம் ஏதுமில்லாமல், பதவி ஆசையுள்ள ஒரு கட்சியில்தான் இத்தகைய மாறுபாடுகள் இருக்க முடியும்! நம்மவர் அனைவரும், எங்கும், ஒரே மாதிரிதான் பேசுவார்கள். கருத்திலே மாற்றமிருக்காது. இன்றைக்கு, ஒழுக்கமும், கட்டுப்பாடும் உள்ள தி.மு.க. தான் நாட்டில் நாணயமுடன் நல்ல தொண்டாற்றமுடியும். பழைய காங்கிரஸ்காரர் தவிக்க, புதிய காங்கிரசாருடன் குல்வுகின்ற காங்கிரசு இன்று, மக்கள் பகைவர்களின் புகலிடமாகவும், செல்வர் பலரின் கூடாரமாகவும், கட்டுப்பாடற்ற கட்சியாகவும், கதவும், சுற்றுச் சுவர்களுமில்லாமல் காட்சிதருகிறது!

கடந்த ஐந்தாண்டு காலமாக, புள்ளி விவரத்தோடு சொன்னோம், ஐந்தாண்டுத் திட்டத்தால் நமக்கேதும் பயனில்லையென்று. தமிழ் நாட்டுக்கு முதலில் 400 கோடி கேட்டு, பின்னர் அது 270 ஆகி, முடிவில் 170 கோடி பெற்றபின், பொதுக்கூட்டங்களில் அழுது புலம்பிய மந்திரி சுப்பிரமணியம், இன்று, ஆக்கத் தொழில் பற்றிக் கேட்டால், தனிப்பட்டவன்

(11-ம் பக்கம் பார்க்க)

## எதிரொலி

இந்தியப் பேரரசு 16 கோடிக்கு புதிய வரிகள் போட்டிருக்கிறது.

—செய்தி

11 கோடி ரூபா வரி கொடுக்க வேண்டியவர்கள், கொடுக்காமல் ஏமாற்றிவிட்டு இந்தியாவினின்றும் வெளியேறிவிட்டார்களாமே!

* * *

அவனவன் சொந்தக்காசை லட்சம் லட்சமாகப் பதுக்கி வைத்துக்கொண்டு வெளியே கிளம்பிவிட்டான் பிச்சையெடுக்க!

— 'குத்தூசி''

பெரியாரிடம் சம்பளம் பெற்றுக்கொண்டு, பெரியாரின் "விடுதலை"யிலேயே, பெரியாரைப்பற்றி இப்படி எழுத எவ்வளவு நெஞ்சழுத்தம் வேண்டும்?

* * *

இந்த நாசமாய்ப்போன எலக்ஷன் இருபது வருஷத்துக்கு ஒரு தடவை வந்து தொலையக் கூடாதா?

—'குத்தூசி'

"குடியரசு" கோரியவர்—ஜனநாயக விரும்பி குரல் மாற்றி கத்துகிற இந்த சப்தம், அண்ணன் காதில விழக் கூடாதே!

* * *

பலகாரிய நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் இன்னும் பூர்வாங்க நிலையிலேயே இருக்கிறது.

—மந்திரி, கே. சி. ரெட்டி.

இருக்கட்டும், இருக்கட்டும்! வடநாட்டு மந்திரிகள் தமிழ் நாட்டுக்கு வந்து ஊர் சுற்றும்போது "செய்கிறேன்" என்று சொல்ல ஒன்றும் வேண்டுமல்லவா?

* * *

பாரதநாடு க்ஷேமம் அடைய வேண்டும், தமிழர்கள் என்றுமே குறுகிய புத்தி படைத்தவர்களல்ல.

—காமராஜர்.

தமிழ் நாட்டுக்குத் தனியரசு வேண்டாம், தமிழ் நிலம் வேண்டாம், "தமிழ் நாடு" என்ற பெயர்கூட வேண்டாம் என்பதிலிருந்து அந்தப் புத்தி தெரிகிறதே!

## கமலவேணி—கோபாலசாமி.



சேலம் மாவட்டம், இடைப்பாடி, எக்ஸலெண்ட் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் உரிமையாளர் தோழர், ஏ. கே. கே. இராசமாணிக்கம் அவர்கள் புதல்வி தோழியர், ஆர். கமலவேணிக்கும், தோழர், கே. எல். கோபாலசாமிக்கும் 14—11—56 இடைப்பாடியில் சடங்குகளற்ற திருந்திய திருமணம் நடைபெற்றது. தோழர், மு. சிவரத்தினம் மணத்தை நடத்தி வைத்தார். ஆசிரியர், ப. கண்ணன் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினர். தோழர்கள், இரா. தாண்டவன், ப. இராமலிங்கம், ந. வரதராசன் ஆகியோர், திருந்திய மணச் சிறப்பு குறித்தும், மணமக்களை வாழ்த்தியும் சொற்பொழிவாற்றினர். "பகுத்தறிவு" வளர்ச்சிக்கென தோழர், ஏ. கே. கே. இராசமாணிக்கம் ரு. 10 நன்கொடை நல்கினர் நன்றியுடன் பெற்றுக்கொண்டோம். புதுமணம்புணர்ந்து மனையறம் ஏற்கும் இளம் மணமக்களுக்கு எமது நெஞ்சுகந்த வாழ்த்துக்கள்!


# பகுத்தறிவு பொங்கல் மலர்.

- சிந்தனைக்கு நல் விருந்து!
- மடமைக்கோர் மாமருந்து!
- செந்தமிழும் பகுத்தறிவும் செழிக்கச் செய்யும், கதைகள், கவிதைகள், கட்டுரைகள் அத்தனையும் கொம்புத் தேன்!
- பேனா மன்னர்கள் பலரின் எழுத்தோவியம், மலரை மணக்கச் செய்கிறது!

**விலை 0—8—0 தான்!**

**விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு இப்போதே சொல்லி விடுங்கள்.**

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

இதயம்

மலர் 6 | சேலம் 14—12—56 | இதழ் 23

# அறிஞர் அம்பேத்கார்.

சமுதாயப் புரட்சிவீரர்; தலைசிறந்த பகுத்தறிவாளர்; தாழ்த்தப்பட்டோரின் தனிப் பெருந் தலைவர் அறிஞர் அம்பேத்கார் அவர்கள் 6—12—56 காலையில், புதுடெல்லியில் மரணமடைந்தார். செய்தியறிந்த நாம் திடுக்கிட்டோம்; திகைத்தோம்; செயலற்று—நினைவற்று நின்றோம்.

அறிஞர் அம்பேத்காரின் மறைவு பகுத்தறிவாளர்களுக்குப் பெரும் இழப்பு; ஈடுசெய்ய முடியாத நட்டம். அவர் ஐந்துகோடி ஆதித்திராவிட மக்களின் தலைவராக மட்டுமில்லை: தன்மானம், தன்னுணர்வு, பகுத்தறிவு பூர்வமான சமுதாய முன்னேற்றம் நாடுகின்ற பலகோடி மக்களின் மதிப்பினைப் பெற்ற மாபெரும் தலைவராக விளங்கினார்.

அவரது எதிர்பாராத மரணத்தில்—இரவுபடுக்கச் சென்றவர் படுக்கையிலேயே இறந்துகிடந்த சோக நிகழ்ச்சியில்—மர்மம் இருக்குமென சிலர் ஐயுறுகின்றனர். அது, ஆய்வுக்குரிய ஒன்று.

எனினும் இறந்தவர் பிழைத்தெழுந்து நம்முடன் நடமாடப் போவதில்லை; நாட்டின் பலவகைப் பிரச்சினைகளிலே வழிகாட்டியாக நல்லுரை வழங்கப் போவதில்லை. எதிர்ப்புக்கஞ்சாது கொள்கை முழக்கமிடும் அந்தக் கோமகனை இனி நாம் காணப்போவதில்லை. அம் மேதையின் அரிய உழைப்பும்; எழுத்தும், பேச்சுமான நூல்களுமே இனி நமக்கு வழிகாட்டுபவை.

இந்துதர்மம், இந்துமதம் என்று கூறப்படுகின்ற இனவெறிக் கோட்பாடுகளின் நிழலிலே, ஆரியம் வளர்த்த தீண்டாமைத் தொழுநோயைப் போக்கிட அறிஞர் அம்பேத்கார் ஆற்றிய பணிகள் என்றும், எவராலும் மறக்க முடியாதவை. இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றிலே இடம்பெறத் தக்கவை.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சினையில் காந்தியாரின்—காங்கிரஸ்காரர்களின் கண்துடைப்பு வேலைகளை ஆதியிலிருந்தே எதிர்த்துவந்தவர். மத ஒழிப்பு, சாதி ஒழிப்பு, சாஸ்திர—புராண—இதிகாசப் புரட்டுகள் ஒழிப்பு ஆகியன நிகழ்ந்தாலொழிய தீண்டாமை ஒழியாதென்பதை ஆணித்தரமாக விளக்கிய வீரர்.

இந்துமதக் கொடுமைக்கு ஆற்றாது மனம் நொந்து "நான் இந்துவாகப் பிறந்தாலும் இந்துவாக இறக்கமாட்டேன்" என்றார். அவ்வாறே தன் மனைவி மக்களோடு, சுமார் 3 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்துக்கொண்டு, இந்துமதத்தை உதறிவிட்டு புத்த நெறியாளராக மாறினார் சென்ற திங்கள். பவுத்தராகவே இறந்தார். இறந்து சவ அடக்கத்தின் சமயத்திலே 50 ஆயிரம் பேரை புத்தநெறிக்கு ஈர்த்துள்ளார்! அம்பேத்காரின் பேச்சும், எழுத்தும் அறிவியல்—அனுபவ பூர்வமானவை; பகுத்தறிவு மணக்கும் பண்போவியங்கள்; சமுதாயப் புரட்சிக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்கள்.

அவர் சிறந்த சட்டநிபுணர்; இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி; இணையற்ற சிந்தனையாளர்; டாக்டர் லட்சுமி என்ற பார்ப்பன மாதைக் கலப்புமணம் புரிந்துகொண்டு, சபிதா தேவியாக்கி புத்தநெறியை மேற்கொண்ட புனிதர்; உலகமேதை; அவரது வாழ்வும், வாக்கும் மதத்தால், அரசியலால், பழமைப் பற்றுக் கோடுகளால் அடிமைப் பட்டுக்கிடக்கும் கோடிக்கணக்கான அழுத்தப்பட்ட மக்களுக்கு அறிவொளி நல்கவேண்டும்! வாழ்விலே புதுமைபெற வேண்டும்!

அறிஞர் அம்பேத்கார் மறைந்துவிட்டார். கண் கலங்குகிறோம்; அனுதாபம் தெரிவிக்கிறோம்; இத்தோடு நின்றுவிடாமல், அவரது சமுதாயப்புரட்சிக் கருத்துக்களை ஏற்போம்; சாதிமத பேதமற்ற பகுத்தறிவு பூர்வமான சமதர்ம சமுதாயத்தை அமைப்போம் வாரீர்!

—ப. கண்ணன்.

தில்லை வள்ளுவர் நாடக மன்றம்
சென்னையில் நடத்தப்போகும்
அழகுதமிழ் நாடகம்.
**கன்னியின் சபதம்.**
கதை, வசனம்: ப. கண்ணன்.
விரைவில் எதிர்பாருங்கள்.
கோவில். சு. இராசன்,
செயலாளர்

# நிதியமைச்சரே! திரு. வி. க. வின் அறிவுரை கேளும்.

"இளந்தமிழன்"

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"பரந்த நோக்குடன் காங்கிரசில் பாடுபட்டு உழைத்த எனது நண்பர் பெரியார் நாயசர்மியும் விலகினர். ஏன்? இதே காரணங்களால்தான். வ. உ. சிதம்பரனாரும் வெளியேறினார். ஏன்? உரிமை, உரிமை மறுக்கப்பட்டது. பிரிந்தோம்......

"காங்கிரஸ் பதவி வேட்டையாடும் சுயநலவாதிகளின் பிடியிலே சிக்கிக் கொண்டுள்ளது. காங்கிரஸ் பாசிசப் போக்குடன் செல்கிறதா, இல்லையா என்று தமிழ்நாடு, காங்கிரஸ் தலைவரையே கேட்கிறேன். இல்லையென்று திரு. காமராஜர் கூறுவாரா?

"சமதர்மந்தான் காங்கிரஸ் கொள்கை" என்று வாய்தவறி காமராஜ் அவர்கள் கூறிவிட்டார். அது அல்ல, அல்ல, அல்ல என்று நான் கூறுகிறேன். வெகு சுலபமாகச் சொல்லிவிட்டார் இப்படி. இவ்வளவு வயதான எனது அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறுகிறேன்: காங்கிரஸ் சமதர்மத்தை நிலைநாட்டுவது எவ்வளவு கடினமென்று.

வ. உ. சி. அவர்கள் சைவர், ஆனால் வடநாட்டுச் சைவத்தைப் பின்பற்றுகின்ற திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய மடத்தார் போற்றுகின்ற சைவமல்ல. சாதி சமய வழக்குகள் தென்னாட்டுச் சைவத்தில் இல்லை; எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு, எல்லோரும் ஒரு குலம் என்பதே வ. உ. சி. யின் கொள்கை, தென்னாட்டு மகாஜன சபை உண்மையாக வடநாட்டுக் காங்கிரசை எதிர்ப்பதற்காக ஏற்பட்டது. ஆனால், அது இன்றைக்கு அக் கொள்கைக்கு முரண்பட்டிருக்கிறது.

"வடநாட்டாரால் திணிக்கப்பட்ட போலித்தியாகம் தமிழர்களின் நாகரிகத்தையும் கலைப்பண்பையும் பாழ்படுத்தி விட்டது.

"வ. உ. சி. யின் தொண்டினைப் பற்றிப் பேசப் பேச நம் நாட்டில் தன்னம்பிக்கை யுண்டாகும். அப்போது நேருவின் கண்காணிப்பு தேவையில்லை......

"தமிழ்நாடு தமிழருக்கானால், ஆந்திர நாடு பிரியும், மலையாளநாடு பிரியும், கன்னட நாடு பிரியும், எல்லாம் தனித்தனி...பிரிந்த சில மாதத்திற்குள் என்ன ஏற்படும்?

"ஆந்திரர்கள் அச்ச தெலுங்கு காவல (சுத்த தெலுங்கு வேண்டும்) என்பார்கள். மலையாளிகளும் அச்ச மலையாளம் வேண்டும் என்பார்கள். கன்னடியர்களும் அப்படியே. அப்பொழுது சுத்தத் தெலுங்கில் 100-க்கு 90 தமிழ்ச் சொற்களாக இருக்கும். சுத்த மலையாளத்தில் 100-க்கு 95 தமிழாகும். அப்படியே கன்னடத்திலும் அமையும். அதுபோது மொழியால் எல்லோரும் ஓர் இனம் என்பதை உணர்வார்கள். இன்பத்தால் ஒன்றென்று அணைவர்.

"எனவே இப்பொழுது தமிழ்நாடு, ஆந்திர நாடு, மலையாள நாடு; அதற்குப் பிறகு என்ன?......

"ஆம்! அடுத்து, திராவிடநாடு திராவிடருக்கே ஆகும்.

"இப்பொழுது வடவேங்கடம் எல்லை. பிறகு இன்னும் விரியும், மராட்டியரும் கண்விழிப்பர். அவர்களும் மொழியால் திராவிடர், இனத்தால் திராவிடர் என்பதை உணர்வர்...

"அப்போது நமக்கு வடக்கு எல்லை வடவேங்கடம் அல்ல, விந்திய மலையாக விளங்கும். இதுதான் முடிவு தமிழ்நாடு தமிழருக்கே! திராவிடநாடு திராவிடருக்கே என்பது.

"இதை அடைவதுதான் தமிழனுக்குப் பெருமை வடநாட்டுப் பாசிசத்தைத் தமிழன் இன்று தாங்கி, திணற வேண்டியிருக்கின்றது — இதையே நான் கடலூர் மாநாட்டிலும் கூறினேன்.

"வெள்ளையனுக்குத் துணையாக இருந்து கொண்டு வடநாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப் படைக்கின்றது. அதற்கு இடம் தராதே, தராதே, தராதே! இந்த வடநாட்டுப் பாசிசத்தை ஒழிப்பதுதான், எந்தக் கழகமாய் இருந்தாலும், அக் கழகத்தின் முதல் வேலையாக இருக்க வேண்டும்.

"தமிழ் மக்கள் உரிமை உணர்வு கொண்டவர்கள். பாசிசம் எந்த வடிவிலே வந்தாலும் விரட்டத்தானே செய்வர்? எனவே ஜனநாயகம் தழைக்க சமதர்மம்—நம் நாட்டு விடுதலைக்குப் பாடுபடுவதே நமது கடமையாகும்! ஓங்குக விடுதலை!"

திருச்சி மாநாட்டு முழக்கங்கள்கூட இதற்கு ஈடாகமாட்டா. இத்தகு தொண்டலின் பெயரால் நூல்நிலையம் நிறுவியவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

இப்பேச்சு தி. மு. க. கூட்டம் எதிலும் திரு. வி. க. பேசியதல்ல. 9-11-47 ஞாயிறன்று சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் இந்த உரை அவரால் நிகழ்த்தப் பட்டது. அதுவும் தமிழரசுக் கழக மாநாட்டில்! வ. உ. சிதம்பரனாரின் படத்தைத் திறந்துவைத்த அண்ணல் திரு. வி. கலியாணசுந்தரனார், அன்று காட்டியுள்ள வழியைப் பின்பற்றி நடப்போமாக! கொங்குநாட்டு அமைச்சர் உள்ளம் உண்மையுணர்ந்து —பொய்மறந்து சாந்தி அடைவதாக!


பகுத்தறிவு.
வார இதழ்.
கையொப்பத்தொகை
ஆண்டு 1-க்கு 5-0-0
ஆறு மாதங்கள் 2-8-0
தனிப்படி 0-1-6
விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை.
பகுத்தறிவு அலுவலகம், சேலம்-1.




[முன் இதழ் தொடர்ச்சி]

## காட்சி 23.

(வித்யாவதி வீடு. ஏடும் எழுத்தாணியும் வைத்து எழுதிக் கொண்டிருக்கிறான் சந்திரவர்மன். பிச்சையும், வித்யாவதியும் நிற்கின்றனர்)

வித்யா:- மாள்வதற்குப் பாடினீர்கள்; வாழ்வதற்கு வழிகாட்டினார் மன்னவர்! எத்தகைய பெருந்தகைமை! தம்பியின் மீதும், தமிழ்மீதும் எவ்வளவு பாசம்! ஐயோ! இன்னுமா மாறவில்லை உங்கள் மனம்?

சந்தி:- மாறிவிட்டது வித்யாவதி! மனம் மட்டுமல்ல; திட்டமே மாறிவிட்டது.

வித்யா:- விளங்கவில்லையே சுவாமி!

சந்தி:- போகப் போக விளங்கும்.

பச்சை:- வரவர விளங்காது.

சந்தி:- பச்சை! நீயுமா எனக்கு எதிர்ப்பு?

வித்யா:- நான் தங்களை எதிர்க்கவில்லை சுவாமி! நமது காதல் மாளிகையின் இன்ப வாழ்வுக்கு பங்கம் வரக்கூடாதே என்று கவலைப்படுகிறேன்.

சந்தி:- அப்படியானால், விளக்கம் கேட்காமல் என்னோடு ஒத்துழைக்கவேண்டும். அப்பொழுதுதான் நிலைத்திருக்கும் அது!

வித்யா:- கட்டளைப்படி நடக்கிறேன் சுவாமி!

வித்யா:- இதோ, இந்தப் பைந்தமிழ்ப் பாடல்களை இரவுதோறும் நீ பாடவேண்டும். நகர் சோதனைக்கு வரும் மன்னன் செவியில், இது மதுரமாகப் பாயவேண்டும். தமிழ்ச் சுவையிலே சொக்கிப்போய், தேனையருந்த வரும் அந்தப் பொன் வண்டு என்ன சொல்லுகிறாய்?

வித்யா:- பாடுகிறேன் சுவாமி!

(கொடுக்க, ஓலையை வாங்கி வீணையில் இசைத்துப் பாடுகிறாள் வித்யாவதி)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தன மென்றாரோ தடவினார்.......

விக்ர:- (வந்து) சபாஷ்! அருமையான பாடல்! அற்புதமான கற்பனை!

சந்தி:- வாரும் சேனாபதியாரே! வாரும். உட்காரும்.

விக்ர:- வித்யாவதி; கலாவதி!

சந்தி:- கலாவதி மட்டுமல்ல விவேகவதி!

பச்சை:- கலையும் விவேகமுந்தானா? அற்புதமான கட்டழகி!

வித்யா:- (சினந்து) பச்சை! மூடு வாயை.

பச்சை:- மூடிகிட்டேன். (மூடுகிறான்)

சந்தி:- சேனாபதியாரே! மகாராணியின் பிரிவுக்குப்பின் மன்னவர் நிலை எப்படி?

விக்ர:- (வித்யாவதியைப் பார்த்தபடி) ஒரே குழப்பம! சாதகமா? பாதகமா? ஒண்ணும் புரியலே!

சந்தி:- அப்படியானால் ஆட்சி?

விக்ர:- அமைச்சரின் சமயோசித புத்திதான் ஆட்சியை நடத்துகிறது.

சந்தி:- அவரை மடக்க வழியில்லையா? எப்படியாவது ஒழிக்கவேண்டுமே!...... சேனாபதியாரே! மந்திரியார்க்கும் மகாராணிக்கும் கள்ள முடிச்சுப் போட்டு,மன்னரின் கருத்தைக் குழப்பினால்......ஒருக்கால்......

(வெறுப்போடு எழுந்து, உள்ளே போகிறாள் வித்யாவதி)

விக்ர:- சபாஷ்! அற்புதமான யோசனை! ஆமாம், வித்யாவதி ஏன் போகிறாள்?

சந்தி:- வேலையிருக்கும்.

பச்சை:- (வாயை மூடியபடியே) நான் திறக்கட்டுமா?

விக்ர:- திறப்பா திற நீ மூடுவதும் திறப்பதும் மட்டுமென்ன; சாவதும் பிழைப்பதும்கூட ஒன்றுதான்!

பச்சை:- சேனாபதியாரே! அவ்வளவு கேவலமா நெனைச்சுடாதிங்க! தோ பாருங்க, இது என்ன தெரியுமா? மகாராஜாவிடம் அரம்பாடியாம் பெற்ற பரிசு.

(முத்துமாலையைக் காட்டுகிறான் பெருமையோடு தலையிலடித்துக் கொள்கிறான் சந்திரவர்மன்)

விக்ர:- மன்னிக்க வேண்டும். புலவரே! மன்னிக்கவேண்டும்

(எரிச்சலோடு அவன் தலையிலடிக்கிறான் சேனாபதி விழிக்கிறான் பச்சை)

## காட்சி 24.

(பாதாளச் சிறை. மகாராணி சங்காவும், நிருபதுங்கனும். சோகித்துப் பாடுகிறார் தேவியார்)

நிருப:- அம்மா! எத்தனை நாளைக்கம்மா இந்த நரக வேதனையிலே கிடப்பது? நமக்கு விடுதலையே கிடையாதா?

சங்கா:- அரைக்க அரைக்க சந்தனத்தின் மணம் குன்றாதடா மகனே! துன்பத்தைப் பொறுக்கும் சக்தியுள்ளவர்கள்தான், இன்பத்தை பெறத் தகுதியுள்ளவர்கள்!

நிருப:- நாம் என்ன குற்றம் செய்திட்டோம் தாயே, இந்தக் கொடுமை அனுபவிக்க?

சங்கா:- நாம் குற்றமற்றவர்கள் என்பதை உலகறியச் செய்யக் காலம் வருமடா, நிருபதுங்கா! அதுவரை பொறுத்திருக்கத்தான் வேண்டும்.

நிருப:- பொறுமை! பொறுமை! எத்தனை காலத்திற்கம்மா பொறுமை? நினைக்க நினைக்கக் குமுறுகின்றது என் மனம்!

சங்கா:- பகருத காரியம் சிதறுது நிருபதுங்கா!

நிருப:- தத்துவம் மேலாக இருக்கலாம்; மெய்யாக இருக்கலாம்; நிலைமை......

சங்கா:- பாதகமில்லையடா! நம்மீது பற்றுள்ளவர்கள் நாட்டில் யாருமில்லையென்றா நினைக்கிறாய்?

நிருப:- வெறும் இரக்கமும், அனுதாபமும் என்னம்மா செய்துவிடும்?

சங்கா:- என்ன செய்துவிடுமா? அனுதாபமும், இரக்கமும் நீதி நெறியைச் சார்ந்து நிற்கும்; கொடுமை மிகுந்தால் பொங்கியெழுந்து அறிவுறுத்தும் — மிஞ்சினால் போராடவும் சித்தமாகும். மகனே! பொறுத்தவர் பூமியாள்வார் என்பது பொன்னான மொழியடா?

நிருப:- (சலிப்போடு) என்னவோ, எப்படியோ, எத்தனை நாளைக்கோ? எனக்கொன்றுமே பிடிக்கவில்லை!

(வேறுபக்கம் போகிறான்)

## காட்சி 25.

(வித்யாவதி வீடு. நள்ளிரவு. வீணையோடு இசைத்துப் பாடுகிறாள் பாட்டினை)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென்றாரோ தடவினர்—பைந்தமிழை
ஆய்கின்ற கோனந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மேல்.

(மாறுவேடத்தில் நகர்வலம் வந்த மன்னன், வாசலினின்றுக் கேட்டுச் சுவைத்து வசமிழக்கின்றான்)

நந்தி:- ஆஃகா! என்ன கற்பனை! என்ன நயம்! பைந்தமிழால் பாடுகின்றாளே என்னை! இன்ப வெறி ஏறுகின்றதே இதயத்தில்! சீலாதித்தரே! வாரும் உள்ளே செல்வோம்.

சீலா:- (தடுத்து) வேண்டாம். குற்றங் குறைகளைக் கண்டறிய வந்தோம் குற்றவாளிகளாக வேண்டாம்.

நந்தி:- கன்னித் தமிழால் கனிந்துருகப் பாடுகின்றாள்! இதனைக் கேட்டு ரசிப்பதா குற்றம்?

சீலா:- இது கணிகையின் வீடு! நள்ளிரவு நேரத்தில், காவலன் நுழைவது கேவலம். முறையற்ற செயல். மன்னவரே! பதற வேண்டாம்! நாளை சபையிலே அழைத்துப் பாடச்செய்வோம்.

நந்தி:- (யோசித்து) உம்....? நன்று. அவசியம் பாடச் செய்யவேண்டும். அதுவரை.......

சீலா:- யாரோ வருகிறார்கள். நாம் போய் விடுவோம்.

(சந்திரவர்மன் வந்து அவர்கள் செல்வதைப் பார்க்கிறான்)

சந்தி:- (மகிழ்ந்து) நாளை சபையிலே பாடச் செய்வோம். (சிரித்து) விளக்கிலே விழுந்தது விட்டில் பூச்சி!

வித்யா:- எங்கே? எப்பொழுது?

சந்தி:- இங்கேயே, இப்பொழுதே, மன்னன் கேட்டு மனம் சொக்கினன் உன் பாட்டில்! நாளை அரசவையிலே பாட அழைப்பு வரும் உனக்கு.

வித்யா:- என் பாக்யம்.

சந்தி:- உன் பாக்யம் மட்டுமல்ல, இந்த அழைப்பிலேதான் இருக்கிறது எனது குறிக்கோளின் வெற்றியும்.

வித்யா:- எப்படி சுவாமி?

சந்தி:- வாடீ சொல்கிறேன் என் வண்ணத் தாமரையே!

(அனைத்தவண்ணம், அழைத்துச்சென்று உட்கார்ந்து சொல்லத் தொடங்கல்)

## காட்சி 26.

(சீலாதித்தர் வீடு. சேனுபதியும் அவரும் பேசியிருத்தல்)

சீலா:- என்றேனும் ஒருநாள், மன்னன் மகன் மன்னனாக வேண்டியவன் தானே?

விக்ர:- இந்த நேரத்தில் அதைத்தான் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?

சீலா:- ஏன்? ஏதாவது புரட்சி பொங்குமென்ற சந்தேகத்திற்கு இடமிருக்கிறதா?

விக்ர:- (துணுக்குற்று) இல்லை, இல்லை! உலகத்தில் மானிட வாழ்க்கையே ஒரு அநித்யமாயிற்றே; அதற்குச் சொன்னேன.

சீலா:- விக்ரமகேசரி! புன்னகையை வெறுக்கும் காதலன்; புலாலை வெறுக்கும் வரிப்புலி, வேதாந்தம் பேசும் சேனுபதி, மக்களின் மதிப்பிலே மிகமிக மட்டரகம்!

விக்ர:- (திணறி) உம்.... ஆமாம், ஆமாம். மன்னிக்கவேண்டும்.

சீலா:- போகட்டும். பாதாளச் சிறையில் மகாராணியும், இளவரசரும் எப்படியிருக்கிறார்கள்?

விக்ர:- நான் பார்க்கவில்லையே!

சீலா:- நான் பார்க்கவேண்டும்! விக்ரமகேசரி! மன்னருக்குத் தெரியாமல் சென்றுவர ஏற்பாடு செய்ய முடியுமா? இதனை, நீர் எனக்குச் செய்த உதவியாகக் கருதுவேன்.

விக்ர:- (யோசித்து) ஓ! ... செய்கிறேன். சந்தர்ப்பம் வரட்டும், நிச்சயமாகச் செய்கிறேன்.

சீலா:- மிக்க நன்றி.

(கைகுலுக்கல்)

## காட்சி 27.

(அரசவை. வித்யாவதி பாடுகிருள்)

செந்தழலின் சாற்றைப் பிழிந்து....................

.............................................................

நந்தி:- (மகிழ்ந்து) ஆஃகா! பேரானந்தம்! பாடு, இன்னும் பாடு!

திருந்தேர் புகழ்நந்தி தேசபண்டாரி வெற்பில்
மருந்தேர் குழலிக்குக் கார்முந்துமாகில் மருடரத்னப்
பரித்தேரும் பாகனும் என்பட்டவோ எனபங்கயக்கை
நெரித்தே வயிற்றில் வைத்தே நிற்பளே வஞ்சி நெஞ்சுலர்ந்தே

நந்தி:- பாடு இன்னும். இன்னும் பாடு!

வித்யா:- மன்னிக்கவேண்டும் மன்னர் பெரும! கலம்பகப் பாடல்கள் நூறில்; நான் கற்றவை இரண்டுதான்.

நந்தி:- (ஆவலோடு) கலம்பகமா? நூறு பாடல்களா? ஆஃகா! எங்கே அவை? எங்கே? யார் பாடியவை?

வித்யா:- ஏழிசை வல்லபர், செந்தமிழ்ப் பாவலர்.......

நந்தி:- யார் அவர்? எங்கே இருக்கிறார்?

வித்யா:- மன்னர் பெரும! பெயரைச் சொல்வதற்கு........

நந்தி:- ஏன் தயக்கம்?

வித்யா:- பாடியவரை தாங்கள் வெறுக்க நேருமோ என்று நான் அஞ்சுகிறேன்.

நந்தி:- என்பால் அன்புகொண்டு, கலம்பகம் பாடிய பைந்தமிழ்ப் பாவலனையா வெறுப்பேன்? ஒருக்காலுமில்லை. பரிசு வழங்குவேன்; பாராட்டுவேன்!

வித்யா:- மகிழ்ச்சி மன்னவ! பாடியவர் தங்கள் சகோதரர் சந்திரவர்மன்!

நந்தி:- (வியந்து) ஆ! என் தம்பியா? சந்திரவர்மனு என்மீது கலம்பகம் பாடியிருக்கிறான்? தன் தவற்றை உணர்ந்துவிட்டான் போலும்! நன்று. அவனது மனமாற்றத்திற்கு மகிழ்ச்சியடைகிறேன். பெண்ணே! கலம்பகம் முழுமையும் அவன் வாயாரப் பாட, நான் செவியாரக் கேட்கவேண்டுமே. கிடைக்குமா பாக்கியம்?

(வளரும்)

இலக்கியச் சோலையிலே

# இளங்கோ கண்ட கோவலன்.

ஏ. பெரியசாமி.

கதையோ, காப்பியமோ, நாடகமோ, எதுவானாலும் சரி, அதிலுள்ள ஒவ்வொரு மாந்தருடைய குணங்களும் எந்த அளவுக்கு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டிருக்கிறதோ, அதைப் பொறுத்துத்தான் அதனுடைய வெற்றியும், அமையும். அதாவது, ஆசிரியர் உருவாக்கும் ஒவ்வொரு மாந்தருடைய குணநலன்களும் முதலிலிருந்து முடிவு வரையில் ஒரே முறையில் அமைய வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட குணநலன் கொண்ட மாந்தரைப் படைக்கும் பொழுது, அந்த மாந்தருடைய பேச்சும், செயலும் அவனுடைய குணத்திற்கேற்றவாறு இருத்தல் வேண்டும். முட்டாள் என்றால் அவன் இறுதிவரை முட்டாளாகவே காட்டப்பட வேண்டும். அவனுடைய பேச்சுக்களும், செயல்களும் முட்டாள்தனமானதாகவே அமைக்கப்படல் வேண்டும். மாறாக, ஆசிரியர் ஒருவனை முட்டாள் என்று மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்திவிட்டு, பிறகு அவன் பேசும் பேச்சுகள் அறிவோடு கூடியவையாக இருப்பது போன்றும், அவனுடைய செயல்களில் அறிவு சுடர் விடுவது போலவும் எழுதிக்கொண்டு போனால் அது எப்படி பொருத்த முடையதாகும்? 'படிக்கத் தெரியாதவன் கடிதமெழுதினான்' என்பது எவ்வளவு முரண்பட்ட கருத்து!

இதுமட்டுமின்றி, ஆசிரியர் தான் அந்த குறிப்பிட்ட மாந்தரை எந்த சூழ்நிலையில் உலவ விட்டிருக்கிறோம் என்பதையும் உணர்ந்து எழுதுதல் வேண்டும். 'அன்பான வரவேற்பு' என்பதற்கு "WARM WELCOME" (வெப்பமான வரவேற்பு) என்றிருப்பதைப் படித்த தமிழனொருவன், அதையே தமிழ் நாட்டிற்கும் பொருத்தி, "வெப்பமான வரவேற்பு" என்றோ, "வெப்பமான உள்ளத்துடன் வரவேற்றான்" என்று எழுதினால் அது எவ்வளவு நகைப்புக்கிடமாகும்? குளிர் நாட்டைச் சேர்ந்த ஆங்கிலேயர்களுக்கு, 'வெப்பம்' மகிழ்ச்சி தருவதால் அவர்களுடைய பேச்சில் 'வெப்பமே' மகிழ்ச்சிக்குப் பதிலாக நிற்கிறது. அதேபோல், வெப்பமிகுந்த தமிழ் நாட்டில் 'குளிர்ந்த உள்ளம்' என்ற சொற்றொடர் பயன்படுத்தப் படுவதைப் பாருங்கள். 'வெப்பம், குளிர்' என்ற இரு சொற்களும் முறையே ஆங்கில நாட்டிலும், தமிழ் நாட்டிலும் ஒரே பொருளை குறிக்கின்ற போதிலும், இரண்டு சொற்களையும் சூழ்நிலைக்கு ஒவ்வாத வகையில் மாற்றியமைத்தால் அதன் பொருள் விரும்பத்தகாததாகப் போய்விடுகிறது.

இந்த அடிப்படை உண்மைகளை எல்லோருமே அறிவர். ஆனால், இவ்வுண்மைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு, அதன்படி எழுதுவதில்தான் ஒரு ஆசிரியருடைய தனிப்பட்டத் திறமை மேலோங்குகிறது. இவ்வகையில் ஒவ்வொரு மாந்தரையுந்தான் எடுத்துக் கொண்டதற்கேற்ப வெற்றிகரமாக உருவாக்கி, அவர்களுடைய தன்மைக்கும், அவர்கள் வாழும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில், அவர்களது சொல்லையும், செயலையும் அமைப்பதில் சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகள் மிக்கத் திறம் படைத்தவர் எனலாம்.

சிலப்பதிகாரத்தின் ஒரு முக்கிய மாந்தனை கோவலனே இளங்கோவின் திறமைக்கு ஒரு எடுத்துக் காட்டாவான். ஒரே ஒரு சான்றை வைத்துக்கொண்டு இவ்வுண்மையை விளக்கிவிடலாம்.

புகார்க் காண்டம்—மனையறம் படுத்த காதை—கோவலனும், கண்ணகியும் நடத்தும் காதல் வாழ்விற்கு ஒரு விளக்கம்.

எழுநிலை மாடத்தின் இடை நிலை; மாசற்ற மணத்துடன் கூடி வீசுகின்றது தென்றல்; நிலா முற்றத்தை அடைகின்றனர் கோவலனும், கண்ணகியும். தனித்திருக்கும் அவர்களது தாரும், மாலையும் தங்களை மறந்து, ஒன்றோடொன்று மயங்குகின்றன. அவ்வமயம், தீராக் காதல் கொண்ட கோவலன் அத்தேன் மொழியாளின் நுதல், புருவம், கண், இடை, நடை, சொல் முதலியவற்றைப் பொருந்திய உவமைகளாற் புனைந்துரைக்கின்றான்.

(அடுத்த இதழில் முடிவுறும்)


வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037—38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

# கேள்விக்கணைகள் ? "கடயத்தான்"

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● ஆர் எம். பி. பண்பரசன்
நெ. 82 தண்டலம், கோவூர்,
பூனமல்லி (வழி)

● ஆர். எம். பி. பண்பரசன், கோவூர்

கே: பணம், காதல், கட்சி, பாசம், ஆட்சி இவைகளில் எதைக் கைக் கொள்ள வேண்டும்?

ப: அறிவைக் கொல்லாத வகையில் எல்லாவற்றையும் அளவோடு கைக்கொள்ள வேண்டும்.

* * *

கே: தேர்தலில் ஏன் நிற்கிறீர்கள்?

ப: ஜனநாயகம் ஏன் வந்தது?

நா. ஐயனாரப்பன், திருச்செங்கோடு.

கே: தி. க., தி. மு. க. இரண்டிற்கும் வித்தியாசம் என்ன?

ப: தி. க. மாற்றானுக்கு வேட்டி கட்டுவது; தி. மு. க. தனக்கென கட்டி தன்மானம் காப்பது.

* * *

கே: ஒருவன் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பகுத்தறிவை வளர்க்க வேண்டுமென்று துடிக்கிறான். ஆனால் தொழிலில் ஆளும் கட்சியாரிடம் சிக்கி அல்லற்படுகிறான், அவன் கனவை நனவாக்க என்ன வழி?

ப: அடக்கமாக கழக இதழ்களைப் படித்து, அன்பாக எவரிடமும் பேசி, அமைதியாகக் கொள்கையைக் கடைப்பிடிப்பின் வெற்றி பெறலாம்.

கே: சோமசுந்தரம், கோயம்புத்தூர்.

கே: புதியவரான கவர்னர் ஜாதியை பெரியார் வரவேற்கிறாரா, எதிர்ப்பு செய்கிறாரா?

ப: காமராஜர் எதைச் சொல்லுகிறாரோ அதைச் செய்வார்.

* * *

கே: பெரியார் கோயில் சென்று கடவுள் வழிபாடு செய்ய ஒப்புவிட்டதாக குன்றக் குடியார் சொல்லுகிறாரே! உண்மையா?

ப: பெரியார் மறுக்கவில்லை. ஒருக்கால் தேர்தலுக்காக காமராஜர் அந்த வேஷம் போடச் சொன்னாரோ, என்னவோ.

பி. ஏ. காவேரி, சின்னப்பம்பட்டி.

கே: பெண் கர்ப்பவதியாக, கடவுள் கருணை செய்வார் என்கிறார்களே; அவர்களை என்னவென்று சொல்லுவது?

ப: "டாபர் வேலை விரும்புவோர்" என்று கூறலாம்.

இல. வெங்கட்ராமன், முல்லைவாடி.

கே; திராவிடக் கூட்டாட்சியில் மத்திய அரசாங்கம் என்ற அமைப்பு இருக்குமா? அதற்கு என்னென்ன அதிகாரங்கள் இருக்கும்?

ப: திராவிட மத்திய சர்க்கார் நிச்சயம் இருக்கும். பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு போன்றவை அதனிடம் இருக்கலாம்.

கே. சுப்ரமணியம், காரமடை.

உண்மையான கற்புக்காரி எப்படி இருக்கவேண்டும்.

ப: கற்ற நன்னெறி வழுவாமல் கணவனோடு ஒத்து வாழ்பவராக இருக்கவேண்டும்.

# முன்னேற்றப் பாதையிலே

## மதுரை.

தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டம், 15—12—56 சனி மாலை 7-மணிக்கு தமுக்கம் மைதானம் திறந்தவெளி அரங்கில் இசை முரசு, நாகூர் அனிபா நாட்டுப் பண்பாடுவார். புரட்சி நடிகர், எம். ஜி. இராமச்சந்திரன் "நாடும் நடிகர்களும்" என்பது பற்றியும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் "வள்ளுவர் காட்டும் அரசியல் நெறி" என்பது பற்றியும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவர். நன்கொடை ரூ. 1, அணா 8.

—நகர் தி. மு. க. மதுரை.

## சேலம்.

சே. மா. தி மு. கழகக் கூட்டம் 17—12—56 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு சேலம், வெங்கடப்ப செட்டியார் ரோட்டிலுள்ள (சென்ட்ரல் டாக்கீசிற்கு எதிரில்) மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறும். பொருள்:—
1. தொகுதிக் குழுக்கள் அமைத்தல்.
2. தேர்தல் சம்பந்தமான விஷயங்கள்.

—ஜி. பி. சோமசுந்தரம், செயலாளர்.

தேர்தல் நிதிக்கு, சேலம் தி. மு. க. மாணவர் கிளையின் சிறப்புக் கூட்டத்தில் புரட்சி நடிகர், எம். ஜி. இராமச்சந்திரன் கலந்து கொள்கிறார். இடம், காலம் அடுத்த அறிக்கையில்.

—தி. மு. க. மாணவர் கிளை, சேலம்.

தொழிலாளி தன் அடிமை என்ற மனப்பான்மையை, முதலாளி அடியோடு விட்டுவிட வேண்டும். தன்னைப்போலவே தொழிலாளியும் ஒத்த உரிமையுள்ள பங்காளி என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். தொழிலாளியும் தன் ஆற்றலை உணர வேண்டும்.

—புத்தர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கட்டுமே, என்கின்றார். ஆறுலட்ச மூலதனத்தில் தொழில் தொடங்கி, ஆக்கவேலைத் தொழிற்சாலையை நிறுவிட எல்லாச் செலவுகளும் செய்தபிறகு, வடநாட்டானிடம் தொழிலை ஆரம்பிக்கும் பொறுப்பை ஒப்படைத்ததுகண்டு கண்ணீர் வடிக்கிறார். முன்னாள் அமைச்சர், ரோச் விக்டோரியா! தப்பித்தவறி எவனாவது முன்வந்தால், சர்க்கார் பட்டைநாமம் சாத்துவதற்குச் சாட்சியாக ரோச் விக்டோரியா இருக்கையிலே, இந்த சுப்ரமணியம் 'தனிப்பட்டவன் தொழில் தொடங்கட்டுமே' என்கிறார்! எவ்வளவு கொடுமை?

சேலத்தில் இரும்பு கிடைக்கும் உண்மை தெரிந்தும், இரு மந்திரிகள், அவ்விரும்பு பயன்படாது எனப் பித்தலாட்டம் செய்து, பின்னர், மேல்நாட்டு நிபுணர்கள், 'சேலத்து இரும்பு உலகிலேயே சிறந்தது' என அறிவிக்க, மந்திரிகள் மனதினுள் கடிந்து, மக்கள் முன் வேலூரில் ஏமாற்று நாடகம் ஆடினர். மின்சாரத் துறையில் முன்னேற்றம் காண்பதைவிட்டு, நெசவாளிகளைஒடுக்க விசைத்தறி கொண்டு வருகிறாராம் காமராசர்! நாட்டின் துயரங்களை மிகுவிக்க வழிகள் தேடுகிறார்கள்! வடநாட்டில் கனரகத் தொழில்கள் மிகும் போது இங்கு குடிசைத்தொழில்களால் முன்னேறச் சொல்கிறார், கிருஷ்ணமாச்சாரியார்! வனஸ்பதித் தொழிற்சாலைகள் வார்தாவில் வளம் கொழிக்க! வார்தாவில் செய்யப்பட்ட எண்ணெய்ச் செக்குகள் தென்னாட்டில்! அந்தச் செக்கு எண்ணெய் ஆட்டவல்ல; நம்மை ஆட்டுவதற்கு! நாட்டு மக்களை வாட்டுவதற்குத்தான் வழி புரியும்! வேறொரு பலனுமில்லை!

சங்கரலிங்கனாரின் சாவைப்பற்றித் திமிருகச் சொன்ன காமராசருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்; நாட்டுக்காக உழைப்பவர்களை இனி இப்படித் தூற்றாதீர்கள்; தூற்றினால் மக்கள் விடமாட்டார்கள்! தமிழர்களின் உடமைகளான தேவிகுளம் பீர்மேட்டைக் கோட்டைவிட்டபின், அரசியல் பேசுகிறார்கள், நம் மந்திரிகள்! மூன்று கோடி பேரைக் காட்டிக் கொடுத்த பின், கொலுமண்டபத்திலே கொடி பிடிக்கும் கோணங்கிகளாக இருந்து, சமுதாயத்திற்கு விரோதமாக, மானக்கேடான நிலையில் செயல் செய்கிறார்கள்! வேறென்ன? இன்று, ஜான் என்னும் மலையாள கவர்னரைக் கொண்டு வருகிறார்கள்; அவமானத்திற்குமேல் அவமானத்தை எத்தனைநாள் தாங்குவது? கொள்கை, லட்சியம், சுயமரியாதை ஏதுமில்லாமல், 1500 ரூபாயையே பெரிதென எண்ணும் இந்த சுப்ரமணியம், நம்மைப் பார்த்து பதவிப் பித்தர்கள் என்கின்றார். எது பதவிப்பித்து?

சமுதாயத்திலே உள்ள, அத்தனை துறைகளிலும் பலம் பொருந்தியவர்கள் பலரைப் பெற்றிருக்கும் நம்மைப் பார்த்து, "டிராமாக்காரர்கள்" எனக்கேலிபுரியும் காமராசர், இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா மர்மக்கதை எழுதுகிறாரே, அதற்கு என்ன சொல்லுகிறார்? எல்லோரும் காமராசரைப் போலவே இருக்கவேண்டும், என்று நினைத்துவிட்டார்போலிருக்கிறது!

நாம் தேர்தலில் நிற்பதுகுறித்துப் பலர், "காங்கிரஸ்தானே வரப்போகிறது; ஏன், வீண்சண்டை?" என்கின்றார்கள். நாட்டை ஆளும் கட்சியை எதிர்த்துக்கேட்க வேறு ஒருவரும் இல்லையென்றால், ஜனநாயகம் என்ன ஆகுமென எண்ணிப் பாருங்கள்! காந்தியாரின் சொல்லை அலட்சியம் செய்து, காங்கிரசைக் கலைக்காமல், அதை தாம் வாழப் பயன்படுத்திக் கொண்ட, காங்கிரசாரின் ஆட்சியிலே, பல பயங்கரங்களைக் காண்கிறோம்! வரவிருக்கும் பொதுத் தேர்தலில், பற்பல பயங்கரங்களை எதிர்த்து, அதில் பங்கெடுத்துக் கொண்டு, நம் கழகம் வெற்றி பெற வழிசெய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**(சேலம் அம்மாப்பேட்டை காந்தி மைதானத்தில் 2-12-56 மாலை தோழர் எஸ். கே. குழந்தையின் தலைமையில் நடைபெற்ற தி.மு.க கூட்டத்தில், தோழர் ஈ. வே. கி. சம்பத்து அவர்கள் பேசியதன் சுருக்கம். தொகுத்தவர்: தோழர், நா. சோமு )**

மலரின் உண்மையை, அதன் மணமும் செயல் திறனை அவனது சொல்லும், நெஞ்சத்துள்ள தீமையை மனமும், உள்ளக் குறிப்பை முகமும் அறிவிக்கும்.

—யாரோ

## தோழியர், விசாலட்சி.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரமுகர்களில் ஒருவராகிய நண்பர் இரெ. இளம்வழுதி அவர்களின் துணைவியார் தோழியர், விசாலட்சி அவர்கள் சென்ற 29—11—56 காலை இயற்கை முடிவெய்தினார். என்ற செய்தியறிந்து பெரிதும்வருந்துகின்றோம். கழக வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டுழைத்த நண்பர் இளம்வழுதி அவர்கட்கு அருந்துணையாக விளங்கியவரின் இழப்பு நண்பருக்கு ஈடுசெய்ய முடியாத நட்டமாகும். இயற்கையின் பண்பறிந்த நண்பருக்கு ஆறுதல் கூறுகின்றோம். அமைதிகொள்ள வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

விநோபா ராமாயணம்.

# பொய்யான கதையிலே தெய்வீகமாம்!

"என் குடும்பத்தில் மிகச் சிறுவயதிலிருந்தே இராமாயணத்தைக் கேட்டு வந்திருக்கிறேன். அதைப் படிக்கும் பொழுதோ அல்லது கேட்கும் பொழுதோ அதில் ஏதோ சரித்திர சம்பந்தமான சம்பவம் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற எண்ணமே எனக்கு வந்ததில்லை" என்கிறார் 1-8-56-ல் மொரப்பூரில் பேசிய விநோபா பாவே,

சிறு பிராயத்திலே தாய், தந்தை, அத்தை, பாட்டி, மூதவியோர் கூறுகின்ற கதைகளிலே சரித்திர சம்பந்தமிருக்கிறதா, புராணக் கதையா, கற்பனையாகப் புனைந்த கதையா, உண்மையுண்டா, பொய் மூட்டைதானா என்பனவற்றை ஆராயும் அறிவோ, ஆற்றலோ எந்தக் குழந்தைக்கும் இருக்க முடியாது. எனவே, விநோபாவுக்கும் சிறுவயதிலே அது போன்ற ஆராய்ச்சி எண்ணமே தோன்றாததில் வியப்பில்லை எனவே,

இதனை ஒரு காரணமாகக் காட்டி, இராமாயணத்தை சரித்திரமல்ல என்று கூறுவது பொருந்தும் வாதமன்று.

அடுத்து அவர் கூறுகின்றார்: "இராவணன் என்ற பெயர்கொண்ட ஒரு மனிதன் இருந்தான் என்று ஒருபொழுதும் எனக்குப் புலனானதில்லை. நான் இந்தியாவில் அதிகம் சுற்றியிருக்கிறேன். இதுவரையில் அதுபோல் ஒரு மனிதன் பார்க்கக் கிடைக்கவில்லை. இராவணனுக்கு பத்துத் தலையாம்! இரண்டு தலை மனிதனையே பார்க்கவில்லையென்றால் பத்துத் தலை மனிதனை எங்கே பார்ப்பது?

உலகத்து வேறு எந்த சரித்திர புத்தகத்திலும், பத்துத் தலை மனிதன் வருணனையை நான் படித்ததில்லை. ஆகையால் பத்துத் தலை மனிதனைப் பற்றிய குறிப்பு இருக்கும் புத்தகம் சரித்திரமாக முடியாது. இதை நன்கு புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். கும்பகர்ணன் என்றொரு திராவிட மனிதன் இருந்தானென்று எனக்கு ஒருபொழுதும் தோன்றியதில்லை. இன்றுகூட நான் திராவிட நாட்டில் யாத்திரை செய்கிறேன், அப்படிப்பட்ட மனிதனை நான் பார்க்கவேயில்லை" என்கிறார்.

பத்துத் தலை மனிதனைப் பற்றி கூறும் புத்தகம் சரித்திரமாகாது என்பதை நாம் ஒப்புகிறோம். இயற்கைக்கு மாறுபட்ட முறையிலே, புத்ரகாமேஷ்டி யாகம் புரிந்து, செத்த குதிரையைப் புணர்ந்து அதன் பயனாக இராமலட்சுமணர்கள் பிறந்தார்கள்; அறுபதினாயிரம் மனைவியரை மலடியராக வைத்திருந்தான் தசரதச் சக்கரவர்த்தி; பாலராமனின் பாதம் பட்டதும் அக்ரமம் செய்து கல்லாகிவிட்ட அகலிகை மனித உருப்பெற்றாள் என்பன போன்ற தெய்வீகப் பித்தலாட்டங்கள் இராமாயணத்தில் ஏராளம்! ஏராளம்! எனவே இராமாயணத்தை வரலாற்று நூலென்று யாரும் கூறிட முடியாது. வரலாற்றுத் துறை வல்லுனர்களும் அப்படிக் கூறினார்களில்லை.

இராமாயணத்தில் வருகின்ற கதா பாத்திரங்களின் குணச்சித்திரங்கள், நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் போன்ற பலவகைப்பட்ட பண்புகளையும் ஆராய்ந்து பார்த்து, அது இரு கலாச்சாரங்களின் மோதல்களை—இரு இனத்தவர்களின் போராட்டங்களை அடிப்படையாகக்கொண்டு, ஆரிய வால்மீகியால் ஆக்கப்பட்ட புனைக்கதை என்றே புகழுகின்றனர்.

இராமாயணம் வரலாற்று நூலல்ல என்றே நாமும் கூறுகின்றோம். விநோபாவும் கூறுகின்றார். இதிலென்ன விசித்திரமென்றால் இராமாயணம் பொய்க் கதை, நடவாத கற்பனை, அதை நம்ப வேண்டாம். நமக்குத் தேவையில்லை என்கிறோம் நாம். இராமாயணம் சரித்திரமல்ல; என்றாலும் அது இருக்கவேண்டும், அதை நம்ப வேண்டும், போற்றிப் புகழ்தல் வேண்டும், புனிதம் பெறுதல் வேண்டும் என்கிறார் விநோபா. பொய்யான கட்டுக்கதைதான். என்றாலும், தெய்வீகம் அதிலே பொங்கித் ததும்புகிறதாம் எப்படியிருக்கிறது கதை? எப்படி நம்புவது இதை?

—பகண்ணன்.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்-1 குமாரசாமிப்பட்டியின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் | ஆசிரியர்:- ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 21-12-56 ★ | விலை 0-1-6 | இதழ் 24


## கூடா நட்பு விளைத்த கொடுமை காணீர்!




பெரியார் நினைந்ததையே புரிகின்றார் காமராசர் என, அறியாத சிறியார்கள் ஆர்ப்பாட்டம் புரிகின்றார். நடப்பதென்ன தோழா? நாம் காண்பதென்ன தோழா?

இலக்கியச் சோலையிலே

# இளங்கோ கண்ட கோவலன்.

ஏ. பெரியசாமி,

[சென்ற இதழ் தொடர்ச்சி]

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை..."

(மனையறம் படுத்த காதை, 73-80)

(காசறு விரையே—உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற விரையை ஒப்பாய், என்கோ—என்பேனு, தாழிருங் கூந்தல்—நீண்ட கரிய கூந்தல்)

சிலப்பதிகாரத்தில் சுவை மிகுந்த பகுதிகள் பலவற்றுள் இதுவும் ஒன்று. படித்தவுடன் புரிந்து கொள்ளக் கூடிய அளவிலே எளிமையாக இருந்தாலும், இப்பகுதியின் பொருளாழத்தில்தான் புலவரினுடைய கற்பனைத் திறனும், நூலாசிரியன் திறனும் மேலோங்கி நிற்கின்றன.

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியைப் பற்றியும் விளக்கிப் பாடிய திருவள்ளுவர் காமத்துப் பாலில் "புணர்ச்சி மகிழ்தலைப்" பற்றிக்கூறுகின்றார்.

"கண்டுகேட் டுண்டுயிர்த்
துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள,"

(அதி-111, குறள்-1) என்று.

கண்ணகியினுடைய ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையுமாகிய ஐம்புலனுங்கூறி நலம் பாராட்டிய கோவலனது உரை மேற்கண்ட குறளுக்கு ஓர் இலக்கணமாய் அமைந்தது எனலாம்.

அடுத்து, கோவலனுடைய இந்தப் பாராட்டுரை அவனுடைய குணத்திற் கேற்றவாறு அமைந்திருப்பதும் நோக்கத்தக்கது.

பிறப்பிலேயே கோவலன் பெருஞ் செல்வன். புகார் நகரத்திலேயே புகழ் பெற்ற வணிகன். பொன்னிலும் மணியிலும் புரண்டவன்; முத்துக் குவியலிலே மூழ்கி எழுந்தவன்.

கிராமத்தில் வாழ்பவனொருவன் தன் மனைவியைப் புகழும்போது, "செவ்வாழையைப் போன்ற உடல்; எலுமிச்சை நிறம்; கதிரையொத்த அழகிய கைகள்..." என்றெல்லாம் கூறுவான். அவனுடைய புகழுரையிலிருக்கும் உவமைகள், அவன் வாழும் சூழ்நிலையைப் பொறுத்து அமைவதைக் கவனியுங்கள்.

அதைப்போல, கோவலனுங் கண்ணகியைப் பாராட்டிக் கூறும்போது, அவ்வுரையில் பொன்னும், மணியும், முத்தும் முதலிடம் பெறுகின்றன. அவை கூட உவமைகளாக அமையவில்லை. கண்ணகியைப் பொன்னும் மணியும், முத்துமாகவே உருவகித்து விடுகிறான் கோவலன்.

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மலையிடைப் பிறவா மணியே யென்கோ"

பொன்னினிடத்தில் கோவலனுக்கு என்ன ஈடுபாடோ! கண்ணகியை வர்ணிக்கும் பொழுதெல்லாம் பொன்னுக்கே முதலிடம் தருகிறான்.

கண்ணகியினுடைய காற்சிலம்பொன்றை விற்று வரும்பொருட்டு, மதுரை நோக்கிப் புறப்படுகிறான் கோவலன். கண்ணகி கலங்கி நிற்கிறாள். அவளுடைய கலக்கத்தை நீக்கும் பொருட்டு, கோவலன் கண்ணகியை நோக்கி,

"பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி"

என்று பலபடப் புகழ்ந்து கூறி, "மயக்காதொழிக" என்று ஆறுதலளித்து விட்டுச் செல்கிறான். இங்ஙனம், ஒவ்வோரிடத்திலும் பொன்னுக்கு முதன்மை தருவதற்குக் காரணம், கோவலனிடம் அமைந்திருந்த வணிகரது இயல்பான குணம்தான்! அந்தக் குணந்தான்.

"பெருங்குடி வாணிகன் பெருமட மகளே" என்று கண்ணகியுடன், அவளது தந்தையையும், வணிகக் குலத்தையும் புகழ வைத்ததோ என்னவோ!

கோவலனது மற்றொரு இயல்பும் இங்கு வெளியாகிறது. சாதாரணமான பொன்னையும், முத்தையும், மணியையும் கோவலன் எடுத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொன்றும் உயர்ந்த வகையைச் சேர்ந்தவை என்னும் பொருள் விளங்க,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மலையிடைப் பிறவா மணியே"

என்று குறிக்கிறான்.

"மாசறு பொன்னே" என்றதால் "குற்றமற்ற பொன்" என்னும் பொருள் தொனிப்பதோடு, கோவலன் தன் காதற் கிழத்தியை எவ்வளவு உயர்வாகக் கருதினனென்பதும் புலப்படுகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)


பகுத்தறிவு.

வார இதழ்

கையொப்பத்தொகை:

ஆண்டு 1-க்கு 5-0-0

ஆறு மாதங்கள் 2-8-0

தனிப்படி 0-1-6

விற்பனையாளர் இல்லாத இடங்களுக்கு, முன்பணம் கட்டும் விற்பனையாளர் தேவை,

பகுத்தறிவு அலுவலகம்,
சேலம்-1.

# எதிரொலி

ஏழைத் திராவிடமக்களின் கல்விவளர்ச்சியைத் தம் கண்களைப்போலக் கருதியிருப்பவர் முதலமைச்சர் திரு. காமராசர்.

—"விடுதலை"

ஆனால், ஏக இந்தியா எனும் நாலை, இந்தி எனும் ஊசியில் கோர்த்து கண்களைத் தைத்துவிடு என்றால் கட்டாயம் செய்து முடிப்பாரே காமராசர்!

*  *  *

உண்மைத் திராவிடர் எவரும் முதலமைச்சருக்கு துரோகஞ்செய்யத் துணியமாட்டார்.

—"விடுதலை"

தமிழனுக்கு அவர் செய்து வருகின்ற துரோகங்களைப் பொறுத்துக்கொண்டு இருக்கவும் மாட்டார்!

*  *  *

சேலத்திற்கு இரும்பு தொழிற்சாலை கிடையாது டெல்லி சட்டசபையில் மந்திரி கைவிரிப்பு.

—செய்தி

டெல்லி காங்கிரஸ் அடிமைகளுக்கு தமிழ் நாட்டில் ஓட்டுக் கிடையாது என்று மக்கள் கை விரிப்பார்களா?

*  *  *

ஈ-வே-ரா பெரியாருக்கு பைத்தியமா?

—சக்கரை செட்டியார்

மனப்பற்றுக்கு அப்படி ஒரு பெயரோ?

*  *  *

பம்பாய் முதன் மந்திரிமீது கல்வீச்சு! கருப்புக் கொடியோடு குஜராத்திகள் ஆர்ப்பாட்டம்.

—செய்தி

மராத்தி—குஜராத்தி கூட்டு மாநில அமைப்பின் நேர்மை, அளவாகவும், கொடியாகவும் பறக்கிறது!

*  *  *

வடவர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருப்பது சுதந்திரமாகுமா?

—பெரியார்.

அந்த அடிமைகளுக்கு ஆதரவுகாட்டி அடிமைத்தளையை இறுக்கிக்கொள்வது சுயமரியாதை ஆகுமா?

# வருங்காலம் நமதே!

—:-:—

(சுதந்திரச் சிந்து)

1. வண்ணத் தமிழினைப் போற்றினர்—சிறு
வஞ்சந் தனையறத் தூற்றினர்—பெரும்
வையந் தனிலிசை ஏற்றினர்—மேரு
மலைசூடின சிலசேரரும்
புலிசேலுறும் வலிராசரும்
வாழச் செலுத்தினர் ஆட்சியே—இன்று
வீழப் புரிகிறர் மாட்சியே

2. ஆதித் தமிழினை நீக்கினர்—இந்தி
ஆளும் மொழியென ஆக்கினர்—நம
தானநல் எல்லைகள் போக்கினர்—புவி
அறியாதொரு தமிழ்நாடென
தெரியாதுரை பலபேசியே
ஆட்சி செலுத்துவார் வாழ்வதோ?—பதவி
நீட்சி கொடுத்துநாம் தாழ்வதோ?

3 கொள்கைக் தூலினை நாட்டவே—நாம்
கொண்ட இழிவினை ஓட்டவே—உரிமை
கொண்டு புகழினை ஈட்டவே—மிகக்
குதித்தாடிடும் எதிர்ப்போடிடக்
கொதித்தார்வமும் படைத்தோர் நமை
ஞாலம் அறிதினங் கொஞ்சமே—வருங்
காலம் நமதேயாம் நெஞ்சமே!

—தொல்காப்பியன்.

தமிழ் மண்ணிலே வளரும் தமிழ் மூலிகைதான் தமிழ் மக்களுக்கு மாமருந்தாக அமைய முடியும். ஆயுர்வேதம், யூனானி வைத்திய முறைகளை வளர்க்க முற்படும் அரசாங்கம், தமிழ் வைத்தியமாகிய சித்த வைத்தியத்தை வளர்ப்பதில் சிறிதேனும் கவனம் செலுத்தவில்லை. இத்துறையில் தமிழ் பல்கலைக் கழகமாவது கவனம் செலுத்த வேண்டும்.

—கி. ஆ. பெ. விசுவநாதம். 16-12-56

> எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
> அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
>
> —திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 21—12—56 | இதழ் 24

## அநியாயம்! அநியாயம்!

சேலத்தில் கஞ்சமலைப் பகுதியில் ஏராளமான இரும்பு கிடைக்கிறது; அவற்றைத் தோண்டி எடுத்து உருக்கத் தொடங்கினுல் பல்லாயிரக் கணக்கான வர்க்குத் தொழில் கிடைக்கும்; தென்னுடு செல்வம் கொழிக்கும் வள நாடாக மாறும்; வறுமையால்—வேலையின்மையால்—வதைபட்டு மாளுகின்ற மக்களுக்கு வாழ்வு கிடைக்கும் என்றெல்லாம் கனவு கண்டனர் நாட்டுப்பற்று மிக்க நல்லவர்கள்!

சேலத்தில் பெரிய இரும்புத் தொழிற்சாலை ஏற்படப் போகிறது; கிடைக்கும் இரும்பின் தரம் குறித்துப் பரிசோதனை நடக்கிறது; தொழிற்சாலைக்கு ஏற்ற இடம் பார்க்கப் படுகிறது; வெளிநாட்டுத் தொழில் நிபுணர்கள் பார்வையிட்டுச் சென்றுவிட்டனர் பலித்துவிட்டது பல்லாண்டுகளாகச் செய்த முயற்சி என்றனர் காங்கிரஸ்காரர்கள்! அந்த மந்திரி வந்தார்; ஆ..கா அற்புதமான இரும்பு என்றூர்! இந்த மந்திரி வந்தார்; இதோ தொடங்கப்போகிறேம் தொழிற்சாலை என்றூர்; மற்றொரு மந்திரி வந்தார், "நாங்கள்தென்னுட்டுக்குப்பாரபட்சம்காட்டுவதாகக் கூறுகிறூர்கள், சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் அந்தக் குறையைத் தீர்க்கப் போகிறேம்" என்று வீராப்புப் பேசினர்.

சேலம் காங்கிரசுக்காரர்—டெல்லி சட்டமன்ற உறுப்பினர், **பாரிஸ்டர் எஸ். வி. இராமசாமி** அவர்கள் உண்மையாகவே பாடுபட்டார்: தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும்; தமிழ்நாட்டில் காங்கிரசின் மானம் காப்பாற்றப்பட வேண்டும் என்று. அந்தோ! போய்விட்டது! எல்லாம் போய்விட்டது! எண்ணமெல்லாம் மண்ணுகி விட்டது!

இந்தியப் பேரரசின் இரும்பு, உருக்கு, நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் 18-12-56 டெல்லி சட்டசபையில் இறுதியாகக் கூறிவிட்டார்: "சேலத்தில் இரும்பு, உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை," என்று! எத்தகைய அவலச்செய்தி!

தென்னகத்தை வளம்நிறைந்த நாடாக்கும் தீஞ்சுவைக்கனவை — பொருளாதாரம் பூரிக்கச் செய்திடும் கனிச்செல்வ ஓவியத்தைக் கலைத்துவிட்டனர் வடநாட்டுப் பாசிச வெறிபிடித்த காங்கிரஸ் கனவான்கள்! அநியாயம்! அநியாயம்!

திராவிடத் திருநாட்டின் பெருமக்களே! நமக்கு வாழ்வு தேடிக்கொள்ள, நமது கேவலநிலையை மாற்றிக்கொள்ள நமக்குரிமையில்லை; தகுதியில்லை; யோக்கியதையில்லை! இந்த நிலையில் நம்மை வைத்திருக்கின்றனர் இந்நாட்டுக் காங்கிரஸ் மகானுபாவர்கள்! நம்நாடு வளம்பெறவேண்டுமானுல், நம் மக்கள் நல் வாழ்வு பெறவேண்டுமானுல், ஓரவஞ்சனை புரியும், தமிழகத் துரோக காங்கிரஸ்கட்சிக்குத் தக்க பாடம் புகட்டவேண்டாமா?நாட்டு நிலைகண்டு நாணித் தலைகுனியும் நல்லவர்களே! என்ன செய்யப் போகிறீர்கள்?

— ப. கண்ணன்.

## முத்தமிழ்க் காவலர்.

திருச்சி தோழர், விசுவநாதம் பகுத்தறிவு இயக்கம் பெற்றெடுத்த செல்வம்,பைந்தமிழர்:சிறந்த பண்பாளர்; சீர்திருத்தப் பேச்சாளர்; எழுத்தாளர்.

பெரியார் ஈ. வே. ரா. தோற்றுவித்த சுயமரியாதைக் கட்சியில் அவராற்றிய அரும்பணியும், 1938-ல் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாரின் வாரிசாகத் தலைமையேற்று புயல்போல் நாடுசுற்றிச் செயல்புரிந்த பெருந்திறனும் தமிழகம் மறவாது. அவரது பேச்சுக்கள் உணர்ச்சிக்கு விருந்து; எழுத்துக்கள் அறிவுக்கு விருந்து! செயல்கள் அடிமை நோய்க்கு அருமருந்து!

திருக்குறளை பகுத்தறிவுச் சல்லடையால் சலித்தெடுத்து, மணி மணியாக மக்கள் மன்றத்திலே வைத்துப் பயன் விளைப்பவர். நியாயமாக திராவிட முன்னேற்றக் கழகத் தூண்களிலே ஒருவராகத் திகழ வேண்டியவர்.

திருச்சி தமிழ்ச்சங்கத்தின் சார்பிலே 16—12—56-ல் நாவலர் விசுவநாதம் அவர்களுக்கு விழா நடத்திப் பொன்னுடை போர்த்து, "முத்தமிழ்க் காவலர்" என்ற பட்டம் வழங்கியுள்ளனர். பாராட்டியுள்ளனர். நாம் மகிழ்கின்றேம்;செந்தமிழ்க் காவலர்க்குச் செய்த சிறப்பு, தமிழுக்குச் செய்த சிறப்பாகும். வாழ்க முத்தமிழ்க் காவலர்! வளர்க அவரது தமிழ்ப்பணி! எமது நெஞ்சுகந்த வாழ்த்துக்கள்!

சிறுகதை.

# இன்பக் கனவா?

இரா. சி. சவுண்டப்பன்.

☆

கண்ணாளா! நின் மடல் வரப்பெற்றேன். நீங்கா மகிழ்ச்சி கொண்டேன்—நித்தமும் நின் நினைவுதான் எனக்கு.

நுங்கள் மதிமுகத்தை ஒருதடவையேனும் காணலாம்—களிவுடன் பேசலாம்—என்றாலோ இங்கு காவல் அதிகமாக இருக்கிறது. ஏதாவது காரணத்தைக் கொண்டு வெளியே புறப்பட்டால்...வார்த்தைகள் வந்து என்னை வழி மறிக்கின்றன, எங்கே செல்லுகிறாய்? எதற்கு? இப்படியாக.

எப்படியும் நாளை மாலை பூம்பொழிலில் உங்களை சந்திக்கிறேன்.

உங்கள் காதலி,

வனஜா.

அன்பே! ஆருயிர்க் காதலி! இல்லற ஜோதியாக உன்னை ஏற்கும் நாள் விரைவில். கவலைப்படாதே! இன்பத்தை அடைய வேண்டுமானால் இன்னல் பல அனுபவிக்கத்தான் நேரும். இன்னலைக் கண்டு அஞ்சினால் இன்பத்தை அடைய முடியுமா? துன்பத்தின் கடை கோடியிலேதான் இன்பம் இருக்கிறது.

சாதிமத வேறுபாட்டால் துண்டிக்கப்பட்டவர்கள் நாம்! துயரம் எதிர்நோக்கும். எனினும் தூய காதல் கொண்டுள்ள நமக்கு துன்பம் ஓர் துரும்பு. இன்பம் காணும் தூயநாள் விரைவில். உன் மடல் கிடைத்தது. உனக்காக காத்துக் கிடப்பேன்.

உன் அன்புக் காதலன்,

ராஜா.

காத்திருந்து ஏமாந்து களைத்திருப்பீர். கோபமும் அடைந்திருப்பீர் என்மேல். என்ன செய்வது? இன்று உங்களை சந்தித்துவிட முடிவுசெய்தேன். முடியவில்லை. மதமும், சாதியும் பயங்கர மதிள் சுவர்கள் தான். என்றாலும் நம் காதல் வெல்லாதோ? அவை கிடக்கட்டும்.

மணி மூன்று இருக்கும், என்னுடைய அத்தை மகள் அனுசூயா ஊரிலிருந்து வந்துவிட்டாள்—சிவ பூசையிலே கரடி புகுந்தது போல. அவளிட மிருந்து தப்பித்து வர என்ன தந்திரமெல்லாமோ கையாண்டேன்; முடியவில்லை!

குளக்கரை ஓரத்திலே! குன்றின் உச்சியிலே! குளுமையான காற்றினூடே! குதூகலத்துடன் உங்களோடு கை கோர்த்து—அன்னநடை போட்டு ஆனந்தமாக இருந்து வரலாம் என ஆசைப்பட்டேன். எண்ணக்கோட்டை சரிந்துவிட்டது. அவள் ஊருக்குச் சென்றதும் உங்களை சந்திக்கிறேன்.

அன்புக் காதலி,

வனஜா.

எழிலரசி! காத்திருந்தேன் உனக்காக. கதிரவனும் தன் கடனை முடித்தான். காரிருள் கப்பியது. காரிகை நீ வரவில்லை. காத்திருந்தேன், நடுநிசி வரையிலும் காத்திருந்தேன்!

எங்கும் அமைதி நிலவியது. ஏகாந்தத்தில் அமர்ந்திருந்தேன் நான்—எல்லாம உன் நினைவாக. நிர்மூலமாக இருந்த வானத்திலே திடீரென கருமேகங்கள் ஒன்று சேர்ந்து கிளம்பின, ஆர்ப்பரித்தன, அட்டகாசம் செய்தன, என் அமைதியைக் குலைக்க; மோனத்தைக் கலைக்க; அயரவில்லை நான். எப்படியும் நீ வந்துவிடுவாயெனும் நம்பிக்கையினால்.

வானத்தே கிளம்பிய மேகங்கள் என் மேல் அமுதத் துளிகளைத் தெளித்தன. ஆம்! சிறுசிறு மழைத்துளிகள் என் மேல் விழுந்தன. அலட்சியமாக அமர்ந்திருந்தேன் அழகரசியைக் காணும் ஆவல் மிகுதியால்.

எவ்வளவு நேரம் காத்திருந்தேனோ எனக்கே தெரியாது! அயர்வு ஆட்கொண்டது என்னை; தூக்கம் சுண்டி இழுத்தது: மயங்கி விழுந்தேன் மாதரசியின் மடியில் சாய்வதாக நினைப்பு அப்பொழுது, "சலப்! என்ற சப்தம். சகதி என் வாயினுள்ளே புகுந்தது! ஒருவித நெடி. குடலைக் குமட்டி எடுக்கிறது இப்பொழுது நினைத்தாலும், அப்பொழுது? தங்கச் சிலையாளின் தளிர் அதரத்திலிருந்து வழிந்தோடும் அமுதத் தேனூற்றை அள்ளிப் பருகுவதாகவே நினைப்பு. ''பளீரென'' ஒரு மின்னல்! இருந்த நிலையை உணர்த்தியது. நான் விழுந்து கிடந்தது, பாசிபடிந்த ஓர் குட்டை!

தட்டுத்தடுமாறி எழுந்து உட்கார்ந்தேன் மறுபடியும் ஓர் மின்னல். மின்னல் கீற்றின் ஒளியிலே தெரிந்தது ஓர் உருவம். என்னை நோக்கி வருவது போல.

வான்மயிலாள். வண்ணக் காதலி தான் என நினைப்புடன் எழுந்தேன்—கால்களை எட்டிப்போட்டேன் கனி மொழியைத்தாவி அணைக்க. என்னவோ சப்தம்!

சிங்காரியின் சிரிப்பொலிதான் அது. மாதரசியின் வளைக்கரங்களின் ஒலி தான் அது என நினைப்பு.

அருகில் வந்துவிட்டேன். அசையாமல் நின்றாய் நீ! அன்பே என்றேன். ஆருயிரே என்றாய், ஆவலோடு தாவினேன் உன்னை அணைக்க. ''தடால்!'' ஆம்! பக்கத்திலிருந்த பாழுங்கிணற்றிலே விழுந்தேன். ஐயோ என அலறி. மூர்ச்சையானேன். நினைவு வந்து எழுந்தபோது நான் என் படுக்கையிலிருந்து கீழே உருண்டு கிடப்பதை அறிந்தேன். ஆம்! நான் கண்டது யாவும் கனவுதான்! கனவிலும் ஓர் களிப்பு! அதிலேயும் ஓர் இன்பம். எவரும் அடைய முடியாத அளவிலா ஆனந்தம். மீண்டும் உன் கடிதம் படித்தேன். நம் சந்திப்புக்குத் தடையாக அனுசூயா அமைந்தாள்; நம் வாழ்வுக்குத் தடையாக பாசி படிந்த அந்த மதக் குட்டையும், பாழும் சாதிப் பழுங் கிணறும் அமைந்து விட்டால்...? ஐயோ!...

காதலன்,

ராஜா.

---

விளம்பர உலகம் இது. சேவை புரிந்தால் போதாது. தமுக்கும் போட வேண்டும்.

—யாரோ.




[முன் இதழ் தொடர்ச்சி]

வித்யா: தாங்கள் விரும்பினால் நடவாததும் உண்டோ?

நந்தி:- முழுமனதோடு விரும்புகிறேன் பெண்ணே! ஏற்பாடு செய்யமுடியுமா உன்னால்?

வித்யா:- அவரது நிபந்தனைகள் சில வற்றைத் தாங்கள் ஒப்புவதானால்.......

நந்தி:- சொல். என்ன நிபந்தனைகள்?

வித்யா:- முதலில் அவருக்கு மன்னிப் பளிக்க வேண்டும்.

நந்தி:- மனப்பூர்வமாக மன்னித்தேன். அறியாமையால் அவன் செய்த குற்றங்களை மறந்தே விடுகிறேன்.

சீலாதி:- (எழுந்து) மன்னர் பெரும! சந்திர வர்மன் செய்த குற்றங்கள் மிகப் பெரியவை. இவ்வளவு எளிதாக மன்னிப்புத் தருவது நலமன்று.

நந்தி:- (மிடுக்காக) எனக்குத் தெரியும். வேம்பின் காய் கசக்கிறது; பழம் இனிக்க வில்லையா? கெட்டவன் கெட்டவனாகவே இருக்க வேண்டுமோ? உட்காரும்,

(தலைகுனிந்து அமர்கிறார் சீலாதித்தர்)

நந்தி:- பெண்ணே! அப்புறம் என்ன?

வித்யா:- கலம்பகம் அரங்கேற்ற சில விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

நந்தி:- தமிழுக்குப் பெருமை! தாராள மாகச் செய்வோம். விபரம் சொல்.

வித்யா:- ஒரு பரந்த மைதானம். அதிலே நாற்சதுர அமைப்பில் பத்து பச்சைப் பந்தல் கள். நடுவிலே ஒரு மேடை. அதிலிருந்து அவர் நூறு பாடல்களையும் பாடுவார். பந்தலுக்குப் பத்தாக, பத்துவகை ஆசனங்களில் அமர்ந்து தாங்கள் அவற்றைக் கேட்டு இன்புறவேண்டும.

நந்தி:- ஆசனங்கள் என்னென்ன?

வித்யா:- அவர் நிர்ணயித்துக் கொடுப்பார்! பிடிக்கவில்லையென்றாலும், தமிழ்ச்சுவை நுகர வும், இறைவனின் அருளைப் பெறவும் துணிந்து ஏற்க வேண்டும் அதனை! சிந்தையிலே கலக்கம் கொண்டால் செந்தமிழ்த் தாய் சினந்திடுவாள்!

நந்தி:- இதுவென்ன விந்தை! பைந்தமிழின் பாட்டுச் சுவை; பரம்பொருளின் பெருங் கருணை, ஏககாலத்தில் இரண்டும் கிட்டுவது எத் தகையபேறு! எத்தகையபேறு! அப்படியே செய்வோம்.

சீலாதி:- (எழுந்து) பெண்ணே! சந்திரவர்ம ருக்காக இவ்வளவு பேசுகிறாயே! அவருக்கும் உனக்கும் என்ன உறவு?

வித்யா:- (நாணி) அவர்... என் காதலர்.

சீலா:- ஒரு ராஜத் துரோகியைக் காதலிப் பது குற்றமென்பது உனக்குத் தெரியுமா?

விக்ரம:- (எழுந்து) மன்னவரால் மன்னிக் கப்பட்டவர், அமைச்சரால் அவமதிக்கப் படு கிறார்! மகாராஜாவின் விருப்பத்தில் மந்திரியார் குறுக்கிடுவதை நான் வெறுக்கிறேன்.

நந்தி:- அமைச்சரே! செந்தமிழ்க் காவியத் தால் எனது பெயர் சிறப்புப் பெறவேண்டும். தமிழன்னையின் பேரருளுக்கும் பாத்திரமாக வேண்டும். நடந்துபோன பழங்கதையை மறந்துவிடும். கலம்பக ஏற்பாடுகள் விரைந்து முடியட்டும்.

சீலா:- (வணங்கி) கட்டளை.

நந்தி:- பெண்ணே! தம்பிக்கு என் மன் னிப்பைச் சொல். கலம்பகம் அரங்கேற்றச் செய்யும் மகத்தான ஏற்பாடுகளையும் சொல்.

வித்யா:- உத்தரவு மகாராஜா!

(சபை கலைதல்)

## காட்சி 28.

(அரண்மனை. மன்னனும், சேனாபதியும் பேசுகின்றனர்)

விக்ர:- சபையிலே, மகாமேதாவிபோல் நீதிமுறை பேசினாரே மந்திரியார். இப்போது என்ன செய்கிறார் தெரியுமா மகாராஜா?

நந்தி:- என்ன செய்கிறார்?

விக்ர:- (மெதுவாக) இரகசியமாக மகாராணியைச் சந்திக்க, பாதாளச் சிறைக்குப் போயிருக்கிறார்.

நந்தி:- (வியந்து) ஏன்? எதற்காக?

விக்ர:- சொல்ல வாய் கூசுகிறது மகாராஜா! தங்கள் மனம்......

நந்தி:- வருந்தும்; சொல்லவந்ததைச் சொல்லாவிட்டால்!

விக்ர:- எப்படிச் சொல்லுவது? மகாராணியையும், மந்தியாரையும் இணைத்து, என்னென்னவோ வதந்திகள். நாம் குருக்கோட்டைப் போருக்குச் சென்றிருந்தபோது, இருவரும் அரண்மனையில் குதூகலமாக இருந்தார்களாம்! அதை மறக்க முடியவில்லையாம் மந்திரியாரால்!

நந்தி:- (பதைத்து) ஆ! எத்தகைய பெரும் பழி! சேனாபதி! நாம் இப்பொழுதே செல்ல வேண்டும் பாதாளச் சிறைக்கு.

விக்ர:- (அஞ்சுவதுபோல்) வேண்டாம் மகாராஜா! வேண்டாம். ஏதாவது விபரீதம் ஏற்பட்டால், பிறகு என்மேல்....... பயமாயிருக்கிறது எனக்கு.

நந்தி:- சே! வேண்டாம், நானே போகிறேன். (வேகமாகச் சொல்ல)

விக்ர:- வருகிறேன்! நானும் வருகிறேன்.

(சொல்லியவண்ணம் பின்னால் ஓடுகிறான்)

## காட்சி 29.

(பாதாளச் சிறை. சிறைக்குள்ளிருக்கும் மகாராணியும், பார்க்கவந்த சீலாதித்தரும்)

சங்கா:- (அஞ்சி) வஞ்சகம் விரித்த மாய வலையிலே விழுந்தாரா மன்னவர்? தடுக்க முடியவில்லையா தார் வேந்தரை?

சீலா:- முயன்றேன் மகாராணி! மன்னவரின் தமிழார்வமும், சேனாபதியின் குறுக்கீடும் சேர்ந்து சிதைத்து விட்டன என் முயற்சியை.

சங்கா:- சேனாபதி விக்ரமகேசரியுமா உண்மையை உணரவில்லை.

சீலா:- ஆம் மகாராணி! அவர் இப்படிப் போவாரென்று நான் எதிர்பார்க்கவில்லை!

சங்கா:- அமைச்சரே! உண்மைக்குப் போராடும் நிலையில் நீர்தான் இருக்கிறீர். அந்தச் சதியின் பிடியிலிருந்து எப்படியாவது மீட்க வேண்டுமே மன்னவரை.

சீலா:- முயலுகின்றேன் தேவி! எனது கடைசி மூச்சு உள்ளவரை கடமையை நிறைவேற்றுவேன். நம்புங்கள்.

சங்கா:- நம்புகிறேன் அமைச்சரே! மலைபோல் நம்புகிறேன். உம்மை விட்டால் வேறு கதியில்லை.......

(மன்னவரும், சேனாபதியும் வருகின்றனர்)

நந்தி:- (கோபச் சிரிப்பு) "மலைபோல் நம்புகிறேன். உம்மை விட்டால் வேறு கதியில்லை" சண்டாளப் பிண்டங்களா? சிறைச்சாலையை மலர் மஞ்சமாகவா மாற்றுகிறீர்கள்? என்ன நெஞ்சழுத்தம்!

சங்கா:- (பதைத்து) ஆ! மன்னவரே! என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்?

சீலா:- (வருந்தி) மன்னர் பெரும! மன்னிக்கவேண்டும் என்னை.

நந்தி:- மன்னிப்பு! கள்ளத்தனமாகத் தன் மனைவியிடம் கொஞ்சுகிறவனை, ஒரு பிச்சைக்காரன் மன்னிக்கமாட்டானே! நன்றி கெட்டவனே! நான் மன்னிக்க வேண்டுமோ உன்னை?

சீலா:- (பதைத்து) அடாத பெரும் பழி! இது அடுக்காது; அநியாயம். மன்னவா! என்னை நன்கறிந்த தாங்களா இப்படிப் பேசுவது?

சங்கா:- பொறுக்க முடியாத அபாண்டத்தைப் போடவேண்டாம் எங்கள் தலையில். நொந்து கிடக்கிறேன் சுவாமி! வெந்த புண்ணிலே வேலிடாதீர்கள்.

நந்தி:- (சிரித்து) நொந்து கிடக்கிறாயா? ஏன்? காதலனைக் கட்டித் தழுவ முடியாமல் சிறைக் கம்பிகள் குறுக்கிடுகின்றனவோ சிறுக்கி!

விக்ர:- கள்ளச் சாவிகூட வைத்திருப்பான் காதகன்!

நந்தி:- மகாராணியின் காதலல்லவோ! எதைத்தான் செய்யக்கூடாது?

நிருப:- (முன்வந்து) அப்பா! நேர்மை தவறாத என் தாய்மேலா இத்தகைய நிந்தை? உங்கள் கொடுமைக்கு முடிவே இடையாதா? கரமிழந்த மாதாவின்மேல் கற்பிழந்தாள் என்ற பழியை வேறு சுமத்துகின்றீர்?

நந்தி:- கண்களால் கண்டதைத்தானடா சொல்லுகிறேன், காவாலிப் பயலே!

நிருப:- எதையப்பா கண்டுவிட்டீர் இங்கு? என்ன விபரீதம் நடந்து விட்டது? நெஞ்சிலே நஞ்சு; பார்வையிலே குருடு பாய்ந்து விட்டது! நீதியைப் பரிபாலிக்கும் மன்னவரா நீர்? பகுத்தறிவு இழந்த பாவி! கொதிக்கிறதே என் ரெத்தம்! இன்னொரு முறை என் தாயைக் குறை சொன்னால் நறுக்கிவிடுவேன் நாக்கை!

நந்தி:- வெட்கங்கெட்ட வீரப்பு! தூ! விபசாரி பெற்ற பேடிப்பயலே! (காறித்துப்புகிறான்)

நிருப:- (ஆத்திரமும், அழுகையுமாய்க் கதவை உலுக்கி) ஆ! அம்மா! வாளெங்கே?என் வல்லமையெங்கே? தடந்தோளெங்கே? தன்மானமெங்கே! ஒழிந்ததம்மா எல்லாம் ஒழிந்தது! இந்தக் கொடிய சொல்லைக் கேட்கவா, பொறுமை பொறுமையென்று புழுங்கிக் கிடந்தோம் இரும்புக் கதவுக்குள்?ஒழுக்கத்தின் உயிர் நாடியான உத்தமியைப் பழித்தவாய் புழுக்க வேண்டாமா? என் வீரத்தாயை விபச்சாரியென்ற வீணனின் வாய் வேக வேண்டாமா தீயில்? விபரீதம் தாயே, விபரீதம்! ஐயோ! என்னால் பொறுக்க முடியவில்லையே அம்மா!........ அம்மா!........ அம்மா......!

(கதறியவண்ணம் தாயின் காலில் விழுந்து புரளுகிறான்)

சீலா:- (சினந்து) மன்னவ! சேனாபதி கொடுத்த விஷம் தலைக்கேறி விட்டது. சிந்தை குழம்பி விட்டது. வஞ்சகப் பயிருக்கு இப்படியா எருவாக வேண்டும் உமது அறிவும் ஆற்றலும்? தவறு! மிகப் பெரிய தவறு செய்கின்றீர்!

நந்தி:- தவறு! யோக்கிய சிகாமணியே! நள்ளிரவிலே கணிகையின் வீட்டிலே காவலன் நுழைவது தவறு! யாருமறியாமல் மந்திரியார் இப்படி மகாராணியைச் சந்திப்பதற்கு என்ன பெயரடா என்ன பெயர்?

சீலா:- தவறுதான். இதைச் செய்தவன் நான். என்னைத் தண்டியுங்கள். கற்பின் சிகரமான தேவியாரின் நெஞ்சிலே பெரு நெருப்பைக் கொட்டவேண்டாம். தியாகத்தின் சின்னத்தை—தாய்மையின் வடிவத்தை இப்படிச் சித்ரவதை செய்யவேண்டாம்.

விக்ர:- பறிகொடுத்தவன் ஏமாந்தால், திருடன் தர்ம நெறியும் போதிப்பான் மகாராஜா!

சீலா:- விக்ரமகேசரி! கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான். வஞ்சகம் வாழ்ந்ததில்லை நெடுங்காலம்.

விக்ர:- இது உமது கெடுங்காலம். மன்னிக்க முடியாத துரோகம்! மகாராஜாவின் பெருந்தன்மை இதுவரை உம்மை வாழவிட்டிருக்கிறது.

நந்தி:- இனிப் பொறுக்கமாட்டேன் அவ கேட்டினை! களங்கம்! களங்கம்! என் குலப் பெருமைக்கே களங்கம்! துரோகி!

(வாளை உருவி சீலாதித்தரை வெட்டப் போகிறான்)

சங்கர:- (சினந்து) நிறுத்துங்கள்! குலப் பெருமைக்குக் களங்கம் யார்? நானுமல்ல, அமைச்சருமல்ல, நினைத்துப் பாருங்கள். நெஞ்சிலே கைவைத்துச் சொல்லுங்கள்; நாட்டை அன்னியனுக்குக் காட்டிக் கொடுத்தவர் களங்கமா? துரோகத்தைத் துடைத்தவர்கள் களங்கமா? கலையென்றும், பக்தியென்றும் கலகம் விளைத்தவர் களங்கமா? அறமென்றும், அன்பென்றும் அதனைத் திருத்தியவர் களங்கமா? யாருக்கு யார் களங்கம்?

நந்தி:- பழங்கதை பேசாதே!

சங்கர:- புதிய கதை மன்னவரே! இது புதிய கதை! சிங்காசனத்தைக் கவர சதித் திட்டமிட்டவருக்குச் சிங்கார மேடை; சதியைக் குலைத்து உரிமையைக் காத்தவர்க்குச் சித்ரவதை! கடித்துக் கொல்லவந்த விஷப்பாம்புக்குப் புகழ்மாலை. தடுத்துப் போராடிய கிளிக்கு சிறைச்சாலை? இதுவா நேர்மை? இதுவா தர்மம்? இதுவா அறம் வழுவா ஆட்சி முறை?

நந்தி:- எல்லாம் தெரியுமடி எனக்கு! நல்லவன் என் தம்பி! பொல்லாத நீதான் பொசுக்குகிறாய் என் மானத்தை! சண்டாளி! சாகசக்காரி!

(வளரும்)

## முன்னேற்றப்- -பாதையிலே

### சேந்தமங்கலம்

23—12—56 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு பெருமாள் கோவில் முன்பு திரு. அழகு அவர்கள் தலைமையில், திரு. கி. மனோகரன் பி. ஏ. ஆனர்ஸ். ஜி. பி. சோமசுந்தரம் ஆகியோர் பேசுவார்கள்.

—செயலாளர் தி. மு. க.

### தேர்தல் நிதி நிகழ்ச்சி.


சேலம் மாவட்டம், இடைப்பாடியில் 27–12–56 வியாழன் மாலை 4-மணிக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் தோழர், பி. எம். குப்புசாமி அவர்கள் தலைமையில்,

தோழர்கள் இரா. தாண்டவன். மு இராசு, ஆர். வி. பெருமாள், நாராயணன் மற்றும் பலர் பங்கு பெறுவர்.

கைப்பந்தாட்டம், உடற்பயிற்சி விளையாட்டுகள், குஸ்தி, குறவன் குறத்தி நடனம், ஓரங்க நாடகம், சிலம்ப விளையாட்டுகள், இசை நிகழ்ச்சி இத்தனையும் நடைபெறும்.

கட்டணம்: ஆண்கள் 0—4—0
பெண்கள் 0—2—0

—தி. மு. க இடைப்பாடி.




### வானரதம்

"உடன் கட்டாலோ" என்று இந்தியில் வந்து பெயரெடுத்த படம், "வானரதம்" என்று தமிழில் வந்து பெயரை எடுத்துவிட்டது!

கதைக்குக் காலில்லை! பழுதுபட்ட விமானமொன்று ஏதோ ஒரு நாட்டில் இறங்க, அதிலிருந்த 'பாரத நாட்டான்' ஒருவன், அந்த நாட்டு ஏழையினத்து எழிலரசி ஒருத்தியின் காதலுக்கும், வாழ்வினில் ஏற்றங்கொண்ட நாட்டரசியின் காதலுக்கும் பாத்திரமாகி, முடிவில் நாட்டரசியின் சூழ்ச்சியால், மனத்தில் வரித்த மங்கை நல்லாளை இழந்து, பனக்குன்றி, மரணத்தை எட்டிப் பிடிக்கும் கதைதான் "வானரதம்."

காட்சி அமைப்புகள், அலங்கார வேலைப்பாடுகளுடன் அருமையாக இருக்கின்றன. வெளிப்புறக் காட்சிகளைத் திறமையாகப் படமாக்கியிருக்கிறார்கள்.

நிம்மியின் நடிப்பு நன்றாக இருக்கிறது. சோகக்கட்டங்களில் நடிக்கும் பொழுது மனவுணர்ச்சிகளை நன்றாக பிரதிபலிக்கிறார். திலீப்குமார் கட்டைபோல வந்து போகிறார். சூரியகுமாரியின் நடிப்பு சோபிக்கவே இல்லை. காதல், சோகம், கோபம், தாபம் எதுவானாலும் சிரித்துக்கொண்டே போய்விடுகிறார். ஆகாவின் நகைச் சுவையில் சுவையில்லை. மாறாக, அவருடைய கோமாளிக் கூத்து எரிச்சலைத்தான் ஊட்டுகின்றது. ஒலி, ஒளிப்பதிவுகள் ஏதோ பரவாயில்லை.

படத்திற்கு உயிரூட்டுவது நௌஷாத்தின் இசையமைப்பு. நான்கைந்து பாடல்கள் நன்றாயிருக்கின்றன. ஆனால் அநாவசியமான நடனங்களும், பாடல்களும் ஏராளம், இருந்தும் படம் பதினோராயிரம் அடி நீளம்தான். அந்தமட்டில் நாம் பிழைத்தோம்! வடமொழியின் அசைவுக்கேற்ப வசனத்தை அமைக்க எண்ணி, தமிழையே கொலை செய்திருக்கிறார்கள்.

இறந்துபோன காதலி வானரதத்தில் ஏறிக்கொண்டு, தன் காதலனிடம் வந்து, அவனையும் தன்னுடன் அழைத்துக் கொள்கிறாள். கதாநாயகன் உயிர் விடுகிறார். படம் பார்ப்போர் சிரிக்கிறார்கள். "வானரதமா அது? வானரம்!" என்கிறார்கள் கொட்டகையிலிருந்து வெளியே வரும் ரசிகப் பெருமக்கள்.

—நா. சோமசுந்தரம்.


**1957**

**திராவிடர் நாட்குறிப்பு [டயரி]**

- தி. மு. கழக முழு விவரங்கள்
- 1200 தி. மு. க. கிளைகளின் விபரங்கள்
- பேச்சாளர் முகவரிகள்
- அஞ்சல் செய்திகள்
- விற்பனைவரி, வருமான வரி, பதிவுக் கட்டணங்கள்
- பக்கத்துக்கு ஒன்று வீதம் அறிஞர்களின் 365 பொன்மொழிகள்
- இன்னும் பலவித குறிப்புகளும் விவரங்களும் அடங்கியது

காலிகோ பைண்டு-உதயசூரியன் முகப்பு

ஒன்றின் விலை ரூ 1-0-0

செலவு தனி.

போர்வாள் அலுவலகம்,
128 பிராட்வே, :: சென்னை-1.



'வாழு வாழவிடு' எனும் இலட்சிய ஏடு!

**"மக்களாட்சி"** (திங்களிருமுறை)

ஆசிரியர்: மீ. சு. இளமுருகுபொற்செல்வி.

- அவர்கள் கருத்து
- ஏணியும் தோணியும்
- அன்றும் இன்றும்
- தமிழாக்கம்
- நாமிருவர்
- வினாவிடை

ஆகிய அம்சங்களுடன் வாழ்க்கைத் தோழமையுள்ள மக்களின் பத்திரிக்கை. விலை இரண்டணா.

விவரங்கட்கு:

பொறுப்பாளர், "மக்களாட்சி" அலுவலகம்,
32, மேலப் புலிவார் தெரு,
திருச்சி 1. (தமிழ் நாடு)

நாடெங்கும் விற்பனையாளர் தேவை

# கேள்விக்கணைகள்? "கேடயத்தான்"

இக்கிழமை பரிசு பெற்றவர்:

● இரா. கண்ணப்பன்,
குறிஞ்சிலாப்பட்டு (அஞ்சல்)
வ. ஆ. மாவட்டம்.

ஜி. கே. வேலன், சத்திரப்பட்டி.

கே: அரசியலில் வழுக்கி விழுந்தவர்கள் வாழ்வு பெறுவது எப்பொழுது?

ப: சந்தர்ப்ப வாதிகளின் கட்சி எதிர்பாராது வலுவடையும்போது.

*　*　*

கே: உங்கள் எழுத்தை சினிமா கட்சி என்று காங்கிரசும், கம்யூனிஸ்டும் கொக்கரிக்கிறார்களே! என்ன பதில்?

ப: அவர்கள் கட்சியைச் சேர்ந்தோர் சிறந்த சினிமா எழுத்தாளர்களல்ல என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அவ்வளவுதான்.

மு. கலைமன்னன், முடச்சு.

கே: காங்கிரசின் கண்கள் எவை?

ப: வடநாட்டு முதலாளிகளின் பணப்பெட்டி!

ஏ. எஸ். சுப்ரமணியன், அக்ரகாரம்.

கே: "பாசவலை" போலவும், "நந்திவர்மன்" போலவும் கற்பனை நயத்தோடு கம்பன் ராமாயணத்தை எழுதினான்! அதை ஏன் நாம் ஒழிக்கவேண்டும்?

ப: இவைபோல் என்றால் இருகை ஏந்திவரவேற்கலாமே! கதா நாயகனைக் கடவுளாக்கி, கோயில்கட்டி மணியும் தட்டுமல்லவா தூக்கிக்கொண்டார்கள்!

கே: அண்ணாவை அறிவற்றவர் என்று கூறுகிறார்களே மந்திரிகள்; அவர்களை என்னவென்று கூறுவது?

ப: அறிவைப்பற்றி நினைத்துப் பார்க்கவே நேரமற்ற அடிமைகள் என்று சொல்ல வேண்டாம். பாவம்; தமிழர்கள்!

சி. சு. தேவராசன், சிறுதையூர்

கே: நீலிக் கண்ணீர், முதலைக் கண்ணீர்—இவற்றிற்கு என்ன பொருள்?

ப: வஞ்சகமாய், பிறரை மயக்கவடிப்பது ஒன்று; வடிக்காமலேயே வடிப்பதுபோல் காட்டுவது மற்றொன்று.

*　*　*

கே: திடீர் என்று நேருவந்து "திராவிடநாடு" பிரித்துக்கொடுத்தால்என்ன செய்ய முடியும் உங்களால்?

ப: ஆளமுடியும் தோழரே, நம்மால்.

● இரா. கண்ணப்பன், குறிஞ்சிலாப்பட்டு

கே: இராமாயணத்தில் குரங்குகள், இராட்சதர்கள் என்று வருணிக்கப்படுவது திராவிடர்களைத்தான் என்று பிரதமர் நேருவே எழுதியிருக்கும்போது, காங்கிரஸ் திராவிடர்கள் இராமாயணத்தைப் போற்றுவது ஏன்?

ப: தலைவரது கருத்துக்கு மதிப்பளித்து, இராட்சசர்களாகவும், குரங்குகளாகவும் நடந்துகொள்வது அவர்களின் விருப்பமாயிருக்கலாம்.

*　*　*

கே: "ஆறுகெட நாணலிடு, ஊருகெட பூணலிடு" இந்தப் பழமொழியின் பொருள் என்ன?

ப: ஆற்றிலே வளர்ந்த நாணல் புதர் வெள்ளப்போக்கை மறித்து வழிமாற்றி விடுமாம்; அதுபோலவே ஊருக்குள் வளரும் பூணூல்காரர், ஊர் நலத்தை தன்னலமாக மாற்றி விடுவார்களாம்!

## தி. க. வா? கா. க. வா?

தேர்தலை முன்னிட்டும், மக்களின் நன்மையை முன்னிட்டும் இம்மாதிரி கல்வி வசதிகளையெல்லாம் ஏழைமக்கள் இல்லந்தோறும் சென்று கூறவேண்டியது, பொதுநலத் தொண்டர்களின் நீங்காக் கடமையாகும்; அவசரக் கடமையுமாகும்.

காங்கிரஸ்காரர் யாவரும் ராஜாஜி கட்சி—காமராசர் கட்சி என்று பிரிந்துகொண்டு தமிழ் நாட்டைப் பாழாக்காதபடி—இம்மாதிரி நன்மைகளைப் பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்யக் கேட்டுக் கொள்கிறோம்.

—"விடுதலை",
18—12—56

தி. க. விடுதலை, கா. க. விடுதலையாக மாறுகிறது! வேண்டுகோள் விடுகிறது காங்கரசுக்கு!

நாம் ஆதரிப்பது தமிழ்க் காமராசரை, எதிர்ப்பது பார்ப்பன ராஜாஜியை என்று ஏமாளித்தனமாக நம்பிக்கொண்டிருக்கும் தி. க. தோழனே! தொட்ட குறை, விட்டகுறை இருப்பதால் சொல்லுகிறேன்: உன் முகத்தில் கரி பூசிவிட்டு காங்கரஸ்காரன் முகத்திற்குப் பவுடர் பூசத் தொடங்கி விட்டார் விடுதலையார்! முகம் சுளிக்காதே! பணநாதன்; பதவிநாதன்; பொறுமைநாதனின் பொல்லாத விளையாட்டுகளுக்கு பகுத்தறிவு படைத்த நீ இனியும் பகடைக்காயாகத்தான் இருக்கப் போகிறாயா? இல்லை; இலட்சிய வெற்றிக்குப் பணியாற்றப் போகிறாயா? என்ன உன்முடிவு?

—வா

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

"வலம்புரி முத்தே!"—முத்திலேயே சிறந்த வகை, வலம்புரி என்ற சங்கிலேயிருந்து கிடைக்கும் முத்துதான் என்பது அக்காலத் தமிழ் மக்களது கருத்து.

'வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்' (ஆத்திரையன், பொதுப்பாயிரம்) என்றும், வலம்புரி முத்துக்கள் தென்கடலில் மிகுதியாகக் கிடைத்தமையால்,

"தென் கடல் முத்தும்..." (189, பட்டினப்பாலை) எனவும் பண்டைய தமிழ் நூல்கள் கூறுகின்றன.

"மலையிடைப் பிறவா மணியே!"—மலையிடையிலிருந்து எடுக்கப்படும் மணிகள் மிக்க உறுதியாயிருக்கும்; குழைந்து போகா.

"வடமலைப் பிறந்த மணியும்" (187) என்று மலையிடைப் பிறந்த மணியின் சிறப்பு பற்றிப் 'பட்டினப்பாலை' பேசுகிறது.

கண்ணகி ஒளியிலே மலையிடைப் பிறந்த மணியை ஒத்தவள். ஆயின், "மலையிடைப் பிறவா மணியே" என்று கோவலன் கூறுவதற்குக் காரணமென்ன?

"மலையிடைப் பிறந்த மணி குழையாது. கண்ணகியோ தன்னுடைய பேச்சிலும், செயலிலும் இயல்பாகவே குழைவு மிக்கவள்; அதனால்தான் 'மலையிடைப் பிறவாமணியே' என்று கூறப்பட்டது," என்று சிலப்பதிகார உரையாசிரியர் 'அடியார்க்கு நல்லார்' விளக்கம் தருகின்றார்.

நூல் முழுதும் தான் தோற்றுவித்த மாந்தர்களின் குணங்களை மறந்தாரில்லை இளங்கோ. கோவலன் வணிகக் குலத்தில் பிறந்தவனல்லவா? அதனால்தான் சாதாரண மக்களைப்போல "பொன், முத்து, மணி" என்று வெறுமனே சொல்லாமல், தனக்கே உரித்தான வணிகக் குலக் குணத்தின் காரணமாக "மாசறு பொன், வலம்புரி முத்து, மலையிடைப் பிறவா மணி" என்று அவற்றின் உயர்வையும், சீரிய தன்மையையும் சேர்த்துக் கூறினான்.

இது மட்டுமின்றி. கோவலன் ஒரு கலைஞனுமாவான். இசையிலே தேர்ந்தவன். யாழ் வாசிப்பதிலே வல்லவன். கோவலன் மாதவியை விட்டுப் பிரிவதற்குக் காரணமே யாழோடு சேர்த்துப் பாடிய கானல்வரிப் பாடல்கள்தான்.

இந்திர விழா முடிந்து, மாதவியின் நாட்டியமும் முடிவுற்றபின்பு கோவலனும் மாதவியும் ஊர் மக்களோடு கடற்கரைக்குச்சென்று, புன்னை நிழலில் அமருகின்றனர். மாதவி யாழைக் கையிலெடுத்து, நரம்புகளை மீட்டி கோவலனிடம் கொடுக்கிறாள். அவன் அதை வாங்கி இசையமுது பொழியத் தொடங்குகிறான் அந்த இசைதந்த இன்பவெள்ளத்தில் மாதவியின் உள்ளம் நீந்தி மகிழ்கிறது.

"கோவலன் கையாழ் நீட்ட அவனும்
காவிரியை நோக்கினவும்
கடற்கானல் வரிப்பாணியும்
மாதவிதன் மனமகிழ
வாசித்தல் தொடங்குமன்"

(கானல் வரி)

என்று இளங்கோ அந்நிலையைப் பாடுகின்றார். கோவலன் யாழ் இசைப்பதிலே சிறந்தவன். ஆகவேதான்,

"யாழிடைப் பிறவா இசையேயென்கோ"

என்று கூறுகிறான். யாழினுடைய இசையைப் பற்றி அறியாதவன் அதை உவமையாகவோ, உருவமாகவோ கையாள்வது பொருத்தமுடையதாக ஆகாது. யாழ் வாசித்தலிலே தேர்ந்த கோவலன், யாழிசையையே கண்ணகியாக உருவகப் படுத்தியதில் வியப்புமில்லை.

★★


தென்றல் வெளியீடு.

நாடகங்கள்.

ப. கண்ணனின்

| | |
|---|---|
| புரட்சிப் பாடகன் | 1—8—0 |
| வீரவாலி | 1—4—0 |
| கன்னியின் சபதம் | 0—8—0 |
| மின்னொளி | 0—6—0 |

மு. கருணாநிதியின்

| | |
|---|---|
| ஒரே முத்தம் | 1—4—0 |

*

வாணிபர்க்குக் கழிவு உண்டு.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
குமாரசாமிப்பட்டி, :: சேலம்-1.



TEL: Gurucures. PHONE: 248.

60 ஆண்டுகள்—3 தலைமுறைகள்

ஆங்கிலம் தமிழ் மருத்துவ சிறப்பைப்பெற்றது குருமருந்து சாலை.
அதன் 60-க்கு மேற்பட்ட தயாரிப்புகளில் தலையான

குரு தைலம்.

குரு பல்பொடி.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை.

டாக்டர், ஏ. மதுரம் சன்ஸ்,
குருமருந்து சாலை, :: திருச்சிராப்பள்ளி.

வினோபா ராமாயணம்.

# தத்துவ மெருகால் தூய்மை கிட்டிடுமா?

இராமாயணத்தில் மட்டுமல்லாமல், புராணங்களில் இடம் பெற்றுள்ள தேவாசுர யுத்தம் என்ற நிகழ்ச்சிகள்யாவும் ஆரியருக்கும், திராவிடருக்கும் நடந்த போராட்டத்தைக் குறிப்பிடுகின்றகற்பனைக் கதைகளாகும் என்று பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் பன்முறை பேசியும், எழுதியும் உள்ளார்கள். அக்கருத்தானது படிப்பு, யுக்தி, அனுபவங்களை ஒட்டியதும், ஏற்கத்தக்க கருத்துமாகும். ஆனால், பெரியார் வினோபா பாவே இவற்றை மறுக்கின்றமுறையில், தேவாசுரப் போராட்டத்திற்கு தத்துவார்த்தம் கூறுகின்றார்:

"இந்த தேவ அசுர யுத்தம், நம்முடைய உள்ளத்தில் நடைபெறுகிறது. இராவணன் ரஜோகுணமுடையவன். கும்பகர்ணன் தமோ குணமுடையவன். விபீஷணன் சத்வ குணமுடையவன். இம்மாதிரி அவர்கள் உருவாக்கப் பட்டனர். நமது உள்ளத்தில் இருக்கும் பத்துத் தலை இராவணன் அங்கிருந்து விடுதலைப் பெற்றால் நம்முடைய உள்ளம் சுத்தமாகும்.

இராமன் பெயரை ஸ்மரிப்பதனாலே, அவன் கதையைக் கேட்பதனாலே மனித உள்ளத்திற்கு இவ்வாறு பலம் ஏற்படுகிறது. அதனால் உள்ளம் சுத்தமடைகிறது என்று சிறுவயதிலிருந்தே கேட்டு வந்திருக்கிறேன்'' என்கிறார் ஆச்சார்ய வினோபா.

இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் ஆகியோர்க்கு குண விசேஷ தத்துவார்த்தங்கள் கற்பிக்கப் படுவதால், அவர்களை வதைத்து ஆட்கொண்ட இராமன் உயர்ந்து விட்டானா? அப்படியானால் இராமனுக்கு என்ன தத்துவம்? இராமனது பெயரை உச்சரிப்பதால் உள்ளம் எப்படி பலமடைந்து விடும்?

மேற்குறிப்பிட்ட ரஜோ, தமோ, சத்வ குணங்கள் இராமனிடம் இல்லையென்று கூற முடியுமா? இராமாயணப் பாத்திரங்களுக்கு தத்துவார்த்தம்கற்பித்துஉயர்த்திக் காட்டியோ தாழ்த்திக் காட்டியோ உள்ளத் தூய்மை பெறவேண்டுமெனில், உலகில் நடைபெற்ற—நடைபெறுகின்ற திருட்டு, புரட்டுகள், காமம், கொலை, சூது, வஞ்சகம், துராசை போன்ற அக்கிரமங்கள், அநீதிகள் அத்தனைக்கும் தத்துவார்த்தம் கற்பிக்க முடியாதோ? எல்லாவற்றாலும் தூய்மை கிட்டுமா? அத்தனை அயோக்யர்களையும், புனிதர்களாக—பூசிக்கத் தக்கவர்களாக தத்துவ மெருகேற்றிக் காட்டமுடியுமே தெய்வீகத்தால்! உள்ளம் பலமடைந்து விடுமா?

தம்பிக்குரிய நாட்டைத் தனதாக்கிக் கொள்ள துராசைப் பட்டவன், பெண்ணைக் கொலை புரிந்தவன், பெண்ணின் உறுப்புகளைத் துண்டித்துப் பெரும்பழி ஏற்றவன், சகோதரர்க்குள் சண்டை மூட்டி மறைந்திருந்து கொலை புரிந்த மாபெருங் கோழை, கர்ப்பவதியான மனைவியைக் காட்டுக்குத் துரத்திய கல் நெஞ்சன் ஆகிய இராமனது பெயரை—அவனது கதையை மனதால் நினைத்து, வாயால் சொல்லி விட்டால் மனித உள்ளம் பரிசுத்தமடைந்துவிடும் என்பதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?

சிறுவயதில் பாட்டிமாரிடம் நாம் கேட்ட பித்தலாட்ட பேய்க் கதைக்கு, வயது முதிர்ந்து அறிவு பெற்ற காலத்தும் தத்துவ மெருகிட்டு பொக்கிஷமெனப் போற்றிப் புகழ்வது நியாயமென்றால், வினோபாவின் இந்தக் கூற்றும் நியாயமாக இருக்க முடியும்!

— பகணன்.

தி. மு. கழக முரசு கொட்ட

**போர்வாள்.**

[ஜனவரி முதல் மீண்டும் வருகிறது]

ஆசிரியர்:

**காஞ்சி, மணிமொழியார்.**

கதைகள், கட்டுரைகள், கவிதைகள், தயவு தாட்சணியமற்ற அரசியல் விமர்சனங்கள், அறிஞர்களின் வாழ்க்கை ஓவியங்கள், அடங்கிய அரசியல் வார இதழ்

மா. இளஞ்செழியன் தீட்டும் விறுவிறுப்பான கட்டுரைகள், கே. ஜி. இராதாமணாளன் எழுதும் இன்சுவைக் கதைகள், கவிஞர். சுரதாவின் [illegible]கவிதைகள் வாரந்தோறும் உண்டு

**தனி இதழ் அணா 2.**
**ஆண்டு சந்தா 6-8-0.**

எல்லா ஊர்களுக்கும் முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை

போர்வாள் அலுவலகம்,
128 பிராட்வே, :: சென்னை-1.


சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால் அச்சிடப்பட்டு;
சேலம்-1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.

# பகுத்தறிவு

கழக வார இதழ் — ஆசிரியர்: ப. கண்ணன்

மலர் 6 | சேலம் 28-12-56 ★ | விலை 0-1-6 | இதழ் 25


## காட்டாட்சி நடத்தும் கனங்களின் பவனி!




மொழிவழி நாடு கேட்போரைச் சுட்டுப் பொசுக்கிடும் பழிகாரரைச் சுமந்து சதிகாரர் வரப்போகின்றார்! தன்மானத் தமிழனே! நீ தரப்போவது காணிக்கையா? கண்டனமா?

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு.
—திருவள்ளுவர்

# இதயம்

மலர் 6 | சேலம் 28—12—56 | இதழ் 25

## சேலத்திலே பொதுக்குழு.

தீராத இடும்பை பெற்று தேயும் தென்னகத்தின் தனிப்பெரும் விடுதலை இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் தனது செயற்குழுவையும், பொதுக்குழுவையும் 29, 30-12-56 நாட்களில் சேலத்திலே கூட்டுகின்றது.

திருச்சி மாநில மாநாட்டிற்குப் பிறகு தி. மு. க. என்ற மூன்றெழுத்துக்கள் தமிழகத்திலே முக்கியத்துவம் பெற்றுவிட்டன. பட்டிதொட்டிகளிலேயும் பாங்காகப் பரவி, நாட்டுப்பற்று மொழிப்பற்று மிக்க நல்லவர்களின் இல்லங்கள்தோறும்,இளைய பரம்பரையின் உள்ளங்கள் தோறும் புத்துணர்ச்சியைக் கிளப்பிவிட்டிருக்கின்றது. "நாமிருக்கும் நாடு நமதே; இங்கு நல்வாழ்வுபெற வேண்டியவர் நாமே" என்ற திராவிடத் தேசீய உணர்ச்சி எதிர்பாராத இடங்களிலும் முளைவிடத் தொடங்கிவிட்டன! கழகத்தின் கிளர்ச்சிகளிலே; போராட்டங்களிலே நாம் செய்த தியாகம்,சிந்திய இரத்தம்வீண்போகவில்லை. தி.மு.க தேர்தலில் ஈடுபடுவது, பொங்கிவரும் விடுதலை வேட்கையினை வலுப்பெறச் செய்து, மங்கிவரும் திராவிடத்தில் மானவிளக்கேற்றி, பாழ்பட்ட இதயங்களிலே பகுத்தறிவு ஒளிகாட்டி, அடிமைவிலங்கறுக்கும் அரியபணிகளிலே ஒன்று. இஃது எளிய காரியமுமன்று. எங்கெங்கிருந்தோ எப்படி எப்படியோ எதிர்ப்புகள் தோன்றிடும்; எவரெவரோ பகையாவர். நமது இலட்சியப் பங்காளிகளே நமது காலை வாரிவிடக் கச்சை கட்டுகின்றனர்;கண்களை உருட்டுகின்றனர்; கடிந்து பேசுகின்றனர்! "அகில இந்திய ரீதி"களைப் பற்றியோ பேசவே வேண்டாம்; சந்தர்ப்பவாதிகள்! பாரதப் புதல்வர்கள்!

பொதுத் தேர்தல் நெருங்கிவிட்டது; செய்ய வேண்டிய காரியங்களோ ஏராளமாக இருக்கின்றன. பொறுப்புகளும், கடமைகளும் தலைமைப் பீடத்தை நெருக்குகின்றன. இந்த நேரத்தில் சேலத்தில் கூடுகின்றன: செயற்குழுவும் பொதுக்குழுவும்.

உழைப்பினை மட்டுமல்ல; கண்ணியம், கட்டுப்பாடுகளை கழகத் தோழர்கள் புறக்கணிக்க மாட்டார்கள். தேர்தல் நேரத்திலே அவை மிக மிகத் தேவையென்பதையும் நன்கறிவர், நம் தோழர்கள்.

கழகப் பணியாற்ற வரும் தலைவர்களை, சேலம் மாவட்டத்தின் சார்பிலே சிரம்தாழ்த்தி வரவேற்கிறோம். வருக! வருக! நடைமுறைக்கு ஏற்ற முடிபுகள், திட்டங்கள்தருக!ஏற்றுப் பணிபுரியசச்சித்தமாயிருக்கிறது திராவிடம்!செயல்படக் காத்திருக்கிறது சேலம்!

— ப. கண்ணன்.

## நாதசுர மேதை.

தென்னகத்தின் குழற் கலைஞன்; நாயனப் பெருவேந்தன்; திருவாவடுதுறை டி.என். இராசரத்தினம் 12-12-56-ல், இயற்கை முடிவினை எய்திவிட்டார்! தமிழகம் ஈடுஇணையற்ற கலைவேந்தனை இழந்துவிட்டது! தேம்பியழுகின்றது கலையுலகம்!

இராசரத்தினம் இசையுலக ரத்தினம் மட்டுமல்ல; முப்பதாண்டுகளுக்கு முன்னரே, பெண்களை கடவுளுக்குப் பொட்டுக்கட்டிவிடும் வழக்கத்தை எதிர்த்துப் போராடிய வீரர். பென்னம் பெரிய திருவிழாக்களில், நாதக்குரல் எழுப்பி நற்றேன் மழை பொழிந்து தெய்வபக்திக்கு ஆக்கமளித்தவர், அறிஞர் அண்ணாவின் கட்டளையேற்று நமது மாநில மாநாட்டில் நாதமுழக்கம் செய்தார்.

கலைஞர்களின் வாழ்விலே தேக்கமிடும் நச்சு நடத்தைகள் உயிர்க் கொல்லியாக மாறுவதுண்டு; பலபேர் மாண்டதுண்டு, அவர்களைத்தொடர்ந்தார் அருங் கலைச்செல்வர்! மிக மிக வருந்துகிறோம். நிதியிழந்த அவரது குடும்பத்திற்கு நிதியளிக்க தோழர்கள் முன்வந்திருக்கின்றனர்; சிலே நிறுவ முயலுகின்றனர்; வேறு என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்!

## முக்கிய அறிவிப்பு.

**பொங்கல் மலர் வேலை கருதி 'பகுத்தறிவு" அடுத்த இருவார இதழ்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்பதை கையொப்பதாரர்க்கும், விற்பனையாளர்க்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**டிசம்பர் பட்டியல் பாக்கியுள்ளவர்க்கும், முன்பணம் அனுப்பாதவர்க்கும் மலர்கள் அனுப்பப்படமாட்டாது.**

—நிர்வாகி.

# எதிரொலி

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் மக்கள் பிரச்சினை பெரிதல்ல.

—மந்திரி அனில்சந்ரா.

*காரணம்; அவர்கள் வடவரல்லவே; தமிழர்கள்தானே!*

*  *  *

தமிழில் அர்ச்சனை நடைபெற வேண்டுமென்றாலும் திராவிடர் கழகந்தான்!

—"விடுதலை"

*அர்ச்சனை மட்டுமென்ன? தமிழிலேயே பிரார்த்தனை வைத்து, தமிழ்க் கோயிலில் மொட்டையடித்துக் கொள்பவர்களும் இவர்கள்தானே!*

*  *  *

கோயிலுக்குள்ளே மாத்திரம் அன்னிய மொழி இருக்கலாமா?

—"விடுதலை"

*தமிழில் மந்திரம் சொல்லிவிட்டால் மாத்திரம் ஆலய வழிபாட்டை ஒப்பலாமா?*

*  *  *

(தி. மு. க. தேர்தல் நிதி கொடுக்காதே என்று) உண்டியல் பிச்சை எடுத்தாவது ஒரு லட்சம் பிரதி அச்சிட்டு......

—"குத்தூசி"

*பிச்சையா? ஏன்? சொந்த வீடில்லையா? உமது பெண்டாட்டிமேல் நகையில்லையா விற்பதற்கு? பிச்சை போடாதேஎன்று சொல்வதற்குப் பிச்சை தானா எடுக்கவேண்டும்?*

*  *  *

தமிழரசுக் கழகத் தோழர், கே. விநாயகம் சட்டசபையில் தமிழில் பேச மறுத்தார்.

—செய்தி

*இதென்ன பிரமாதம்? "குடியரசு" கேட்டு எழுதிய பெரியார்; குடியரசு ஜனநாயகம்—தேர்தல் எல்லாம் பித்தலாட்டம் என்று மறுக்கிறாரே!*

*  *  *

தமிழ் ஆட்சி மொழியாகும் சட்டம் வரப்போகிறது.

—செய்தி

*தமிழில் ஆட்சி நடத்தப்போகும் நாடு என்ன நாடு?*


தயாராகிறது! நல்விருந்து!

# பகுத்தறிவு

## ஏழாவது ஆண்டு

# பொங்கல் மலர்.

தீங்கான பழமை யழித்து, பாங்கான புதுமைக்கு வழிகாட்டும் எண்ணக்குவியல்களின் வண்ணக் களஞ்சியம்!

★

சிந்தனைக்கு விருந்தான சிறுகதை, விஞ்ஞானக் கட்டுரை, வாழ்வுக் கவிதைகள், வகை வகையான ஆய்வுரைகள், விளக்கங்கள், பொன்மொழிகள் யாவும் நிறைந்த செந்தமிழ்க் கருவூலம்!

★

தி. மு. க. தலைவர்களின் தன்மானக் கருத்தோவியங்கள்; கேலிச் சித்திரங்கள்; துணுக்குகள் அறிவொளிக் கற்றைகள்!

எம். பி. சுப்ரமணியம் B. A; M. L. A.
வி. சிவப்பிரகாசம் B. A; B. L.
சாலை-இளந்திரையன் B. A. (Hons)
கனகசவுந்தரி-இளந்திரையன் B. A. (Hons)
எஸ். பி. சின்னையன் B. A; B. L.
"முத்தமிழ்க் காவலர்" விசுவநாதம்.
இளமுருகு-பொற்செல்வி.
பாவலர்-வேலாயுதசாமி.
"இளந்தமிழன்" கண்ணகனார்.
க. அண்ணாமலை. தமிழ்ப்பித்தன்.
அமரன். ஏ. பெரியசாமி.

மற்றும் பலரின் எழுத்தோவியங்களோடு!

**ஆசிரியர், ப. கண்ணன் வரையும்**

பிரசார நாடகமொன்றும் இடம் பெறுகின்றது.

1×8-ல், பக்கங்களோ 100-க்கு மேல்! இவ்வளவுக்கும்

**விலை எட்டணாவே!**

விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்குச் சொல்லிவிட்டீர்களா?
தனிப்பிரதி வேண்டுவோர் 0-10-0 முன்பணம் அனுப்பவும்.

# நன்றி, நண்பரே!

சேரலாதன்.

"என்ன நண்பரே! 2—12—56 'சாட்டை'யில் வந்த 'ஒப்பாரி'யைப் பார்த்தீர்களா? பதில் சொல்ல வழியில்லாமல் ஓரேயடியாக உங்கள் வாயை அடைத்து விட்டதே!"

"அதிலே பதில் சொல்வதற்கென்ன இருக்கிறது?"

"ஏனில்லை? பத்திரிகையை வெளியிடுபவர் ஒருவராயிருக்க, அதன் ஆசிரியர் மீது பாய்ந்தீர்களே, அது தவறல்லவா?

"ஒரு பத்திரிக்கையில் எந்தக் கட்டுரை வெளியானாலும், அந்தக் கட்டுரையை எழுதியவர் யார் என்று பெயர் போடாதவரை அது ஆசிரியரால் எழுதப்பட்டது என்றே பொருள். பத்திரிகையின் இலாப நட்டத்திற்கு சம்பந்தப்படாத ஒருவரை ஆசிரியராகப் பத்திரிகை நடத்துவோர் கொள்வதெனில் "கௌரவ ஆசிரியர்" என்று வெளியிடுவதே முறை, இதழ் நடத்துபவர்களுக்குத் தெரியவேண்டிய இந்த அடிப்படை உண்மைகளே புரியாதவர்; பாவம், என்னை விட்டுவிட்டு 'பகுத்தறிவு' ஆசிரியரின்மேல் தாவி விழுந்திருக்கிறார்."

"அது சரி. உங்கள் கழகத்தில் மட்டும் 'கலைஞர்' என்று போட்டுக் கொள்பவர்கள் இல்லையா?"

"தாமே போட்டுக்கொள்கிறவர் இல்லை; பிறரால் போட்டு பாராட்டப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். உண்மையிலேயே எங்களிடம் அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். ஆனால், அந்தப் பட்டங்களைத் தாமே போட்டுக்கொண்டு பிறரை எழுதச்செய்து பத்திரிக்கையின் ஆசிரியர் என்று சொல்வதுதானே பரிதாபத்திற்குரியது என்கிறேன்"

"அது போகட்டும். தன்னுடைய கருத்தைச் சொல்ல உரிமையுண்டு என்று கூறிவிட்டு, பத்திரிக்கையில் எழுதிக் குழப்பம் விளைவிக்க மாட்டோம் என்று நீங்கள் சொல்வது முரணல்லவா?"

"நடந்ததைப் பற்றிய கருத்தைச் சொல்வதற்கும், நடக்கவேண்டியதற்கு யோசனை கூறுவதற்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. இதை உணராதவர்களுக்கு நான் எழுதியது முரண்பாடாகத்தான் தெரியும்." பாவம்! நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் ஏதேதோ கைபோனபடி கிறுக்கியிருக்கிறார் 'சாட்டை'யார்!"

"நீங்கள் என்ன கேட்டீர்கள்?"

"இந்தியை எதிர்க்கும் தமிழரசுக் கழகத்தினர் திராவிடர்கள் 'இந்தி அழிப்புப்போராட்டம்' நடத்தியபோது அதை எதிர்த்து மறியல் செய்தனரே, அது இந்த சாட்டையாருக்குத் தெரியுமா என்று கேட்டேன்."

"என்ன சொன்னார்?"

"திருடனைத் தேள் கொட்டியது போல், வாய்மூடி மௌனியானார்."

"ஊம்... பிறகு...?"

"பண்டித பந்தைச் சந்தித்து எல்லைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வழிசெய்கிறேன் என்று சுப்ரமணியனார் சொல்லவில்லை என்பது முழுப் பூசனிக்காயை இலைச்சோற்றில் மறைக்கும் முயற்சி என்றேன்"

"ஒப்பினாரா? மறுத்தாரா?"

"இல்லை. முழுப்பூசனிக்காயை இலைச் சோற்றில் மறைத்தே விட்டார்!"

"அப்படியா? ஐயோ பாவம்."

"தமிழின மக்களுக்குப் பாடுபடுபவர் ம. பொ. சி. என்பதை நாங்கள் ஒப்புக் கொள்வதாகக் கூறிவிட்டு, பிறகு அவரைத் திட்டுவதாகக் கதறுகிறீரே, ஏன்? என்று கேட்டேன்."

"என்ன சொன்னார்?"

"பதில் இல்லை. தேர்தலுக்கும், 'சிவாஜியும், சிவஞானமும்' என்ற கட்டுரைக்கும் ஏன் முடிச்சுப்போடுகிறீர் என்று கேட்டுஎழுதினேன், அதற்கும் பதிலில்லை காரணம்; தெளிவில்லாத நெஞ்சம்!"

"மன்னிக்க வேண்டும். நீங்கள் எழுதியதைப் படிக்காமல், 'சாட்டை'யை மட்டும் படித்து விட்டு நான் பேசிவிட்டேன்"

"சரி, வரட்டுமா?"

"நில்லுங்கள். ஒரு யோசனை......"

'என்ன?'

"இனி நீங்கள் அந்த 'சாட்டை'யின் உளறல்களைப் பற்றியே சட்டைசெய்ய வேண்டாம்"

'ஏன் தோழரே?' என்று கேட்டேன்.

"ஊமையுடன் பேசினால் பார்ப்பவர்களுக்கு யார் ஊமை என்றே தெரியாது. செவிடர்களுடன் பேசும்போதும் அப்படித்தான்! அதைப்போல் பகுத்தறிவு வேண்டாதவர்களுடன்— பகுத்தறிவைப் பயன் படுத்தாதவர்களுடன்-தெளிவான கொள்கையற்றோரிடம் வாதிட்டால் இறுதியில்......"

"உண்மைதான். சாட்டையாரின் ஒப்பாரிக்குரல் மட்டும் கேட்கிறது. பொருள் புரியவில்லை"

அப்பொழுது "லொள், லொள்" என்று குரைத்துக்கொண்டே ஒரு நாய் எங்களை நோக்கி ஓடி வந்தது. குனிந்து ஒரு கல்லை எடுத்தேன், நாயை விரட்டுவதற்காக!"

நண்பர் கூறினார்: "கல்லைக் கீழே போடுங்கள்... ஆங்கிலத்தில் ஒரு பழமொழியுண்டு தெரியுமா? நாயைத் துரத்தி விட்டுத்தான் தெருவைக்கடக்க வேண்டுமென்றால், கடைசிவரை தெருவைக் கடக்கமுடியாது" என்று சொன்னார்: அவர் இதழ்க்கோடியிலே நெளிந்த புன்னகையின் பொருளைப் புரிந்து கொண்ட நான், கல்லைக் கீழே எறிந்து விட்டு, "நன்றி நண்பரே!" என்று சொல்லிவிட்டு நடக்கலானேன். ★★

---

திராவிட முன்னேற்றக்கழகத்தில் செயலாற்றும் இளைஞர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். எதிர்காலத் தமிழகம் அவர்களுடைய கையில்தான் இருக்கிறது.

—கி. ஆ. பெ. விசுவநாதம்,
16—12—56

இலக்கியச் சோலையிலே

# மறக்க முடியாதது.

வித்வான்: இரா. சொக்கலிங்கம்.

அது ஒரு முல்லைக்காடு. அங்கு மழைவளம் கொழித்து மண்வளஞ் செழித்துக் கிடந்தது. காணுமிடமெல்லாம் கண்ணுக்கு இனிமையூட்டும் பசுமை. நீலவானில் வெண்முத்துத் தாரகைபோல் முல்லைமலர்கள் பூத்துக் குலுங்கின. பள்ளமெல்லாம் வெள்ள நீர் கிடந்து பார்மகளைப் பனிமகளாக்கியிருந்தது. அந்த இனிமை சூழ் காட்டின் இடையே ஒருபாதை எங்கெங்கோ இருந்த ஊர்களை இணைத்துக் கிடந்தது.

அந்தப் பாதை வழியாகத்தான் தமிழ் மகன் ஒருவன், 'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்லை' யெனும் பொன்னுரை தெளிந்து—நாடு பல கடந்து பொருள் ஈட்டி—மணியொலிக்கும் தேர் ஊர்ந்து வருகின்றான். அந்தக் காட்டு வழியில் அவனுடைய தேரிலுள்ள மணியொலியும், மழை நீர்த் தேக்கத்தில் கிடந்த தவளைகளின் ஒலியும் தவிர வேறு ஆரவாரமில்லை. கொடிகளை அறுத்தெறிந்து ஈரத் தரையில் கோடிட்டுச் சுழன்ற தேர்ச் சகடம் தலைவன் ஊருக்குள்ள தூரத்தைக் குறைத்துக் கொண்டிருந்தது! தேரில் வீற்றிருக்கும் தலைமகன் சிந்தனையின் உறைவிடமாய்க் காட்சியளிக்கிறான். அதோடு அவன் முகத்தில் ஒரு விரைவு உணர்ச்சியும் துடித்து நிற்கின்றது ஆம்! "தேர் எப்பொழுது வீட்டை அடையும், அங்குத் தனிமையில் வாடும் காதலியை எப்பொழுது பார்க்கப் போகிறோம்?" என்ற நினைவின் சாயல்தான் அத் துடிப்புணர்ச்சி.

அவன் காதலியோ தமிழ்க்குடி தந்த தோகையாள். கொழுநனைத் தொழுதெழுங் கொள்கையாள். காதலனைப் பிரிந்த அவள் துயரம் உரைக்கும் தரத்ததோ?

தலைவனின் சிந்தனைச் சகடம் சுழன்றது. அதன் விளைவாக பழைய நிகழ்ச்சியோவியம் ஒன்றை அகக் கண்ணால் காணுகின்றான்.

முன்பு ஒரு முறை இவ்வாறு பொருளீட்டச் சென்று காட்டு வழியே தேரில் வந்துகொண்டிருந்தான். தேர், ஊருக்கு அண்மையில் வந்து கொண்டிருந்தது. தேரில் ஒலிக்கும் மணியொலி கேட்டு தன் காதலி தன் வருகையை யறிந்து தன்னை வரவேற்க தனியாக் காதலுடன் வருவாள் என்று அவன் நினைத்தான். ஆனால் அந்தப் பொல்லாத தவளைகள் தேர்மணியின் ஒலியைவிட உரத்த குரலில் தம் மகிழ்ச்சியை அறிவித்துக் கொண்டிருந்தன! ஆதலால், தேர்மணியின் ஓசையைத் தலைவி கேட்கஇயலாது. தலைவன் சிந்தித்தான். தன்னுடன் வந்த இளையர்களை முன்பாக அனுப்பித் தன் வருகையைத் தலைவி யறியச் செய்தான். அவர்களும் சென்று அவன் வரவு உணர்த்தினர். அந்தப் பொன்னான செய்தி கேட்டு தலைவியடைந்த மகிழ்ச்சிக்களவேயில்லை. இனிய செய்தி கேட்ட அவள், தலைவன் பிரிந்ததிலிருந்து தண்ணீர் காணாக் கூந்தல் நனையப் புனலாடிப் புத்துடையுடுத்துத் தலையில் பூச்சூடச் சென்றாள். பூவைத் தலையில் சூடும் நேரந்தான், நெஞ்சம் பிணித்த காதலன் மனையுள் புகுந்தான். பிரிவுத் துயரில் பல நாட்களைக் கழித்த அம்மங்கை நல்லாள் காதலனை நோக்கி விரைந்தோடி அவனை ஆரத்தழுவி, அவன் அகன்ற மார்பில் தன் கண் புதைத்தாள்.


இந்தப் பழைய காட்சியை நினைந்த தலைவன், தன் காதலியின் தண்டாக் காதலை நினைந்து உணர்ச்சி மிக்கவனாகின்றான். உணர்ச்சிப் பெருக்கு, தேர்ப்பாகனிடம் அந்நிகழ்ச்சியைக் கூறத் தூண்டிற்று. அந்த இன்ப நிகழ்ச்சியைத் தேர்ப்பாகனிடம் கூறி, தான் அதை மறக்கவே இயலாது என்கின்றான். அவன் அவ்வாறு கூறுவதில் பழமையை நினைந்து பெருகும் அன்பு வெளிப்படுகின்றன. பிரிந்து கூடிய பின்னர் ஏற்படும் அந்தப் பேரின்பத்தைப் பெற்றிட இப்போதும் பாகன் தேரினை விரைந்து செலுத்த வேண்டுமென்ற குறிப்புங் காணக் கிடக்கின்றது. இந்நிகழ்ச்சியோவியம் அடங்கிய சொல்லோவியம் பின் வருமாறு:—

"மறத்தற் கரிதால் பாக! பன்னாள்
வறத்தொடு பொருந்திய
—உலகுதொழிற் றொள
பழமழை பொழிந்த புதுநீ ரவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஒருமின் என்ற இளையர் வல்லே
இல்புக் கறியுந ராக மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருந் துருஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே"

(நற்றிணை 42. 'கீரத்தனார்')

மண்ணாக் கூந்தல்—ஒப்பனை செய்யப் பெறாத கூந்தல். போது—மலர். குரல்—கூந்தல் கவைஇய—அணைத்துக் கொண்ட.

வெண்சங்கு சீயக்காய் தூள் எங்கும் கிடைக்கும்.



எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் ராணி
&
சேகர் ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை,
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.




[முன் இதழ் தொடர்ச்சி]

சங்கா:- (பதைத்து) சொல்லால் அடித்துக் கொல்லாதீர்கள். நாதா! சதியும் பதியுமாக இவ்வளவு காலம் வாழ்ந்தோமே என்ன குற்றம்—என்ன சாகசத்தைக் கண்டீர்கள் என்னிடம்? காபாலிகன் சொற்கேட்டுக்கரத்தை வெட்டினீர்கள், கடிந்து கொண்டேனா? குடிக்கொரு மகனாய்ப்பிறந்த செல்வனைச் சிறைப்படுத்தினீர்கள், சீறி விழுந்தேனா? நீங்கள் வஞ்சகரின் மாய வலையில் விழக்கூடாதே என்று சஞ்சலப் பட்டேன் அமைச்சரிடம், இது சாகசமா? சண்டாளமா? சதித் திட்டமா? சதுரங்கம் ஆடிவென்ற போது பகைமைவெல்வாய் என்றமதிப்புரை; இப்போது, பதித்துரோகி என்ற பழிப்பா? சிற்றப்பனிடம் வாதிட்டுவென்றபோது செல்வன் சமர்த்தன் என்ற மதிப்புரை; நீதி கேட்டபோது நிந்தனைக் குரியவன்—நீசன் என்ற பழிப்புரையா? தம்பியின் சதித்திட்டம் கண்டறிந்து தகவல் தந்தபோது அமைச்சர் அறிவுப் பெட்டகம்; அறம் காக்கப் பரிந்துவந்தபோது அவர் ஆகாதவரா? நன்றி கெட்டவரா? பதிக்குத் துரோகமிழைத்த பாவி—துர்நடத்தைக்காரியென்று நெஞ்சாரக் கருதினால் கொன்றுவிடுங்கள் என்னை. ஆனால் நேர்மைக்குப் பரிந்துவந்த மந்திரியாரை வதைத்து வளைக்க வேண்டாம் செங்கோலை! குலைக்க வேண்டாம் அரச தர்மத்தை! வேண்டாம்!... வேண்டாம்!....

நந்தி:- (வாளை உறையிலிட்டு) பாவிகள்! இப்போது இவர்கள் உடலைத் தீண்டி கறைப்பட வேண்டாம் எனது வாள். சேனாபதியாரே! கலம்பகம் அரங்கேற்றும் மகிழ்வுநேரத்தில்கொலைகள் கூடாது. இவர்களை தண்டிப்பதை பிறகு வைத்துக்கொள்வோம். இந்தப் படுமோசக் காரனையும் தள்ளி அடையும் சிறையில்.

விக்ர:- மகாராஜா! தேளைக் கண்டபிறகும் பிள்ளைப் பூச்சியென்று விட்டுவிடக் கூடாதே!

நந்தி:- பாதகமில்லை, கொடுக்கை நறுக்கி விட்டால், அடுக்கு அடங்கிவிடும்!

விக்ர:- கட்டளை.

(சிறைக்கதவை திறந்து, சீலாதித்தரையும் தள்ளுகிறான் உள்ளே)

## காட்சி 30.

(வித்யாவதி வீடு. சந்திரவர்மன், வித்யாவதி, பச்சை இருக்கின்றனர்)

சந்தி:- பச்சை! அரசருக்குரிய கடைசி கைங்கரியம், உன் திருக்கரத்தால் நடைபெற வேண்டும். துணிவிருக்குமா?

பச்சை:- நீங்களும் சேனாபதியும் இருக்கறப்போ, துணிவுக்கு என்னாங்க பஞ்சம்? மகாராஜாவின் தலையைக்கொண்டு வரணுமா? உம்.... சொல்லுங்க!

சந்தி:- அடே, பித்துக்குளி! நான் சொல்வதைச் செய்யடா.

பச்சை:- சொல்லுங்க,

சந்தி:- ஏற்பாட்டின்படி அரங்கேற்றத்தில், ஒவ்வொரு ஆசனமாக மன்னர் உட்காருவார்; நான் பாடுவேன். கடைசி ஆசனம் என்ன தெரியுமா? சிதை! அதிலே மன்னர் அமருவார், நான் சுவையோடு பாடத் தொடங்குவேன். (காதருகே ரகசியமாகச் சொல்லுகிறான்) செய்வாயா?

பச்சை:- அந்தச் சந்தேகமே ஒங்களுக்கு வேணாம்னேன். எது?

சந்தி:- (தட்டிக்கொடுத்து) சபாஷ்! சபாஷ்!

வித்யா:- சுவாமி! என்ன இதுவெல்லாம்! எனக்கு கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

சந்தி:- கடலின் விருப்பம் கேட்டா கப்பல் பயணம் போக முடியும்? உனக்குப் பிடிக்க வில்லை என்பதற்காக நிறுத்த முடியுமா காரியத்தை? வித்யாவதி! நமது வாழ்க்கையிலே ஒரு மகத்தான மாற்றம் ஏற்படப்போகிறது. நல்லதோ கெட்டதோ; அதனை ஏற்கச் சித்தமாயிருக்க வேண்டும் நீ!

வித்யா:- என்ன சுவாமி அத்தகைய மாற்றம்?

(சேனாபதி உற்சாகத்தோடு வருகிறான்)

சந்தி:- அதோ, சேனாபதியாரே வந்து விட்டார்.

விக்ர:- வெற்றி! வெற்றிகரமாக முடித்து விட்டேன்! மகாராணியைப் பார்க்கப்போன மந்திரியார் பாதாளச்சிறையிலேயே அடைக்கப் பட்டு விட்டார் ஒழிந்தது முட்டுக்கட்டை. சந்திரவர்மரே! இனி மகாராஜாவிடம் நான் வைத்ததுதான் சட்டம்!

சந்தி:- சபாஷ்! நன்று செய்தீர் சேனாபதியாரே! இது தக்க சமயத்தில் செய்த தனிப் பேருதவி. இனி, தவறாது நிறைவேறும் நமது திட்டம். இதற்காக நானளிக்கும் பரிசு என்னவென்று தெரியுமா?

விக்ர:- மகாராஜாவின் சித்தம். என் பாக்யம்.

சந்தி:- (வித்யாவதியின் கரம்பற்றி) சித்திரப் பதுமை, சிங்காரப் பூம்பொழில், வித்தகத் தென்றல் எனது வித்யாவதி! இன்றுமுதல் உமக்குச் சொந்தம்!

(சேனாபதியிடம் கொடுக்கிறான் அவளை, வெடுக்கென்று கையை இழுத்துக் கொள்கிறாள் வித்யாவதி)

வித்யா:- (சினந்து) சே! சே! கேவலம்! மிகக் கேவலம்! சுவாமி! இந்த ஈனச்செயலுக்கு எப்படித்தான் மனம் ஒப்பியது? நெஞ்சாரக் காதலித்தவளை, கரம்பற்றி மாற்றானின் பஞ்சணையிலே கொஞ்சவிட வெட்கமில்லையா உமக்கு? முடியாதா?

சந்தி:- காசுக்குப் பாய் விரிக்கும் வேசியிடம் என்னடி வெட்கம்? சீலி! காதல்காதலென்று கதைத்தது போதும். காதலாவது வெங்காயமாவது! என் விருப்பப்படி நடக்க முடியுமா? முடியாதா?

வித்யா:- ஆங்! நாம் வாழ்ந்த வாழ்வு?....

சந்தி:- சேர்ந்து வாழ்ந்தோம் இத்தனை நாள் சிறப்பாக! என் சித்தம்போல் நடந்தாய், ஒப்புகிறேன். இனியும் நீ சிறப்பாகவாழ வேண்டாமா? அதற்காகவே ஒப்படைக்கிறேன் சேனாபதியிடம்.

வித்யா:- சுவாமி! இது வாழ்வில் மாற்றமல்ல; ஏமாற்றம். அந்தோ!.... தாங்கள் கொண்டது போலிக் காதல்தானா? இன்பத்தின் எழில் வடிவே, இசைக் கலையின் சுவைக் கடலே, காதலின் கலையமுதே என்று கட்டித் தழுவியதெல்லாம் கள்ளத் தனம்தானா? உன்னை மறந்து ஒருக்கணமும் தாள முடியாது என்றீர்களே! அது தன்னலம்தானா? அந்தோ! காதலை மெய்யென்று நம்பி, தங்கள் சதிக்கெல்லாம் உடந்தையாயிருந்தேனே இந்தச் சண்டாளி! அதற்கெல்லாம் இதுதானா பலன்? இதுதானா பரிசு?

சந்தி:- (சினந்து) வித்யாவதி! என் சொற்படி நடக்க முடியுமா? முடியாதா?

வித்யா:- (கண்டிப்பாக) முடியாது. நீரெனது காதலரல்ல! ஆகவே, எனக்குக் கட்டளையிட உமக்கு உரிமையில்லை!

சந்தி:- பல்லவ நாட்டின் முடிசூடும் மன்னனடி நான். மன்னன்!

வித்யா:- துரோகி! சதிகாரா! நீயா மன்னன்! கனவிலும் அது நிறைவேறப் போவதில்லை! உன் சதித் திட்டத்தை வெளிப்படுத்தி ஒழித்துக் கட்டுவேன், இந்த ராஜத்ரோகக் கும்பலையே!

(ஓடுகிறாள் வெளியே. சென்று தடுத்து, கூந்தலைப் பற்றி இழுத்துக் கீழே தள்ளுகிறான் சந்திரவர்மன்)

சந்தி:- எங்கேயடி போகிறாய் கள்ளி?

வித்யா:- சொல்ல முடியாது. (எழுந்திருக்க)

விக்ர:- பிள்ளையாரென்று பிடிக்கக் குரங்காக மாறுகின்றதே! இவள் எப்படி என்னிடம் அடங்குவது? நான் இன்பத்தைப் பெறுவது?

சந்தி:- கவலை வேண்டாம் சேனாபதியாரே! இவள் விருப்பப்படியா நாம்விடுவது? ஒப்பினால் இவ்வுலகம்! ஒப்பாவிடில் அவ்வுலகம்! பார்த்துக் கொள்வோம். நமது காரியம் முடியும்வரை இவள் சிறைக் கைதியாக இருக்கட்டும் இந்த அறைக்குள்ளே.

(கழுத்தைப் பிடித்து அறைக்குத் தள்ளிச் செல்லுகிறான்)

வித்யா:- ஐயோ! சண்டாளா! விடு என்னை. பாவி! விட்டுவிடு!

(வேகமாகத் தள்ளிக் கதவைச் சாத்துகிறான். "ஐயோ" என்று அலறியவண்ணம் விழுகிறாள் வித்யாவதி கதவைப் பூட்டிய பின்)

சந்தி:- ஒழிந்தது பீடை! எதிர்பாராது விழுந்த கடைசி முட்டுக் கட்டையையும் சமாளித்து விட்டோம்! சேனாபதியாரே! நம்வழியில் இனி எதுவும் குறுக்கிட முடியாது. வாரும் துவக்குவோம் நமது காரியத்தை.

(வேகமாகச் செல்கின்றனர் வெளி

## காட்சி 31.

(அரங்கேற்ற மேடை. 10 பச்சைப் பந்தல்கள், பலவகை ஆசனங்கள், மன்னன், சேனாபதி, காவலர், குடிகள் இருக்கின்றனர். மேடை மீது வீற்றிருக்கிறான் சந்திரவர்மன்)

விக்ர:- (எழுந்து) *சபையோர்களே! நந்திக் கலம்பகம் அரங்கேற்றத் துவக்கம். முதற் பந்தல்; மன்னர் இருக்கவேண்டிய முதல் ஆசனம், முக்காலி. பாட்டினைப் பாடுவார் பாவலர் சந்திரவர்மன்.*

(மன்னன் அவ்வாறே சென்று அமர, பாடுகிறான் சந்திரவர்மன்)

(1) விருத்தம்.

மண்டலமாய் அம்பரமாய் மாருதமாய் வார்புனலாய்
ஒண்சுடராய் ஒளியென்றும் ஓருருவாய் மூன்றுருவாய்
மைவடிவோ வளைவடிவோ மரகதத்தின் திகழ்வடிவோ
செவ்வடிவோ பொன்வடிவோ சிவனே நின் திருமேனி

நந்தி:- *வாழ்க தமிழ்!*

விக்ர:- *இரண்டாவது பந்தல். ஆசனம் கட்டில்.*

(2) விருத்தம்

ஒருபெருங் கடவுள் நிற் பரவுது மெங்கோன்
மல்லை வேந்தன் மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி
வடவரையளவும் தென்பொதியளவும்
விடையுடன் மங்கல விசயமும் நடப்ப
ஒருபெருந் தனிக்குடை நீழல்
அரசு வீற்றிருக்க அருளுக எனவே

நந்தி:- *ஆஹா! என்ன சுவை!.... என்ன சுவை!...*

விக்ர:- *மூன்றாவது ஆசனம் பாய்.*

(3) பாட்டு.

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரீசப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அழகுமலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்

கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச் செய்த
கோமுற்றப்படை நந்தி குவலய மார்த்தாண்டன்
காடவர்க்குமுன் தோன்றல் கை வேலைப்பாடி
காஞ்சிபுரமும் பாடி ஆடாமோ ஊசல்.

நந்தி:- *அற்புதம்! ஆனந்தம்! ஆனந்தம்!*

(காட்சி மாற்றம்)

## காட்சி 32.

(பாதாளச் சிறை. சீலாதித்தரும், சங்கா தேவியும் சோர்ந்து உட்கார்ந்திருக்கின்றனர்)

சங்கா:- *ஐயோ! இந்நேரம் கலம்பக அரங்கேற்றம் நடந்து கொண்டிருக்குமே! என்ன வஞ்சகம் செய்வார்களோ தெரியவில்லையே! அமைச்சரே! என்ன செய்வது?*

சீல:- *நாம் வெளியேற வாய்ப்பிருந்தால், இப்போதும்கூட அவர்கள் சதியை முறியடிக்கலாம் மகாராணி! என் செய்வது? எதற்கும் வழியற்றுக் கிடக்கிறோமே!*

(வெளியே அழைத்துச் சென்ற நிருபதுங்கனை அந்த அறையில் கொண்டுவந்து விட்டு, கதவைப் பூட்டிச் செல்கிறான் காவலாளி)

நிருப:- (ஆவலோடு) *அம்மா! இந்தக் கணையாழியைப் பார், அப்பாவுடையது!*

சங்கா:- (வாங்கிப் பார்த்து வியந்து, எழுந்து) *ஆமாம். இது உனக்கு எப்படியடா கிடைத்தது? எங்கே கிடைத்தது?*

நிருப:- *வரும்போது, வழியில் கிடந்தது. அப்பா இங்கு வந்தபோது தவறி விழுந்திருக்குமென்று நினைக்கிறேன்.*

சங்கா:- (மகிழ்ந்து) *ஆஹா! நமது விடுதலைக்கு வழி பிறந்துவிட்டதடா மகனே! அமைச்சரே! இது மன்னரின் கணையாழி!*

சீல:- *ஆஹா! காரிருளில் ஒளி கிடைத்துவிட்டது. மகாராணி! இப்பொழுதே புறப்படுவோம்.* (வெளியே பார்த்து) *காவலாளி! காவலாளி!*

காவலாளி:- (ஓடிவந்து) *ஏன் என்ன வேணும்?*

சங்கா:- (கணையாழி காட்டி) *இதோ மன்னர் ஆணை. நாங்கள் இங்கிருந்து உடனே வெளியேற வேண்டும்.*

காவலாளி:- *உத்தரவு.*

(திறந்து விடுகிறான் சிறைக் கதவை. வேகமாக வெளியேறுகின்றனர் மூவரும்)

## காட்சி 33.

(அரங்கேற்ற மேடை. நடந்து கொண்டிருக்கிறது அரங்கேற்றம்)

விக்ர:- ஒன்பதாவது ஆசனம்; திண்ணை.

(4) பாட்டு.

மலர்க்குழல் அமர்ந்தினிய வண்டார்க்கும் காலம்
வரிக்குயில்கள் மாவில் இளந்தளிர் கோதும் காலம்
சிலர்க்கெல்லாம் செழுந்தென்றல் அமுதளிக்கும் காலம்
தீவினையேற்கத் தென்றல் தீவீசும் காலம்
பலர்க்கெல்லாம் கோனந்தி பன்மாடக் கச்சில்
பனிக்கண்ணீர் பருமுத்தம் பாத்தாடும் காலம்
மலர்க்கெல்லாம் ஐங்கணைவேள் அலர்தூற்றும் காலம்
அகன்று போனவர் நம்மை அயர்த்திட்ட காலம்.

நந்தி:- பாக்யம்! ஆஹா! பெறற்கரிய பாக்யம்! மகாபாக்யம்!

விக்ர:- பத்தாவது ஆசனம்; சிதை.

(5) விருத்தம்.

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
வையகம் அடைந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்

(பாட்டு முடியுமுன்னரே சிதையில் நெருப்பு பற்றுகிறது. பார்த்துப் பதைக்கின்றனர் மக்கள்)

ஒருவன்:- ஆ! நெருப்பு! நெருப்பு!

மற்றவர்:- சிதை பற்றி எரிகிறதே! ஐயோ! மகாராஜா! மகாராஜாவுக்கு ஆபத்து!

விக்ர:(எழுந்து கடுமையாக) மூடுங்கள் வாயை! அரங்கேற்றத்தின் புனிதமறியாத புல்லர்களே! சத்தமிடாதீர்கள்!

(பாடிக்கொண்டே இருக்கிறான் சந்திரவர்மன்)

தேனுறு மலரான் அரியிடம் சேர்ந்தான்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென் கலியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்தி நாயகனே

மக்கள்:- (பதறி) ஐயயோ! மகாராஜாவைக் காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்.

ஒருவர்:- ஐயோ! வேகின்றதே வேந்தரின் உடல். தீயை அணைப்போம் வாருங்கள்.

மற்றவர்:- வாருங்கள்! வாருங்கள்! ஓடி வாருங்கள்.

(எல்லோரும் கூட்டம்பலாக சிதையை நெருங்க முயல)

சந்தி:- (எழுந்து ஓடிவந்து தடுத்து) நில்லுங்கள். உங்களுக்கு ஆண்டவனிடம் பக்தியிருந்தால்—பயமிருந்தால் இப்பால் நகரக்கூடாது! சிதையை நெருங்கக் கூடாது! தமிழ்த் தாயின் மகிமையை நாசமாக்கக்கூடாது! பைந்தமிழ்ப் பாடல் பெற்று, பரமனின் அருளைப் பெற்றார் மன்னவர்! இறப்பிலே இறவாத சிறப்படைந்தார் என் அண்ணன். எவருக்குக் கிடைக்கும் இந்த பாக்யம்? யார் பெறுவார் இத்தகைய கீர்த்தி? வாழ்த்துங்கள் மன்னவரை! போற்றுங்கள் இப்புனித நிகழ்ச்சியை!

விக்ர:- அமரப் புகழ் பெற்றார் நந்திவர்மன். ஆட்சியுரிமை பெற்றார் சந்திரவர்மன். வரவேற்போம்; வாழ்த்துவோம் புதிய மன்னவரை. சந்திரவர்ம பல்லவ மகாராஜா........

சிலர்:- வாழ்க! வாழ்க! நந்தி நாயகம் வாழ்க! மன்னர் பெருமான் வாழ்க!

சந்தி:- வாழ்க பல்லவர்குலப் பெருமை! செந்தமிழ்க் கடவுள் சிவபெருமானின் அருள் பெற்றார்; சிறப்போடு அவர் திருவடி நிழலைச் சென்றடைந்தார் மன்னவர்! ஆளத் தகுதியுள்ளவன் நான் என்பதை அண்ணன் நன்கறிவார். ஆகவே, அதற்குரிய ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டார். எனக்கு மன்னிப்பளித்தார்; பொறுமைப் பிண்டங்களான மகாராணியையும், மகனையும், அவர்களுக்குப் பரிந்து பேசிய அமைச்சரையும் முன்கூட்டியே சிறையில் அடைத்துவிட்டார். பொதுமக்களே! பிரதானிகளே! இன்று முதல் நானே பல்லவ மண்டிலத்தை அணிசெய்யப் போகும் மணிமுடி மன்னன். சேனாபதி விக்ரமகேசரியே எனது நல்லமைச்சர்; இதனை ஒப்பவேண்டும் நீங்கள்.

விக்ர:- மனமுவந்து ஒப்புகிறோம் மன்னவரே! வாருங்கள் இப்பொழுதே அரசவையைக் கூட்டி மகுடாபிஷேகத்தை முடிப்போம்.

சிலர்:- ஐயோ! இதுவென்ன அக்ரமம்!

சிலர்:- மன்னர் வாழ்க! சந்திரவர்ம சக்கரவர்த்தி வாழ்க!

(வாழ்த்தொலியுடன் கிளம்புகின்றனர்)

## காட்சி 34.

(தெரு. மகாராணி சங்காதேவியும், அமைச்சர் சீலாதித்தர், இளவரசன் நிருபதுங்கன் ஆகியோரும் சில வீரர்களும் வேகமாக குதிரைகள் மீது வந்து கொண்டிருக்கின்றனர்)

## காட்சி 35.

(அரங்கேற்ற மேடைக்குச் சற்று தொலைவில். சந்திரவர்மன் குழுவினர் செல்லுகையிலே, எதிரே வருகின்றனர் நிருபதுங்கன், சங்காதேவி முதலானோர்)

நிருப:- (சினந்து) நில்! வஞ்சகத் தீயிலே என் தந்தையை வேகடித்த செந்தமிழ்ப் புலவா! எங்கே போகிறாய்?

சந்தி:- (அஞ்சி) ஆ! நிருபதுங்கன்!... மகாராணி! ... அமைச்சர்!.... பாவிகளே! சிறையிலிருந்து எப்படி வந்தீர்கள்? எதற்கு வந்தீர்கள்?

நிருப:- எதற்காக வந்தோம்? வஞ்சகனே! உன் துரோக வாழ்வை முடிக்கத்தான்!

(சந்திரவர்மன் வாள் எடுக்கும் முன், தனது வாளை அவன் மார்பில் பாய்ச்சுகிறான் நிருபதுங்கன்)

சந்தி:- ஆ! சேனாபதி! ... (விழுந்து) ஐயோ! ... ஆ! ... ஒழிந்தேன். விக்ரமகேசரி! ... ஐயோ... !

நிருப:- வீரர்களே! கைது செய்யுங்கள் சேனாபதியை!

விக்ர:- (அஞ்சி) இளவரசே! நான் குற்றமற்றவன். சூழ்ச்சியொன்றும் எனக்குத் தெரியாது. நடந்ததை விபரமாகச் சொல்லி விடுகிறேன். காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்னை.

(மண்டியிடுகிறான். அதே நேரத்தில், கையிலே தீவட்டி வைத்திருக்கும் பச்சையை கழுத்தைப் பிடித்துத் தள்ளியவண்ணம் தலைவிரிகோலமாக ஓடி வருகிறாள் வித்யாவதி)

வித்யா:- (ஆத்திரத்தோடு) துரோகி! இதோ மற்றொரு துரோகி! அவனும் துரோகி; இவனும் துரோகி; எல்லோரும் துரோகிகள்! வாழவிட வேண்டாம் அந்த வஞ்சகனை! இதோ மன்னரின் சிதைக்குத் தீயிட்ட மாபாவி! இந்தப் பாவியின் கையிலே தீவட்டியைத் தந்தவன் இந்தச் சேனாபதி! இவர்களுக்குத் தலைவன் சந்திரவர்மன்!

சங்கா:- (வியந்து) ஆ! கணிகை வித்யாவதியா? நீயா இந்தக் கோலத்தில்?

வித்யா:- ஆம் மகாராணி! சந்திரவர்மனைக் காதலித்த சண்டாளி; ஏய்ப்புக்கும் சூழ்ச்சிக்கும் பலியாகிவிட்ட படுபாவி! இவர்களின் சதிச் செயலை தடுக்க முயன்ற என்னைச் சிறை வைத்தார்கள். மன்னவரைகாக்கப் பெரும் பாடுபட்டு தப்பி ஓடி வந்தேன். ஐயோ!... நேரம் தாழ்ந்து விட்டது மகாராணி! தாழ்ந்து விட்டது. மன்னியுங்கள். தீரமற்ற சேனாபதி, மானமற்ற இந்தத் தீவட்டி மடையன்; இவர்களை வாழ விடுவது நாட்டிற்கே ஆபத்து! கொல்லுங்கள்; வெட்டுங்கள்; புதையுங்கள் இந்தத் துரோகிகளை!

நிருப:- உம்... வீரர்களே! கைது செய்யுங்கள் சேனாபதியையும், இந்தக் கயவனையும்.

(விக்ரம கேசரியும், பச்சையும் கைது செய்யப் படுகின்றனர்)

சீலா:- சிறைச்சாலைக்கு கொண்டு போங்கள்.

(இழுத்துப் போகின்றனர்)

வித்யா:- (பைத்தியம்போல் சிரித்து) ஒழிந்தாயா! ஒழிந்தானுங்க வஞ்சகப் பிடாரிங்க! (சந்திரவர்மன் பிணத்தைப்பார்த்து) ஆ!...சந்திரவர்மபல்லவ மகாராஜா! ... இன்பத்தின் எழில்வடிவே! இசைக் கலையின் சுவைக் கடலே! காதலின் கலைய முதே...! (சிரித்து) காதலாவது வெங்காயமாவது! நியாயமாவது நேர்மையாவது! ... ஆங்! (பிணத்தின் முகம் பார்த்து) ஐயயோ! நான் மோசம் போய் விட்டேனே! நான் உயிராகக் காதலித்த கலைவேந்தர், உலகைத் துறந்தாரா? என் வாழ்வுக்குச் சுவைதந்த வண்ணத் தமிழ்ப் புலவர் மண்ணிலே சாய்ந்துவிட்டாரா? ஆ! ... ஐயோ!....

(தடாலென்று சந்திரவர்மன் மீது விழுகிறாள் வித்யாவதி. உயிர் துறக்கிறாள். பாட்டுக் குரல் கேட்கின்றது. கணிகையின் தியாக வாழ்வும், நந்திவர்மனின் தமிழ்ப் பற்றும்—அதற்காக உயிர் நீத்த அரிய பண்பும் குறித்து புலவர் பெருந்தேவனார் பாடியவண்ணம் அங்கு வருகிறார்)

பெருந்:- அமைதி! அமைதி! அமைதி கொள்ளுங்கள்! நடந்தன நடந்தனவாக இருக்கட்டும்; இனிநடப்பன நல்லனவாகவிளங்கட்டும்!

சங்கா:- (சோகித்து) புலவர் பெரும! மன்னவரைக் காக்க வந்த நான், இந்த மரணங்களையா பார்க்கவேண்டும்? என்னருமை மணாளர், ஈடற்ற தமிழ் மறவர் துரோகத்தின் தீயிலே வெந்து சாம்பராகி விட்டாரே! கலம்பக அரங்கேற்றம் காஞ்சிக்கோர் களங்கமாக முடிந்து விட்டதே! அந்தோ! வாழவைக்கும் பைந்தமிழை மாள வைக்கும் கருவியாக்கிய மாபாதகத்தை மறக்குமா இந்த உலகம்?

பெருந்:- மகாராணி! உயிர்ப் பற்றினும் மொழிப் பற்றினைப் பெரிதாக்கினார்; உன்னத நிலைபெற்றார் மன்னவர்! நடந்ததை மறந்து, நடப்பதைப் பாருங்கள். மன்னரின் சடலம் அடக்கம் செய்யப்பட வேண்டும். ஆட்சியின் பொறுப்பேற்க வேண்டும் தாங்கள். முடிசூட்ட வேண்டும் இளவரசர் நிருபதுங்கருக்கு.

சங்கா:- (கண்களைத் துடைத்துக்கொண்டு) ஆம்! தந்தையால் வெஞ்சிறையிலே தள்ளப் பட்டிருந்தும், தனயனுக்குரிய கடமையைச் செய்து முடித்தான், செல்வன் நிருபதுங்கன். நாட்டாட்சி எமக்கே உரியது. ஆள வேண்டியவன் என் மகன். எவர் மறுப்பார் இதனை? அமைச்சரே! எல்லாவற்றிற்கும் ஏற்பாடு செய்யும்.

சீலா:- கட்டளை.

(காட்சி மாற்றம்)

## காட்சி 36.

(அரண்மனை. நிருபதுங்கனுக்கு முடிசூட்டு விழா. மகாராணி சங்காதேவி, அமைச்சர் சீலாதித்தர், பிரதானியர், வீரர்கள், குடிமக்கள் குழுமியிருக்கின்றனர்).

பெருந்:- (மகுடத்தை கையில் ஏந்தியவண்ணம்) செந்தமிழ் இன்சுவைக்குத் தன்னுயிரளித்த தார் வேந்தன்; இலக்கியக் காதல் கொண்டு இவ்வுலக வாழ்விழந்த மனிதகுல மாணிக்கம்; பல்லவர் பரம்பரையின் பைந்தமிழ்ப் பார்த்திபனுகிய நந்திவர்மவேந்தரின் புதல்வன்! இளவரசன் நிருபதுங்கன் இந்நாட்டின் மணிமகுடம் ஏற்கின்ருர். நெஞ்சார வாழ்த்துவோம். கோடாத செங்கோல் கோடாத்தி நீடூழி வாழ்க! பல்லாண்டு பல்லாண்டு வாழ்க; நிருபதுங்க மன்னவர்...

எல்லோரும்:- வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

(முற்றும்.)

குறிப்பு:- அறிஞர் மா. இராசமாணிக்கனுர் அவர்களின் "பல்லவர் வரலாறு"ம், "நந்திக்கலம்பக" முன்னுரைக் குறிப்புகளும் இந்நாடகத்தை உருவாக்க உதவின.

—ப. க.

"பகுத்தறிவு" நல்கும் அடுத்த தொடரோவியம்
பண்பெழுத்தாளர்,
ப. உ. சண்முகம்
தீட்டிய
தேசிங்குராஜன்
பொங்கல் மலருக்குப் பிறகு துளிர்க்கும் இதழில் துவங்குகிறது.
சுவைக்கத் தவருதீர்கள்!

## கேள்விக்கணை

இக்கிழமை பரிசு பெற்றவர்:
● இரா. அருணுசலம்,
பள்ளவள்ளி, குறிசிலாப்பட்டு (அஞ்சல்)
திருப்பத்தூர், வ ஆ. மாவட்டம்

ஆ. பி. இராசன், வெங்கிடாபுரம்.

*கே: தமிழரசுக் கழகத்திற்கு வித்தூன்றியது ம. பொ. சி. யா? திரு. வி. க. வா?*

ப: 1938-ல் திராவிட இயக்கம் நடத்திய இந்தி எதிர்ப்பு—மொழிப்போர்!

ஏ. மாணிக்கம், தொளசம்பட்டி,

*மனிதன் கடமையினுல் வாழ்கிருனா? மடமையினுல் வாழ்கிருனா?*

ப: கடமைக்கும், மடமைக்கும் இடையிலே நின்று போராடியவண்ணம் நாட்களைக் கழிக்கிருன்.

* * *

*கே: தமிழ்மொழி சிறப்புற்று விளக்கக் காரணம் என்ன?*

ப: எளிமை, இனிமை, பழமை, புதுமை, இலக்கியம், இலக்கணம் எல்லாம் இருப்பதால்!

இரா. அருணுசலம், பள்ளவள்ளி.

*கே: தற்கொலையால் மாண்ட பிணங்களை அறுத்தபின் தைக்கும் குத்தூசி, ஏடெழுதும் எழுத்தாணியாக மாறினுல் என்ன நடக்கும்?*

ப: கொள்கைக் குழப்பங்களை, இலட்சியக் கொலைகளை, அறுவைகளை, பிணவாடைகளை அதிகமாக்கும்!

* * *

● *கே: பச்சைத் தமிழன் காமராசர் என்பதற்காக காங்கிரசை ஆதரிக்கும் தி. க. வினர், பச்சைத் தமிழன் கம்பன் எழுதிய இராமாயணத்தை மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்?*

ப: கம்பன் வெறும் ஆரிய அடிமை; காமராசர் ஆரிய வடவ இந்தி ஏதாதிபத்திய அரசியல் அடிமை! வித்தியாசமில்லையா?

எம். சாத்தப்பன், திருச்சிராப்பள்ளி.

*கே: கொள்கைக்குத் துரோகமிழைக்கும் துரோகிகளை என்னவென்றழைப்பது?*

ப: தற்போதைக்கு "குத்தூசிகள்" என்று அழைக்கலாம்.

சேலத்தில் தி. மு. கழக

# மத்திய செயற்குழுக் கூட்டம்


29-12-56 சனியன்றும்,

# பொதுக்குழுக் கூட்டம்

30-12-56 ஞாயிறன்றும்,

முறையே சுயமரியாதைச் சங்க ரோடு மாவட்டக் கழக அலுவலகத்திலும், அன்னதானப்பட்டி பிட்டா ரைஸ்மில் கட்டிடத்திலும் நடைபெறும்.

ஞாயிறு மாலை 6-மணிக்கு வி. மார்க்கெட்டில் மாபெருங் கூட்டம். தலைவர்கள் அனைவரும் பேசுவார்கள்.




## ★ மாதர்குல மாணிக்கம். ★

ஒரு ரயில்விபத்தை அடிப்படையாகக் கொண்டு "மாதர்குல மாணிக்க"த்தின் கதை எழுதப்பட்டிருக்கிறது. அதற்கேற்றபடி, அண்மையில் அரியலூர் ரயில் விபத்தும் நடந்திருப்பதால் கதையின் திருப்பம் ரசிகர்களின் மனதை வெகுவாகக் கவருகிறது.

ரவியும், லட்சுமியும் காதலர்கள். ரவியினுடைய தந்தையின் சாதிப் பித்து மகனின் காதலை உடைத்தெறிந்து தேவகிஎன்ற பெண்ணை அவன் மனைவியாக்குகிறது. அதே சமயம், தன் நண்பனின் தங்கை கல்யாணத்திற்குச் சென்ற டாக்டர் சேகர், எதிர்பாரா விதத்தில் அக் கல்யாணம் நின்று விடவே, தன் நண்பனின் துயரத்தைக் காணச் சகியாது, அவன் தங்கை பார்வதியைத்தானேமணக்கிறான். இரண்டுஜோடி மணமக்களும் ரயிலில் வரும்போது விபத்து நேரிடுகிறது. கதையிலும் சிக்கல் ஆரம்பமாகிறது. வெள்ளத்தில் ஒதுக்கப்பட்டு, மணக்கோலத்துடன் கிடந்த பார்வதியைத் தன் மனைவி என்று நினைத்து அவளை வீட்டுக்குக் கூட்டிப்போன ரவி, பார்வதி தன் மனைவியல்லவென்று அறிகிறான். உண்மையை அவளுக்குத் தெரிவிக்காமலேயே அவளுடைய கணவனைத் தேடும் முயற்சியில் ஈடுபடுகிறான். ஒருநாள், பார்வதி உண்மை தெரிந்து வீட்டைவிட்டு ஓடிவிடுகிறாள். ஓடியவள், சேகரின் வீட்டுக்கே போய்ச் சேருகிறாள். சேகர்தான் தன் கணவன் என்றும் தெரிந்துகொள்கிறாள்.

கதையில் மேலும் சிக்கல்! வைத்தியத்திற்காக சேகரிடம் வந்த லட்சுமிக்கும், சேகருக்கும் திருமணம் நடத்த ஏற்பாடாகிறது. சூழ்நிலையால் தன் வாழ்வையும் தியாகம் செய்யத் துணிகிறாள் மாதர்குலமாணிக்கமான பார்வதி! இறுதியில், சிக்கல்களெல்லாம் தீர்ந்து, ரவி லட்சுமியை அடைய, பார்வதி சேகரிடம் சேர, "வாழ்க பெண்குலம்" என்று கதை முடிகிறது. சதாசிவப் பிரம்மம் என்ற தெலுங்கு எழுத்தாளர் கதையைக் கட்டியிருக்கிறார்.

நல்ல விறுவிறுப்பான கதை. கூடியவரை அந்த விறுவிறுப்புக்குப் பங்கம் ஏற்படாத வகையில் வசனத்தை அமைத்திருக்கிறார் ஸ்ரீதர். ஆனால், சேகரின் தாய் தன் மருமகளை இன்னாரென்று அடையாளம் கண்டுகொண்டது போல் பேசுவதையும், நடந்துகொள்வதையும் தவிர்த்திருக்கலாம். சாதி பேதத்தைக் கண்டிக்கும் வகையில் எழுதும் கதாசிரியர், கடைசியில் ரவியையும், லட்சுமியையும் ஒரே சாதியினராகக் காட்டிவிடுவது ஏனோ? வசன கர்த்தா அடிக்கடி 'விதி'யைப் பற்றிக் குறிப்பிடுவது நல்ல வேடிக்கை!

இரண்டொரு பக்திப் பாடல்களைத்தவிர எல்லா பாடல்களுமே மனதில் நிற்கக் கூடியவை.

நாகேஸ்வரராவ், ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, சாவித்ரி போன்ற பல முன்னணி நட்சத்தி

ரங்கள் நடித்த
வேலையாக, ட
சோடை பே
ருமே பாராட்
கிறார்கள். நா
கராவும்
போல் தமி
கள். அதா
நாகேஸ்வரரா
அடிக்கடி சுா
படி மேலுங் கீ
டியிருக்க
ரியை நடன
ருக்கிறார்கள்

ஒளிப்பதிவ
ஒலிப்பதிவு

கணவன்,
தங்கவேலும்,
சுவை விருந்
வேலு வழ
நெளித்து, ச
சிரிப்புவரத்
மிளகாய் தப
டன் வேஷம்
கும் கொ
கொள்வது—
யாதவையா
கும்படியாக

எப்போது
ளில்தான்
தவறு செய்
லட்சுமிக்கு
தன்னிடம்
பார்வதி தற்
சித்து நீரில்
போதிலும்,
இருப்பதாக
டப்படுகிற
'விநோதமை
டதோ?

இதுபோ
ருந்தாலும்,
மகிழத் தச்
குல மாணி

—

சலகண்டபுரம் செந்தமிழ் அச்சுக்கூடத்தில், ஆசிரியர், ப. கண்ணனால்
சேலம்—1 குமாரசாமிப்பட்டியினின்றும் வெளியிடப்படுகிறது.